பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி
பாரதியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது
தேசிய தர நிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் 'A' தரம் பெற்றது
குன்னூர், நீலகிரி மாவட்டம்

மற்றும்

முத்தரசி - கலை இலக்கியப் பன்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN : 2584-1238

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

தமிழ்ச் சமூகப் பண்பாட்டு வெளியில் திராவிட எழுத்துக்களின் தாக்கம்

இதழ்ப் பதிப்பாசிரியர்
முனைவர் சு.தங்கமாரி,
முதன்மை ஆசிரியர், முத்தரசி ஆய்விதழ்,
மதுரை, தமிழ்நாடு இந்தியா

பதிப்பாசிரியர்கள்

முனைவர் கு.மலர்விழி,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறைத்தலைவர்,
பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
குன்னூர் நீலகிரி மாவட்டம்.

முனைவர் ஜெ.குணசீலி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
குன்னூர் நீலகிரி மாவட்டம்.

தமிழ்ச் சமூகப் பண்பாட்டு வெளியில்
திராவிட எழுத்துக்களின் தாக்கம்

E-ISSN : 2584-1238
செப்டம்பர் 2024

பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி
குன்னூர், நீலகிரி மாவட்டம்

E-ISSN : 2584-1238

பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி,

பாரதியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது
தேசிய தர நிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் 'A' தரம் பெற்றது
குன்னூர், நீலகிரி மாவட்டம்

மற்றும்

முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்

E-ISSN: 2584-1238

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

தமிழ்ச் சமூகப் பண்பாட்டு வெளியில் திராவிட எழுத்துக்களின் தாக்கம்

இதழ்ப் பதிப்பாசிரியர்

முனைவர்.சு.தங்கமாரி,
முதன்மை ஆசிரியர்,
முத்தரசி ஆய்விதழ்,
மதுரை, தமிழ்நாடு, இந்தியா

பதிப்பாசிரியர்கள்

முனைவர். F. மலர்விழி,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறைத்தலைவர்,
பிராவிடன்ஸ் கல்லூரி (தன்னாட்சி),
குன்னூர்.

முனைவர்.ஜெ.குணசீலி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி
குன்னூர், நீலகிரி மாவட்டம்

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal

E-ISSN : 2584-1238

நூல் விவரம்

நூல் தலைப்பு	:	**தமிழ்ச் சமூகப் பண்பாட்டு வெளியில் திராவிட எழுத்துக்களின் தாக்கம்**
முதற்பதிப்பு	:	செப்டம்பர், 2024
பதிப்புரிமை & வெளியீடு	:	தங்கமாரி சுடலை, 12/6, மேலப்பொன்னகரம் 8வது தெரு, 4வது குறுக்கு, ஆரப்பாளையம், மதுரை - 625016.
மின்னஞ்சல் முகவரி	:	laks@muththarasi.org
வலைதளம்	:	https://muththarasi.org/
E.ISSN No	:	2584 – 1238
புத்தக அளவு	:	A4
பக்கங்கள்	:	263
விலை	:	₹ 270/-
அச்சிட்டோர்	:	லேசர் பாயிண்ட், வசந்த நகர் முதன்மைச் சாலை, மதுரை – 625 003

இதழ் ஆசிரியர்குழு

முனைவர் சு.தங்கமாரி, முதன்மை ஆசிரியர், முத்தரசி ஆய்விதழ், மதுரை, தமிழ்நாடு, இந்தியா. மின்னஞ்சல் : laks@muththarasi.org கைப்பேசி: (+91)98941 02130	**Dr.S.THANGAMARI,** Editor-in-Chief, Muththarasi journal, Madurai, tamilnadu, india. E-Mail: laks@muththarasi.org Mobile : (+91)98941 02130
முனைவர் கா.ஸ்ரீதர், தலைவர் & உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை(சுயநிதி), வி.இ. நா. செந்திக்குமார நாடார் கல்லூரி, விருதுநகர்,தமிழ்நாடு, இந்தியா. மின்னஞ்சல் : sridhar@vhnsnc.edu.in கைப்பேசி: (+91) 94434 49595	**Dr K. SRIDHAR,** Head & Asst. Professor of Tamil (SF), V.H.N.Senthikumara Nadar college, Virudhunagar, Tamil Nadu, India. E-Mail: sridhar@vhnsnc.edu.in Mobile : (+91) 94434 49595
ADVISORY EDITORIAL BOARD	
முனைவர் பாரதி சங்கர ராஜுலு, விரிவுரையாளர், தமிழ் & தெலுங்கு, கலிபோர்னியா பல்கலைக்கழகம், பெர்கிலி, அமெரிக்கா மின்னஞ்சல் : bharathy57@gmail.com கைப்பேசி : 650-430-2473	**Dr.Bharathy Sankara Rajulu** Lecturer – Tamil & Telugu University of California, Berkeley. USA. E.Mail : bharathy57@gmail.com Mobile : 650-430-2473
முனைவர் சீதாலட்சுமி, இணைப்பேராசிரியர், ஆசிய மொழிகள் மற்றும் பண்பாடுகள் தேசியக் கல்விக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், 1,நன்யாங் வாக், சிங்கப்பூர்.637616 மின்னஞ்சல் : seetha.lakshmi@nie.edu.sg கைப்பேசி : +65 9451 0735	**Dr.SEETHA LAKSHMI,** Associate Professor, Asian languages and cultures, National institute of education, Nanyang technological university, 1, nanyang walk, Singapore.637616 E-Mail: seetha.lakshmi@nie.edu.sg
பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன், தலைவர், தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை. கைப்பேசி : +94 77 305 3241 மின்னஞ்சல் : spirashanthan01@gmail.com	**Prof. Sri.PIRASAANTHAN,** HOD, Dept.of. Tamil, University of Peradeniya Peradeniya. 20400 Sri Lanka Cell : +94 77 305 3241 E.Mail : spirashanthan01@gmail.com
முனைவர் பா.பொன்னி, இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, தி ஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி,தமிழ்நாடு, இந்தியா. மின்னஞ்சல் : ponni-tam@ sfrcollege.edu.in கைப்பேசி : (+91)9787800804	**Dr.B.PONNI** Associate professor and Head PG and Research Department of Tamil The Standard Fireworks Rajaratnam College for women (Autonomous) Sivakasi, Tamilnadu, India. E.Mail : ponni-tam@sfrcollege.edu.in Mobile : (+91)9787800804
முனைவர் ரா. ராஜராஜன் உதவிப்பேராசிரியர் தமிழாய்வுத்துறை பிஷப் ஹீபர் கல்லூரி திருச்சிராப்பள்ளி – 620 017 தமிழ்நாடு, இந்தியா. மின்னஞ்சல் – thanivairams@gmail.com கைப்பேசி : (+91) 94427 40363	**Dr. R. RAJARAJAN** Assistant Professor in Tamil Bishop Heber College Tiruchirappalli – 620 017, Tamilnadu, India. E.mail : thanivairams@gmail.com Mobile : (+91) 94427 40363
முனைவர் மு.செந்தில்குமார், உதவிப்பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-625001, தமிழ்நாடு,இந்தியா. மின்னஞ்சல் : mpputhiyavan@gmail.com கைப்பேசி: +91 99420 80277	**Dr.M.SENTHILKUMAR,** Asst. Professor, Senthamil College, Madurai- 625001, Tamilnadu, India. மின்னஞ்சல் : mpputhiyavan@gmail.com கைபேசி: +91 99420 80277

சந்திரகௌரி சிவபாலன்(கௌசி), *வயோதிபர் பராமரிப்பு* *ஃபெல்ட்ர்ஸ்ர் – 56,* *சொலிங்கன்,, ஜெர்மனி.* *மின்னஞ்சல்: c.gowry@yahoo.de* *கைப்பேசி : +49 1520 9419269*	**CHANDRA KOWRI SIVABALAN(KOWSI),** Alttags Betreuung Felderstr – 56 Solingen Germany E.Mail : c.gowry@yahoo.de Mobile : +49 1520 9419269
REVIEW MEMBERS	
முனைவர் செ.ஞானேஸ்வரன் *உதவிப் பேராசிரியர்* *முதுகலைத்தமிழ்த்துறை* *அரசுக் கல்லூரி* *மூணாறு – 685612 கேரளா மாநிலம், இந்தியா.* *மின்னஞ்சல் : gnaneswaran11@gmail.com* *கைப்பேசி:9943814293*	**Dr.GNANESWARAN.S** Assistant Professor PG Department of Tamil Government College Munnar-685612 Kerala State, India. E.mail : gnaneswaran11@gmail.com Mobile-9943814293
முனைவர் ஜ. ஜான்சிராணி, *ஆய்வு வளமையர்,* *உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை,* *மருத்துவர் தங்கராசு சாலை,* *சட்டக் கல்லூரி அருகில்,* *மதுரை – 625020 தமிழ்நாடு, இந்தியா.* *மின்னஞ்சல் : jansiraniwts1981@gmail.com* *கைப்பேசி: +91 81100 16911*	**Dr. J. JANSIRANI,** Resource Person, World Tamil Sangam Madurai, Dr. Thangaraj Road, Near by Law College, Madurai – 625020, Tamilnadu, India E.Mail : jansiraniwts1981@gmail.com Mobile : +91 81100 16911
CONSULTANT	
திருமதி ஆ.இலட்சுமி, *இதழ் ஆலோசகர்,* *முத்தரசி ஆய்விதழ்,* *மதுரை, தமிழ்நாடு, இந்தியா.* *மின்னஞ்சல் : gandhilakshmi361@gmail.com* *கைப்பேசி: (+91)9789186545*	**Mrs. A.LAKSHMI,** Consultant, Muththarasi Journal, Madurai, Tamilnadu, India. E-mail: gandhilakshmi361@gmail.com Mobile : (+91)9789186545

வாழ்த்துரை

இலக்கியம் காலந்தோறும் மானிடப் பேரமைதியை மானுடச் செழுமையை நோக்கி மனிதரை ஈர்த்துக் கொண்டுதான் இருக்கின்றது. காலத்திற்கேற்ப குரல்கள் வேறுபட்டாலும் களங்கள் வேறுபட்டாலும் இலக்கு என்பது ஒன்றுதான். தமிழ் இலக்கியமும் இத்தகையதொரு இலக்கினை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இலக்கியங்கள் எவ்வகையாயினும் சமூகப் பொறுப்புணர்வு மிகுந்தும் இயற்கை நலன் காப்பதில் தன்னம்பிக்கை கொண்டும் மனிதநேயம் தழுவிய குரலாகவே ஒலித்துக் கொண்டுள்ளது. இலக்கியங்கள் மனித சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றுபவையே.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற ஐயன் திருவள்ளுவரின் வாக்கை அடியொற்றி சமத்துவ உணர்வும் புரட்சிகர உணர்வும் கொண்டவை திராவிட இயக்கமும் இலக்கியமும். எளிய மக்களின் வாழ்வியலை மையப்படுத்தி எழுந்தவை திராவிட இலக்கியம். இவ்விலக்கியம் தமிழ்ச் சமூகப் பண்பாட்டில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

'தமிழ்ச் சமூகப் பண்பாட்டு வெளியில் திராவிட எழுத்துக்களின் தாக்கம்' என்ற ஆய்வுப் பொருண்மையில் பன்னாட்டு ஆய்வு கருத்தரங்கை நடத்த திட்டமிட்டுள்ள எம் கல்லூரி மொழித் துறையையும் மதுரை - முத்தரசி கலை இலக்கியப் பண்பாட்டு தமிழாய்விதழ் முதன்மையாசிரியரையும் இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் சிறப்பாக நடைபெறுவதற்குக் கட்டுரை வழங்கிய கட்டுரையாளர்களையும் கட்டுரைகளை நூலாக்கம் செய்த பதிப்பகத்தாரையும் மனதார வாழ்த்துகிறேன்.

வாழ்த்துக்களுடன்

முனைவர் அருட்சகோதரி ஷீலா

பதிப்புரை

8-9 ஆம் நூற்றாண்டில் ஆதி சங்கரர் இயற்றிய ஒரு சுலோகத்தில் குறிப்பிடும் செய்தி யாதாகின், "சீர்காழியில் பார்வதி தேவியிடம் ஞானப்பால் அருந்தியதாகக் கூறப்படும் மிகைக் கதையாடலில் திருஞானசம்பந்தரைத் திராவிட சிசு - திராவிடத்தின் குழந்தை" என்பதாகும். முதலில் 'திராவிட' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டதாகப் பொதுவெளியில் அறியப்பட்ட இடமும் இதுவே ஆகும். இதில் ஞானசம்பந்தரும், ஆதிசங்கரருமே தற்கால 'திராவிட விதி'களின்படி திராவிடர்கள் அல்லர். இருவரும் பார்ப்பணர்கள். ஆதிசங்கரர் 'திராவிட' என்னும் சொல்லை ஒரு சாதியையோ, இனத்தையோ குறிப்பிடப் பயன்படுத்தவில்லை. அதன்பிறகு இந்திய ஒன்றியத்தில் வலுவானதொரு ஆரிய-பார்ப்பன எதிர்ப்பானது தென்பகுதியில் தென்படுவதற்கு முகாமையான காரணமாக இருந்த 'அயோத்திதாசர்' அவர்களின் அரசியல் போராட்டம் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு சொல் 'திராவிடம்' என்பதாகும். குறிப்பாகத் தனது எழுத்துக்கள் இடையே அவர் இடையறாது கூறிவந்த 'சாதி பேதமற்ற திராவிடன்' என்ற சொல்லாடல் அதிக ஆழம் உடையதும், கவனிக்கத்தக்கதுமாய் இருந்துள்ளது. தமிழ்ச் சமூகப் பண்பாட்டு வெளியில் இந்தச் சொல்லாடலை அறிமுகப்படுத்தியவர் இவராக அறியப்பட்டாலும், அதனைப் பொதுத்தளத்தில் ஒரு கருத்தியலாக(Ideology) நிறுவியவர் என்ற அடிப்படையில் தந்தை பெரியார் கவனிக்கப்பட வேண்டியவர்.

இந்திய ஒன்றியம் முழுவதும் நாட்டு விடுதலை என்ற ஒற்றைப் புள்ளியில் பயணப்பட்ட பொழுது, அங்கொன்றும் இங்கொன்றுமாக, சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் மண்ணின் இயல்பான சிக்கல்களைப் பேச முனைந்தன. தென்பகுதியில் அத்தகைய சிந்தனையைக் கூர்மைப்படுத்தியவர் தந்தை பெரியார். ஆரியம் x திராவிடம் என்ற எதிரெதிர் முகமைகளைக் கொண்டு விளக்க முயன்றவர். ஆனால் இவரது தர்க்கமுறையிலான விளக்கங்கள் வலுவானதாக இருப்பினும், அடித்தட்டு மக்களுக்கு விரைந்து செல்ல முடியவில்லை. அந்த விரைதல் பணியானது அறிஞர் அண்ணாத்துரை உள்ளிட்ட மேடைப்பேச்சாளர்களாலேயே சாத்தியப்பட்டது. கூர்மை பொருந்திய தந்தை பெரியாரின் சிந்தனைகளைப் பாவேந்தர் பாரதிதாசன் போன்றோர் தம் கவிதைகளின் வாயிலாகவும் கொண்டு சென்றனர். 'புதிய சிந்தையின் வாயிலாக, புதிய சமுதாயம்' என்று கருதிய, தொடக்கநிலை எழுத்தறிவு பெற்ற மக்கள் காட்டாற்று வெள்ளமெனப் பாய்ச்சலுற்றனர்.

இருப்பினும், பழைமை சார்ந்த சாதியப் படிநிலைகளை இறுகப் பற்றிக் கொண்ட சில அமைப்புகள் இந்தத் திராவிடத்தின் திராவகச் சிந்தனைகளை நீர்த்துப் போகச் செய்ய பல்வேறு உத்திகளைக் கையாண்டனர். அதன்வழி, மொழிவழிப் பிரிவினையான 'தமிழ்த்தேசியம்' இன்று வரை திராவிடத்திற்கு எதிராகக் கூர்த்தீட்டப்பட்டு வருகின்றது. தொடர்ந்து கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக்கு மேலாக, பேசப்பட்டு வந்துள்ள திராவிடச் சிந்தனை - சொல்லாடல் - மையமிட்டக் கலை இலக்கியம் - பண்பாட்டுத் தளம் ஆகியன இன்றும் தன்நிலை மாறாமல், இங்குப் பயணப்பட்டு வருகின்றன. இதற்கு எதிரான கடவுள் நம்பிக்கையை மையமிட்ட சமய ஏகவாதமும் - மொழியை மையமிட்ட சர்வாதிகாரமும் இன்றும் தொடர்ந்து வருகின்றன.

அந்த நிலையில் ஒரு நூற்றாண்டுக்கு மேலான சமூக நிகழ்வுகளிலும் பண்பாட்டுத் தளங்களிலும் திராவிட எழுத்துக்கள் எவ்வகையான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன என்பதனைப் பதிவு செய்யும் நோக்கில் தான் "தமிழ்ச்சமூகப் பண்பாட்டு வெளியில் திராவிட எழுத்துக்களின் தாக்கம்" என்னும் பொருண்மையிலான இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கம். இதற்கு முழு மனதுடன் அனுமதி வழங்கிய பிராவிடென்ஸ் மகளிர் கல்லூரியின் நிர்வாகத்தினைப் பாராட்ட வேண்டும். இந்தக் கருத்தரங்கில் ஆலோசகராக இருந்து தன் பணிகளுக்கு இடையிலும் சிறப்பான ஆலோசனைகளை வழங்கிய பிராவிடன்ஸ் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் F.மலர்விழி அவர்களையும், ஒருங்கிணைப்பாளராக இருந்து சிறப்பாகப் பணியாற்றிய முனைவர் ஜெ.குணசீலி அவர்களையும் பாராட்டுகின்றோம். ஓர்மைப் புள்ளியில் தலைப்பு அமைந்தாலும், இதழ் பணிகளில் எல்லாவிதமான ஆலோசனைகளைத் தக்க சமயங்களில் வழங்குகின்ற "முத்தரசி-கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழாய்விதழ்" ஆசிரியர் குழுவினையும் பாராட்டுகின்றோம்.

முதன்மை ஆசிரியர்

முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழாய்விதழ்

பொருளடக்கம்

எண்	கட்டுரைத் தலைப்பு & கட்டுரையாளர்கள்	பக்கம்
01	அண்ணாவின் படைப்புகள் காட்டும் சமுதாயச் சிந்தனையில் பெண்ணியம் தி. தருண்சர்மா	1
02	சாமி சிதம்பரனாரின் பகுத்தறிவுச் சிந்தனைகள் முனைவர் பா.பொன்னி	10
03	பூங்கொடி காப்பியத்தில் திராவிடக்கொள்கை முனைவர் மா. முத்துச்செல்வி	16
04	திராவிட இயக்கங்களின் தமிழ்ப்பணிகள் முனைவர் ப.செந்தில் முருகன் பேரா. முனைவர் பெ.இளையாப்பிள்ளை	20
05	திராவிட இயக்கக் கடித இலக்கியத்தில் அரசியல் முனைவர் இரா.ஏழுமலை உ.ஸ்ரீதேவி	28
06	திராவிட மொழிகளில் தமிழ் உருபன்கள் கல்யாணசுந்தரம் கி	39
07	திராவிட நோக்கில் சமூகம் இரா.ஜெயந்தி	45
08	திராவிடப் பார்வையில் தமிழர் திருமணம் பேரா.க.ஜெ.செந்தில்குமார்	50
09	திராவிட மொழிக்குடும்பம் முனைவர்.அ. .ஸ்ரீதேவி	64
10	மொழியும் இலக்கணமும் திருமதி க வெண்ணிலா முனைவர் ம. பூபதி	67
11	அறிஞர் அண்ணாவின் நாடகங்களில் சாதியமும் சமத்துவமும் உ.ச.எ.தமிழரசன்	75
12	துளிப்பாக்களில் மெய்ப்பாடுகள் முனைவர். மு.செந்தில்குமார்	79
13	பழங்குடிப் போராளி பிர்சா முண்டாவின் உரிமைப் போராட்டம் முனைவர் ஜெ.சங்கீதா	86
14	பாரதிதாசனும் சிறுவர் கல்வியும் பெண் முன்னேற்றமும் சீதா லட்சுமி	89

15	திராவிட இயக்க இதழ்கள் தமிழ் மொழிக்கு ஆற்றிய சேவைகள் முனைவர் G.ரவி	105
16	தமிழறிஞர் சாமி.சிதம்பரனாரின் சிந்தனைத் தளத்தில் பெண்கள் முனைவர் கு.வளர்மதி	112
17	பாரதிதாசனாரின் ஆத்திச்சூடியில் திராவிடக் கருத்துக்கள் திருமதி மு.பூங்கோதை	118
18	திராவிடப் பார்வையில் முடியரசனின் "மானம் போற்று" முனைவர் பெ.ஆனந்தி	125
19	தமிழ்ச்சமூகப் பண்பாட்டு வெளியில் குறிஞ்சி நில மகளிரின் முன்னெடுப்புகள் முனைவர் செ.ஞானேஸ்வரன்	130
20	தந்தை பெரியாரின் கடவுளும் கடவுள் மறுப்புக் கொள்கையும் உ.ச.எ.முகிலன் உ.ச.எ.தமிழரசன்	139
21	அறிஞர் அண்ணாவின் படைப்புகளில் உளவியலும் பகுத்தறிவும் முனைவர் இரா.ரேணுகாதேவி	143
22	வேலைக்காரி - வெளிப்படுத்தும் பகுத்தறிவு முனைவர் மா.ஜெயச்சந்திரன்	148
23	கண்ணதாசனின் திராவிடச் சிந்தனை - ஒட்டலும் விலகலும் முனைவர் ஜெ.குணசீலி	152
24	திராவிட இயக்க இதழ்களும் சமூக மாற்றமும் ஆர்.ரேவதி	159
25	திராவிட இயக்கமும் தமிழ் வளர்ச்சியும் முனைவர் R. ஷானி ரஸ்கின்	166
26	தமிழ்த் திரைப்படத்துறையும் திராவிட அரசியலும் பேரா.சோ.ஹரிபாண்டிராஜன்	172
27	பெரியாரும் மொழியியல் சிந்தனையும் முனைவர் ப.கலைவாணி	177
28	திராவிட இயக்கமும் கோவில் நுழைவுப் போராட்டமும் முனைவர் F.மலர்விழி	184
29	மொழி சார்ந்த கலகமும் திராவிடக் குரல்களும் முனைவர் M.ஜீனதாஸ்	192
30	தேவதாசி ஒழிப்பில் திராவிடத்தின் பங்கு முனைவர் G.மாரிச்செல்வம்	198

31	திராவிட வரலாற்றின் கவிதை வடிவம் முனைவர் சு.வினோத்	204
32	பாரதிதாசன் படைப்பில் திராவிடச் சிந்தனை முனைவர்கா.ஸ்ரீதர்	210
33	உடுமலை நாராயணகவி பாடல்களும் திராவிடத் தாக்கமும் முனைவர் வீ.ச.அசோக்குமார்	216
34	திராவிடப் பார்வையில் பெண்ணுரிமைச் சிந்தனைகள் முனைவர் பொ. அமுதா	223
35	திராவிடக் கொள்கைகளும் பண்பாட்டு மாற்றங்களும் முனைவர் திருமதி நா.கவிதா,	230
36	பெண் கவிதைகளில் பெரியாரியம் முனைவர் மா.பத்ம பிரியா	240
37	கவிஞர் மீரா பார்வையில் சமுதாயம் முனைவர் ப. சக்திவேல்	249

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

1. அண்ணாவின் படைப்புகள் காட்டும் சமுதாயச் சிந்தனையில் பெண்ணியம்

தி. தருண்சர்மா,
தமிழ் திட்ட ஆய்வாளர், தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை- 600 005,
ttsart99@gmail.com கைப்பேசி - 7708042705.
DOI 10.5281/zenodo.13760491.

Abstract:

Anna was the one who voiced fearlessly that the basic structure of this society should be changed to remove the mental pollution of the people living in the Tamil society, nurture revival and achieve human welfare. He used the tool of literature to carry out the task of reforming this society. His writings became a catalyst for social awareness. Her powerful writing was a turning point in bringing about change in society and addressing caste issues, economic inequality issues, women's rights etc. Anna, who did literary and social philanthropy, created social awareness through literary genres like journalism, drama, stage Tamil, literature, short story, novel and short novel.

Key words: Anna Literature – Dravidiam – Social literature.

முன்னுரை

தமிழ்ச் சமுதாயத்தில் வாழுகின்ற மக்களின் மன மாசுகளைக் களைந்து, மறுமலர்ச்சியினை ஊட்டி, மனித நலம் சிறக்க, இந்தச் சமுதாயத்தின் அடிப்படை அமைப்பு முறை மாற்றிட வேண்டும் என்று அஞ்சாமல் குரல் கொடுத்தவர் அண்ணா. இச்சமூகத்தைத் திருத்தி அமைக்கும் பணியை, மேற்கொள்ள இலக்கியமென்னும் கருவியைத் துணைக் கொண்டார். அவருடைய எழுத்துக்கள் சமுதாய விழிப்புணர்ச்சியைத் தூண்டுவனவாக அமைந்தன. அவரது ஆற்றல் வாய்ந்த எழுத்து, சமுதாயத்தில் மாற்றத்தை உண்டு பண்ணுவதாக அமைந்ததுடன் சாதிப்பிரச்சினை, பொருளாதார ஏற்றத்தாழ்வுப் பிரச்சினை, பெண்ணுரிமை போன்றவற்றிற்கெல்லாம் தீர்வுகாட்டும் ஒரு திருப்புமுனையாகவும் இருந்தது. இலக்கியத் தொண்டும், சமூகத் தொண்டும் ஆற்றிய அண்ணா, இதழியல், நாடகம், மேடைத்தமிழ், கடிதஇலக்கியம், சிறுகதை, நாவல், குறுநாவல் போன்ற இலக்கிய வகைமைகள் மூலம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

சமுதாயத்தில் உள்ள நிறைகளும், குறைகளும் அண்ணாவின் படைப்புகளில் வெளிப்படுகின்றன. உணர்வுகள் மேலோங்கியும் அதனால் சமுதாயத்தில் உள்ள நிறைகுறைகள் களையப்படவும் நிறைவான கூறுகள் வளர்த்தெடுக்கப்படவும் படைப்புகள் வழிவகுக்கின்றன. சமுதாயச் சிந்தனையோங்கத் தன்படைப்புகளை உருவாக்கிய அண்ணா சமுதாய அநீதிகளைச் சுட்டிக்காட்டினார். இழந்த உரிமைகளை மீட்டெடுக்க முனைந்தார். எதையும் பகுத்தறிவோடு அணுகியவர். இன உணர்வும், எழுச்சியும் கொண்டு படைப்பாக்கம் செய்தவர். அடிமை, தீண்டாமை, சாதியம், வன்கொடுமைகள் என்பனவற்றைத் தாம் உருவாக்கிய படைப்புகளில் ஆழப் பதிவாக்கியவர். அவையெல்லாம் களையப்பட வேண்டும்

http://Creativecommons.org//license/by/4.0/.

என முழக்கமிட்டவர். அவருடைய படைப்புகளில் பெண்களின் உரிமையும் பெண்களின் முன்னேற்றமும் எவ்வாறு இருந்தது என்பதை இந்தக் கட்டுரை ஆராய முற்படுகிறது.

சமுதாயம் -விளக்கம்

சமுதாயம் என்பதற்கு விளக்கம் கூற முனைந்த ஆங்கில அகராதி, சமயம், பண்பாடு, அறிவியல், அரசியல், நாட்டுப்பற்று முதலியவற்றின் அடிப்படையில் சேர்ந்து செயல்படும் - வாழும் மக்கள் கூட்டத்தினையே **சமுதாயம்** என அறிஞர் பொதுவாகக் கூறுவர். இவ்வாறு அண்ணாவின் படைப்புகளில் சமயம், பண்பாடு, அறிவியல், அரசியல், கல்வி, பொருளாதாரம், உழைப்பு, பெண்கள், வறுமை என்றும் சமுதாயத்தின் பல்வேறு வாழ்வியல் சிறப்புக் கூறுகளும் இடம்பெற்றுள்ளன.

மனித சமூகத்தின் போக்கானது கணக்கற்ற மனித உள்ளங்களில் ஏற்படும் விருப்பங்களினால் அமைகிறது. அது தொடர்ச்சியானது .என்ற லியோடால்ஸ்டாய் கருத்து, அண்ணா, தான் வாழ்ந்த காலத்துச் சமூகத்தின் போக்கையும், கணக்கற்ற மனித உள்ளங்களின் விருப்பு வெறுப்புகளையும் தம் படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளமை நோக்கத்தக்கது.

அண்ணாவின் பார்வையில் சமுதாயம்

அண்ணாவின் சமுதாயப் பார்வை தமிழகத்தை அடிப்படையாகக் கொண்டது. தமிழர்களின் வாழ்வியல் முறை அறியாமை நிறைந்து விளங்கியது. எனவே சீர்திருத்தும் பொறுப்போடு அண்ணாவின் சமுதாயப்பார்வை விளங்குகின்றது. அண்ணா இலட்சிய சமூகமாக தமிழ்சமூகம் இருக்க வேண்டும் என்றும் பகுத்தறிவு பாதையில் தமிழக மக்கள் நடக்க வேண்டும் என்ற நிலையில் தன்னுடைய படைப்புக்களைப் படைத்தார். மூடநம்பிக்கையில், நம்பிக்கைக் கொண்டிருந்த தமிழ் மக்களை, ஆரியப் பிடியிலிருந்து விடுவிக்கவும் தம்முடைய சமூகசீர்திருத்தக் கருத்துக்களை மக்களிடையே பரப்பவும் இலக்கியங்கள் படைத்தார். அரசியலால் அகில உலகத்தால் அறியப்பட்டவர். எழுத்தால் தமிழ் உலகத்தால் தெரியப்பட்டவர்.

அவ்வகையில் அண்ணா சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், கட்டுரைகள், கடிதங்கள் போன்ற நவீன கால இலக்கியப் படைப்புகளில் எல்லாம் தம் பங்களிப்பைச் செய்து அவற்றின் ஆளுமையின் மூலம் சமுதாயச் சீர்த்திருத்தச் சிந்தனைகளை மேற்கொண்டார். அண்ணாவின் படைப்புகள் அனைத்திலும் சமூக அமைப்பு, சமூக நிகழ்வு, சமூக நிகழ்வில் மனிதர்களின் வாழ்க்கை.

அவ்வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகள், முரண்பாடுகள், சீர்கேடுகள் போன்றவை உள்ளடக்கங்களாக அமையும். அண்ணாவின் இலக்கியப் படைப்புகள் சமுதாயத்தில் ஒரு மலர்ச்சியை ஏற்படுத்துவனவாகவும் மூடநம்பிக்கைகளை ஒழித்து ஒரு மேன்மையான சமுதாயத்தை உருவாக்கவல்லதாகவும் அமைந்துள்ளன. பெண்ணியப் பார்வை அண்ணாவின் தொடக்கக்கால கதைகள் சிக்கல்களுக்குத் தீர்ப்புக் காட்டின. (பொய்,

http://Creativecommons.org//license/by/4.0/.

இலாபநஷ்டம், கபோதிபுரக்காதல்). இடைக்கால கதைகளில் சிக்கல்கள் விளக்கப்பட்டன. (யார் மீது கோபித்துக் கொள்வது, பல்லிளிக்கும் பரப்பிரம்மங்கள்). பிற்கால கதைகளில் படிப்போரின் சிந்தனையைத் தூண்டிச் செயல்படுமாறு சிக்கல்களை அமைத்தார். (விழுப்புரம் சந்திப்பு, கடைசிக் கனவு)

அண்ணாவின் சிறுகதைகளை அவற்றின் கருப்பொருளை ஒட்டி மூடநம்பிக்கை ஒழிப்பு, பெண்ணுரிமை, ஆரியஎதிர்ப்பு, முதலாளித்துவ எதிர்ப்பு, சமுதாய ஒப்பீடு, வரலாறு, உருவகம், உண்மை நிகழ்ச்சிச் சித்தரிப்பு, உளவியல் பாத்திர நோக்கச்சித்தரிப்பு, உளவியல், பாத்திர நோக்கச்சித்தரிப்பு, பொதுநிலை முதலான 11 வகைகளாக டாக்டர் பா.உதயகுமார் பகுத்துள்ளார்.[1]அண்ணா உருவாக்கிய சிறுகதைகளில் பெண்ணியத்தை முதன்மைப்படுத்தவும் விழிப்புணர்வும் சமுதாயச் சிந்தனையும் ஏற்படும் வகையில் தலைப்புகளை இட்டார். 'பாமாவிஜயம், "தங்கத்தின் காதலன், 'வள்ளித் திருமணம்,' 'சரோஜா ஆறணா, 'அவள் முடிவு,' 'வள்ளிநாயகியின் கோபம், தேவதையின் துயரம், 'குமாரி சூர்யா, 'நகைத்தாள் நங்கை,"சமூகசேவகி சாருபாலா, 'கன்னி விதவையான கதை, 'வள்ளியின் தேவி, 'சொக்கி, " துணைநடிகை உள்ளிட்ட கதைகளின் தலைப்புகளில் நேரடியாகப் பெண்ணியச் சிந்தனைகளைப் பதிவுசெய்துள்ளார் எனலாம்.

நாவல்களில் பெண்ணியம்

தமிழ்ப் புதின இலக்கிய வரலாற்றில் அறிஞர் அண்ணாவுக்கு என்று தனி இடமுண்டு. அறிஞர் அண்ணா எழுதிய பார்வதி பி.ஏ., ரங்கோன்ராதா என்னும் இரண்டு புதினங்களுமே பெண்கள்பெயரால்அமைந்திருப்பன. பெண்களின் விடுதலையை நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டன. இவருடைய புதினங்கள் அதிக அளவு வருணனைகள் இல்லாதவை ஆகும். இவருடைய புதினங்களில் கற்பனையும், யதார்த்தவாதமும் மேலோங்கி இருக்கக் காணலாம். பெண் விடுதலை, சமூகச் சீர்திருத்தம், பகுத்தறிவு ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்கள் அதிக அளவு இடம் பெற்றிருக்கின்றன. பெண்களுக்குக் கல்வியறிவு மறுக்கப்பட்ட காலத்தில் அண்ணா பெண்களும் படிக்க வேண்டும், தன் பெயருக்குப் பின்னால் படிப்பையும் சேர்த்து எழுத வேண்டும் என்று 'பார்வதிபி.ஏ.' என்று நாவலுக்குத் தலைப்பிட்டார்.

அறிஞர் அண்ணாவுடைய பார்வதி பி.ஏ., என்ற புதினத்தில் வரும் பார்வதி என்ற பெண் சமுதாயத்திற்காகத் தன்னுடைய வாழ்க்கையையே அர்ப்பணிக்க விரும்புகிறாள். ஒரு செல்வந்தரைத் திருமணம் செய்துக் கொள்ள பொய்யாகச் சம்மதிக்கிறாள். அதன் மூலம் கிடைக்கின்ற சொத்தை ஏழைகளின் நல்வாழ்வுக்குப் பயன்படுத்த எண்ணுகிறாள். இப்போது உள்ள சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. சிறிதளவுகூட மனிதநேயமே இல்லாமல் பணம் ஒன்றை மட்டும் குறிக்கோளாக வைத்துக் கொண்டு சுயநலமாக வாழ்கின்ற மனிதர்கள் இந்தச் சமுதாயத்தில் அதிக அளவு

http://Creativecommons.org//license/by/4.0/.

இருக்கின்றனர். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தான் பார்வதி பி.ஏ., என்ற புதினத்தில் வரும் ஆலால சுந்தரர்.

இவர் வெளிஉலகத்திற்கு நல்ல மனிதராகவும் உள்ளத்தில் மிகவும் மோசமானவராகவும், கஞ்சத்தன்மைக் கொண்டவராகவும் போலிவாழ்க்கை வாழ்பவராகவும் இருக்கும் பெரிய மனிதர் இவர். இவரைத் திருமணம் செய்ய பொய்யாக சம்மதித்துச் சமுதாயத்திற்குச் சேவை செய்ய விரும்பியவளாக பார்வதியைப் படைத்திருக்கிறார் அறிஞர் அண்ணா அவர்கள். பெண்களின் கற்பைச் சூறையாடுகின்ற ஆண்களின் ஆணாதிக்கத்தையும், அதனால் ஏமாறுகின்ற பெண்களின் மனநிலையையும் அண்ணா, பார்வதியின் தோழியாக வரும் உத்தமி என்ற கதாபாத்திரத்தின் வாயிலாக விளக்குகிறார்.

மேலும் இந்தப் புதினத்தில் வருகின்ற டாக்டர் லலிதகுமாரியை நல்லகுணம் படைத்தவளாகக் காட்டுகின்றார் அண்ணா. கற்பிழந்து களங்கப்பட்டு, பெற்ற பிள்ளையையும் பறிகொடுத்து விட்டாலும் மனம் தளராமல் மற்றவர் துயர்துடைக்கும் மருத்துவப் பணியை மனமுவந்து செய்கின்றாள். அத்தகைய நல்லகுணம் படைத்தவளாக லலிதகுமாரி இதில் படைக்கப் பெற்றுள்ளார். பெண்கள், துன்பம் நிறைந்த வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருந்தாலும் சமுதாயத்திற்காக சேவை செய்வதில் தங்களையே அர்ப்பணித்துக் கொள்கிறார்கள். அண்ணா 'கலிங்கராணி' என்ற புதினத்தில் பெண்மையை முதன்மைப்படுத்திக் கூறுகிறார்.

சமூகமதிப்பும் புரட்சிப்பெண்களின் வாழ்வும்

'ரங்கோன்ராதா' என்ற புதினத்தில் தன்னைக் காட்டிலும் அழகும் இளமையும் கொண்ட தன் தங்கையை மணந்து வாழத் துடிக்கும் பேராசைப் பிடித்த கொடுமைக்காரக் கணவனைக் கொலைக் குற்றத்திலிருந்து காப்பதற்காகக் கைக்குழந்தையான தன் மகனை அவனிடம் விட்டுவிட்டுத் தான் இறந்து விட்டதாக நம்ப வைக்கிறாள் தங்கம். பரதேசிக் கோலத்தில் ஊர்ஊராகத் திரிந்து ரங்கூன் வரை சென்று வழி தவறிய அவல வாழ்வின் சின்னமாக ஒரு மகளையும் பெற்றுக் கொண்டு திரும்பி வருகிறாள் ராதா. இதனை விவரிக்கும் நாவலுக்கு 'ரங்கோன்ராதா' என்று பெண்ணியத் தலைப்பிட்டுள்ளார்.

எந்த ஒரு பெண்ணும் பொறுமையாகத் தான் இருப்பாள். தன் கணவனுக்காகவும் தன் குடும்பத்திற்காகவும் பல்வேறு தியாகங்களைச் செய்வாள். எத்தகைய துன்பத்தையும் தன் குடும்பத்திற்காகத் தாங்கிக் கொள்வாள். ஆனால் தன்னுடைய கணவன் தனக்குத் துரோகம் செய்கிறான் என்று தெரிந்தால் அந்தப் பெண் ஒரு புரட்சிப் பெண்ணாகவே மாறிவிடுவாள் என்பதை ரங்கோன் ராதாவில் வரும் ரங்கத்தின் மூலமாக உணர்த்தி இருக்கிறார் அறிஞர் அண்ணா.

"எனக்குச் சாகத் துணிவு இல்லை என்பதல்ல, இஷ்டம் இல்லை. உயிரோடு இருந்து போராட வேண்டும் என்று தோன்றிவிட்டது. இனி அவர் என் கணவரல்ல, என்னை வஞ்சித்து வாழ விரும்புபவர். இனி அவருடைய வஞ்சனையுடன் போராடி, ஒரு பெண்ணை

http://Creativecommons.org//license/by/4.0/.

அவ்வளவு எளிதாகத் தோற்கடிக்க முடியாது என்பதைக் காட்ட வேண்டும் என்று உறுதி பிறந்தது." என்று ரங்கத்தின் வாயிலாக அண்ணா அவர்கள், தற்கொலை செய்துக் கொண்டு தன் வாழ்வையே முடித்துக் கொள்ளும் பெண்களுக்குப் புரட்சிச் சிந்தனையை ஊட்டுகின்றார்.

பெண்களின் தன்னுணர்வு வெளிப்பாடு

குமாஸ்தாவின் பெண் என்று தலைப்பிட்டு எழுதியுள்ள புதினத்தில் ஏழைப் பெண்களின் காதல் கருகி வயோதிகனுக்கு வாழ்க்கைப்பட்டு விதவையாகி, அக்கொடுமையிலிருந்து விடுதலை பெற விபச்சாரி ஆகி அங்கும் இன்பம் காணமுடியாமல் கொலையாளியாகும் பெண்ணின் துன்ப வாழ்வைப் பதிவு செய்துள்ளார் அண்ணா. 'குமரிக்கோட்டம்' என்னும் புதினத்தில் மனித வாழ்வைச் சாதி எப்படிச் சாய்க்கிறது என்று காட்டியுள்ளார். கதையில் குழந்தைவேல் செட்டியார் ஒரு வைதீகப்பழம். வேறு சாதியைச் சேர்ந்த நாகவல்லி என்ற காதல் நங்கையை மகன் பழனி திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று அவனை வீட்டை விட்டு வெளியேற்றினார். பிறகு தானே குமரி என்ற பெண்ணிடம் மையல் கொண்டார். அதே வைதீகத்திற்கு விடை கொடுத்தவராகின்றார்.

'சந்திரோதயம்' என்னும் நாவல் சிறப்புமிக்கது. சாதிக்கும் சமயமாகிய வைதீகத்திற்கும் நீண்ட நாட்களாகப் பால் வார்த்து வந்த சிங்காரவேலு முதலியாரே அவற்றை ஒழிக்கும் முயற்சியில் ஈடுபட்ட நிகழ்வுகள் தான் இந்நாவல். அவரது மகள் சந்திராவின் கதையானதால் சந்திரோதயம் என்ற பெயர் பெற்றது. இதுவும் பெண்ணியத்தின் அடிச்சுவட்டில் பதிந்த கதையாகின்றது.

பெண்ணிய நோக்கில் காதல் திருமணமும் சமூகச் சிந்தனையும்:

அண்ணா படைத்துள்ள கபோதிபுரக்காதல் என்ற புதினத்தில் சமூகச் சிந்தனையும் பெண்ணிய நோக்கில் காதல் திருமணமும் சித்தரிக்கப்படுகிறது. சாரதா என்ற பெண்ணை அவள் பெற்றோர் மாரியப்பப் பிள்ளை என்ற பணக்காரக் கிழவனுக்கு மூன்றாம் தாரமாகத் திருமணம் செய்து வைக்கின்றனர். ஆனால் அவள் பரந்தாமன் என்ற வண்டிக்காரனிடம் காதல் கொள்கிறாள். சாரதா விதி வசத்தால் தன் தாத்தா மாரியப்பப் பிள்ளைக்கே மனைவியானது உணர்ந்து அவன் துடிக்கின்றான். மாரியப்பப் பிள்ளை போதை மருந்திற்கு அடிமையாகிறான். அவனிடம் பணி செய்யும் கருப்பையா என்பவன் எப்படியோ சாரதாவிடம் தகாதஉறவு கொள்கிறான்.

மாரியப்பப் பிள்ளை வீட்டிற்கு வரும் சிங்காரவேலனும், கோகிலமும் சாரதா, கருப்பையாவின் அணைப்பில் இருப்பதைப் புகைப்படம் எடுத்து, இருவரையும் மிரட்டிப் பணம் வாங்கிக் கொள்கிறார்கள். பரந்தாமன் துறவியாக ஒரு மடத்தில் சேர்கிறான். அங்கே மடத்தின் தலைவரின் பித்தலாட்டத்தை அறிகிறான். சாரதாவைப் புகைப்படமெடுத்ததையம், பணம் பறிக்கும் செயலையும் கோகிலம் மடத்தலைவரிடம் கூறுவதைப் பரந்தாமன் அறிகிறான். கோகிலம், மடத் தலைவரின் உறவினை உலகுக்குத் தெரியப்படுத்தி விடுவேன்

http://Creativecommons.org//license/by/4.0/.

என்று கூறி, கோகிலத்திடம் சாரதா கருப்பையா இருவரும் சேர்ந்திருந்ததை எடுத்த புகைப்படத்தைக் கொடுக்கும்படி இயம்புகிறான். அதனைப் பெற்றுக் கொண்ட அவன் சாரதாவின் தாயிடம் அனைத்து விவரங்களையும் கூறுகிறான்.

சாரதாவைத் தான் மறக்க முடியவில்லை என்றும் கூறுகிறான். இதனை அறிந்த சாரதா தன் வயதான கணவன் மாரியப்பப் பிள்ளைக்கு அதிகமான அளவு போதை மருந்து கொடுக்கிறாள். அவன் இறந்து விடுகிறான். சாரதா, பரந்தாமனைப் பார்க்க வரும் போது அவன் அம்மை நோய் வாய்ப்பட்டுக் கண்ணை இழந்துவிட்டதை அறிகிறாள். இன்னமும் அவனுக்குத் தன் மீது காதல் இருப்பதை அறிந்து அவனுடன் வாழத் தீர்மானிக்கிறாள். இதனை அண்ணா, 'விதவை சாரதாவுக்கும் விழியிழந்த பரந்தாமனுக்கும் மணம் நடந்தேறியது.சாரதா கிழவனை மணம் முடிக்கும் போது, புரோகிதர் புகை போட்டு மந்திரங்களை இயம்புகிறார். புரோகிதர் போட்ட புகையால், சாரதாவின் கண்கள் கலங்கி விட்டது' என்கிறார்.

பரந்தாமன் என்ற கதைமாந்தரின் வழியாக அறிஞர் அண்ணா போலிச்சாமியாரின் செயல்களைக் கண்டிக்கிறார். "ஊரை ஏய்க்க உருத்திராட்சமா? கண்டவரை மயக்க காவியா? விபூதி பூசிக்கொண்டு, விபரீதச் செயல்புரிவதா? யோகி ஒரு திருட்டு யோகி" என்கிறான். பாதகனைக் கண்டு பயம் கொள்ளலாகாத அவன் செயல் சமூகத்தில் வாழும் மானுடர்களுக்குப் பாடமாகத் திகழ்கிறது. மேலும், போலிச் சாமியாரின் வஞ்சகச் செயலை, **பிடிப்பான், அடிப்பான், கடிப்பான், உதைப்பான் பேசினாயா நமச்சிவாயா என்பான், பூசினையோ திருநீறு எனக் கேட்பான்**[2] என்ற சொற்றொடர் வழி நமக்கு உணர்த்துகிறார். இவ்வாறு பல சமூகச் சிந்தனைகளை மக்களின் மனத்தில் பதிய வைக்கிறார் அண்ணா.

அண்ணாவின் கபோதிபுரக் காதல் எனும் புதினம் சமூக அவலங்களைச் சாடுவதாக அமைந்துள்ளது. உண்மைக் காதலுக்குப் பல இடர்பாடுகள் வரினும், அது இறுதியில் வெற்றி பெறும் எனும் உண்மையைத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. பணத்திற்கு ஆசைப்பட்டுக் கிழவனை இளம்பெண்ணிற்கு மண முடிப்பதால் வாழ்வில் ஏற்படும் இழப்புகளையும், இன்னல்களையும் சுட்டிக் காட்டுகிறார். சமூகச் சீர்திருத்தச் சிந்தனைகளுடனும் இப்புதினம் அமைந்துள்ளது.

அறிஞர் அண்ணா எழுதிய நாடகங்களிலும் பெண்ணியப் பதிவுகள் ஏராளமாக அமைந்துள்ளன. இவரது பெருநாடகங்கள் என்று அழைக்கப்படும் 'சந்திரோதயம்,' 'வேலைக்காரி,' 'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்,' 'ஓர் இரவு,' 'நல்ல தம்பி, 'காதல் ஜோதி,' 'சொர்க்க வாசல், 'பாவையின் பயணம், உள்ளிட்ட நாடகங்கள் இவ்வகையில் எண்ணத்தக்கன.

அறிஞர் அண்ணா, பெரியாரின் கொள்கைகளுக்கு இலக்கிய வடிவம் தந்தவர் என்ற சிறப்பிற்குரியவர். 'சந்திரோதயம்' என்ற நாடகத்தில் தன்மான இயக்கத்தைப் பிரச்சாரம் செய்தார். இந்நாடகத்தில் தீண்டாமை ஒழிப்பு, பார்ப்பணியத்தின் சூழ்ச்சி மேட்டுக்குடிகளின்

http://Creativecommons.org//license/by/4.0/.

அக்கரையற்ற போக்கு என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளன. விதவையர் மணம், மறுமணம், கலப்புமணம் போன்ற பெண்ணியச் சிந்தனைகள் வெளிப்படும் உயிர்ப்பான நாடகமாக இது விளங்குகிறது.

சமூக நோக்கில் பெண்ணியச் சிந்தனைகள்

வேலைக்காரி நாடகத்தில் பெண் பாத்திரங்களை விட ஆண்பாத்திரங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் முதன்மைப் பாத்திரங்களான வேலைக்காரி அமிர்தம், வேதாச்சல முதலியார் மகள் சரசா என்ற இருவர் மட்டுமே. கேட்மில்லட் என்ற பெண்ணியவாதி பெண்களை அமைதி, அறியாமை, கற்பு போன்ற பண்பு உள்ளவர்களாக உருவாக்குகின்றனர்" என்கிறார்.

இதனடிப்படையில் பெண் என்பவள் நகைகளை அணிந்து அழகு பார்க்கின்ற நிலையாகவும், திருமணத்திற்குப் பின் தன்னுடைய கணவனையும் அவனைச் சார்ந்த குடும்பத்தாரிடமும் அடங்கு வாழும் போக்கவே படைக்கப்படுகின்றனர். வேதாச்சலத்தின் மகன் சரசா, செல்வச் செழிப்பிலே பிறந்து முதலியாரின் செல்லப் பெண்ணாக வளர்ந்த பரமானந்தத்திற்கு மணமுடிக்கப்பட்ட நிலையில் அவனின் பழிவாங்கும் குணத்திற்குப் பலிகடாவாக ஆக்கப்படுகின்றாள். அவனுடைய பேச்சிற்கும் ஏச்சிற்கும், அடி, உதைகளுக்கும் ஆட்பட்ட ஒரு பெண்ணாக மாறிப் போகின்றவளாக அவளைப் படைத்திருக்கின்றார் அண்ணா.

சரசா எவ்வளவு தான் படித்திருந்தாலும் செல்வச் செழிப்பிலே நவநாகரிகப் பெண்ணாகவும் மாதர் சங்கத்தில் தொடர்புடையவளாகவும் இருந்த நிலையில் திருமணமானவுடன் தன் கணவன்குடிகாரனாகவும், பெண்பித்தனாகவும், சூதாடியாகவும் உள்ளதை எதிர்த்துக் கேட்காத ஒரு சராசரிப் பெண்ணாகவே அவளைப் படைத்துள்ளார். தன் தந்தையின் கண்ணெதிரிலேயே கணவனால் அடித்துத் துன்புறுத்தப்படுகின்ற நிலையிலும், ஒரு காலகட்டத்தில் கணவனோடு வீட்டை விட்டு வெளியேறிக் காய்கறிகளை விற்று வரும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்ற போதிலும் பெண்களுக்கே உரிய தன்மையோடு படைக்கப்பட்டுள்ளாள்.

ஆண் என்பவன் பெண்ணைக் கைநீட்டி அடிப்பவனாகவும், அவளிடம் முரட்டுத்தனமாக நடந்து கொள்பவனாகவும், அவளிடத்தில் உடல்ரீதியாக வேலை வாங்குபனாகவும் சமூகத்தினரால் அடையாளம் காணப்படுகின்றான். பெண் உடல் என்பது மரபுரீதியாக ஆண்களுக்கு உடைமையானது என்றும், அவளது ஏச்சிற்கும் பேச்சிற்கும் உரியது என்றும், மூடி மறைக்கப்பட வேண்டியது என்றும், காப்பாற்றப்பட வேண்டியது என்றும், அவனோடு சேர்ந்து நிறைவு பெறவேண்டியது என்றும் ஆணுலகம் தீர்மானித்து வைத்துள்ளது.[3]

இத்தீர்மானங்கள் மரபு அடிப்படையிலான நம்பிக்கை மற்றும் பழக்கவழக்கங்களால் சுட்டிக் காக்கப்படுகின்றன. இந்த அடிப்படையிலேயே வேலைக்காரி நாடகத்தில் சரசா

http://Creativecommons.org//license/by/4.0/.

படைக்கப்பட்டுள்ளாள். பாவையின் பயணம் என்னும் நாடகம் பெண்களின் உரிமைக்காக வழக்காடும் ஒரு வாழ்விலக்கியமாக விளங்குகிறது. 'காதல் ஜோதி நாடகத்தில் விதவை மணம் வற்புறுத்தப்படுகிறது. இதில் கலப்புமணம் ஏற்றம் பெற்றது. சமுதாயத்தைத் திருத்தி அமைத்தாக வேண்டும் என்ற கருத்தை இதில் ஆழமாகப் பதிவு செய்துள்ளார். அண்ணாவின் நாடகங்கள் சமூக விழிப்புணர்வையும் மறுமலர்ச்சியையும் ஆழமாக எடுத்துரைத்தன.

நாட்டுணர்வும், மொழியுணர்வும் பகுத்தறிவுச் சிந்தனைகளும் பெண் விடுதலையும் ஒரு குடையின்கீழ் அணிவகுக்கச் செய்தவர் அண்ணா என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அண்ணா பெண்களுக்குரிய உரிமைகளைப் பாத்திரங்கள் வழி உணர்த்தியவர். பெண்அடிமைத் தன்மையை உடைத்தெறிந்தவர். பெண்களுக்கான அனைத்து உரிமைகளும் பேசும்வகையில் இலக்கியப் படைப்பைப் பயன்படுத்தினார். காலங்கள் கடந்தாலும் அவர்தம் சமுதாயச் சிந்தனைகள் இன்றும் உயிர்ப்போடு திகழ்கின்றன எனலாம்.

இவ்வாறு, நாடகங்களின் மூலம் சமூகச் சீர்திருத்தங்களை ஏற்படுத்திய அண்ணா பிறருக்கு அறிவுறுத்தியதுடன் தம் நாடகங்களையும் அவ்வாறே படைத்ததுடன் மக்கள் மனத்தில் பதிந்து அவர்தம் எண்ணப் போக்குகளை மாற்றக் கூடிய முதன்மைப் பார்த்திரங்களையும், எதிர்நிலைப் பாத்திரங்களையும் கூடத் தாமே ஏற்று நடித்து, நாடகத் துறை வல்லுநர்களால் புகழப்பட்டுள்ளார்.

பெண்களின் சுயசிந்தனைகளின் வெளிப்பாடுகள்

பெண்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஆற்றல், தங்களைத் தவறாக நடத்த நினைக்கும் ஆண்களுக்குத் தண்டனை கொடுத்தல், தன்னை விரும்பும் ஆணிற்கு அவனைப் போன்றே தனக்கும் சுயசிந்தனை உண்டு என்பதை வெளிப்படுத்துதல், சமூகத்தில் நடைபெறும் தவறுகளைத் தட்டிக் கேட்டல் போன்றவை அண்ணாவின் தசாவதாரம் நாடகத்தில் இடம்பெற்றுள்ளது.

முடிவுரை

சமுதாயத்தில் உள்ள நிகழ்வுகளை வெளிப்படையாக தமது படைப்புக்களில் படைப்பாளர்கள் படைக்கின்றனர். அவ்வாறே அண்ணாவும் தமது படைப்புகளில் சமுதாயத்தில் உள்ள நிலைகளையும் பதிவுகளையும் அவை மாற வேண்டிய முறைகளையும் எடுத்துரைக்கும் வகையில் படைத்திருக்கிறார்.அண்ணாவின் படைப்புக்களில் சமுதாயத்திலும், குடும்பத்திலும் காணப்படுகின்ற பெண்கள் மீதான அடக்கு முறைகள், மாறி பெண்கள் விடுதலை பெறவேண்டும் என்ற நோக்கம் கொண்ட சிந்தனைகளைக் காண முடிகிறது.

திராவிட சமூகத்தில் புரட்சியை ஏற்படுத்த விரும்பியதால், பெண்களின் விடுதலைக் குறித்து அண்ணா பேசினார். பெரியார் பெண் விடுதலைக் குறித்து இந்துச் சமுதாயத்தின்

http://Creativecommons.org//license/by/4.0/.

முன் வைத்த கடுமையான கருத்துக்களை அண்ணா மென்மையாக எடுத்துக் கூறினார்.பெண்கள் பற்றிய இழிவான சமூக மதிப்பு மாறுவதற்கும் பெண்ணுரிமை மறுதலிப்புக்களைத் தடுக்கும் பெண்ணியச் சித்தரிப்புகளை அண்ணாவின் படைப்புக்களில் காணமுடிகிறது.

திராவிட எழுத்தாளரான அறிஞர் அண்ணா ஒரு சிறந்த பெண்ணியலாளர் என்பதில் ஐயமில்லை. பெரியாரின் திராவிட கழகமும், அண்ணாவின் திராவிட முன்னேற்ற கழகமும் பெண்கள் முன்னேற்றத்தில் பெரும்பங்கு ஆற்றியுள்ளதை எவராலும் மறுக்க இயலாது என்பதே உலகறிந்த உண்மை.

அடிக்குறிப்புகள்

1. உதயகுமார் பா, அண்ணாவின் இலக்கிய வளம், ப. 55.
2. பேரறிஞர் அண்ணா, பேரறிஞர் அண்ணாவின் நாவல்கள், ப. 117.
3. டாக்டர் பிரேமா, பெண் மரபிலும் இலக்கியத்திலும், ப. 14

பார்வை நூல்கள்

1. பேரறிஞர் அண்ணாவின் நாடகங்கள் தொகுதி 1 & 2, பூம்புகார் பதிப்பகம், சென்னை.
2. கபோதி புரக்காதல், திராவிடப் பண்ணை, திருச்சி.
3. திராவிட இயற்கை எழுத்தாளர் சிறுகதைகள், பூர்ணிமா பதிப்பகம், சென்னை.
4. ரங்கோன் ராதா, கன்னி விதவை அணை கதை, சந்திரமோகன், கலிங்க ராணி, இரும்பு முள்வேலி, அரசாண்ட ஆண்டி ஆகியன - பூம்புகார் பதிப்பகம், சென்னை.
5. கலைக்களஞ்சியம், தொகுதி 4, 7, 8, தமிழ் வளர்ச்சி கழகம், சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

2. சாமி சிதம்பரனாரின் பகுத்தறிவுச் சிந்தனைகள்

முனைவர் பா.பொன்னி
இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.
DOI 10.5281/zenodo.13761602.

Abstract:

Tamil writer and magazine writer. Dravidian activist. Impressed by Periyar's ideals, he gets lost in his self-respect movement. He has written more than sixty books such as essays, poems, short stories, plays, literary studies. His play Aputhiran or Social Worker is a poetic play on rationalism written by Agavalpa. The author has created this poem-drama based on the story of Auputra in Manimegalai. The play condemns the evils done in the name of God and in the name of caste. Also, through this play, the teacher has shown the excellence of Tamil language, the superiority of Tamil civilization and Tamil virtue. This article examines Samisithambaranar's views on rational thought through this play.

Key Words: Dravidian languages – Sami chidamparanaar – Periyar's Thot.

தமிழ்ப் பேரறிஞர் சாமி சிதம்பரனார்

தமிழ் எழுத்தாளர் மற்றும் இதழாளர். திராவிட இயக்கச் செயல்பாட்டாளர். பெரியாரது கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அவரது சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தவர். கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள், இலக்கிய ஆய்வு நூல்கள் என்று அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவர் எழுதிய ஆபுத்திரன் அல்லது சமூக ஊழியன் என்னும் நாடகம் அகவற்பாவால் எழுதப்பட்ட பகுத்தறிவினை விளக்கும் கவிதை நாடகம் ஆகும். மணிமேகலையில் இடம்பெறும் ஆபுத்திரனது கதையினைக் கதைக்களமாகக் கொண்டு ஆசிரியர் இக்கவிதை நாடகத்தினைப் படைத்துள்ளார். இந்நாடகம் கடவுள் பெயராலும், சாதியின் பெயராலும் நடைபெறும் தீமைகளைச் சாடுவதாக அமைகிறது. மேலும், ஆசிரியர் இந்நாடகத்தின் வாயிலாகத் தமிழ்மொழியின் சிறப்பு, தமிழர் நாகரீக மேன்மை, தமிழர்அறம் ஆகியவற்றைப் படைத்துக் காட்டியுள்ளார். இந்நாடகம் வழியாக அறியலாகும் சாமிசிதம்பரனாரின் பகுத்தறிவுச் சிந்தனைகள் குறித்தக் கருத்துகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

ஆரியப் பண்பாட்டிற் சிறந்த தமிழ்ப்பண்பாடு

கற்பு என்பது காலந்தோறும் சமுதாயத்தின் கட்டுப்பாடுகளுள் முதன்மையான ஒன்றாகவும், பெண்களுக்குரிய மிகச் சிறந்த ஒழுக்கமாகவும் இருந்து வருகிறது. கற்பு என்ற சொல்லைக் 'கல் போன்ற உறுதித்தன்மை' என்றும், 'கற்பித்தபடி வாழ்தல்' என்றும் சுட்டுவர்.

கற்பு என்ற சொல்லிற்குத் தமிழ்அகராதி "மகளிர் நிறை, கல்வி, அறிவு, தியானம், ஆணை" (மணிமேகலைத்தமிழ் - தமிழ்அகராதி ப.187) என்று பொருள் தருகிறது. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி "உறவில் தன் துணையைத் தவிர வேறொருவரை நாடாத

http://Creativecommons.org//license/by/4.0/.

ஒழுக்கம், பெண்ணின் கன்னித்தன்மை" (க்ரியாவின் தற்காலத் தமிழ்அகராதி ப.382) என்று பொருள் தருகிறது.

மேலும் "கற்பு என்ற சொல்லிற்கு 'chastity', 'conjugal', 'fidelity' ஆகிய பொருட்கள் தரப்பட்டுள்ளன. 'Chastity' என்பதற்குக் கன்னிமை, தூய்மை, தற்கட்டுப்பாடு என்ற பொருட்கள் தரப்படுகின்றன. 'Conjugal', 'fidelity' என்ற சொற்களுக்கு, மணவாழ்வில் கணவன் - மனைவி இருவரிடத்தும் ஏற்படும் பற்று, மாறா உறுதிப்பாடு என்ற பொருள் தரப்படுகிறது. அதாவது கணவன் மனைவியிடத்தும், மனைவி கணவனிடத்தும் பற்று மாறாமல் இருக்கும் தன்மை" (இரா. பிரேமாகற்பு - கலாச்சாரம்பக் - 7-8) என்று குறிப்பிடுவர்.

தமிழர் மகளிரின் கற்பினைப் போற்றி வாழ்ந்துள்ளனர். ஆனால் ஆரியப் பண்பாட்டில் கற்பு என்பது தவறும் நிலையில் புனித நீராடுவதால் சரிசெய்யப்படக் கூடிய ஒன்றாக அமைகிறது. இதனை வாரணாசியில் வாழ்ந்து வந்த அபஞ்சிகன் கதையால் விளக்குகிறார். அபஞ்சிகனின் மனைவி சாலி. அவன் தன் மனைவியின் முகக்குறிப்பினைக் கொண்டு அவள் கருவுற்றிருக்கிறாள் என்பதனை அறிந்து அவளை வெறுத்து வீட்டை விட்டு வெளியே போகச் சொல்கிறான். அவள் தன் பிழையை மன்னிக்கும்படியாக அவனை வேண்டுகிறாள். அபஞ்சிகன் மனமிரங்கி அவளைக் குமரி சென்று நீராடி வரச் சொல்வதனை,

புண்ணிய தீர்த்தம் படிந்தாற் போகும்/
பண்ணிய பாவம் அனைத்தும் பாவாய்
இன்றே இது செய்கழுவாய் வேறில்லை

(சாமிசிதம்பரனார் நூற்களஞ்சியம்.11 ப.157)

என்ற பாடலடிகளால் அறியலாகிறது. சாலியும் வழியில் குமரிக் கடற்கரையோரத்தில் வழியில் சந்தித்து தன்னைப் பற்றிக் கேட்ட சிவப்பன் மற்றும் கறுப்பன் ஆகிய இருவரிடத்தில் குறிப்பிடுகையில்,

தென்றிசைக் குமரித் தெளிநீர் படிந்தபின்/என்றனை மனைவியாய் ஏற்பனென்றுரைத்தான்

இழந்த கற்பினை எயதும் பொருட்டே/பழந்தமிழ் நாட்டை அடைந்தேன் பாவி

(சாமிசிதம்பரனார் நூற்களஞ்சியம்.11 ப. 163)

என்று கூறுகிறாள். அதைக் கேட்ட கருப்பன் கூற்றாக ஆசிரியர் தமிழர் தம் சிறப்பினை விளக்குகிறார்.

கடலிற் கரைத்த காயந் திரட்டினும்/உடலின் உயிரைத் தனியே எடுப்பினும்
முடியுமோ முன்னர் இழந்த கற்பை/.....

http://Creativecommons.org//license/by/4.0/.

பிறர் மனம் புகுதாப் பெண்டிரே எங்கள்/அருந்தமிழ்நாட்டுக் கற்பினர் ஆவர்

காமக்குறிப்புடன் காணும் ஆடவர்/தீமனம் சிதைக்கும் திறத்தையே பெண்கள்

நிறையெனக் கொள்ளின் பிறர்மனம் புகுவரோ/அறிந்திலை போலும்! ஆ! ஆ! பாவம்!

தாயே! உன்செயல் தமிழர்அறியின்/ஏ! ஏ! என்றே இகழுவர் கூறேல்

(சாமிசிதம்பரனார் நூற்களஞ்சியம்.11 பக்.163-164)

என்ற பகுதி கற்பினைக் குறித்த தமிழரின் உயர்ந்த எண்ணத்தினையும், கற்பிற்குத் தமிழ் மக்கள் கொடுத்த முதன்மையினையும் விளக்குவதாக அமைகிறது.

ஆரியர் சூழ்ச்சி

ஆரியர் தம்முடைய தேவைக்காக மக்களையும், பணம் படைத்தோரையும் ஏமாற்றும் தன்மையை ஆசிரியர் இந்நாடகத்தில் பதிவு செய்துள்ளார். ஆரியர்கள் தம்மை உயர்வு பெற்றவர்கள் என்று கூறி தங்களது தவறுகளுக்கு மட்டும் கழுவாய் உண்டு என்று மக்களை ஏமாற்றி வருவதனை,

"பொன்கலத்திற்குத் தீட்டெனப் புகலார்/மண்கலம் தீட்டுப்படுமென மக்கள்

கூறுவர் இதுபோல் குலத்தில் உயர்ந்தோர் / மாறுகொள்வினைகள் மனங்

கொண்டாற்றிலும்

அழிவார் அல்லர்கழுவாய் உண்டே/இழிகுலமக்கள் இயற்றிடில் தீமை

உடனே அழிவர் உய்யும் வழியில்லை"

(சாமிசிதம்பரனார் நூற்களஞ்சியம்.11.ப.164)

என்ற பகுதியால் அறிய முடிகிறது. .அவர்களுடைய இக்கருத்திற்கு எதிரான சிந்தனையை ஆசிரியர் ஆபுத்திரன் வழி வெளிப்படுத்துகிறார்.

தலைப்பால் வாழும் உயிர்கள் தமக்கெலாம்/ பிறப்பும் ஒன்றே இறப்பும் ஒன்றே

உரைப்பீர் சிறிதும் ஒவ்வாப் பொய்யுரை /நான்முகன் தோள் துடை கால் முகங்களிலே

கான் முளை பிறந்தனர் எனக் கதை கட்டினீர்/ உம் பொய்க்கூற்றை உலகினில் இனிமேல்

நம்புவோர் இல்லை !நன்னெறி காண்பீர் !

(சாமிசிதம்பரனார் நூற்களஞ்சியம்.11ப. 189)

என்று பிறப்பால் வேறுபாடு சுட்டி தம்மை உயர்ந்தவர்களாகக் குறிப்பிடும் ஆரியர்களின் மனப்போக்கினை ஆசிரியர் எதிர்க்கிறார் எனலாம்.

http://Creativecommons.org//license/by/4.0/.

யாகம் குறித்த எதிர்ப்பு

குழந்தைப்பேறு இல்லாதவர்கள் புத்திர காமேஷ்டி யாகம் செய்தால் மகப்பேறு அடையலாம் என்ற ஆரியரது கருத்திற்கு எதிர்ப்புச் சிந்தனை கொண்டவராக இந்நாடக ஆசிரியர் அமைகிறார். பூதி, கோமதி தம்பதியினர் குழந்தைப்பேறு இல்லாமல் வருந்துகின்றனர். அப்போது கோமதி தன் கணவனிடம் புத்திரகாமேட்டி யாகம் செய்தாவது மகவைப் பெறலாம் என்று குறிப்பிடுகிறாள். அதற்குப் பூதி தரிவிக்கும் பதில் யாகம் கூறித்த ஆசிரியரின் கருத்தை விளக்குவதாக அமைகிறது.

யாகம் புரிவதால் யாதும் பயனிலை/ பாரில் செல்வர் பொருள்களைப் பறிக்கவோர்
ஆரியர் வகுத்த காரியம் அதுவே!/ காரியத்திற்கே காட்டினர் சாத்திரம்
உடலுழைப்பின்றி உயர்க்கம் எய்தி/ கடல் வரைப்பினிலே காலங்கழிக்க
எண்ணிய மாந்தர் இயம்பினர் அதனைப்/ புண்ணிய செய்கை என்றே புகழ்ந்தன்
அதனை நாம் செய்வதில் அணுவும் பயனில்லை

(சாமிசிதம்பரனார் நூற்களஞ்சியம்.11பக் .170-171)

என்ற பகுதி உடல் உழைப்பில் நீங்கிய ஆரியாரின் ஏமாற்றுச் சிந்தனையின் வெளிப்பாடே இவ்வகையான யாகங்கள் என்ற ஆசிரியரின் கருத்தை விளக்குகின்றன.

பசுவதைத் தடுத்தல்

வேள்வி செய்தால் மழை வரும் என்று கூறி யாகம் பொருட்டு செல்வந்தர்களிடம் பணம் பெற அந்தணர்கள் எண்ணுகின்றனர். அந்த யாகத்தில் பசுவினைப் பலிகொடுக்க விழைகின்றனர். ஆரியர்களின் சூழ்ச்சி அறிந்த ஆபுத்திரன் அவர்களிடம் இருந்து பசுவைக் காப்பாற்ற எண்ணுகிறான்.

அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன் /உயிர்செகுத் துண்ணாதிருத்தல் உயர்வெனும்
சொல்லையும் உணரார் சோம்பல் உடையார்/ புல்லிய தொழிலே புரிய முன் வந்தனர்
செந்தமிழ்நாட்டில் சிறுசெயல் இதனை/ அந்தணர் இவர்கள் ஆற்று தற்கெண்ணினர்
எப்படியாயினும் இவர்தரும் பசு உயிர்/ தப்பச் செய்வேன்! தடுப்பேன் கொலையை!

(சாமிசிதம்பரனார் நூற்களஞ்சியம்.11.பக். 178 - 179)

என்பதால் தமிழரின் சீரிய பண்பாட்டினை விளக்கும் திறனையும் அந்தணர்களின் தீய இயல்பைப் பதிவு செய்திருக்கும் திறத்தினையும் காணலாகிறது.

புராணங்களை மறுத்தல்

புராணங்களை இயற்றியவர்கள் முனிவர்களின் பிறப்பு குறித்துப் பல கதைகளைத் தொன்மமாக உரைப்பர். ஆனால் ஆசிரியர் அக்கருத்துகளை மறுப்பதனை நாடகத்தின்

http://Creativecommons.org//license/by/4.0/.

போக்கில் காண முடிகிறது. சோலையில் ஆண்குழந்தையைக் கண்ட கோமதி அக்குழந்தையை ஒரு பசு பராமரிப்பதைக் கண்ட அப்பசுவின் குழந்தையாகத் தான் அக்குழந்தை இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறாள். ஆனால் பூதி அக்கருத்தினை மறுத்து,

பெண்ணே! உன்மொழி பேதமை! தவறாம்!/
மண்ணில் விலங்குகள் மனிதக் குழந்தைகள்
பெறுதல் இயல்பல பேசுவர் பலகதை/ அறிஞர் அவைகொளார்!

(சாமிசிதம்பரனார் நூற்களஞ்சியம்.11ப.172)

என்று குறிப்பிடுகிறார். மேலும் புராணங்களின் புரட்டுகளை ஆசிரியர் மறுப்பதை,

ஆன்மகன் அசலன் மான்மகன் சிருங்கி /புலி மகன் விரிஞ்சி புரையோர் போற்றும்
நரிமகன் அல்லனோ கேசகம்பளன்?/ ஈங்கிவர் நுங்குலத்து இருடிகணங்களென்று
ஓங்குயர் பெருஞ்சிறப்பு உரைத்ததுலம் உண்டால்!/மக்களும் விலங்கும் கூடிமகப்பெறல்
இக்கடல் வரைப்பில் எங்கும் கண்டிலேம்!

(சாமிசிதம்பரனார் நூற்களஞ்சியம்.11ப. 190)

என்ற பகுதி வாயிலாகவும் அறியமுடிகிறது. இதன் வழி புராணங்கள் குறிப்பிடும் தொன்மங்களை மறுக்கும் ஆசிரியரின் பகுத்தறிவுச் சிந்தனைபு லனாகிறது எனலாம்.

எரிகதிர்ப் பகலவன் எழுந்த பின் உலகில் /உறைபனி உருகி ஓடுதல் போலே
பகுத்தறிவிந்நாள் பரவியதுலகில்/ உகுத்தது நீங்கள் உரைத்த பொய் மூட்டையை!
வீரியம் பேசுதல் வீணே! இங்கோர்/காரியம் இல்லை கட்டுவீர்கடையை!

(சாமிசிதம்பரனார் நூற்களஞ்சியம்.11ப.189)

என்ற பகுதி மக்களிடையே பகுத்தறிவுசிந்தனைகள் வளர்ந்தால் மூடநம்பிக்கைகள் நீங்கினால் மக்களை ஏமாற்றி வாழ்பவர்களுக்கு நாட்டில் இடம் இருக்காது என்ற ஆசிரியரின் மனப்பாங்கினை அறியமுடிகிறது.

ஆபுத்திரன் அல்லது சமூகஊழியன் என்னும் இக்கவிதை நாடகத்தினைச் சாமிசிதம்பரனார் அவர்கள் பகுத்தறிவு நோக்கில் வடிவமைத்துள்ளார். ஆரியர்கள் கடவுளின் பெயராலும், சாதியின் பெயராலும் மக்களை ஏமாற்றி வாழும் தன்மையைப் பதிவுசெய்வதாக இந்நாடகம் அமைந்துள்ளது. மூடக் கருத்துகளை எதிர்த்துப் பகுத்தறிவுச் சிந்தனைகளை மக்கள் மனதில் விதைக்கும் வகையில் ஆசிரியர் இந்நாடகத்தினை அமைத்துள்ளார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

துணைநூற்பட்டியல்

1. தமிழறிஞர்சாமி.சிதம்பரனார் - சாமி.சிதம்பரனார் நூற்களஞ்சியம் தமிழ்மண்பதிப்பகம் தியாகராயார்நகர், சென்னை - 17.
2. இரா. பிரேமா - கற்பு - கலாச்சாரம் தமிழ்ப்புத்தகாலயம், 1998.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

3. பூங்கொடி காப்பியத்தில் திராவிடக்கொள்கை

முனைவர் மா. முத்துச்செல்வி,
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,
தி ஸ்டாண்டார்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
DOI 10.5281/zenodo.13760621.

Abstract

Good literature will remain in people's minds even after the passage of time. In this way, among the works of Mundiarasan, Poongodi Kappiyam is a work that has won time and is a copy of language. Poongodi character is the main character to protect the Tamil language. This study aims to examine the Dravidian policy of Munirarasan through this book.

Key Words: Kappiyam – Mudiyarasan – Dravidiam

நல்லதோர் இலக்கியமே காலம் பல கடந்தும் மக்கள் மனதில் நீங்காது நிலை பெற்றிருக்கும். அவ்வகையில் முடியரசன் படைப்புகளுள் காலத்தை வென்ற படைப்பாக, மொழிக்கொரு காப்பியமாகத் திகழ்வது பூங்கொடி காப்பியமாகும். தமிழ்மொழியினைக் காக்கும் தலைமைப்பாத்திரமாகப் பூங்கொடி பாத்திரம் அமைந்துள்ளது. இக்காப்பியத்தின் வழி முடியரசனின் திராவிடக் கொள்கையினை ஆராய்வதாக இவ்ஆய்வு அமைகின்றது.

மொழிப் போராட்டம்

1964-ஆம் காலக்கட்டத்தில் மத்திய அரசால் இந்திமொழி முதன்மை மொழியாக அனைத்து மாநிலமும் ஏற்க வேண்டும் என்ற சூழலை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டக் காப்பியம் இக்காப்பியத்தில் இடம்பெறும் கதைமாந்தர்கள் பலரும் தமிழுடன் தொடர்புடையவர்கள். தமிழகத்தில் நடந்த மொழிப்போராட்டங்களில் ஈடுபட்ட .மலையுறை அடிகள், இலக்கிய நாவலர், வடிவேல், கொடுமுடி எழிலி, நாவலூர் அமுதம், மயில்வாகனர் போன்ற மாந்தர்கள் இக்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளனர். மேலும், "இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதே எனினும் ஓரிடத்தில் கூட இந்தி என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை"[1]என்று குறிப்பிடுவதிலிருந்து முடியரசனின் கவித்திறத்தை அறியலாம்.

"காவியத்தில் வரும் மலையுறை அடிகள், இலக்கிய நாவலர் முதலானவர்களின் செயல்களைக் கொண்டு இவர்களை முறையு மறைமலை அடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார் என ஆய்வாளர் சிலர் பொருள் கொண்டுள்ளனர். எனினும் மலையுறை அடிகள் என்று குறிக்கப்பெற்றுள்ள பெயர் முடியரசனுக்கு உற்றுழி உதவியவரும், திருக்குறள் பணி செய்தவரும் நூலினைப் பதிப்பித்தவரும் ஆகிய புதுக்கோட்டை அண்ணல் சுப்பிரமணியனாரைக் குறிக்கும். இதனை நோக்கவே "இலக்கிய நாவலர்" என்பது தனித்தமிழ்ப் பற்றாளரும் தொல்காப்பயத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரும் பேராசிரியருமாகிய சி.இலக்குவனாரைக் குறிப்பதாகும்"2 இக்காப்பியம் எழுவதற்கு இம்மொழிப்போராட்டமே அடிப்படையாக அமைந்துள்ளது.

http://Creativecommons.org//license/by/4.0/.

மூடநம்பிக்கைஒழிப்பு

மூடநம்பிக்கைக்கு எதிராக தாமரைக்கண்ணி என்ற கதைமாந்தர் பேசுவதாக ஆசிரியர் படைத்துள்ளார். பேயென ஒன்று உண்டு என்று பேசுதல் பேதமையின் வெளிப்பாடாகும் .மனவலிமை உடையார் அஞ்சாமல் வாழ்வர். மனவலிமைக் குன்றியவர் அஞ்சுவர். அதனால், இருட்டில் கண்ணில்படும் பொருளெல்லாம் கருநிறப் பேயாகத் தென்படும். வாய்ச்சொல் தடுமாறும். அவ்வச்சம்தடுக்கும். வியர்க்கும் நடுக்குறும். கண்ணொளியும் மங்கி இருளும். நெஞ்சே அச்சத்தில் சூழும். அதையே பேயென உலகம் பேசும். நெஞ்சுரம் உள்ளார் ஆய்ந்து அறியும் அறிவுளோர் அஞ்சார். ஆதலால் இவ்வழியினையே நீ விரும்பி பின்பற்றுக என்று தாமரைக்கண்ணி கூறுவதை,

“பேயென ஒரு பொருள் உண்டெனப் பேசுதல்

ஆயிழை! பேதைமை ஆகும் அறிகதில்!

(தாமரைக் கண்ணி தோன்றிய காதை.- 45-46)

இவ்வடிகளின் வாயிலாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார். முத்தக்கூத்தன் கல்லறையைப் பற்றி தாமரைக்கண்ணி ,பூங்கொடிக்கும் அல்லிக்கும் எடுத்துக் கூறுவதில் பகுத்தறிவுச் சிந்தனையைப் புகுத்தியுள்ளார் ஆசிரியர் இவற்றையே திருவள்ளுவரும்,

“**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**

மெய்ப்பொருள் காண்ப தறிவு” (**குறள்**423)

என்ற குறட்பா வழி உலகில் எந்தப் பொருளையும் அறிவு வகையினால் மெய்ப்பொருளை நாடுவது பகுத்தறிவுஎன்று எடுத்துரைத்துள்ளமையை அறிய முடிகின்றது. மேலும், மொழிக்காக போராடி உயிர்நீத்த முத்தக்கூத்தன் கல்லறையைக் காணும்போது நெஞ்சுரம் ஏற்படும் என்பதை,

“**மொழிக்குயிர் ஈந்த நல்முத்தக்கூத்தன்**

பளிக்கறைப் புதைகுழிப் பாங்குடன் மிளிரும்

அதனைக் காணின் அச்சம் தொலையும்

மதமுறு கொடியார் மனச்செருக் கொழிக்க

நெஞ்சுரம் ஏறும், நிமிர்ந்து நடப்பீர்” **(பூங்கொடி, ப.27)**

இவ்வடிகளின் வாயிலாக அறிய முடிகின்றது.

மொழிப்பற்று

காப்பியம் முழுவதும் மொழிப்பற்றினையே பறைசாற்றுகின்றது. மொழியே நம் கலாச்சாரத்திற்கு ஆதாரமானது. பிற மொழிகளின் ஆதிக்கத்திலிருந்து மொழியைக் காக்க வேண்டும். மொழியின்றிச் சிந்தனை இல்லை. மனிதன் மொழி வாயிலாகத் தான்

http://Creativecommons.org//license/by/4.0/.

சிந்திக்கின்றான். மொழியற்ற விலங்குகளிடம் உயிர் வாழ்வதற்கான அடிப்படை உள்ளுணர்வுகளான பசி, பாலியல் நாட்டம், பயம் இவை மட்டுமே காணப்படும். எனவே மனிதன் மனிதனாக வாழ மொழி இன்றியமையாதாகின்றது. இத்தகைய மொழியின் மீது பற்றுடையவராக இருத்தல் வேண்டும் என்பதை,

"உள்ளமும் உயிரும் உணர்வும் தமிழென
உள்ளுவோன் எவனோ அவனே தமிழன்" (பூங்கொடி. ப.46)

என்ற அடிகளிலிருந்து அறிய முடிகின்றது. மேலும், இக்காப்பியத்தில் முடியரசன் தமிழகத்திற்கு அகப்பகை மற்றும் புறப்பகை என்று இரு வகைப் பகைகளைக் குறிப்பிடுகின்றார். அகப்பகையாவது தமிழகத்தை ஆட்சி செய்தவர்களையும், புறப்பகை என்பது வடமொழியையும் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பகையை வெல்ல வேண்டுமானால் பூங்கொடியைப் பன்மொழிப் பயிலுமாறு படைத்துள்ளார்.

மேலும், அவரவர் மொழியில் உயர்பொருள் காணின் தவறாது பெயர்த்துத் தாய்மொழியைக் காக்க வேண்டும். தாய்மொழியினை விடுத்து பிற மொழியினை விரும்புவோர் பேச்சைக் கேட்பின் அத்தகையோர் செருக்கினை அடக்க வேண்டும். பிழைபடத் தமிழைப் பேசியும் எழுதியும் பிழைப்போரைக் கண்டால் அவர்களுக்கு நற்பாடம் புகட்டுதல் வேண்டும். என்று ஆசிரியர் குறிப்பிடுவதை,

"பிழைபடத் தமிழைப் பேசியும் எழுதியும்
பிழைப்போர் காணின் பேரறிவூட்டு
பழிப்போர் இங்கேபிழைப்போர் அல்லர்" (பூங்கொடி. ப.52)

தாய்மொழியினைக் காக்கும் கடமையினைக் குறிப்பிட்டுள்ளமையை அறியமுடிகின்றது. மேலும், **"ஐவகை இலக்கணம் உணர்வார் மொழியில் உயர்வார்"** என்று தமிழ் மொழியின் இலக்கணமாம் தொல்காப்பியத்தை இழித்தும், பழித்தும் உரைத்தவர்களின் கொட்டம் அடக்கும் வகையில் குறிப்பிட்டுள்ளமைச் சிந்திக்கத்தக்கது.

மொழிக்கலப்பு

தமிழ் மொழியில் பிறமொழிச் சொற்களை அகற்றிவிட்டால் தமிழ் வளராதெனச் கூறுவர் சிலர். அமிழ்தம் இனிக்க அச்சுவெல்லம் கலக்கத் தேவையில்கை என்று ஆசிரியர் உரைப்பதன் வழி ஒப்புமையில்லா உயர்தனிச் செம்மொழியானது பிறமொழிச் சொற்களை நீக்கினும் அவை தனித்து செழித்து இயங்கும் ஆற்றல்பெற்றது. இதனைக் கற்றவர் நன்கறிவர் என்று முடியரசன் குறிப்பிடுவதை,

".....பிறமொழி அகற்றுதல்க ருதின்
தமிழ்வளரா தெனச்சாற்றுவர் சிலர்தாம்
அமிழ்தம் இனிக்க அச்சுவெல்லம்
கலப்போர் உலகிற் கண்டோமில்லை" **(பூங்கொடி. ப.68)**

http://Creativecommons.org//license/by/4.0/.

இவ்வடிகளின் வாயிலாக அறிய முடிகின்றது. மொழிக்கலப்பினால் தமிழ் மொழி வாழ்கிறது என்று கூறுவோரிடத்துப் பிறமொழிச் சொற்களை நீக்கினும் தமிழ்மொழியானது தழைத்து நிற்கும் என்று முடியரசன் குறிப்பிடுவதிலிருந்து அவரின் மொழிப்பற்றினையும் தமிழ்மொழியின் சிறப்பினையும் அறிய முடிகின்றது.

சாதியொழிப்பு மணம்

பொன்னி என்பவள் வில்லவன் என்றதன் குலம் அல்லாதவனைத் திருமணம் செய்து கொள்கிறாள். அதனால் பொன்னியின் தந்தை மிகுந்த சீற்றத்துக்கு உள்ளாகிறான். தன்குலப் பெருமையை அழித்தவள் என்று சாடுகிறான். பொன்னி, வேடனின் கலப்புமணம் குறித்துப் பொன்னியின் தந்தை மனநிலையினை,

"துணியாச் செயல் செயத் துணிந்தனை! என்குல
அணையாப் பெருமையை அணைத்தனை பேதாய்! **(பூங்கொடி. ப.)**

இப்பாடலடிகளின் வாயிலாக அறிய முடிகின்றது. ஆனால் ஆசிரியர் கலப்புமணத்தை ஆதரிப்பதை, பொன்னியின் மகன் மீனவனின் வாயிலாக வெளிப்படுவதை,

"கண்டதவறென் காரிகை கற்பில்?
ஒருவனை உளத்தால் உன்னினள், எதற்கும்
வெருவிலள்,....." **(பூங்கொடி. ப.78)**

என்று ஆசிரியர் குறிப்பிடுவதிலிருந்து அறியலாம்.

மொழிக்கொரு காப்பியமாகப் படைக்கப்பட்டிருப்பினும் அவற்றில் இயல்பாகவே திராவிடச் சிந்தனை மேலாங்கி இருப்பதை நோக்கும் போது திராவிட உலகின் வானம்பாடி என்று முடியரசன் போற்றப்படுவதற்கான காரணத்தை அறிய முடிகின்றது. மொழிப் போராட்டம், மொழிப்பற்று, மூடநம்பிக்கை ஒழிப்பு, சாதிஒழிப்பு மணம் குறித்த முடியரசனின் திராவிடக் கொள்கையினைப் பூங்கொடி காப்பியம் வழி நின்று அறியமுடிகின்றது.

அடிக்குறிப்பு

1. முடியரசன், பாட்டுப்பறவையின் வாழ்க்கைப்பயணம்,ப.95
2. முடியரசன் படைப்புகளில் சமுதாயச்சிந்தனை, ஆய்வேடு, இயல் .2 பக்.33

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

4. திராவிட இயக்கங்களின் தமிழ்ப்பணிகள்

ஆய்வாளர்
முனைவர் ப.செந்தில் முருகன்
முதுமுனைவர் பட்ட ஆய்வாளர்
Indian council for Social Science Research (ICSSR)

ஆய்வு நெறியாளர் :
பேரா. முனைவர் பெ.இளையாப்பிள்ளை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
அலைபேசி: 9865040594

DOI 10.5281/zenodo.13761576.

Abstract:

Although this giant encompasses innumerable regions of the Milky Way, no other planet has the uniqueness of Earth. Our motherland, India, is a country that is united in diversity among the countries of Asia, the largest continent among the seven continents of the world. Tamil Nadu is a non-self-governing state that can maintain equality and social justice as the real object of the Indian nation that has such excellence and prosperity. If we examine the reasons for this, it is not an exaggeration to say that the source and root of it is the higher thought of Dravidianism. The Dravidian movements nurtured this thought and the masses rose up as masses. Rationalism spread through the origins of the Dravidian movements. The Dravidian movements developed the values of equality and fraternity that the Constitution of India states, beyond the legal position and placed them in the humanitarian position. Although various causal factors have been studied regarding the Dravidian movements that spawned intellectual social development and its characteristics, the Dravidian movements such as Justice Party, Self-Respect Movement, Dravidar Kazhagam, and Dravida Munnetra Kazhagam contributed immensely to the development of Tamil language. This research paper has been set up to reveal that.

Key words: Tamil Movements – Dravidian literature

முன்னுரை

இந்தப் பேரண்டமானது எண்ணிலடங்காப் பால்வெளி மண்டலங்களைத் தன்னகத்தே கொண்டு இலங்குவதாயினும் புவியின் தனித்தன்மையினைப் பிற கோள்கள் பெறவியலவில்லை. உலகின் ஏழு கண்டங்களுள் மிகப்பெரிய கண்டமான ஆசிய கண்டத்தில் உள்ள நாடுகளுள் வேற்றுமையில் ஒற்றுமை கண்ட நாடாக விளங்குவது நம் இந்திய தாய்த்திருநாடு. அத்தகுச் சிறப்பும் ஏற்றமும் பெற்ற இந்திய நாட்டின்கண் மெய்ப்பொருளாகச் சமத்துவத்தையும் சமூகநீதியையும் நிலைநிறுத்திக் காக்கக் கூடிய தன்னிரகற்ற மாநிலமே தமிழ்நாடு. இதன் காரணங்களை ஆராயப் புகுந்தால் அதற்கு மூலமும் வேருமாகத் திகழ்வது திராவிடம் என்ற மேலான சிந்தனையே எனில் அது மிகையாகாது.

திராவிட இயக்கங்கள் இச்சிந்தனைக்கு உரமிட்டு வளர்த்தெடுத்ததன் மூலமே மாக்களாய் இருந்த கூட்டம் மக்களாய் எழுச்சி பெற்றது. திராவிட இயக்கங்களின் தோற்றுவாய் மூலமே பகுத்தறிவுச் சிந்தனைகள் பரவலாகின. இந்திய அரசியலமைப்புக் கூறும் சமத்துவம், சகோதரத்துவம் என்பனவற்றைச் சட்டம் என்ற நிலைப்பாட்டினும் கடந்து மனிதநேய நிலைப்பாட்டினுள் வைத்துப் போற்றும் பண்பு நலன்களைத் திராவிட இயக்கங்களே வளர்த்தெடுத்தன. அறிவார்ந்த சமூக வளர்ச்சிக்கு வித்திட்ட திராவிட இயக்கங்கள் குறித்தும் அதன் பண்புகள் குறித்தும் பல்வேறு காரணக் காரியங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள போதிலும் திராவிட இயக்கங்களான நீதிக்கட்சி, சுயமரியாதை

http://Creativecommons.org//license/by/4.0/.

இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியன தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. அதனை வெளிக்கொணரும் நோக்கில் இந்த ஆய்வுக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்க் காப்பும் - திராவிட இயக்கங்களும்

நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய அமைப்புகளின் பொதுப் பெயரே திராவிட இயக்கம் என்பதை நாமறிவோம். இவையாவும் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு ஆற்றிய மிக முக்கியப் பணிகள் போற்றுதலுக்குரியன. திராவிட இயக்கங்களின் தோற்று வாய்க்கு முற்காலந்தொட்டெ தமிழ்மொழிக்கும் சமஸ்கிருதத்திற்குமான கருத்துப்போர் நடைபெற்று வந்தது.14 - ஆம் நூற்றாண்டில் இருந்து 19 - ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரை தமிழகத்தில் நிலையான பேரரசுகளோ, சிற்றரசுகளோ இல்லை. நாயக்க மன்னர்களின் ஆட்சி காரணமாகத் தெலுங்கு மொழியானது 300 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்நாட்டின் ஆட்சிமொழியாகத் திகழ்ந்துள்ளது. இவ்வாறு சமஸ்கிருதக் கருத்துப்போர் நிகழ்ந்த காலக்கட்டத்திலும், தெலுங்கு ஆட்சிமொழியாக விளங்கிய காலக்கட்டத்திலும் கூட, தமிழ்ப்பேச்சு மொழியாக விளங்கியும், தமிழர்களின் தாய்மொழியாகவும் திகழ்ந்தும் வந்திருப்பது வரலாற்று மருட்கை என்றே கூறலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தென்னிந்திய மொழிகளுக்குள் ஒரு நெருங்கிய உறவு இருப்பதை முதன் முதலாக ஐரோப்பிய அறிஞர்கள் வெளிப்படுத்தினர். அவர்களுள் இராபர்ட் கால்டுவெல் பிறமொழித் துணையின்றி, தமிழ்மொழி தனித்து இயங்கவல்லது என்பதைத் தமது, திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலில் ஆய்ந்தறிந்து கூறினார். இக்கருத்தையொட்டி பேராசிரியர்.சுந்தரம்பிள்ளை அவர்கள், தாம் இயற்றிய மனோன்மணியம் காப்பியத்தில் நீராரும் கடலுடுத்த என்னும் தமிழ்வாழ்த்துப் பாடலைப் பாடியதைத் தமிழ்நாடு அரசு ஏற்று இன்றும் தமிழ்த்தாய் வாழ்த்தாகப் பயன்படுத்தி வருகிறது. இப்பாடலின் கருத்து யாதெனின், தமிழ் திராவிட மொழிகளை ஈன்றெடுத்த பிறகும்,இறைவன் பிறப்பும் இறப்புமின்றி என்றும் இளமையாய் விளங்குவது போன்று தமிழ்மொழியானது இளமை குன்றாமல் விளங்குகிறது. இளமையைக் காப்பதில் இறைவனும் தமிழும் ஒன்றே என்பதாகும். இப்பாடலைத் தேர்வு செய்து தமிழ்நாடு அரசின் மொழி வாழ்த்துப் பாடலாக அறிவித்தவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர்அவர்கள் ஆவார். திராவிட இயக்கங்களுள் மிக முக்கிய இயக்கமான நீதிக்கட்சி ஆட்சிக்கு வருமுன் சமஸ்கிருதப் படிப்புக் கட்டாயமாக்கப்பட்டு இருந்தது. சமஸ்கிருத மொழியறிவு இல்லாத ஒருவரை மருத்துவத்துறைக் கல்விக்குத் தேர்வு செய்யாத நிலைமை தமிழ்நாட்டில் இருந்தது. இந்நிலையை அகற்றிய பெருமைக்குரியவர் பனகல் அரசர் இராமராய நிங்கார் என்பவர் ஆவார். அவரின் அரும்பெரும் முயற்சியால் தான் மருத்துவக் கல்விக்குச் சமஸ்கிருதம் படிக்க வேண்டிய தேவையில்லை என அரசு முடிவெடுத்து அறிவித்தது.

http://Creativecommons.org//license/by/4.0/.

மருத்துவத்துறைப் படிப்புக்குச் சமஸ்கிருதம் தேவை என்று வற்புறுத்தியதைப் போலவே திராவிட மொழிகளில் ஏதேனும் ஒன்றிலாவது அல்லது எல்லா திராவிட மொழிகளிலும் ஒருவர் புலமை பெற்றிருந்தாலும் சமஸ்கிருத மொழி தெரியவில்லை என்றால் அவர் மொழிப்புலமை உடையவராக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதனால் சமஸ்கிருதம் படிக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. இதனை டாக்டர்சி.நடேசனாரின் திராவிடர் சங்கம் எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றிச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியது. நாடு தழுவிய அளவில் ஆங்காங்கே தமிழ்ப் புலவர்களின் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இதன் விளைவால் தமிழுடன் ஓர் இணைமொழியோ துணைமொழியோ இல்லாமல் தமிழ்மொழியை மட்டுமே தனியாகப் பயின்று பட்டம் பெரும் நிலையை நீதிக்கட்சி தனது கோரிக்கை மூலம் வலியுறுத்தியது. இக்கோரிக்கையை 1927 மற்றும் 1928 - இல் சென்னைப் பல்கலைக்கழகம் ஏற்றுக் கொண்டது. இதன் பிறகுத் தமிழை மட்டும் பயின்று வித்துவான் பட்டம் பெறமுடிந்தது. இதனைத் தொடர்ந்து 1935, 1937 ஆண்டுகளில் பி.ஓ.எல் மற்றும் எம்.ஓ.எல் பட்டப்படிப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

செம்மொழிப் பயணத்தில் திராவிட இயக்கம்

சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கிய காலத்திலிருந்து தமிழ்மொழிக்குச் செம்மொழித் தகுதி மறுக்கப்பட்டு வந்தது. திராவிட இயக்கத்தின் ஆதரவு அமைப்புகளான சைவச்சித்தாந்த பெருமன்றமும், கரந்தைத் தமிழ்ச்சங்கமும், பார்ப்பனர் அல்லாதோர் மாநாடுகளும் 1918, 1919, 1920 ஆகிய ஆண்டுகளில் தமிழுக்குச் செம்மொழித் தகுதி வழங்க வேண்டுமெனத் தீர்மானங்களை நிறைவேற்றன. அத்தீர்மானங்களில் பாரசீகம், அரபி, சமஸ்கிருத மொழிகளுக்கு இணையாகச் செம்மொழித் தரத்தில் தமிழ்மொழியையும் ஆட்சிப் பணித் தேர்வுகளில் வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். தமிழ்ச் செம்மொழி என்பதை முதன்முதலில் அறிந்து கொள்ள பரிதிமாற்கலைஞர், இராபர்ட் கால்டுவெல், வீரமாமுனிவர் ஆகியோரின் ஆய்வுகளே காரணமாக அமைந்தன. சமஸ்கிருத மொழிக்கு மட்டுமே ஆங்கில ஆட்சியின் போது செம்மொழித் தகுதி வழங்கப்பட்டது. தமிழ்க் கடலான மறைமலையடிகள், தனித்தமிழ் ஊற்று எனப் போற்றப்பட்ட தேவநேயப்பாவாணர், பன்மொழிப்புலவரான கா.அப்பாதுரை ஆகியோரின் ஆய்வுகள் தமிழ்ச் செம்மொழித் தகுதி பெறவேண்டும் என வலியுறுத்தின.

ஆங்கிலப் பெருங்கவிஞராகத் திகழ்ந்த ஏ.கே.இராமானுஜன் அவர்கள், இந்தியாவில் இப்போதுள்ள இரண்டு செம்மொழிகளில் தமிழ் மட்டுமே தொய்வில்லாமல் தொடர்ந்து தனது செம்மொழிக்குரிய பண்பான தொன்மையை முழுமையாகப் பேணிவருகிறது என்கிற கருத்தைத் தெரிவித்தார். மற்றொரு தமிழறிஞரான கமில்சுவலபில் என்பார், சங்க இலக்கியங்களைச் செவ்விலக்கியங்கள் என்று ஒப்புக் கொள்ளக்கூடிய மூன்று காரணிகளை எடுத்துரைத்தார். இவ்விரண்டு அறிஞர்களின் கூற்றுகள் 1960 மற்றும் 1970 - களில் வெளிப்படுத்தப்பட்டவை. தமிழறிஞர்களிடையே தமிழ்மொழிக்குச் செம்மொழித் தகுதி வழங்கப்படவில்லையே என்கிற மனக்குறை தொடர்ந்து இருந்து வந்தது. 1995 -இல்

http://Creativecommons.org//license/by/4.0/.

தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது, மணவை முஸ்தபா அவர்களை உள்ளடக்கிய வல்லுநர் குழுவானது, தமிழைச் செம்மொழியாக அறிவிக்கக்கோரி அன்றைய முதல்வரிடம் அறிக்கை ஒன்றைக் கொடுத்தது. ஆனால், அதனால் பயன் ஏதும் ஏற்படவில்லை.

1996 - ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்கள் முதல்வரானார்.1996 - ஆம் ஆண்டு ஜூன் 15- ஆம் நாள்' செம்மொழிப் பட்டியலில் தமிழ்' எனத் தலைப்பிட்டுத் தினமணி நாளேடு தலையங்கம் ஒன்றை எழுதியிருந்தது. அதில் தமிழைச் செம்மொழியாக அறிவிக்கக் கோரி, ஒன்றிய அரசின் பரிசீலனைக்குக் கோரிக்கையை எடுத்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டதோடு, அரசு இந்த வாய்ப்பினை நழுவவிடக் கூடாது என்றும் எச்சரித்து இருந்தது. இதனைத் தொடர்ந்து கலைஞரின் அரசு மணவை முஸ்தபா, வா.செ.குழந்தைசாமி, ஜான்சாமுவேல், பொற்கோ ஆகியோரைக் கொண்ட ஒருகுழு அமைத்தது. தேவையான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன. ஒன்றிய அரசுக்குத் தமிழைச் செம்மொழியாக அறிவிக்கக்கோரி ஒருகடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. ஒன்றிய அரசு அந்தக் கடிதத்தை மைசூரில் உள்ள இந்திய மொழிகள் நிறுவனத்திற்கு அனுப்பி வைத்தது. அந்நிறுவனம் தமிழைச் செம்மொழியாக ஏற்கலாம் எனப் பரிந்துரைத்தது. இதன் பிறகுச் சிறுசிறு அமைப்புகளும், சில அரசியல் கட்சிகளும் செம்மொழிப் பற்றிய கோரிக்கையை முன்வைத்து ஒன்றிய அரசை வலியுறுத்திப் போராட்டங்களை நடத்தினர். ஆனாலும் பலன் ஏதும் கிடைக்கவில்லை.

மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அப்போதய தலைவர் டாக்டர்.கலைஞர் அவர்கள் 22/4/2003 -இல் பிரதமர் வாஜ்பாய்க்குத் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் எனும் கோரிக்கையை வலியுறுத்திக் கடிதம் எழுதினார். 2004 - ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6- ஆம் நாள் தமிழ்ச் செம்மொழி என அறிவிக்கப்பட்டது. நம் தமிழ்மொழியைச் செம்மொழியாக்குவதில் கலைஞர் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் இமாலய வெற்றியைக் கண்டது. நம் தாய்மொழியாம் தமிழ்மொழியைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமென நடைபெற்ற ஒன்றரை நூற்றாண்டுக்குப் போராட்டத்தினை வெற்றிபெறச் செய்த பெருமை, திராவிட இயக்கத்தின் மாபெரும் சாதனை எனலாம்.

தமிழ்நாடக வளர்ச்சியில் திராவிட இயக்கப் பங்கு

திராவிட இயக்கம் செய்த மாபெரும் சாதனை இராமாயணத்திற்கு மாற்று இலக்கியமாக உருவெடுத்த புலவர் குழந்தையின் இராவண காவியம் என்று கூறலாம். கவிதை உலகில் பாரதிதாசனின் பரம்பரையினர் தோன்றினர். பெரியார், அண்ணா, கலைஞர் தொடங்கி திராவிட இயக்கத்தின் கடைசி எழுத்தாளர்கள் வரை புதுத்தமிழைப் படைத்து மறுமலர்ச்சி உண்டாக்கினர். 1940 - க்கு முன்பு நாடக உலகின் முடிசூடா மன்னர்களாகச் சங்கரதாஸ் சுவாமிகள், தெ.பொ.கிருஷ்ணசாமி பாவலர், பம்மல்சம்பந்த முதலியார்,

http://Creativecommons.org//license/by/4.0/.

எம்.கந்தசாமி முதலியார், தி.இலக்குமண பிள்ளை முதலானோர் விளங்கினர். டி.கே.எஸ் சகோதரர்கள் மற்றும் பலகுழுவினர் நாடகங்களை நடத்தி வந்தனர். இந்நாடகங்கள் எப்படி இருந்தன என்பதை ஒளவை டி.கே. சண்முகம் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

இருபதாம் நூற்றாண்டு மலர்ந்தது முதல் 40 ஆண்டு கால நாடகங்கள் களப்பிரர் கலை வடிவங்களாகவே காணப்பட்டன. உயிர்த் ததும்பும் நாடக மாண்புகளைக் காட்டிலும் இருநாகரிகக் கலப்பும், வெற்றுப் பொழுது போக்கு நிலையுமே மிகுதியும் இடம்பெற்றன. பழங்கதைகளான புராணக் கூத்துகள், கால மாற்றத்தால் வாழ்வியல் சுவை மிகுந்த நையாண்டி பண்புகளும் நிறைந்தனவாக மட்டுமே அவை கிடைக்கப்பெற்றன. உண்மையான கருத்து வன்மையும் சீர்த்திருத்த பண்பும் அவற்றில் இடம்பெறாத சூழலில் இருந்தது. வாழ்க்கைச் சிக்கல்களுக்குத் தீர்வு காண வேண்டி, மக்கள் உள்ளத்தில் மாற்றத்தைத் தோற்றுவிக்கும் நாடகங்களோ அக்காலத்தில் பரவலாக உருவாகவில்லை. எனினும் நாடகங்கள் வாழ்வின் முழுமையை விளக்க முடியாமல், எளியோரின் உள்ளங்களை ஈர்க்காமல் செல்வ வாழ்வின் சீர்கேட்டை ஓரளவு காட்டி வந்தன.

ஒளவை டி.கே.சண்முகம் கூறும் இந்நாடகப் பண்பைத் திராவிட இயக்கத்தாரின் தமிழும் கதைக் கூறுகளும் முற்றிலும் மாற்றிக் காட்டின. அதுமட்டுமின்று அறிஞர்.அண்ணா அவர்கள் விடுதலை ஏட்டில் குமாஸ்தாவின் பெண் என்னும் நாடகத்திற்கு எழுதிய நீண்ட விமர்சனம் நாடக உலகில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து திராவிட இயக்கத்தாரின் நாடகங்கள் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன. நாடக உலகிற்கு அடுத்த படிநிலையாக உருவெடுத்த மாபெரும் ஊடகம் திரைப்படத்துறை ஆகும். இத்துறையில் முதன் முதலாகத் திராவிட இயக்கத்தவராக அடியெடுத்து வைத்தவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களே. அறிஞர்.அண்ணாவின் திரைப்பட நுழைவு மக்களைப் பெரிதும் கவர்ந்தது. இதன் பிறகுக் கதை, வசனம் ஆகியவற்றிற்கு ஆசிரியரின் பெயரை வெளியிட்டுத் திரைப்படங்களை உருவாக்க பல தயாரிப்பாளர்கள் முன்வந்தனர். அறிஞர்.அண்ணாவுக்கு அடுத்த படியாக,முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர்அவர்கள் திரைப்படத்துறையினைத் தனது எழுத்தின் ஆதிக்கத்தில் வைத்திருந்தார். அதனை அவர் ஓர் ஊழியாகவே உருவாக்கிக் காட்டினார். கலைஞர் அவர்களைத் தொடர்ந்து பல உரையாடல் ஆசிரியர்களும் தொடக்கக் காலத்தில் கவிஞர் கண்ணதாசன் போன்ற பாடலாசிரியர்களும் திரைப்படத்துறையில் மாபெரும் புதுமைகளைச் செய்து மக்களைக் கவர்ந்தனர். நாடகம் மற்றும் திரைப்படத்துறையைச் சேர்ந்த நடிகமணி டி.வி.நாராயணசாமி, நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமி, நடிகவேள் எம்.ஆர்.ராதா, சிவாஜிகணேசன், புரட்சிநடிகர் எம்.ஜி.இராமச்சந்திரன், இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன், வளையாபதி முத்துகிருஷ்ணன் என நடிகர்களின் பட்டாளத்தையே உருவாகிய பெருமை திராவிட இயக்கங்களைச் சாரும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

திருக்குறள் பரப்புரையில் திராவிட இயக்கப் பங்கு

திருக்குறள் பற்றிய பரப்புரையைச் சுயமரியாதை இயக்கம் 1927 - ஆம் ஆண்டு முதல் செய்து வந்தது. 1946 சனவரி 14 மற்றும் 15 தேதிகளில் சென்னையில் திராவிடர் கழகம் திருக்குறள் மாநாட்டை முதன்முதலாக நடத்தியது. இதன் பிறகுதான் திருக்குறள் பற்றிய விழிப்புணர்வுத் தமிழகத்தில் மிகப்பெரிய அளவில் தோன்றியது எனலாம். திராவிட இயக்க வழியில் திருக்குறளுக்குப் புத்துரைகள் எழுதப்பட்டன. பிற அறிஞர்களும் திருக்குறள் தெளிவுரைகளும், விளக்க உரைகளும், திருக்குறள் விளக்கக் கதைகளும், ஆய்வுரைகளும் அதிகளவில் எழுதத் தொடங்கினர். திராவிட இயக்க முயற்சிகளால் பள்ளி மற்றும் கல்லூரிகளின் பாடத்திட்டத்தில் திருக்குறள் இடம்பெற்றது.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது மூன்று பல்கலைக்கழகங்களில் அறிஞர்.அண்ணா அவர்களால் ரூபாய் 9 இலட்சம் செலவில் திருக்குறள் இருக்கைகள் ஏற்படுத்தப்பட்டன. அறிஞர்.அண்ணாவின் அமைச்சரவையில் பொதுப்பணித்துறை மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்த முத்தமிழ் அறிஞர்.கலைஞர் அவர்கள் ஒவ்வொரு பேருந்திலும் மக்கள் பார்வையில் படும்படி திருவள்ளுவர் படத்தோடு ஒரு திருக்குறளை இடம்பெறச் செய்தார். திருவள்ளுவரின் படத்தினை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் பயன்படுத்தி வந்தார்கள். ஓவியர் வேணுகோபால் சர்மா மைலாப்பூரில் ஒரு வீட்டில் தங்கித் திருவள்ளுவரின் ஓவியத்தை வரைந்து முடித்து இருந்தார். இப்படத்தினை அவர் வீட்டிற்குச் சென்று அறிஞர்.அண்ணா, முத்தமிழறிஞர்.கலைஞர், புரட்சிக்கவிஞர். பாரதிதாசன் முதலான தலைவர்கள் பார்வையிட்டு ஓவியம் சிறப்பாக இருக்கிறது எனத் தமது ஒப்புதலை வழங்கினார்கள். இப்படத்தையே பின்னாளில் தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டு அரசு வெளியீடாக இன்றளவும் பயன்படுத்தி வருகிறது. இவ்வோவியத்தையே சிலையாக வடித்துத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே மயிலாப்பூரில் அப்போதைய குடியரசுத்தலைவர் டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணனைக் கொண்டு, சென்னை மாநகராட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகம் திறந்து வைத்தது. மேலும் சென்னை நுங்கம்பாக்கத்தில் வள்ளுவர் கோட்டமும், குமரி முனையில் 133 அடி உயர வள்ளுவர் சிலையையும் முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்கள் அமைத்துக் காட்டினார். திருக்குறளைப் போற்றுவதும் பரப்புவதும் திருவள்ளுவரைச் சிறப்புச் செய்வதும் தமிழ்ப்பணியே ஆகும். இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின் போது திருவள்ளுவருக்கு நிற்கும் நிலையில் சென்னைக் கடற்கரையில் சிலைஅமைத்ததோடு மேலும் ஒன்பது சிலைகள் பழந்தமிழ் வித்தகர்களுக்கும் பொதுத்தமிழ் முன்னோடிகளுக்கும் வைக்கப்பட்டன.

தமிழ் ஆட்சி மொழியாக்கத்தில் திராவிட இயக்கப் பங்கு

திராவிட இயக்கங்களின் முன்னோடி இயக்கமான நீதிக்கட்சியானது, தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும் என வற்புறுத்தியதோடு ஸ்ரீ / ஸ்ரீமதி எனும் சமஸ்கிருதச்

http://Creativecommons.org//license/by/4.0/.

சொற்களுக்கு மாற்றாகத் திரு/ திருமதி பயன்படுத்தப்பட வேண்டும் என்று தனித் தீர்மானத்தின் மூலம் அரசைக் கேட்டுக் கொண்டது. பெரியார் அவர்கள் திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் செய்த சேலம் மாநாட்டில் தமிழை வளர்க்கவும் சமஸ்கிருதத்திற்கு எதிராகப் போராடவும் எப்போதும் ஆயத்தமாக இருப்பது என்கிற தீர்மானத்தை நிறைவேற்றித் தனது தமிழ்ப் பணிக்கு ஒரு தொடர்ச்சியை வழங்கினார்.

1967 - ஆம் ஆண்டு அறிஞர்.அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் பயன்பாட்டில் இருந்த சமஸ்கிருத ஆங்கில நிர்வாகச் சொற்களை நீக்கிவிட்டு அவ்விடங்களில் தமிழ்ச் சொற்களை ஒளிரச் செய்தார். தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் இந்நிலப்பகுதிக்குத் தமிழ்நாடு என்னும் பெயரினைச் சூட்டி மாபெரும் சாதனையை நிகழ்த்தினார். தமிழ், ஆங்கிலம் என இருமொழிக் கொள்கையை அரசின் அறிவிப்பாக வெளியிட்டார். இவை தமிழ்மொழியின் தனித்தன்மையை நிலைநாட்டுகின்ற மிக உயரிய பணிகள் ஆகும். அறிஞர்.அண்ணாவைப் போலவே கலைஞரும் தமிழின் தனித்தன்மைகளை நிலைநாட்டும் அளப்பரிய பணிகளைச் செய்தவர். தமிழைப் பயிற்று மொழியாக அறிவித்தார். தேவநேயப் பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு ஓர் இயக்கம் ஏற்படுத்தினார். கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய ஆணைபிறப்பித்தார். செம்மொழிக்கு அலுவலகம் கண்டார். இவ்வாறு திராவிட இயக்கம் செய்த அருந்தமிழ் பணிகள் ஏராளமானவை.

முடிவுரை

தமிழ் மொழியினையும் தமிழினத்தையும் காப்பதில், திராவிட இயக்கங்கள் தோன்றிய நாள் முதல் இன்றளவும் பல்வேறு தடைகளும் போராட்டங்களும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. ஆயினும் அதனைத் தாங்கிப் பிடித்த மாபெரும் இயக்கமான திராவிட இயக்கமானது தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளும் உலகப் பார்வையைத் தம்பால் ஈர்க்க காரணமாக அமைந்த செம்மொழி ஏற்பிற்குத் திராவிட இயக்கங்கள் செய்த அளப்பரிய பணிகளும், எளிய மக்கள் இன்றளவும் தமிழை எளிமையான பயன்பாட்டு மொழியாகக் கொள்ளத்தக்க வகையில் எடுக்கப்பட்ட நுண்முயற்சிகளும், பாமர மக்களின் பொழுதுபோக்குக் கூறுகளான நாடகம் மற்றும் திரைத்துறை வழிநின்று தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஆற்றிய அருந்தொண்டுகளும், உலகப் பொதுமறையாம் வான்புகழ் வள்ளுவத்தைத் தழைத்தோங்க செய்த வழிமுறைகளும், தமிழனத்தை ஆட்சி செய்யும் நாட்டில் தமிழை ஆட்சி மொழியாக்க எடுக்கப்பட்ட நுண்மான் நுழைபுலம் மிக்க செயல்திறன்களும் மேற்கண்ட விளக்கங்களின் வழி குன்றின் மேலிட்ட விளக்குப் போல் அறியலாகின்றது. மேலும் இந்துத்துவம் என்ற மந்திரப் பகட்டுகளையும் மதவாதம் என்னும் இருள்சூழ் கொள்கைகளையும் தனது உதயசூரிய ஒளியினால் ஓடி ஒழியச் செய்யும் ஆற்றல் திராவிட இயக்கத்திற்கு உண்டு என்ற திண்மையை உண்மையான தமிழினம் உணர்ந்து, ஒன்றினைந்து செயல்படுபட வேண்டியது தமிழர்தம் கடமையாகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

துணை நின்ற நூல்கள்

1. இளையாப்பிள்ளை.பெ, (ப.ஆ) இலக்கிய இயக்கங்களும் திறனாய்வுப் போக்குகளும், எம்.ஜே. பப்ளிகேசன், திருச்சி-2021.
2. இரகுநாதன் தொ.மு,சி, முற்போக்கு இலக்கிய இயக்கங்கள் , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 1994.
3. குழந்தைசாமி.வா.செ, உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் தமிழ், பாவை பப்ளிகேசன், சென்னை - 2005.
4. முத்துக்குமார்.ஆர், திராவிட இயக்க வரலாறு, (முதல் பாகம்), கிழக்குப் பதிப்பகம், சென்னை - 2010.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

5. திராவிட இயக்கக் கடித இலக்கியத்தில் அரசியல்

நெறியாளர்,
முனைவர் இரா.ஏழுமலை
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
இராஜா நந்திவர்மன் கலை அறிவியல் கல்லூரி,
தெள்ளாறு - 604 406

முனைவர் பட்ட ஆய்வாளர்,
உ.ஸ்ரீதேவி,
இராஜா நந்திவர்மன் கலை அறிவியல் கல்லூரி, தெள்ளாறு – 604 406.
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,
சேர்க்காடு – வேலூர் 632 115.

DOI 10.5281/zenodo.13761587.

Abstract :

Research in literary literature in Tamil is still in its infancy. N.M.Venkatasamy Nattar initiated research in this field for the first time. His studies on the topic of 'Paralysis' are important. It was only after his study of 'paralysis' that the view of letters in literature was formed. Through it some research books were published. 'Madal' and solachi were initially called Thirumugam and Mutangal. This research paper sets out to examine the contribution and politics of the Dravidian movement leaders in this under-researched field of literature.

Key Words: Dravidian Literature – Political Movements

தமிழில் கடித இலக்கியத்தில் ஆராய்ச்சி இன்னும் தொடக்க நிலையில்தான் இருந்து வருகிறது. முதன்முதலில் இத்துறையில் ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஆராய்ச்சியைத் தொடங்கி வைத்தார். இவர் 'முடங்கல்' என்னும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வுகள் முக்கியமானவைகளாகும். இவரது 'முடங்கல்' ஆய்வுக்குப் பின்னரே இலக்கியத்தில் கடிதங்கள் குறித்த பார்வை உருவானது. அதன் வழியே ஆய்வு நூல்கள் சில வெளிவந்தன. 'மடல்' என்னும் சொல்லாச்சியும் தொடக்கத்தில் ***திருமுகம்***, ***முடங்கல்*** என்றே அழைக்கப்பட்டன. இத்தகைய ஆய்வுப்பார்வை குறைந்த துறையான கடித இலக்கியத்தில் திராவிட இயக்கத் தலைவர்களின் பங்களிப்பையும் அரசியலையும் ஆராயும் வகையில் இவ்வாய்வு கட்டுரை அமைக்கப்பெறுகிறது.

கடித இலக்கியம் :

இராமலிங்க அடிகளார் திருவருட்பா ஐந்தாவது புத்தகம் மற்றும் திருமுறைப் பகுதி (1932) கடிதம் எழுதியதாகச் சொல்லப்படும் தமிழ் இலக்கிய உலகிற்குக் கிடைக்கும் முதல் சான்றாகும். அதனைத்தொடர்ந்து தனிநிலைக் கருத்துக்களாக மறைமலையடிகளாரும் டி.கே.சியும் சில கடிதங்களை எழுதியிருக்கின்றனர். அதற்குப்பிறகு பல்வேறு ஆங்கில அறிஞர்களின் தலையீடுகளுக்குடன் தமிழில் கடித இலக்கியம் என்பது கால்கொள்ள முக்கிய காரணமாக அமைந்தவர் டாக்டர் மு.வரதராசனார் ஆவார். இவர் தம்பிக்கு, தங்கைக்கு, அன்னைக்கு, மாணவனுக்கு, நண்பருக்கு என, தான் எழுதிய கடிதங்கள் அனைத்தையும் இலக்கியமாக்கியுள்ளார். எனவேதான் தமிழில் கடித இலக்கியத்தின் முன்னோடியாக மு.வ. குறிப்பிடப்படுகிறார். இவர் காலகட்டத்தில் இவரைப் போலவே கடித இலக்கியம் படைத்த இன்னொரு குறிப்பிடத்தக்க ஆளுமை சோ.சிங்காரவேலனார் ஆவார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

இலக்கியமாகும் கடிதங்கள் :

கடிதம் எழுதும் சூழல், எந்த மாதிரியான பிரச்சனைக்கும் பொதுவானதாக இருந்து வந்ததாக இல்லாமல், ஒரு நட்பு ரீதியாகவோ, அல்லது முகம் தெரிந்த மனித அனுபவங்களுக்குள்ளான ஒருவித உரையாடலாகவோ மட்டுமே தொடக்கத்தில் இயங்கின. இந்நிலை கடித இலக்கிய மரபில் அறிஞர் அண்ணா வந்ததற்குப் பிறகு முற்றிலுமாக மாற்றம் கண்டது. 'எந்த மாதிரியான பிரச்சனைக்கும் கடிதம் போதுமானது' என்ற அளவிற்கு கடித இலக்கியம் முக்கியத்துவம் வாய்ந்த இலக்கியமாக திராவிடக் காலகட்டத்தில் மாறியது. இக்கால கட்டத்தை வெறுமனே அறிஞர் அண்ணாவின் காலகட்டம் என்று மட்டும் பார்க்காமல் திராவிட காலகட்டம் என்று பார்ப்பது ஆய்வுப் பார்வையாக அமையும். அதனால் தான்,

> ***"லெனில், மாவோ, ஹோசிமின், எங்கல்ஸ், நேரு, கலைஞர் கருணாநதி ஆகியோரின் கடிதங்கள் அரசியல் உலகில் குறிப்படத்தக்கதாக இருப்பதையும்; டாகடர் மு.வரதராசனார், எழுத்தாளர் கி.ரா ஆகியோரின் கடிதங்கள் இலக்கிய உலகில் குறிப்பிடத்தக்கதாக இருப்பதையும் கூறும் க.சண்முகச்சுந்தரம் அண்ணாவின் கடிதங்களை மட்டும் அரசியலையும் இலக்கியத்தையும் ஒன்று சேர்ந்தக் கலவை என்று குறிப்பிடுகின்றார்"1***

இங்கு அறிஞர் அண்ணா தொடக்கி வைத்த கடித இலக்கிய மரபை, பின்தொடர்ந்தவர் என்ற வகையிலும்; அடுத்தக்கட்டத்திற்கு நகர்த்திச் சென்றவர் என்ற வகையிலும் கலைஞர் மு.கருணாநிதி குறிப்பிடத்தக்க ஆளுமையாகத் திகழ்கிறார். ஏனெனில் கலைஞரும் திராவிட இயக்கக் காலத்தைச் சார்ந்தவர். அண்ணாவின் வழித்தோன்றல். அறிஞர் அண்ணாவின் ***தம்பிக்கு…*** என்னும் தலைப்பிலான கடிதங்கள் அனைத்தும் (கிட்டத்தட்ட) கலைஞருக்காக எழுதப்பட்டவைகளாகும்.

அண்ணாவின் சிந்தனையும், கலைஞரின் சிந்தனையும் ஒருமித்திருக்கும் காரணத்தால் இவர்களது கடித இலக்கியம் - இலக்கிய வரலாற்றிலும் கடித இலக்கிய வளர்ச்சியிலும் மிகமுக்கிய இடத்தை பெற்றிருக்கின்றன. அதேநேரத்தில் மேற்கண்டவாறு சமகால அரசியலையும், இலக்கிய வெளிப்பாடுகளையும் மக்கள் குரலாக பேசிய கடிதங்கள் என்ற வகையில் இவர்கள் இருவரது கடிதங்களும் (இலக்கியங்களும்) ஒருவாறு பார்க்கப்படும் தகுதிவாய்ந்தவைகளாகின்றன.

திராவிட தலைவர்களும் - அவர்தம் கடிதங்களும் :

தமிழர்தம் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, அரசியல் ஆகிய அனைத்து வாழ்வியல் துறைகளும் தம்மரபை, அடையாளங்களை இழந்த நிலையில் அதனை ஒட்டுமொத்தமாக மிட்டெடுக்க போராடிய எழுத்துக்களுக்கு உரிமையாளர்கள் திராவிட இயக்கத்தவர்கள். இவர்கள் மறுமலர்ச்சிக் காலகட்டத்தைச் சார்ந்தவர்களாக இருந்தும் கூட, புதிய மாறுதல்களை தனக்கான மாற்றுச் சிந்தனையின் மூலம் தமிழகத்து மண்ணில்

http://Creativecommons.org//license/by/4.0/.

விளையச் செய்தனர். இவர்களுள் அறிஞர் அண்ணாவும் அவரது வழித்தோன்றலாய் வந்த கலைஞர் மு.கருணாநிதியும் குறிப்பிடத்தக்க படைப்பாளுமைகளாவர். இவர்கள் இருவருமே தீவிர இலக்கிய படைப்பாளிகள். இவர்கள் படைத்த இலக்கியத்தினூடாகவே சீர்த்திருத்தம், அரசியல் தலைமை பண்பாக்கங்கள், இலக்கிய போராட்டச் சிந்தனைகள் என்பன போன்ற திராவிடச் சித்தாந்தங்கள் வெளிப்பட்டன.

ஒரு சமூகத்தின் சீர்த்திருத்த இயக்கத்தையும், அரசியல் இயக்கத்தையும் ஒரு இலக்கியமாகவும் குடும்பமாகவும் பார்க்கத்துணிந்த பார்வை திராவிட இயக்கப்பார்வை எனலாம். அதிலும், *'எடடா தம்பி பேனா'* என்றும் *'யான் ஏது செய்வேனடா?'* என்றும் அறிஞர் அண்ணா எழுதி - கேட்ட கேள்விகளும் கருத்துக்களும் அவருடன் இருந்து அவரது கொள்கைகளையும் கட்சியையும் காப்பாற்றி வந்த கலைஞரை திராவிட இயக்கத்தோடு இரண்டற கலக்கச் செய்தன. அதன் தாக்கத்தை நம்மால் கலைஞரின் கடித இலக்கியத்தின் மூலம் உணர்ந்துக்கொள்ள முடியும். அதற்குப் பிறகே இவர்களால் திராவிடக் காலக்கட்டம் ஒன்றையும், அதற்கென சொல்லத்தகும் இலக்கியம் ஒன்றையும் உருவாக்க முடிந்தது. அது கடிதம் என்னும் இலக்கிய வகைமைக்குள் பெரும் பிரச்சார நெடியாக வெளிப்பட்டது. அதன் விளைவால் ஒருவிதமான புதிய மறுமலர்ச்சி இப்புவிதனில் திராவிட இயக்கத் தலைவர்களால் உருவானது. மக்கள் மத்தியில் (குறிப்பாக தமிழர்கள்) தமிழக அரசியலை மாற்றியமைக்கக் கட்டமைத்த இலக்கிய சொற்போராட்டங்களாகவும், தமிழ் மொழியினூடான அரசியல் பிரச்சாரங்களாகவும் அவைகள் மிகப்பெரிய மாறுதலை ஏற்படுத்தின. அதன் விளைவால்தான் இன்று எண்ணற்ற கட்சிகள் தொன்றினாலும் அதில் திராவிடம் என்ற சொல்லாட்சி நீக்கப்பெற முடியாத நிர்பந்தத்தில் இருப்பதை நம்மால் பார்க்கமுடிகிறது.

திராவிடக் கடிதங்களின் உள்ளடக்கம் :

திராவிட ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்ட கடிதங்களில் பெரும்பாலும் சமூகச் சிந்தனைகளும் சமுதாய வளர்ச்சிக்குரிய திட்டங்களை செயல்படுத்தும் வழிமுறைகளும் தொடர்ந்து வெளிப்படுவனவாக உள்ளன. எடுத்துக்காட்டாக, 1675 ஆம் ஆண்டு கலைஞர் எழுதிய மொழி ஆதரவுக்கான கடிதத்தகவலைக் குறிப்பிடலாம்.

> ***"உடன்பிறப்பே நம்மை வளர்த்த தமிழ் மொழியை ஆதிக்க அதிகார ஆட்சி மொழிகள் வளைத்து வீழ்த்தி விடாமல் பாதுகாக்க எப்படி அரண்களை அமைக்கலாம். தமிழ் இனத்தின் வளம் பெருக, நாம் எவ்வாறான திட்டங்களையெல்லாம் தீட்டிச் செயல்படுத்தலாம், தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் மேலும் வேரூன்றிப் பரவவும், பேரறிஞர் அண்ணாவின் இலட்சிய முழக்கங்கள் வெற்றி முழக்கங்களாக மாறிடவும் எத்தகைய உழைப்பை தொடர்ந்து வழங்கிடலாம் என்பன போன்ற சிந்தனைகள் தான் இருந்திட வேண்டும்"2***

http://Creativecommons.org//license/by/4.0/.

என்று குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டலாம். அதேபோல், கலைஞரின் கடிதங்களை,

> *"தொண்டர்களுக்கு உரமேற்றும் கருவியாக, உணர்ச்சிக்கொட்டும் அருவியாக, எண்ணங்களை பறையறிவிக்கும் முரசாக, எழுச்சியைத் தோற்றுவிக்கும் இடிமுழக்கமாக, இதயத்தைப் பற்றி இழுக்கும் காந்தமாக என பலவாறு விளங்கும் 'வெண்பா' என்று அறிஞர்கள் குறிப்பிடுகிறனர்"3*

இக்குறிப்புகள் வழியே திராவிட இயக்கக் கடிதங்கள் இயக்கச் சிந்தனைகளை மேலும் வளர்த்தெடுக்கும் உள்ளடக்கங்களின் அடிப்படையில் எழுதப்பட்டதை அறியமுடிகிறது.

கடித இலக்கியத்தில் - அரசியல்:

அண்ணாவின் கடிதங்களில் இதுயிது அரசியல் கடிதங்கள், இதுயிது இலக்கியக் கடிதங்கள் என்று பிரிக்க முடியாதபடி, எல்லா எழுத்துக்களிலும் இலக்கிய புலப்பாட்டு உத்திமுறைகளும் அதனுள்ளாகப் பேசப்பட்டிருக்கும் அரசியல் கருத்தாக்கங்களும் கலந்துள்ளன. அண்ணா தம்பிக்கு என்று சொல்லவரும் சாதாரணக் கருத்துக்களில் கூட, ஒரு பொதுநிலைத் தகவலாக சில அரசியல் செயல்பாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். எடுத்துக்காட்டாக,

> *"அண்ணா 1966 இல் கல்கத்தாவிலும், பம்பாயிலும் பஞ்சாப்பிலும் நடைபெற்றக் கிளர்ச்சியை, காங்கிரஸின் மூலவர்கள் யாரும் கண்டுகொள்ளாததோடு அதை மனமுடைந்து கிடக்கும் அரசியல்வாதிகளின் வாணவேடிக்கையாக விட்டுவிட்டார்களே.... அதுபோல நாம் விழிப்பின்றி பொறுப்பின்றி இருக்கும் சூழலில் நம்முன் நடக்கும் அக்கரமங்கள் அதிகரிக்கக்கூடும்"4*

என்று தம்பிக்கு எழுதும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அன்றைய அரசியல் சூழலைக் காணலாம். அதே கடித்தத்தில்,

> *"ஆணவ அரசு நடத்தும் காங்கிரசும், மக்களின் மகத்தான சக்தி முன்பு மண்டியிட்டு மண்ணைக் கவ்வவேண்டும். அதற்கு அண்ணாவின் தம்பிகள் அரசியலில் விழிப்போடு செயல்படவேண்டும்"5*

என்று அண்ணா குறிப்பிட்டுள்ளார். இன்னும் அக்கடிதத்தில் அண்ணா நாட்டு நலிவு, ஆட்சியாளர்கள் மூட்டிவிட்ட அவதிகள், மக்களை அலைகழிக்கும் தொல்லைகள், மக்கள் உள்ளத்தில் எழுந்திருக்கும் வேதனைகள் ஆகியவற்றை தனக்கே உரிய அழகியலோடு குறிப்பிட்டுள்ளார். மற்றொரு கடிதத்தில் அவர்,

> *"இட்லரின் நேஸ்னல் சோசியலிசத்தில் சுவஸ்திக் திரைக்குப் பின்னால் இருந்துகொண்டு முதலாளிகள் கொட்டம் அடித்ததைப் போன்று, காங்கிரஸ் ஆட்சியிலும் மூவர்ணக்கொடி மறைவில் இருந்துக்கொண்டு முதலாளிகள் பெருத்துள்ளனர். இப்படி பணம் படைத்தவர்களை எந்த அரசும் தனது*

http://Creativecommons.org//license/by/4.0/.

பரிவாரதெய்வங்களாக ஆக்கிக்கொள்ளும் என்பதை இந்த எழுதாத ஒப்பந்தம் (ஐந்தாண்டு திட்ட ஒப்பந்தம்) இன்றும் நேற்றும் மட்டுமல்லாமல் நெடுங்காலமாக நமக்கு உணர்த்திவருகிறது"6

என்று குறிப்பிட்டுள்ளார்.

கலைஞரின் கடிதங்களும் பத்திரிக்கைகளும் :

"கலைஞரின் கடித இலக்கியத்திற்கு என்று பத்திரிக்கைத் துறையில் ஒரு குறிப்பிட்ட பங்கு இருக்கிறது. சமுதாயத்தின் எல்லா முகங்களையும் பற்றி அறிந்துகொள்ளும் வரலாற்றுப் பெட்டகமாக கலைஞரின் கடிதங்கள் விளங்குகின்றன"7

எதிர்காலத்தில் வரலாறு எழுதப்போகிற வரலாற்று ஆசிரியர்களுக்குக் கலைஞரின் கடிதங்கள் சிறந்த ஆவணக் களஞ்சியமாகவும், உற்ற கருத்துக்களைப் பெற ஏதுவானதாகவும் இருக்கக் காணலாம். அதனால்தான் அன்று முதல் இன்று வரை அவர்தம் கருத்துகள் ஆய்வுத் துறையினரால் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இருக்கின்றன. இதனை

"எழுத்துக்கள் மூலம் எண்ணங்களை வெளிப்படுத்தி ஒருவருக்கொருவர் தொடர்புகொள்ள உதவுவது மடல், இலக்கியத்தில் இடம்பெறும் அளவு இன்றைக்கு எழுந்து நிற்கின்றது. இலக்கியம் பாட்டு வடிவிலும் அமையலாம். உரைநடையிலும் அமையலாம். தான் சொல்லமுடியாத இடத்திற்கு தன்னுடைய எண்ணங்களையோ அல்லது கருத்துக்களையோ தானே நேர்நின்று உரைப்பது போல் புலப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது மடல் எனப்படும் கடிதம்"8

என்றவாறு மா.செல்வராசன் தன் நூலில் விவரித்துள்ளார். இவ்விவரிப்பு அரசியல் தளத்தில் பத்திரிகையாளர்களுக்கும் கடிதத் தகவலுக்கும் இடையே இருந்த இணக்கத்தையும் தரத்தையும் விளக்கும் வகையில் அமைந்திருக்கக் காணலாம்.

அறிஞர் அண்ணா, தந்தை பெரியார் போன்ற இருபெரும் தலைவர்களுடன் இருந்துவிட்டு பின்னர், திராவிடக் கருத்துக்களில் வேரூன்றி தனக்கென தனிப்பாதை அமைத்துக்கொண்டு வெற்றிகண்டவர் கலைஞர். கலைஞர் அரசியலில் அடியெடுத்து வைக்கும் பொழுது அன்றைய அரசியல் எதிரியாக எம்.ஜி.ஆர். இருந்தார். இருந்தும் கலைஞர் அவரைப் பல இடங்களில் நண்பராகவே பாவித்தார். அவரும் கலைஞர் மீது மதிப்பும் மரியாதையும் கொண்ட எதிர்க்கட்சி தலைவராக இருந்தார். விரசம் இல்லாத அன்றையப் பேச்சும் பிரச்சாரங்களும் இதற்கான சான்றுகளாக உள்ளன. எடுத்துக்காட்டாக,

"எம்.ஜி.ஆர் மீது தனிமனித நம்பிக்கை வைத்து கம்யுனிஸ்ட் கட்சி அவருக்கு ஆதரவு தரவில்லை. அவர் பின்னால் இருக்கும் மக்களிடம் நம்பிக்கை வைத்து ஆரதவு பெற்றுள்ளார்"9

http://Creativecommons.org//license/by/4.0/.

என்றும்,

> *"அட அசட்டுக் காக்கையே! எனக்கு மேய்ப்பனிடத்திலே ஆசை துளியும் இல்லை. அவன் ஓட்டிச் செல்கின்ற அந்த ஆடுகளிடத்திலே உள்ள ஆசையில் அவனிடம் ஆசை இருப்பதாகக் காட்டிக்கொள்கிறேன்"10*

என்றவாறும் கலைஞர் இந்தியக் கம்யுனிஸ்ட் கட்சித் தலைவரின் விவாதத்தை நகைச்சுவை உணர்வுடன் சுட்டிக்காட்டியுள்ளதைக் குறிப்பிடலாம். அதேபோல் திராவிட இயக்கம், தமிழ் இலக்கியத்தைக்கூட, தம் திராவிடச் சிந்தனைக் கேற்ப பயன்படுத்தியுள்ளது. திருக்குறளுக்கு கலைஞர் எழுதியிருக்கும் உரையினைக் கவனித்தால் அதனை நாம் புரிந்துகொள்ளலாம். ஏன்? தமிழ் இலக்கிய பகுப்பில் ஐநிலப் பாகுப்பாட்டைக் கூறும் சங்க இலக்கியத்தைக் கூட, அறிஞர் அண்ணாவும், கலைஞரும் தம் கடித இலக்கியத்தில் இரண்டு நோக்கில் பயன்படுத்தியுள்ளனர்.

> *"அதில் ஒன்று அரசியல் மற்றொன்று இலக்கியம்"11*

கலைஞர் இலக்கியத்தில் வெளிப்பட்டிருக்கும் இன்னொருச் சிறப்பானக்கூறு - அவர் வெளிப்படுத்தும் நேர்மறை எண்ணங்கள் எனலாம். அதே மனபுலப்பாடல் அறிஞர் அண்ணாவிடமும் இருந்தது. அதனால்தான், அறிஞர் அண்ணாவும், கலைஞரும் எந்த செயலையும் இலக்கியப் பின்புலத்துடன் ஒருவித கழுகுப் பார்வையின்பால் அணுகினர். அதனால்தான் அவர், 'அன்பு உடன்பிறப்பே... வாழ்வதற்காகச் சொல்லுகின்றேன். அப்படிக் கழகம் வீழ்ந்துவிடுவதாக இருந்தாலும் - அப்படியே நான் விழுந்தாலும் விதைப்போல விழுவேன்' என்று முழங்கியுள்ளார். அந்த எண்ணத்தில்தான் அவர்

> *"நாம் எதற்காக அழிய வேண்டும்? நாம் என்ன வன்முறையாளர்களா? சட்டம் ஒழுங்கு அமைதிக்கு மதிப்புத் தறாதக் கூட்டமா? நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் நமது இருவிழிகள் எனக்கருதியே அண்ணா வழியில் அமைதி காக்கும் நமக்கு அழிவை அணைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன வந்தது?"12*

என்று கேள்வி எழுப்புகிறார்.

தத்துவக் கடிதங்கள் :

அயல்நாட்டு அறிஞர் 'பீட்டர்ஈட்டன்' என்பவர் ஒரு மனிதனின் உடலுக்கு ஐந்துகோடி ரூபாய் மதிப்பிருப்பதாகக் குறிப்பிடுகின்றார். அதையே 'பட்டினத்தார்' நாற்றம் எடுக்கும் உடல், வெறும் காற்றுப்பை, அழிந்தால் மிஞ்சுவது ஒருப் பிடிச்சாம்பல், வெறும் நீர்க்குமிழிகள் - என்று மனித உடலை அலச்சியமாகப் பாடுகிறார். இப்படி

> *"ஏதுமற்ற உடலாகவும் - நல்ல மதிப்புமிக்க உடலாகவும் இருக்கும் மனித உடலானது உண்மையில் எப்பொழுது அதற்கான மதிப்பை பெறுகிறது என்றுப் பார்த்தால் ஒரு தூய இலச்சியத்திற்காகத் தன்னை அர்ப்பணிக்கும் பொழுது (இலக்கியத்திற்காக முழு மூச்சோடுப் போராடும் பொழுது)"13*

http://Creativecommons.org//license/by/4.0/.

என்று தமிழ்மாறன் குறிப்பிடுகிறார். திராவிட இயக்கத்திற்காக கலைஞர் தன்வாழ்நாள் முழுவதையும் பட்டினத்தார் விளக்கிய, மனித உடலின் அவசியத்தை உணர்ந்தவாறு, இலக்கியப் பாணியில் மக்களுக்கென செயல்பட்டுள்ளார். இப்பாணி கலைஞருக்கு மட்டுமோ அல்லது அண்ணாதுரைக்கு மட்டுமோ பழகிப்போன பாணியல்ல. இது திராவிட இயக்கத்தில் ஈடுபாடோடு இருந்த அன்பழகன், நெடுஞ்செழியன் என்று நீளும் அனைத்து தொண்டர்களும், தோழமைகளுக்கும் கைவரப்பெற்ற ஒன்றாகிறது. இத்தகைய கலை மற்றும் இலக்கிய புலப்பாட்டோடான பேச்சுத்திறம், அரசியல் தந்திர உத்திகள் ஆகியன திராவிட இயக்கத்தின் முழுமுதற் தலைவராக இருந்த தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி ஆகிய மூவரால் உருவாக்கப்பட்டு - வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு தக்கச் சான்றாக அண்ணா மற்றும் கலைஞர் கடிதங்கள் அமைந்துள்ளன.

கடித இலக்கியத்தில் வரலாற்றுப்பதிவு :

காரல்மார்க்ஸ், அரிஸ்டாட்டில், லெனின், ஸ்டாலின் என்று இலக்கிய மற்றும் தத்துவ மாமேதைகளை அறிஞர் அண்ணாவின் கடிதங்களிலும், கலைஞரின் கடிதங்களிலும் அவ்வபொழுது மேற்கோளாக காணலாம். அதேபோல கலைஞரின் கடித இலக்கியத்தில் சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கரின் வாழ்க்கைக் குறிப்புகளும் போராட்டங்களும் பல்வேறு இடங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக (தொடக்கக் காலங்களில்)

> ***"இந்திய நாட்டில் தலைவிரித்தாடிய சாதிக் கொடுமையின் மண்டையில் பெரிய சம்மட்டிக் கொண்டு தாக்குதல் நடத்தியவர் டாக்டர் அம்பேத்கார். அம்பேத்கார் என்னும் பெயர் அவருக்கு வந்ததன் நிகழ்வு - மிகவும் உணர்ச்சி கரமானச் சரித்திர நிகழ்ச்சிவாகும். அவருக்கு அவரது பெற்றோர் இட்டபெயர் பீமாராவ்ராம்சி. அக்காலத்தில் தங்கள் பெயருக்குப் பின்னால் தங்களது முன்னோர்கள் அல்லது தான் பிறந்த ஊரின் பெயரைச் சேர்த்துக்கொள்வது அக்காலத்து வழக்கம். அதற்கேற்ப அவர் 'பீமாராவ்இராம்சி அம்பாவதேகார்' என்று அந்நாளில் அழைக்கப்பட்டார். 'அம்பாவதே' என்பது அவரது முன்னோர்கள் பிறந்த ஊரின் பெயர். இது எப்படி அப்பேத்கார் என்று மாறியது தெரியுமா? அவர் படித்த உயர்நிலைப் பள்ளியில் உயர் வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் இருந்தார். மாணவர்கள் அனைவருமே அம்பேத்காரை மிகவும் இழிவாகவே நடத்தினர். பார்ப்பன குலத்தில் பிறந்த அந்த ஆசிரியர் ஒருவர் மட்டும் டாக்டர் அம்பேதக்காரிடம் மிகவும் அன்புடன், உரிமைக் கொடுத்துப் பழகினார். அந்த ஆசிரியரின் பெயர் அம்பேத்கார்"14***

ஒரு வரலாற்றை எப்படி சொல்ல வேண்டும், எப்படி சொன்னால் அது வாசகன் மனைதை விட்டு நீங்காமல் இருக்கும் என்பதற்கான ஒரு எடுத்தல் + விளக்கல் + தொடர்புப்படுத்துதல் + விளக்குதல் + விமர்சனம் செய்தல் என அனைத்து இலக்கியப் புலப்பாட்டு உத்தி முறைமைகளையும் செவ்வனே அறிந்திருந்தவர்களாக அன்று திராவிட

http://Creativecommons.org//license/by/4.0/.

இயக்கத் தலைமைகள் இருந்துள்ளனர். அதனை அவர்தம் கடிதங்கள் மூலம் அறியமுடிகிறது. அதேபோல அறிஞர் அண்ணாவின் படைப்புகள் அனைத்திலும் வரலாற்றை சொல்லுவதற்கேற்ற சுழலும் புலமையும் அமையப் பெற்றிருப்பதை உணரலாம்.

சமுதாயச் சித்தரிப்புகள் :

அறிஞர் அண்ணாவுக்கும் கலைஞருக்கும் அடிப்படையாகவே தமிழ் மக்கள் மீதும் தமிழ் மீதும் ஒரு அலாதியான பற்று இருந்துள்ளது. அதனை அவர்கள் படைப்புகளின் வழியே வெளிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக முக்கிய தினங்களன்று வெளியான கலைஞரின் வாழ்த்துப்பாடல், அண்ணாவிற்காக என்றெழுதிய,

“துயர் துடைக்கும் பணிகளுக்குத் துள்ளிக் குதித்து ஓடு

சீறிவந்த புலியை முறத்தினால் விரட்டிய

தமிழ் மரபின் தங்கமே!

இயற்கை கொடுமைக்கு எதிராக எழுந்திடு இன்றே..! ”15

என்னும் பொங்கல் வாழ்த்துப்பாடல் என அடுக்கிக்கொண்டே செல்லலாம். ஏனெனில் திராவிட இயக்கத்தவர்களின் பங்களிப்பு இன்றைய தமிழெழுத்துகளுக்கான வரிவடிவ மாற்றத்திலிருந்து தொடங்குகிறது.

“தந்தை பெரியார் துணைகொம்பில்லாத தமிழ் எழுத்துக்களை அறிமுகப்படுத்த வேண்டுமெனறு அன்றே முழங்கியுள்ளார்”16

இது பெரியாருக்கு இருந்த எழுத்துச் சீர்த்திருத்தச் சிந்தனையின் மிகமுக்கிய அம்சம் எனலாம். இச்சிந்தனையை அன்று தம் படைப்புக்களின் வழியே அறிஞர் அண்ணா புகுத்தி பயன்படுத்தியுள்ளார். அவ்வாறே,

“செந்தமிழுக்குத் தீமை வந்த பின்னும்

இந்தத் தேகம் இருந்தொரு லாபம் உண்டோ?”17

“மாங்குயில் கூவும் பூஞ்சோலை - எமை

மாட்ட நினைக்கும் சிறைச்சாலை”18

என்று மொழிப் போராட்டத்துக்காகப் போராடிய காலம் வரை திராவிட இயக்கத் தோழர்களையும் உடன் பிறப்புக்களையும் போராடத் தூண்டி - கலைஞர் கருணாநிதி அதற்கென பலமுறைச் சிறைசென்றுள்ளார். அதேபோல் தம் உடன் பிறப்புக்களுக்கு அவ்வபொழுது புத்துணர்ச்சிக்காக வாழ்த்துக்களையும் பாரட்டுக்களையும் பரிசுகளையும் (அன்பு முத்தங்கள்) தந்து பேசுவதும் தொடர்ந்து எழுதுவதும் அவர்தம் குணாம்சங்களாக இருந்துள்ளன.

http://Creativecommons.org//license/by/4.0/.

சமுதாயம் தான் மக்களைக் காக்கும் களஞ்சியம். அதனால்தான் இவர்கள் சினிமாக்கள் வழியே அறிமுகமானாலும், பல்வேறு கொள்கைகளையும் மூடநம்பிக்கைகளையும் அறவே ஒழித்து - சமுதாயம் தழைக்க வேண்டும் என்ற எண்ண ஓட்டத்துடன் வலுவான கருத்தாக்கங்களை வசனங்களாக, உரைநடையாக, பாடல் வரிகளாக என எழுதியுள்ளனர். எடுத்துக்காட்டாக,

"நடிகர்கள் என்பது வண்ண மத்தாப்பு!

வெளிச்சம் தெரியும். வேகமாகவும் எரியும்!

பின்பு கரிக்கட்டையாக மாறி சாம்பலாகும்"19

என்னும் பாடலடிகளை எழுதி நடிகர்களை நம்பி முன்னெடுக்கும் அரசியலை விமர்சித்தத் தன்மையைச் சுட்டிக்காட்டலாம்.

முடிவுரை :

நாகரீகம், சகோதரத்தும் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் திராவிட இயக்கக் கடித இலக்கியத்தில் குவிந்திருக்கின்றன. நண்பர்களுக்கும் கழக கண்மணிகளுக்கும் அறிஞர் அண்ணாவைப் போலவே கலைஞரும் வெளிச்சம் போட்டுக்காட்டும் வகையில் திறம்பட - அதற்கான முன்னெடுப்புகளைச் செய்துள்ளார். அதனால்தான் இவர்களின் கடித இலக்கியங்கள் அரசியல் தளத்தில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. இயல்பாகவே இம்முக்கியத்துவத்திற்கு காரணாமாக இவர்கள் இருவருக்கும் இருந்த 'திராவிடத் தொடர்பும் திராவிட இயக்கம் சார்ந்த இலக்கிய அறிமுகமும் இவர்களை அதன்வழி பயணிக்கவும், பங்கேற்கவும் தூண்டியுள்ளன' அதனால் திராவிய இயக்கக் கடிதங்கள் தமிழ்மொழி மீதாகவும், தமிழின மக்கள் விடுதலைக்காகவும் அரசியலில் செயலாக்களாக விரிந்திருப்பதை மனங்கொள்ளலாம்.

ஒரு கட்டத்தில் திராவிட முன்னேற்ற கழகம் மொழி குறித்து கவலைபடாதபோது சப்தத்தை மட்டும் பிரதானமாய் வைத்துத் தமிழ் உரைநடையை வளர்த்தபோது, எந்திரமயத்தின் அடையாளங்களோடு ஒலிப்பெருக்கி, சினிமா, அடுக்குமொழி என உரைநடையை சிதைத்து - தமிழின் கலை இலக்கிய மரபைச் சிதைத்து - மக்கள் இயக்கத்தைக் கட்டமைத்த போது, "எழுத்து" (சி,சு,செல்லப்பா) பத்திரிகை, 'அ஼து அரோகியமான வளர்ச்சியல்ல' என்று மிகப்பெரும் குரலாக தனது எதிர்ப்பை முன்வைத்திருக்கிறது. இதன் காரணமாக எழுத்து பத்திரிகைக்குப் பலத்த பொருட்செலவும், எதிர்ப்பும் இருந்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. அதைத்தொடர்ந்து மாதம் தோறும் வெளியாகி வந்த எழுத்து அதன் ஒன்பதாம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வெளியானது. அதையடுத்து, தமிழகச்சூழலில், சினிமா ஒரு கலையாகவும் வியாபாரப் பொருளாகவும் உருமாறி நிலப்பிரபுத்துவம், புராணவிளக்கங்கள், என தொடங்கி - பின்னர் படிப்படியாக நேர்மை, சத்தியம், உண்மை, தாய், மொழி, இனம்

http://Creativecommons.org//license/by/4.0/.

என கருத்தாழம் மிக்கதாக வளர்ந்தது. அதில் குறிப்பாக அறிஞர் அண்ணா மற்றும் கலைஞர் அவர்களின் எழுத்துக்களுக்கு முக்கிய இடமிருந்ததை மறுக்கமுடியாது. இலக்கியத்திலும் உரைநடை, பேச்சு உள்ளிட்ட புலப்பாட்டு நிலையிலும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி இவர்கள் திராவிட இயக்கத் தளத்தை இலக்கியத்தின் வழியே தீர்மானித்தனர். அதற்கான அரசியலையும் அதனூடே வளர்த்தனர். பொதுவாக, தமிழ் என்னும் கருத்துருவம், இன்னொரு மட்டத்தில்; கிராமியத் தன்மை கொண்டது அல்லது கிராமிய சூழலியத்தோடு நெருக்கமானது. படிப்பறிவில்லாத மக்களின் ஆதரவையும், ஓட்டையும் வாங்கத் தேவையான - எல்லாக் கிராமிய குணமும் இந்த கருத்துருவத்திற்குள் அடங்கும். அதனால்தான், தமிழ்த்தாய் செய்யும் போக்கு இன்றும் மாநாடுகளாய் ஜொலிக்கக் காண்கிறோம். தமிழ்விழா கொண்டாட்டமும், அக்கொண்டாட்டத்துக்கான நிலைபாடும் தேவைதான், இருந்தும் பிராமணியத்தின் எதிர்ப்பை கவனத்தில் கொண்டு, அதேநேரத்தில், தனது உள்ளீடற்ற கருத்துருவத்தை தரமான கலை இலக்கிய வெளிப்பாடுகளோடும், சீரிய சிந்தனை எதிர்ப்புகளோடும், கையாள வேண்டிய தேவையிருக்கிறது. உண்மையில் ஒரு இனம் சார்ந்தப் போராட்டத்துக்கும், இருப்புக்குமான முக்கிய காரணிகளாக அவ்வினம் கொண்டிருக்கும் மொழி சார்ந்த கருத்துருவத்தை விட - பயன்பாட்டையும், படும்பாட்டையும் அப்பட்டமாய் வெளிகாட்டும் படைப்புச் சார்ந்த / இலக்கிய பண்பாடு சார்ந்த தொல்மரபு கலைகளினூடான (உதாரணமாக நாட்டுப்புற இசை அல்லது கூத்து) வெளிப்பாடு அவசியமாகிறது. அதுவே உண்மைக்கு மிக அணுக்கமான சுழலில் இருந்து வெகசன மக்கள் மத்தியிலும் ஒருவிதமான வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்தும் முக்கிய தூண்டுகோளாக அமையும்.

அடிக்குறிப்புகள் :

1. க.சண்முகச்சுந்தரம்., இந்திய இலக்கியச் சிற்பிகள் - அறிஞர் அண்ணா., ப.107, சாகித்திய அகாதெமி வெளியீடு., (2001)
2. கலைஞர் மு.கருணாநிதி., 52 ஆவது பிறந்த நாள் கடிதம்., நாள் : 24-05-1975.
3. அஞ்சுகச் செல்வம்., ப.54
4. சே.இராமதாசு, தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள் - 1986 ஒரு குறுக்கு வெட்டுப் பார்வை., க.இ., ப.39.
5. மேலது., ப.41
6. ஞானி., அறிஞர் அண்ணா பன்முகப்பார்வை., தமிழ் நேயம் வெளியீடு. கோவை., (2009)
7. தம்பிக்கு.... அண்ணாவின் கடிதங்கள் 4., ப.67.,
8. சு.சண்முகசுந்தரம்., கலைஞர் கலை இலக்கியத்தடம்., ப.259.
9. மா. செல்வராசன்., கடித இலக்கியம்., ப.26

http://Creativecommons.org//license/by/4.0/.

10. கலைஞர் மு.கருணாநிதி., பேச்சுக்கலை வளர்ப்போம்., ப.47
11. மேலது., ப.58
12. மோ.தமிழ்மாறன்., கலைஞரின் கடித இலக்கியம்., ப.73 (1998)
13. மேலது., ப.79
14. மோ.தமிழ்மாறன்., கலைஞரின் கடித இலக்கியம்., ப.129 (1998)
15. கலைஞர் மு.கருணாநிதி., 52 ஆவது பிறந்த நாள் கடிதம்., நாள் : 24-05-1975.
16. கலைஞரின் கடிதங்கள் - தொகுதி 4., ப.09
17. 'துணை எழுத்துக்களில் வரும் கொம்புகள் முதலில் எழுத்துக்களுக்கு மேலாக இடப்பட்டிருந்தது. (தட்டச்சில் வெளியாகும் எழுத்துக்கள் அல்லது கல்வெட்டில் இருக்கும் எழுத்துக்களை பார்க்கவும்) அவ்வெழுத்துக்கள் பிற்காலச் சூழலில் தட்டச்சு இயந்திரங்கள் நவீன மயமானதாக வரும் சூழலில் பயன்பாட்டிற்கு வராமல் அழிந்துப்போகக் கூடும் என்று கருதி தந்தை பெரியார் அவற்றை சீர்திருத்தம் செய்தார்' - தம்பிக்கு... அண்ணாவின் கடிதங்கள்.,5., ப.61.,
18. கலைஞரின் கடிதங்கள் - தொகுதி 4., ப.15
19. மேலது., தொகுதி 4 ப.22.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

6. திராவிட மொழிகளில் தமிழ் உருபன்கள்

கல்யாணசுந்தரம் கி,
உதவிப் பேராசிரியர்,தமிழ்த் துறை,
அய்யன் திருவள்ளுவர் கலை அறிவியல் கல்லூரி,
பு.புளியம்பட்டி, ஈரோடு 638459.
DOI 10.5281/zenodo.13761592.

Abstract;

Among the Dravidian languages, Tamil is a transitional language. We have explained with examples about the structure and types of Olian, Uruban, and word that can be grafted in the affix language. Among these, this article briefly examines the Urubans of Tamil language.

Key Words: Dravidian Languages, Tamil Language, Transcendent Language, Uruban-Olean-Word, Structure and Varieties of Urubans.

ஆய்வுச் சுருக்கம்:

திராவிட மொழிகளில் தமிழ் மொழி ஓர் ஒட்டுநிலை மொழியாக அமைந்திருக்கிறது. ஒட்டுநிலை மொழியில் ஒட்டுகளாக வரக்கூடிய ஒலியன், உருபன், சொல் ஆகியவற்றின் அமைப்பு, வகைகள் பற்றி உதாரணங்களுடன் விளக்கி உள்ளோம். இவற்றில் தமிழ்மொழியின் உருபன்கள் பற்றி இக்கட்டுரை சுருக்கமாக ஆய்வு செய்து இருக்கிறது.

திறவுச் சொற்கள்:

திராவிட மொழிகள், தமிழ் மொழி, ஒட்டுநிலை மொழி, உருபன்-ஒலியன்-சொல், உருபன்களின் அமைப்பு மற்றும் வகைகள்.

முன்னுரை:

இந்தியாவில் மிகப் பழங்காலத்திலேயே உருபனியல் சார்ந்த பகுப்பாய்வுகள் நடைபெற்று இருக்கின்றன என்பதற்குத் தொல்காப்பியம் சான்றாக அமைந்திருக்கிறது. உருபனியல் என்பது சொல்லியல் மற்றும் தொடரியலுடன் சம்பந்தம் உடையது ஆகும். அமெரிக்க நாட்டு அறிஞர் நோம் சாம்ஸ்கி 1957-இல் 'தொடரியல் அமைப்பு' என்னும் இலக்கண ஆய்வு நூலை வெளியிட்டார். உலகின் பல மொழி அறிஞர்களும் அந்நூலில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு தொடரியல் அமைப்புகளை ஆராயத் தொடங்கினர்.

கி.பி. 1856-இல் 'திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வின் தந்தை' என்று போற்றப்படும் டாக்டர் இராபர்ட் கால்டுவெல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்றும் மிகச்சிறந்த ஆய்வு நூலை வெளியிட்டார். அந்நூலின் கருத்துக்களின்படி திராவிட மொழிகள் 25-க்கும் மேற்பட்டவையாக இருக்கின்றன என்பது தெளிவாகிறது. அத்திராவிட மொழிகளில் மூத்த மொழியான தமிழ் மொழி சொல்லியல் அமைப்பின் தகவல்களின்படி ஒரு ஒட்டுநிலை மொழி ஆகும். அந்த ஒட்டுநிலை மொழியாகிய தமிழ் மொழியில் சொல்

http://Creativecommons.org//license/by/4.0/.

அமைப்பு, ஒலியன் கூறுகள், உருபன் அமைப்பு, உருபன் வகைகள் போன்றவற்றைச் சுருக்கமாக இக்கட்டுரை ஆய்வு செய்து விளக்குகிறது.

திராவிட மொழிகள்:

இந்தியாவில் பேசப்படும் மொழிகள் அனைத்தும் இந்தோ-ஆரிய மொழிகள், திபெத்திய-பர்மிய மொழிகள், ஆஸ்டிரிக் மொழிகள், திராவிட மொழிகள் என்னும் நான்கு வகையுள் அடங்கும். இந்தோ-ஆரிய இன மொழிகளுக்கு அடுத்தபடி அதிகமான மக்களால் பேசப்படுவன திராவிட மொழிகள் ஆகும். இம்மொழிகள் கி.மு.விற்கு முன்பிருந்தே பல நூற்றாண்டுகளாக திராவிட மக்களால் பேசப்பட்டு வருகின்றன. இம்மொழிகளில் சில இலக்கியம் கண்டவை; பல இலக்கியம் காணாதவை. சில திருந்தியவை; பல திருந்தாதவை. சில நாட்டிலும் நகரத்திலும் வாழ்கின்ற மக்களின் மொழிகள்; பல காட்டிலும் மேட்டிலும் வாழ்கின்ற பழங்குடி மக்களின் மொழிகள் ஆகும்.

இன்று 25-க்கும் அதிகமாக திராவிட மொழிகள் உள்ளன என மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இவற்றுள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளே சிறந்து விளங்கக் காணலாம். இந்நான்கு மொழிகளும் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை ஆகும். இவற்றைத் தென் திராவிட மொழிகள் நடுத் திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் எனவும் வகுப்பர்.

தென் திராவிட மொழிகளுள் தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, கோடா தோடா படகா, இருளா ஆகிய ஒன்பது மொழிகள் அடங்கும்.

நடுத் திராவிட மொழிகளுள் தெலுங்கு, கொலாமி, கோண்டா, கோண்டி, குயி, குவி, பெங்கோ மண்டா, நாய்க்கி, பாஜி, கடப்பா பெல்லாரி, சில்லூர், கொரகா ஆகிய பதினான்கு மொழிகள் அடங்கும்.

வட திராவிட மொழிகளுள் பிராகுயி, மால்டோ, குரூக் ஆகிய மூன்று மொழிகள் அடங்கும்.

தற்கால ஒப்பியல் அறிஞர்கள் திராவிட மொழிகள் வழங்கும் நிலப்பரப்பினை அடிப்படையாகக் கொண்டு அவற்றை மேற்கூறியவாறு மூன்று பிரிவுகளாகக் கூறுபடுத்தி ஆய்வு மேற்கொள்கின்றனர். இதனை உறுதி செய்யும் வகையில் மொழிநூல் அறிஞர் டாக்டர் ஜி.ஜான் சாமுவேல், "தென்னிந்தியப் பகுதிகளில் பெரும்பாலும் வழங்கப்பட்டு வரும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய 26 மொழிகளைத் திராவிட மொழிகள் என்று அழைக்கின்றோம். இவற்றில் பிராகுயி மொழி வட இந்தியாவிலுள்ள பலுசிஸ்தான் பகுதிகளில் பேசப்பட்டு வருகின்றது. மால்டோ, குரூக் போன்ற சில மொழிகளும் வட இந்தியப் பகுதியில் பேசப்படுகின்றன"1 என்று தம் ஆய்வில் கூறுகிறார்.

திராவிட மொழிகளில் தமிழுக்கும் தெலுங்குக்கும் உள்ள நிலைப்பாட்டை ஒப்பிலக்கண அறிஞர் டாக்டர் கால்டுவெல், "தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்,

http://Creativecommons.org//license/by/4.0/.

துளு, குடகு ஆகிய இவ் ஆறு திராவிட மொழிகளில் ஒன்றிலிருந்து ஒன்று அதிகமாக வேறுபடும் மொழிகள் தமிழும் தெலுங்குமாம்”2 என்று விளக்குகிறார்.

தமிழ் மொழி:

திராவிட மொழிகளில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகள் தொன்மையான மொழிகளாக இருந்தும், ஏராளமான மக்களால் பேசப்படும் மொழிகளாக இருந்தும், எழுத்து வடிவில் அமைந்த தொன்மையான இலக்கிய இலக்கணங்களைக் கொண்ட மொழி தமிழ் மொழி என்பர். ஏனைய திராவிட மொழிகளைவிட சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்ப பெற்ற மொழி தமிழ் ஆகும். இந்திய மொழிகளுள் சமஸ்கிருத மொழிக்கு அடுத்த நிலையில் பன்னாட்டு அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்துள்ள மொழி தமிழ் மொழியே ஆகும். இதனை நிரூபணம் செய்யும் வகையில் டாக்டர் ஜி.ஜான் சாமுவேல், “ஏனைய திராவிட மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கும்போது வடமொழித் தாக்குதல் மிகவும் குறைந்து காணப்படும் மொழி தமிழ் மொழியே”3 என்று கூறியுள்ளார்.

ஒட்டுநிலை மொழி:

ஒட்டுநிலை மொழி என்பது ஒருவகையான பிணைப்பு மொழி ஆகும். ஒட்டுநிலை மொழிகளில் ஒவ்வொரு ஒட்டும் பொதுவாக எண், இடம், காலம் போன்றவற்றைக் குறிக்கும். உருபன்களை ஒன்றுடன் ஒன்று ஒட்டுவதன் மூலம் உருவான சொற்களை பெருமளவில் கொண்ட மொழி ஒட்டுநிலை மொழி எனப்படுகிறது. ஒட்டுநிலை மொழிமில் சொல்லியல் மற்றும் தொடரியல் இணைந்து இயக்குவதைக் காண முடியும். இதனை மொழியியல் அறிஞர் டாக்டர்.ச.அகத்தியலிங்கம், “பொதுவாக மொழியிலாளர்கள் சொல்லியல் (morphology), தொடரியல் (Syntax) என இரண்டாகப் பகுத்துக் கூறினும் சொல்லியலும் தொடரிலும் ஒன்றோடொன்று பிணைந்து கிடக்கக் காணலாம்”4 என்று கூறுகிறார்.

திராவிட மொழிகளில் அடிச்சொற்கள் தனித்து நின்று சொல்லாகவும் செயல்படுகின்றன. அடிச் சொற்கள் பொதுவாக ஒரசைச் சொற்களாக அமைகின்றன. அடிச்சொற்களோடு இணையும் இலக்கண விகுதிகள் காலம், திணை, பால், எண், இடம் ஆகியவற்றை உணர்த்துகின்றன. சொல்லாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தனிநிலை மொழி, ஒட்டுநிலை மொழி, உட்பிணைப்பு மொழி என்று மொழிகளை மூவகையாகப் பிரிப்பர். இவற்றுள் திராவிட மொழிகள் ஒட்டுநிலை மொழி என்ற பிரிவில் அடங்கும். அந்தவகையில் தமிழ் மொழியும் ஒரு ஒட்டுநிலை மொழியே என்பது விளங்குகிறது.

உருபன்-ஒலியன்-சொல்:

உருபன் என்பது பொருள் குறித்து நிற்கும் மிகச்சிறிய மொழியியல் அலகு ஆகும். ஒவ்வொரு சொல்லும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உருபன்களால் ஆனது. ஒரு சொல்லின் பொருளை அறிய உருபன்களைப் பிரித்து அவற்றின் பொருள்களை அறிதல்

http://Creativecommons.org//license/by/4.0/.

உதவும். பேச்சு மொழியில் உருபன்கள் ஒலியின் மிகச் சிறிய அழகான ஒலியன்களால் ஆனது.

ஒலியன்கள் தனிச் சொல்லாக நின்று பொருள் தர மாட்டா. உருபன் ஒன்று தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உருபன்கள் சேர்ந்தோ சொல்லை உருவாக்குகின்றன உதாரணமாக

வாழ் ஒரு உருபன்

கிறு ஒரு உருபன்

ஆன் ஒரு உருபன்

இம்மூன்று உருபன்கள் சேர்ந்து 'வாழ்கிறான்' என்னும் சொல்லை உருவாக்குகின்றன.

'வாழ்' உருபன் தனியாக நின்றும் பொருள் தரும்; சொல்லாகவும் வரும். 'கிறு', 'ஆன்' உருபன்கள் தனித்துப் பொருள் குறித்தாலும், சொல் ஆவதில்லை.

'கிறு' தனிச் சொல்லாகாவிட்டாலும் அது நிகழ்காலப் பொருள் குறித்து நிற்பதனால் அது ஓர் உருபன் எனப்படுகிறது.

'ஆன்' தனிச் சொல்லாகாவிட்டாலும் அது ஆண்பால் குறித்து நிற்பதால் அதுவும் உருபன் ஆகிறது.

தனி ஒலியன்களே உருபன்களாகவும், சொற்களாகவும் நிற்பதுண்டு.

உதாரணம்: ஆ-பசு, ஏ-அம்பு

ஆ, ஏ என்னும் இரு ஒலியன்களும் தனித்து நிற்பதாலும், பொருளைத் தருவதாலும் இவை தனி உருபன்களாகவும் சொல்லாகவும் செயல்படுகின்றன.

பழங்கள், நாய்கள் என்பன தனிச்சொற்கள். ஆனால், அவை தனி உருபன்கள் அல்ல. பழம்+கள், நாய்+கள் என்று இரு உருபன்கள் இணைந்து சொற்களாக உள்ளன. எனவேதான், பொருள் தரக்கூடிய மிகச்சிறிய அசையே உருபன் என்கிறோம்.

உருபன், சொல் இரண்டுக்கும் தொடர்பு இருந்தாலும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவை. சொற்களின் அமைப்பு பற்றி ஆராயும் இயல் உருபனியல் ஆகும். பொருள் தரக்கூடிய மிகச்சிறிய ஒலிக்கூறு உருபன் ஆகும். அன்பு, பண்பு, உலகம் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு உருபன் ஆகிறது. இவற்றை மேலும் சிறு கூறுகளாகப் பிரிக்க முடியாததால் இவை 'உருபன்' ஆகிறது.

ஓர் ஒலியன் தனித்து நின்றோ, ஒன்றுக்கு மேற்பட்ட ஒலியன்கள் சேர்ந்து நின்றோ பொருள் தருமாயின் அஃது 'உருபன்' (Morphone) எனப்படும். இதனைச் சொல், பதம், உருபு எனவும் கூறுவர். அதனால்தான் மொழியியல் அறிஞர் டாக்டர்.ச.அகத்தியலிங்கம்,

http://Creativecommons.org//license/by/4.0/.

"'சொல்லியல்' ஒரு சொல்லின் அகத்தே காணப்படுகின்ற அக உறுப்புகளைப் பற்றியும் அவை இணைந்திருக்கின்ற முறை பற்றியும் அவற்றின் வரிசைமுறை பற்றியும் இன்னோரன்ன பல செய்திகளைப் பற்றியும் கூறும்" என்கிறார்.

உருபன்களின் அமைப்பு & வகைகள்:

மொழிநூலார் உருபன்களைத் தனி உருபன்கள் (Free Morphemes), கட்டு உருபன்கள் (Bound Morphemes) என இருவகைப்படுத்துவர். தாமே தனித்து வந்து பொருளோடு இயக்குவதைத் 'தனி உருபன்கள் என்றும், பொருள் இருந்தாலும் தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாமல் வேறு தனி உருபன்களோடு இணைந்து இயங்குவனவற்றை 'கட்டு உருபன்கள்' என்றும் கூறுவர்.

'மலர்' என்பது தனி உருபன். அது தனித்து நின்று பொருள் தரும். ஐ, ஆல், கண் போன்ற வேற்றுமை உருபுகள் கட்டு உருபன்கள். இவை தமக்கென தனிப் பொருள் உடையனவாயினும் தனித்து நிற்கும் ஆற்றல் இல்லாதவை. ஆகவே, மலர் என்ற தனி உருபனோடு சேர்ந்து மலரை, மலரால் என்று நிற்பதைக் காணலாம்.

உருபன்களின் அமைப்பு, வகை, இயங்கும் முறை பற்றி ஆராய்வது உருபனியல் ஆகும். கல், நெய் என்பன பொருள் உடைய மிகச் சிறு சொற்கூறுகள். இவை உருபன்கள் ஆகும். 'செய்தான்' என்பதில் செய்/த்/ஆன் இம்மூன்றும் தனித் தனி உருபன்கள் ஆகும்.

வேர் உருபன்:

மேலும் பிரிக்க இடம் தராத சொல் வேர்ச்சொல் (Route Word) ஆகும். கல் என்பது வேர்ச்சொல். அதைப் பிரிக்க இயலாது. எனவே இது 'வேர் உருபன்' ஆகும்.

அடி உருபன்:

விகுதிகளை அல்லது ஒட்டுகளை ஏற்க இடமளிக்கும் சொற்கூறு அல்லது உருபன் அடிச்சொல் ஆகும். 'செய்' என்பது அடிச்சொல். 'கல்' என்பது விகுதியை ஏற்கவும் வல்லது. அதுவும் அடிச்சொல், அடி உருபன் எனப்படும்.

உதாரணம்: செய்+த்+ஆன், கல்+வி

ஒட்டு உருபன்:

அடிச்சொல்லுடன் உருபுகள் ஒட்டுவதுண்டு. த், ஆன் இரண்டும் ஒட்டுகள். அவற்றை ஒட்டு உருபன்கள் எனலாம். ஒட்டு ஓர் அடிச்சொல்லுக்கு இடப்பக்கம் வந்தால் முன்னொட்டு என்றும், வலப்பக்கம் வந்தால் பின்னொட்டு என்றும், அடிச்சொல்லின் நடுவில் செருகப்பட்டால் இடை ஒட்டு என்றும் பெயர் பெறும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

முடிவுரை:

திராவிட மொழிகள் பற்றியும் அதன் வகைகள் பற்றியும் சுருங்கக் கூறிவிட்டு, ஒட்டுநிலை மொழியாகிய தமிழ் மொழியில் ஒலியன்கள், உருபன்கள், அவைகளின் வகைகள் மற்றும் அமைந்துள்ள விதங்களையும் பற்றி இக்கட்டுரை, சுருக்கமாக ஆய்வு செய்து விளக்கி இருக்கிறது.

துணை நின்ற நூல்கள்:

1. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் - டாக்டர் கால்டுவெல் - முல்லை நிலையம், சென்னை-17-2010.
2. திராவிட மொழிகளின் ஒப்பாய்வு ஓர் அறிமுகம் - டாக்டர் ஜி.ஜான் சாமுவேல் - ஹோம்லாண்ட் பதிப்பகம், சென்னை 96 - 2009.
3. திராவிட மொழிகள் 1 - டாக்டர் ச.அகத்தியலிங்கம் - மணிவாசகர் பதிப்பகம், சென்னை 108 - 2010

அடிக்குறிப்புகள்:

1. திராவிட மொழிகளின் ஒப்பாய்வு ஓர் அறிமுகம் - பக்கம் 18
2. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் - பக்கம் 54
3. திராவிட மொழிகளின் ஒப்பாய்வு ஓர் அறிமுகம் - பக்கம் 39
4. திராவிட மொழிகள் 1 - பக்கம் 156
5. திராவிட மொழிகள் 1 - பக்கம் 157

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

7. திராவிட நோக்கில் சமூகம்

இரா.ஜெயந்தி
முனைவர் பட்ட ஆய்வாளர்(தமிழ்த்துறை)
இரத்தினம் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),
ஈச்சனாரி, கோயமுத்தூர்-641021
DOI 10.5281/zenodo.13761606.

Abstract:

In the Tamil language, the words of the directions show the boundaries, the language boundary is the ethnic boundary, the ethnic boundary is the homeland, and the homeland is the internal boundary of the culture. The earthly child of nature is born with the world and lives in its nature, the earthly world, the abode of culture, the home of the Dravidian people. You can learn about such a special Dravidian through this review article.

முன்னுரை:

மொழியிலே தமிழ் மொழியில் திசைகளுக்கு அமைந்த சொற்களிலே எல்லை காட்டி, மொழி எல்லையே இன எல்லையாக, இன எல்லையே நாட்டெல்லையாக, நாட்டெல்லையே பண்பாட்டின் அக எல்லையாகக் கொண்ட நானிலம், ஐந்திணை அளாவிய முழுநிலம் பண்டைத்தமிழகம் இன்றைய தென்னாடு அதுதான் திராவிடம் ஆகும். இயற்கையின் நிலவுலகக் குழந்தை உலகுடன் பிறந்து தன்னுடைய இயல்பில் வாழும் நிலவுலகம், பண்பாட்டின் இருப்பிடம், திராவிடப் பெருங்குடி மக்கள் வாழும் இத்திருவிடமே.அத்தகைய சிறப்பு மிக்க திராவிடத்தாயைப் பற்றி இவ்வாய்வுக் கட்டுரை மூலம் அறியலாம்

தோற்றம்:

"ஆதிகுடிகளுக்கும் திராவிடர்களுக்கும் இடையே உள்ள தொடர்புகளை இனவியலார் எடுத்துக்காட்டி உள்ளனர் இவ்விரண்டு பகுதியினர்க்கும் இடையே உள்ள தொடர்புகள் பின்வருமாறு எடுத்துக்காட்டப்படுகின்றன வழங்கப்படும் சொல் ஒற்றுமை, பூமராங் எனும் வளைதடியைப் பயன்படுத்துதல், தோற்றத்தில் ஒன்றுபட்டிருத்தல் ஆனால் சர்வில்லியம் டர்னர் ஆஸ்திரேலிய ஆதிகுடிகள், திராவிடர் ஆகியோருடைய மண்டை ஓடுகளை ஆராய்ந்து ஆஸ்திரேலியர்களுக்கும் திராவிடர்களுக்கும் உடல் அளவில் ஒற்றுமைகள் இல்லையென்று விளக்கி இருக்கிறார்."1(தி.இ45) திராவிடர் தோற்றம் பற்றி வேறொரு கருத்துக்களும் நிலவி வருகின்றன. திராவிடர்கள் வடமேற்கு வழியாக பஞ்சாப்பிற்குள் நுழைந்தார்கள் அங்கிருந்து தென் இந்தியா நோக்கிச் சென்றனர். கார்டுவெல் சித்திய திராவிட மொழிகளையும், சொற்களையும் இலக்கணங்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்து சித்தியருக்கும் திராவிடர்க்கும் இடையே உறவு உள்ளது என்று காட்டினர்,திராவிடர் மிகப்பழைய இனத்தினர் ஆவர்.அவர் இந்திய மண்ணிலேயே பிறந்தவர்.அதிலும் குறிப்பாகத் தென்னிந்திய மண்ணில் பிறந்தவர்.தமிழ் நாகரிகத்தின் பழைமையும்,தமிழ் இலக்கியத்தில் காணப்படும் குறிப்புகளும் திராவிடர் தம் பிறந்தகம் தமிழகமே என்று தெளிவுபடுத்துகின்றன."தமிழ்,தெலுங்கு,மலையாளம்,கன்னடம் ஆகிய நான்கும் ஆரிய மொழிகளான சமஸ்கிருதத்தில் இருந்து முற்றும் வேறுபட்டவை.

http://Creativecommons.org//license/by/4.0/.

இம்மொழிகள் ஒன்றோடு ஒன்று உறவு உடையவை. சமஸ்கிருதம் முதலான ஏனைய மொழிகளில் இருந்து முற்றும் வேறுபட்டவை. எனவே வேறொன்றிலிருந்து தோன்றியவை. வட இந்தியப் பண்டிதர்கள் இந்நில மொழிகளை இரண்டு குழுவாகப் பிரிப்பார்கள்.ஒவ்வொரு குழுவிலும் ஐந்து மொழிகள் அடங்கும் அவை கவுரா என்றும் திராவிடா என்றும் அழைக்கப்பெறும்."(தி.இ75) திராவிடா என்னும் ஐந்தில் மராத்தி, குஜராத்தி, தெலுங்கு, கர்நாடகம், திராவிடம் ஆகியன அடங்கும். இந்த ஐந்து மொழிகளுள் மராத்தியும், குஜராத்தியும் வடக்கு குழுவைச் சார்ந்தவை ஆகும். ஏனைய தெலுங்கு, கன்னடம், திராவிடம் ஆகிய மூன்றும் சமஸ்கிருத மொழியில் இருந்து தோன்றியவை என்பர் வட இந்தியப் பண்டிதர்கள். ஆனால் உண்மையில் அம்மொழிகளின் அமைப்பு அடிப்படை ஆகியன சமஸ்கிருதத்தில் இருந்து முற்றும் வேறுபட்டன ஆகும். திராவிட மொழிகளில் இடம்பெற்றுள்ள சமஸ்கிருதச் சார்பற்ற பகுதி சமஸ்கிருதச்சார்புடைய பகுதியைவிட மிகமிகப் பெரியது. திராவிட மொழிகளில் வழங்கும் மறுபெயர்கள், எண்ணுப்பெயர்கள்,வினைச் சொல்லாக்கத் திரிபுகள், பெயர்ச்சொல் ஆக்கத்திரிபுகள், சொற்றொடர் முறைகள் முதலாகிய மொழிக்கு அடிப்படையான முதன்மை அமைப்பு சமஸ்கிருத மொழியில் இருந்து முற்றும் வேறுபட்டது ஆகும். குறிப்பாகத் திராவிட மொழிகளுள் மிகவும் சீர்மை பெற்ற ஒன்றாக விளங்கும் தமிழ் முற்றும் சுதந்திரமான தோற்றத்தை பெற்றிருக்கிறது.அம்மொழிகளில் வழங்கும் மிகப் பழம் சொற்களான இயற்கைப் பொருட்பெயர்கள்,உணர்வைப் புலப்படுத்தும்

வினைச்சொற்கள், எண்ணுப்பெயர்கள் ஆகியன சமஸ்கிருத மொழியோடு சற்றும் தொடர்பு இல்லாதவை தமிழில் இறந்தகால, நிகழ்கால,எதிர்கால இடைநிலைகள் ஒவ்வொரு காலத்திற்கும் தனித்தனியே சுட்டப்பெறும். இத்தனித்தன்மைகள் வேறுமொழிகளில் இல்லை. திராவிட மொழிகளின் இலக்கண ஆசிரியர்கள் திராவிட மொழிகளோடு தொடர்புபடுத்தப்படும் சமஸ்கிருதம் இன்றைய சமஸ்கிருதத்திலிருந்து முற்றும் மாறுபட்டதாகவே இருக்கின்றது. தென்னிந்தியாவில் வாழ்ந்த ஆதிகுடிகள் பேசிய மொழிகள் உயரிய அளவில் பண்பட்டு இருந்தன.எனவே சமஸ்கிருத மொழியில் திராவிட மொழிக்கூறுகள் இடம்பெற்றிருப்பது வியப்பிற்குறியது அன்று இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பத்தைச் சார்ந்த இலத்தின்,கிரேக்க மொழிகளில் இத்தகு நிலைமை இல்லை சமஸ்கிருத மொழியில் மட்டுமே இத்தகு நிலைமை நேர்ந்துள்ளது காரணம் திராவிடர்களோடு ஆரியர்கள் கொண்ட தொடர்பே ஆகும். ஆரியர்கள் வட இந்தியா முழுவதும் திராவிட மொழிகளே பரவி இருந்தன. இந்தோ ஆரிய மொழியில் பழைய வடிவம் ரிக் வேத மொழியே ஆகும்.இம்மொழி அவஸ்தா எனும் படைப்புக்கு ஈரானிய மொழியில் இருந்து வேறுபட்டிருந்தது. குறிப்பாக இரண்டாம் வரிசை வல்லின ஒலிகளிலும் நுனிநா அண்ணத்தை தொடுவதினால் எழும் மெய் எழுத்து ஒலிகளிலும் இந்த வேறுபாடு துல்லியமாகத்தெரிகிறது. இந்தோ ஆரிய மொழி வளர்ச்சியில் பல்லின ஒலிகளும்,நுனிநா அண்ண ஒலிகளும் பெரும் பங்கு கொண்டுள்ளன. திராவிட வட்டார வழக்கு ஒலிகள் அமைப்பு, சொற்றொடர், சொற்றொடர் களஞ்சியம் ஆகியன சமஸ்கிருத்தைப் பாதித்தன. வேத

http://Creativecommons.org//license/by/4.0/.

ஆரியமொழிக்கும் அதற்குரிய மூல மொழியான இந்தோ ஜெர்மானிய மொழிக்கும் இடையே நேர்ந்துள்ள வேறுபாடுகளுக்குக் காரணம் இந்தியாவில் இருந்த திராவிட மொழிகளே ஆகும்.

பண்பாட்டு நெறிகள்:

"பெரும்பான்மையான மக்கள் அனைவருக்கும் தெரியும்படியாகவோ அல்லது அவரவர் நெஞ்ச அளவிலோ ஆதிகால வழிபாட்டு முறாகளில் நம்பிக்கை கொண்டிருந்தனர்." (தி.இ94) திராவிடர் தம் பண்டைக்கால ஆதி மதத்தில் உயிர்பலிகளும் ஆட்டம்பாட்டங்களும் இடம்பெற்றிருந்தன என்பதை வெறியாட்டு,வேலன் ஆடல், மலைவசார்ந்த இன மக்களின் பிறசடங்குகள் ஆகியன காட்டுகின்றன.திராவிடர் பேய்களை வழிபட்டு வந்தனர்.நாகத்தை வழிபட்டு வந்தனர் மரங்களை வழிப்ட்டு வந்தனர் வேதங்களில் இடம்பெற்றுள்ள தெய்வப் பெயர்கள் வேதமொழிக்கு மூலவரான இந்தோ ஜெர்மானிய வட்டார மொழிகளில் வழங்கும் தெய்வப் பெயர்களோடு ஒத்துப்போகவில்லை அப்பெயர்கள் பெரும்பாலும் திராவிடத்தை மூலமாகக் கொண்டுள்ளன.வருணன் ஆரியக் கடவுளருள் ஒருவராவார் ஆர்ய முனிவர்கள் தம் கடவுளர் பட்டியலுடன் திராவிடக்கடவுளான வருணனையும் சேர்த்துக்கொண்டனர் ருத்திரன் என அழைக்கப்பெறும் ஆரியப் பெயருக்குரிய கடவுள் திராவிடப் பழங்குடிக் கடவுளே ஆவார் ஆரியகடவுளான ருத்திரனை திராவிடக் கடவுளரோடு இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது இது ஒரு வரவாற்றுக் கட்டாயமாக இருந்தது.தென் இந்தியாவில் தம் குடியிருப்பை நிறுவிய ஆரியர்கள் முன்பே அங்கிருந்த பூர்வீகக் குடிகளோடு சமரச நோக்கில் போவது தவிர்க்க முடியாதது ஆயின் திராவிடர் தம் மதக்கருத்துக்கள் ஆரிய எண்ணப் போக்குகளுடன் கலந்தன.திராவிடக் கடவுளான சிவ வழிபாடும் வேத ஆரியர் தம் இடி,மின்னல் கடவுளான ருத்திரன் வழிபாடும் கலந்து புதுவழிபாடாகத் தோற்றம் கொண்டது பாதி ஆரிய வழிபாடாகவும் இருந்தது.புதிய சிற்றூர்களைத் தொடர்ந்து சிறு சிறு குழுக்கள் மக்களால் அமைக்கப்பட்டன.

திராவிடச் சமுதாய அப்படை சிற்றூரே:

திராவிடச் சமுதாயத்தின் அடிப்படை அலகு சிற்றூர்தான்.பழைய திராவிடச்சிற்றூரில் திட்டவட்டமான பழங்குடி அமைப்புச் செயல்பாட்டில் இருந்தது.அது ஓரளவோ,பேரளவோ மைய அரசின் பார்வையில் இருந்தது பரம்பரையாகப் பதவிமேற்கொள்ளும் ஊர் மணியக்காரர் முறையான நிலப்பகிர்வைக் கவனித்துக் கொண்டார். பின்வருமாறு நிலப்பகிர்வு சிற்றூர்களில் இருந்தது. ஊர் தலைவருக்கு, புரோகிதருக்கு,கணக்கருக்கு,கைவினைஞர்களுக்கு நிலத்தில் பங்கு இருந்தது.ஊரின் ஒருமைப்பாட்டை ஊர்க்காவல் மரம்,ஊர் தெய்வம்,ஊர் விழா ஆகியன குறியீடுகளாக இருந்து காப்பாற்றி வந்தன.பத்திலிருந்து நூறுவரையுள்ள சிற்றூர்கள் தம்மைப் பாதிக்கும் பொதுச்சிக்கல்களுக்காக ஒன்று கூடியதும் உண்டு.முழுச்சுதந்திரம் பெற்ற ஊர்கள் பல ஒன்று சேர்ந்த ஊர் ஒன்றியங்களும்,எல்லைகளும் முன்பு இருந்தன.

http://Creativecommons.org//license/by/4.0/.

ஆட்சி முறை:

பண்டைக்காலத்தில் வேறுவேறு இனக்குழுக்களும் குடிகளும் இருந்துள்ளன. இவர்கள் ஆண்வழி ஆட்சி செலுத்தும் மரபினர்.இவர்கள் கோட்டைகளையும்,படைகளையும் உடையவராக இருந்தனர். படைவீரர் தம் படைக்கருவிகளாக விவ்,அம்பு,வாள்,வேல் ஆகியவை இருந்தன. படைத்தலைவன் படைக்களத்தை நோக்கிப்போர் முரசு கொட்ட நடையிடுவான். போர்மறவர்கள் த்த்தம் இனக்குழு அடையாளத்திற்கு தக்ககொடிகளை எடுத்துச்செல்வர்.போர் வீரர்கள் நீண்ட முடியை வைத்திருந்தனர் அதன்மீது படையெடுப்பிற்கு தக்க மலர்களை அணிந்து இருந்தனர்.

திருக்குறளில் திராவிடம்:

திராவிடச் சமுதாயத்தின் அறக்கோட்பாடுகளை திருவள்ளுவர் தம் நூலில் நிரல்பட ஒழுங்குபடுத்தித் தருகிறார்.சமுதாயத்தின் நல்லன பற்றியும் சமுதாயத்தில் நல்லவர் ஆற்றும் தொண்டு பற்றியும் திருவள்ளுவர் குறித்துள்ளவை மிக மிக அழகான கட்டமைப்பில் அமைந்துள்ளது.

“கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு

என் ஆற்றும் கொல்லோ உலகு”

நல்லவற்றால் நல்லவர் வாழ்வர் நல்லவரால் சமுதாயம்வாழும். ஒப்புரவறிதல் எனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் வழங்கி இருக்கும் செய்திகள் திராவிட மத்த்திற்கும் ,திராவிடத் தத்துவத்திற்கும் உரியனவாகும் சமுதாயம் அல்லது நாட்டைச்சேர்ந்த நல்லவர்தம் உணர்வாற்றல் சார்ந்த தொண்டுள்ளம் உடைய பண்புகளை இவ்வதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுகிறார்.திருவள்ளுவர் தம் கருத்துப்படி அரசு என்பது

“படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்

உடையான் அரசருள் ஏறு”

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற ஆறையும் கொண்டது ஆகும். ஒரு நாடு சிறந்த உற்பத்தி, சிறந்த அறிஞர், செல்வந்தர் ஆகியோரை உடையதாக இருத்தல் வேண்டும் பசி இல்லாமலும்,பகை இல்லாமலும் நாடு இருத்தல் வேண்டும். பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம் ஆகியன நாட்டின் அணிகலன்கள் ஆகும். நீர், ஆறு, நிலத்தடிநீர், மழைநீர், மலைகள், உயர்ந்த கோட்டைகள் ஆகியன ஒரு நாட்டிற்கு இன்றியமையாதவை. சண்டையிடும் பிரிவுகளாளும், கொலைகாரர்களாலும், சதிகாரர்களும் ஒரு நாடு அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டால் அந்த நாடு உண்மையிலேயே மேலான நாடு என்று ஏற்றுக்கொள்ளலாம். திராவிடர்தம் அரசியல், சமுதாய அமைப்பைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது.போரை பற்றிய செய்திகள்,பொதுமக்கள் பற்றிய சிந்தனைகள்,அரசியல் விவகாரங்கள் இவற்றில் கூறப்படுகின்றன. ஆநிரை கவர்தல் போரின் தொடக்க நிகழ்ச்சியாகும். ஆநிரை மீட்டல் அடுத்த நிகழ்ச்சி, பகை நாட்டின் மேல் படையெடுத்தல், தம்மேல் தொடுக்கப்படும் படையை எதிர்த்தல்,

http://Creativecommons.org//license/by/4.0/.

படையை முற்றுகையிடல், முற்றுகையை எதிர்த்தல், முடிவில் போர் செய்து வெல்லல் ஆகியன ஏழு நிலைகளாக விவரிக்கப்படுகின்றன.முடிவில் வெற்றி வாகைத்திணை என்று அழைக்கப்படுகிறது. போரின் ஒவ்வொரு கட்டத்திலும் போர் நோக்கத்திற்கு தக்க வெட்சி, கரந்தை, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை முதலான பூக்களை மறவர்கள் அணிந்து போரில் ஈடுபடுவர். தம் மறவர்கள் யார் என்று அறிந்து கொள்ள ஒரு வகையான குறியீட்டை இம்மலர் அணிதல் விளக்கிற்று.

முடிவுரை:

திராவிடத் திறமை கடந்த காலத்தில் இருந்தது போல எதிர்காலத்திலும் இருந்து உரிய சமயங்களில் எழுந்து சிக்கல் நிறைந்த பல சமுதாய அரசியல் சிக்கல்களுக்குத் தீர்வுகாணுதல் வேண்டும். முற்றும் பயனான முறையில் பண்டைய திராவிடர்தம் திறமை புத்தெழுச்சி பெற்று நிகழ்காலச் சிக்கல்களுக்கு தீர்வுகாணுவதாக அமைய வேண்டும்.நாட்டின் முன்னேற்றத்திற்கான திறவுகோலாக திராவிடம் செயல்படுகிறது. என்பதை விளக்கும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரையானது அமைந்துள்ளது

மேற்பார்வை நூல்கள்:

1.இந்திய மொழிகளின் வரலாறு-இரத்தினசாமி

2.திரவிடதாய்-ஞா.தேவநேயப்பாவணர்

3.திராவிடப்பொழில்(திராவிடஆய்விதழ்)

4.திராவிட இந்தியா

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

8. திராவிடப் பார்வையில் தமிழர் திருமணம்

பேரா.க.ஜெ.செந்தில்குமார்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி(தன்னாட்சி),விருதுநகர்.
DOI 10.5281/zenodo.13761619.

Abstract

Marriage is a common thing in the world. But there are many differences for each place, religion and race. In our country of India, marriage is still held in the traditional manner only in South India. Dravidian refers to languages like Tamil, Telugu, Kannada and Malayalam. Dravidian refers to the people who speak the above languages. And in this article we will know about Tamil marriage from Dravidian point of view.

முன்னுரை:

உலகில் திருமணம் என்பது பொதுவான ஒன்று தான். ஆனால் ஒவ்வொரு இடத்திற்கும், மதத்திற்கும், இனத்திற்கும் வேறுபாடுகள் அதிகம் காணப்படுகின்றது. நம் இந்திய நாட்டில் தென்னிந்தியாவில் மட்டுமே பாரம்பரிய முறையில் இன்றும் திருமணம் நடைபெறுகின்றது. திராவிடம் என்பது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளைக் குறிக்கின்றது. திராவிடர் என்பது மேற்கண்ட மொழிகளை பேசும் மக்களைக் குறிக்கும். மேலும் திராவிடப் பார்வையில் தமிழர் திருமணம் பற்றி இக்கட்டுரையில் நாம் அறிவோம்.

திராவிடர்:

திராவிடர் எனும் சொல் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழி ஒன்றை மட்டுமே தாய் மொழியாகக் கொண்ட மக்களைக் குறிக்கின்றது. தற்காலத்தில் திராவிடர்கள் அதிகம் வாழும் பகுதி தென்னிந்தியாவில் உள்ள விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள பகுதியாகும். இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் திராவிடர்களின் தாயகங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. அதாவது, மத்திய இந்தியா, வட இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் போன்ற பகுதிகளில் சிறிய அளவில் பாரம்பரியமாக வாழும் திராவிடர்கள் காணப்படுகின்றனர்.

திராவிடம் என்பது தமிழ் மொழியைக் குறிக்கும் சொல்லாகப் பழங்காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் திராவிட வேதம் (தமிழ் வேதம்) என்று அழைக்கப்படுகின்றது. திருவாய் மொழியைத் திராவிட வேத சாகரம் (தமிழ் வேதக்கடல்) என்று நாதமுனிகள் சிறப்பித்துள்ளார். திராவிடம் என்ற சொல் சமஸ்கிருதச் சொல் என்றும் அச்சொல் காலப்போக்கில் தமிழ் என்ற சொல்லாக உருவானது என்று ஆரம்ப காலத்தில் ஆய்வாளர்கள் கருதினர். பெரும்பாலும், அக்கால ஆய்வாளர்கள், சமஸ்கிருதப் பின்னணி உடனேயே திராவிட மொழி ஆராய்ச்சியில் இறங்கியவர்கள் அதனால் இந்த கருதுகோள் அவர்களுக்கு இயல்பான ஒன்றாக இருந்தது. வேறுசில

http://Creativecommons.org//license/by/4.0/.

ஆய்வாளர்கள், முக்கியமாகத் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள், தமிழ் என்ற சொல் மருவியே திராவிட என்னும் சமஸ்கிருதச் சொல் உருவானதாக வாதாடுகின்றனர். இந்த வாதத்தில் ஒத்த கருத்துகள் ஏற்படும் விதமாகச் சரியான சான்றுகள் எதுவும் இன்றும் கிடைக்கவில்லை.

திராவிட மொழிகளில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகள் அனைத்தும் மிகவும் முக்கியமானவை ஆகும். மேற்க்கண்;ட மொழிகள் தவிர இன்னும் பல திராவிட மொழிகள் சிறிதும் பெரிதுமாக தென்னிந்தியாவிலும், அதற்கு வெளியேயும் பேசப்பட்டு வருகின்றன. இவற்றுள் தமிழ் மொழி தவிர்த்து ஏனைய மொழிகள் பெருமளவு வடமொழிச் செல்வாக்குக்கு உட்பட்டு மாற்றம் அடைந்துவிட்டன. தமிழ்மொழி மட்டுமே பெருமளவுக்குத் திராவிடச் சொற்களுடன் பேசப்படும் மொழியாக இன்னும் இருந்து வருகின்றது. இன்றும் திராவிட மொழிக் குடும்பத்தில் சுமார் 85 மொழிகள் வரை இருப்பது அறியப்பட்டுள்ளது என்பதை டாக்டர்.சசிவல்லி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

திருமணம் - சொல்லும் பொருளும் :

திருமணம் என்பது இன்பம் தரும் ஒரு இனிய சொல்லாகும். இச்சொல்லைப் பொதுவாக அனைவரும் செவியில் கேட்டவுடன் ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் உள்ளத்தில் ஒரு விதமான இனிய உணர்வு, பூரிப்பு, புத்துணர்ச்சி, பல இனிய நினைவுகள் மற்றும் புதுக்கனவுகள் போன்றவை ஏற்படாமல் இருப்பதில்லை.

“செந்தமிழ் நாடு எனும் போதினிலே இன்பம்

தேன்வந்து பாயுது காதினிலே…”

என்பார் பாரதியார். அதே போல திருமணம் என்ற சொல்லைக்; கேட்டவுடன் இனிய உணர்வுகள் ஏற்படும்.

திருமணம் ஸ்ரீ திரு + மணம். மணம் என்பதே தமிழரின் பழைய மரபுதான். ஒரு கன்னிப் பெண்ணின் கூந்தலிலே மலர் சூட்டி அவளை ஊரும் உறவும் அறியத் தன் மனதிற்கு இனியாளகவும், வாழ்க்கைத் துணைவியாகவும் ஒருவன் ஏற்றுக் கொள்வதே மணம். திருமணம் என்ற பெயர் அச்சடங்கிற்கு வந்தது.

திருமணம் என்பது ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதற்காகச் சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட விதிமுறையாகும் என்பதை டாக்டர்.க.காந்தி அவர்கள் கூறுகின்றார்.திரு.ஏ.எம்.சலீம் அவர்கள் திருமணம் மனிதனுக்காக மனிதனால் நடத்தப்படும் ஒருவகைச் சடங்கு என்கின்றார்.சமூகத்தில் உள்ள ஒருவகை வழக்குகளில் திருமணமும் ஒன்று. இது சமுகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண், பெண் உறவு நிலையைக் குறிக்கிறது. அதுமட்டுமல்ல திருமணம் ஒரு புதிய சந்ததி தோன்றுவதற்குரிய ஒருவித பிணைப்பு ஆகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

வேறு பெயர்கள் :

இருமணம் இணையும் மணவினையே திருமணம் என்ற சொல்லால் சுட்டப்படுகிறது. இன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் பெரும் பகுதியினர் திருமணத்தைக் கல்யாணம் என்ற சொல்லாலேயே குறிப்பிடுகின்றனர். வடமொழியில் திருமணத்தைக் கலியாணம் என்பர். கல்யாணம் என்பதற்கு மங்களம் என்று பொருள். இச்சொல்லாட்சி தமிழில் இலக்கிய வழக்குப் பெற்றதனைப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் தெரிவிக்கின்றன. இச்சொல்லாட்சி நாலடியாரில் 'கல்யாணம்' என்றும் ஆசாரக்கோவையில் 'கல்யாணம்', கலியாணம் என்றும் பயின்று வந்துள்ளமை கொண்டு இவ்விரு நூல்களின் காலகட்டத்தில் இச்சொல்லாட்சி வழங்கத் தொடங்கிருத்தல் வேண்டும்.

திருமணம் என்ற சொல்லுக்குப் பண்டைத் தமிழர்களால் வழங்கப் பெற்ற வேறு சொற்களான கடி, மணம், மன்றல், வதுவை, வதுவை மணம், வரைவு என்பவையாகும். பொதுவாக இவற்றுள் தொல்காப்பியர் உரிச்சொல்லாக உணர்த்தும் "கடி" என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் கூறுகின்றார். அவற்றுள் நீக்குதல், காப்பு என்ற பொருள்களோடு பிற்காலத்தில் 'மணம்' என்னும் பொருளும் சேர்ந்திருக்கலாம்.

"நாடறி நன்மணம் அயர்க்" (குறிஞ். 232)

"வதுவை அயர விரும்புதி" (ஐங். 61-5)

திருமணப் பொருத்தம் :

திருமணம் பேசுவதற்கு முன்னர் மணமகனுக்கும் மணமகளுக்கும் மணப்பொருத்தம் இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்கின்ற பழக்கத்தை இக்காலத் தமிழரிடையே நாம் காண்கிறோம். நாம் சங்க இலக்கியங்களைப் படிக்கும் போது களவு மணம் சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதை அறிகிறோம். எனினும் அக்களவு இருவரின் பெற்றோரின் சம்மதத்தோடும் திருமண உறவாக, நிறைவான ஒப்புதலோடும் வாழ்த்தோடும் திருமணம் நடைபெற வேண்டும் என்பதே பழந்தமிழரின் முடிவாகும். தலைவனும் தலைவியும் களவில் ஈடுபடுவது மட்டுமே வாழ்வாகும் என்று தமிழர்கள் யாரும் ஏற்றுக் கொண்டதில்லை. இதனைக் கற்பியல் நூற்பாக்களும், திருக்குறளின் இல்லறவியல் **செய்யுட்கள் மூலமும் நாம் நன்கு அறியலாம்.**

பத்துப் பொருத்தங்கள் :

தொல்காப்பியத்தில் இல்லற வாழ்க்கையில் இணையும் தலைவன், தலைவிக்கு இடையே சில பொருத்தங்கள் அவசியம் இருக்க வேண்டும் என்று மிகவும் தெளிவாக கூறப்பட்டுள்ளன. இப்பொருத்தங்கள் சமுதாயத்தின் நன்மையையும், இல்லறம் மேற்கொள்ளும் மணமக்களின் நல்வாழ்க்கையையும் கருதில் கொண்டே,

http://Creativecommons.org//license/by/4.0/.

"பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டோடு

உருவு நிறுத்த காம வாயில்

நிறையே அருளே உணர்வொடு திருஎன

முறையுறக் கிளர்ந்த ஒப்பினது வகையை" **(தொல்.பொருள் : 273)**

பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, உருவம் நிறுத்த காம வாயில், நிறைப்பொருத்தம், அருள், உணர்வு, திருப்பொருத்தம் ஆகிய பத்துப் பொருத்தம் பார்த்து இணையும் தலைவன், தலைவியின் இல்லறம் இனிய நல்லறமாகும் என்று தொல்காப்பியர் வகுத்துக் கூறுகின்றார்.

பொருந்தாத தன்மைகள் பத்து :

"நிலபிரி கொடுமை வியப்பொடு புறமொழி

வன்சொற் பொச்சாப்பு மடிமையொடு குடிமை

இன்புறல் ஏழைமை மறப்போ டொப்புமை

என்றிவை யின்மை என்மனார் புலவர்" **(தொல்.மெய். 270)**

எனும் நூற்பாவில் நிலம்புரி, கொடுமை, வியப்பு, புறமொழி, வன்சொல், பொச்சாப்பு, குடிமை, ஏழைமை, மறதி, ஒப்புமை ஆகிய பத்து நிலைகளிலும் இல்லற வாழ்வில் நுழைய இருப்பவரிடம் இருக்கக் கூடாத தன்மைகள் எனத் தொல்காப்பியம் வரையறுத்துக் கூறியுள்ளது. ஓர் ஆண், பெண் இருவரின் இல்லற வாழ்விற்குத் தொடக்க விழாவாகத் திருமணம் அமைகின்றது. அத்திருமணத்தை ஊரும் உறவும் அறியச் செய்வது என்று வகுத்த காலத்திலேயே அந்த உறவு நீடித்து நிலைப்பதற்கான பொருத்தம் பார்த்தே இருவரையும் இணைக்கும் வழக்கத்தையும் தமிழ்ச் சமுதாயம் வகுத்துவிட்டது.

திருமண காலமும் பொழுதும்:

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பண்டைத் தமிழர்கள் இயற்கைக் கூறுகளின் செயற்பாடுகளைக் கொண்டே தங்களது செயல்களைச் செய்யத் தொடங்கினர். திருமணத்திற்குரிய காலமாகப் பண்டைத் தமிழர் வேங்கை மலரும் இளவேனிற் காலத்தையே கொண்டனர் என்பதை,

"வேங்கை தந்த வெற்பணி நன்னாள்" (நற்றினை - 396)

என்ற பாடலடியால் உணரலாம்.

திருமணம் நடைபெறும் இடம்:

பண்டையத் தமிழர்கள் திருமணத்தை மணமகள் இல்லத்திலேயே நடத்தியதற்கான குறிப்புகள் உள்ளன. மாறாக, ஒரே வழி மணமகன் இல்லத்திலும் நிகழ்வதுண்டு.

http://Creativecommons.org//license/by/4.0/.

உடன்போக்கிற்குப் பின் நடைபெறும் திருமணம் தலைவன் இல்லத்தில் நிகழும். அவ்வாறு நடைபெற்றாலும் பின்னர்த் தலைவியின் பெற்றோர் முறைப்படி திருமணம் செய்து வைப்பார்கள் என்பதை,

"நும்மனைச் சிலம்பு சுழீஇ அயரினும்

எம்மனை வதுவை நன்மணங் கழிகெனச்

சொல்லின் எவனோ மற்றே வென்வேல்

மையற விளங்கிய கழலடிப்

பொய்வல் காளையை யீன்ற தாய்க்கே" **(ஐங்.399)**

திருமணம் என்றால் வீட்டுச்சுவர்களுக்கெல்லாம் செம்மண் பூசி, மனையில் புதுமணல் பரப்பி, மாலைகளைத் தொங்கவிடுவர். மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும் மரபு அன்றிலிருந்து இன்று வரை மாறாமல் இருந்து வருகின்றது. இதற்கான இலக்கியச் சான்றுகளை நம்மால் காணமுடிகிறது. தற்காலத்தில் மணமகள் வீட்டார் திருமணம் நிகழ்த்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, ஏராளமான உற்றாரும் உறவினர்களும் ஒன்று கூடி மகிழும் அந்நாளில் தாராளமான இடவசதிக்காக பொதுவாகக் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபங்களில் திருமணம் நடத்தி வைக்கின்றனர்.

ஒரு சிலர் கோயில் மண்டபத்தில் திருமணம் நடத்துகின்றனர். பெரும்பாலும் நாட்டுப்புற மக்கள், ஏழை மக்கள் இன்றும் கோயில்களையே திருமணம் நடத்தும் இடமாகக் கொண்டுள்ளனர். செல்வந்தர்கள் வீடுகளிலும் வேண்டுதல் காரணமாகக் குறிப்பிட்ட கோயிலில் திருமணம் செய்கின்றனர். இன்றைய நாளில் பதிவுத் திருமணங்கள் திருமணப் பதிவாளர் அலுவலகத்தில் நடைபெறுகின்றது.

சங்க காலத் தமிழர் திருமணம் :

பண்டைய தமிழ் மக்களிடையே அவர்கள் வாழ்க்கையில் இயற்கையாக நிகழ்வதை பழக்கவழக்கங்கள், ஒழுக்கங்கள் எனத் தமிழ் இலக்கியங்கள் பாராட்டிச் சிறப்பித்துள்ளன. அன்பு நெறியில் ஒரு ஆணும் பெண்ணும் கூடி இன்புற்று வாழ்வதைப் பற்றி கூறுவதே அகப்பொருள். அகம், புறம் என்று இருவகையாகப் பிரிக்கும் முறை தமிழ் மொழிக்கே அமைந்த ஒரு தனிச்சிறப்பாகும். நமக்குக் கிடைத்திருக்கும் நூல்களுள் சங்க நூல்கள், சங்கம் மருவிய நூல்கள் என வழங்கப்பெறும் பதினென் கீழ்க்கணக்கு, பதினெண் மேற்கணக்கு ஆகிய முப்பத்தாறு நூல்களும் மிகவும் பழமையானவை.

சங்க இலக்கியங்களில் அகப் பாடல்களின் எண்ணிக்கையே புறப்பாடல்களின் எண்ணிக்கையை விட மிகுந்துள்ளன. இவ்அகப் பொருளானது களவொழுக்கம், கற்பொழுக்கம் என இரு வகையாகப் பிரிக்கலாம். அதன் உட்பிரிவாக முதல், கரு, உரி என்ற மூன்று பிரிவுகளை உடையது. அகத்திணை வழிவகுத்துக் காட்டும் காதல் பாங்கு

http://Creativecommons.org//license/by/4.0/.

ஐந்திணை நெறி எனப்படும். ஐந்திணை நெறி குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற ஐவகை நிலங்களில் நிகழ்வதாகச் சான்றோர் செய்யுள் புனைவது மரபு. சங்க இலக்கியப் பாடல்களின் துணை கொண்டு அக்காலத்திருமண நிகழ்ச்சிக்கான அடிப்படைக் கூறுகள் திருமண வகைகள், அவை நடைபெற்ற முறைகள் ஆகியவற்றைக் குறித்து அறியலாம்.

திருமண வகைகள்:

சங்க காலத் தமிழர் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள். அத்தமிழர்கள் வாழ்ந்த சூழல் நிலைக்கு ஏற்ப அவர்களது திருமண முறைகள் மாறுபாடு அடைந்தன. பல வகையான திருமணங்கள் நடைபெற்றதைச் சங்கப் பாடல்களைக் கொண்டு அறியலாம். பொதுவாக களவு மணம், கற்பு மணம் என்ற இரு பிரிவுகளாக மணமுறைகள் இருந்தாலும், சங்க காலத்தில் பத்து வகையான திருமண முறைகள் இருந்தன. அவை,

1. களவு மணம்
2. தொன்றியல் மரபின் மணத்தல்
3. பரிசங் கொடுத்து மணத்தல்
4. சேவை மணம்
5. திணைக் கலப்பு மணம்
6. ஏறுதழுவி மணமுடித்தல்
7. மடலேறி மணமுடித்தல்
8. போர் நிகழ்த்தி மணமுடித்தல்
9. துணங்கையாடி மணத்தல்
10. பலதார மணம்

1.களவு மணம்:

ஐவகைத் திணைகளுள் குறிஞ்சியே புணர்ச்சிக்குரிய நிலமாகும். குறிஞ்சி இயற்கை வளம் செறிந்துள்ளது. இன்பத்தைத் தரவல்லது. இயற்கைச் சூழல் மிகுந்த குறிஞ்சி நிலத்தில் ஒத்த தலைவனும், தலைவியும் முதலில் சந்திக்கின்றனர். ஒருவரை ஒருவர் முன்பின் அறியாத நிலையில் இருவரும் அன்பு கொள்கின்றனர். பின்பு தலைவனும் தலைவியும் காணுதல் தொடங்கி மணம் முடித்து இல்லறம் மேற்கொள்ளும் வரை நிகழும் செயல்களை எல்லாம் நாம் களவொழுக்கத்தில் அறியலாம்.

தலைவனும் தலைவியும் அடுத்தடுத்துச் சந்தித்துக் கொள்கின்றனர் எனினும் என்று பிரிய நேரிடுமோ என்று தலைவி அஞ்சுகின்றாள். தலைவன் அவளது உள்ளத்தை அறிந்து கொண்டு மனதைத் தேற்றுகின்றான் என்பதை,

“யாயும் ஞாயும் யாராகியரோ,
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்...” (குறுந்தொகை, 40)

http://Creativecommons.org//license/by/4.0/.

என்னுடைய முதல் பார்வையிலேயே நம் இரு நெஞ்சங்களும் செம்மண் நிலத்தில் மழைநீர் கலப்பது போலக் கலந்துவிட்டன. ஆனால் உன்னைச் சந்திக்கும் முன்னர் உன் தாயும் என் தாயும் உறவினர்கள் இல்லை. என் தந்தைக்கும் உன் தந்தைக்கும் என்ன உறவு இருந்தது. ஆனால் நானும் நீயும் களவின் காரணத்தினால் சந்தித்துக் கொண்டோம் என்று தலைவன் கூறுவதை மேற்க்கண்ட பாடலின் வாயிலாக அறியலாம்.

மேலும், தலைவியுடன் களவில் இருந்த தலைவன் அவளை மணந்து கொள்வதில் இருமுறைகள் உள்ளன. அவை,

1.களவு வெளிப்படுவதற்கு முன் வரைதல்

2. களவு வெளிப்பட்ட பின் வரைதல்

என இரண்டு விதமாகப் பிரிக்கலாம்.

சிலம்பு கழி நோன்பு:

சங்க காலத்தில் பெண் குழந்தைகளுக்கு குழந்தைப் பருவத்தில் கால்களில் சிலம்பு அணிவிப்பார்கள். இப்பெண் குழந்தை வளர்ந்து கன்னிப் பருவம் அடையும் வரை கால்களில் சிலம்பு அணியும் வழக்கம் இருக்கும். இக்குழந்தை காற்சிலம்பு ஒலிக்க சிறுதோழியருடன் விளையாடுவதைக் கண்ட பெற்றோர் மனம் மகிழ்ச்சி அடைவார்கள். இக்குழந்தை வளர்ந்து இளம் பருவத்தை அடைந்ததும் தன் உள்ளம் கவர்ந்த தலைவனோடு கூடிப் பழகுவதற்கு இக்காற்சிலம்பின் சத்தம் இடையூறாக இருக்கும். இரவுக் குறியில் தலைவனும் தலைவியும் சந்திக்கின்றனர். தனது நடமாட்டத்தைத் தன்வீட்டார் தன் சிலம்பின் ஒலியால் அறிந்து விடக்கூடாது என்று அச்சிலம்பை பெற்றோருக்குக் கேட்காதவாரு தலைவி மென்மையாக நடந்து செல்கின்றாள் என்பதை,

“அஞ்சிலம்பு ஒடுக்கி அஞ்சினாள் வந்து
துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோள்” **(அகநானூறு - 198)**

என்ற பாடலடியின் மூலம் அறியலாம்.

மலரணியும் உரிமை :

சங்க காலத்தில் மலரணியும் உரிமையைத் திருமணம் நடைபெற்ற நாளிலிருந்து பெறுகின்றனர். திருமணம் ஆனதற்க்கான அடையாளமாக பெண்கள் மலர் சூடுவதை பழக்கமாகக் கொண்டுள்ளனர் என்பதை,

“எரிமருள் வேங்கை இருந்து தோகை

இழையணி மடந்தையின் தோன்றும் நாட

.....

பின்னிருங் கூந்தல் மலரணிந் தோயே..” **(ஐங். 294)**

http://Creativecommons.org//license/by/4.0/.

அதாவது தலைவன் தலைவியைத் திருமணம் செய்யும் பொழுது திருமணச் சடங்கில் ஒன்றாகி தலைவியின் கூந்தலிலே மலர் சூடுதலைக் கண்ட தோழி எல்லையற்ற மகிழ்ச்சியுடையவளாய்த் தலைவனைப் பாராட்டுகின்றாள்.

பெண்கள் கன்னிப் பருவத்தில் மலர் அணிதல் சமுதாய விலக்கன்று; எனினும் பெண்கள் மலர் அணியும் வழக்கம் ஒரு மங்கலச் சின்னமாகத் திருமண நாள் தொடங்கி மேற்கொள்ளப்பட்டது.

கற்பு மணம் :

சங்க இலக்கியம் அகத்துறையில் தலைவியும் தலைவனும் கொள்ளும் உறவைக் களவு, கற்பு என இருவகை அறங்களாக வகுக்கிறது. களவு என்பது தலைவனும் தலைவியும் தங்கள் உள்ளத்தால் இணைந்து சுற்றம் பற்றியோ நெறிகள் பற்றியோ கவலை கொள்ளாமல் உறவு கொள்வது ஆகும். கற்பு என்பது முன்னோர்கள் வகுத்த நெறிப்படி சுற்றத்தார் மற்றும் பெற்றோரின் ஏற்புடன் திருமணம் செய்து கொண்டு வாழ்வது ஆகும்.

திருமண முறைமைகளைக் கடைப்பிடித்துத் தலைவன் பெண் கொடுப்பதற்குரிய மரபைச் சேர்ந்தவர்கள் மணம் செய்து கொடுக்கத் தலைவியைக் கொள்வது கற்பு எனப்படும்.

இந்த கற்பு நெறி என்பது பெண்களுக்கு மரபு வகுத்தளித்தமையால் தெய்வத் தன்மை கொண்டது என்று சான்றோர்கள் வழி இச்சமூகம் கருதியது. ஆண்களின் தவறுகளைப் பொறுத்துக் கொண்டு, இன்முகம் காட்டி எந்நிலையிலும் இல்லறத்தை பேணிக் கொள்ளுதலே கற்பின் இயல்பு என்பதை,

“குன்று கெழு நாடன்
வருவதோர் காலை யின்முகந் திரியாது
கடவுட் கற்பி னவனெதிர் பேணி”

(குறுந்.252, கிடங்கிற்குலபதி நக்கண்ணனார்)

என்ற குறுந்தொகைப் பாடலின் மூலம் அறியலாம்.

திருமண முறைகள்:

சங்க இலக்கியங்களை ஆழ்ந்து படிக்கும் போது பண்டைய நாளில் தமிழர்கள் மேற்க்கொண்ட திருமண முறைகளை நன்கு உணரமுடியும். சங்கப் பாடல்களின் துணை கொண்டு பழந்தமிழர்களின் திருமண விழா நடத்திய முறைகளை அறிவோம்.

1. மணமக்களின் இல்லத்தில் செம்மண் பூசி, புதுமணல் பரப்பி, மாலைகள் தொடங்கவிடப்பட்டு அலங்காரம் செய்யப்படும்.
2. திருமணம் நடைபெறும் வீட்டில் சங்கொலி, பறையொலி முழங்கும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

3. திருமணத்திற்கு முன் தலைவிக்குச் சிலம்புகழி நோன்பு நடைபெறும்.
4. திருமணத்தில் முதல் நிகழ்ச்சியாக விருந்து அளிக்கப்படும்.
5. மணப்பந்தலில் புதுமணல் பரப்பப்பட்டு விளக்குகள் ஏற்றப்படும்.
6. இறை வழிபாடு செய்யப்படும்.
7. புள் நிமித்தம் பார்க்கப்படும்.
8. இளங்காலை நேரத்தில் திங்கள் ரோகிணியுடன் சேரும் நல்ல ஓரையில் திருமண விழா நடைபெறும்.
9. திருமண முழவும், பெரிய முரசும் முழங்கும்.
10. மங்கலப் பெண்டிர் குடங்களில் நீரேந்தி வருவர்.
11. அந்நீர்க் குடங்களில் நெல்லும், மலரும் தூவி மக்கள் ஈன்ற மங்கல மகளிர் நான்கு பேர் மணமக்களை வாழ்த்தி மண நீராட்டுவர்.
12. காப்பு நூலைக் கட்டுவர்.
13. புத்தாடை அணிவிப்பர்.
14. இழை அணிவிப்பர்.
15. பெற்றோர் மணமகளைத் தலைவனுக்கு தாரை வார்த்துக் கொடுப்பர் என இச்சடங்குகள் நடைபெறும்.

2. மரபு வழி மணம்:

மரபு வழி மணத்தை பலரறி மணம் என்றும் இயல்பு மணம் என்றும் கூறுகின்றனர். பெண்ணின் பெற்றோர் மணமகனிடம் "யான் கொடுப்ப நீ மணந்து கொள்" என்று வேண்டி மணமுடிப்பது மரபு வழி மணம் ஆகும். இம்மணமே சமூகத்தில் பெரு வழக்கமாக இருந்தது.

3. பரிசங் கொடுத்து மணத்தல்:

அணிகலன், பணம், நிலம் போன்ற சொத்துக்களாக வழங்கப்பெறும் மணமகளின் பெற்றோர் கேட்கும் பரிசத் தொகையினை மணமகன் கொடுத்து அவர்கள் ஒப்புதல் பெற்று மணந்தமைக்குச் சான்றாக,

"உறுமென கொள்ளுநர் அல்லர் நறுநுதல்
ஆரிவை பாசிலை விலையே…"

என்ற பாடற்குறிப்பு இதனை உணர்த்துகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

சில சமயங்களில் ஏதேனும் காரணம் குறித்து மணமகன் தரும் பரிசத்தை மணமகளின் பெற்றோர் ஏற்காமல் மகளைக் கொடுக்கவும் மறுப்பர். தற்காலத்தில் பரிசம் கொடுத்து மகளை மணத்தல் சில சமூகத்தாரிடம் காணப்படுகிறது. மேலும் இம்முறை வழக்கத்தில் இருந்து மாறி மணமகளிடம் பொருள் பெற்று மணத்தல் என்பது இன்று நடைமுறையில் உள்ளது.

4. சேவை மணம்:

தலைவியைத் திருமணம் முடிக்கக் கொடுக்கப்படும் பரிசம் அணிகலன்களாகவோ அல்லது பொருள்களாகவோ தான் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. சில சமயம் தலைவன் தலைவியின் தந்தையிடம் பணி செய்து தலைவியைத் திருமணம் முடித்தலும் உண்டு. தலைவன் தான் விரும்பிய தலைவி ஒருத்தியை எவ்வாறேனும் திருமணம் செய்து கொள்ள விழைகின்றான்.

“..... ..... ஆய்தொடிக் குறுமகள்

நலஞ்சால் விழுப்பொருள் கலநிறை கொடுப்பினும்

பெறலருங் குரைய ளாயின் அறந்நெரிந்து

நாமுறை தேஎம் மரூஉப் பெயர்ந்.....” **(அகநானூறு - 280 : 4-6)**

இப்பாடல் வழி தலைவன் தம்முடைய இடத்தில் இருப்பதைத் தவிர்த்து தலைவியின் தந்தையாகிய பரதவனோடு பெரிய நீர்ப்பரப்பாகிய கடற்கரையில் உப்பு விளைவிக்க அவனோடு உதவி செய்தும்; அவனோடு கடலில் தோணியில் சென்றும், மீன் வேட்டம் ஆடி மீனைப் பிடித்தும் அப்பரதவனுக்கு இரக்கம் வரும் படி வணங்கியும் அவனையே அடிபணிந்து வாழ்ந்தும் இருப்பானேயானால் அறந்தினை நினைத்துப் பார்த்து தன் மகளை வழங்குவான் என்று எண்ணுவதை இப்பாடல் உணர்த்துகின்றது.

5. திணைக் கலப்பு மணம்:

சங்க கால குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்நில மக்களுக்குள் கலப்பு மணம் நடைபெற்றுள்ளன என்பதை புலப்படுத்தும் விதமாக சங்க பாடல்,

“பெருங் கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்

இருங் கழிச் செறுவின் உழாஅது செய்த

வெண்கல் உப்பின் கொள்ள சாற்றி,

என்றூழ் விடர குன்றம் போகும்

கதழ் கோல் உமணர் காதல் மடமகள்” **(அகநானூறு - 140)**

நெய்தலும் மருதமும் ஒன்றை ஒன்று அடுத்திருக்கும் நிலங்கள் நெய்தல் நிலத்தில் உப்பு விளைவிக்கப்படுகிறது. இவ்வுப்பினை வண்டிகளில் ஏற்றிக் கொண்டு மற்ற

http://Creativecommons.org//license/by/4.0/.

நிலங்களுக்குச் சென்று உப்பு விற்கும் உப்பு வணிகர்கள் தம்முடன் குடும்பத்தையும் அழைத்து செல்வார்கள். அப்போது உப்பு வணிகரின் இளம் பெண் பக்கத்து ஊருக்குள் சென்று உப்பு விற்பாள். அவளை மருதத் தலைவன் ஒருவன் கண்டு காதல் கொள்கிறான்.

இவ்வாறு நிலம் விட்டு நிலம் வாழும் மக்களிடையே ஏற்பட்ட காதல் பற்றி அகநானூற்றுப் பாடல்களில் காணலாம்.பிற சங்க பாடல்களிலும் இக்காதல் உணர்வு காணமுடிகிறது. அந்நாளில் திணைக் கலப்பு காதலும் மணமும் இருந்திருக்க வேண்டும் என்று அறியலாம்.

6. ஏறுதழுவி மணமுடித்தல்:

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்படும். இந்நிலத்தில் ஆநிரைகள் மிகுதியாக இருந்தன. இந்நிலமக்கள் இடையர், ஆயர் எனப்பட்டனர். இவர்களுக்கு உரிய தொழில்கள் ஏறுதழுவுதல், குரவைக் கூத்தாடுதல், ஆநிரைகளை மேய்த்தல் முதலியன.

சங்க நூல்களுள் ஒன்றான கலித்தொகையின் முல்லைக்கலியில்அந்நில மக்களின் வீர விளையாட்டு கூறப்படுகிறது. அவர்களது வீர விளையாட்டு 'ஏறுதழுவல்' ஆகும். ஏறுதழுவல் என்பதை ஜல்லிக்கட்டு, காளை விரட்டு, மஞ்சு விரட்டு என்றும் சொல்வார்கள்.

"அல்வழி முள்எயிற்று ஏஎர் இவளைப் பெறும் இதோர்
வேள்ஏற்று எருத்து அடங்குவான்
ஒள்ளிழை லாடுறு கூந்தல் துயில் பெறும் வைமருப்பிற்
காரிகதன் அஞ்சான் கொள்பவன் ஈரரி....." **(கலித். 104)**

முல்லை நிலத்திலே வாழ்ந்த செல்வப் பெருங்குடி மக்கள் தங்கள் மந்தையிலே உள்ள காளைக் கன்று ஒன்றைத் தனியே பிரித்து செல்வமாக வளர்க்கத் தொடங்குவார்கள். அப்பெண்குழந்தை வீட்டில் அருமையாக வளர்வாள். மந்தையிலே காளை செல்வமாக வளரும். மங்கைக்கு பருவம் வரும். காளைக்கும் பருவம் வரும். இந்தக் காளையை அடக்கி வெற்றி கொண்டவன் எவனோ அவனுக்கு இவளை மணம் செய்து கொடுப்பேன் என்று அப்பெண்ணின் தந்தை பறையறைந்து செய்தி தெரிவிப்பான். அச்செய்தியைக் கேட்டு பெண்ணின் காதலுனும் முன் வருவான். காளையைத் தழுவி அடக்கி வெற்றி கொள்வான். காதலியைப் பரிசாகப் பெற்று மணமுடிப்பான். இத்திருமண முறையை முல்லை நிலத்தில் காணலாம்.

7. மடலேறி மணமுடித்தல்:

மடல் ஊர்ந்து (மடலூர்தல்) என்பது சங்க கால வழக்கங்களில் ஒன்று. தலைவனும் தலைவியும் விரும்பி, பெற்றோர் பெண்ணைத் தர மறுக்கும் போது நிகழ்வதே மடலேறுதல் என்று கூறுவர். தலைவன் தான் விரும்பிய தலைவியை அடைவதற்காக மடலேறும் வழக்கம் இருந்தது என்பதை,

http://Creativecommons.org//license/by/4.0/.

"அணி அலங்கு ஆவிரைப் பூவோடு எருக்கி

பிணையல் அம் கண்ணி மிலைந்து, மணி ஆர்ப்ப,

ஓங்கு இரும் பெண்ணை மடல் ஊர்ந்து, என் எவ்வ நோய்

தாங்குதல் தேற்றா இடும்பைக்கு உயிர்ப்பாக..." **(கலித். 139)**

காதலில் தோல்வியுற்றத் தலைவன் ஊரார் தன் காதலை உணரும் பொருட்டு மேனியில் சாம்பலைப் பூசிக் கொண்டு யாரும் சூடாத எருக்கு போன்ற மலர்களைச் சூடிக் கொண்டு பனைமரத்தின் அகன்ற மடல்களால் செய்யப்பட்ட குதிரை ஒன்றில் ஊர்ந்து காண்போர் கேட்கும் வண்ணம் தலைவியின் பெயரைக் கூவிக் கொண்டு செல்வான். இது இழிவான ஒன்றாக கருதப்படுகின்றது. எனவே, தன்னைச் சந்திக்க மறுக்கும் தலைவியிடம் தோழி மூலம் நான் மடலேறி விடுவேன் என்ற காமம் மிகுந்த தலைவன் சொல்வது உண்டு. காமம் மிகுந்த ஆடவர்க்கு மட்டுமே மடலேறுதல் உண்டு. பெண்கள் மடலேறியதாய் சங்கப்பாடல்கள் இல்லை.

தன்னை விரும்பாத பெண்ணுக்காக மடலூர்வேன் என்று தலைவன் சொன்னால் அது கைக்கிளை ஒழுக்கம் ஆகும். மடலூர்ந்து வந்து ஒருத்தியைப் பெறுவது பெருந்திணை ஒழுக்கம் ஆகும். தலைவனும் தலைவியும் விரும்பி,பெற்றோர் பெண்ணைத் தர மறுக்கும் போது நிகழ்வதேயே மடலேறுதல் என்று கூறுவர்.

8. போர் நிகழ்த்தி மணத்தல்:

ஒருவன் தான் திருமணம் செய்ய விரும்பும் பெண்ணைப் பெறுதல் அரிது என்ற நிலை உருவாகும் போது போரிட்டு வெற்றி பெற்றுத் தான் விரும்பிய பெண்ணை மணந்து கொள்ளுதல் என்ற வழக்கம் பண்டைத் தமிழர் வாழ்வில் இடம் பெறுகின்றன என்பதை,

"சரி களம்தொறும் தங்கள் சயமகள்

தன்னை மன் அயன் கைப்பிடித்தல்

பரிகளும் களிறும் தன ராசியும்

பாரிபோகம் கொடுத்தனர், பார்த்திபா" **(க.பரணி.256)**

கலிங்த்துப்பரணியில் குலோத்துங்க மன்னன் போர்க்களம் சென்றான். பகையரசனின் படைகள் அஞ்சி பின்வாங்கி ஒடிச் சென்றனர். இவ்வாறு தோற்றோடிய பகையரசர்களின் வெற்றி மகளைக் குலோத்துங்க மன்னன் கடிமணம் (கண்டதும் காதல்) செய்து கொண்டான். இதைக் கண்ட தோல்வியுற்ற அரசர்கள் தங்களுடைய குதிரைகள், ஆண் யானைகள், பொருட் குவியல்கள் ஆகியவற்றைக் குலோத்துங்க மன்னனுக்குச் சீதனப் பொருட்களாகக் கொடுத்தனர். இது எண்வகை மணங்களில் ஒன்றான இராக்கதம் என்பதை சார்ந்தது ஆகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

9.துணங்கையாடி மணம்:

மகளிர் விளையாட்டில் துணங்கையாடுதல் என்பதும் ஒன்று. விழாக்காலங்களில் துணங்கைக் கூத்தும் மன்னர்க்கான போரும் ஒருங்கே நிகழும். துணங்கைக் கூத்துக்குரிய நாள் நிச்சியக்கப்பட்டு, அந்நாளில் ஆண், பெண் இருபாலரும் தனித்தனியே துணங்கையும், மன்னர் போரும் நிகழ்த்திய செய்தியை,

"வணங்கிறைப் பணைத்தோ ளெல்வளை மகளிர்

துணங்கை நாளும் வந்தன்அவ்வரைக்

கண்பெரை மற்றதன் கண்ணவர்

மணங்கொளத் கிருவம் மள்ளர் போரே"(குறுந்தொகை - 364)

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

10. பலதார மணம்:

ஓர் ஆண் பல பெண்களை மணக்கும் முறை பொதுவாக பழந்தமிழர் வாழ்வில் காணமுடிகிறது. சங்க இலக்கியத்தில் காமக்கிழத்தி, பொருள்வயின் கிழத்தி, இல்லக்கிழத்தி என்று பல மனைவியரைக் கொண்டமையை நோக்கும் போது மக்கட்பேறு மட்டும் கருதி மட்டுமே இப்பலதார மணம் நிகழ்த்தப் பெறவில்லை என்பதை அறியலாம்.

திருமணத்தில் தாலி கட்டும் முறை:

சங்க இலக்கியத்தில் கணவனை இழந்த மனைவி அல்லது மனைவியர்கள் 'இழை களைந்தனர்','தொடி களைந்தனர்','தொடி தகர்த்தாள்' என்ற குறிப்புகள் இருக்கின்றன. ஆனால் 'தாலி களைந்தனர்' என்று குறிப்பிடப்படவில்லை.

மேலும், தாலி என்ற சொல் இடம் பெற்றிருந்தாலும் தலைவிக்கு மணநாள் அன்று அணிவிக்கப்பெறும் "மங்கல நாண்" என்ற பொருளில் குறிப்பிடப்படவில்லை. தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன், சேர, சோழரையும் இவர்களுக்கு துணையாக வந்த வேளிர் ஐவரையும் தனியனாய் வென்று மீண்ட போது இடைக் குன்றூர்க் கிழார் பாடிய புறநானூற்றுப் பாடலில் "தாலி களைந்தன்றும் இவனே" (புறம் - 77) என்னும் அடி இடம் பெற்றுள்ளது. இத்தாலியை வீரத்திற்கு அடையாளமாக அணிந்த அணி என்று கூறலாம்.கண்ணேறு தாக்காமல் இருக்கக் கட்டப்பட்ட "காப்பணி" என்றும் பொருள் கூறலாம். மேலும், குழந்தைகளுக்குச் சூட்டப் பெறும் ஒரு வகை அணிகலனாகவும் கூறலாம் இக்கூற்றை மெய்ப்பிக்கும் விதமாக,

"பொன்னுடைத் தாலி எம்மகன்" - (அகம். 54)

"புலிப்பல் தாலிப் புன்தலைச் சிறாஅர்"- (புறம். 374)

http://Creativecommons.org//license/by/4.0/.

மேற்கண்ட இப்பாடல் வரியில் வீரன் ஒருவன் தான் கொன்ற புலியின் பற்களைக் கழுத்து மாலையில் கோர்த்து அணியும் நகை தாலி வடிவில் அமைந்திருக்கும். இதனை,

“புலிப்பல் கோர்த்த புலம்பு மணித்தால்” (அகம். 7)

“வரிவெண் தாலி வகை செத்து வெரூஉம்” (ஐங். 166)

என்ற பாடல் வரியின் மூலம் அறியலாம்.

தொல் பழங்குடியினர் தன் பிள்ளைகளை தீயவை அணுகாமல் காப்பதற்குப் பிள்ளைகளின் இடுப்பில் அரைஞாண் கயிற்றில் சில பொருள்களைக் கட்டும் பழக்கம் இருந்தது. அந்தப் பழக்கம் இன்று வரை நீடிக்கின்றது. சங்கு, சக்கரம், வில், வாள்,தண்டம்இவ்வைந்து பொருட்;களின் வடிவத்தில் பிள்ளைகளின் அரைஞாண் கயிற்றில் கட்டுவதை சங்க இலக்கியங்கள் ‘ஐம்படைத் தாலி’ என்று குறிப்பிடுகின்றன. மேலும் இன்றைய கால கட்டத்தில் திருமணத்தில் கட்டப்படும் தாலி ஒவ்வொரு சமுதாயத்திற்கும் வேறுபட்ட முறையில் இருப்பதைக் காணலாம்.

முடிவுரை:

திருமண உறவை உறவினர்களும், சுற்றத்தார்களும் ‘ஆயிரங் காலத்துப் பயிர்’ என்று கூறுகின்றனர். திருமண நிகழ்வானது சங்க காலத்தில் இருந்து இன்று வரை சடங்குகளை மரபாகக் கொண்டு தமிழர்கள் பின்பற்றுகின்றனர். அவற்றுள் திருமணப் பொருத்தங்கள் பத்து, பொருந்தாத தன்மைகள் பத்து, திருமணம் நடைபெறும் காலம், பொழுது, இடம், தமிழர்களின் பத்து வகையான திருமண முறைகள், சடங்குகள் மற்றும் திருமணத்தில் தாலி கட்டும் முறைகள் பற்றிய பல செய்திகளை இக்கட்டுரை நமக்கு உணர்த்துகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

9. திராவிட மொழிக்குடும்பம்

முனைவர்.அ. .ஸ்ரீதேவி,
துறைத்தலைவர் தமிழ்த்துறை,
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.105
DOI 10.5281/zenodo.13761629.

Abstract:

Literary languages include Tamil, Kannada, Malayalam and Tulu, as well as several other literary languages such as Paduka, Irula Kothar, Kurumba, Toda and Kodagu. 47 languages of the world language family fall into these divisions. South Dravidian languages are mostly spoken in India.

முன்னுரை:

திராவிட மொழிக்குடும்பம், அதன் முக்கிய உறுப்பினர்களில் ஒன்றாகth தமிழ் உள்ளது. இந்தக் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு மொழிக்கும் அதன் சொந்த தனித்தன்மைகள் மற்றும் தனித்துவமான இலக்கணங்கள் உள்ளன. மூலச்சொல்லுடன் பின்னொட்டுச் சேர்த்துச் சொற்கள் உருவாகும் தன்மை தமிழின் தனித்தன்மைகளில் ஒன்று .தென்னாசியாவில் பேசப்படும் 86 மொழிகளை உள்ளடக்கிய ஒரு மொழிக் குடும்பமாகும். தென்னிந்திய மொழிகள் பற்றி ஆராய்ந்து, 'திராவிட அல்லது தென்னிந்திய மொழிக்குடும்பத்தின் ஓர் ஒப்பிலக்கணம்' என்ற நூலை 1856-இல் எழுதிய இராபர்ட்டு கால்டுவெல், இந்த நான்கு மொழிகளுடன், தென்னிந்தியாவிலிருந்த வேறு சில மொழிகளையும் சேர்த்து, அவற்றைச் சுட்டுவதற்காகத் 'திராவிட' என்ற சொல்லை உருவாக்கினார்.

தென்திராவிடப்பிரிவில் 34 மொழிகளும், தென்-நடுத்திராவிடப் பிரிவில் 21 மொழிகளும், நடுத்திராவிடப்பிரிவில் 5 மொழிகளும், வடதிராவிடப்பிரிவில் 5 மொழிகளும், வகைப்படுத்தப்படாதவையாக 8 மொழிகளுமாக மொத்தம் 73 மொழிகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றுள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கும் திராவிடப் பெருமொழிகளாகும். தமிழையும் அதன் கிளைமொழிகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய தென்னிந்திய மொழிகளையும் ஒரு காலத்தில் தமிளியன் அல்லது தமுலிக் என்று வழங்கினர்.

உலகில் பல்வேறு மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. அவற்றுள் தனக்கெனத் தனிச்சிறப்பும் பல மொழிகள் தோன்றி வளர அடிப்படையாகவும் உள்ள மொழியை மூலமொழி. அதிலிருந்து தோன்றி வளர்ந்த மொழிகள் கிளைமொழிகள் அவற்றின் பொதுத்தன்மையின் அடிப்படையில் அவற்றை ஒரே மொழிக்குடும்பத்தில் அடக்குவர் மொழியியல் அறிஞர்கள்.

http://Creativecommons.org//license/by/4.0/.

தென்திராவிட மொழிகள்:

தமிழ், கன்னடம், மலையாளம் மற்றும் துளு ஆகிய இலக்கிய மொழிகளும், படுகா, இருளா கோத்தர், குறும்பா, தோடா மற்றும் குடகு போன்ற பல இலக்கிய மற்ற மொழிகளும் அடங்கும். உலக மொழிக்குடும்பத்தில் 47 மொழிகள் இந்த உட்பிரிவுகளில் உள்ளன. தென்திராவிட மொழிகள் பெரும்பாலும் இந்தியாவில் தான் அதிகமாகப் பேசப்படுகின்றது.

நடுத்திராவிட மொழிகள்

தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூலி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயக்கி, பெங்கோ, ஜதபு

வட திராவிட மொழிகள்

கூர்க், மால்தோ, பிராகுய்.

ஒன்று முதல் பத்து வரையான எண்கள் பல்வேறு திராவிட மொழிகளில் கொடுக்கப் பட்டுள்ளன.

எண்	தமிழ்	தெலுங்கு	கன்னடம்	துளு	மலையாளம்	குறுக்	கோலமி	பிராகுயி	மூலத் திராவிடம்
1	ஒன்று	ஒக்கட்டி	ஒந்து	onji	onnu ஒந்நு	oṇṭa	okkod	asiṭ	*oru(1)
2	இரண்டு	ரெண்டு	எரடு	raṇdu	randu ரண்டு	indiŋ	irāṭ	irāṭ	*iru(2)
3	மூன்று	மூடு	மூரு	mūji	mūnnu மூந்நு	mūnd	mūndiŋ	musiṭ	*muC
4	நான்கு	நாலுகு	நாலக்கு	nālu	nālu நாலு	nākh	nāliŋ	čār (II)	*nāl
5	ஐந்து	ஐது	ஐது	ainu	añcu அண்சு	pancē (II)	ayd(3)	panč (II)	*cayN
6	ஆறு	ஆறு	ஆறு	āji	āru ஆறு	soyyē (II)	ār(3)	šaš (II)	*caru
7	ஏழு	ஏடு	ēlu	ēlu	ēzhu ஏழு	sattē (II)	ēḍ(3)	haft (II)	*eẓu
8	எட்டு	எணிமிதி	எண்ட்டு	ēṇma	eṭṭu எட்டு	aṭṭhē (II)	enumadī (3)	hašt (II)	*eṭṭu
9	ஒன்பது	தொம்மிதி	ஒம்பத்து	ormba	onbatu ஒம்பது	naiṃyē (II)	tomdī (3)	nōh (II)	*toḷ
10	பத்து	பதி	கத்து	pattu	pathu பத்து	dassē (II)	padī (3)	dah (II)	*pat(tu)

திராவிடமும் தமிழும்

தமிழ் என்னும் சொல்லிலிருந்து உருவானதே திராவிடம் என்னும் சொல்லாகும். மற்ற திராவிட மொழிகளை விட தமிழே பழமையானது என்பதாலும் மற்ற திராவிட மொழிகளின் பல்வேறு அம்சங்கள் தமிழிலேயே காணப்படுவதாலும், தமிழை உயர்தனிச் செம்மொழியாகவும் உலகின் மொழியியல் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

http://Creativecommons.org//license/by/4.0/.

தொல்காப்பியமும் இலக்கணமும்

திராவிட மொழிகள் அனைத்திற்கும் மூலமான மொழியை முன்னைத் திராவிட மொழி மூல திராவிட மொழி. தொன்மை திராவிட மொழி என்று பல்வேறு சொற்களால் குறிப்பிடுவர். மூல மொழியை தமிழ் மொழி என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. தமிழில் நமக்கு கிடைத்த தொன்மையான நூல் தொல்காப்பியம். இது ஒரு இலக்கண நூலாகும். இதற்கு முன்பே நூல்கள் கட்டாயம் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் இலக்கியம் தோன்றிய பின் தான் இலக்கணம் தோன்றியிருக்க வேண்டும். இதுவே அறிவியல் உண்மையாகும். இதுவே சரியான எடுத்துக்காட்டு தமிழை உயர்தனி செம்மொழியாக உறுதிப்படுத்துவதற்குஇ திராவிடம் என்னும் சொல்லை முதல் முதலில் உருவாக்கியவர் குமரில பட்டர் என்பவர் அவர்.

முடிவுரை:

மொழி என்பது ஒருவர் எண்ணங்களையும் கருத்துக்களையும் மற்றொருவர் அறிவதற்கு உதவும் கருவியாகும் ஆனால் இக்கருத்தில் வேறுபாடு உள்ளவர்களும் உள்ளனர் கருவி என்ற எல்லையைத் தாண்டி மொழி பல்வேறு தளங்கலில் பயன்படுவதைக் காண வேண்டும் என்று வேறுபடும் கருத்துடையவர்களும் உள்ளார்கள். 1816-ஆம் ஆண்டில், இந்தியக் குடிமைப்பணியைச் சேர்ந்த ஆங்கிலேயர் பிரான்சிஸ் வைட் எல்லிஸ் (அப்போது கிழக்கிந்தியக் கம்பெனியின் ஒரு பிரிவு) திராவிடக் குடும்பம் என்ற கருத்தை அறிமுகப்படுத்தினார். அவரது தெலுங்கு மொழியின் ஆய்வுக்கட்டுரையானது பிரிட்டிஷ் மொழியியலாளர் ஏ.டி. காம்ப்பெல்லின் தெலுங்கு மொழியின் இலக்கணத்தின் "அறிமுகத்திற்கான குறிப்பு" என்ற பெயரில் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு மற்றும் மால்டோ ஆகியவை "தென்னிந்தியாவின் பேச்சுவழக்குகள் என்று பொருத்தமாக அழைக்கப்படும் மொழிகளின் குடும்பத்தின்" உறுப்பினர்கள் என்ற கருதுகோளை ஆதரிக்க எல்லிஸின் மோனோகிராஃப் லெக்சிகல் மற்றும் இலக்கண ஆதாரங்களை வழங்கியது.

பார்வை:

1. திராவிட அல்லது தென்னிந்தியக் குடும்பமொழிகளின் ஒப்பிலக்கணம் - உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,சென்னை.
2. திராவிட மொழிகளின் ஒப்பாய்வு - ஓர் அறிமுகம் - டாக்டர் ஜி. ஜான்சாமுவேல் - பாரிநிலையம்,சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

10. மொழியும் இலக்கணமும்

திருமதி க வெண்ணிலா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வுத் துறை,
மருதுபாண்டியர் கல்லூரி, தஞ்சாவூர்.

முனைவர் ம. பூபதி
உதவிப்பேராசிரியர் மற்றும் ஆய்வு நெறியாளர்
தமிழ் உயராய்வுத் துறை
மருதுபாண்டியர் கல்லூரி,தஞ்சாவூர்.

DOI 10.5281/zenodo.13761644..

Abstract:

Language is a tool that helps us communicate our ideas to others and help us understand others' ideas. Language is what distinguishes humans from other species. It is said that 'Language is the eyes of the people'. If the eye is the language, the grammar is the eyelid. A proper grammar is essential to preserve a conscious language. In this case, the summary of this study is to study the way language and grammar depend on each other.

ஆய்வுச் சுருக்கம்

மொழி என்பது நம் கருத்தை பிறர்க்கு உணர்த்தவும்இ பிறர் கருத்தை நாம் அறிந்து கொள்ளவும் உதவும் ஒரு கருவியாகும். மொழிதான் மனிதர்களை பிற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்திக்காட்டுகின்றது. "மொழியே மக்களின் விழி" என்பர். விழி மொழியானால் இலக்கணம் இமையாகும். விழியான மொழியைப் பாதுகாக்க இமையான இலக்கணம் அவசியம் தேவைப்படுகின்றது. இந்நிலையில் மொழியும் இலக்கணமும் ஒன்றையொன்றுச் சார்ந்துள்ள விதம் குறித்து ஆய்வதே இவ்வாய்வின் ஆய்வுச் சுருக்கமாக அமைந்துள்ளது.

முன்னுரை

இவ்வுலகில் தோன்றிய உயிரினங்கள் தங்களின் கருத்துக்களில் பரிமாறிச் கொள்வதற்கும் பயன்படும் கருவி மொழியாகும். உயிரினத்திற்கு உயிரினம் மொழி வேறுபடுகின்றது. மீன், பாம்பு, எலி, தவளை, உடும்பு, ஓணான், பறவை, விலங்கு, மனிதன் என அனைத்து உயிரினங்களும் தம் இனத்திற்குள் கருந்துக்களைபறிமாறிக்கொண்டு செயல்படுகின்றன. தாய் பறவை எழுப்பும் இன்ப ஒலியும் துன்ப ஒலியும் குஞ்சுகளுக்குப்புரிகின்றன. ஆண் குயில் எழுப்பும் ஒலிக்குரியப் பொருளை பெண்குயில் புரிந்து செயல்படுகின்றது. ஓணான், உடும்பு, பாம்பு முதலான உயிரினங்கள்தம் அசைவின் மூலம் கருத்தினை வெளிப்படுத்துகின்றன. மனிதன் தன் செயலின் மூலம் உணர்த்துகின்றான். இத்தகைய மிகச்சிறந்த கருவியாகத் திகழும் மொழியிலன் இலக்கணத் தன்மையினன ஆய்வு செய்யும் நோக்கில் இவ்வாய்வக் கட்டுரை வடிவமைக்கபட்டுள்ளது.

மொழியின் வகை

ஒவ்வொரு உயிரினங்களும் ஒலி எழுப்பியோ சைகை மூலமோ கருத்துக்களைப் பரிமாறிக்கொள்கின்றன. மக்கள்மொழி, என்பது போலபறவை மொழி விலங்கு மொழி என்பனவும் உள்ளன. மக்களின் நாகரிகத்தினையும் பண்பாட்டினையும் பறைசாற்றுவது

http://Creativecommons.org//license/by/4.0/.

மொழியாகும். மக்களினம் தோன்றிய காலத்தில் இருந்தமொழி இன்று பன்மடங்கு வளர்ச்சி பெற்றுள்ளது. மொழியின் தோற்றமாக விளங்கிய சைகைமொழி, போலி, மொழி, உணர்ச்சி மொழி, இன்பமொழி, துன்பமொழி, பேச்சுமொழி, கிளைமொழி, பொதுமொழி, சிறப்புமொழி, குறுமொழி, குழந்தைமொழி, எழுத்துமொழி, இலக்கியமொழி, இலக்கணமொழி, கணினிமொழி எனபலவகை மொழிகள் வளர்ந்துள்ளன.

"ஒரு மனிதனுக்கு முதுகெலும்பு இருப்பதால் தான் நிமிர்ந்துநிற்கவோ நடக்கவோ முடிகிறது. அதுபோல் இலக்கணம் உள்ள மொழிதான் நீண்ட காலம் நிலைபெற்றிருக்கும். நம் தாய்மொழியானதமிழை உயர்தனிச் செம்மொழி என உலகோர் உயர்த்திக் கூறுவதற்குக் காரணம் தமிழின் இலக்கணச் சிறப்பேயாகும். ஒரு மொழியைத் திருத்தமாக பேசவும் எழுதவும் கற்பிப்பது இலக்கணமாகும். அதுவே மொழியின் அழகையும் அமைப்பையும் உணர்த்துவதாகும். ஒரு மொழியின் இலக்கணத்தில் தெளிவான ஆற்றலை பெற்றவறே அம்மொழியில் தெளிவும் நுட்பமும் நிறைந்த அறிவைப் பெறமுடியும். எனவே ஒரு மொழியைப் பயில்வதற்கு இலக்கணம் கற்றல் இன்றியமையாததாகும்.1 என்பதை ஜீவரத்தினம் மணிமாறன் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கரும்பிலிருந்து கரும்புச்சாறு எடுக்கப்படுவது போல் இலக்கியங்களிலிருந்து வரையருக்கப்பட்ட விதிகள் எடுக்கப்பட்டுள்ளன அவ்விதிகள் இலக்கணமாகும். தெளிவான மொழித்திறனைப் பெறுவதற்கு அம்மொழியின் இலக்கணத்தை நன்கு கற்கவேண்டும். ஒரு மொழியைத் திருத்தமாகபேசவும், எழுதவும் துனை செய்வது இலக்கணமாகும"2 என்றுரைத்துள்ளார் இரா.வேலாயுதம்.

ஒரு மொழியின் உடல் இலக்கியம் என்றால் குருதி இலக்கணமாகும்"3என்கின்றார் சி.இலக்குவனார். "இலக்கணம் என்பது மொழிகளைசரியாகப் பேசவும் எழுதவும் தெரிந்து கொள்ளச்செய்யும் ஒரு அறிவியல் ஆக்கமே"4 என்றுரைக்கின்றார் ச.அகத்தியலிங்கம்.

வரலாற்றிற்கு முந்தைய நாகரிகமற்ற ஆதிகாலப் மக்களுக்குப் பேசத்தெரியாது. அந்நிலையில் அவர்கள் தங்களின் சைகைமூலமே கருத்துக்களைப் பரிமாறிச் கொண்டிருந்தனர். உயிரினங்கள் ஒலி எழுப்புவதைக் கண்டு வியந்தனர். ஓர் இடத்தையோ பொருளையோ காட்டுவதற்குச் சுட்டு விரலை நீட்டிப் பயன்படுத்துதல், பசித்தவன் தன் கையால் வயிற்றைத் தொட்டுக்காட்டுதல், சினம் வரும்போது படபடப்பான ஒலி எழுப்புதல், வெறுப்புவரும்போது சகரஒலி (சீ, சே, உச்) எழுப்புதல். துன்பம் மிகும்போது அழுதல், மகிழ்ச்சிமிக்க போது ஆரவாரம் செய்தல் முதலானவை இயல்பூக்கத்தால் அமைந்தவையாகும் என்கின்றார் வரதராசன்.

இராபர்ட் கால்டுவெல் "திராவிடம் என்று பெயரிடப் பெறும்மொழிகள் பன்னிரண்டு. தமிழ்இ மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, குடகு ஆகிய ஆறுமொழிகளைத் திருந்திய மொழிகள் என்றும், துதம், கோதம், கோண்ட், கூய், ஒரியன், இராஜ்மஹால் ஆகிய ஆறு மொழிகளைத் திருந்தா மொழிகள் என்றும் இருவகைப்படுத்தியுள்ளார்"6

http://Creativecommons.org//license/by/4.0/.

"திராவிட மொழிகள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என அறியும் முன்னரே மேலை நாட்டவர் அம்மொழிகளை ஆராய்ந்துள்ளனர். 1798-ல் ராபர்ட்ஸ்என்பவர் கூர்க், துளு ஆகிய மொழிகளைப் பற்றிய சில செய்திகளைத்தந்துளளார். 1837-ல் தோதர் மொழி அறியப்பட்டது. 1838-ல் பிராகூய் மொழி கண்டறியப்பட்டது. 1849-ல் கோண்டி மொழி கண்டறியப்பட்டது. 1866-ல் கோலாமிமொழியும், 1884-ல் மால்டோ மொழியும் அறியப்பட்டன. பார்ஜி மொழி பற்றியும், பிற திராவிட மொழிகள் பற்றியும் "இந்திய மொழிகளின் கணக்கீடு" குறிப்பிடுகின்றது. 1956-ல் கோண்டாவும், கதமாவும் கண்டறியப்பட்டன. குறவா என்றும், எருக்கலா என்றும் வழங்கப்படும் இருளா என்னும் கிளைமொழி திராவிட மொழிகளைச் சேர்ந்த கிளை மொழியாக இப்போதுகருதப்படுகிறது. தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம், கோண்டி, குருக் அல்லது ஓரான், துளு, கூய், குவி, அல்லது கோந்த், கோயா, பிராகூய், மால்டோ, குடகு, படகா, கோலாமி, இருளா, குறவா, பார்ஜி, கொண்டா அல்லது கூயி, கதபா, நாய்க்கி, பெங்கோ ஆகிய 22 மொழிகள் குறித்த தகவல்களைத் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் தன் நூலில் பதிவு செய்துள்ளார்".7

இந்தியநாடு முழுவதும் மிகப்பழங்காலத்தில் ஒருமொழி பேசப்பட்டு வந்தது. அதைப் பழந்திராவிட மொழி (Proto - Dravidian) என்று கூறுவர்."8 என்கின்றார் மு.வரதராசன். "பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே இந்தியா முழுவதும் ஒரு மொழி பரவியிருந்தது. அதுவே திராவிட மொழிகளுக்கு முந்தியமொழி. அதனைப் பழந்திராவிட மொழி என வழங்கினர்"9 என்ற குறிப்பினை டாக்டர் பூவண்ணன் தன் நூலில் குறிபிட்டுள்ளார்.

தமிழ் முதல் நூல் என்று தொல்காப்பியம் குறிப்பிடப்படுகிறது. அதற்கு முந்தைய நூலகள் கிடைத்தில. மூன்று பகுதியும் முழுமையாய்க்கிடைத்திருப்பது பெரும்பேறாகும். இலக்கியம் படைப்பதற்கும் இலக்கணம் கூறும் நூல் உலகில் தொல்காப்பியம் ஒன்றேயாகும்"10 என்பதைதமிழண்ணல் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

எழுத்துமொழி

மக்கள் தங்களின் கருத்தினைப் பதிவு செய்ய எண்ணினர் காலம் கடந்தும் இடம் கடந்தும் கருத்துக்கள் நிலைத்திருக்க வேண்டும் என்று என்ணியதன் விளைவாக எழுத்துமொழியை உருவாக்கினர். தொடக்கக் காலத்தில் குறியீடுகளாகவும் புள்ளி, கோடு, முதலியனவற்றால் பதிவு செய்துவந்தனர். கால வளர்ச்சியாலும், மக்களின் சிந்தனை ஆற்றலாலும் குறியீடுகள், கோடுகள் முதலானவை ஒழுங்கமைக்கப்பட்டு செப்பம் ஆகி எழுத்து வடிவம் பெற்றன. களிமண், ஓடுகள் , பாறைகள், கருங்கல், செப்புத்தகடுகள் இவற்றில் எழுதி வந்த மக்கள் பனையோலை காகிதம், கணினி என இவற்றில் எழுதுவதில் வல்லமை பெற்று அதற்கானஎழுதுகோல் கருவிகளையும் கண்டுபிடித்தனர்.

http://Creativecommons.org//license/by/4.0/.

எழுத்துருவாக்கம்

மனிதன் சைகயின் மூலம் தன் கருத்தை பிறர்க்கு, உணர்த்தினான். இச்சைகை மொழியைத் தொடர்ந்து வாயசைப்பின் மூலம் பேச்சுமொழி உருவாகியது. இவ்விரண்டும் எட்டாத துரத்தில் இருப்பவருக்கும் தம்கருத்தை தெரிவிக்க உருவானதே எழுத்து.

எழுதப்படுவதன் மூலமும் ஓசையாக எழுப்பப்படுவதன் மூலமும் கருத்தைப் புலப்படுத்த இம்முறை பயன்பட்டதால் இதற்கு எழுத்து என்ற பெயர் ஏற்புடையதானது. "தொல்லெழுத்தியல் ஆய்வாளர்கள் எழுத்துக்களின் வளர்ச்சி நிலைகளை உருவெழுத்து (Pictograph), கருத்தெழுத்து (Ideograph), சொற்குறியீட்டெழுத்து (Logo graph), ஒலிஎழுத்து (Phonograph) என்று நான்கு கட்ட வளர்ச்சியாக பகுத்துக் கூறுவர்"11 தமிழ் இலக்கணிகள் எழுத்துக்களின் வளர்ச்சி நிலைகளைஉரு, உணர்வு, ஒலி, தன்மை என நான்கு நிலைகளில் வகைப்படுத்தியுள்ளனர்.

"எழுதப் படுதலின் எழுத்தே"12 என்கின்றது யாப்பருங்கலக்காரிகை. அவ்வெழுத்து குறில், நெடில், உயிர், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஆய்தம், மெய், வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர்மெய், அளபடை என 13 வகை எழுத்துக்கள் அசைக்கு உருப்பாகும் எழுத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

"எழுத்தெனப்படுப அகரமுதல் னகர இறுவாய் முப்ப:தென்ப

சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே"13 (**தொல். எழுத்துநூற்**-1)

எழுத்துக்களைப்பற்றி தொல்காப்பியர் தன் நூலில் குறிப்பிடுகின்றார். முதல் எழுத்து 30 உயிர் 12 (குறில் 5, நெடில் 7) மெய் 18 (வல்லினம் 6, மெல்லினம் 6, இடையினம் 6) சார்பெழுத்து 3 (குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆய்தம்) ஆய்த எழுத்து 1, சுட்டு 3 (அ, இ, உ), வினா 3 (ஆ, ஏ, ஓ) மொழி முதல் எழுத்துக்கள் 22 உயிர் 12, வல்லினம் 4 (க, ச.த, ப), மெல்லினம் 3 (ஞ, ந, ம) இடையினம் 2 (ய, வ) குற்றியலுகரம் 1 –(நு) மொழி இறுதி எழுத்துக்கள் 24 (உயிர் 12, மெல்லினம் 5, ஞ, ண, ந, ம, ன, இடையினம் 6 ய, ர, ல, வ, ழ, ள, குற்றியலுகரம் -1 நு) என்பதாகும்.

இலக்கணம்

இலக்கியங்களும் இலக்கிய வகைமைகளும் தோன்றிப் பல்கிப்பெருகி வளர்ந்தன. அவ்வாறு வளரும் நிலையில் அவற்றிற்கு வரையறையை வகுப்பதிற்குப் புலவர்கள் முன்வந்தனர். இலக்கியங்களுக்கு விதிகளைக் கூறுவதற்காக இலக்கணங்கள் இயற்றப்பட்டன. இலக்கு + ஆண் + அம் = இலக்கணம். இவ்வாறு இலக்கணம் என்பது தோற்றம் பெற்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

இலக்கணத்தின் இன்றியமையாமை.

வயலுக்குவரப்பும், குளத்திற்குக் கரையும் இன்றியமையாதவை போல இலக்கியத்திற்கு இலக்கணம் இன்றியமையாததாகும். எழுத்து, சொல், அடி முதலானாவை உடைய இலக்கியத்தில் எழுத்திலக்கணமும் செல்லிலக்கணமும் தொடரிலக்கணமும் உள்ளன. இயற்றைப் பற்றி இலக்கணிகள் விளக்குகின்றனர். சீர், தளை, அடி வரையறைகளைக் கொண்ட யாப்பிலக்கணத்தை இலக்கணிகள் பல வகையாகப் பிரித்து விளக்கியுள்ளனர். இக்கருத்தினை,

"இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்"14

என்று பவணந்தி முனிவர் தன்நூலில் குறிப்பிட்டுள்ளார். இலக்கணத்தைக் கற்றறிந்த புலவர்கள் இலக்கியம் படைத்தனர் என்பதை "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இம்பியது ஒருநிலை, இலக்கணம் கண்டு இலக்கியம் படைத்தல் ஒருநிலை, இவற்றுள் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதலே இயற்கைமுறை ஆனால் இடைக்கால பிற்காலங்களில் இலக்கணங்கண்டு அதற்கு ஏற்ப இலக்கியம் முறையை மேற்கொண்டமையால் ஒரே பொறிவினைப் படைப்புப் போல இலக்கியங்கள் அமைத்தன"15 என்று இரா. இளங்குமரன் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இலக்கணத்தின் தோற்றம்.

தமிழ் மொழியில் 5000 ஆண்டுகளுக்கும் முன்பே எழுத்து மொழிஉருவாகி இலக்கியங்கள் படைக்கப்பெற்றுள்ளன. அவற்றுல் பல தீக்கும் கறையானுக்கும், கடல்கோளுக்கும் இரையாகின. ஆயிரக் கணக்கான இலக்கிய நூல்களும் வானியல் நூல்களும், மருத்துவ நூல்களும், சோதிட நூல்களும் மறைந்து விட்டன. சங்க இலக்கியங்கள் என்றழைக்கப்படும் பதிணென் மேற்கணக்கு நூல்கள் தோன்றுவதற்கு முன்பே பல இலக்கியங்கள் இருந்தன. அந்தஇலக்கியங்களுக்கு இலக்கணங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் அவை அணைத்தும் கால வெள்ளத்தில் அழிந்து இன்று கிடைக்காமல்போய்விட்டன. அகத்தியரால் அகத்தியம் என்றொரு இலக்கணநூல் இயற்றப்பட்டது. அந்நூலும் கிடைக்காமல் அழிந்து விட்டது. அகத்தியரின் மாணாக்கர் பன்னிருவரில் தலைமாணாக்கர் தொல்காப்பியர். இவரால் இயற்றப்பட்ட "தொல்காப்பியம்" என்னும் இலக்கண நூல் தமிழ்மொழியில் தோன்றிய முழுமுதல் இலக்கணநூலகத் திகழ்கின்றது

இலக்கண வகைக்கள்.

தமிழ் மொழியில் உள்ள இலக்கண நூல்கள் இயம்பும் இலக்கணத்தின் அடிப்படையில் பொதுவாக இலக்கணம் ஐந்து வகையாகப் பாகுபாடு செய்யப்படுகின்றன. சிறப்பாக ஏழு வகையாகவும் இயம்பப்படுகின்றன. அவை முறையே எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம், புலமை

http://Creativecommons.org//license/by/4.0/.

இலக்கணம், தவஇயல்பு இலக்கணம் என்பனவாகும். உலகில் தமிழ் மொழியில் மட்டும் இத்தனை இலக்கணப் பாகுபாடுகள் உள்ளன. ஏனைய மொழிகளில் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், யாப்பிலக்கணம்இஅணியிலக்கணம் ஆகிய நான்குவகைகள் மட்டுமே உள்ளன.

உலகில் உள்ள மொழிகளில் காணப்பெறும் இலக்கணவகைகள் நான்கும் (எழுத்து, செல், யாப்பு, அணி) அந்தந்த மொழிக்கும் அந்தந்த மொழியில் தோன்றும் செய்யுளுக்கும் இலக்கணம் - வரையைறை கூறுகின்றன. ஆனால் தமிழ் மொழியிலுள்ள இலக்கணங்கள் தமிழ்மொழிக்கும் தமிழ் செய்யுளுக்கும் தமிழ் மொழியைப் பேசும் மக்களின் வாழ்க்கைக்கும் (அகம், புறம்) கற்றறிந்த புலவர்கும் மண்ணுளகில் வாழ்ந்து வாழ்க்கையின் நிறைவுவறை அனைத்திற்கும் வரையறைகளையும், விதிகளையும் வகுத்துக்கூறுகின்றன. பொருளிலக்கணம் தமிழ்மொழியைத் தவிர உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டுவரை ஐவகை இலக்கணங்களுடன் திகழ்ந்த தமிழ்மொழியில் மேலும் இரண்டு இலக்கணங்கள் படைக்கப்பெற்றுள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வண்ணச்சரபம்தவத்திரு தண்டபாணி சுவாமிகள் "ஆறாம் இலக்கணமாகப் "புலமை"16 இலக்கணத்தையும் ஏழாம் இலக்கணமாகத் "தவ இயல்பு"17 இலக்கணத்தையும் இயற்றியுள்ளார்.

தண்டபாணி சுவாமிகளுக்கு முன் தமிழ் இலக்கண மரபில் ஐந்திலக்கணங்களைத் தொடர்ந்து "பாட்டியல்"என்னும் இலக்கணத்தை "ஆறாம் இலக்கணமாகவும், "நிகண்டு" என்னும் சொற்பொருள் இலக்கணத்தை ஏழாம் இலக்கணமாகவும் இலக்கண ஆய்வாளர்கள் கருதினர். ஐந்திலக்கண நூலில் யார்பின் ஒரு பகுதியாகப் பாட்டியலும், தனித்த நிலையில் நிகண்டும் இருந்ததால் இலக்கணிகள்வரையறுக்க முடியாத நிலையிலும் ஆய்வாளர்களின் கருதுகோளின் அடிப்படையிலும் இம்மரபு நீடித்து வந்தது. ஆனால் தவத்திரு தண்டபாணி சுவாமிகள் அறுவகை இலக்கண நூலில் புலமையை ஆறாம் இலக்கணமாகவும், ஏழாம் இலக்கண நூலில் தவஇயல்பினை"ஏழாம் இலக்கணமாவும் வரயறுத்து இலக்கண வரலாற்றில் இருபுத்திலக்கண ஆக்க முயற்சிகளைச் செய்தவர் என்றபொருமையையும் பெற்றுள்ளார். இதனை பின்வரும் தகவல்கள்

அறுவகையிலக்கணம், ஏழாமிலக்கணம் - இவை முருகதாசசுவாமி என்றும் திருப்புகழ்ச் சுவாமிகள் என்றும் விளங்குகின்ற தண்டபாணி சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியன. அஷ்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார் அவர்களைக் கொண்டு தஞ்சாவூர் ஷாப்பு - ப. வெ. வெங்கட்ராமராஜா அவர்களால் சென்னை இந்து தியாலஜிகல் யந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டன. விஜய வருடம், கடகரவி (1893) உறுதிசெய்கின்றன. தமிழில் ஓரிலக்கணம் கூறும் (யாப்பருங்கலக்காரிகை, புறப்பொருள் பெண்பாமாலை, தண்டியலங்காரம், நம்பியகப்பொருள் விளக்கம்.) ஈரிலக்கணம் கூறும்

http://Creativecommons.org//license/by/4.0/.

(நேமிநாதம், நன்னூல்) நூல்களும், ஐவகையிலக்கணம் கூறும் (தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம்..) நூல்களும், அறுவகை இலக்கணநூலும், ஏழாம் இலக்கண நூலும் இயற்றப்பெற்றுள்ளன

முடிவுரை

மொழி என்பதன் பொருள், மொழிகளின் வகைகள், இலக்கணம் என்பதன் பொருள், இலக்கணம் குறித்த அறிஞர்களின் கருத்துக்கள், எழுத்துருவம் உள்ள மொழிகள், எழுத்துருவமற்ற மொழிகள், எழுத்துருவாக்கம், இலக்கண வகைகள், புதியதாக தோன்றிய இலக்கண நூல்கள் குறித்த தகவல்கள் இவ்வாய்வின் மூலம் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. ஜீவரத்தினம் மணிமாறன் - தமிழ் இலக்கணம் - பக் 5 – 6
2. இரா. வேலாயுதம் - இலக்கணக்கரும்பு - பக் 2 – 3
3. சி. இலக்குவனார் - தொல்காப்பிய ஆராய்ச்சி - ப - 3
4. ச. அகத்தியலிங்கம் - இந்திய மொழிகள் - ப - 106.
5. மு. வரதராசன் - மொழி வரலாறு - ப - 190 - 191
6. இராபர்ட் கால்டுவெல் - திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்ப - 11
7. தெ. பொ மீனாட்சி சுந்தரனார் - தமிழ் மொழி வரலாறு - பக் 18 – 19
8. மு. வரதராசன் - தமிழ் இலக்கிய வரலாறு - ப - 1
9. டாக்டர் பூவண்ணன் - தமிழ் இலக்கிய வரலாறு - பக் 6 – 7
10. தமிழண்ணல் - புதிய நோக்கில் தமிழ்இலக்கிய வரலாறு - பக் 9 – 10
11. பொ. இராசேந்திரன், சொ. சாந்தலிங்கம் - கல்வெட்டுக்கலை - ப - 1
12. அமர்தசாகரர் - யாப்பருங்கலக்காரிகைச. திருஞானசம்பந்தம் மூலமும் உரையும். ப - 13
13. தொல்காப்பியம் - எழுத்ததிகாரமஇ இளம்பூரணர் உரை - நூற் - 1
14. பவணந்திமுனிவர் - நன்னூல் - நூற் - 141
15. இரா. இளங்குமரன் - இலக்கண வரலாறு ப - 47
16. தண்டபாணி சுவாமிகள் - அறுவகை இலக்கணம் ப - 110
17. தண்டபாணி சுவாமிகள் - ஏழாம் இலக்கணம் ப - 113

http://Creativecommons.org//license/by/4.0/.

துணைநூற் பட்டியல்

1. ச. அகத்தியலிங்கம் இந்திய மொழிகள், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை. பதிப்பு-1995.
2. அமிர்த சாகரர். யாப்பருங்கலக்காரிகை கதிர்பதிப்பகம், திருவையாறு, முதல் பதிப்பு - 2007
3. இராஜேந்திரன், சாந்தலிங்கம் கல்வெட்டுக்கலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை. முதல் பதிப்பு 2017
4. இராபர்ட் கால்டுவெல், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்@முல்லை நிலையம் சென்னை முதல் பதிப்பு தமிழில் - 2004.
5. சி. இலக்குவனார் - தொல்காப்பிய ஆராய்ச்சி, வள்ளுவர் பதிப்பகம். புதுக்கோட்டை, 1971 பதிப்பு.
6. இரா. இளங்குமரன் - இலக்கண வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. பதிப்பு 1988.
7. தண்டபாணி சுவாமிகள் -அறுவகை இலக்கணம், தமிழ் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர். பதிப்பு 1991
8. தண்டபாணி சுவாமிகள் - ஏழாம் இலக்கணம், தமிழ் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர். பதிப்பு 1991
9. தமிழண்ணல் - தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.பதிப்பு -2002
10. தொல்காப்பியர் - தொல்காப்பியம் எழுத்ததிகாரம், இளம்பூரணர் உரை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை - பதிப்பு - 1995.
11. பவணந்திமுனிவர் -நன்னூல், சங்கர நமச்சிவாயர் உரை, கமர்சியல் அச்சுக்கூடம், சென்னை. பதிப்பு 1925.
12. டாக்டர் பூவண்ணன் - தமிழ் இலக்கிய வரலாறு, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - முதல் பதிப்பு 1984
13. ஜீவரத்தினம் மணிமாறன்தமிழ் இலக்கணம், புத்தகப் பூங்கா, இராயப்பேட்டை, சென்னை. பதிப்பு 1995
14. தெ. போ மீனாட்சி சுந்தரனார், தமிழ் மொழி வரலாறு, முல்லை நிலையம் சென்னை, முதல் பதிப்பு 2014.
15. இரா. வேலாயுதம், இலக்கக் கரும்பு, தென்றலன் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, 2000 பதிப்பு
16. மு. வரதராசன் - மொழிவரலாறு, பாரி நிலையம், சென்னை. 1995 பதிப்பு
17. மு. வரதராசன் - தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதெமி - புதுதில்லி முதல் பதிப்பு - 1972

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

11.அறிஞர் அண்ணாவின் நாடகங்களில் சாதியமும் சமத்துவமும்

உ.ச.எ.தமிழரசன்,
உதவிப் பேராசிரியர், தமிழ்;த்துறை,
அய்யநாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி, சிவகாசி
DOI 10.5281/zenodo.13761653.

Abstract

Scholar Anna established her name in the world of literature through her stage speaking and writing skills. He brought social reforms through various literary forms like short story, novel, letter and article. Scholar Anna's works contain within themselves the necessary changes for human society. Reform ideologies, progressive ideas, anti-superstition ideas, rationalization of human society are many artistic features, he created a revival through his plays. This article explores the ideas of caste equality found in Anna's plays Orak Nach, Shrekkari and Chandrodayam.

முன்னுரை:

மேடைப் பேச்சு, எழுத்தாற்றல் மூலம் இலக்கியஉலகில் தன் பெயரைநிலைநிறுத்திக் கொண்டவர் அறிஞர் அண்ணா. சிறுகதை, புதினம், கடிதம், கட்டுரை எனப் பல எழுத்து வடிவங்கள் மூலம் சமூகச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தவர். அறிஞர் அண்ணாவின் படைப்புகள் மனித சமூகத்திற்குத் தேவையான மாற்றங்களை தன்னுள்ளே வைத்திருக்கின்றன. சீர்திருத்த சித்தாந்தங்கள், முற்போக்குக் கருத்துக்கள், மூடநம்பிக்கைக்கு எதிரான கருத்துக்கள், பகுத்தறிவினை உண்டாக்கல் என மனித சமூகத்திற்கு ஆற்றிய கலைப் பண்புகள் ஏராளம், தம் நாடகங்களின் வழி மறுமலர்ச்சியை உண்டாக்கினார். அத்தகைய அண்ணாவின் ஓர் இரவு, வேலைக்காரி, சந்திரோதயம் நாடகங்களில் காணலாகும் சாதிய சமத்துவச் சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

அண்ணாவின் நாடகப் போக்குகள்:

- சமூகநோக்கு கொண்டவை.
- சீர்திருத்தசிந்தனைகள் கொண்டவை.
- சமூகத்திறன் நோக்கும் போக்குகொண்டவை.
- மக்களைச் சுரண்டிப் பிழைக்கும் நிலஉடைமைக்காரர்களைஅடையாளம் காட்டும்.
- சமயம் கொண்டு மக்களை அடிமையாக்கும் போலிச் சாமியார்கள், அரசியல்வாதிகளை அடையாளம் காட்டுபவை.
- மக்களின் முன்னேற்றத்திற்குத் தடைக்கற்களாய் இருக்கும் மூடநம்பிக்கைகள், பிற்போக்குச் சிந்தனைகளை வேரறுப்பவை.
- சுயமரியாதை, பகுத்தறிவு சார்ந்த கருத்துக்களை எடுத்துரைப்பவை.
- இனஉணர்வு, மொழிஉணர்வு, தன்மானஉணர்வு கூறுபவை.
- அறநெறியினை எடுத்துரைப்பவை.
- பெண்ணுக்கு எதிராக நிகழும் அடிமைமுறையை எதிர்த்து, பெண்ணுரிமையை நிலைநாட்டுபவை.

http://Creativecommons.org//license/by/4.0/.

- ஏழை - பணக்காரன், உயர்ந்தவன் - தாழ்ந்தவன், தொழிலாளி-முதலாளி என்ற வேறுபாட்டை எதிர்க்கும் சமத்துவம் கொண்ட பொதுவுடைமைச் சார்ந்த நாடகங்கள்.

சந்திரோதயம் நாடகச் சிந்தனைகள்:

அண்ணாவின் சந்திரோதயம் நாடகம் சமூகமாற்றத்தை ஏற்படுத்தும் விழிப்புணர்வு நாடகம் ஆகும். பெற்ற மகளை பணத்தாசையால் வியாபாரப் பொருளாக்குதல். சுhதிய சமய வேறுபாட்டால் உண்மையான அன்பை மறுப்பது. பொருந்தாமணம் முடிப்பது. மேல் வர்க்கத்தினரே ஒருவரை ஒருவர் ஏமாற்றிப் பிழைப்பது. மக்களைச் சுரண்டும் ஆதினங்கள், மடங்களின் செயல்பாடுகளை இந்நாடகத்தின் வழி எடுத்துரைக்கிறார்.

வட்டியூரின் செல்வந்தரான சிங்காரவேலு தன்னிடம் கடன்படும் எளிய மக்களின் சொத்துக்களை வட்டி என்ற பெயரில் சுரண்டிக் கொழுப்பவர். சுhதிய வேற்றுமை, பொருளாதார வேற்றுமை,கொள்கை வேற்றுமை என செல்வம் சேர்க்கும் பேராசையால் பெற்ற மகளையே விற்கும் நிலையை இந்நாடகத்தின் மூலம் எடுத்துக் காட்டியிருப்பார்.

மடாலயங்களில் நடக்கும் ஊழல், திருட்டுத் தனங்களை சுட்டிக் காட்டுவது மட்டுமல்லாமல் அச்செல்வங்களை மக்கள் நலமுற எவ்வாறெல்லாம் பயன்படுத்தலாம் என்பதையும் எடுத்துக்காட்டுகிறார்.

பெண் உரிமை வாழ்வுபெற, சமூகமாற்றத்திற்குத் தம் இயக்கத்தின் செயல்பாடு மூலம் மக்களுக்கு எவ்வாறு உதவலாம் என்பதையும் எடுத்துக்காட்டுகிறார்.

பகுத்தறிவுக் கொள்கைகள், சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களையும் மக்கள் தாமே முன் வந்து ஏற்குமாறு வழிவகை செய்கிறார்.

சாதியும் சமயமும் ஒழிய கலப்புத் திருமணமும் காதல் மணமும் ஒரு கருவி என்பதை எடுத்துக் காட்டுகிறார். பொருந்தாமணத்தின் இன்னல்களை எடுத்துரைக்கிறார்.

ஏமாற்றுக்காரர்களிடம் இருந்து ஏமாறாமல் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார். தீண்டாமை கொடுமைகளை எடுத்துக்காட்டுகிறார்.

தங்கள் அரசியல் மேன்மையையும், அதிகாரத்தையும் நிலைநிறுத்திக் கொள்ள உயர்ந்தவர்கள் இன வெறுப்பை பயன்படுத்திக் கொண்டது. அதிகாரம் முழுவதையும் தன்வசம் வைத்துக் கொண்டது. அறிஞர் அண்ணாதம் நாடகங்கள் மூலம் ஒரு இனத்தில் குவித்துவைக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தையும் வாய்ப்புக்களையும் பகிர்ந்தளிக்க, பிரிக்கப்பட வேண்டும் என்றார். ஆதை தம் நாடகங்கள் மூலம் உணரச் செய்தார்.

வேலைக்காரிநாடகச் சிந்தனைகள்:

ஏழை பணக்காரன், ஆண்டான் அடிமை சாதியவேறுபாடுகள் புரையோடிப் போயிருக்கும் சமூகத்தில் நாடகக் கதாநாயகன் ஆனந்தன் போராடுவதை சுட்டிக் காட்டியிருப்பார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

ஏழைகளின் உழைப்பைச் சுரண்டிக் கொழுக்கும் வேதாசல முதலியார் தன் தந்தையின் தற்கொலைக்குக் காரணம் என்றுஆனந்தன் அறிகிறார்.

பின் அவரைப் பழிவாங்குகிறார். சமூகஉணர்வு கொண்டவனாகவும் மனிதநேயம் கொண்டவனாகவும் காட்சிப்படுத்திதன் நாடகம் மூலம் சாதியசமத்துவ சமூகமாற்றத்தை எடுத்துக் காட்டியிருப்பார்.

ஓர் இரவுநாடகச் சிந்தனைகள்,

ஓர் இரவு நாடகத்தில் கதாநாயகி சொர்ணம் வசதி, வாய்ப்புளள் பணக்காரர்களால் காதலிக்கப்பட்டு, கைவிடப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு சுரண்டல்களுக்கு ஆளாகும் பெண்ணாகப் படைத்திருப்பார்.

ஓர் இரவு நாடகத்தின் மூலம் சமூகத்தில் உள்ள ஊழல்களை நாகரீகமாக எடுத்துக்காட்டி மக்கள் தங்கள் மூடப் பழக்கங்களிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு நல்வாழ்வு வாழ தன் நாடகம் மூலம் வழிகாட்டியிருப்பார்.

சென்னை நகரின் இரவுநேர வாழ்க்கையை மையமாகக் கொண்டது இந்நாடகம். பெரும் பணக்காரர்களின் சுயநலம், நம்பிக்கை துரோகம் போன்றவற்றால் வாழ்விழந்த பெண்ணின் கதை. பெண்ணின் பாதுகாப்பற்ற நிலையை எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை எடுத்துரைப்பதே இந்நாடகத்தின் மையம்.

ஜமீன்தார் கருணாகரத்தேவர், சுசீலா, டாக்டர் சேகர், பவானி, செகவீரபாண்டியன் எனக் கதாப்பாத்திரங்களின் வழி சமூகச் சீர்கேடுகளை எடுத்துரைக்கிறார்.

வறுமைச் சூழலும் வாழ்க்கைச் சூழலும் ஆதரவற்ற பெண்களை எவ்வாறெல்லாம் உயர்மட்டக் குடியினரிடம் விழச் செய்கிறது என்பதை எடுத்துரைக்கிறார்.

சாதியஎதிர்ப்பு:

சாதி சமய வேறுபாடுகளில் மூழ்கிக் கிடக்கும் தமிழ் மனதைத் தட்டியெழுப்பி பேத வேறுபாடற்ற சமுதாயம் உருவாக வேண்டிய கருத்துக்களை முன்வைக்கும் நாடகம் காதல் ஜோதி என்னும் நாடகம். நாட்டிலே சாதி தான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடும் விஷம். மனதிலே முடக்குநோயைப் புகுத்திவிட்டது இச்சாதியும் சமயங்களும் தான். எனவே தான் பேதமற்ற சமுதாயத்தை சமத்துவத்தை சமதருமத்தைநாம் காண வேண்டுமானால் முதலில் சாதியைத் தொலைத்தாக வேண்டும என்று அறிஞர் அண்ணா குறிப்பிடுகிறார்.

அறிஞர் அண்ணாவின் நாடகங்களால் எழுந்த சமூகமாற்றங்கள்:

பெண் உரிமை, பெண் விடுதலை போன்றவற்றை வளர்த்தெடுத்துள்ளது.

திருமணம் என்பது தெய்வீகச் சடங்கு என்ற நிலை மாறி சமூக ஒப்பந்தம, வாழக்கை ஒப்பந்தமாக ஒருவரைஒருவர் புரிந்து கொண்டு வாழும் நிலையாக மாறி உள்ளது.

http://Creativecommons.org//license/by/4.0/.

கலப்புமணம், காதல் மணம், சீர்திருத்தமணம், புரட்சிமணம் எனத் திருமண முறைகளால் மக்கள் மனதில் மாற்றங்களை விதைத்துள்ளது.

மணமுறிவு, மணமுறிவு பெற்ற பெண்களின் மறுமணம் பற்றிய் சிந்தனையும், விதவைமணத்தை ஏற்கும் மனநிலையும் உண்டாக்கி உள்ளது. தீண்;டாமையை அகற்றியது.

தொழில் இழிவு பற்றிய கண்ணோட்டத்தை அகற்றி, கல்வி என்னும் ஆயுதம் ஏந்தி புதிய வேலைவாய்ப்பைப் பெறும் சூழல் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மடாதிபதிகள், மதத் தலைவர்களிடம் மக்கள் நலவாழ்வு பற்றிய சிந்தனையை உண்டாக்கியுள்ளது. புழைய புராணக் கதைகள், மூடநம்பிக்கைகள் பற்றிய எதிர்ப்புணர்வை உண்டாக்கியுள்ளது.

முடிவுரை:

அறிஞர் அண்ணாவின் நாடகங்கள் சமூகத்தில் புரட்சியை உண்டாக்கி, மக்கள் மனதில் புதிய எண்ணங்களையும் சமூகம் மாற்றம் பற்றிய கருத்துக்களை உருவாக்கியுள்ளன என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது,

துணைநின்ற நூல்கள்:

- சி.என்.அண்ணாதுரை, அண்ணாவின் நாடகங்கள், பரிமளம் பதிப்பகம்,சென்னை.
- சந்திரோதயம்,பூம்புகார் பிரசுரம் ,சென்னை,
- ஓர் இரவு,பாரிநிலையம்,சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

12. துளிப்பாக்களில் மெய்ப்பாடுகள்

முனைவர். மு.செந்தில்குமார்,
உதவிப் பேராசிரியர்,
செந்தமிழ்க்கல்லூரி - மதுரை.
DOI 10.5281/zenodo.13761675.

Abstract

Meippatial is one of the 9 properties in the corpus of archaeology. The inner emotions reflected in the body are the truth. There are eight truths that Tolkappiyam shows. Each of the places where they appear is divided into 4 categories. 32 truths are distinguished. Commentators call taste the places where truths appear. These are the senses (a) of the body.

தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் உள்ள 9 இயல்களில் ஒன்று மெய்ப்பாட்டியல். உள்ளத்து உணர்ச்சிகள் உடலில் தென்படுவது மெய்ப்பாடு. தொல்காப்பியம் காட்டும் மெய்ப்பாடுகள் எட்டு. அவை தோன்றும் இடங்கள் ஒவ்வொன்றும் 4 வகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. 32 மெய்ப்பாடுகள் வேறுபடு;த்திக் காட்டப்பட்டுள்ளன. மெய்ப்பாடுகள் தோன்றும் இடங்களை உரையாசிரியர்கள் சுவை என்கின்றனர். இவை உடலின் மெய்ச்சுவைகள் (அ) மெய்யுணர்வுகள் ஆகும்.

பசி, தாகம், பாலுணர்வு, உறங்குதல், விழித்தல் முதலானவை உயிரினங்களுக்கான பொதுவான அகத்தெழுச்சி உணர்வுகள். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்தும் புறத்தாக்க உணர்வுகள்.

எண்வகை மெய்ப்பாடுகள்:

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப. **(தொல். மெய். -3- பொருளதிகாரம் -247)**

நகை: எள்ளல் (இகழ்தல்); இளமை, பேதைமை (அறிவின்மை); மடம் (ஒன்றை வேறொன்றாகத் திரியக்கோடல்)

அழுகை(அவலம்): இழிவு (இழிவுபடுத்துதல்); இழவு (உயிரையோ, பொருளையோ இழத்தல்); அசைவு (முன்னிருந்த சிறப்புக் குன்றி தளர்தல்; வறுமை.

இளிவரல் (பிறர்முன் இழிவுக்கு இலக்காகுதல்): மூப்பு, பிணி, வருத்தம், மென்மை (பிறர்முன் மெலியராதல்)

மருட்கை (வியப்பு): புதுமை (முன்பு இல்லாதது); பெருமை (முன்பு காணாத அளவு பெரியதாதல்); சிறுமை (மிகவும் நுண்மை); ஆக்கம் (ஒன்று மற்றொன்றாதல் அல்லது ஒன்றன் வளர்ச்சி, பரிணாமம்)

http://Creativecommons.org//license/by/4.0/.

அச்சம்: அணங்கு (தெய்வம் மற்றும் பிற); விலங்கு; கள்வர்; தம் இறை (தலைவர், தந்தை, ஆசிரியர்)

பெருமிதம்: கல்வி; தறுகண்மை (போர், வீரம்) புகழ்; கொடை.

வெகுளி: உறுப்பறை (உறுப்புக்களை வெட்டுதலால்); குடிகோள் (குடிமக்களை நலிதலால்); அலை (தொடர் கோபம்); கொலை.

உவகை: செல்வம் உடைமை; புலன் (ஐம்புலன்); புணர்வு (காதல்;); இன்ப விளையாட்டு (ஆடல் பாடல்)

துளிப்பாக்கள்:

தமிழ் இலக்கியத் தளத்தில் புதுமைகளைப் புகுத்திய புலவன் பாரதி 1916-அக்டோபர் 16-இல் சுதேசமித்திரன் இதழில் "ஜப்பானியக் கவிதைகள்"1 என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் ஹைக்கூக் கவிதைகளை தமிழில் அறிமுகப்படுத்தினார்.

நீண்டவரிகளில் பக்கங்களில் சொல்லவேண்டிய செய்திகளை மூன்று வரிகளில் குறைந்த வார்த்தைகளில் கூறி மூன்றாவது வரியில் வியப்பைத்தரவல்லது ஹைக்கூ.. ஜப்பானியக் ஹைக்கூவினை தமிழாலளர்கள் 'ஹைகூ'; 'ஹைக்கூ'; 'ஹெய்கு'; 'ஹொக்கு'; 'அய்க்கூ'; 'துளிப்பா'; 'மின்பா'; 'கடுகுக்கவிதை'; 'நறுக்கவிதை'; 'வாமனக்கவிதை;' 'குட்டைக்கவிதை;' 'குறுங்கவிதை;' மத்தாப்பூக்கவிதை;' 'மின்மினிக்கவிதை;' எனப் பலபெயர்களில் அழைக்கின்றனர்.

தமிழ் துளிப்பாக் கவிதைகளில் தொல்காப்பியர் சுட்டிய மெய்ப்பாடுகளை அடையாளப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நகை:

"நம் நாட்டில் அதிகம் விளைவது
தானியம் அல்ல
மானியம் தான்" (எ.மு.ராஜன் - ப.27)

இந்திய நாடு வேளாண்மை நாடு என்பது உலகறியும். நவீன அறிவியல் கண்டுபிடிப்புகள், பசுமைப்புரட்சிகளால் விளைச்சல் பன்மடங்கு உயர்ந்திருக்கிறது. ஆனால், விவசாயிகளின் நிலைப்பாடு வேதனை தருவதாக உள்ளது. நாட்டை வழிநடத்துகிற ஆட்சியாளர்கள், அனைவருக்குமான வேலைவாய்ப்பினை உறுதிப்படுத்தி, வாழ்வியல் பொருளாதாரத்தை மேம்படுத்தாமல் இலவசங்களையும், மானியங்களையும் அறிவித்து மக்களை சோம்பேறிகளாக மாற்றுவதை கவிதை எள்ளலாகச் சுட்டுகிறது.

"அனைத்துலகும் சுற்றி
அமைச்சர் தெரிந்து கொண்டார்
இந்தியா ஏழை நாடு' **(எ.மு.ராசன் - ப.27)**

http://Creativecommons.org//license/by/4.0/.

உலக அரங்கில் இந்தியா வளர்ந்துவரும் நாடுகளுள் ஒன்றாக உள்ளது. குறிப்பிட்ட துறைகளில் தன்னிறைவு பெற்றிருந்தாலும், தன்னிறைவு பெறவேண்டிய பல துறைகள் உள்ளன. அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடமின்றி கோடிக்கணக்கான மக்கள் உடல்நலக்குறைபாட்டுடன் இந்தியாவில் உள்ளனர். இந்தியா வேளாண் நாடு என்பதைவிட ஏழை நாடு என்பது இயல்பானது. இதனை இந்திய அமைச்சர் மக்களின் வரிப்பணத்தைச் செலவழித்து உலகநாடுகளைச் சுற்றிவந்து இந்தியா ஏழை நாடு தான் என்பதை அறிந்துகொண்டதாக எள்ளலாகச் சொல்கிறார் கவிஞர்.

‘காதலில் வெற்றி

இருவருக்கும் கல்யாணம்

தனித்தனியே’ **(செ.செந்தில்குமார் - ப.31)**

காதலித்தவரையே திருமணம் செய்யும் வாய்ப்பு அனைவருக்குமே கிடைத்துவிடுவதில்லை. காலம்தோறும் காதலுக்கு வரவேற்பும் - எதிர்ப்பும் உண்டு. கௌரவப் படுகொலைகள் காதல் எதிர்ப்பின் உச்சமாகும். காதலித்த இருவருக்கும் திருமணம் நடைபெற்றது தனித்தனியே என்பதை எள்ளலாக கவிதை புலப்படுத்துகிறது.

‘அன்புடைமை அதிகாரத்தை

ஆசிரியர் கற்பிக்கிறார்

கையில் பிரம்புடன் …’ **(கழனியூரன் - ப.33)**

ஆயுதத்தால் செய்யமுடியாததை அன்பால் செய்யமுடியும். அன்பே வலியது என்பது ஆன்றோர் கூற்று. அன்பினைக் கற்பிக்கும்போது மென்மையாய், உள்ளன்புடன் கற்பிக்க வேண்டும். ஆனால், அன்புடைமை அதிகாரத்தை கற்பிக்கும் ஆசிரியர் கையில் பிரம்புடன் கற்பிப்பது எள்ளலாக எதிரொலிக்கிறது.

‘பளபளப்பாகக் கட்சிக் கொடிகள்

நைந்து கிழிந்து

தேசியக் கொடி…’ **(கழனியூரன் - ப.33)**

இந்தியாவில் புதிய தொழிற்சாலைகள் உருவாவதைவிட ஒவ்வொரு நாளும் ஏதேனுமொரு புதிய அரசியல் கட்சி உருவாகிக் கொண்டிருக்கிறது. அதற்கெனத் தலைவர், தொண்டர், கிளை அமைப்புகள் வளர்கிறது. கட்சிக் கொடிகள் ஆடம்பரமாய் காட்சியளிக்கிறது. கம்பீரமாய், தூய்மையாய் காட்சியளிக்க வேண்டிய தேசியக் கொடி நைந்து, கிழிந்திருப்பதைக் கண்டு கவிஞர் எள்ளல் செய்கிறார்.

அழுகை:

‘கந்தல் போர்த்த உடல்

நெய்யும் தறியில்

http://Creativecommons.org//license/by/4.0/.

காஞ்சிப்பட்டு' **(அவைநாயகன் - ப. 29)**

கட்டுமானத் தொழிலாளர்கள் ஆண்டு முழுவதும் வேலை செய்தாலும் குடியிருக்க சொந்த வீடு அமைவதில்லை. பல விளைநிலங்களில் வேலை செய்யும் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் நியாயவிலைக் கடைகளில் உணவுத்தானியத்திற்காக வரிசையில் நிற்கின்றனர். மனிதர்களின் மானம் காக்கும் ஆடை நெய்யும் நெசவாளன் கந்தல் போர்த்த உடையுடன் காஞ்சிப்பட்டு நெசவு நெய்வதை வறுமையின் கோரமாகப் பதிவு செய்கிறார்.

இளிவரல்:

'கல் மனசுக்காரர்கள்

பாருங்கள்

பாறைகளை உடைக்கிறார்கள்" **(மித்ரா - ப.36)**

இயற்கை வளங்களைப் பேணிக்காப்பது மனித சமூகக் கடமையாகும். பல நேரங்களில் தேவைகளுக்காக இயற்கையை அழிக்கவேண்டியுள்ளது. இயற்கையை அழிப்பது எளிதாகவும், உருவாக்குவது கடினமாகவும் உள்ளது. ஒன்றை அழிக்கும்போது அதன் மடங்குகளை உருவாக்கவேண்டும். இறுக்கமான மனநிலையில் இருப்பவர்களை கல்மனசுக்காரர்கள் என்பர். பாறைகள் உடைக்கப்படுவதைக் கண்டு கவிஞர் தனது வருத்தத்தைப் பதிவு செய்கிறார்.

மருட்கை:

'அந்தக் காட்டில்

எந்த மூங்கில்

புல்லாங்குழல்' **(அமுதபாரதி- ப.24)**

தமிழ் துளிப்பாக் கவிதைகளின் மூத்தவரான ஓவியக் கவிஞர் அமுதபாரதியின் கவிதையிது.

நவீன இலக்கிய வகைமையான புதுக்கவிதை, ஹைக்கூக் கவிதைகளை வாசிக்கின்ற வாசகர் பலருக்கும் பலவித பொருளைத்தரும். மேற்கண்ட கவிதை, காட்டிலிருக்கிற மூங்கில் அதன் பயன்பாட்டிற்கேற்ப ஏணி, கைவினைப்பொருட்கள், கூரை வீடுகளுக்கான கட்டுமானப் பொருளாக ஏதேனும் ஒருவடிவத்தை அடையும். அத்தகைய மூங்கிலில் எந்த மூங்கில் இசை தரும் மூங்கிலாகும்? எனக் கேள்வியோடு முடிக்கிறார்.

மக்கள் கூட்டத்தை காடாக உருவகித்து, காட்டில் வளரும் மூங்கில் எவ்வகைப் பொருளாக மாறும் என்பதை அறிய முடியாததைப்போல மனிதருள் எவர் சமூகத்திற்குப் பயனுள்ளவராக உருவெடுப்பார் என்பதை வியப்புக் குறியீடாக கவிஞர் உணர்த்துகிறார்.

'தலைவிரி கோலத்தை

யார் அழகில்லை என்பது?

http://Creativecommons.org//license/by/4.0/.

மரத்தைப் பார்!" **(அமுதபாரதி - ப.24)**

ஆண்கள், பெண்கள் எவராயினும் தங்களது முடியினைப் பராமரித்து சீவியிருப்பது தான் அழகு முறை. தலைவிரிக்கோலமாக இருப்பது கேடு எனக் கருதுவர். தலைவிரி கோலமும் அழகுதான் என்று பல்வேறு கிளைகளாக விரிந்து கிடக்கிற மரத்தை புதுமையாகச் சித்தரிக்கிறார்.

'பத்தாவது தடவையாக விழுந்தவனுக்கு

முத்தமிட்டுச் சொன்னது பூமி

ஒன்பதுமுறை எழுந்தவனல்லவா நீ' **(தமிழன்பன் - ப.25)**

வாழ்க்கைச் சக்கரத்தில் வெற்றி - தோல்விகள் மாறிக்கொண்டேயிருக்கும். தோல்விகளில் மனம் தளர்வடையும். ஒவ்வொரு தோல்விக்குப் பின்னரும் தொடர் முயற்சி வேண்டும். 'பூமி முத்தமிட்டுச் சொன்னது ஒன்பது முறை எழுந்தவன் நீ' என்னும் வரிகளில் தொடர்ச்சியான தோல்வி தன்னம்பிக்கையினை நோக்கி இழுத்துச் செல்கிறது. ஆக்கம் (ஒன்று மற்றொன்றாதல்) என்னும் மெய்ப்பாட்டுப் பொருளைத் தருகிறது கவிதை.

அச்சம்:

"என்ன தவறு செய்ததற்காக

இந்த தண்டனை? மரக்கிளையில்

தலைகீழாய் வௌவால்." **(ந.க.துறைவன் - ப.38)**

ஆயிரம் குற்றவாளிகள் தண்டிக்கப்படாவிட்டாலும், ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்பார் அண்ணல் காந்தியடிகள். யதார்;த்த வாழ்வில் குற்றவாளிகள் தப்பிவிடுவதும், நிரபராதிகள் தண்டனையில் சிக்கிக்கொள்வதும் உண்டு. உயிரினங்களில் தலைகீழாய் தொங்குவது வௌவாலின் இயல்பு. ஆனால், தவறு செய்துவிட்டு அதற்கான தண்டனையை வௌவால் அனுபவிப்பதாக அச்சப்படுகிறார் கவிஞர்.

பெருமிதம்:

'விடிய விடிய விழித்திருந்தாள்

அம்மா

நாளை மகனுக்கு பரீட்சை" **(எஸ்.குமார் -47)**

உலகில் படைக்கப்பட்ட உயிரினங்களில் பாசஉணர்வு அனைவருக்கும் பொதுவானது. ஒருவரின் தியாகம் மற்றவருக்குப் பயனைத் தரவேண்டும். தியாகம் செய்தவருக்கும், தியாகத்தால் உயர்ந்தவருக்கும் இது பெருமை. மகன் தேர்வில் வெற்றி பெறுவதற்காக அம்மா இரவு முழுவதும் விழித்திருந்தாள். மகன் அம்மாவின் தியாகத்தால் உச்சம் பெற்றான். கவிதை மறைமுகமாய் பெருமிதம் குறித்துப் பேசி பெருமையடைகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

வெகுளி:

“எரிந்து சாம்பலானது

சேரிக் குடிசைகள்

சாதீ” **(செந்தமிழினியன் - 42)**

இந்தியாவின் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாய் இருக்கும் பிரதான காரணியில் சாதி முக்கியமானதாகும். சேரிக்குடிசைகள் எரிந்து சாம்பலானதற்கு காரணமாயிருந்தது சாதிக்கலவரம் என்பதை கவிதை சுட்டுகிறது. சாதிக்கலவரத்தில் எரிவது பெரும்பாலும் குடிசைகள், ஓடுகள், தகரங்கள் மட்டுமே சேதமுறுவது கவனத்திற்குரியது. குடிமக்களை அச்சுறுத்துவதால் ஏற்பட்ட மெய்ப்பாட்டுணர்வை (குடிகோள்) கவிதை எடுத்தியம்புகிறது.

உவகை:

‘சிரித்தது நீ!

எனக்குள் எப்படி

இறக்கைகள்’ **(செ.செந்தில்குமார் - ப.31)**

“கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவி;ட்டால் மண்ணில்

குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்”2;

என்பார் பாரதிதாசன்.

காதலியின் சிரிப்பைக் கண்டவுடன் அவனுக்குள் இறக்கைகள் முளைத்துப் பறந்ததை உவகையுடன் கவிதை வெளிப்படுத்துகிறது. புணர்வு என்னும் காதல் கூட்டத்தால் ஏற்பட்ட உவகையாகும்.

‘ என்ன ஆச்சரியம்?

ரோசாப்பூ நடக்கிறது

குழந்தை’ **(ஆர்.வி. பதி. ப- 39)**

ரோசாப்பூ காற்றில் தவழ்ந்து செல்வதை தனது குழந்தை தவழ்ந்து செல்வதோடு ஒப்பீடு செய்து மகிழ்ச்சியடைகிறார் கவிஞர். கவிதையில் வியப்பு (மருட்கை), உவகை இரு மெய்ப்பாடுகளும் வெளிப்பட்டுள்ளது.

சான்றென் விளக்கம்:

1. ஹைக்கூ கவிதைகள் - நிர்மலா சுரேஷ் -ப.51.
2. பாரதிதாசன் கவிதைகள் - தமிழ்வேப்பன் - ப.281.

http://Creativecommons.org//license/by/4.0/.

முதன்மை நூல்:

தமிழ் ஹைகூ ஆயிரம் - இரா.மோகன்
சாகித்திய அகாதெமி வெளியீடு,
புதுதில்லி - 110001.
முதல் பதிப்பு - 2012

துணை நூற்பட்டியல்:

சுஜாதா - ஹைக்கூ ஒரு புதிய அறிமுகம்
உயிர்மை பதிப்பகம் - சென்னை - 18.

மா.இராமலிங்கம் - இருபதாம் நூற்றாண்டுத்தமிழ் இலக்கியம்
தமிழ் புத்தகலாயம் - சென்னை.

தமிழ்வேட்பன் - பாரதிதாசன் கவிதைகள்
செண்பகா பதிப்பகம் - சென்னை - 11.

****

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

13. பழங்குடிப் போராளி பிர்சா முண்டாவின் உரிமைப் போராட்டம்

முனைவர் ஜெ.சங்கீதா எம்ஏ.எம்ஏட்., எம்.பில் (கல்வி), எம்பில் (தமிழ்)., நெட்., பிஎச்டி.,
முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி,
49, கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர்-641030.
DOI 10.5281/zenodo.13761706.

Abstract

World Indigenous Peoples Day is observed annually on 9th August to support and protect the rights of indigenous peoples who are fighting that "the land belongs to the tiller". This article is meant to honor the dream and memory of the Appalangudi people.

முன்னுரை:

"உழுபவனுக்கே நிலம் சொந்தம்" என்று போராடிவரும் பழங்குடியினரின் உரிமைகளை ஆதரிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 9-ஆம் தேதி உலக பழங்குடியினர் தினம் அனுசரிக்கப்படுகிறது. அப்பழங்குடி மக்களின் கனவும் நினைவும் போற்றும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

பழங்குடியினர் தின நோக்கம்:

சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகள் உட்பட சிறந்த உலகை உருவாக்குவதில் பழங்குடி சமூகங்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்புகள் மற்றும் சாதனைகளை அங்கீகரிக்கவும். பழங்குடி சமூகங்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கும். அவர்களுக்கான உரிமைகளை திறம்பட செயல்படுத்த வாய்ப்பு வழங்கவும் பழங்குடியினர் தினம் கொண்டாடப்படுகிறது.

உலகப் பழங்குடியினர் தினம் தீம் 2024

இந்த வருடத்தின் தொனிப்பொருள் சுயநிர்ணயத்திற்கான மாற்றத்தின் முகவர்களாக "பழங்குடியின இளைஞர்கள்" பழங்குடி இளைஞர்கள் மீது கவனம் செலுத்துவதன் மூலம் அவர்களின் சமூகங்களுக்குள்ளும் அதற்கு அப்பாலும் உருமாறும் செயல்களை இயக்குவதிலும் அவர்களின் சுய நிர்ணயம் உரிமைகளை உறுதிப்படுத்துவதிலும் அவர்களின் முக்கிய பங்கு அடிக்கோடிட்டு காட்டுகிறது..

பழங்குடியினர் தின வரலாறு

உலக பழங்குடியின மக்களின் சர்வதேச தினத்தின் தோற்றம் டிசம்பர் 1994-இல் தொடங்கியது. உலக நாடுகளின் பொதுச் சபை இந்த வருதடாந்திர அனுசரிப்புகள் ஆகஸ்ட் 9 அன்று நிறுவப்பட்டது. மனித உரிமைகள் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு இதற்கான துணை ஆணையத்தின் பழங்குடி மக்கள் மீதான நற்செயல் குழுவின் முதல் கூட்டத்தை குறிக்கும் வகையில் இந்த தேதி குறியீட்டு முக்கியத்துவத்தை கொண்டுள்ளது.இது ஜனவரியில் நடந்தது இந்த முன்னெடுப்பு உலக மக்கள் தொகையில் 10-சதவீதத்திற்கும் குறைவாக இருந்த பழங்குடியினர் உலகின்

http://Creativecommons.org//license/by/4.0/.

எளிமையானவர்களில் 15-சதவீதமாக உள்ளனர். அவர்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வில் கவனம் செலுத்த வேண்டிய அவசர தேவையை எடுத்து காட்டுகிறது. அவர்கள் பலமொழிகளைப் பாதுகாப்பதில் மாற்றம் பல்வேறு கலாச்சாரங்களின் பிரதிநிதித்துவம் ஆகியவை அவற்றை நமது உலகளாவிய பாரம்பரியத்தின் முக்கிய அங்கமாக காட்டுகின்றது.

உலக பழங்குடியின தினத்தின் முக்கியத்துவம்

1. உலக பழங்குடியினர் தினம் வறுமை, பாகுபாடு, சுகாதாரம் மற்றும் கல்விக்கான அணுகல் இல்லாமல் உள்ளிட்ட உலகெங்கிலும் உள்ள பழங்குடியின மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
2. பழங்குடியினரின் வளமான கலாச்சாரம் மற்றும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை கொண்டாடுகிறது.
3. பூர்வீக கலாச்சாரங்களின் பன்முகத்தன்மை ஒப்புக் கொள்வதற்கும். உலகெங்கிலும் உள்ள பழங்குடியின மக்களும் சிறந்த எதிர்காலத்தை உறுதி செய்வதிலும் இந்த நாள் ஒரு முக்கிய வாய்ப்பாகும்.

இந்தியாவில் பழங்குடி சமூகங்கள் :

இந்திய மக்கள் தொகையில் 10 சதவீத மக்கள் பழங்குடி சமூகங்களாக வாழ்கின்றன. சுமார் 600-வகையான பழங்குடியினர் இந்தியாவில் உள்ளனர். பழங்குடிகள் ஒரு தனித்துவமான தேசிய சமூக பொருளாதார மற்றும் கலாச்சார பண்பாட்டில் வேறுபட்டும் குறிப்பிட்ட பண்பு கூறுகளை கொண்டும் உள்ளனர்.

பழங்குடி சமூகத்தின் பண்புக்கூறுகள்

- சமூக ஒற்றுமை.
- மலை அல்லது காடுகள் நிறைந்த சூழல் வாழ்வு.
- அவர்கள் வாழும் புவியியல் மற்றும் கலாச்சார பகுதிகளை கொண்டு வாழ்தல் .
- உயிரியல் இனனைப்புகளைக் கொண்ட ஒன்றொன்று இனைக்கப்பட்ட அமைப்பு.
- வாழ்வதற்கான ஒரு தனி உளவியல் அணுகுமுறை உயிர்களிடத்தில் அவர்கள் கொள்ளும் அன்பு அவர்களின் சமூக பண்புக் கருவி.
- தங்களுக்கான சமூக அரசியல் .

உழுபவனுக்கு நிலம் சொந்தம்

பழங்குடி மக்களின் உரிமை போராட்டத்திற்காக பாடுபட்ட பிர்சா முண்டா கடந்த 187-ஆம் ஆண்டில் பிறந்தார் பிர்சா என்றால் வியாழன் முண்டா-ஆதிவாசி என்று பொருள் தன் 17 வது வயதில் பழங்குடிகளின் பண்பாட்டை மீட்க பாடுபட தொடங்கினார். 1890-களின் இந்தியாவை ஆட்சி செய்து வந்த பிரிட்டிஷ் அரசாங்கம் காடுகளின் ஒவ்வொரு அடியும் அரசுக்கு சொந்தம்

http://Creativecommons.org//license/by/4.0/.

எனும் சிறப்பு சட்டத்தை கொண்டு வந்தது. பிரிட்டிஷ் அரசால் இந்திய பழங்குடி மக்களின் உடைமைகள் பறிக்கப்பட்டதைக் கண்டு வெகுண்டு எழுந்தார். இதை எதிர்த்து

பிர்சா முண்டா

- நீர் நமது.!
- நிலம் நமது.!
- வனம் நமது .!

எனும் முழக்கத்தைப் பழங்குடி மக்களிடையே கொண்டு சென்றார்.

உல்குலாம் போராட்டம்

1895-ஆம் ஆண்டு நடைபெற்ற உல்குலாம் போராட்டத்தின் போது பிர்சா முண்டாவின் வயது வெரும் 19 தான் அதுவே பழங்குடிகளின் வரலாற்றில் முதல் போராட்டமாகும். பண்ணையர்கள் மற்றும் ஜமீன்தார்கள் உதவியுடன் பிரிட்டிஷ் அரசாங்கம் பழங்குடிகளின் நிலங்களை பறித்த போது ஒரு குரலை விட ஒட்டுமொத்த மக்களின் குரலே அதிகாரத்தை அசைக்கும் என முழங்கி பழங்குடி மக்களை ஒன்று திரட்டி போராடினார்.

1899 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் படைகள் எதிர்த்து **"கொரில்லா போர்"** முறையில் மறைந்திருந்து தாக்கும் தந்திரத்தை பயன்படுத்தி நூல் அம்புகளை மட்டுமே கொண்டு எதிரிகளை வீழ்த்தினார். பிர்சா முண்டாவின் இந்த போராட்டத்திற்கு **உல்குலாம்** என்று பெயர். இந்த போராட்டத்தின் பிரிட்டிஷ்களின் சொத்துக்கள் தீக்கரையாயின இதனால் பிர்சா முண்டாவின் தலைக்கு ரூபாய் 500 சன்மானம் அறிவித்தது இவரை தேடும் முயற்சியில் 400 பழங்குடி மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்

முடிவரை

1900 களில் ஆம் ஆண்டு மார்ச் மூன்றாம் நாள் பிர்சா தனது தோழர்களுடன் கைது செய்யப்பட்டார். 1990 ஜூன் 9 காலரா நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார் மறைந்து 8 ஆண்டுகள் கடந்து "சோட்டா நாக்பூர் சட்டம்(CHOTANAGPUR TENENCY ACT1908) கொண்டுவரப்பட்டது .ஆதிவாசிகளின் நிலத்தை வேறு யாரும் பயன்படுத்த முடியாது என்பதை இந்த சட்டம் உறுதி செய்தது .

துணைநூற்பட்டியல்

1. தமிழ்நாடு சமுதாயப் பண்பாட்டு வரலாறு - ஏ.சுவாமிநாதன்.
2. மலையாளி பழங்குடிகள் – கோவிந்தராஜ்.
3. வலசமலை மலையாள பழங்குடிகளின் சமூக வாழ்வியல் -முனைவர் ஜெ.சங்கீதா.
4. காட்டில் உரிமை –சு. கிருஷ்ணமூர்த்தி

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

14. பாரதிதாசனும் சிறுவர் கல்வியும் பெண் முன்னேற்றமும்

சீதா லட்சுமி
தேசியக் கல்விக்கழகம்,
நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்
DOI 10.5281/zenodo.13761714.

Abstract

Many scholars have been carving and shaping the society for ages in the Tamil community. Among them, Bharathidasan, a servant of Bharati, created a great number of literatures in various genres with the ideas of his Guru and his own ideas. Looking at the facilities during his lifetime, it is a surprising question that how he created so much literature especially in Kannal Tamil in such a way as to attract everyone. Considering the length of the article, the writer expresses his opinion here with some of his songs. That is, he gives his opinion on how Bharathidasan's influence is today.

முன்னுரை

தமிழ்ச்சமூகத்தில் காலங்காலமாக அறிஞர்கள் பலர் சமூகத்தைச் செதுக்கி வடிவமைத்துவருகின்றனர். அவர்களில் பாரதியின் தாசனான பாரதிதாசன் தமக்கென ஒரு சித்தாந்தப்பாதையை வகுத்துக்கொண்டு தமது குருவின் கருத்துகளையும் தமது சுய கருத்துகளையும் கொண்டு அதிகமான இலக்கியங்களைப் பலவகைகளில் படைத்துள்ளார். இவர் வாழ்ந்த காலத்தில் இருந்த வசதிகளை நோக்கும்போது இவர் எப்படி இத்தனை இலக்கியங்களை அதிலும் அனைவரையும் கவரும் வகையில் கன்னல் தமிழில் படைத்தார் என்பது வியப்புக்குரிய கேள்வியாகும். கட்டுரையின் அளவு கருதி இங்கு அவரது சில பாடல்களைக்கொண்டு கட்டுரையாளர் தம் கருத்தை வெளிப்படுத்துகிறார். அதாவது பாரதிதாசனின் தாக்கம் இன்று எவ்வாறு அமைந்துள்ளது என்று தம் கருத்தைக் கூறுகிறார்.

பாரதிதாசன் கனவை நனவாக்கும் சொல்திறம் படைத்தவர்

பாரதிதாசன் தமிழையும் சமூக முன்னேற்றத்தையும் தம் இரு கண்களாக எண்ணி வாழ்ந்தவர். அவை இரண்டு குறித்தும் தொடர்ந்து தம்மை மேம்படுத்தியதுடன் முன்னேற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளார். அவற்றின் விளைவுகளை நாம் இன்று நேரடியாகக் காண்கிறோம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

எண்ணமே எல்லாம்! உள்ளமே அதற்கு ஆதாரம்!

பாரதிதாசன் வழிபாட்டுக் கவிதைகள் முதல் சமூக மேம்பாட்டுக் கவிதைகள், காவியங்கள் எனப்பலவகை இலக்கியங்களைப் படைத்து எழுதியுள்ளார். அவ்வகையில் அவரது பக்திப்பாடல்களில் ஒன்றின் சில அடிகளைப் பார்ப்போம்.

“சென்று சென்று பழி பாவத்தில் விழாதே

செல்வாக்கை யெண்ணிப் பிறர்கையில் தாழாதே” (பாரதிதாசன், மயிலம் சுப்பிரமணியர் துதியமுது என்ற தலைப்பிலான பாடல் (https://www.tamilvu.org/slet/l9100/l9100pd1.jsp?bookid=146&pno=7). என்று ‘நெஞ்சுக்கு நீதி கூறும் பகுதி’யில் சரணத்தின் ஒரு பகுதியாகக்

http://Creativecommons.org//license/by/4.0/.

கூறுகிறார். 'மனம் ஒரு குரங்கு' என்பது அனைவரும் அறிந்ததே.. அதனால்தான் அதைக் கட்டுப்படுத்துவது மிக இன்றியமையாதது. அது, தான் விரும்பும்வகையில் தானே பயணம் செய்யும்போது, "கண் போன போக்கிலே கால் போகலாமா? கால் போன போக்கிலே மனம் போகலாமா?" என்று பாடல் வருகிறது. எனவே நல்ல வழியில் செல்லும் மனம் எப்போதும் சிறந்து விளங்கும். இன்றைக்கு இருபத்தோராம் நூற்றாண்டில் உலக மயமாக்க உலகில் ஒருவர் தவறிழைத்திடப் பல வழிகள் உள்ளன. சந்தர்ப்பம், சூழ்நிலைகள் போன்றன பல சிக்கல்களையும் எதிர்ப்புகளையும் சந்திக்கும் வாய்ப்புகள் அதிகம் . இந்த வேகமானதொரு வாழ்க்கைச்சூழலில் நாம் தொடர்ந்து நல்வழியில் செல்வது அவசியமானது.

ஆனால், "ஒன்று கேள் மனமே!" என்ற பல்லவியில்

"இன்று தொட்டு நீ ஒருவழி நின்று நல்ல சுகமணுகிட

ஒன்று கேள் மனமே!"

என்று அனுபல்லவியுடன் அவர் முன்பு கூறப்பட்ட சரணத்தைப்பாடுகிறார்.

சிறுவர் கல்வி, மேம்பாடு

ஒரு நாட்டின் எதிர்காலம் அந்நாட்டின் மாணவர்களையும் இளையர்களையும் பொறுத்து அமையும். அவ்வகையில் இந்த இரு சாராரையும் மேம்படுத்த வேண்டியது பெற்றோர், ஆசிரியர், சுற்றுப்புறத்தில் வாழ்வோர், சமூகத்தலைவர்கள் ஆகியோரின் பங்காகும். அதனால்தான், "ஒரு கிராமமே ஒரு குழந்தையை வளர்த்தெடுக்கிறது!" என்று பெரியோர் கூறியுள்ளனர். இது இன்றும் என்றும் முற்றிலும் உண்மைதான்!

"விளையும் பயிர் முளையிலே" என்றும் "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவராவது தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே", "இளங்கன்று பயமறியாது", "தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்", "ஐந்தில் விளையாதது ஐம்பதில் விளையுமா?" என்பது நாம் வாசித்த அறிவுதரும் கவிதை அடிகள்.

"செடி முளை விடுவதிலேயே அதன் எதிர்காலத்தைப் பார்க்கலாம்" என்பது நம் முன்னோர் வாக்கு. ஆனால் இன்று அது ஆரம்பத்தில் சரியாக விளையாவிட்டாலும் இடையில் உரிய உரத்தையும் நீரையும் சூரிய வெளிச்சத்தையும் தந்தால் அது சிறப்பாக முன்னேறும் என்பதை இன்று நாம் அறிகிறோம். அண்மையில் சிங்கப்பூரில் அதன் பிரதமரும் நிதி அமைச்சருமான லாரன்ஸ் வோங் (Lawrence Wong, 2024)18 ஆகஸ்டு 2024 அன்று தமது தேசிய தினப் பேரணியில்,

> "Where we do not pigeonhole, or typecast people based on their backgrounds or the schools they go to.
> Where everyone can strive and excel, take pride at what they do, and be recognised for their efforts and work.
> Together we can make this happen.

http://Creativecommons.org//license/by/4.0/.

> So to all our youths, I encourage you to make full use of the opportunities ahead of you. No matter what your start point in life, you have the chance to go as far as you want in your chosen field. We will be there to support you and cheer for you as you chase your rainbow!", "Whatever the start points, we will help everyone to learn, develop and grow, and realise your full potential."

என்று இளையர்களுக்கும் மாணவர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் தெரிவித்தார். அதாவது, மாணவர்களின் கனவுகளை நனவாக்கி வாழ்வில் பெற வழி வகுக்கும் முன்னேற்றத்தைப் பற்றிக் கூறும்போது மாணவர்கள் எத்தகு சூழலில் இருந்து வந்தாலும் அவர்கள் முன்னேற அனைத்து வாய்ப்புகளையும் தருவது, அவர்களுக்குள் உள்ள திறன்களை மேம்படுத்தி உயர்த்துவது பற்றித் தெரிவித்துள்ளார். சிங்கப்பூரின் ஒவ்வொரு பிள்ளைக்கும் அவர்களது தொடக்கம் அல்லது ஆரம்பம் எங்கிருந்து ஆரம்பித்தாலும் எதுவாக, எவ்வாறாக இருந்தாலும் அவர்கள் நன்கு கற்கவும், மேம்படவும் தொடர்ந்து முன்னேறவும் தம் முழுமையான ஆற்றலை (உள்ளார்ந்த ஆற்றலை) அடையவும் உதவும் வகையில் தரமான கல்வி கிடைக்க வழிகள் செய்யப்படும் என்று வசந்தம் தொலைக்காட்சியிலும்(01.09.2024 மாலை) இடம்பெற்ற செய்தியின் கருத்தையும் கொண்ட நம்பிக்கையூட்டும் அவரது செய்தியும் ஊக்குவிப்பும் சவால் மிக்க பின்னணியைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பெரும் கலங்கரை விளக்கமாக அமையும். வீட்டில் அல்லது சயமாகவே முன்னேறிய தலைமுறையினரைக்கொண்டு குடும்பங்களில் வாழும் பிள்ளைகளுக்கு வழிகாட்டுதல் அல்லது அதிக வழிகாட்டுதல் கிடைக்க வாய்ப்புண்டு. ஆனால், வாழ்வில் சவால் மிக்க பின்னணியைச் சேர்ந்த மாணவர்கள் அனைவருக்கும் அத்தகு வாய்ப்பு வசதி இயல்பாக அமையாத நிலையில், அவர்கள் மிகவும் விழிப்பாகவும் வழி தெரியாத நிலையிலும் தம் நிலையைப்பற்றிச் சிந்தித்தபடி இருப்பார்கள். சிலர் அத்தகு விழிப்புநிலை பற்றிச் சிந்திக்காமலும் இருப்பார்கள். ஏனெனில் அவர்கள் சோகத்தையும் வறுமையையும் சிக்கலையும் தினமும் சந்திப்பவர்கள். அத்தகையவர்களுக்கு எப்போதும் முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் இருந்தாலும் எப்படி முன்னேறுவது என்று தெரியாது உள்ளத்தளவிலும் சிந்தனையளவிலும் தவிப்பர். அவர்கள் கையை ஊன்றிக் கரணம் போட எண்ணினாலும் அவர்களுக்கு அவர்களைப் புரிந்து வழிகாட்டுபவர்கள் தேவைப்படுகின்றனர். இன்று ஆசிரியர்கள் அத்தகைய உதவியையும் ஊக்குவிப்பையும் ஆலோசனையையும் தருகின்றனர். தம்மை உயர்த்திய ஆசிரியர்களை இம்மாணவர்கள் நன்றியுடன் நினைத்துத் தாமும் பிறருக்கு உதவுகின்றனர். இதனால் ஒரு தலைமுறையே எளிதில் முன்னேற வழி கிடைக்கிறது. இது சிங்கப்பூரில் நிதர்சனமான உண்மை. எனினும் மாணவர்களுக்குப் பள்ளிக்கு வெளியிலும் உதவிகள் தேவைப்படுகின்றன என்பதையும் நாம் குறிப்பிடலாம்.. அத்தகையவர்களுக்கு உதவும்போது அவர்கள் பேரலை போன்று தம் திறமைகளை வெளிக்காட்டிச் சமூகத்தில் தமக்கென ஓரிடத்தைப் பெற முனைவர் என்பது வெள்ளிடை மலை. இது சிங்கப்பூர் போன்ற வளர்ந்த நாடுகளில் வாழும் மாணவர்களுக்கும் இளையர்களுக்கும் மட்டுமல்ல; உலகின் எல்லா நாடுகளுக்கும் பொருந்தும் சித்தாந்தமாகும்

http://Creativecommons.org//license/by/4.0/.

ஆகும். இதுதான், ஒவ்வொரு தலைமுறைக்கும் வாழ்க்கை கற்றுத்தரும் உன்னதப்பாடம். எனவே அனைவரும் இணைந்து சிறுவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். நன்கு படிப்பவர்களை உயர்த்துவதுடன் நன்கு படிக்க வசதிவாய்ப்புகள் இல்லாதவர்களுக்குக் கூடுதலாக உதவி அவர்களையும் உயர்த்த வேண்டும். இதனால் சமூகத்தில் ஏற்றத்தாழ்வு இல்லாமல் எல்லோரும் எல்லாமும் பெறும் நிலை வரும்.

மேலே கூறியது ஒரு புறமிருக்க, இன்றைய சிறுவர்களும் சிறுமியர்களும் எவ்வாறு தம்மைப் படிப்பிலும் பிற திறன்களிலும் மேம்படுத்தி உயர வேண்டும் என்று ஒரு திட்டத்தையும் பாரதிதாசன் தெரிவித்துள்ளார். அது ஒவ்வொரு பெற்றோரும் அறிந்து தம் பிள்ளையை வளர்க்க உதவும் பிள்ளை வளர்ப்புத் தேற்றமாகும்.

இதோ அந்தப் பாடல் வருமாறு:

“இன்று குழந்தைகள் நீங்கள் - எனினும்
இனி இந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்!
(இன்று குழந்தைகள் நீங்கள்)
நன்றாய்ப் படியுங்கள்! நாட்டின் குழந்தைகள்
ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணுங்கள்
(இன்று குழந்தைகள் நீங்கள்)
குன்றினைப் போல் உடல்வன்மை வேண்டும்!
கொடுமை தீர்க்கப் போராடுதல் வேண்டும்!
தின்றதையே தின்று தெவிட்டுதல் இல்லாமல்
அன்றன்று வாழ்வின் புதுமை காண வேண்டும்!
(இன்று குழந்தைகள் நீங்கள்)
பல்கலை ஆய்ந்து தொழில் பல கற்றும்
பாட்டின் சுவைகாணும் திறமையும் உற்றும்
அல்லும் பகலும் இந்நாட்டுக்கு உழைப்பீர்கள்!
அறிவுடன் ஆண்மையைக் கூவி அழைப்பீர்கள்!
சிறுவர்கள் சிறுமியர் என்று இருபால் -

(இன்று குழந்தைகள் நீங்கள்)” பாரதிதாசன், இசையமுது, சிறார் பொறுப்பு என்ற தலைப்பிலான கவிதை).

இங்கே இன்று ஏடு தூக்கிச்செல்லும் சிறுவர்தாமே நாம் என்று மாணவர்கள் சிந்திக்கக்கூடாது என்பதால், “நீங்கள்தாம் நாட்டை ஆளப்போகிறீர்கள்!” என்றும், “அதற்காக நீங்கள் பல்வேறு திறன்களைக் கலைகள்வழியே பெற்று உயர வேண்டும்” என்று

http://Creativecommons.org//license/by/4.0/.

கூறுகிறார். அன்பாக இனிய சொற்களின் வழியே தம் பாடலைப் பாடியுள்ள பாரதி தாசன் ஆண்மை என்பது ஆண்களுக்கு மட்டும் அல்ல பெண்களுக்கும் உள்ளது என்பதை எடுத்துக்கூறும்வகையில், "அறிவுடன் ஆண்மையைக் கூவி அழைப்பீர்கள்!" என்கிறார்.

"நன்றாய்ப் படியுங்கள்! நாட்டின் குழந்தைகள்

ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணுங்கள்!" என்று சொல்லும்போது நன்கு படிப்பதால் ஒரு நாட்டின் குழந்தைகள் நாட்டை மேம்படுத்தும்வகையில் ஒற்றுமை எனும் பண்பைக் கைக்கொள்ளவும், அத்தகையவர்கள்தாம் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற சிந்தனையைக் கொண்டு இன்னும் உயர முடியும் என்பதையும் ஈண்டு எடுத்துக்கூறுகிறார். ஒரு நண்பராகவும் ஆசிரியராகவும் சமூகத் தலைவராகவும் பிள்ளைகளுக்குப் புரியும்வகையில் இப்பாடலை இயற்றியுள்ளார். மேலும் அவரது நாடு நோக்கிய பரந்த உள்ளமும் பார்வையும் இங்கும் தென்படுகிறது. இத்தகு பாடல்களை உலகில் எந்தப் பகுதியில் வாழும் தமிழரும் தம் குழந்தைகளுக்குச் சொல்லி அவர்களை வளர்க்கும்போது அவர்கள் வாழும் நாடுகளுக்குத் தமிழ்ப்பிள்ளைகளின் சீரிய பங்களிப்புக் கிடைக்கும். இதனால் நாட்டை உருவாக்கும் பண்புகளை அவர்கள் பெற்றுத் தம்முடன் வாழும் பல்லினத்தவர்களுக்கும் பெரும் சேவை ஆற்ற இயலும் என்பது கட்டுரையாளரின் திடமான நம்பிக்கை.

சிங்கப்பூரில் நற்பண்பு, குடியியல் கல்வி (Character and Citizenship Education-CCE) என்பது மாணவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கிறது. தொடக்கப்பள்ளியில் இப்பாடம் அவ்வம்மாணவரின் தாய்மொழிக்கல்விப் பாடத்துக்கான மொழி (தாய்மொழி) வழியாகவும் உயர்நிலைப்பள்ளியில் ஆங்கிலமொழி வழியாகவும் கற்றுத்தரப்படுகிறது. மேலும், ஒவ்வோர் ஆசிரியரும் ஒரு நற்பண்பு குடியியல் கல்வி ஆசிரியர் (Every teacher is a CCE Teacher! என்று கல்வியாளர்களுள் விதைக்கப்படும் கருத்தும் ஈண்டு நினைவுகூரத்தக்கது என்பதுடன் பெற்றோருக்கும் அது பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கது..

தமிழர் ஒற்றுமை நோக்கிய குரல் என்ற பாடல் தமிழர் எண்ணிக்கையில் பலர் என்றிருப்பினும் உள்ளத்தால் ஒன்றுபடும் நாள் எந்நாளோ என்று எண்ணும் காலம் பற்றிப் பேசப்படுகிறது. அது நேர்வழியில் சென்று உயரும் நாள் எந்நாளோ என்று எண்ணி உள்ளம் உவகை கொள்ளும் நாள் குறித்துப் பேசுகிறார்.

"**எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!"

(பாரதிதாசன், https://www.tamilvu.org/courses/degree/c011/c0114/html/c0114405.htm)

என்று பாடும் இடத்தில்

http://Creativecommons.org//license/by/4.0/.

“வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்
தோள் எங்கள் வெற்றித் தோள்கள்!
கங்கையைப் போல் காவிரி போல் கருத்துக்கள்
ஊறும் உள்ளம் எங்கள் உள்ளம்!

வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய்கின்ற

தமிழ் எங்கள் மூச்சாம்!”

என்று வரும் பகுதியில் அவரது பெருங்கனவு இங்கு வெளிப்படுகிறது. உடல் உறுதியுடன் எப்போதும் வெற்றி எனும் மனநிலையையும் உடையவர்கள், காட்டாறுபோல் ஓடும் இந்திய நதிகளின் நீர்போல் கருத்துகள் பல நிலைகளிலும் வந்து வாழும் என்கிறார். அவர் இங்கே உடல் உறுதி, மன வலிமை, ஒற்றுமை வலிமை, வாழ்வின் எல்லா இடங்களிலும் வெற்றி நோக்கி வாழும் மனப்பாங்கு என்று தமிழர்களின் மனப்பாங்கினையும் குணப்போக்கினையும் வரையறுத்துக் காட்டுகிறார். கங்கையையும் காவிரியையும் இணைக்கும் பாங்கில் நாட்டையும் அதன் பல தனித்துவச் சிறப்புகளையும் இங்கே இணைத்துக்காட்டுகிறார். இது அவரது பரந்த பார்வையையும் உள்ளத்தையும் காட்ட மறவவில்லை. அது மட்டுமல்ல,

“கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்

காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்!”

(தம் குருநாதர் பாரதியைப்போல் திடமான, தீர்க்கமான சிந்தனையையும் அவர் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கே இந்தப்பாடலை நாம் இரு வகைகளில் பொருள் கொள்ளலாம். இன்றைய தொழிலாளர்களைப் பாராட்டும்வகையில் இதைப் பரிசாகப் பாடலாம். ஏனெனில் ஒவ்வொரு நாட்டிலும் இடம்பெற்றுள்ள பெரும்பாலான கட்டடங்களும் பாலங்களும் ஆரம்பகாலக் கட்டமைப்புகளும் நகர மாதிரிகளும் பல்வேறு தொழிலாளர்களால் கட்டப்பட்டவை. இன்றும் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்வோர் பல நல்ல வசதிகளைப் பெற்றிருந்தாலும் ஆரம்பகாலத்தில் அங்கு வந்த மக்கள் தம் உடலுழைப்பால் அத்தனை வளங்களையும் உருவாக்கிச்சென்றதை இன்றும் வரலாறு பறை சாற்றும் அவ்வகையில் இந்தப்பாடல்களைத் தேசியக்கல்விக்காக நாம் பயன்படுத்தலாம்.

வேறு ஒரு வகையில் ஒரு நாட்டின் வளங்களை எண்ணிப் பெருமிதம் கொள்ள இப்பாடல்களை நாம் ரசிக்கலாம். அதற்கு அப்பால் இந்தப் பாடல்களைப் பயன்படுத்தி இளம் பெற்றோரிடம் அவர்களுடைய குழந்தைகளை அவர்கள் எவ்வாறு வளர்த்தால் அவர்கள் எதிர்காலத்தில் தம் பெற்றோரையும் பெரியோரையும் எண்ணி மதித்து வாழ்வார்கள் என்று உணர அல்லது அறிய விளக்கலாம். அவ்வாறு விளக்கும்போது சொல் சொல்லாக அல்லது அடி அடியாக விளக்கும்போது பெரும் பயன் கிட்டும். இதற்கு அடுத்த நிலையில் பள்ளிகளில் சிறுவர்களுக்கு இந்தப்பாடலைக் கற்றுத்தரும்போது முதலில் பாடலைக்

http://Creativecommons.org//license/by/4.0/.

கேட்கவும் பிறகு பார்க்கவும் வைத்துச் சொல்லித்தரலாம். இதில் பாவேந்தரின் அழகிய சொற்களும் தொடர்களும் பாச்சுவையும் அவற்றுக்கு உயிர் தந்த பாடகர் டி எம் சவுந்தர்ராஜனும் அதனை இதமாக மனத்தில் பதிய வைக்கும் இசையமைப்பாளர்கள் சங்கர், கணேஷ் இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

"சித்திரச்சோலைகளே,

உமை நன்கு திருத்த இப்பாரினிலே,

எத்தனை தோழர்கள் இரத்தம் சொரிந்தனரோ

உங்கள் வேரினிலே"

என்று வரும் அடிகளில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு சொல்லும் மிகவும் கவனமாகச் செய்யப்பட்ட தங்கச்சங்கிலியில் வைத்துப் பதிக்கப்பட்ட இரத்தினக்கற்கள் எனலாம். கண்ணை மூடிக்கொண்டு கேட்கும்போது இதமாகப் பல செய்திகளை இதயத்துக்குள்ளும் சிந்தைக்குள்ளும் கூர்மையாகத் தள்ளும் வகையில் பல அடிகள் இங்கு அமைந்துள்ளன.

எடுத்துக்காட்டுக்குப் பின்வரும் பகுதியைப் பார்க்கும்போது இன்று வாழ்க்கை நன்றாக உள்ளது. ஆனால் அன்று? எதுவும் எளிதில் வந்துவிடவில்லை. மக்கள் இரத்தத்தை விட்டு உங்கள் வேரில் வலுவைச் சேர்த்து இன்று சோலையாக்கியுள்ளனர் என்றால் அடித்தளம் மிகவும் அவசியம். அதை மிகவும் ஆணித்தரமாக எடுத்துச்சொல்லும் வகையில் அமைந்துள்ளது. மேலும் எந்த ஒன்றுக்கும் ஆரம்ப வளர்ச்சி மிகவும் அவசியம் ஒரு குழந்தை என்றால் ஆரம்பகாலம் அதன் வளமான வாழ்க்கையை வடிவமைக்கும் காலம். அதனால்தான் பெற்றோர், "'ஈ கடிக்காமல் எறும்பு கடிக்காமல் உன்னை வளர்த்தேன்'" என்றார்கள். ஏனெனில் பேசத்தெரியாத அல்லது எண்ணியதை எடுத்துச்சொல்லத்தெரியாத வயதில் நம்மைப் பார்த்துக் கொண்டவர்கள் பெற்றோர். இதை மறந்துவிடுவது இயல்பு. இதனால் தானே எல்லாம் செய்ய முடியும் என்று எண்ணும் மனநிலை வந்துள்ளது. இதற்குக் காரணம் நன்றி உணர்வு இல்லாமை அல்லது மனித நேயம் இல்லை எனலாம். எனவே இந்த அடிகளில் ஆரம்பம் அவசியமானது. அது சரியாக இல்லை என்றால் எதுவும் சரியாக அமையாது என்ற கருத்தை மாணவர்களும் ஏன் அவர்களது பெற்றோரும் இதை உணர்ந்துகொள்வர்.

"உமை நன்கு திருத்த இப்பாரினிலே முன்னர்

எத்தனைதோழர்கள்
ரத்தம்சொரிந்தனரோ
உங்கள்வேரினிலே...
உங்கள்வேரினிலே"...

இங்கே இரத்தம் சொரியப்பட்டது என்கிறார்கள். அது எந்த அளவுக்கு ஆழமான சொல் என்பதை மனிதரை மதிக்கும் பாங்கிற்குப் பெரும் எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.

http://Creativecommons.org//license/by/4.0/.

விரும்பிச் சொரியப்பட்ட இரத்தம் எதிர்காலத்துக்குப் பெரும் வளப்பத்தை உருவாக்க வழி செய்துள்ளது.

ஒரு கிணற்றில் நீர் வற்றிவிட்டால் அல்லது நீர் கீழே போய்விட்டால் தூர் வார வேண்டும் என்கிறார்கள். ஒரு குளம் வற்றிவிட்டாலும் அதில் உள்ள குப்பைகளை நீக்கி ஒழுங்கு செய்தால் மழை வரும்போது நீரைச் சேமிக்கலாம். இவ்வாறு தான் கம்மாய்களும் மதகுகளும் நீர்த்தேக்கங்களும் ஏரிகளும். இவை அனைத்தும் நம் முன்னோரின் சேமிக்கும் பழக்கத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்.

அதுபோல் எந்திரங்களைப் பற்றிக் கூறும்போது, செம்மையான அடைமொழியுடன் குறிப்பிட்டுள்ளார் பாரதிதாசன்.

“**ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே**

உங்கள் ஆதி அந்தம் சொல்லவோ

நீங்கள் ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்

உதித்தது மெய் அல்லவோ?

உதித்தது மெய் அல்லவோ?”

எந்திரக்கூட்டங்கள் ஏதோ போர்க்களக்கூட்டம் மாதிரி அல்லது அணிவகுத்துவரும் இராணுவ வீரர்கள்போல் ஆர்த்துவரும் எந்திரக்கூட்டக்களைக் குறிப்பிடுகிறார். அவை சார்ந்த நதி மூலத்தையும் ரிஷி மூலத்தையும் எடுத்துக்கூறும் வகையில் “உங்கள் ஆதி அந்தம் சொல்லவோ?” என்று கூறுகிறார். “நீங்கள் ஊர்த் தொழிலாளர்” என்று கூறும்போது இங்கே வழக்கமாக நாம் ஊர் என்று கூறும் பூர்வீக ஊர் சார்ந்த தொழிலாளர்கள் உழைத்ததை நான் உணர முடிகிறது. இதயத்தைத்தொடும் அடிகளைக்கொண்ட பாடல் இது. இது ஒரு சமூகம் எப்படிச்சுயமாக முன்னேறவும் தன் முன்னோரை மதிக்கவும் வேண்டும் என்று எடுத்துக்கூறும் பாடல் எனலாம்.

“**சித்திரச் சோலைகளே**
உமை நன்கு திருத்த இப்பாரினிலே
சித்திரச் சோலைகளே
உமை நன்கு திருத்த இப்பாரினிலே
முன்னர் எத்தனை தோழர்கள்
ரத்தம் சொரிந்தனரோ
உங்கள் வேரினிலே...
உங்கள் வேரினிலே...
தாமரை பூத்த தடாகங்களே
உமை தந்த அக்காலத்திலே
தாமரை பூத்த தடாகங்களே

http://Creativecommons.org//license/by/4.0/.

உமைத் தந்த அக்காலத்திலே
எங்கள் தூய்மைச் சகோதரர்
தூர்ந்து மறைந்ததைச் சொல்லவோ ஞாலத்திலே
சொல்லவோ ஞாலத்திலே?
சித்திரச் சோலைகளே
உமை நன்கு திருத்த இப்பாரினிலே
முன்னர் எத்தனை தோழர்கள்
ரத்தம் சொரிந்தனரோ
உங்கள் வேரினிலே...
உங்கள் வேரினிலே...

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே
உங்கள் ஆதி அந்தம் சொல்லவோ?
நீங்கள் ஊர் தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ?
உதித்தது மெய் அல்லவோ.?.
தாரணியே தொழிலாளர் உழைப்புக்கு
சாட்சியும் நீயன்றோ?
பசி தீரும் என்றால் உயிர் போகும் எனச் சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ?
செல்வர்கள் நீதி நன்றோட
சித்திரச் சோலைகளே
உமை நன்கு திருத்த இப்பாரினிலே
முன்னர் எத்தனை தோழர்கள்
ரத்தம் சொரிந்தனரோ
உங்கள் வேரினிலே...
உங்கள் வேரினிலே...
கீர்த்தி கொள் போகப் பொருட்புவியே
உன்றன் கீழிருக்கும் கடைக்கால்
எங்கள் சீர் தொழிலாளர் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்
நீர்கனல் நல்ல நிலம்வெளி காற்றென
நின்ற இயற்கைகளே
உமைச் சாரும் புவிப் பொருள் தந்ததெவை
தொழிலாளார் தடக் கைகளே

http://Creativecommons.org//license/by/4.0/.

நித்தம் திருத்திய நேர்மையினால்
மிகு நெல்விளை நன்னிலமே
உனக்கெத்தனை மாந்தர்கள்
நெற்றி வியர்வை இறைத்தனர் காண்கிலமே
மாமிகு பாதைகளே
உமை இப்பெரு வையமெலாம் வகுத்தார்
அவர் ஆமை எனப் புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெலாம் உழைத்தார்"

என்று இப்பாடலில் ஒரு நாட்டின் சாலைகள் நம்மை அந்நாட்டை உள்பகுதிகளோடு இணைப்பதுடன் வெளிப்பகுதிகளை மட்டும் இணைக்கும்வகையில் விரைவுச் சாலைகளாகவும் தமிழகத்தில் சொல்வதுபோல் *பைபாஸ்* (Bypass roads) சாலைகளாகவும் பொறியியலாளர்களின் சிந்தனையில் உதித்த திட்டத்தைச் செயல்படுத்தும் தொழில் மன்னர்களாகவும் உழைத்தவர்களைப் பற்றிப் பேசும் பகுதி எண்ணி எண்ணி இறும்பூது எய்த வைக்கும் அடிகள் எனில் மிகையில்லை.

பெண்ணும் கல்வியும் முன்னேற்றமும்

இன்று ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் இளைத்தவர்கள் இல்லை என்பதுடன் இரு பாலாரும் சமம் என்று கூறப்படுகிறது. இது இருபத்தோராம் நூற்றாண்டில் நடைமுறையில் காணும் நனவாக உள்ளது. எனினும் இது கனவாக இருந்த காலத்திலும் அவ்வாறு கனவு காண்பதற்கு முன்னும் எத்தனையோ பெண் குழந்தைகளும் சிறுமியரும் பதின்மவயதுப் பெண்களும் திருமணமான அன்னையரும் முதிய பெண்களும் பலவகைகளில் துன்பப்பட்டும் துன்புறுத்தப்படும் உயிரையும் மானத்தையும் மதிப்பையும் சுய சிந்தனையையும் இழந்து அடிமைகளாகவும் நடைபிணங்களாகவும் இருந்திருக்கின்றனர் என்பதை நாம் மறக்க இயலாது. அவ்வகையில் கல்வி என்ற ஓர் ஆயுதம் பெண்களுக்கு நல்ல முன்னேற்றத்தைத் தந்து அவர்களைப் பற்றிய அவர்களின் கனவுகளையும் சமூகத்தின் கனவுகளையும் நனவாக்கியுள்ளது. மேலும் பெண் கல்வி பெண்களுக்கு முன்னேற்றத்தைத் தந்தாலும் ஆண்களும் முன்னேறிய நாடுதான் சிறந்த நாடாகத் திகழும் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே ஒரு வண்டிக்கு இரண்டு மாடுகள்போன்று ஒரு நாணயத்துக்கு இரு பக்கங்கள் போன்று ஒரு குடும்பத்துக்குக் கணவனும் மனைவியும் போன்று இந்த உலகிற்கு ஆணும் பெண்ணும் தேவை என்பதுடன் இருவரும் சம நிலையில் வாழும்போது உலகம் உய்யும் என்றும் துணியலாம்.

இங்கே ஒரு தந்தை தன் மகளைப்பார்த்துப் படிக்கச்செல்லுமாறு அமைந்த கவிதை பாடலாகக் கேட்டு மகிழும் வகையில் இணையத்தில் உலா வருகிறது.

"தலைவாரி பூச்சூடி உன்னைப் "பாட

சாலைக்குப் போ!"

http://Creativecommons.org//license/by/4.0/.

பாட சாலைக்குப் போ!என்று சொன்னாள் உன் அன்னை!

தலைவாரி பூச்சூடி உன்னைப் "பாட

சாலைக்குப் போ!"

பாட சாலைக்குப் போ!என்று சொன்னாள் உன் அன்னை!

சிலைபோலே ஏன் அங்கு நின்றாய்?

சிலைபோலே ஏன் அங்கு நின்றாய்? - நீ

சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்?

நீ சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்?

தலைவாரி பூச்சூடி உன்னைப்

"பாடசாலைக்குப் போ!" என்று சொன்னாள் உன் அன்னை!

விலைபோட்டு வாங்கவா முடியும்

கல்வி கல்வி! கல்வி

கல்வி விலைபோட்டு வாங்கவா முடியும்?

கல்வி வேளைதோறும் கற்று வருவதால் படியும்!

கல்வி வேளைதோறும் கற்று வருவதால் படியும்!

மலைவாழை அல்லவோ கல்வி?

மலைவாழை அல்லவோ கல்வி? - நீ

"நீ வாயார உண்ணுவாய்

நீ வாயார உண்ணுவாய் போ என் புதல்வி

நீ வாயார உண்ணுவாய் போ என் புதல்வி

தலைவாரி பூச்சூடி உன்னைப் "பாட

சாலைக்குப் போ!" என்று சொன்னாள் உன் அன்னை!!"

என்று பாடும்போது அதைப் பாடிய பாடகர் சீர்காழி எஸ் கோவிந்தராஜன், பாடலின் பொருளுக்கு ஏற்பக் குரலில் பலவகை உணர்வுகளை எடுத்துக்காட்டுகிறார். அங்கே பெண் பிள்ளை என்றாலும் தாயின் சொல்லை முன்னே எடுத்துக்காட்டும்போது பாரதிதாசனின் பெண் மீதான மதிப்பையும் தாயின் மீதான கரிசனத்தையும் அறிய முடிகிறது.

"சிலை போலே ஏன் அங்கு நின்றாய்?" என்று கேட்கும்போது ஒரு தந்தையின் மகளைப் பற்றிய பார்வை நோக்கைப் பற்றியும் அறிய முடிகிறது. இருப்பினும் தன்

http://Creativecommons.org//license/by/4.0/.

பெயரைக்காக்கும் மகள் என்ற வகையில் 'புதல்வி' என்று மதிப்புடன் அவளை அழைக்கிறான். பாரம்பரிய நோக்கில் வளரும் அம்மகளைப் பாரம்பரிய முறையில், 'தலைவாரி, பூச்சூடிய மகள்ந என்று காட்டும்போது அங்கே பெண்கள் எவ்வளவு முன்னேறினாலும் பண்பாட்டை மறக்கக்கூடாது என்று கூறும் நிலையும் உள்ளீடாகத் தெரிகிறது. இது சமூகத்தின் மறைமுகமான எதிர்பார்ப்பு என்று பாரதிதாசன் காட்டுவதை உணர முடிகிறது.

கல்வியை விலை கொடுத்து வாங்க முடியாது என்று கூறும் கவிஞர், தந்தை வழியே அண்டை வீட்டுப்பெண்களுடன் போய்ப் படிக்குமாறு கூறுகிறார். மேலும் படிக்கப்படிக்கக் கல்வி மனத்தில் பதியும் என்று அவர் கூறும்போது "கற்கை நன்றே கற்கை நன்றே" என்ற முன்னோர் வாக்கை எடுத்துக்கூறுவதுபோல் அமைகிறது.

"ஒருமைகண் **தான்கற்ற கல்வி ஒருவற்கு**

எழுமையும் ஏமாப் புடைத்து"(திருக்குறள்)

என்றும் கூறும்வகையில் இப்பகுதி அமைகிறது. இருப்பினும் ஒரு பெண் படிக்காவிட்டால் அக்கம்பக்கத்தார் கேலி செய்வார் என்று கூறும்போது, சமூகம் ஓரளவுக் நல்ல அறிவு வளத்தினைக்கொண்டிருக்கிறது என்று தெரிகிறது அல்லது அது பராதிதாசனின் எதிர்காலத்தை நோக்கிய கனவோ என்று தோன்றுகிறது.

பெண்களின் முன்னேற்றத்துக்குப் பெண் கல்வி அவசியம் மிகவும் இன்றியமையாதது. இது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

"படியாத பெண்ணா யிருந்தால்
நீ படியாத பெண்ணாயிருந்தால் - கேலி
பண்ணுவார் என்னை, இவ்வூரார் தெரிந்தால்!
கடிகாரம் ஓடுமுன் ஓடு
கடிகாரம் ஓடுமுன் ஓடு
என் கண்ணல்ல
என் கண்ணல்ல!
அண்டை வீட்டுப் பெண்களோடு!
தலைவாரி பூச்சூடி உன்னைப்
"பாடசாலைக்குப் போ!" என்று சொன்னாள் உன் அன்னை!
கடிதாயிருக்கும் இப்போது
கல்வி கடிதாயிருக்கும் இப்போது கல்வி
கற்றிடத் கற்றிடத் தெரியும் அப்போது

http://Creativecommons.org//license/by/4.0/.

கல்வி

கற்றிடத் கற்றிடத் தெரியும் அப்போது

கடல் சூழ்ந்த இத்தமிழ்நாடு

கடல் சூழ்ந்த இத்தமிழ்நாடு பெண்

கல்வி பெண்கல்வி என்கின்றது அன்போடு!

தலைவாரி பூச்சூடி உன்னைப்

"பாடசாலைக்குப் போ!" என்று சொன்னாள் உன் அன்னை!

அன்னை! அன்னை!"

இணையப்பக்கம் (இசையமுது - தந்தை பெண்ணுக்கு என்ற தலைப்பில் அமைந்த பகுதி https://www.youtube.com/watch?v=-R34aYyZDKY என்று பாடுகிறார். இங்கே வாழையில் அதாவது மலைப்பகுதியில் உயரமான மலைப்பகுதியில் விளையும் சுவைமிக்க மலைவாழை அல்லவோ கல்வி என்று அதனை உயர்த்திப்பேசுகிறார். மேலும் கல்வி கற்றவர்கள் குன்றின் மேலிட்ட விளக்காகத் திகழ்வர் என்பதையும் இங்கு மறைமுகமாக எடுத்துக்கூறுகிறார்.

'கல்வி கற்ற பெண்கள் நல்ல விளைநிலம் அங்கே நல்ல புதல்வர்கள் விளைவாவர்கள் ஆனால் கல்வி கற்காத பெண்கள் களர்நிலம் அங்கே புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைய மாட்டார்கள்' என்ற கருத்தைக் கொண்ட,

"**கல்வியில்லாத பெண்கள் களர் நிலம். அங்கே**

புல்விளையலாம்; நல்ல புதல்வர்கள் விளைவதில்லை"

என்ற பாரதிதாசனின் பாடலடிகள் குறிப்பிடத்தக்கன. இது மிகவும் வீரியமிக்க கூற்று என்பதுடன் பல அரிய செய்திகளைப் 'பளிச்'சென்று சொல்வதில் பாரதிதாசன் திறமிக்கவர் என்பதை இது காட்டுகிறது. மேலும் பெண்கள் கல்வி கற்று முன்னேறிய இன்றைய நிலையில் அவரது கனவின் தாக்கத்தை நாம் அறிய முடிகிறது. முன்பெல்லாம் ஒரு பெண் ஆண் முன் அடிமைபோல் இருந்த நிலை மாறி இன்று ஆணுக்குப் பெண் சமம்! என்று கூறும் நிலையை நாம் அறியவும் உணரவும் முடிகிறது. எனினும் உடல் அமைப்பின் காரணமாகப் பெண்கள் இன்னும் இன்றும் சவால்களை எதிர்நோக்குவதையும் பாதிப்புகளை அனுபவிப்பதையும் நாம் அறிந்தாலும் சமூக அளவிலும் நாடுகளின் கவனிப்புகளின் அடிப்படையிலும் பெண்கள் நிலை நன்கு முன்னேறியுள்ளது. மேலும் பெண்கள் இன்று தம் வாழ்வில் தாம் எதிர்நோக்கும் சவால்களை வெளிப்படையாக எடுத்துச்சொல்லும் நிலை இடம்பெற்றுள்ளது. இன்று பெண் தனக்குப் போதிய பாதுகாப்பு இல்லை என்றால் அவர் தம் திருமணபந்தத்திலிருந்து விலகவும் தம் பிள்ளைகளை உரிய காரணங்களுடன் தம் கவனிப்பில் வைத்துக்கொள்ளவும் வாழ்வில் மனச்சிக்கலின்றிச் சுதந்திரமாக வாழ வழி

http://Creativecommons.org//license/by/4.0/.

இருப்பதையும் அறிய முடிகிறது. இதை அவர்கள் துணிந்து செயல்படுத்தவும் மறு திருமணம் செய்து வாழவும் இன்று பல நாடுகளின் சட்டங்கள் வழி வகுத்திருப்பதையும் அதை நடைமுறையில் நாம் பார்க்க முடிவதையும் இங்கே துணிந்து எடுத்துக்கூற இயலும். மேலும் தம் வாழ்வில் கைம்பெண்ணான நிலையும் பெண்கள் தமக்கு உரிய மதிப்புடன் வாழ வழிகள் உள்ளன.

“தரையிற் படுத்தல் வேண்டும்!
சாதம் குறைத்தல் வேண்டும்!” (பாரதிதாசன்)
“என்றும் வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?”

(பாரதிதாசன், பாலசுப்பிரமணியன், 1998இல். ப.277)

என்றும்,

“கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே - இங்கு
வேரில் பழுத்த பலா”

என்றும் பாரதிதாசன் பாடியதைப் போல் அனைவருக்கும் அத்தகு நிலைமை இன்றில்லை. இதனால், இன்று பெண்கள் கவலைப்பட வேண்டியதில்லை. மீண்டும் ஒரு புனர்வாழ்வு எடுத்ததுபோல் அவர்கள் உணரும் வகையில் சமுதாயமும் ஆண்களும் பெற்றோரும் அவர்களுக்கு உதவுகிறார்கள். இருப்பினும் தம் சமூகப் பழக்கவழக்கங்கள், காலங்காலமாக ஊறிய பண்பாட்டுக்கூறுகள் காரணமாகத் தம் வாழ்வை விதி வந்தபடி வாழும் பெண்களும் இன்னும் இன்றும் இருக்கிறார்கள் என்பதையும் இங்கே எடுத்துக்கூற வேண்டியுள்ளது. உரிய வயதில் திருமணம் அமையாத பெண்களும் வயது ஆன பிறகும் தமக்கு ஒரு துணை தேடிக்கொள்ளும் நிலை இன்றைய நூற்றாண்டில் கைவரப்பெறுகிறது. இளம் பெண்கள் முதிர்கன்னிகளாகாக ஆகாது வாழ்வில் மகிழ்ச்சியைப் பெற வழிகளை அவர்கள் கண்டறிய அவர்கள் கற்ற கல்வி உதவுகிறது. எனினும் அவர்களிலும் சிலர் பெற்றோர் பார்த்து வைப்பார்கள் என்ற பண்பாட்டுக்கூறின்படி தனியாகவே வாழ்ந்து தம் குடும்பத்திற்குச் சேவை செய்யும் நிலையையும் பார்க்க முடிகிறது. அவ்வகையில் கவிஞர் பெண்களுக்குப் பலவகைகளில் நம்பிக்கை தரும் பாடல்களைப் பாடியதிலிருந்து ஒரு வீட்டில் பெண் நல்லபடி வாழ்ந்தால் எல்லாம் நன்றாக இருக்கும் என்பதை உணர வைக்கிறார். தவிரவும் அவரது கருத்துகள் எனும்போது அங்கே கல்வி, குழந்தைகளுக்கு நல்ல வாழ்க்கை, பெண்களுக்கு நல்ல மதிப்பு ஆகியனவற்றைஎடுத்துக்காட்டும் வகையில் பாரதிதாசனின் கருத்துகள் அமைந்துள்ளன.

http://Creativecommons.org//license/by/4.0/.

தமிழர்தம் வாழ்வில் முன்னேற வேட்டுமானால் சில சித்தாந்தங்கள் அவசியம் என்ற வகையில் தமிழர் வாழ்வு நோக்கிய சில சித்தாந்தங்களைப் பாரதிதாசன் எடுத்துக்கூறியுள்ளார்.. சித்தாந்தம் என்பது உண்மையைக் கூறும் கோட்பாடுகள், தேற்றங்கள், கருத்துகள் எனப்படும். இவை நீண்ட ஆய்வின் அடிப்படையில் பெறப்பட்ட மெய்ம்மைகள் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

பாரதிதாசன் தம் படைப்புகளைப் படைப்போருக்குப் பலவேறு கருத்துகளைச் சித்தாந்தங்களாகத் தம் படைப்புகளில் விட்டுச்சென்றுள்ளார்.. இங்கு இந்தக் கட்டுரையில் அதாவது உணர்வுநோக்கிலும் பாராட்டு நோக்கிலும் இடம்பெற்ற இந்தக் கட்டுரை கட்டுரையாளர் பாரதிதாசனின் மீதான பாராட்டையும் அவரது பாடல்களின் உண்மைத்தாக்கத்தையும் நேரடியாகப் பார்த்து மகிழ்நத நிலையில் தம் உணர்வுகளை எடுத்துக்கூறும்வகையில் எழுதப்பட்டுள்ள சிறிய கட்டுரையாகும். இது தேவை ஏற்படும்போது இன்னும் பல அரிய கருத்துகளுடன் விரிவாக அமைவதற்கான சாத்தியமும் உண்டு. அவ்வகையில் சமூக வாழ்வில் பல அரிய கருத்துகளை மக்களின் மனங்களில் விதைத்துப் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளார். அதன் தாக்கம் இன்றும் இனியும் என்றும் தமிழகத்திலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர் மனங்களிலும் இல்லங்களிலும் வாழ்ந்துவரும்.

நன்றி நவில்தல்

பின்வரும் நூல்களுக்கும் இதழ்களுக்கும் நூலாசிரியர்களுக்கும் இணையப் பக்கங்களுக்கும் எனது பணிவான நன்றி உரித்தாகுக!

1. திருக்குறள்
2. பாரதியார் பாடல்கள்
3. பாரதிதாசன் பாடல்கள்
4. மாலை மலர்
5. பாலசுப்பிரமணியன் சி., (1998 27ஆம் பதிப்பு). தமிழ் இலக்கிய வரலாறு. மணமலர்ப் பதிப்பகம். சென்னை.ப.277.
6. தமிழ் இணையப் பல்கலைக்கழகம், தமிழ் நாடு, இந்தியா.
7. https://www.google.com/search?q=%E0%AE%95%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AF%88+%E0%AE%A8%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81%E0%AE%B1%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%95%E0%AF%8D+%E0%AE%95%E0%AF%8B%E0%AE%A4%E0%AF%81%E0%AE%AE%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D+%E0%AE%AA%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%AE%E0%AF%8D&rlz=1C1CHZN_enSG1068SG1068&oq=%E0%AE%95%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E

http://Creativecommons.org//license/by/4.0/.

0%AF%88+%E0%AE%A8%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%81%E0%AE%B1%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%81%E0%AE%95%E0%AF%8D++&gs_lcrp=EgZjaHJvbWUqCQgBEAAYExiABDIGCAAQRRg5MgkIARAAGBMYgATSAQoxMjc5MWowajE1qAIIsAIB&sourceid=chrome&ie=UTF-8

8. https://www.maalaimalar.com/health/womensafety/2017/01/11081634/1061384/female-education-necessary-for-bettering-House-and.vpf

9. chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://singteach.nie.edu.sg/wp-content/uploads/2023/10/SingTeach_Issue-86.pdf

10. https://www.tamilvu.org/slet/l9100/l9100pd1.jsp?bookid=146&pno=7

11. https://www.tamilvu.org/courses/degree/c011/c0114/html/c0114402.htm

12. பாரதிதாசன்(ஆர்).கோவிந்தராஜன், எஸ்., சீர்காழி (பாடியவர்). இசையமுது - தந்தை பெண்ணுக்கு. ஒளிக்காட்சி. https://www.youtube.com/watch?v=-R34aYyZDKY .

13. பாரதிதாசன். *மயிலம் சுப்பிரமணியர் துதியமுது* என்ற தலைப்பிலான பாடல். இணையப்பக்கம்: https://www.tamilvu.org/slet/l9100/l9100pd1.jsp?bookid=146&pno=.

14. பாரதிதாசன். சங்கே முழங்கு. *பாரதிதாசன் கவிதைகள்,* 27, சங்கநாதம். இணையப்பக்கம்: https://www.tamilvu.org/courses/degree/c011/c0114/html/c0114405.htm

மேற்கோள் நூல் பட்டியல்

- லாரன்ஸ் வோங். 2024. *தேசிய தினப் பேரணி உரை*. சிங்கப்பூர். Prime Minister and Minister for Finance Lawrence Wong delivered his National Day Rally 2024 speech on 18 August 2024 at the Institute of Technical Education (ITE) Headquarters. இணையப்பக்கம்: https://www.pmo.gov.sg/Newsroom/National-Day-Rally-2024
- வசந்தம் தொலைக்காட்சி. 01.09.2024 அன்று மாலை 7.10க்கும் 7.15க்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம்பெற்ற ஒளிவழிச் செய்தி. மீடியாகார்ப்.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

15. திராவிட இயக்க இதழ்கள் தமிழ் மொழிக்கு ஆற்றிய சேவைகள்

முனைவர் G.ரவி,
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர் வரலாற்றுத்துறை,
விருதுநகர் இந்து நாடார்களுக்குப் பாத்தியப்பட்ட செந்திக்குமார நாடார் கல்லூரி,விருதுநகர்
DOI 10.5281/zenodo.13761801.

Abstract:

It is important that a language should be rich in any genre! Poetry, stage prose, journalism, novel, short story, drama, screen, science, Tamil, if there is a mark in these, then a language is a rich language - a language that shines with concentration. Dravidian movement writers and speakers continuously strived for Tamil to achieve such a status and expressed the richness of the Tamil language, which was rich in science, politics, reasoning, history, literature as the official language, in the social sphere.

ஒரு மொழி என்றால் எந்ததெந்த வகைகளில் வளம் பெற்றிருக்க வேண்டும் என்பது முக்கியம்! கவிதை, மேடை உரைநடை, இதழியல், புதினம், சிறுகதை, நாடகம், திரை, அறிவியல், ஆட்சித்தமிழ் இவற்றில் முத்திரை பதித்து இருந்தால் தான் ஒரு மொழி வளமான மொழி - செறிவு மிளிரும் மொழி என்று பொருள். தமிழ் இத்தகைய நிலையை அடைவதற்கு திராவிட இயக்க எழுத்தாளர்களும், பேச்சாளர்களும் இடையறாது முனைந்து, அறிவியல், அரசியல், பகுத்தறிவு, வரலாறு, இலக்கியம் ஆட்சிமொழி என அனைத்திலும் வளம் பெற்ற தமிழ்மொழியின் செழுமையைச் சமூகப் பரப்பில் வெளிப்படுத்தியது. ஆகும்.

திராவிட இயக்கத்தின் வளர்ச்சியில் அவ்வியக்கத்தைச் சேர்ந்த இதழ்களுக்கும் பெரும் பங்கிருக்கிறது. பிற எந்த இயக்கங்களைவிடவும் தமிழகத்தில் இதழ்களின் தாக்கத்தால் மக்களையும் தலைவர்களையும் ஒருங்கிணைத்ததில் திராவிட இயக்க இதழ்களின் பணி முதன்மையானது. தென்னிந்திய நல உரிமைச்சங்கம் - நீதிக்கட்சி - திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என, ஒன்றிலிருந்து ஒன்றாக,, படிப்படியாகப் பல்வேறு பரிணாமங்களில் வளர்ந்த இவ்வியக்கங்களின் ஆணிவேர்களாகத் திகழ்ந்தவை நூற்றுக்கும் மேற்பட்ட திராவிட இயக்க இதழ்களாகும்.

காங்கிரஸ் பேரியக்கம், பொதுவுடமை இயக்கம் ஆகிய தேசிய இயக்கங்களைப் போலவே திராவிட இயக்கமும் தோற்றம் பெற்றது. திராவிட இனத்தின் பண்பாட்டை, வளத்தை, மொழியை, ஆளுமையை இங்குவாழும் சிறுபான்மை பிராமணர்கள் எப்படி அழித்துக் கொண்டிருந்தனர் என்பதை மிகவும் வேகமாக, மக்களிடம் அவர்களுக்கு ஏற்ற வெளிப்படையான, வீறுமிக்க, கவித்துவமான எளிய ஒரு புதிய மொழிநடையில் திராவிட இயக்கத்தின் இதழ்கள் கொண்டு சென்றன..

திராவிட இயக்க இதழியல் போக்குகளைக் கூறும்பொழுதே அவ்வியக்கம் , அன்றைய தமிழ்நாட்டில் செல்வாக்குடன் திகழ்ந்த காங்கிரஸ் மற்றும் பொதுவுடைமை இயக்கம் ஆகியவற்றிற்கு மாற்றாக வளர்ந்தது என்பதை தெரிந்து கொள்ளலாம்

http://Creativecommons.org//license/by/4.0/.

1942 இல் அறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்ட திராவிட நாடு வார இதழ், இக்கால கட்டத்தின் திராவிட இயக்க இதழ்களின் தலைசிறந்த பிரதிநிதியாக விளங்கி, 1963 வரை நடைபெற்றது. திராவிட இயக்க இதழ்களில் மட்டுமல்லாமல், பொதுவாகத் தமிழ் இதழியல் வரலாற்றிலேயே, திராவிட நாடு ஈடு இணையற்ற ஓர் இடத்தைப் பெற்றுவிட்டது என்பது முழு உண்மை. ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர்களின் இதயங்களைக் கவர்ந்த இலட்சிய கீதமாக அது விளங்கியது. தமிழ் எவ்வளவு ஆற்றல் மிக்க மொழி என்னும் உண்மை, திராவிட நாடு இதழில் அண்ணா அவர்களால் தீட்டப்பட்டுவந்த அழகிய எழுத்தோவியங்களால் தெள்ளத்தெளிவாக விளங்கியது. திராவிட இயக்கத் தோழர்கள் மட்டும் அல்லாமல், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் முதலிய மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்கூட, அந்த இதழின் கவர்ச்சிமிக்க தமிழ் நடைக்காக அளவற்ற ஆர்வத்துடன் வாரந்தோறும் அதைப் படிக்கலாயினர். ஞாயிறுதோறும் காஞ்சிபுரத்திலிருந்து வெளிவந்த அந்த இதழ், சென்னை உட்பட வெளியூர்கள் அனைத்திலும் திங்கட்கிழமை காலை கிடைக்கும். திங்கட்கிழமை எப்போது வரும் வரும் என்று ஒவ்வோர் ஊரிலும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஆவலுடன் காத்திருந்து, அன்றைய பொழுது விடிந்ததும் பத்திரிகைக் கடைகளுக்கு ஓடிச்சென்று இதழை வாங்கி, எல்லையற்ற ஆர்வத்துடன் இதழ் முழுவதையும் படித்து விட்டுத்தான் வேறுவேலை பார்ப்பது அக்கால வழக்கம். பொது இடத்தில் அமர்ந்து கொண்டு, ஒருவர் அந்த இதழை உரத்த குரலில் படிப்பதும், அவர் அருகில் அமர்ந்து கொண்டு ஏராளமான இளைஞர்கள் அதை ஆர்வத்துடன் செவிமடுப்பதும், அக்காலத்தில் பல்வேறு ஊர்களில் திங்கள் தோறும் நடைபெற்ற ஓர் அரிய காட்சி ஆகும்.

திராவிட இயக்க இதழ்களின் சிறப்புக் கூறுகள்

1916 இல் திராவிட இயக்கம் தொடங்கப்பட்டதிலிருந்து தற்காலம் வரை நடத்தப்பட்ட திராவிட இயக்க இதழ்கள், குறைந்தது இருநூறுக்கு மேல் இருக்கும். இவற்றில் விடுதலை நாளிதழ் என்பது ஆண்டுகளுக்கு மேலாகவும், முரசொலி இதழ் அறுபது ஆண்டுகளுக்கு மேலாகவும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அண்ணாவின் திராவிட நாடு வார இதழ், 1942 முதல் 1963 வரை - 21 ஆண்டுகள் வெளி வந்துள்ளது. பெரியாரின் குடியரசு வார இதழ், ஏறத்தாழ அதே அளவு ஆண்டுகள் நடத்தப் பட்டிருக்கிறது. பல இதழ்கள் சில மாதங்களோ சில ஆண்டுகளோ நடத்தப்பட்டு, அதன்பின் நின்றுவிட்டிருக்கின்றன. காஞ்சி. மணிமொழியார் இணை ஆசிரியராக இருந்து நடத்திய போர்வாள் வார இதழ், 1947 இல் தோன்றி, 1954 வரை நடத்தப்பட்டு, 1955, 1956 ஆகிய இரண்டு ஆண்டுகள் நிறுத்தப்பட்டிருந்து, 1957, 1958 ஆகிய ஆண்டுகளில் மீண்டும் நடத்தப்பட்டது. திராவிட இயக்க இதழ்கள் நடைபெற்ற கால அளவு எத்தகையதாக இருந்தாலும், இருநூறுக்கு மேற்பட்ட இதழ்கள் இந்த இயக்கத்தின் சார்பில் வெளி வந்துள்ளது. என்பது, இந்த இயக்கத்திற்கே உரிய ஒரு தனிப் பெருமை. தமிழ் நாட்டிலுள்ள காங்கிரஸ், கம்யூனிஸ்ட் முதலிய வேறு எந்த அரசியல் இயக்கத்தின் சார்பிலும் இவ்வளவு

http://Creativecommons.org//license/by/4.0/.

எண்ணிக்கையில் இதழ்கள் நடத்தப்படவில்லை என்பது இச்சமயத்தில் கவனத்தில் கொள்ளவேண்டிய செய்தியாகும்.

திராவிட இயக்க இதழ்களின் சிறப்புக் கூறுகள்

ஏராளமான இதழ்கள்: 1916 இல் திராவிட இயக்கம் தொடங்கப்பட்டதிலிருந்து தற்காலம் வரை நடத்தப்பட்ட திராவிட இயக்க இதழ்கள், குறைந்தது இருநூறுக்கு மேல் இருக்கும். இவற்றில் விடுதலை நாளிதழ் அறுபது ஆண்டுகளுக்கு மேலாகவும், முரசொலி இதழ் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகவும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அண்ணாவின் திராவிட நாடு வார இதழ், 1942 முதல் 1963 வரை - 21 ஆண்டுகள் நடைபெற்றிருக்கிறது. பெரியாரின் குடியரசு வார இதழ், ஏறத்தாழ அதே அளவு ஆண்டுகள் நடத்தப் பட்டிருக்கிறது. பல இதழ்கள், சில மாதங்களோ சில ஆண்டுகளோ நடைபெற்று, அதன்பின் நின்றுவிட்டிருக்கின்றன. இன்று தொடக்க உரை ஆற்றும் நானும் என் அருமைத் தந்தையார் காஞ்சி. மணிமொழியார் அவர்களும் இணை ஆசிரியர்களாக இருந்து நடத்திய போர்வாள் வார இதழ், 1947 இல் தோன்றி, 1954 வரை நடத்தப்பட்டு, 1955, 1956 ஆகிய இரண்டு ஆண்டுகள் நிறுத்தப்பட்டிருந்து, 1957, 1958 ஆகிய ஆண்டுகளில் மீண்டும் நடத்தப்பட்டது. திராவிட இயக்க இதழ்கள் நடைபெற்ற கால அளவு எத்தகையதாக இருந்தாலும், இருநூறுக்கு மேற்பட்ட இதழ்கள் இந்த இயக்கத்தின் சார்பில் நடைபெற்றிருக்கின்றன என்பது, இந்த இயக்கத்திற்கே உரிய ஒரு தனிப் பெருமை. தமிழ் நாட்டிலுள்ள காங்கிரஸ், கம்யூனிஸ்ட் முதலிய வேறு எந்த அரசியல் இயக்கத்தின் சார்பிலும் இவ்வளவு வியக்கத்தக்க எண்ணிக்கையில் இதழ்கள் நடைபெறவில்லை என்பது இச்சமயத்தில் கவனத்தில் கொள்ளவேண்டிய செய்தியாகும்.

திராவிட இதழ்களின் பொற்காலம்: 1916 இல் நீதிக்கட்சி தொடங்கப்பட்டதிலிருந்து 1942 வரை, நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றின் சார்பில் நடைபெற்ற இதழ்களின் மொத்த எண்ணிக்கை, ஐம்பதிற்கும் குறைவாகவே இருக்கும். 1942 இல் அறிஞர் அண்ணாவின் திராவிட நாடு இதழ் தொடங்கப்பட்டு, தமிழ் நாட்டில் மாபெரும் செல்வாக்குப் பெற்றபின், திராவிட இயக்கச் சார்பில் ஏராளமான இதழ்கள் தோன்றின. 1942 முதல் 1962 வரை உள்ள கால கட்டத்தைத் திராவிட இதழ்களின் பொற்காலம் என்றே குறிப்பிடலாம். இக்கால கட்டத்தில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட திராவிட இதழ்கள் புதிதாகத் தொடங்கப்பட்டன 1942 க்குப் பிறகு திராவிட இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள் அனைவருமே இதழாசிரியர்களாக இருந்துள்ளனர் என்பது இந்த இயக்கத்தின் தனிச்சிறப்புகளில் ஒன்று. திராவிடத் தலைவர்கள் இதழாசிரியர்களாக அமர்ந்து நடத்திய இதழ்கள் சிலவற்றை, எடுத்துக் காட்டுகளாக இங்கே குறிப்பிடலாம்.

பெரியார் ஈ.வேரா. - குடியரசு , பகுத்தறிவு, புரட்சி, விடுதலை,அறிஞர் அண்ணா - திராவிட நாடு, காஞ்சி, கலைஞர் கருணாநிதி - முரசொலி, முத்தாரம், பேராசிரியர்

http://Creativecommons.org//license/by/4.0/.

அன்பழகன் - புதுவாழ்வு, நாவலர் நெடுஞ்செழியன் - மன்றம்,கவிஞர் பாரதிதாசன் - குயில், கவிஞர் கண்ணதாசன் - தென்றல்,திருமதி . சத்தியவாணி முத்து - அன்னை, சிபி. சிற்றரசு - தீப்பொறி, தீச்சுடர்,கே.ஏ. மதியழகன் - தென்னகம்,ஏ.வி.பி. ஆசைத்தம்பி - தனி அரசு, இராம. அரங்கண்ணல் - அறப்போர், ஏபி. ஜனார்த்தனம் - தோழன்,காஞ்சி மணிமொழியாரும் மா. இளஞ்செழியனும், போர்வாள்

1967 இல் ஒன்பது பேர் கொண்ட தி.மு.க. அமைச்சரவையை அறிஞர் அண்ணா அமைத்தபோது, அதில் ஐந்து பேர் இதழாசிரியர்களாக இருந்தவர்கள் என்பது, திராவிட இதழியல் வரலாற்றில் மட்டும் அல்லாமல், இந்திய இதழியல் வரலாற்றிலேயே தனித்து இடம் பெறத்தக்க ஒரு சிறப்புச் செய்தி.

தூய தமிழ்ப் பெயர்கள்: திராவிட இயக்க இதழ்களில் இரண்டொன்றைத் தவிர ஏனைய இதழ்கள் யாவும் தூய தமிழ்ப் பெயர்களையே கொண்டுள்ளன என்பது, தமிழ் நெஞ்சங்களில் தேனாக இனிக்கும் நற்செய்தி. தலைவர்களால் நடத்தப்பட்ட இதழ்களாக முன்னர் குறிப்பிடப்பட்ட பெயர்கள் யாவும் தூய தமிழில் அமைந்திருக்கின்றன அல்லவா? அவற்றைத் தவிர, எடுத்துக் காட்டுகளாகத் தூய தமிழில் அமைந்த திராவிட இதழ்களில் சிலவற்றின் பெயர்கள் வருமாறு: அழகு, அறிவு, அறிவியக்கம், அறிவுக்கொடி, இனமணி, இன முழக்கம், கிளர்ச்சி, சீர்திருத்தம், ஞாயிறு, தமிழ் உலகம், திருவிளக்கு, தென்னரசு, நம்நாடு, நிலவு, பொன்னி, மறவன் மடல், முருகு, முகில், முல்லை, விடிவெள்ளி.

இயக்க ஆர்வமே முதலீடு: திராவிட இதழ்களைத் தொடங்கியவர்களில் பெரும்பாலோர், பொருள் வசதி அற்றவர்கள். எப்பாடுபட்டாவது இயக்கக் கருத்துகளைப் பரப்ப வேண்டும் என்னும் ஆர்வமே அவர்கள் பெற்றிருந்த முதலீடு.

சில எடுத்துக்காட்டுகள்: நவயுகம்:

1937 இல் அறிஞர் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு காஞ்சி மணிமொழியாரால் தொடங்கப்பட்ட இந்த இதழுக்குத் தனி அலுவலகம் கிடையாது காஞ்சி மணிமொழியாரின் நண்பராகிய வி.எம். கடிகாச்சலம் என்னும் மணமாகாத இளைஞர் ஒருவருடைய இருப்பிடமே, இந்த இதழுக்குக் கிடைத்த இலவச அலுவலகம். அந்த இளைஞரின் இல்லத்தில்தான் அண்ணா அவர்களும் இயக்கத் தோழர்களும் இந்த இதழ் பற்றி அடிக்கடி கலந்துரையாடுவது வழக்கம்

திராவிட நாடு:

1942 இல் அண்ணா அவர்களால் இந்த இதழ் தொடங்கப்பட்டபோது அவருக்குச் சொந்த அச்சகம் இல்லை; அத்தகைய அச்சகத்தைத் தொடங்குவதற்குரிய பண வசதியும் இல்லை. சொந்த அச்சகம் இருந்தால்தான் வாரந்தோறும் இதழை உரிய நேரத்தில் கொண்டு வரமுடியும் என்பதை நன்குணர்ந்த இயக்கதலைவர் பெரியார், அச்சகம் தொடங்குவதற்கு நன்கொடைகள் வழங்குமாறு இயக்கத் தோழர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். அந்த வேண்டுகோளின்

http://Creativecommons.org//license/by/4.0/.

அடிப்படையில் கிடைத்த சிறு தொகையைக் கொண்டுதான் அண்ணா அவர்களால் சிறியதோர் அச்சகம் சொந்தமாகத் தொடங்கப்பட்டு, இதழ் தவறாமல் வருவதற்கு வழி அமைக்கப்பட்டது.

திராவிட இதழ்களின் சாதனைகள்

பொதுவாக இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழகத்திலும், சமுதாயத்தைப் பல்வேறு சாதிகளாகப் பிரித்து, அவற்றிற்கு இடையே ஏற்றத்தாழ்வைக் கற்பிக்கும் வர்ணாசிரம முறை நெடுங்காலமாக இருந்துவருகிறது. பல்வேறு அடுக்குகளாக அமைந்த இந்தச் சாதி முறையின் மீது கடும்போர் தொடுத்த திராவிட இதழ்கள் சாதி முறையின் ஆணிவேரை அசைத்து, அதன் அடிப்படையே ஆட்டங்காண வைத்திருக்கின்றன; தீண்டாமைக் கொடுமையைப் பெருமளவுக்குக் குறைத்திருக்கின்றன; மேல் சாதியினர் எனப்படுவோர் ஆணவத்துடனும், கீழ் சாதியினர் எனப்படுவோர் அச்சத்துடனும் வாழ்ந்த நிலையை மாற்றி, பெருமளவுக்குச் சரிநிகர்சமானமாக வாழும் நிலையை உருவாக்கி இருக்கின்றன

சமுதாயத்தில் ஆழமாக வேரூன்றி இருக்கிற எண்ணற்ற மூட நம்பிக்கைகளை அடியோடு ஒழிக்க முடியாவிட்டாலும், மக்களின் வாழ்க்கையில் மூடநம்பிக்கைகளுக்கு இருந்த பலமான இரும்புப்பிடியைத் திராவிட இதழ்கள், குறிப்பிடத்தக்க அளவு தளர்த்தியிருக்கின்றன.

தமிழ்நாட்டில் மக்களுடைய பெயர்கள், இதழ்களின் பெயர்கள், ஊர்களின் பெயர்கள், தொழில் நிறுவனங்களின் பெயர்கள், திருமணம் முதலிய குடும்ப நிகழ்ச்சிகள் இவற்றிலும் இன்ன பிறவற்றிலும் பல நூற்றாண்டுகளாக இருந்துவந்த வடமொழி ஆதிக்கத்தை எதிர்த்து அழிப்பதில் திராவிட இதழ்கள் பெரியதொரு வெற்றியைப் பெற்றிருக்கின்றன. தமிழ் நாட்டு இதழ்களின் பெயர்களில் மட்டுமல்ல; அவற்றில் கையாளப்பட்ட தமிழ் நடையிலும், திராவிட இதழ்கள் தோன்றுவதற்கு முன்பு, அளவுக்கு மீறிய வடமொழி ஆதிக்கம் காணப்பட்டது. ஆனால் திராவிட இதழ்களின் தோற்றத்திற்குப் பிறகு, மாற்றுக்கட்சிகளின் இதழ்களில் கூட, வடசொல் கலப்பு கிட்டத்தட்ட இல்லை என்று கூறத்தக்க நிலை ஏற்பட்டு, அழகிய இனிய தமிழ் நடை எழில் நடம் புரிவதைக் காணலாம்.

திராவிட இதழ்களின் தோற்றத்துக்கு முன்பு, பல்வேறு புராண நூல்களும், இராமாயணம், பாரதம் முதலிய வடமொழித் தழுவல் தமிழ் இலக்கியங்களுமே தமிழ் நாட்டுச் சமுதாயத்தில் சிறப்பிடம் பெற்றிருந்தன. திராவிட இதழ்கள் வளர்ந்த பிறகோ, அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, குறுந்தொகை முதலிய எட்டுத்தொகை நூல்களும், பத்துப்பாட்டு நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களும், திருக்குறளும் தமிழ் மக்களால் பேரார்வத்துடன் படிக்கப்பட்டு, பெருமதிப்புடன் பாராட்டப்படும் நிலை பிறந்தது. எங்குப் பார்த்தாலும் இராமாயண, பாரத கதாகாலட்சேபங்கள் நடந்து வந்த நிலை அகன்று, திருக்குறள் வகுப்புகளும் விரிவுரைகளும் மாநாடுகளும் நடைபெறும் சூழ்நிலை உருவாயிற்று.

அரசியல், பொருளியல் முதலிய துறைகளில் கோலோச்சி இருந்த வடநாட்டு ஆதிக்கத்தைக் குறைப்பதில் திராவிட இதழ்கள் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளன.

http://Creativecommons.org//license/by/4.0/.

அந்த இதழ்களை விரும்பாதவர்கள் கூட இந்த உண்மையை ஏற்றுக்கொள்வார்கள் என்பது உறுதி.

தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் இயக்கம் பணிபுரியத் தொடங்குவதற்கு முன்னாலேயே சமதர்ம உணர்வையும் பொதுஉடைமைக் கருத்துகளையும் முதன் முதலில் பரப்பியவை திராவிட இதழ்களே. உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்னும் முழக்கத்தை அடிப்படையாகக் கொண்ட மே தினத்தின் சிறப்புகளை முதன்முதலில் விளக்கிக் காட்டி, தமிழ் நாடெங்கும் அந்த நாளைக் கொண்டாட வைத்தது, திராவிட இதழ்களின் சாதனைகளில் ஒன்று. முதலாளிகள், தொழிலாளிகள், தலைவர்கள், தொண்டர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் முதலிய எத்தகைய நிலையில் இருப்பவர்களையும் தோழர் என்னும் ஒரே அடைமொழியால் அழைத்து, அனைவரும் இந்நாட்டு மன்னரே என்பதை நிலைநாட்டுவது ஒரு முக்கியமான சமதர்ம மரபு. இந்த மரபைத் தமிழகத்தில் முதன் முதலில் நடைமுறைக்குக் கொண்டுவந்தவை சுயமரியாதை இயக்க இதழ்களே

பெரும்பாலான திராவிட இதழ்கள், ஒவ்வொன்றும் ஒரு நடமாடும் கல்லூரியாக இருந்து, உலகத்தின் பல்வேறு துறைகள் பற்றிய விரிவான அறிவைப் பொதுமக்களுக்கு ஊட்டி வந்தன. ரூசோ, இங்கர்சால், வால்டேர், எமிலிஜோலா முதலிய மேல்நாட்டு எழுத்து வேந்தர்கள், சாக்ரடீஸ், பிளாட்டோ, அரிஸ்டாட்டில் முதலிய தத்துவ ஞானிகள், மாஜினி, கரிபால்டி, லெனின், மார்ட்டின் லூதர் முதலிய அறப்போர் அண்ணல்கள் பெர்னாட்ஷா, எச்.ஜி.வெல்ஸ், பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் முதலிய சிந்தனைச் செல்வர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளையும் அரும்பணிகளையும் எழுத்தோவியங்களையும், தொடக்கப்பள்ளி அல்லது உயர்நிலைப் பள்ளியில் மட்டுமே படித்த பொது மக்களுக்குக் கூட எளிதில் விளங்கும் வகையில் எடுத்து விளக்கிய கருத்துக் கருவூலங்களாக இந்த இதழ்கள் விளங்கின

புத்துலகப் பாதையின் முன்னோடிகளாகத் திராவிட இதழ்கள் திகழ்ந்திருக்கின்றன என்பதற்கு, 1933 முதலிய ஆண்டுகளிலேயே, கருத்தடை புரிய வேண்டியதன் இன்றியமையாமையையும் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தையும் அழுத்தந்திருத்தமான முறையில் அவற்றை வற்புறுத்திக் கூறியுள்ளன என்பது, ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. முதன் முதலில் திராவிட இதழ்கள் இக்கருத்தை எடுத்துக் கூறியபோது, மெத்தப் படித்த மேதாவிகள்கூட, தாய்மார்களின் வயிற்றை அறுப்பதா - ஈதென்ன கொடுமை! என்று கண்டனக் கணைகளை வீசினர். ஆனால், இன்றோ - கருத்தடை

துறைகளில் முன்னோடிகளாக இருந்திருக்கின்றன என்பதற்குக் குடியரசு இதழின் வாயிலாகப் பெரியார் 1933இல் கொண்டுவந்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் மற்றோர் எடுத்துக்காட்டு ஆகும். அக்காலத்தில் அந்த எழுத்துச் சீர்திருத்தத்தைக் கேலியும் கிண்டலும் செய்து ஒதுக்கித் தள்ளியவர்கள் கூட, இன்று மனமார ஏற்றுக்கொண்டு, தங்கள் இதழ்களில் பின்பற்றியும் வருகிறார்கள். தமிழக அரசாங்கத்தால் இந்த எழுத்துத் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பாட நூல்கள் யாவற்றிலும் இடம்பெற்றிருக்கிறது. தினமணி முதலிய

http://Creativecommons.org//license/by/4.0/.

மாற்றுக்கட்சி நாளிதழ்கள் கூட, இந்த எழுத்து முறையை மனமார வர்வேற்று, மகிழ்ச்சியோடு கையாண்டு வருவதை இன்று நாம் காணமுடிகிறது. திராவிட இயக்க இதழ்கள் எழுத்துச்சீர்திருத்தம் முதலிய தொழில் நுணுக்கத் துறைகளில் கூட எவ்வளவு தீர்க்க தரிசனத்துடன் பணியாற்றியுள்ளன என்பதை நடுநிலை நின்று எண்ணிப் பார்க்கும் எவரும் அவற்றைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

துணைமை நின்றவை:

1. .இ .சுந்தரமூர்த்தி ,மா .ரா.அரசு , திராவிட இ யக்க இதழ்கள் தொகுதி I
2. திராவிட இயக்க இதழ்கள் ச. மெய்யப்பன் புலவர் தமிழ்ப்பித்தன் எம். ஏ. (மணிவாசகர் பதிப்பகம், சென்னன-, 1993.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

16. தமிழறிஞர் சாமி.சிதம்பரனாரின் சிந்தனைத் தளத்தில் பெண்கள்

முனைவர் கு.வளர்மதி,
உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
DOI 10.5281/zenodo.13761815.

Abstract:

Sami Chidambaranar was born on December 1, 1900 at Kadakam near Mayiladuthurai as the son of Saminatha Malayaman and Kamalampal. He received the title of 'Pandithar' in 1923 from Madurai Tamil Sangam. He was involved in the justice party and later in the self-respect movement. Sami Chidambaran married a maid named Sivagami in the year 1930 in a self-respect marriage. Sami Chidambaran wrote 62 books on literature, philosophy, society and politics. His first work was the Venba Yapi book 'Nalaini Katha' written in 1921. Sami Chidambaranar (December 1, 1900 – January 17, 1961) was a Tamil scholar, researcher, poet, journalist, writer and Dravidian movement activist. It shows the way to live a pure life. Sami Chidambaranar is one of the pioneers of Tamil in the 20th century. The purpose of this article is to explore the thoughts of Tamilrinjarsamy.Chitambaranar about women under the title of 'Mother's freedom (a) Women's pride' in Sami.Chitambaranar's encyclopedia – 11

முன்னுரை

சாமி.சிதம்பரனார், மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள கடக்கம் எனும் சிற்றூரில் டிசம்பர் 1, 1900-இல் சாமிநாத மலையமான்- கமலாம்பாள் இணையருக்கு மகனாகப் பிறந்தார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் 1923-ஆம் ஆண்டு 'பண்டிதர்' பட்டம் பெற்றார். நீதிக்கட்சியின்மீதும், அதன்பின் சுயமரியாதை இயக்கத்தின்மீதும் ஈடுபாடு கொண்டார்.சாமி.சிதம்பரனார் 1930-ஆம் ஆண்டு சிவகாமி என்னும் கைம்பெண்ணை சுயமரியாதைத் திருமணமுறையில் மணம் புரிந்தார். சாமி.சிதம்பரனார் இலக்கியம், தத்துவம், சமுதாயம், அரசியல் என 62 நூல்கள் எழுதினார். 1921-இல் எழுதிய 'நளாயினி கதை' என்ற வெண்பா யாப்பிலான நூல் அவரது முதல் படைப்பு ஆகும்.

சாமி.சிதம்பரனார்(டிசம்பர் 1, 1900 - ஜனவரி 17, 1961) தமிழறிஞர், ஆய்வாளர், கவிஞர், இதழாளர், எழுத்தாளர் மற்றும் திராவிட இயக்கச் செயல்பாட்டாளர் ஆவார்.அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகள் பல படிப்பினைகளைத் தருவனவாகும். தூயவாழ்க்கை வாழ்வதற்கான வழியைக் காட்டுவனவாகும். இருபதாம் நூற்றாண்டில் தமிழுக்கு அருந்தொண்டாற்றியவர்கள் வரிசையில் சாமி.சிதம்பரனாரும் ஒருவர். சாமி.சிதம்பரனார் நூற்களஞ்சியம் - 11 எனும் நூலில் இடம்பெற்றுள்ள 'மாதர் சுதந்திரம் (அ) பெண்மக்கள் பெருமை' எனும் தலைப்பிலான கருத்துக்களை அடியொற்றித் தமிழறிஞர்சாமி.சிதம்பரனாரின் சிந்தனைத் தளத்தில் பெண்கள்குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெண்களின் இழிநிலை - வைதீக நோக்கு

வைதீகர்கள், பெண்களை இழிநிலையில் வைத்துக் கருத்துக்களைக் கூறியுள்ளனர். உலகத்தில் மிகுதியான பாவத்தைச் செய்தவர்கள் தான் பெண்ணாகப் பிறப்பார்கள் என்று

http://Creativecommons.org//license/by/4.0/.

வைதீகர்கள் தெரிவித்துள்ளனர். பெண்மக்கள் பிறந்தது முதல் இறக்கும் வரையில் அடிமையாகவே வாழ்ந்து மடிய வேண்டுமென்பதே, வைதீகர்களின் கொள்கையாகும். மணஞ்செய்யப்பட்ட பெண்கள், வேறு எந்த ஆண்மக்களையும் பார்க்கக் கூடாது. கணவன் இறந்தால், மனைவியும் உடனே இறந்துவிட வேண்டும். அவ்வாறின்றி, விதவைகளாக உயிர்வாழ விரும்புகின்ற பெண்மக்கள், தங்கள் பிள்ளைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்ள வேண்டும். பொதுவாகப் பெண்மக்கள், வயிறு நிறைய உணவு உட்கொள்வதற்குக் கூட உரிமை அற்றவர்கள்.

பெண்களை வேலைசெய்யும் கருவிகளாகவும், பிள்ளைபெறும் இயந்திரங்களாகவுமே வைதீக ஆண்மக்கள் கருதியிருக்கின்றனர். பெண்கள் பெறும் குழந்தைகள், பெண்களாக இருந்தால் அவர்கள் அவ்வளவு சிறப்பாகப் பாராட்டப்படுவதில்லை. ஒவ்வொரு பெண்மகளும், ஒவ்வொரு ஆண்மகனையாவது பெற்றாக வேண்டும். ஆண்மக்களைப் பெறாத பெண்மக்கள் பாவிகள். அவர்கள் முகத்தைப் பார்த்தால்கூட, பார்த்தவர்களுக்குப் பாவம் வந்துவிடும் என்றும் வைதீகர்கள் மொழிந்துள்ளனர்.

“பெண்கள் விபசாரித்தனமும், நிலையற்ற மனமும், நட்பில்லாமையும்

ஆகிய குணங்களை இயற்கையாக உடையவர்கள்”[1]

என்று வைதீகர்களால் புகழ்ந்து பேசப்படுகின்ற மநுதரும சாத்திரம் என்னும் ஸ்மிருதியில் பெண்களைப் பற்றி இழிவாகக் கூறப்பட்டுள்ளது.

“படுக்கை, ஆசனம், அலங்காரம், காமம், கோபம், பொய், துரோக சிந்தை

இவற்றைப் பெண்களுக்காகவே மநுவானவர் கற்பித்தார்”[2]

என்பதும் மநுதரும சாத்திரத்தின் கூற்றாகும். மநுதரும சாத்திரமேயன்றி, வேறுபல சாத்திரங்களிலும் பெண்களைப் பற்றி இழிவாகவே கூறப்பட்டிருக்கின்றன. இதனைச் சாமி.சிதம்பரனார் நூற்களஞ்சியம் - 11 எனும் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பெண்களின் உயர்நிலை - வைதீக நோக்கு

வைதீகர்கள், பெண்களை இழிநிலையில் மட்டுமல்லாது உயர்நிலையில் வைத்தும் கருத்துக்களைக் கூறியுள்ளனர். பெண்மக்களை மிகவும் இழித்துக் கூறும் மநுதரும சாத்திரத்தில் கூட,

“மனையாள், பிள்ளை, கணவன் இம்மூவரும் சேர்ந்துதான் புருஷன் ஆகிறான் என்று வேதத்திற் சொல்லியிருக்கிறது. (அதாவது மனையாள் பாதி சரீரம் என்றும், புத்திரன் ஆத்ம சுவரூபமென்றும் கருத்து) பின்னும் வேதம் அறிந்தவர்களும், கணவனுக்கும் மனையாளுக்கும் பேதம் இல்லையென்று இருவருக்கும் ஐக்கியஞ் சொல்லுகிறார்கள்”[3]

http://Creativecommons.org//license/by/4.0/.

என்று கூறப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுபாடில்லை என்பதை ஒருவகையில் ஒப்புக்கொண்டவர்கள் ஆகின்றார்கள். உலக வாழ்க்கையில் நன்மை தரத்தக்க எல்லாப் பொருள்களையும் பெண் தெய்வத்தின் பெயரால் குறிப்பிட்டிருக்கும் பழைய வைதீகரின் மனப்பான்மையை ஆராய்ந்தறிய வேண்டும். பழைய வைதீகக் கொள்கைப்படி, ஆண்மக்களைக் காட்டிலும் பெண்மக்கள் உயர்ந்தவர்கள் என்பதைச் சாமி.சிதம்பரனார் சுட்டிக் காட்டியுள்ளார்.

பெண்களுக்கான பிறவிக்குணங்களும் கற்புநிலையும்

பெண்களுக்கு மட்டுமே பிறவிக்குணங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. "அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு" போன்றவை பெண்களுக்கே உரிய குணங்களாக உள்ளன. இவையனைத்தும் பெண்களை அடக்கி ஆளும் பொருட்டே பெண்கள் மேல் ஆண்கள் சுமத்தியுள்ளனர்.

கற்பு எனும் சொல், பெண்களும் ஆண்களைப் போலவே வாழும் உரிமையுடையவர்கள் என்பதைக் காட்டி நிற்கும் சொல்லாகும். திருக்குறளில் "வாழ்க்கைத் துணைநலம்" எனும் அதிகாரத்தில் இல்லறத்தில் இருக்கின்ற பெண்களுக்கு அமைந்திருக்க வேண்டிய குணங்கள் கூறப்பட்டுள்ளன. இதிலிருந்து திருவள்ளுவரும் கற்பு என்பது,

> **"ஒரு பெண் ஒரு ஆடவனுக்கு அடிமைப்பட்டு, அவனுக்கு வேண்டிய ஊழியங்களைச் செய்து கொண்டு, தான் தன் விருப்பப்படி ஒருவித இன்பத்தையும் அனுபவிப்பதற்குச் சுதந்திரமின்றி வாழ்வது"**[4]

என்று குறிப்பிடுவதை அறியமுடிகிறது. "கற்பெனப்படுவது சொல்திறம்பாமை" என்றும், "பெண்டிர்க்கு அழகு எதிர்பேசாதிருத்தல்" என்றும் கூறிய மொழிகளே, பிற்காலத்தினரால் கற்பின் இலக்கணமாகக் கொள்ளப்பட்டுவிட்டன.

உண்மையான கற்பு பெண்களுக்கு வேண்டுமென்பதைச் சுயமரியாதை இயக்கம் மறுக்கவில்லை. பண்டைத் தமிழர்களும் மறுக்கவில்லை. ஆனால்,

"நாங்கள் எப்படியிருந்தாலும் குற்றமில்லை. நாங்கள் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொள்ளலாம். கல்யாணம் செய்து கொண்ட பெண்களைத் தவிர இன்னும் எத்தனை பெண்களிடம் வேண்டுமானாலும் நேசம்வைத்துக் கொள்ளலாம். பெண்கள் மாத்திரம் அம்மாதிரி இருத்தல் கூடாது. அவர்கள் அடிமையாகவே எங்கள் சொற்படி தான் நடக்க வேண்டும்"[5]

என்று கூறுகின்ற அறிவற்ற சுயநலம் பிடித்த மொழிகளைத் தான் அக்கிரமம் என்று கூறி, சுயமரியாதை இயக்கத்தினர் மறுக்கின்றனர் என சாமி.சிதம்பரனார் குறிப்பிடுகின்றார். பெண்களுக்கு எவ்விதமான ஒழுங்கு வேண்டுமென்று கூறுகின்றீர்களோ, அவ்வாறே நீங்களும் நடந்து கொள்ளுங்கள் என்று சுயமரியாதை இயக்கத்தினர் ஆண்களுக்கு கற்புநிலையினை வலியுறுத்துகின்றனர்.

http://Creativecommons.org//license/by/4.0/.

பெண்களும் வலிமையும்

வல்லவர் என்பவர்களுக்கு உடல் வலிமை, மனவலிமை ஆகிய இரு வலிமைகளும் அமைந்திருக்க வேண்டும். உடல் வலிமைக்கும் வெற்றிக்கும் காரணமாகிய மனவலிமை ஆண்களுக்கு மிகுதியாக இருக்கின்றதா? பெண்களுக்கு மிகுதியாக இருக்கின்றதா? என்பதை ஆராய்ந்தால், பெண்களுக்குத் தான் மிகுதியாக இருக்கின்றது என்ற முடிவுக்குத்தான் வர வேண்டும்.

"சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது"[6]

என்பது அறிஞர் வாக்கு. இத்தகைய அரியசக்தி பெண்களுக்கு உண்டு. அவர்கள் தங்கள் மனதில் எழும் உணர்ச்சியை எவ்வகையிலும் வெளிக்காட்டாமல் மறைத்து வைக்கும் ஆற்றல் உடையவர்கள். இத்தகைய ஆற்றல் ஆண்மக்களுக்கு இல்லை.

பலதிறப்பட்ட பெண்கள், தேச விடுதலைப்போரில் அஞ்சாமல் தலையிட்டு, அரசாங்கச் சேவகர்களால் தடியடியும், அரசாங்கத்தாரால் சிறைத்தண்டனையும் பெற்றிருக்கின்றனர். ஆகையால், பெண்கள் எந்த வகையிலும் ஆண்களை விட குறைந்த வலிமையுடையவர்கள் அல்லர் என்பதையும், அவர்கள் ஆபத்துக்கு இடமான செயல்களிலும் வீரஉணர்ச்சியோடு புகுந்து உழைக்கும் தன்மையுடையவர்கள் என்பதையும் அறியமுடிகிறது என சாமி.சிதம்பரனார் பெண்களின் மனவலிமைக்குப் பல்வேறு சான்றுகளை எடுத்துக்காட்டியுள்ளார்.

பெண்களும் கல்வியும்

முதலில்"பெண்மக்கள் கல்வி கற்றுவிட்டால், பிறகு ஆண்களுக்கு அடிமையாயிராமல் சமத்துவ உரிமைக்குப் போராடுவார்கள்" என்ற கருத்து பெண்களின் கல்வி குறித்து வைதீகர்களின் வாதமாகும். சிந்தித்துப் பார்த்தால் பெண்கள், ஆண்களுக்கு அடிமையாக இருக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. இரண்டாவதாக,

"பெண்கள் கல்வி கற்றால் விபசாரிகளாகி விடுவார்கள்" [7]

என்ற கூற்றை ஆராய வேண்டிய தேவையுள்ளது. முதலில், விபசாரம் பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டது என்ற தவறான கொள்கை இப்போது இருந்து வருகின்றது. ஆகையால், பெண்களுக்கு மட்டிலும் விபசாரம் கூடாது என்பதும், பெண்கள் மேல் மட்டிலும் அப்பழியைச் சுமத்துவதும் ஆண்களின் அகங்காரத் தன்மையும் அடாத செய்கையுமாகும். ஆண் மட்டும் பலபெண்களைக் காதலிக்கலாம். பலபெண்களோடு சேர்ந்து இன்பம் அடையலாம். இவ்வாறு செய்வதனால் குற்றமில்லையாம்! ஆனால், ஒரு பெண் பல ஆண்களைக் காதலிப்பதும், அவர்களோடு சேர்ந்து இன்பமடைவதும் மட்டும் பெருங்குற்றமாகி விடும் என்பதே ஆண்களின் நீதி! அறிஞர்களின் போக்கு! வைதீகர்களின் வாதமாகும். இதனால், விபசாரம் குற்றமற்றது என்று கூறி, அதை ஆதரிப்பதாக யாரும் தவறாக எண்ணிவிட வேண்டாமென்றும் சாமி.சிதம்பரனார் கருத்து தெரிவித்துள்ளார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

தமிழ் நூல்களும், தமிழர் நாகரிகமும் பெண்கல்வியைத் தடை செய்யவில்லை. பொதுவாக மருத்துவர்களாகவும், கல்வி போதிக்கும் ஆசிரியர்களாகவும் பெண்கள் முன்வந்தால், நமது நாட்டில் சுகாதாரமும் கல்வியும் நிறைந்த வளர்ச்சி அடையும். நமது நாடும் முன்னேற்றம் அடையும்.

பெண்களின் திருமணமும் சொத்துரிமையும்

பெண்களின் விருப்பப்படி, திருமணம் செய்யும் உரிமை வேண்டும். கலப்பு மணங்களை ஆதரிக்க வேண்டும். மறுமணம் செய்யும் உரிமையும் இருக்க வேண்டும். பெண்களுக்குச் சொத்துரிமையும் வேண்டும் என்கிறார், சாமி.சிதம்பரனார்.

பெண்கள் முதலில் சீர்திருத்தம் பெறாவிட்டால், ஆண்களுடைய சீர்திருத்தமும் நிலைத்திராது. ஆதலால், பெண்கள் தமது பகுத்தறிவைப் பயன்படுத்திஅதன்படி உரிமையான எண்ணமும் உரிமையான செயலும் உடையவர்களாக வேண்டும் என்று சாமி.சிதம்பரனார் குறிப்பிட்டுள்ளார்.

பெண்களின் அன்புநிலை

பெண்களின் அன்பும் தயவும் இன்றேல், ஆண்கள் இவ்வுலகில் இன்பமாக வாழமுடியாது. உடல் நலமுடன் வசிக்க முடியாது. "தாயோடு அறுசுவை போம்", "பொற்றாலியோடு எவையும் போம்" என்பதால், பெண்களுடைய அன்பையும் அவர்களால் ஆண்கள் பெறும் பேரின்பத்தையும் உணரமுடிகிறதுஎன்று சாமி.சிதம்பரனார்கருத்து தெரிவித்துள்ளார்.

தொகுப்புரை

- திராவிட இயக்கச் செயல்பாட்டாளரான சாமி.சிதம்பரனார், வைதீக நோக்கில் பெண்களின் இழிநிலையையும் உயர்நிலையையும் விவரித்துள்ளார்.
- "அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு" போன்றவை பெண்களுக்கே உரிய பிறவிக்குணங்களாக உள்ளன.
- உண்மையான கற்பு, பெண்களுக்கு வேண்டுமென்பதைச் சுயமரியாதை இயக்கம் மறுக்கவில்லை. ஆனால்,அறிவற்ற சுயநலம் பிடித்த மொழிகளைத் தான் அக்கிரமம் என்று கூறி, சுயமரியாதை இயக்கத்தினர் மறுக்கின்றனர் என சாமி.சிதம்பரனார் குறிப்பிடுகின்றார்.
- பெண்கள் எந்தவகையிலும் ஆண்களை விட குறைந்த வலிமையுடையவர்கள் அல்லர், அவர்கள் ஆபத்துக்கு இடமான செயல்களிலும் வீரஉணர்ச்சியோடு புகுந்து உழைக்கும் தன்மையுடையவர்கள் என சாமி.சிதம்பரனார் பெண்களின் மனவலிமையைக் கூறியுள்ளார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

- "பெண்மக்கள் கல்வி கற்றுவிட்டால், பிறகு ஆண்களுக்கு அடிமையாயிராமல் சமத்துவ உரிமைக்குப் போராடுவார்கள்" என்ற கருத்து பெண்களின் கல்வி குறித்து வைதீகர்களின் வாதமாகும். "பெண்கள் கல்வி கற்றால்விபசாரிகளாகி விடுவார்கள்" என்ற கூற்றையும் ஆராய வேண்டிய தேவையுள்ளது.
- பெண்கள் முதலில் சீர்திருத்தம் பெறாவிட்டால், ஆண்களுடைய சீர்திருத்தமும் நிலைத்திராது.
- "தாயோடு அறுசுவை போம்", "பொற்றாலியோடு எவையும் போம்" என்பதால், பெண்களுடைய அன்பையும் அவர்களால் ஆண்கள் பெறும் பேரின்பத்தையும் உணரமுடிகிறது.
- இவ்வாறாகப் பெண்கள் குறித்த வைதீகர்களின் கருத்துக்களை எடுத்துக்கூறி திராவிட இயக்கச் செயல்பாட்டாளரான சாமி.சிதம்பரனார், அதற்கு மறுமொழியாகப் பல்வேறு சான்றுகளை எடுத்துக்காட்டி, பெண்களுக்கு ஆதரவாகச் சிந்தித்துள்ளார். இதனை, சாமி.சிதம்பரனார் நூற்களஞ்சியம் - 11 எனும் நூல் முழுமையும் காணமுடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. தமிழறிஞர் சாமி.சிதம்பரனார், சாமி.சிதம்பரனார் நூற்களஞ்சியம் - 11, பக்.13
2. மேலது, பக்.14
3. மேலது, பக்.17
4. மேலது, பக்.28
5. மேலது, பக்.31
6. மேலது, பக்.36
7. மேலது, பக்.52

துணைநூல் பட்டியல்

1. தமிழறிஞர் சாமி.சிதம்பரனார் - சாமி.சிதம்பரனார் நூற்களஞ்சியம் -11, தமிழ்மண் பதிப்பகம், சென்னை - 17, முதல் பதிப்பு - 1929.

2. செல்வி திருச்சந்திரன் (பதிப்பாசிரியர்) - தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்நிலை நோக்கு, பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், குமரன் பதிப்பகம், சென்னை - 17, முதல் பதிப்பு - 1997.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

17. பாரதிதாசனாரின் ஆத்திச்சூடியில் திராவிடக் கருத்துக்கள்

திருமதி மு.பூங்கோதை,
தமிழ்த்துறை,உதவிப்பேராசிரியர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர்கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.
DOI 10.5281/zenodo.13761825.

Abstract

Literature acts as a field to record the nature of time. The creative field is based on the creator's living environment and experience evaluations. The personality of the creators is judged by the creation. This article highlights the Dravidian ideas found in the works of Bharathidasan, a prominent writer among Dravidian writers.

முன்னுரை

இலக்கியங்கள் காலத்தின் இயல்புகளை பதிவு செய்கின்ற களமாக செயல்படுகின்றன. படைப்பாளர்கள் வாழ்கின்ற சூழல், அனுபவமதிப்பீடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுபடைப்புக்களம் அமைகின்றது. படைப்பினைக் கொண்டு படைப்பாளர்களின் ஆளுமைத்திறன் மதிப்பிடப்படுகிறது. திராவிட எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்க படைப்பாளர் பாரதிதாசனாரின்ஆத்திச்சூடியில் காணலாகின்றதிராவிடக் கருத்துக்களை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

பாரதிதாசனாரின் ஆத்திசூடி

பாரதிதாசன் 29.04.1891 அன்று பாண்டிச்சேரியில் பிறந்தார். அன்னாரின் இயற்பெயர் கனக சுப்புரைத்தினம். பாரதியார் மீது கொண்டிருந்த பற்றின் காரணமாகத் தன் பெயரை பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டவர். தமிழாசிரியராகப் பணியாற்றிய பெருந்தகை. தமிழ் மூதாட்டி ஔவை போன்று 84 ஓரடிகளைக் கொண்ட ஆத்திசூடி இயற்றியுள்ளார். பாரதிதாசன் இறை நம்பிக்கை அற்றவர். ஆதலால் தனது நூலின் தொடக்கத்தில் கடவுளை வாழ்த்தாமல் பாயிரம் பாடி துவங்குகின்றார்.

பாயிரச் சிறப்பு

“ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூல்பெயர் யாப்யே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்யப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே”

என்று பாயிரமானது ஆசிரியர் பெயர், நூலின் தன்மை (முதல் நூல் அல்லது வழி நூல்), நூல் தலைப்பு ஆகியவற்றை கூறுவது என்று நன்னூல் விளக்குகின்றது.பாயிரம் என்பது தமிழ் இலக்கியங்களில் முன்னுரை போன்று அமைவது. பெரும்பாலும் பாயிரம்

http://Creativecommons.org//license/by/4.0/.

பாடலாகஅமையப் பெறுகின்றது. முகவுரை, பதிகம் என்று வேறு பெயர்களைக் கொண்டதாக அமையும். இதனை,

‘முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம்

புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்”

என்ற நன்னூலார் நூற்பா வழி அறியமுடிகின்றது.

பாரதிதாசனாரின் ஆத்திசூடியில் அமைந்துள்ள பாயிரமானது பத்து அடிகளைக் கொண்டுள்ளது.

நவில் இனப்பற்றும் நாட்டுப் பற்றும்

வையப்பற்றை வளர்க்கும் நோக்கத்தன

இல்லை யாயின் இன்றிவ் வுலகில்

தொல்லை யணுக்குண்டு தொகு தொலைக் கருவி

பொல்லா நச்சுப் புகைச்சல் இவற்றை

அகற்றல் எப்படி? அமைதியாங்ஙனம்?

உலகில் பொதுவாட்சி ஒன்றே ஒன்று

நிலவுதல் கருதி நிகழ்த்திய இந்நூல்

ஆத்திசூடி போறலின்

ஆத்திசூடியென் றடைந்து பெயரே” **(பா.ஆத்.,பாயிரம்)**

உலகத்தின் மீது மதிப்பையும் பற்றையும் வளர்க்கின்ற வகையில் இனப்பற்றும் நாட்டுப்பற்றும் அமையவேண்டும் என்கிறார். பகைமை உணர்ச்சியை தூண்டும் வகையில் அமையக்கூடாது என்பதையும் வழியுறுத்துகின்றார். உலகத்தில் பொதுவுடைமை மலர தன் நூல் வழி செய்ய வேண்டும் என்றெண்ணுகின்றார். அன்னாரின் உயர்ந்த நோக்கமும், பொதுவுமைச் சிந்தனையும் பாயிரமாக அமைந்திருக்கின்றது. பாரதிதாசனாரின் ஆத்திசூடியில் கூறப்பட்டிருக்கின்ற திராவிடக் கருத்துக்களை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

உலக ஒற்றுமையும் பொதுவுடைமையும்

பிறப்பின் அடிப்படையில் அனைவரும் சமம் என்பதே திராவிடக் கொள்கை.அதனடிப்படையில் ஆத்திசூடியின் முதல் வரி,

“அனைவரும் உறவினர்” (ஆத்தி.,1)

http://Creativecommons.org//license/by/4.0/.

என்று தொடங்குகின்றார். சாதி, மத, இனம், மொழி, தேசம் போன்ற வேறுபாடுகளைக் களைந்து அனைவரையும் உறவினராக் கருத வேண்டும் என்று சமூகத்திற்கு ஒற்றுமைசிந்தனையை வலியுறுத்துவதை அறிய முடிகின்றது. உலக மக்கள் அனைவரும் ஒரே ஆட்சியின் வாழ வேண்டும் என்று எண்ணம் கொண்டதால்,

"ஆட்சியை பொதுமை செய்" (ஆத்தி.,2)

என்ற அடியில் சுட்டுகின்றார். உலக மக்கள் உழைப்பினால் கிடைக்கின்ற பயனையும் பொதுமையாக்கு என்று சுட்டுவதை,

"உடைமை பொதுவே" (ஆத்தி.,5)

என்ற வரி வழி அறிய முடிகின்றது. ஒற்றுமையே உலக அமைகதிக்கு வழி வகுக்கும் என பாரதிதாசன் கூறுவதனை,

"ஒற்றுமை அமைதி" (ஆத்தி.,10)

"வையம் வாழ வாழ்" (ஆத்தி.,84)

என்ற அடியின் வழி அறிய முடிகின்றது. 'பேதமற்ற இடம் தான் மேலான திருப்தியான இடம்" என்பார் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்.சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருக்கும் மதமாகிய பேய் பிடிக்க கூடாது என்று அறிவுத்துவதை,

"பேயிலை மதலால்" (ஆத்தி.,64)

என்ற அடியின் வழி அறியமுடிகின்றது.பிறப்பால் அனைவரும் சமம் என்று கருத வேண்டும். குலத்தினைக் கூறி உயர்வு தாழ்வு பார்க்கக் கூடாது என்று கூறுவதனை,

"கீழ்மகன் உயர்வெனும்" (ஆத்தி.,16)

என்ற அடியால் அறியலாம்.

தாய்மொழி போற்று

ஒவ்வொரு இனத்துக்குமான மொழிக்குரிய மதிப்புப் பேணப்படுதல் - இதில் ஒரு மொழி, இன்னொரு மொழியை ஆதிக்கம் செலுத்துவதற்கு அறவே இடம் தராமை திராவிடக் கொள்கைகளுள் தலையாயது. இதனை, பாரதிதாசனார் தமிழ் மக்கள் மொழிப்பற்றோடு திகழ வேண்டும் என்று கூறுவதை,

"பைந்தமிழ் முதன்மொழி" (ஆத்தி.,65)

என்ற அடியின் வழி அறிய முடிகின்றது.

பெண்ணடிமை களைதல்

ஆண் உயர்ந்தவன் - பெண் அடிமை என்ற தற்போதைய நிலைக்கு மாறாக பாலின சமத்துவம், எல்லா நிலைகளிலும் ஆண்களுக்கு நிகராகக் கல்வி, உத்தியோகம, அரசியல்,

http://Creativecommons.org//license/by/4.0/.

பொருளாதார நிலைக்கு உத்தரவாதம் தருதல் வேண்டும் என்கிறது திராவிடம். அதனை வழியுறுத்தும் விதமாக சமூகம் முன்னேற வேண்டும் எனில் அச்சமூகத்தில் வாழும் பெண்கள் முன்னேற வேண்டும். பெண்ணடிமைத்தனம் களையப்பெற்று சமூகத்தில் ஆணுக்கு நிகராக பெண் மதிக்கப்பட வேண்டும் என்று கூறுவதனை,

"பெண்ணோடான் நிகர்" (ஆத்தி.,63)

என்ற அடியின் வழி அறியமுடிகின்றது.குழந்தைத் திருமணம் நிறுத்தப்பட வேண்டும் சரியான பருவம் எய்திய பின்பே பெண்களுக்கு திருமணம் நிகழ்த்தப்பட வேண்டும் என்று கூறுவதனை,

"பூப்பின் மணம் கொள்" (ஆத்தி.,62)

என்ற அடியின் வாயிலாக அறிய முடிகின்றது. பெண்கள் கமூகத்தில் எதிர்கொள்கின்ற கைம்மை முறை அழிய வேண்டும் என முன்மொழிவதை,

"கைம்மை அகற்று" (ஆத்தி.,21)

"வாழாட்கு வாழ்வு சேர்" (ஆத்தி.,79)

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.விதவைப் பெண்கள் மறு வாழ்வு பெற மறுமணம் அவசியம் என்கின்றார்.

கல்வி

மூடத்தனத்திலிருந்து ஒரு சமூகத்தை மீட்டு எடுக்க உதவும் கருவி 'கல்வி' ஆகும். 'கற்க கசடற' என்று வள்ளுவர் உலகிற்கு வழிகாட்டுகின்றார் பாரதிதாசனும் சமூகம் முன்னேற கல்வியின் முக்கியத்துவத்தினை வழியுறுத்துகின்றார்.

"ஊன்றுளம் ஊறும்" (ஆத்தி.,6)

"எழுது புதிய நூல்" (ஆத்தி.,7)

"கல்லார் நவிலார்" (ஆத்தி.,13)

பல புதிய நூல்களை எழுத வேண்டும். கற்ற கற்றத்தான் உள்ளமானது நற்கருத்துக்களால் உருவாகும். கல்வி கற்காதவர் சமூகத்திற்கு நற்செயல்களை செய்யமாட்டார் என்பதையும் கூறுகின்றார்.

விவசாயமும் கைத்தொழிலும்

இந்தியாவின் மிக முக்கியமான தொழில் விவசாயமும் கைத்தொழிலும் ஆகும். அந்நியமயமாக்கல், தொழில்நுட்பவளர்ச்சி காரணமாக இவ்விரண்டும் அழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. நாடு முன்னேற்றம் காண கைத்தொழில்கள் காக்கப்பட வேண்டும். அதற்கான உற்பத்தி ஆலைகள் பெருக வேண்டும் என்று கூறுவதை,

http://Creativecommons.org//license/by/4.0/.

"கிழிப்பொறி பெருக்கு" (ஆத்தி.,15)

என்ற அடியின் வழி அறிய முடிகின்றது. மேலும், விவசாய நிலத்தினைப் பண்படுத்தி உழவு மேற்கொண்டு உண்ண வேண்டும் என்பதை,

"திருஎனல் உழு பயன்" (ஆத்தி.,37)

என்ற அடியின் வாயிலாக அறிய முடிகின்றது.

சுற்றுச்சூழல் பேணுதல்

சுற்றுச் சூழல், இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற திராவிடக் கொள்கையின் வழி பாரதி தாசனும் மரங்கள் நடப்பட வேண்டும். சுற்றுச்சூழல் தூய்மையாக இருக்க வேண்டும் என்று கூறுவதை,

"தீங்கனிவகை விளை" (ஆத்தி.,38)

"தெருவெல்லாம் மரம் வளர்" (ஆத்தி.,41)

என்ற அடியின் வாயிலாக அறிய முடிகின்றது.

தூய்மை

தனி மனிதன் உடலினையும் உள்ளத்தினையும் முதலில் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்று வலியுறுத்துவதை,

"தூய நீராடு" (ஆத்தி.,40)

என்ற அடியில் சுட்டுகின்றார்.

ஒழுக்கம்

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (குறள் 131)

என்கிறார் வள்ளுவர். ஒழுக்கம் உயிர் போன்றது. தீய ஒழுக்கத்தினை விட்டுவிட வேண்டும் என்று பாரதிதாசனார் அறிவுத்துவதை,

"நோய் தீ ஒழுக்கம்" (ஆத்தி.,56)

என்ற அடியின் வாயிலாக அறிய முடிகின்றது.

சிந்தனை தெளிவு

நல்லவை நினைக்க வேண்டும். நல்லவை பேச வேண்டும். அதனை விடுத்து தீய சிந்தனைகளை வளர்த்துக்கொள்ளக் கூடாது என்று அறிவுறுத்துவதை,

'குள்ள நினைவு தீர்" (ஆத்தி.,17)

http://Creativecommons.org//license/by/4.0/.

"கெடு நினை வகற்று" (ஆத்தி.,19)

என்ற அடியின் வாயிலாக அறிய முடிகின்றது. பயனற்ற சொற்களை பேசக்கூடாது என்பது வள்ளுவர் வாக்கு, அதனையே பாரதிதாசனும்,

"வெறும் பேச்சுப் பேசேல்" (ஆத்தி.,82)

"சொற் பெருக்காற்றல் கொள்" (ஆத்தி.,33)

வலியுறுத்துவதை இவ்வடியின் வழி அறியமுடிகின்றது.

நிமிர்ந்த நன்னடை

கூனி நடக்காமல் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும் என்று கூறுவதை,

"கூன் நடை பயிலேல்" (ஆத்தி.,18)

"நடுகல் அறியாமை" (ஆத்தி.,46)

என்ற அடி சுட்டுகின்றது.சோர்வினை விட வேண்டும் ,எதிரிகளைத் தாக்க போர் செய்ய பழக வேண்டும் என்று அறிவுறுத்துவதனை,

"சோர்வு நீக்கு" (ஆத்தி.,34)

"போர்த் தொழில் பழகு" (ஆத்தி.,67)

என்ற அடி வழி அறிய முடிகின்றது.

குழந்தை பேணுதல்

குழந்தை வளர்ப்பில் முழுக்கவனம், உடல், மூளை வளர்ச்சிக்கான உணவு, சூழல், தூய்மை, அறிவுத் தூண்டல், நற்பழக்கம் பேணப்படுதல் வேண்டும் என்று திராவிடர்கள் கொள்கை விளக்க அறிக்கையில் கி.வீரமணி குறிப்பிடுகின்றார். அங்ஙனமே குழந்தைகள் நலனில் அக்கறை காட்ட வேண்டும் என்று பாரதிதாசனும் கூறுகின்றார். ஏனென்றால் அடுத்த தலைமுறை நல்ல ஆரோக்கியத்தோடு உருவாக்கம் பெற்றால் தான் சமூகம் ஆரோக்கியமாக இருக்கும். இதனை,

"சீறார் நலம் தேடு" (ஆத்தி.,26)

என்ற அடியின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

புதுமை செய்

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கேற்ப பாரதிதாசனும் மூடத்தனமாக பழைமையை விட்டு விட வேண்டும் என்று அறிவுறுத்துவதை,

"தொன்மை மாற்று" (ஆத்தி.,44)

http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற அடியின் வழி அறிய முடிகின்றது.

சுயமரியாதை

சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வாக அமையும் என்ற திராவிடர்களின் சுயமரியாதை தன்மையினைபாரதிதாசனும்,

"பீடு தன் மானம்" (ஆத்தி.,60)

"மேலை உன் பெயர்பொறி" (ஆத்தி.,75)

ஒரு மனிதனுக்கு பெருமையே தன்மானத்தோடு வாழ்வதுதான் என்று கூறுவதை அறிய முடிகின்றது.

சிக்கனம்

ஆடம்பரம் தவிர்த்து சிக்கனப் பெருவாழ்வு வாழ திராவிடம் அறிவுறுத்துகின்றது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு இப்பழமொழிக்கு ஏற்ப கிடைக்கும் வருமானத்திற்கு ஏற்ப செலவு செய்ய வேண்டும். இதனை,

'மீச்செலவு தவிர்'(ஆத்தி.71)

என்ற அடியின் வழி அறிய முடிகின்றது.

முடிவுரை

- படைப்பென்பது மானுடசமூகத்தின் மறுமலர்ச்சிக்கான வழித்தடமென்பதை பாரதிதாசனின் ஆத்திசூடி வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.
- அன்றைய காலத்தின் சூழலை இவரது படைப்புக்களின் மூலம் வெளிக்கொணரமுடிகிறது.
- பாரதிதாசனாரின் ஆத்திசூடி வலியுறுத்துகின்ற திராவிடக் கருத்துக்களை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகின்றது.
- உலகம் சமநிலை பெற்று பொதுவுடையாகத் திகழவேண்டும்.
- பெண்ணடிமைத்தனம் களையப் பெற வேண்டும். கைம்மை வழக்கம், குழந்தை திருமணம் போன்றவற்றை பாரதிதாசனார் கடிந்து பெண்கள் மறுவாழ்வு பெற வேண்டும் என்று கூறுவதை அறிய முடிகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

18. திராவிடப் பார்வையில் முடியரசனின் “மானம் போற்று”

முனைவர் பெ.ஆனந்தி,
உதவிப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
DOI 10.5281/zenodo.13761837.

Abstract:

The Dravidian principle is that all people are equal in all respects. "The most contented place is the place where there is no pain" said the wise father Periyar. The Dravidian movement is based on the principle of self-respect – equality – Samadharma. Literature records the reflection of society. It is said that "Literature is the mirror of life"1. Dravidian writers are constantly doing the work of bringing Dravidian movement principles to the masses. In this way, this article is set up to explain the Dravidian principles recorded by the poet Mundiarasan in his letter "Manam Phottu".

மக்கள் அனைவரும் எல்லாவற்றிலும் சமம் என்பது திராவிடக் கொள்கை. “பேதமற்ற இடம் தான் மேலான திருப்தியான இடம்” என்பார் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார். திராவிட இயக்கம், சுயமரியாதை - சமத்துவம் - சமதர்மம் என்னும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். சமூகத்தின் பிரதிபலிப்பினைப் பதிவு செய்வன இலக்கியங்கள். “இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி (Literature is the mirror of the life) எனக் கூறப்படுகிறது”[1]. திராவிட இயக்கக் கொள்கைகளை மக்களிடையே கொண்டு சேர்க்கும் பணியைத் திராவிட எழுத்தாளர்கள் செவ்வனே செய்து வருகின்றனர். அவ்வகையில் கவிஞர் முடியரசன் தன்னுடைய “மானம் போற்று” என்னும் கடித இலக்கியத்தில் பதிவு செய்த திராவிடக் கொள்கைகளை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைக்கப் பெறுகின்றது.

திராவிட இயக்கமும் அதன் எழுத்தாளர்களும்

திராவிட மக்களின் அனைத்துவிதமான நலன்களையும் பாதுகாக்கும் நோக்கில் 1916 இல் நீதிக்கட்சி என்ற தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் உருவாக்கப்பட்டது. பின்னர் ‘1944 ஆம் ஆண்டில் சேலத்தில் பெரியார் இராமசாமி அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்ற நீதிக்கட்சியின் மாகாண மாநாட்டில், பேரறிஞர் அண்ணா அவர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் “நீதிக்கட்சி” என்பது திராவிடக்கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது” [2].

திராவிட இயக்கக் கொள்கைகளைப் பதிவு செய்யும் மகத்தான பணியை கா.ந.அண்ணாத்துரை, மு.கருணாநிதி, ஆசைத்தம்பி, முடியரசன், பாரதிதாசன், தென்னரசு, சுரதா, வாணிதாசன், கண்ணதாசன், தில்லை வில்லாளன், இரா.நெடுஞ்செழியன், அண்ணல் தங்கோ, எம்.எஸ். பாண்டியன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, க.அன்பழகன், க.சுப்பு, கலி பூங்குன்றன், கா.வேழ வேந்தன், கு.ச.ஆனந்தன், கைவல்ய சாமி, முரசொலி மாறன், சல்மா, தமிழச்சி தங்கப் பாண்டியன் என்பன போன்ற பல திராவிட எழுத்தாளர்கள் செய்து வருகின்றனர்.

http://Creativecommons.org//license/by/4.0/.

மானம் போற்று – கடித இலக்கியம்

திராவிட இயக்கக் கருத்துகளைத் தம் நூல்கள்வழி பதிவு செய்த ஒப்பற்ற எழுத்தாளர் கவிஞர் முடியரசன் ஆவார். முடியரசன் கவிதைகள், காவியப் பாவை, கவியரங்கில் முடியரசன், பூங்கொடி, வீரகாவியம், ஊன்றுகோல் என்பன போன்ற பல்வேறு இலக்கியங்களைப் படைத்திட்டு தமிழ்மொழிக்கு வளம் சேர்த்தவர். அவரின் படைப்புகளுள் ஒன்று "மானம் போற்று" என்ற பாரதியின் ஆத்திச்சூடி வரியைத் தலைப்பாகக் கொண்ட கடித இலக்கியமாகும்.

இவ்விலக்கியம் 2008 ஆம் ஆண்டு முடியரசனால் எழுதி வெளியிடப்பட்டது. கொள்கைவழிக் கலப்புத் திருமணம் செய்து கொண்ட இவர், இந்நூலை "அன்புள்ள பாண்டியனுக்கு அறிவுடைநம்பி எழுதுவது" எனும் அமைப்பில் தந்தை தன் மகனுக்கு எழுதுவதாக பதிவு செய்துள்ளார். ஒரு நல்ல மகனாய் தன் மகனை உருவாக்கிடத் துடிக்கும் இயல்பான தந்தையின் மனநிலையில் இந்த கடித இலக்கியத்தை எழுதியுள்ள கவிஞர், திராவிடக் கருத்துகளைச் சுட்டவும் தவறவில்லை.

"இலக்கியப் படைப்பில் படைப்பாளி வழங்க விரும்பும் செய்தி (Message) அல்லது அடிக்கருத்தை (Theme) தவிர ஏனைய அனைத்தும் உத்தி முறையில் உருவாக்கப்பட்டவையே"[3] என்பர். முடியரசன், திராவிட இயக்கத்தின் மீது தான் கொண்ட ஈடுபாட்டை அடிக்கருத்தாகக் கொண்டு அதை எடுத்துரைக்க கடிதமுறை உத்தியைப் பயன்படுத்தியுள்ளார்.

சம நோக்கு

பிறருக்காக வாழ்வதே உண்மை அறம். அதையே பொதுவுடைமை எனவும் சம நோக்கு எனவும் குறிப்பிடுகின்றனர் திராவிட இயக்கத்தார். கவிஞர் முடியரசன் இத்தகைய உயரிய எண்ணத்தை இளைய சமுதாயத்தில் விதைக்க முற்படுகிறார்.

"வாழ்வு உனக்காக, உன் குடும்பத்திற்காக என்ற அளவுடன் நின்றுவிடுதல் கூடாது. அதனைச் சிறந்த வாழ்வென்று நான் கருதமாட்டேன். பிறருக்காகவும் பயன்படும் வாழ்வுதான் சிறந்தது." **(மானம் போற்று ப.21)**

என்ற முடியரசனின் கருத்து திராவிடப் பார்வையில் பொதுவுடைமையாகிறது. ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தன்னைப் போலவே பிறரை எண்ணும் எண்ணம் வளர வேண்டும். ஒருவருக்கொரு உதவி செய்து மனநிம்மதியோடு வாழும் வாழ்வே சிறந்தது.

"வாழ்வு, செல்வம், இன்பம் முதலிய நலன்களைத் தான் எவ்வாறு நுகர எண்ணுகிறானோ அவ்வாறே பிறரும் அவற்றை நுகர வேண்டும் என்று ஒப்ப நோக்கி வாழ்வது தான் ஒப்புரவு"

(மானம் போற்று ப.22)

மேற்கண்ட வரிகள் "எல்லாம் எல்லாருக்கும் பொது" என்கிற சம நோக்கு திராவிடப் பார்வை முடியரசனின் மனதில் ஆழ வேரூன்றியமையைத் தெரிவிக்கின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

சம ஈவு

மனிதர்கள் தத்தமக்குள் ஒற்றுமையின்றி பல்வேறு காரணங்களால் உயர்ந்தவராகவும் தாழ்ந்தவராகவும் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர். சுய ஒழுக்கமே மனிதனை அடையாளப்படுத்துகிறது என்பது திராவிட எண்ணம். முடியரசனும் தம் நூலில்,

"ஒழுக்கமுடையவன் எவனோ அவன் உயர்க்குடிக்குரியவன். ஒழுக்கந் தவறியவன் எவனோ அவன் தாழ்ந்த குடிக்குரியவன். தன்னை உயர்ந்து நிறுத்துவனானும் தன்னைத் தாழ்த்திக் கீழாக்குவானும் அவனேயாகின்றான். பிறப்பு, மனிதன் உயர்வுக்குந் தாழ்வுக்குந் காரணமன்று" **(மானம் போற்று ப.27)**

எனக் குறிப்பிட்டுள்ளமை வியக்கத்தக்கது. தன்னைத் தானே உணர்ந்தவன் உண்மை மனிதன். தன்னளவில் ஒழுக்கம் பெற்றவனால் சமுதாயமும் நாடும் முன்னேறும். எனவே மனிதர்கள் ஒழுக்கத்தைப் பின்பற்றியே பொதுவுடைமையைக் காக்க வேண்டும். அனைவரையும் ஒன்றாய் எண்ணும் சமஈவு முறைமை குறித்து,

"மனிதன் அரும்பாடுபட்டுப் பொருளைத் திரட்டுகிறான். அல்லும் பகலும் உழைக்கிறான். அலைகடல் கடந்து பறக்கிறான்.இவ்வாறு செல்வத்தைத் தொகுப்பது தனக்காகவோ வறிதே வைத்திருப்பதற்காகவோ அன்று. உலகுக்காகவும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புவதற்காகவும் தான் முயன்று தேடிய பொருள் பயன்பட வேண்டும்."

(மானம் போற்று ப.23)

எனக் குறிப்பிட்டுள்ளமை,

"செல்வத்துப் பயனே ஈதல்" **(புறநானூறு பா.189)**

என்ற சங்கக் கருத்தை வலியுறுத்துகின்றது. இவ்விடத்தே

"எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான
இடம்நோக்கி நடக்கின்றது இந்த வையம் (பாண்டியன் பரிசு 56)

என்ற பாரதிதாசனின் கருத்தும் ஒப்புநோக்கத்தக்கது. சம ஈவு என்ற திராவிடப் பார்வை இளையோர் மத்தியில் பதிக்கப்பட வேண்டிய இன்றைய காலத் தேவையும் கூட.

மொழிப்பற்று

திராவிட இயக்கக் கொள்கைகளுள் தலையாயது மொழி உணர்ச்சி. மொழி என்பது மாந்தனால் உருவாக்கப்பட்ட ஒரு கருவி என்றளவோடு கருதிட முடியாது. அது உணர்ச்சியோடு தொடர்புடையது. மனித சமுதாயம் வளர வளர அவர்தம் மொழியும் வளர்ச்சி காண்கிறது.

"மொழிப் பற்று முன்னேற்றத்தின் முதற்படி. முதற்படியில் கால் வைக்கக் கூச்சப்படும் ஒரு நாடு முன்னேறிச் செல்ல விரும்புவது பேதைமையாகும்."

(மானம் போற்று ப.50)

http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற முடியரசனின் கருத்து சேய்மை நோக்குக் கொண்டது. "தமிழ்நாட்டில் தமிழன்னை எத்தனை எத்தனை இடையூறுகளுக்கு ஆட்பட்டுக் கண்ணீர் சிந்துகிறாள் என்பதை மாசகற்றிய மனமுடையோர் நன்கு அறிவர்"[4] என்ற கருத்தும் சிந்திக்கத்தக்கது.

"நாமே நம் தாய்மொழியைத் தாழ்த்த எண்ணுவது முறையோ? அதன் தகுதியை உயர்த்த நாமல்லவோ நினைய வேண்டும், முனைய வேண்டும்? அது தமிழ்நாட்டிலே தன்னாட்சிப் பெற்றுத் திகழ வேண்டுமென்ற ஆர்வம் நமக்கல்லவா வேண்டும்?"

(மானம் போற்று ப.48)

என இளையோரிடத்து தன் மொழிப்பற்றினை கடத்திச் செல்கிறார், முடியரசன். ஒரு நாட்டின் முன்னேற்றம் தாய்மொழியின் முன்னேற்றத்தையும் அயல்மொழியின் உதவியையும் பொருத்து அமைகிறது. எனவே பிற நாட்டு மொழிகளையும் பிற மாநில மொழிகளையும் கற்றுத் தெளிவதும் அவசியம். தாய் மொழியே ஆடை போன்றது. அயல் மொழிகள் அணிகலன்கள் போன்றன என்பதும் முடியரசனின் கருத்து. அணிகலன் இன்றி மாந்தர்கள் நடமாட இயலும். ஆனால் ஆடைகள் இன்றி முடியுமா? என்ற வினாவை முன் வைத்து பகுத்தறிவோடு சிந்திக்கச் செய்கிறார்.

சுய மரியாதை

தன் தகுதியை எவ்விடத்தும் விட்டுக்கொடுக்காத சூழல் சுய மரியாதை ஆகும். சுய மரியாதை திராவிட இனத்தின் தொல் குணம்.

"பழியெனின் உலகுடன் பெறினுங் கொள்ளலர்" **(புறநானூறு பா.182)**

"வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மான மழுங்க வரின்" **(நாலடியார் பா.300)**

என்பன போன்ற இலக்கியப் பதிவுகள் நம் தமிழ் இனத்தின் தன்மானத்தைப் பறைசாற்றுகின்றன. இத்தகு சுய மரியாதை எண்ணத்தை முடியரசனும் விதைக்கத் தவறவில்லை. அவர்தம் நூலில்,

"எக்காலத்தும் எத்தகைய சூழ்நிலையிலும் தந் நிலையினின்று தாழாமையும், தாழ்வுவரின் உயிர் வாழாமையும், தங்குடிப் பிறப்புக்குத் தாழ்வுவருஞ் செயல்களைச் செய்யாமையும் மானம் என்று மறைமொழி பறை சாற்றுகிறது. புகழையும் மானத்தையும் நிலைநிறுத்த வேண்டும் என்ற கொள்கையுடைய சான்றோர். தாம் பிறந்த குடிக்குத் தாழ்வுதரும் இழிவான செயல்களைச் செய்யவேமாட்டார்" **(மானம் போற்று ப.77)**

என வலியுறுத்தியமை கவனிக்கத்தக்கது. பிறருக்கு உதவி செய்யத் துணியும் மனிதன் தன்னுடைய தகுதியையும் நிலைநிறுத்த வேண்டியது அவசியமாகும். மனதளவில் தன் நிறைவு பெற்றவராலேயே மற்றவருக்கு சரியான முறையில் உரிமைகளை வழங்க இயலும். எனவே சுய மரியாதை அனைவருக்கும் இருக்க வேண்டிய தன்னறம் ஆகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

தொகுப்புரை

தந்தை தன் மகனுக்கு எழுதுவதாய் அமைக்கப் பெற்ற முடியரசன் எழுதிய கடித இலக்கிய நூல் மானம் போற்று ஆகும். கவிதையோ காப்பியமோ கடித இலக்கியமோ எதிலுமே தன்னால் ஈர்க்கப் பெற்ற திராவிடக் கொள்கைகளைப் பதிவிட கவிஞர் முடியரசன் மறந்ததில்லை. மகனை நல்வழிப்படுத்தும் தந்தையின் மன உணர்வில் நாட்டு மக்களை நல்வழிப்படுத்த முயலும் ஓர் எழுத்தாளரின் ஈடுபாட்டைப் புரிந்து கொள்ள இயலுகின்றது. எளிய மக்களின் வாழ்க்கையை எழுதிய திராவிட இயக்கத்தார் தம் கொள்கைகளைக் கடைபிடிக்கவும் தவறியதில்லை, எழுதவும் தவறியதில்லை. திராவிட எழுத்தாளர்களின் கொள்கைப்பிடிப்பும் நீண்ட படிப்பும் வியப்பிற்குரியது.

சான்றெண் விளக்கம்

1. அரங்க சுப்பையா, இலக்கியத் திறனாய்வு இசங்களும் கொள்கைகளும், ப.10
2. இரா.நெடுஞ்செழியன், திராவிட இயக்க வரலாறு (தொகுதி1), ப.11
3. ஜெ.பாரதி, கவிஞர் சிற்பி கவிதைகளில் உத்திகள், ப.127
4. முடியரசன், எப்படி வளரும் தமிழ்?, ப.2

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

19. தமிழ்ச்சமூகப் பண்பாட்டு வெளியில் குறிஞ்சி நில மகளிரின் முன்னெடுப்புகள்

முனைவர் செ.ஞானேஸ்வரன்
உதவிப்பேராசிரியர் முதுகலைத் தமிழ்த்துறை
அரசுக் கல்லூரி,மூணாறு -685612, கேரளாமாநிலம், இந்தியா
DOI 10.5281/zenodo.13761855.

Abstract

Can be seen in society. The Sangam literatures have fixed many given periodical data in Tanagam. It is revealed through our research thoughts. The archetypal form of Tamil society can be identified. The Dravidian culture without Aryan culture can be traced back to land society. Women predominate among the Kurinji land cultural elements. In all situations, the woman stands first. It is considered a remnant of matriarchal society. This article tries to describe these concepts in Kurinji land social culture, women are primarily active in wearing the traditional clothing, collecting food, producing food, guarding the grain store, and performing rituals.

தொடக்கமாக

தமிழ்ச்சமூகப் பண்பாட்டு வெளியில் தாய்வழிச் சமூகத்தின் கூறுகளை இன்றளவும் குறுஞ்சி நில சமூகத்தில் காண முடிகிறது. சங்க இலக்கியங்கள் பல தரப்பட்ட காலத் தரவுகளை தன்னகத்தில் நிலை நிறுத்தியுள்ளன. அதனை நம் ஆய்வு சிந்தனைகள் வழி வெளிக்கொணர்வது. தமிழ்ச் சமூகத்தின் தொன்மை வடிவத்தைஅடையாளப்படுத்த முடியும்.ஆரியப் பண்பாட்டு கலப்பில்லாத திராவிடப் பண்பாட்டை குறிஞ்சி நிலச் சமூகத்தில் இனம் காணமுடிகிறது. குறிஞ்சி நிலப் பண்பாட்டுக் கூறுகளுள் பெண்களே முதன்மையாக விளங்குகிறார்கள். எல்லா நிலையிலும் பெண்ணே முன் நிற்கிறாள். இது தாய்வழிச் சமூகத்தின் எச்சமாக கருதத்தோனுகிறது. குறிஞ்சி நிலச் சமூகப் பண்பாட்டில் தழையாடை அணிதல், உணவு சேகரித்தல், உணவுஉற்பத்தி, தினைப்புனம் காத்தல், வெறியாட்டு நிகழ்த்துதல் ஆகியவற்றில் பெண்களே முதன்மையாக செயல்படுகின்றனர் இக்கருத்தியல்களைஇக்கட்டுரை விவரிக்க முயல்கிறது.

குறிஞ்சிநிலப் பெண்கள்

சங்ககால மானுடச் சமூகம் தங்கள் வாழ்வு முறையை நிலங்களின் தட்ப வெட்பச் சூழலுக்கு ஏற்ப அமைத்துக் கொண்டன. சங்ககாலச் சமூகம் நானிலச் சமூக அமைப்பை கொண்டது.இதனை,

அடலருந்துப்பின் .....
..... **குருந்தேமுல்லையென்று**
இந்நான்கல்லது பூவும் இல்லை (**புறம்.** 335)

என்னும் பாடல் உறுதிப்படுத்துகிறது. இவற்றுள் குறிஞ்சி மலை நாட்டு வாழ்வியலை பிரதிபலிக்கிறது. இந்நிலப்பகுதிமனிதனும் விலங்குகளும் ஒரு சேர வாழ்ந்த வாழ்வியல்

http://Creativecommons.org//license/by/4.0/.

புலமாகும். விலங்குகளிடமிருந்து தங்களை தற்காத்துக் கொண்டும் அதே நேரத்தில் அவைகளுக்கு தீங்கு நேராக வண்ணம் தங்கள் வாழ்வியலை தகவமைத்துக் கொண்டனர்." இங்கு செயல் என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு வரையறையை கொண்ட சொல்லாகவிளங்குகிறது. இது ஒருவர் செய்யும் வேலையை குறிப்பதில்லை.தேவையை முன்னிட்டு ஒருவர் மேற்கொள்ளும் பணியின்(activity) மூலம் அத்தேவை நிறைவேற்றப்படுமானால் அதனால் ஏற்படும் நிறைவே அப்பணியின் செயலாகும்.ஆகவே, ஒரு செயலைப் புரிந்து கொள்ளுதல் என்பது அப்பண்பாட்டின் முழுமைக்குள் உள்ள பல கூறுகளின் தொடர்பையும் அதன் உறவுகளையும் புரிந்து கொள்வதாகும். மேற்கூறிய திட்டத்தின்படி ஒவ்வொரு செயலிலும் எவ்வகையான மக்கள் ஈடுபடுகிறார்கள்? எந்தெந்த கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன? எந்தெந்த பணிகள் நடைபெறுகின்றன? என்பதை முழுமை நிலையில் பகுத்தாய்வதே அச்செயலின் செயற்பாட்டியலைப் புரிந்து கொள்வதற்கான அணுகுமுறையாகும்." என்பர்பக்தவத்சல பாரதி(2003:179-180).இதில் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். குறிஞ்சி நில ஆடவர் வேட்டையில் ஈடுபட்டனர். ஆனால் பெண்கள் அவ்வாறு செய்யாது காடுபடுப் பொருட்களைச் சேகரிப்பதில் கவனம் செலுத்தி வந்தனர். சங்கப் பாக்களில் குறிஞ்சி நிலப் பெண்ணாக கொடிச்சியை அடையாளம் காணமுடிகிறது. இப்பெண்சமூகமே குறிஞ்சி நிலப் பண்பாட்டின் தொடக்கமாக அமைகிறது. இதனை அவர்களின் செயல் தன்மையை புரிந்து கொள்ளமுடிகிறது. ஒவ்வொரு செயலையும் பெண்களே முன்னெடுத்துள்ளனர். குறிஞ்சி நிலப் பண்பாட்டு இயக்கங்களுன் பெண்களுக்கான செயல் தன்மையை புரிந்து கொள்ளமுடிகிறது. இது அவர்களின் சுய தேவைகளுக்காக மட்டுமின்றி அவர்கள் சார்ந்த குழுவின் ஒருங்கமைவிற்கு தேவையான ஒன்றாக இருந்திருக்கிறது.

தழையாடை உடுத்தல்

குறிஞ்சி நிலச்சமூகம் தொல்குடிச் சமூகம் என்பதற்கு அடையாளமாக இருப்பது தழையாடை உடுக்கும் வழக்கமாகும். காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த மனித சமூகம் நாகரீக வளர்ச்சியின் ஊடே மானம் என்ற கருத்தாக்கத்தில் உடல் அங்கங்களை மறைக்க எண்ணின. அதன் தோற்றுவாயாக தழையாடை உடுக்கும் வழக்கம் ஏற்பட்டது.தொடக்க நிலை ஆடைப் பண்பாடு இயற்கை சார் சூழலிலே அமைந்ததற்கு தழையாடை சான்றாக அமைகின்றது. இதற்கான முன்னெடுப்பை குறிஞ்சி நிலச் சமூகம் செய்துள்ளது. "ஒவ்வொரு சமூகத்தின் தனித்துவமான வரலாற்றையும் பண்பாட்டு மரபையும் அடையாளப்படுத்துவது அச்சமூகத்தின் மரபுசார் அறிவே ஆகும். இன்றைய அறிவுப்புலங்கள் உலகளாவியவை. இதில் நமது அடையாளம் இல்லை; பங்கு பணியுமில்லை; கூடவே அர்த்தமற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளோம்; சார்ந்து நிற்பவர்களாக மாற்றப்பட்டுள்ளோம்.மனிதகுல வரலாற்றில் ஒவ்வொருவருக்குமான இருப்பும் பெறுமானமும் அவரவருடைய மரபுசார் அறிவை முன் முன்னிறுத்துவதால் மட்டுமே சாத்தியப்படும்"(பக்தவத்சல பாரதி 2014: 312-313). தழையாடை என்பது குறிஞ்சி நிலத்தவரின் இயற்கை சார் அறிவின்பால் தோற்றம் பெற்றதாகும்

http://Creativecommons.org//license/by/4.0/.

குன்றக்குறவன்காதல்மடமகள்

வண்டுபடுகூந்தல்தண்தழைத்கொடிச்சி (ஐங். 256)

குறவர் இன பெண்ணான கொடிச்சி குளுமையான தழையாடை அணிந்தமையைக்காண முடிகிறது.

மரல்நார்உடுக்கைமலைஉறைகுறவர்

அறியாது அறுத்தசிறியிலைச்சாந்தம் (நற். 64)

இந்த தழையாடை மரநாரினால் பின்னிய உடையாகும். இவ்வுடையினை குறிஞ்சி நில குறவர் சமூகத்தினர் அணிந்துள்ளனர். தழையாடையின் வளர்நிலைக் கூறுகளை இங்கு இனம் காண முடிகிறது. ஆடைப் பண்பாட்டை குறிஞ்சி நிலப் பெண்களே முதலில் மேற்கொண்டுள்ளனர். மானம் என்பது இருபாலினருக்கும் பொதுவானது என்றாலும் அதில் பெண்களே முதன்மையானவர். பெண்களைப் பண்பாட்டின் வேர் எனலாம்.

.....சாரல்

தழையணியல்குன்மகளிருள்ளும் (குறுந் 125)

கோடுஏந்துஅல்குல்தழைஅணிந்துநும்மொடு(நற். 368)

மலைச்சாரலில் விளைந்த தழையினாலாய உடையை அல்குல் மறைய மகளிர் அணிந்தாக அறியமுடிகிறது. "சங்க காலத்தில்இடுப்பிற்கு மேல் எவ்வித ஆடையும் இல்லாத நிலையினைப் பல்வேறு சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது. பன்னெடுங்காலமாக மலைப் பிரதேசங்களில் வாழக்கூடிய பழங்குடிப் பெண்கள் மார்பாடைக்கு முக்கியத்துவம் கொடுக்காதது பண்டைய தமிழ் மரபின் எச்சமென கொள்ளலாம். கடந்த நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் அடித்தட்டு மக்கள் ரவிக்கை ஏதுமில்லாமல் சேலையைக்கொண்டே மார்பை மறைத்துக் கொண்டனர்" (பக்தவத்சல பாரதி 2014:336). தழையாடை மரபு என்பது தமிழ்ச் சமூகத்தின் குறிப்பாக தொல் திராவிட சமூகத்தின் பண்பாடாகும். இதற்கு தொடக்கமாக குறிஞ்சி நிலப் பெண்கள் இருந்தமையை இங்கு உறுதி செய்துகொள்ள முடிகிறது .குறிஞ்சி நிலப் பண்பாட்டில் களவு காலத்தில் தலைவன் தலைவிக்கு தழையாடை கொடுப்பது ஒரு மரபாக இருப்பதை காண முடிகிறது (குறுந்.223). இம்மரபு தமிழரின் திருமண பண்பாட்டில்(பரிசம்) சேலையாக இன்றும் தொடர்கிறது.

உணவு சேகரித்தலில்பெண்

மனித சமூகத்தின் அடிப்படைத் தேவைகளுள்ஒன்று உணவு. இவ்வுணவு குறிஞ்சி நிலச் சமூகத்தில் இருநிலையில் சேகரிக்கப்பட்டது.

1.வேட்டையாடுதல்

http://Creativecommons.org//license/by/4.0/.

2.வனச்சிறு பொருள்களான காய், பட்டை, கொட்டை, கிழங்கு, தேன் ஆகியவற்றை சேகரித்தல்

இவற்றுள் முதல் நிலையை ஆண்கள் செய்தனர். இரண்டாம் நிலையை ஆடவரும் மகளிரும் இணைந்து செய்துள்ளனர். இதனை,

கானவன்எய்த முளவுமான் கொழுங்குறை

தேம்கமழ் கதுப்பின் கொடிச்சிகிழங்கொடு

காந்தள்அம் சிறுகுடிப் பகுக்கும்

ஓங்குமலைநாடன்..... (**நற்**.85)

என்னும் பாடல் வரிகள் கானவன் வேட்டையாடி கொண்டு வந்த முள்ளம்பன்றியின் கொழுத்த தசைப்பகுதியை கிழங்கோடு தேன்மணம் கமழ க கொடிச்சி சிறு குடியினர் பலருக்கு பகுத்துக் கொடுத்தாள்.வனச்சிறுப் பொருள்களான தேனை தலைவன் சேகரித்தமையை

வரை முதிர்தேனிற்போகி யோனே (**குறுந்**. 176)

என்னும் பாடல் வரி கூறுகிறது. மேலும் கானவன் கிழங்கு அகழ்ந்தமையை

.... **குன்றத்துப்**

பழங்குழியகழ்ந்தகானவன்கிழங்கின

நேர்கண்ணகன்மாமணிபெறூஉநாடன் (**குறுந்**. 379)

என்னும் பாடல் வரிகள் கூறுகின்றன.

.... கானவர்

கிழங்குஅகழ்நெடுங்குழிமல்கவேங்கை (ஐங். **208)**

கானவர்கள் கிழங்குகளை அகழ நெடுங்குழிகளை தோன்றி இருந்தனர். குழிகளின் மேல் வேங்கை மலர்கள் உதிர்ந்து கிடந்தன. குறிஞ்சி நிலச் சமூகத்தினரை ஆதி பொதுவுடமை சமூகத்தினர் எனலாம். ஏனெனில் தாங்கள் ஈட்டிய பொருளை தாங்களே அனுபவித்துக் கொள்ளாது அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு பகுத்துக் கொடுத்து வாழும் பண்பாட்டு மரபை குறிஞ்சி நிலத்தவர்கள் கொண்டிருந்தனர்"வேட்டையாடி உணவு சேகரிக்கும் குறிஞ்சித் திணை வாழ்வில் குழுவாழ்க்கை, கூட்டு உழைப்பு, கூட்டுறவு, பகுத்தளிக்கும் பாதீடு, பகுத்துண்ணுதல், கொடைக்கடன் முதலான இனக்குழு பண்புகள் மேலோங்கி இருந்தன." என்பர் பக்தவத்சலபாரதி (2020:20.21). வேட்டை, வனச்சிறு பொருள் சேகரித்தல் ஆகிய இருநிலையில் கிடைத்த விலங்கு, தேன், கிழங்கு ஆகியவற்றை பகுத்துண்டு வாழ்ந்தனர். இச்செயலை கொடிச்சி என்ற குறவர் குல பெண் செய்துள்ளாள்.

http://Creativecommons.org//license/by/4.0/.

தாய் வழிச்சமூகமான வேட்டைச்சமூகத்தில் பெண்களே குழுவை ஒருங்கிணைக்கும் செயலைச் செய்தனர். பல தீர்மானங்களை அவர்களே எடுத்துள்ளார்.

உணவு உற்பத்தியில் பெண்

உணவு சேகரித்தலில் ஈடுபட்ட சமூகம் உணவு உற்பத்தியை நோக்கி நகர்ந்தது. இந்நகர்விற்கு அடிகோலியவர்கள் பெண்கள். மானிடவியலார் கூறும் எளிய வேளாண் முறையான காட்டெரிப்பு வேளாண்மையை குறிஞ்சி நிலச் சமுகம் முன்னெடுத்தது

மாஅங்கொன்றமரஞ்சுட்டியவில் (**குறுந்**. 198)

சுடுபுனமருங்கிற்கலித்தவேனற் (**குறுந**. 291)

மரங்களைவெட்டி தீயிட்டு கொளுத்தி வேளாண்மைக்கான நிலங்களை உருவாக்கினர்.இதன் தொடர் செயலை

மரங்கொல்கானவன்புனந்துளர்ந்து வித்திய

பிறங்குகுரலிறடி ..... (**குறுந்**.214)

நிலந்தொட்டுப்புகாஅர்வான மேறார் (**குறுந்**.130)

கானவர்தாங்கள் உருவாக்கிய நிலத்தில் கொத்து விவசாய முறையை மேற்கொண்டுள்ளனர் என்பதற்கு அவர்கள் பயன்படுத்திய தொழில் கருவிகள் வழி காண முடிகிறது.

வேளாண்மையின் தொடக்கநிலைக் கூறு குறிஞ்சி நிலச் சமூகத்தில் நிகழ்ந்துள்ளது. தொடக்ககால வேளாண்மையை செய்த மக்கள்உழுதொழில் அறிந்திலர்.தொடக்கநிலை விவசாயம் கொத்து விவசாய முறையே இருந்தது என்பதற்கு துளர், தொட்டு ஆகிய இரண்டு கருவிகள் உறுதிப்படுத்துகின்றன. துளர் என்பது மண்வெட்டி,தொட்டு என்பது தோண்டி என்பதாகும். இவ்விரு கருவிகளை எளிய வேளாண்மை கருவிகளாக இனம் காணமுடிகிறது. இவைகளைக் கொண்டே மண்ணை கொத்தி விவசாயம் செய்துள்ளனர். இவற்றுள் தோண்டி என்பது பெண்பாற்புலவர் வெள்ளிவீதியார் பாடலில் இடம் பெற்றுள்ளது. இக்கருவியை தலைவி குறிப்பிடுகிறார். நிலத்தை தோண்டுதலுக்கு இத்தோண்டியே பயன்படுத்தி இருப்பர் என்பர் உரையாசிரியர் இரா.அறவேந்தன். இக்கருவியே பிறகு தோண்டுகழி(Digging stick)என்று குறிப்பிடப்பட்டிருக்கும் என கருதத்தோனுகிறது. இதனை பக்தவத்சலபாரதி அவர்கள் “தமிழகத்தில் புதிய கற்காலத்தின் காலம் ஏறக்குறைய கி.மு12000-கி.மு8000 என மதிப்பிடப்படுகிறது. இக்காலகட்டத்தில் பயிர் விளைவித்தலில் ஈடுபட்ட பெண்கள் பயன்படுத்திய முதல் விவசாய கருவி எது தெரியுமா? அதுவே தோண்டுகழி(Digging stick).இது ஒரு நான்கைந்து அடி உயரமுள்ள மெலிந்த குச்சியாகும். அதன் முனை கூர்மையாகச் சீவப்பட்டிருக்கும். மழை பெய்த பின்னர் மலைச்சறிவுகளில் தோண்டுகளிகலால்குழி ஊன்றி விதைகள் இட்டார்கள்”(பக்தவத்சலபாரதி

http://Creativecommons.org//license/by/4.0/.

201:157-158). ஆக குறிஞ்சி நில வேட்டுவச் சமூகத்தை வேளாண் சமூக நிலைக்கு நகர்த்தி பயிர்த் தொழிலுக்கு வித்திட்டவர்கள் பெண்கள் தொல் சமூகத்தில் பெண்களே முதன்மையாக திகழ்ந்திருக்கிறார்கள்.”புதிய கற்காலத்தில் அதுவரை பெண்கள் செய்து வந்த காடுபடு பொருள்கள் சேகரித்தலை விடுத்துத் தங்கள் குடியிருப்பைச் சுற்றி அத்தகைய பொருள்களை கிடைப்பதற்காகப் பயிரிடத தொடங்கினார்கள். பயிர் விளைவித்தல் (domestication Plants) தோன்றிய காலகட்டம் அது. அதனால் பெண்களே முதல் விவசாயிகள் எனும் பெயரைப் பெற்றார்கள்”என்பர்(பக்தவத்சலபாரதி **2020:42).** குறுந்தொகை **((130)** பாடலில் தோண்டி என்பது செயல் அளவில் இனம் காணமுடிகிறது. இச்செயலுக்கான கருவி அமைப்பு எத்தகையது என்று சிந்திக்கும் போது மானிடவியல் ஆய்வாளர் பக்தவத்சலபாரதி “மனித குலத்தில் தோன்றிய முதல் விவசாய கருவியாக தோண்டுகழி சங்க இலக்கியத்தில் காணப்படுவது ஒரு வியப்புக்குரிய பதிவு

இரும்புத் தலையாத்த திருந்துகணை விழுக்கோல்

உளிவாய்ச்சுரையின் மிளிர மிண்டி (**பெரும்பாண்**.91-92)

எனும் அடிகள் மிக முக்கியமானவை ஆகும். மனித குலத்தில் ஆதி வரலாற்றை கூறும் சான்றுகள் வேறெந்த இலக்கியத்திலும் இருப்பதாக தெரியவில்லை (சங்க இலக்கியம் வேறு பல ஆதிச் சான்றுகளையும் கொண்டிருக்கிறது). தொன்மை சார்ந்த இந்த இலக்கியச் சான்று தவிர வேறெந்தச் சான்றும் இப்போது இல்லை. கிண்டுவதற்கும் கிளறுவதற்கும் தோண்டுகழி பயன்படுத்தப்பட்டது. பெரும்பாணாற்றுப்படை கூறும் தகவலின்படி இந்த கருவியின் நுனிப்பகுதி பூண் போன்றது போன் போன்று இரும்பால் செருகப்பட்டிருந்தது. இது அடுத்தடுத்த கால வளர்ச்சியை காட்டுவதாகும். இரும்பு முனைக்கு முன்னர் அதன் நுனிப்பகுதி இயல்பான மரமாகவே இருந்திருக்கும்” (பக்தவத்சலபாரதி **2020:43).** தோண்டுகழியின் வடிவத்தை இங்கு உறுதிப்படுத்திக் கொள்ளமுடிகிறது. இது பெண் வழியாக இச்சமூகத்திற்கு அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. பயிர்த்தொழிலுக்கு தாய்வழிச் சமூகமே தொடக்கமாக அமைந்திருக்கிறது என்பது இதன் வழியாக அறியமுடிகிறது.

தினைப்புனம் காத்தல்

பயிர்த்தொழிலுக்கு வித்திட்ட பெண்சமூகம் அப்பயிரை பாதுகாப்பதிலும் முதன்மையாக இருந்திருக்கிறது என்பதற்கு தினைப்புனம் காத்தல் என்ற செயல் சான்றாக அமைகிறது.இதனை

வளைவாய்ச்சிறுகிளிவிளைதினை கடியச்

செல்கென்றோனே யன்னை எனநீ (**குறுந். 141)**

திணை காவலுக்கு தலைவியை அவளது அன்னையே அனுப்பி விட்டதை காண முடிகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

சுனைப்பூக்குற்றுத்தொடலைதைஇப்

புனக்கிளிகடியும்பூங்கட்பேதை **(குறுந்.142)**

தலைவிதிணைப்புனம்காத்தமையை இங்கு அறியமுடிகிறது.

தழலுந்தட்டையுமுறியுந்தந்திவை

ஒத்தனநினைக்கெனப்பொய்த்தனகூறி **(குறுந். 223)**

பிடிக்கையன்னபெருங்குரலேனல்

உண்கிளிகடியுங்கொடிச்சிகைக்குளிரே

சிலம்பிற்சிலம்புஞ் சோலை **(குறுந். 360)**

குறவர் இனப் பெண்கள் திணை மேயவரும் கிளிகளை தழல், தட்டை, குளிர் ஆகிய கருவிகளைக் கொண்டு விரட்டி உள்ளனர். குறிஞ்சி நிலச் சமூகத்தில் திணைக்காவல் என்பது பகல், இரவு ஆகிய இரு பொழுதுகளிலும் நடைபெற்றுள்ளன. மகளிர் பகற்காவலையும்ஆடவர்இரவுக் காவலையும் (குறுந். 54,150,357) மேற்கொண்டுள்ளனர்."சங்க இலக்கியத்தில் தினை வரும் எண்பது இடங்களில் ஆண் தினை காவல் புரிந்தமை ஆறு இடங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. பெண்கள் தினைப்புனம் காத்தமை 29 இடங்களில் பேசப்பட்டுள்ளது. ஏனல் வரும் 43 இடங்களில் ஆண் காவல் எட்டு இடங்களிலும் பெண் காவல் 26 இடங்களிலும் பேசப்பட்டுள்ளன. ஆக 55 இடங்களில் பெண்கள் தினைப்புனக் காவலில் ஈடுபட்டமை பாடப்பட்டுள்ளது." என்பர் பெ.மாதையன்(2010:98). பெண்கள் தாங்கள் செய்யும் செயலுக்கு ஏற்ப தொழில் கருவிகள்குறித்த திறனையும் அறிவையும் பெற்றவர்களாக இருந்துள்ளனர்.

வெறியாட்டு

சங்ககால அக வாழ்க்கையில் களவு மேற்கொண்ட தலைவி தலைவனை பிரிந்திருக்கும் காலத்தில் அவளின் தோற்ற பொலிவில் மாறுதல்கள்தோன்றக்கூடும். இம்மாற்றத்தை பசலைநோய் என்பர். இந்நோயினால் உடல் மெலிவு ஏற்படும். இம்மாற்த்தின் காரணத்தை அறிய செவிலித்தாய் தலைவியை வேலனிடம்அழைத்துச்சென்று குறிகேட்பாள், இதனை வெறியாட்டு என்பர். இந்நிகழ்வு குறிஞ்சி நிலச் சமூகத்தின் பண்பாட்டு வழக்கங்களுள் ஒன்றாகும். இந்நிகழ்வை

வெறிஅறிசிறப்பின்வெவ்வாய்வேலன்

வெறியாட்டுஅயர்ந்தகாந்தளும்உறுபகை(தொல். 1006)

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இதற்கு உரை எழுதும் தமிழண்ணல் வேலன்(முருகனைப் போல் கையில் வேல் பிடித்து ஆடும் படிமத்தானாகியபூசாரி) வெறி ஆடிக் குறி கூறுவான். அத்தகைய சிறப்பினையுடைய கடிதான சொற்களைக் கூறும்

http://Creativecommons.org//license/by/4.0/.

வேலன் காந்தல் பூச்சூடி வெறியாட்டு நிகழ்த்துவது காந்தள் எனப்படும் என்பார்(தமிழண்ணல் 2010: 62-63).தலைவிக்கு ஏற்பட்ட மாற்றத்தை வேலன் வெறியாடித் தெய்வத்தால் நிகழ்ந்ததாக கூறியமை,

அறியாதுஅயர்ந்தஅன்னைக்குவெளியென

வேலன்உரைக்கும்என்பஆகலின் (நற்.273)

என்னும் பாடல்வரிகள் கூறுகின்றன மேலும் இதனை

மென்றோணெகிழ்த்தசெல்லல்வேலன்

வென்றிநெடுவேளென்னும்அன்னையும்

அதுவென்றுணருமாயின் ..... (குறுந் .111)

உடல் மெலிவு தோன்ற காரணமானவன் நெடுவேலை உடைய முருகன் (தலைவன்) என்று வேலன்(பூசாரி) கூற அன்னையும் அதனை நம்புவாள். இவ்வெறியாட்டை,

மறிக்குரலறுத்துத்தினைப்பிரப்பிரீ இச்

செல்லாற்றுக்கவலைப்பல்லியங்கறங்கத்

தோற்றமல்லதுநோய்க்குமருந்தாக(குறுந். 263)

ஆட்டுக்கடாவின் கழுத்தை அறுத்து தினைச் சோறுடன் கலந்து பெரு உருண்டைகளாக்கி பலியாக இட்டு வாத்தியங்கள் இசைக்க செய்யும்போது வேலன் மீது தெய்வம் வெளிப்படும் என்பதின் வழி வெறியாட்டு நிகழ்முறையை அறிய முடிகிறது. இக்குறுதி கலந்த பலியை தலைவியின் நெற்றியில் தடவி அவள் உற்ற துன்பத்தை போக்கியமையை காணமுடிகிறது (குறுந்.362). மேலும் கழங்கு மூலம் மாறுபாட்டிற்கு காரணம் அறிந்து முருகனுக்கு ஆட்டை அறுத்து வெறி நிகழ்த்தியுள்ளனர்(நற். 47). குருதி போன்ற சிவந்த காந்தள் மலர்களைச் சூடி சூரர மகளிர் இசைக்கருவி முழங்க வெறி ஆடினர் (நற். 34). வெறியாட்டு பெண் பூசாரிகளால் நிகழ்த்த பட்டிருக்கிறது என்பதை இங்கு உணரமுடிகிறது." ஆண் பூசாரிகளுக்கு முன்பு பெண்கள் முருகனின் பூசாரிகளாக இருந்துள்ளது சங்க இலக்கியங்கள் ஆவணப்படுத்தி உள்ளன. பழமுதிர்சோலையில் குறமகள் முருகாற்றுப்படுத்தியசெய்தியை திருமுருகாற்றுப்படை (218-249) கூறுகிறது (மந்திரவாத பூசாரிகள்) நடத்திய வெறியாடல் பின்னாளில் வேலன்மார்களால் நடத்தப்பட்டது. வேலன்மார்கள் முதன்முதலில் பூசாரிகளாகச் செயல்படத் தொடங்கியபோது ஆதி பெண் பூசாரிகள் போன்று பெண் வேடமிட்டு சடங்குகள் செய்தனர். அதன் பின்னர் மெல்ல மெல்ல பெண் வேடத்தில் இருந்து விடுபட்டு ஆண்களாகவே நின்று பூசைகள் செய்தனர்" என்பர் பக்தவத்சலபாரதி (2020:98-99). இக்கருத்தாக்கம் பெண் சமூகம் நிகழ்த்தியதை உறுதிப்படுத்துகிறது." சங்ககால வேலன் வெறியாட்டத்தின் எச்சம் இன்று தெய்யம், திற வேலன் துள்ளல், பான, பலிச்சடங்குகள் எனப் பல வடிவங்களில் கேரள

http://Creativecommons.org//license/by/4.0/.

மாநிலத்தில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன என்பர் நா.செந்தில்(2024:14).ஆக சங்ககால தாய்வழிச் சமூக எச்சம் இன்றும் நிலைபெற்று இருப்பது கண்கூடு. குறிஞ்சி நிலச்சமூகத்தில் தலைவியின் மாறுபாடு கண்டவுடன் தாய் கழங்கு பார்ப்பதும் வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்துவதும் அவர்களின் பண்பாட்டு மரபாக உள்ளது .இந்நிகழ்வு அனைத்தும்பெண்களே முன்னெடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முடிவாக

தமிழ்ச்சமூக படிநிலைகளுள் தாய்வழிச்சமூகம் தந்தை வழிச்சமூகம் என்று இரு வேறுபட்ட படிநிலைகளை காணமுடிகிறது. தந்தை வழி சமூகத்தில் பெண்களுக்கான இருப்பு மறுக்கப்பட்டது என்று திராவிட சிந்தனையாளர்கள் கூறுவதுண்டு.ஆனால் தாய்வழிச் சமூக பதிவை தன்னகம் கொண்ட சங்கப் பாடல்களில் குறிப்பாக குறிஞ்சி நிலப் பாடல்களை வாசிப்பிற்கு உட்படுத்தும் போது பெண்களுக்கான மதிப்பு உச்சம் பெற்று இருப்பதை காண முடிகிறது. ஆதிச் சமூகமான குறிஞ்சி நிலத்தில் எல்லா நிலையிலும் பெண்களே முதன்மையாக இருந்துள்ளனர். தமிழ்ச்சமூகத்திற்கான நாகரிக மரபான ஆடை உடுத்துதலை பெண்களே முன்னெடுத்துள்ளனர். வேட்டுவச் சமூகத்தை வேளாண் சமூகமாக நகர்த்துவதற்கான முன்னெடுப்புகளை பெண்களே செய்துள்ளனர். உணவு சேகரிப்பு, உணவு உற்பத்தி வழி கூட்டு பண்பாட்டை உருவாக்கியுள்ளனர். பெண்களே அதிகமாக ஈடுபட்டுள்ளனர். தொல்சமயத்தில் பெண்களே வெறியாட்டு நிகழ்த்தியுள்ளனர் . ஆகதொல்குடிச் சமூகத்தில் பெண்களுக்கான வெளி முதன்மையாக இருந்தமை தாய்வழிச்சமூக கூறுகள் உணர்த்துகின்றன. இங்கு உபரி உற்பத்தியான உடமைச் சமூகத்தில் மாறுபட தொடங்கியது என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. இன்றும் தமிழ்ச் சமூகத்தில் தாய்வழிச்சமூக எச்சங்கள் நிலை பெற்றுள்ளன.

ஆய்வுத்துணைநூல்கள்

1. அறவேந்தன் இரா. 2016, குறுந்தொகை, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
2. பாலசுப்பிரமணியன் கு.வெ., 2004, நற்றிணை, சென்னை: நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்
3. செந்தில் நா. 2024, வெறியாட்டமும் தெய்யமும், புதுச்சேரி: தமிழர் இனவரைவியல் கழகம்.
4. பக்தவத்சலபாரதி, 2003, பண்பாட்டுமானிடவியல், சிதம்பரம் : மெய்யப்பன் பதிப்பகம்
5. பக்தவத்சலபாரதி, 2020, பண்டைத் தமிழ்பண்பாடு, புத்தாநத்தம்: அடையாளம் வெளியீடு.
6. பக்தவத்சலபாரதி, 2017, தமிழகப்பழங்குடிகள்,புத்தாநத்தம்:அடையாளம் வெளியீடு.
7. மாதையன்பெ. 2010, சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம், சென்னை:நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

20. தந்தை பெரியாரின் கடவுளும் கடவுள் மறுப்புக் கொள்கையும்

உ.ச.எ.முகிலன்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சைவபானு சத்திரிய கல்லூரி,
அருப்புக்கோட்டை.

உ.ச.எ.தமிழரசன்,
உதவிப் பேராசிரியர், இளநிலைத் தமிழ்த்துறை,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி

DOI 10.5281/zenodo.13761887.

Abstract:

It is based on the great poets who spread rational thoughts in the world of Tamil literature. Did not reach the ideals of the Siddhas. After the Siddhas, it is the Great Father Periyar who spread the principles of rationality and touched the hearts of the lay people. He was a proud father who worked for a society that was anti-caste, anti-religious, anti-God, rational thoughts, rights and well-being for the oppressed people. All that seems to be an obstacle to human life has been demolished and revolutionized. It is no exaggeration to say that the seeds he sowed sprouted, grew into trees and are bearing fruit today. This article sets out to explore the Dravidian movement thoughts of such a great man.

முன்னுரை

தமிழ் இலக்கிய உலகில் பகுத்தறிவுச் சிந்தனைகளைப் பரப்பிய பெருமை சித்தர்களைச் சாரும். சித்தர்களின் கொள்கை பாமரமக்களைச் சென்றடையவில்லை. சித்தர்களுக்குப் பிறகு பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பிபாமரமக்களின் நெஞ்சங்களைத் தட்டி எழுப்பிய பெருமை தந்தை பெரியாரையே முழுக்கச் சாரும். சாதிய எதிர்ப்பு, மத எதிர்ப்பு, கடவுள் எதிர்ப்பு,பகுத்தறிவுச் சிந்தனைகள், உரிமைகள், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான நல்வாழ்வு என ஒரு சமூகம் நல்வழியில் இயங்கிட ஓயாது உழைத்த பெருமையாளர் தந்தை பெரியார். மனித வாழ்க்கைக்குத் தடை என்று தோன்றுகின்ற எல்லாவற்றையும் தகர்ந்தெறிந்த புரட்சிவித்து. அவர் விதைத்த விதைகள் முளையிட்டு, செடியாகி வளர்ந்து மரமாகி இன்று பலன் தந்து கொண்டிருக்கிறது என்றால் மிகையல்ல. அத்தகைய பெரியாரின் திராவிட இயக்கச் சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

கடவுள் மறுப்புக் கொள்கை:

மனிதனை இழிவுபடுத்துவதற்கும் பகுத்தறிவற்ற தன்மைக்கும் கடவுள் நம்பிக்கை காரணமாக அமைவதால் அதைஒழித்துக் கட்டவேண்டும். கடவுள் மேல் எங்களுக்கு எவ்வித கோபமும் இல்லைஎன்றவரிகளின் மூலம் பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கையின் பின்னுள்ள மனித சமுதாயத்தின் உயர்வு அடிப்படையாக அமைந்துள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது. கோயிலுக்குப் போகக் கூடாது. செத்தாலும் போகக் கூடாது. அங்கேஎன்ன இருக்கின்றது. குழவிக்கல்லைத் தவிர? யாராவது சொல்லுங்கள் என்றுசவால் விடுக்கும் தந்தை பெரியார், எல்லா இடங்களிலும் எங்கும் நிறைந்தகடவுளுக்குத் தனியானஓர் இடத்தில் என்ன வேலை? எல்லாமாய் இருக்கின்ற இறைவனுக்குக் குழவிக்கல்லாய் இருக்க வேண்டும் என்று என்ன தலை எழுத்து? எவனாவது சாபம் கொடுத்தானா? என்று கிண்டல்

http://Creativecommons.org//license/by/4.0/.

பாவனையல் தொடுக்கும் வினாகடவுள் மறுப்புக் கொள்கையையும்,பகுத்தறிவுச் சிந்தiயைத் தூண்டுவதை அறிந்து கொள்ள முடிகிறது.

கடவுள் மறுப்புஎன்றால் எல்லாக் கூட்டங்களிலும் 'கடவுள் வாழ்த்து' மரபாக வருவதுபோல் பொதுக் கூட்டத்தில் முதல் நிகழ்ச்சியாக,

"கடவுள் இல்லை

கடவுள் இல்லவே இல்லை

கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்

பரப்பினவன் அயோக்கியன்

வணங்குகிறவன் காட்டுமிராண்டி

கடவுள் இல்லை, இல்லவே இல்லை"

என்று சொல்லிவிட்டு மற்ற நிகழ்ச்சிகளைத் தொடங்குவது தான் கடவுள் மறுப்பு சிந்தனை என்பதை எடுத்துரைக்கிறார்.

கடவுள் கண்ணுக்கு எட்டாதவன். அறிவுக்கும் எட்டாதவன். மனத்துக்கும் எட்டாதவன் என்று ஆத்திகன் கூறுகின்றான். இந்த மூன்றுக்கும் எட்டாதவன் பிறகு எதற்குத் தான் எட்டுவான்? என்று பகுத்தறிவுச் சிந்தனையை முன் வைப்பதில் இருந்து கடவுள் குறித்தான பிம்பம் நம் மனதில் இருந்துசுக்கு நூறாய் உடைந்து போவதை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் பாரதியின் கண்ணன் பாட்டில்

சாத்திரம் கோடிவைத்தாள் - அவை

தம்மினும் உயர்ந்ததோர் ஞானம் வைத்தாள்

மீத்திடும் போதினிலே - நான்

வேடிக்கையுறக் கண்டுநகைப்பதற்கே

கோத்தபொய் வேதங்களும் - மதக்

கொலைகளும் அரசர்தங் கூத்துகளும்

மூத்தவர் பொய்நடையும் - இள

மூடர்தம் கவலையும் அவள் புனைந்தாள்

என்ற பாரதியின் சிந்தனையிலும் உணரமுடிகின்றது.

கடன் பட்டு வட்டி கொடுத்த மக்களுடையவும், பாடுபட்டுபலனைக் கொடுத்த மக்களுடையவும் மனமும் வயிறும் வாயும் பற்றி எரிய எரிய அந்த உழைப்பாளிகளின் பணங்களைக் கொண்டு திருக்கோயில் எழுப்பவும், வாகனங்கள் செய்யவும், திருமேனிக்குக்

http://Creativecommons.org//license/by/4.0/.

கிரீடம்; அமைக்கவும், திருக்கல்யாணம் செய்யவும், திருவிழா வானவேடிக்கை உண்டாக்க ஏற்படுத்தப் படுமானால் யார்தான் சகித்துக் கொண்டு இருக்கமுடியும்? இந்த அக்கிரமங்களைப் பார்த்துக் கொண்டுஎந்தக் கடவுள் தான் இருக்கமுடியும்? அப்படிஒருகடவுள் உள்ளது என்று சொல்லப்படுமானால் அப்படிப்பட்ட கடவுளை அழித்து ஒழித்து விடுவதால் என்ன நட்டம்? என்று தந்தை பெரியார் எடுத்துரைக்கிறார்.

முத எதிர்ப்பு:

மதமே மனிதனுடைய சுயமரியாதைக்கு விரோதி, மதமே மனிதனுடைய அறிவு வளர்ச்சிக்கு விரோதி, மதமே மனித சமூக சமதர்மத்திற்கு விரோதி என்றும், இன்று மதமானது ஒருவரையொருவர் ஏய்க்க, வன்முறையை உண்டாக்க, மக்களிடத்தில் ஏற்றத்தாழ்வினை, பிரிவினையை உண்டாக்கப் பயன்படுகின்றதே அன்றி தொல்லையின்றி நிம்மதியான வாழ்வு வாழ உதவுவதாக இல்லை.

மேலும் மக்கள் முன்னேற்றத்தில் மதம் வந்துதடை செய்தால் எந்தமதமாக இருந்தாலும் ஒழித்துத் தான் ஆக வேண்டும். உன்னைப் பறையனாய்ப் படைத்தார். அவனைப் பார்ப்பனாய்ப் படைத்தார். என்னைச் சூத்திரனாய்ப் படைத்தார் என்று கடவுள்மேல் பழிபோடும் கொடுமைகள் ஒழிக்கப்படவேண்டும் என்றால் கடவுள் ஒழிக்கப்படவேண்டும் என்றுதன் பகுத்தறிவுச் சிந்தனையைதந்தைபெரியார் முன்வைக்கிறார்.

மதம், கடவுள், சாத்திரம் மனிதச் சமுதாயத்தை முறைப்படுத்தவும், ஒழுக்கம், நாணயம் முதலியவற்றை வளரச் செய்யவும் ஏற்படுத்தப் பெற்றிருக்க வேண்டும் என்று உரைக்கின்றார். ஆனால் இந்த மதம் நாளடைவில் ஒரு சில சுயநல சோம்பேறிகளிடம் அகப்பட்டுக் கொண்டு, இன்றைக்கு அதற்கு நேர்மாறாக நாணயமற்ற தன்மையும் தீயொழுக்கமும் வளருகின்றன. மதம் போலி வேடதாரிகளின் கூடாரங்களாக மாறிவிட்டன என்பதையும் எடுத்துரைக்கின்றார்.

மனித வாழ்வுக்காக மனிதனுடைய முடிவான இலட்சியத்தை அடையத்தக்க ஏற்பாடுகளே, விதிகளே, எண்ணங்களே மதம் என்று கருத்தையும் முன்வைக்கிறார்.

மதவாதி மோட்சத்திற்குப் போக கோயில் கட்டச் சொல்லுவான். குளம் வெட்டச் செய்வான். எறும்புப் புற்றுக்கு அரிசி போடச் சொல்லுவான். பாம்புப் புற்றுக்குப் பால் வார்க்கச் செய்வான். ஆனால் மனிதனுக்குத் தொண்டுசெய்வதன் மூலம் மனித இனம் மேன்மை அடைய வேண்டும் எந்த மதநிறுவனமோ மதவாதிகளோ போதிப்பதில்லை என்ற தந்தை பெரியாரின் கருத்து சிந்திக்கத் தக்கது.

மனிதன் தனித்து வாழக்கூடியவன் அல்லன். அப்படிவாழவும் அவனால் முடியாது. அதை முற்றும் உணர்ந்தவர் தந்தைபெரியார். அதனால் தான் தன்னை முழுவதுமாக இச்சமூகநல்வாழ்வுக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். நான் ஒருநாத்திகன் அல்லன். தாராள எண்ணமுடையோன். நான் ஒருதேசிய வாதியும் அல்லன். தேசாபிமானியும் அல்லன். ஆனால் தீவிரசீவாதார எண்ணமுடையவன். எனக்குச் சாதி என்பதோ உயர்வுதாழ்வு

http://Creativecommons.org//license/by/4.0/.

என்பதோ இல்லை. அத்தகைய எண்ணத்தை எதிர்ப்பவன். ஆதரிப்பவன் அல்லன் என்கிறார் தந்தை பெரியார்.

தீண்டாமை, சாதிய எதிர்ப்பு:

தீண்டாமை, சாதி ஒழிப்பு வருணாச்சிரதர்மம் போன்றவை மக்களை முட்டாளாக்கி எவ்வித சிந்தனையையும் அவர்கள் பெறக் கூடாது என்பதற்கா கொண்டு வரப்பட்டவை என்பதை, நம் நாட்டில் சாதி என்று எடுத்துக் கொண்டால் பார்ப்பான், சூத்திரன் என்கிற இரண்டுதான். செட்டி, பறையன், முதலி, நாவிதன், வண்ணான் என்பவன் எல்லாம் அவனவன் செய்கிற தொழிலால் பிரிந்திருந்தவனே தவிர, பிரிக்கப் பெற்றவனே தவிர,மற்றபடி அவர்களுக்குள் எவ்விதபேதமும் இல்லை என்பதை எடுத்துரைக்கிறார்.

உத்தியோகத்தினால் ஒருவன் மேல்சாதியானால், கீழ்ச்சாதிக்காரனுக்கும் மேல்சாதியான் பெற்றிருக்கும் அளவுப்படியேஉத்தியோகம் கொடுத்துக் கீழ்சாதித் தன்மையை ஒழிஎன்கிறேன். தகுதியால் ஒருவன் மேல்சாதியானால்,மேல்சாதியான் பெற்றிருக்கும் தகுதி முறையைக் கீழ்சாதியானும் பெறும் அளவுக்குத் தகுதியைக் கொடுத்து கீழ்ச்சாதித் தன்மையை ஒழி என்று தான் நான் கூறுகிறேன் என்று சாதிய ஒழிப்புக்கான குரலை முன் வைக்கின்றார்.

ஒரு கோயிலுக்குள் பூசைக்குரிய பல சிலைகள் உள்ளன. அவற்றுள் சில கருவறைக்குள் உள்ளன. சில அந்த அறைக்கு வெளியே உள்ளன. இரண்டு வகைகளும் கடவுளர்களே. சாத்திரப்படி குடமுழுக்கு செய்யப் பெற்றவையே. வெளியிலிருக்கும் கடவுளர்களைத் தொடலாம். தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம். கருவறைக்குள் இருக்கும் கடவுளை மட்டும் தொடக் கூடாது, நெருங்கக் கூடாது என்றால் இதில் யோக்கியமிருக்கிறதா? என்ற வினாவை முன் வைக்கின்றார்.

மேலும் வடநாட்டில் குறிப்பாக வாரணாசியில், கங்கையில் நீராடிவிட்டு வில்வத்தைக் கையில் கொண்டு வரும் அடியார்கள் விசுவாசநாதர் கோயிலில் உள்ள இலிங்கத்தின் மீத வில்வத்தைத் தூவுகின்றனர். தொட்டகைகளைக் கண்ணில் ஒற்றிக் கொள்கின்றனர். தென்னாட்டில் மட்டும் ஏன் இந்தநிலை ஏற்படவில்லை. சாத்திரங்களில் இதற்கு இடம் இல்லையா? என்றுகடவுளிடமேபேதம் கற்பிக்கும் நிலையை எடுத்துரைக்கிறார்.

முடிவுரை:

மனித சமூகம் தழைத்து வாழ வழி உள்ளது. மனித சமூகம் வளர்ச்சிஅடைய வழி உள்ளது என்று தந்தை பெரியார் சுட்டிக் காட்டுவது சாதிய, மத, கடவுள் மறுப்பையே. மனிதச் சமூகச் சமதர்ம வாழ்வுக்குத் தடையாய் எந்தக் கடவுளும் இருக்கக் கூடாது என்றும், அப்படிப்பட்ட கடவுள் இருக்கக் கூடாது என்றும் தந்தை பெரியார் எடுத்துரைப்பதை இக்கட்டுரை வாயிலாக அறிந்து கொள்ளமுடிகிறது.

துணைநின்ற நூல்:

1. ந. சுப்புரெட்டியார்இதந்தைபெரியார் சிந்தனைகளஇ; மின்னூல்

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

21. அறிஞர் அண்ணாவின் படைப்புகளில் உளவியலும் பகுத்தறிவும்

முனைவர் இரா.ரேணுகாதேவி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர்.என்.ஜி.பி கலை மற்றும் அறிவியல் கல்லூரிஇகோவை -48.
DOI 10.5281/zenodo.13761990.

Abstract :

Twentieth century politics presents various positions on Dravidianism. Dravidian is not just another identity for the Tamil race. Devaneya Bhavanar says that Tamil and Tamil were called Aryan, Thramila and Dravida. The Ramayana epic that appeared in Tamil is called the Aryan Dravidian Struggle. Father Periyar mentions only the word Dravida, which the Aryans do not know how to eradicate, as belonging to the Tamil heritage. We are forced to continue the work of father Periyar who fought to create Dravidians as dignified and intelligent people by eradicating caste and religious disparities. The contribution of Dravidian literature based on this is very important in the society. In the literature written by Periyar Anna, it can be seen that the challenges and thoughts of Dravidian society prevail. The short stories of Arianjar Anna are examined and the main objective of the article is to reveal the literary influences of Arianjar Anna.

முன்னுரை

திராவிடம் என்பதற்கு இருபதாம் நூற்றாண்டு அரசியல் பல்வேறு நிலைபாடுகளை முன்வைக்கின்றது. திராவிடம் என்பது தமிழ் இனத்திற்கு இன்னொரு அடையாளம் அல்ல. தமிழ்,தமிழர்,என்பதை ஆரியர்,த்ரமிளா, திராவிட என்று அழைத்தனர் என்பார் தேவநேய பாவனார். தமிழில் தோன்றிய இராமாயண இதிகாசத்தை ஆரிய திராவிடப் போராட்டம் என்கின்றனர். ஆரியர் ஒழித்துக் காண்பிக்கத் தெரியாத திராவிட என்ற சொல்லை மட்டுமே தந்தை பெரியார் தமிழ் மரபு இனத்திற்கு உரியதாகக் குறிப்பிடுகின்றார். சாதி சமய ஏற்றத்தாழ்வுகளை அழித்து மானமும் அறிவுமுள்ள மக்களாகத் திராவிடர்களை உருவாக்கப் போராடிய தந்தை பெரியாரின் பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் இதனை அடித்தளமாக வைத்துக்கொண்டு ஏற்பட்ட திராவிட இலக்கியங்களின் பங்களிப்பு சமூகத்தில் மிக முக்கியமானதாக இருக்கின்றது.பெரியாரைத் தொடர்ந்து பேரறிஞர் அண்ணாவால் படைக்கப் பட்ட இலக்கியங்களில் திராவிட சமூகத்தின் இடர்பாடுகளும் சிந்தனைகளும் மேலோங்கி நிற்பதைக் காணமுடிகிறது. அறிஞர் அண்ணாவின் சிறுகதைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, பேரறிஞர் அண்ணாவின் இலக்கியத் தாக்கங்களை வெளிப்படுத்துவதே கட்டுரையின் முக்கிய நோக்கமாக அமைகின்றது.

அன்னதானம் எடுத்துரைக்கும் பகுத்தறிவு

ஆசிரியரே கதை சொல்லியாக அமைந்திருக்கும் அன்னதானம் கதையில் தள்ளாடும் நடையுடனும், நரைத்த தலையுடனும், அடக்கமான பேச்சுடன் சாதுவாக தன்னைக் காட்டிக் கொண்டு அறிமுகமாகும் ஒருவன் கிராமத்திலே ஏழை எளிய மக்களின் நோய் நொடியை போக்கவும், பேய் பிசாசுகளை விரட்டவும் தன்னால் முடியுமென்றும் மக்களுக்கு உண்டாகும் கேடுகளைத் தீர்க்க ஒரு ஆசிரமம் ஏற்படுத்துவதே தனது இலட்சியம் என்றும்

http://Creativecommons.org//license/by/4.0/.

ஒருவர் அறிமுகம் ஆகிறார். அவர்களுக்கு ஆசிரமம் எழுப்பித்தர நினைத்த கதை சொல்லிக்கு அவனது நண்பனின் வாயிலாக,

"நீ புத்தியைப் பறிகொடுத்து விட்டுப் புண்ணியவானாகப் போகிறாய்?[1]"என்பதோடு "ஏதோ பெரியவர்கள் தேடி வைத்த சொத்தை ஏனப்பா பாழ்படுத்துகிறாய்? உன்னைப் போன்ற பணக்காரர்களின் பணம் இப்படித்தான் சாது, சன்யாசி, சாமியாடி முதலிய சோம்பேறிகளுக்குப் பாழாகிறது. உழைக்கிறவன் உருமாறிப் போகிறான். இவன் யாரோ ஒரு உருட்டல்காரன். எதாவது ஓரிடத்திலே, ஏதாவது அக்கிரமம் செய்திருப்பான். அங்கே அடித்து விரட்டி இருப்பார்கள். இங்கே வந்திருக்கிறான் புது மேய்ச்சலுக்கு. வீணாகப் பணத்தைப் பாழாக்காதே"[2] என்று கூற வைத்து நம்மை முட்டாள்களாக்கும் உருட்டல்காரர்களையும், சற்றும் சிந்தித்துச் செயல்படாத மனிதர்களையும் சுட்டிக்காட்டி ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள் என்பதையும் எடுத்துரைக்கிறார். மேலும்,வேஷதாரிகளை நம்பாதீர், பகுத்தறிவு உள்ளவர்களே என்று கூறுகிறார். இது வீண் விளம்பரங்களை நம்பிக்கொண்டு இன்றளவும் நம் சமூகம் சீரழிந்து கொண்டுதான் இருக்கிறது. கற்றவன் கல்லாதவன் என்ற பேதமின்றி கண்மூடித்தனமான நம்பிக்கையினால் கெடுதல் மட்டுமே நம்மை வந்தடையும் என்பதையும் நாம் உணர முடிகிறது.

பச்சோந்தி காலத்திற்கும், இடத்திற்கும் தகுந்தாற்போல தன்னை மாற்றிக் கொள்ளும் தன்மை கொண்டது. மனிதன் காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப மாறிவிடுகிறான் இதனை தனது 'உடை போட்டதும்' கதையின் மூலமாக அறிஞர் அண்ணா எடுத்துரைக்கிறார். வீட்டில் கைநீட்டி வாங்கிய கடனை கடன் கொடுத்தவன் திருப்பி கேட்டால் என்ன செய்வது என்று கேட்ட மனைவியிடம் "இப்போது இல்லை.. இன்னும் ஒரு வருஷம் ஆகும். மொத்தமாக தர முடியாது கொஞ்சம் கொஞ்சமாகத் தான் தர முடியும் என்று இப்படியெல்லாம் வாதாட முடியும் உனக்கு என்ன தெரியும் சட்டத்தின் நுணுக்கம் பைத்தியம் உனக்கு நான் கடனே தர வேண்டியதில்லை என்று கூட வாதாட முடியும் தெரியுமா?"[3] என்று கூறிய விஸ்வநாதன் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் விஸ்வநாதன் ஆக தனது உடையை போட்டதும் அதே நாவினால் கடன் கொடுத்த தனது கட்சிக்காரருக்கு வாதிடும் பொழுது "வாங்கிய கடனை திருப்பித் தராமல் தவணைகள் சொல்லி காலத்தை ஓட்டிக் கொண்டு வரும் தாண்டவராயரின் உடைய வீட்டை என் கட்சிக்காரர் கடனுக்காக கைப்பற்ற உத்தரவிட கேட்டுக்கொள்கிறேன்"[4] என்று கூறுவதன் மூலமாக, மனிதன் மனிதத்தையே மறந்து பணம் பதவி முதலான நிலையற்றவைகளுக்காக சுயநலத்திற்காகவும் தன் பண்பையும் நற்குணங்களையும் இழந்து வாழ்வதையும் இரட்டை வேடம் பூண்டு வாழும் வாழ்க்கையையும் ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

அதே கதையில் திருப்பூர் பனியனும் காஞ்சிபுரம் வேண்டிய திருச்செந்தூர் விபூதியம், பழனி சந்தன பொட்டும் அணிந்து கொண்டு பச்சாதாப உணர்ச்சி நியாய உணர்ச்சியோடு தன் வீட்டில் இருக்கும் பொன்னுரங்கம் தன் குழந்தையை குறும்பு

http://Creativecommons.org//license/by/4.0/.

செய்ததற்காக அடித்த தன் மனைவியிடம் "துளியாவது ஈவு இரக்கம் பரிவு பச்சாதாபம் இருந்தா தானே உனக்கு? என்ன தப்பான காரியம் செய்தாலும் அன்பா புத்திமதி சொல்லி திருத்த வேண்டுமே தவிர இப்படி முரட்டுத்தனமாக கொடுமைப்படுத்தக் கூடாது உருட்டு மிரட்டல்ல திருத்தலாம் இப்படியா பத்திரகாளி குழந்தை துடியா துடிக்கிற படியா அடிக்கிறது"[5] என்று கூறுகிறார். அதே சமயம் போலீஸ் கான்ஸ்டபிளாக அவருடைய உடையை அணிந்த பின்பு "முட்டிக்கு முட்டி தட்டி அடிக்கலைனா பையன் நெசத்தை சொல்ல மாட்டான் மயிலே மயிலே இறகு போடுன்னா போடுமா!"[6] என்று சிறையில் இருப்பவனை ஈவிறக்கம் இன்றி அடித்து துன்புறுத்தக்கூடிய நிலையை நாம் பார்க்க முடிகிறது. மேலும் "டேய் உள்ளதை சொல்லு மண்டையை பொளந்து போடுவேன் பொளந்து சொல்லு உண்மையே"[7] என்று அவனை அடிப்பதையும் காணும் போது வீட்டில் இருக்கும் பொன்னுரங்கத்திற்கும் போலீஸ் பொன்னுரங்கத்திற்கும் உடை வேறு உரையும் வேறு வேறு என்பதை அறிய முடிகிறது.

அவள் முடிவு உணர்த்தும் உளவியல் சிக்கல்கள்

'**அவள் முடிவு**' என்னும் சிறுகதையில் மனைவியை இழந்த மாதவனுக்கு இரண்டு மாதங்களுக்குப் பிறகு மறுமணம் செய்து வைக்கக் கூடிய சமுதாயத்தை நாம் காண்கிறோம். அதே சமயம் அவளது தங்கையாகப் பிறந்த அமிர்தம் தனது 18 வயதில் தன் கணவனை இழந்திருந்தும் அவளுக்கென எந்தவிதமான வாழ்க்கைப் பிடிப்பு இல்லாத போதும், அவளுக்கு மறுமணம் செய்வதை பற்றி யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. மேநாட்டிலே காலையில் மனவிலக்கு மாலையில் மறுமணம் என அவள் படித்திருக்கிறாளே ஆனால் இங்கு கணவனை இறந்தாலும் கூட கணவன் இறந்தாலும் கூட காரிகைக்கு உரிமை கிடையாது மறுமணம் செய்து கொள்ள அதற்கு பதிலாக கட்டுப்பாடு கைமையை மேற்கொள்ள ..அவள் அண்ணனுக்கு மனம் நடந்ததல்லவா அப்படி இருக்க பெண் என்ற காரணத்தால் இவளுக்கு மட்டும் மறுமணம் மறுக்கப்படும் என்பது எந்த விதத்தில் நியாயம் மேலும் கணவன் இல்லாத பெண்களின் மீது இச்சமுதாயம் காட்டும் பார்வையே வேறு மேலும் மறுமணம் செய்து கொள்ள பெண்ணே முன்வந்தாலும் இச்சமூகம் அதனை ஏற்றுக் கொள்வதில்லை அவ்வாறு மறுமணம் செய்து கொண்ட பெண்களையும் புறமென்று பேசி ஒதுக்கி வைக்கும் சமூக நிலை இங்கு எடுத்துக் கூறப்படுகிறது அவளும் ஒரு பெண் அவளுக்கென்று தனித்துவமான வாழ்க்கை தேவை. உணர்வுடைய பெண் . அவள் சந்திக்கும் உளவியல் சார்ந்த சிக்கல்கள் பல.

"அவளும் மனித பிறவி தானே? அவளுக்கும் இளமை உணர்ச்சி என்பது இல்லையா?"[8] என்ற கேள்விகளை ஆசிரியரே எழுப்புவதன் வாயிலாக பெண்ணின் வாழ்வியல் போராட்டத்திற்காக குரல் கொடுக்கும் ஆசிரியரை. அறிஞர் அண்ணாவை இங்கு காண முடிகிறது. இதன் வாயிலாகவும் பெண் உணர்வை புரிந்து கொண்ட அறிஞர் அண்ணா பகுத்தறிவு மிக்கவர் என்பதனை அறிய முடிகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

ஜெபமாலை

ஜெபமாலை சிறுகதையில் கோபுரநாதன் கதைமாந்தர் வழியாக வசதிபடைத்த பணக்கார வர்க்கத்தின் வாழ்க்கை முறைகளைப் பற்றித் தெளிவாகக் கூறுகிறார். பேரறிஞர் அண்ணா, புதுமடத்தாண்டி என்கிற கதை மாந்தர் வழியாக பணக்கார வர்க்கத்தினரை அண்டிப் பிழைக்கும் மக்கள், கோபுரநாதன் மகள் ஜெபமாலை போன்று சமூகத்தில் வசதி படைத்த பெண்களை தன் வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டு வாழ நினைக்கும் மனிதர்கள் உண்டு என்பதைக் குறிப்பிடுகிறார். புதுமடத்தாண்டிதனது கனவில் ஜெபமாலையைத் திருமணம் செய்து கொண்டு வாழ்வது போலவும், ஊராரிடம் செல்வாக்குப் பெற்று கண்ணியமும், மரியாதையும் கிடைக்கும்படி சூழல் ஏற்படுவது போலவும் சமூக நிலையைக் குறிப்பிடுகிறார். ஜெபமாலையின் சிபாரிசால் கோபுரநாதனின் உதவியைப் பெறுவதும் ஊரார் ஆதரிப்பதும் இன்றைய சூழலில் திடீரென்று உருவாகும் ஆண்டிகள் பெரும் பணம், வசதி படைத்தவர்களாக மாறுவதும் ஊராரை ஏய்ப்பதும் வாடிக்கையான செயலாகிவிட்டது. சமூகத்தில் உள்ள மக்கள் பகுத்தறிவுடன் செயல்பட்டு உண்மையான துறவிகளை அடையாளம் காண வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். இந்த நாடகம் எழுதப்பட்ட காலத்தில் சமூகத்தில் அதிக அளவில் மக்களிடையே சமய நம்பிக்கை பரவியிருந்தது. மடங்களும், மடங்களை நிறுவிய துறவிகளையும் நம்பி இருக்கின்றனர். அப்படிப்பட்ட சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருந்துகொண்டு இறைவனை வைத்து ஏமாற்றிப் பிழைக்கும் துறவிகளை அடையாளம் கண்டு மக்கள் விழிப்புணர்வு அடைய வேண்டும் என்பதற்கு புதுமடத்தாண்டியின் நிலையைப் பார்த்து பிறர் ஏளனம் அல்லது கேலி செய்யும் பொது பதில் கூறுவது போல் "ஜெபமாலை என்னை மட்டுமா, உங்களை எல்லாம்கூடத்தான், அதே கேள்விகளைக் கேட்டுத் திணற வைக்கும் "[9]என்றான். மற்ற பண்டாரங்கள் "டே! புதுமடத்தாண்டி! திருவாவடுதுறை, தருமபுரம், சிருங்கேரி முதலிய இடங்களிலே கேள்வி - கேட்கத் துணிவில்லாத ஜெபமாலை போயும் போயும் போக்கிடமற்ற நம்மிடமா கேள்வி கேட்கும்? அங்கே அல்லவா, உன் கனவிலே நடந்த காட்சி நடக்க வேண்டும்"[10] என்று குறிப்பிடுகிறார் அண்ணா. சமூகத்தில் கடவுள் பெயரால் மடங்களை நடத்தி மக்களை ஏமாற்றும் துறவிகள், சமய நம்பிக்கையில் பகுத்தறிவுச் சிந்தனையைப் பயன்படுத்தாத மக்களினம் என நீண்டுகொண்டே இருக்கிறது சமயப் பயணம்.

முடிவுரை

பகுத்தறிவு சிந்தனையாளர் அறிஞர் அண்ணா என்பதற்கு மிகச்சிறந்த அடையாளமாய் அன்னதானம் என்ற அவரது சிறுகதை விளங்குகின்றது. மூடநம்பிக்கைகளையும் கொண்டு பகுத்தறிவோடு சிந்திக்கத் தவறும் மக்களுக்கு அன்னதானம் சிறுகதை சவுக்கு அடியாக அமைகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

மனிதன் சூழலுக்கும் உடைக்கும் ஏற்ப தன்னை மாற்றிக்கொள்ளும் நிலையும், பகுத்தறிவற்ற, கட்டுப்பாடு என்ற பெயரில் பெண்கள் சந்திக்கும் உளவியல் சிக்கல்களையும் எடுத்துரைப்பதோடு, இருபதாம் நூற்றாண்டுகளைக் கடந்து பயணிக்கின்ற புதிய தலைமுறைக்கான பகுத்தறிவுச் சிந்தனைகளை அறிஞர் அண்ணா அவர்கள் தனது படைப்புகளில் விதைத்திருக்கிறார்.

அடிக்குறிப்பு

1. அன்னதானம் -அறிஞர் அண்ணாவின் சிறுகதைகள் - பக்கம் எண் : 3
2. அன்னதானம் -அறிஞர் அண்ணாவின் சிறுகதைகள் -பக்கம் எண் : 3
3. உடை போட்டதும் -அறிஞர் அண்ணாவின் சிறுகதைகள்- பக்கம் எண் : 33
4. உடை போட்டதும் -அறிஞர் அண்ணாவின் சிறுகதைகள் -பக்கம் எண் : 34
5. உடை போட்டதும் -அறிஞர் அண்ணாவின் சிறுகதைகள்- பக்கம் எண் : 36
6. உடை போட்டதும் -அறிஞர் அண்ணாவின் சிறுகதைகள் -பக்கம் எண் : 36
7. உடை போட்டதும் -அறிஞர் அண்ணாவின் சிறுகதைகள் -பக்கம் எண் : 36
8. அவள் முடிவு -அறிஞர் அண்ணாவின் சிறுகதைகள் -பக்கம் எண் : 47
9. ஜெபமாலை-அறிஞர் அண்ணாவின் சிறுகதைகள் - பக்கம் எண் :59
10. ஜெபமாலை- அறிஞர் அண்ணாவின் சிறுகதைகள் - பக்கம் எண் :59

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

22. வேலைக்காரி - வெளிப்படுத்தும் பகுத்தறிவு

முனைவர் மா.ஜெயச்சந்திரன்
இணைப்பேராசிரியர்,தமிழ்த்துறை
டாக்டர்.என்.ஜி.பி.கலை மற்றும் அறிவியல் கல்லூரி,கோவை - 48
DOI 10.5281/zenodo.13762008.

Abstract

Philosopher Anna has written and directed more than 60 plays, starting with Congress Wala Natakam in 1938 in the Republic magazine and Inpa Khoora Natakam which was published in Kanchi magazine in 1968. Radio and television devices were proliferating among the people from the end of the 19th century. Dramas and literature were created based on religious sentiments. Street dances, social dramas and vilasa dramas were performed among the people with equal amount of songs, music and dialogues. Later plays written by rationalists like Arinagar Anna became the influences of Dravidian literature and gave rise to social renaissance. "We have to approach problems with a sense of community. Anna points out that as much as we are human beings, it is more important that we are members of a society. He has earned a special place for himself in the field of literature in the field of drama, short story, prose, critical literary discourses.

முன்னுரை

பேரறிஞர் அண்ணா 1938 ஆம் ஆண்டு குடியரசு இதழில் காங்கிரஸ் வாலா நாடகத்தில் தொடங்கி 1968 ஆம் ஆண்டு காஞ்சி இதழில் வெளியான இன்ப ஒளி நாடகம் என 60க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி இயக்கி உள்ளார்.19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்த மக்கள் மத்தியில் வானொலி, தொலைக்காட்சி சாதனங்கள் பெருகியிருந்தன. சமய உணர்வுகளின் அடிப்படையில் நாடகங்களும், இலக்கியங்களும் உருவாக்கப்பட்டன. மக்களிடையே தெருக்கூத்து, சமூக நாடகங்கள், விலாச நாடகங்கள் சம அளவில் பாடல்களும் இசையுடனும் வசனங்களுடனும் நடத்தப்பட்டன. தொடர்ந்து அறிஞர் அண்ணா போன்ற பகுத்தறிவாளர்கள் எழுதிய நாடகங்கள் திராவிட இலக்கியத்தின் தாக்கங்களாக அமைந்து சமூக மறுமலர்ச்சிக்கு வித்திட்டது எனலாம். "சமுதாய உணர்வோடு நாம் பிரச்சனைகளை அணுக வேண்டும். நாம் மனிதர்கள் என்பது எவ்வளவு முக்கியமோ அதை விட முக்கியமானது நாம் ஒரு சமுதாயத்தின் அங்கங்கள் என்பது"[1] என்று அண்ணா குறிப்பிடுகிறார். தற்காலத்தில் இலக்கியத் துறையில் நாடகம், சிறுகதை, உரைநடை, திறனாய்வு இலக்கியச் சொற்பொழிவுகள் என தனக்கென ஒரு தனி இடத்தை பெற்றவர்.

பேரறிஞர் அண்ணாவும் இலக்கியப் பங்களிப்பும்

திராவிடம் முற்போக்கு இலக்கிய படைப்பாளிகளுக்கு முன்னோடியாக திகழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா என்பதை யாராலும் மறுக்க இயலாது."பொதுவாக ஒரு நாடகத்தின் கதையும் கதைக்கோப்பும் செம்மையாக அமைய வேண்டும். இவ் அமைப்பே நாடகத்தின் முதன்மையான முக்கியமான இயல்பு"[2] என்பது அரிஸ்டாட்டில் அவர்களின் கருத்து. இக்கூற்றுக்கு ஏற்ப சிறந்த நாடகம் மாந்தர்கள்,, கதாபாத்திரங்கள் சந்திப்பு, உரையாடல் திறன், கதையின் உச்ச நிலை, கதையின் திருப்புமுனை, பகுத்தறிவு, சமூக நீதி

http://Creativecommons.org//license/by/4.0/.

போன்றவற்றின் அடிப்படையில் பேரறிஞர் அண்ணாவின் எழுத்து உருவாக்கத்தில் 1947 ஆம் ஆண்டு படைக்கப்பட்ட வேலைக்காரி நாடகம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த நாடகம் சமுதாயத்துக்கு சொல்லும் பகுத்தறிவு நீதி கருத்துக்களை எடுத்து கூறுவதுடன் திராவிட இலக்கியத்தின் தாக்கங்கள் இன்றளவில் சமூகத்தில் எந்த அளவில் செயல் வடிவம் பெற்று இருக்கின்றன என்பதை ஆராய்வதும் விளக்குவதும் இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

பேரறிஞர் அண்ணாவும் நாடக இலக்கிய உலகமும்

அறிஞர் அண்ணாதுரை எழுதிய நாடகங்களில் 'ஓர் இரவு' நாடகத்தை போலவே 'வேலைக்காரி' நாடகமும் புகழ்பெற்ற படைப்பு. சிறந்த கதை அமைப்பு,மொழிநடையும், உரையாடல்களும் படிப்பதற்கு விறுவிறுப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. பேரறிஞர் அண்ணாவின் நாடகங்கள் உருவெடுப்பதற்கு முக்கியக் காரணம், அன்றைய காலகட்டங்களில் சமூகத்தில் ஆதிக்கப்போக்கில் வாழ்ந்த பணக்கார வர்க்கமும், ஜாதிய வெறியில் வாழ்ந்து கொண்டிருந்த அதிகார வர்க்கத்தின் ஆணவப் போக்குகளுமே முக்கிய காரணமாக அமைகிறது.வேலைக்காரி நாடகத்தில் வேதாச்சலம் முதலியார் என்ற கதாபாத்திரத்தில் இடம் பெறும் மிராசுதார் அவருடைய கிராமத்தில் வாழ்ந்த ஏழை மக்களுக்கு இழைத்த கொடுமைகளை அம்பலப்படுத்தி இருக்கிறது. விவசாய குடிகளையும் மக்களின் ஏழ்மை, படிப்பறிவின்மை ஆகியவற்றைப் பயன்படுத்தி கடன் வட்டி என்ற பெயரில் அம்மக்களின் வீடுகளையும், நிலத்தையும் எழுதி வாங்கிக்கொண்டு போதாது என்று மென்மேலும் பணத்தை கட்டாயப்படுத்தி வசூலிப்பது போன்ற கொடுஞ்செயல்களைச் செய்து வருகிற நிலையும் காணமுடிகிறது. பணத்தின் மீது அத்தனை வெறி பணக்கார வர்க்கத்திற்கு உடல் வேதனையையும் அடைந்து துன்புற்ற ஏழை மக்கள் கடும் துயரம் அடைந்தனர் வாங்கிய கடன்களை திரும்பச் செலுத்த இயலாமல் தற்கொலை செய்து கொண்டனர். வேதாச்சலம் முதலியாரை போன்ற பணம் முதலைகளுக்கு பாதிக்கப்பட்ட ஏழை வர்க்கத்தைச் சார்ந்த இரு நண்பர்கள் மணி, ஆனந்த் ஆகிய கதாபாத்திரங்கள் பணக்கார வர்க்கத்தின் பண வெறியையும், ஆணவப் போக்கையும், அடக்குமுறைகளையும் ஒழித்து, முடிவு கட்டுவதாகவும் நாடகத்தின் இறுதியில் வேதாச்சலம் முதலியார் போன்ற மனிதர்கள் திருந்தி தனது நிலையை உணர்ந்து கொள்வதாகவும் முடிகிறது.

வேதாசால முதலியாரின் பணக்கார ஆணவப் போக்கிற்கு தன்னிடம் கடன் வாங்கிய சொக்கன் என்கிற அடித்தட்டு நிலை தொழிலாளி பணத்தை திருப்பி செலுத்த முடியாத சூழலில் "திருட்டு பசங்க நம்ம பணத்தையும் வாங்கிட்டு பிராணையும் வாங்குறானுங்க. டேய் சொக்கா இருடா நானும் வரேன் இந்த பயலை பிடித்து ஜெயில்ல தள்ளித்தான் மற்ற கடன்களே காரணங்களுக்கு புத்தி வரும்"[3] என்று மனதிற்குள் சொல்லிக் கொள்வதன் மூலம் மனதளவில் கூட பணக்கார வர்க்கத்தினர் ஏழை மக்களை ஏற்றுக்கொள்வதற்கு முன்வருவதில்லை என்ற நிலையைக் காண முடிகிறது. வேதாச்சலம் முதலியார் தனது பணத்தைத் திருப்பி கேட்டவுடன் ஜெயிலுக்கு அனுப்பி விடுவதாக சொக்கனை

http://Creativecommons.org//license/by/4.0/.

எச்சரிக்கும் போது "பதறுதுடா உன் மனசு.. உன்னை போல திருட்டு பசங்க என் பணத்தை எடுத்து மோசம் செய்யும்போது மட்டும் என் மனசு குளிருதோ போடா போக்கத்தோடு வாங்கின கடனை கொடுக்க வழியில்லைன்னா குளத்துல கொட்டையில் விழுந்து சாய்கிறது தானே"[4] என்று அவமானப்படுத்துகிறார். இந்த செயல் பணத்திற்காக ஏழை மக்களை அவமானமாக பேசுவது, தற்கொலை செய்து கொண்டு சாகும் அளவிற்கு அவதூறான வார்த்தைகளைக் கொண்டு சாவதற்கு தூண்டுவது என பணக்காரவர்க்கத்தின் இழிவான நடத்தையை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

ஏழைகளின் துயரமும் பகுத்தறிவு சிந்தனையும்

வேதாச்சலம் முதலியாரிடம் கடன் வாங்கி திருப்பிச் செலுத்த முடியாமல் தன் உயிரை மாய்த்துக் கொண்டான் சுந்தரம் பிள்ளை. அவரது மகன் ஆனந்தன் வெளியூர் சென்று கஷ்டப்பட்டு உழைத்து ரூ. 2000 ரூபாய் கொண்டு வந்திருப்பதாகத் தன் நண்பன் மணியிடம் கூறுகிறான். இனி தன் தந்தையின் கஷ்டமான நிலையைப் போக்கி சந்தோசமாக வாழவைக்கும் எண்ணத்தில் வந்திருந்தவனிடம் மணி இவ்வளவு ரூபாய்தான் கொண்டுவந்தாயா எனக்கேட்கிறான். "உனக்கு கேலியாக இருக்கு மணி தேயிலை தோட்டத்திலே இரவும் பகலும் கஷ்டப்பட்டு ஒருவேளை சாப்பிட்டு மீத்தின பணமப்பா இது. இதைக் கொண்டு அப்பாவுக்கு ஒரு கடைகண்ணி வைத்துக் கொடுக்க வேண்டுமென்று ஆசையோடு வந்தேன் மணி உனக்குத் தெரியுமே. அப்பாவுக்குத் தள்ளாத வயசு அவர் எனக்காக எவ்வளவு கஷ்டப்பட்டவர்"[5]என்று ஆனந்தன் கூறுகிறான். திரும்பி வந்து பார்க்கும்போது தன் கண் எதிரிலேயே தந்தை தற்கொலை செய்து கொண்டு தூக்கில் தொங்கும் காட்சியைக் காண்கிறான். இதில் ஏழை மக்கள் எவ்வளவுதான் கடினமாக உழைத்து முன்னேற வேண்டும் என்று எண்ணம் கொண்டு வாழ நினைத்தாலும், ஆதிக்க வர்க்கத்தின் அடிமைத்தன எண்ணமும், காலச் சூழ்நிலைகளும் மரணம்தான் தீர்வு என்ற நிலைக்குத் தள்ளி விடுகின்றன. என்பதற்கு ஆனந்தனின் வாழ்க்கை துயரம் சமூகத்திற்கு ஒரு பாடமாக அமைந்து விடுகிறது. ஆனந்தனின் நண்பன் மணி என்னும் கதாபாத்திரம் இந்நாடகத்தில் முக்கிய இடம் பெறுகிறது. மணி கதாபாத்திரத்தின் வழியாக ஆனந்தனுக்கு ஆலோசனைகள் கூறுவது போல் சமூகத்திற்குத் தேவையான பகுத்தறிவு சிந்தனைகளையும், சிந்தித்துப் பார்த்து செயல்பட வேண்டிய கருத்துக்களையும், சமூகத்திற்கு வெளிப்படுத்துகிறார் பேரறிஞர் அண்ணா. ஆனந்தன், வேதாசல முதலியாரை பழி தீர்க்கும் நோக்கத்தில் கத்தியை தீட்டிக் கொண்டிருக்கிறான் அவனைப் பார்த்து மணி "நானும் உன்னை போல ஒரு நாடோடி. உன் இனம். நீ உலகம் அறியாதவன். சூதும் சூழ்ச்சும் நிறைந்த இந்த உலகத்திலே சிக்கி சிதைந்து நான் கற்ற பாடங்களை நீயும் கற்றறிந்தாய்"[6] என்று கூறுவதாக, தனி மனிதனுக்கு எந்தச் சூழலிலும் நிதானம் தேவை என்பதை உணர்த்துகிறார். எந்த செயலுக்கும் வன்முறையோ, வன்மமோ தேவையில்லை. புத்தி கூர்மையே போதும் என்பதை," கத்தியை தீட்டினாயே ஒழிய உன் புத்தியைத் தீட்டவில்லை. நீ வேதாளம். வேதாச்சலத்தை கொண்டு விடுகிறார் என்று வைத்துக் கொள்

http://Creativecommons.org//license/by/4.0/.

உன் தந்தை அழைத்து விடுவாரோ"[7]இந்த விபரீத புத்தி வேண்டாம் என்று மணி கூறுவதாக அமைந்துள்ளது. பேரறிஞர் அண்ணா நாடகத்தில் வசனமாக எழுதிய இந்த வரிகள் திரைப்படப் பாடலாக பதிவிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.75 ஆண்டுகளை தாண்டியும் இந்த பாடல்பகுத்தறிவு சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்துள்ளது. திராவிட இலக்கியத்தின் தாக்கத்திற்கு இது ஒரு முக்கியமான சான்றாதாரம் என்றே குறிப்பிடலாம்.

முடிவுரை

பேரறிஞர் அண்ணா தனது படைப்புகளின் வழியே தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சியில் பெரும் பங்களிப்பை வகித்தவர். திராவிடக் கருத்துக்களின் வழியாக மக்களிடையே பகுத்தறிவுச் சிந்தனைகளை வளர்த்தெடுத்தவர். வேலைக்காரி எனும் இந்நாடகத்தில் மேல்தட்டு வர்க்கத்தினரின் செயல்பாடுகளை மையக்கருவாகக் கொண்டும், அடித்தட்டு மக்களின் வாழ்வியல் சிக்கல்களையும், உளவியல் சிக்கல்களையும் எளிதாக வெளிப்படுத்தியுள்ளார். பொதுவாக சமூகத்தில் நடைபெறும் சமூகப் பிரச்சினைகளை மையப்படுத்தியே இந்நாடகம் அமைந்துள்ளது. இறைவழிபாட்டு முறைகள், நடக்கும் அவலங்கள், இறை மறுப்புச் சிந்தனைகள் ஆகியவை திராவிடச் சிந்தனைகளை அடித்தளமாகக் கொண்டு இந்நாடகத்தின் போக்கு அமைந்துள்ளது. ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் சமூக நீதியை வெளிப்படுத்துகிறது.

அடிக்குறிப்புகள்

1. அறிஞர் அண்ணாவின் சிந்தனைகள் - தா.பாண்டியன் பக்:43
2. சக்ரவியூகம் - அ.சிவக்கண்ணன் - பக் :69
3. வேலைக்காரி நாடகம் - டாக்டர்.சி.என்.அண்ணாதுரை - பக்: 8
4. வேலைக்காரி நாடகம் - டாக்டர்.சி.என்.அண்ணாதுரை - பக்: 8
5. வேலைக்காரி நாடகம் - டாக்டர்.சி.என்.அண்ணாதுரை - பக்: 9
6. வேலைக்காரி நாடகம் - டாக்டர்.சி.என்.அண்ணாதுரை - பக்: 14
7. வேலைக்காரி நாடகம் - டாக்டர்.சி.என்.அண்ணாதுரை - பக்: 15

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

23. கண்ணதாசனின் திராவிடச் சிந்தனை - ஒட்டலும் விலகலும்

முனைவர் ஜெ.குணசீலி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி, குன்னூர்.
DOI 10.5281/zenodo.13762016.

Abstract

A number of movements emerged in India during the late nineteenth and early twentieth centuries. Such movements can be seen in two broad categories namely organizational political movements and social reform movements. Among the political movements, the Congress Party, Common Ownership Movement, Justice Party and Dravida Munnetra Kazhagam are notable. Among the social reform movements Brahma Samaj, Arya Samaj, Self-Respect Movement, Dravidar Kazhagam etc. are noteworthy. Although the forms of movements are different, each has unique principles. As far as the Congress is concerned, its primary objective is the liberation of the country. Based on that objective, its policies were formulated. As for the Communal Movement, its direct policy was to prioritize labor over capital, prevent the exploitation of the proletariat, and create economic balance. The Justice Party operated with the principle of socio-economic political development of the non-parish. The Dravida Munnetra Kazhagam determined that winning the political arena was the only way to restore Dravidian identity and especially to rebuild the sovereignty of Tamils.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலுமாக இந்தியாவில் பல இயக்கங்கள் தோன்றின. அவ்வியக்கங்களை அமைப்பு ரீதியிலான அரசியல் இயக்கங்கள், சமூக சீர்திருத்த இயக்கங்கள் என இருபெரும் பிரிவுகளாகப் பார்க்கலாம். அரசியல் இயக்கங்களில் காங்கிரசுப் பேரியக்கம், பொதுவுடைமை இயக்கம், நீதிக்கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியன குறிப்பிடத்தக்கவை. சமூக சீர்திருத்த இயக்கங்களில் பிரம்மசமாஜம், ஆரியசமாஜம், சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் போன்றவை கவனிக்கத்தக்கவை. இயக்கங்களின் வடிவங்கள் வெவ்வேறாக இருப்பினும் ஒவ்வொன்றிற்கும் தனித்தன்மையான கொள்கைகள் உண்டு. காங்கிரசைப் பொறுத்தமட்டில் நாட்டு விடுதலையே அதன் முதன்மை நோக்கம். அந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே அதன் கொள்கைகள் வகுக்கப்பெற்றன. பொதுவுடைமை இயக்கத்தைப் பொறுத்தவரை உழைப்பை மூலதனமாக முதன்மைப்படுத்தி, பாட்டாளி வர்க்கம் சுரண்டப்படுவதைத் தடுத்து, பொருளாதாரச் சமநிலையை உருவாக்குவதே அதன் நேரிய கொள்கையாக அமைந்தது. பார்ப்பனரல்லாதாரின் சமூகப் பொருளாதார அரசியல் மேம்பாட்டினைக் கொள்கையாகக் கொண்டு இயங்கியது, நீதிக்கட்சி. திராவிடத்தின் தனித்தன்மையை மீட்டெடுக்கவும், குறிப்பாகத் தமிழினத்தின் மாட்சிமையை மீண்டும் கட்டமைக்கவும் அரசியல் களத்தை வென்றெடுப்பதுதான் ஒரே வழியெனத் தீர்மானித்துப் போராடியது திராவிட முன்னேற்றக் கழகம்.

சமூக சீர்திருத்த இயக்கங்களில் பிரம்ம சமாஜமும் ஆரிய சமாஜமும் இந்து சமயத்தின் விழுமியங்களை ஏற்றுக்கொண்டு அதிலுள்ள மூடப்பழக்க வழக்கங்களையும் மனிதத்திற்கு எதிரான மூட நம்பிக்கைகளையும் ஒழிப்பதற்காகப் போராடின. தமிழகத்தில் தோன்றிய சுயமரியாதை இயக்கமானது, இந்து சமயத்தை மட்டுமல்லாது எந்தச்

http://Creativecommons.org//license/by/4.0/.

சமயத்தையும் ஏற்காமல் மதத்தையே மறுதலித்தது. மதம்தான் சமூகக் கொடுமைகள் அனைத்திற்கும் காரணம் எனப் பிரச்சாரம் செய்தது.

சமூக விடுதலையை அரசியல் அதிகாரத்தின் மூலம்தான் பெற முடியும் என்கின்ற அண்ணாவின் நிலைப்பாட்டினை ஏற்றுக்கொண்ட ஏராளமானோர் அவர் வழி நடக்க ஆரம்பித்தனர். கவிஞர் கண்ணதாசன் அவர்களில் ஒருவராகத் தி.மு.க.வில் செயல்படத் தொடங்கினார். பழுத்த ஆன்மீகக் குடும்பத்திலிருந்து வந்ததால், திராவிட இயக்கத்தின் கடவுள் மறுப்புக் கொள்கையில் மிதவாதப் போக்கினையும் மற்றவற்றில் தீவிரப் பற்றுதலையும் கொண்டிருந்தார். இத்தகைய அணுகுமுறை பற்றிக் கவிஞர் குறிப்பிடுகையில், "திராவிடக் கழகத்தைப் பொருத்தவரைக்கும் எனக்கு எப்போதுமே ஒரு அலர்ஜி உண்டு. அதிலே ஈடுபடுவதில்லை என்று நான் முடிவுகட்டிக் கொண்டிருந்தவன். அந்தப் பேச்சுகளைக் கேட்பதுமில்லை. பெரியாருடைய பேச்சிலே எனக்கு எப்போதும் அக்கரை இல்லை. அவர் சொல்கின்ற தத்துவங்களை எப்போதும் நான் கேலி செய்வது வழக்கம். ஆனால் அண்ணாவினுடைய பேச்சு என்னைக் கவர்ந்தது" என்பார்.

சமுதாயக் கொள்கை

இயல்பாகவே சமூக சீர்திருத்தத்தில் மிகுதியான ஈடுபாடு கொண்ட கவிஞருக்கு, சாதி ஒழிப்பில் தீவிரமான ஆர்வம் இருந்தது. திராவிட இயக்கக் கொள்கைகளின்பால் அவர் ஈர்க்கப்பட்டதற்கு அதுவும் ஒரு காரணமாய் அமைந்தது எனலாம். தம்முடைய முன்னோடிகளான பாரதி, பாரதிதாசன் வழிநின்று சாதி ஒழிப்பின் தேவையை எடுத்துரைத்தார். திராவிட இயக்கத் தூண்களான பெரியாரும் அண்ணாவும் வலியுறுத்திய தீண்டாமை ஒழிப்புத் தொடர்பானக் கருத்தியலில் அவர் முரண்படவே இல்லை. பெரியார் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் சாதிப்பேயை விரட்டுவதற்கு அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பாராட்டவே செய்தார்.

"சாதியெனும் நாகத்தைத் தாக்கித் தாக்கிச்
சாகடித்த பெருமைஅவர் தடிக்கே உண்டு;
நாதியிலார் நாதிபெற நாப் படைத்தார்
நாற்பத்து ஐங்கோடி மக்க ளுக்கும்
பேதமிலா வாழ்வுதரப் பிறந்து வந்தார்;
பிறப்பினிலே பெரியாராய்த் தான் பிறந்தார்"

என்று பெரியாரின் சமூகத் தொண்டினைச் சரியாக மதிப்பிட்டார். அம்பேத்கர் பற்றி எழுதும்போதும் அவர்தம் பணியைத் தெளிவாகச் சித்திரித்தார். இந்தியத் தலைவர்களில் அம்பேத்கரின் தனித்தன்மையை அறிந்து, அதை இளையோர்க்கு உணர்த்தும் நோக்கில்,

http://Creativecommons.org//license/by/4.0/.

“என்புதோல் யார்க்கும் ஒன்றே!

எப்படி இவர்கள் மேலோர்?

அன்பரீர்! எழுவீர்!’ என்றாய்;

ஆர்த்ததே இந்துப் பாம்பு!

மின்படு கணத்தில் அந்த

விரியனைக் கொன்றாய்! சாதி

என்செயும் என்ப தேபோல்

எடுத்தனை ‘மேலோர்’ பெண்ணை!”

என்று குறிப்பிட்டார். மேலும் அம்பேத்கர் மறைவு உணர்த்தும் செய்தியை மொழியும் பாங்கில்,

“தூக்கமே சாக்கா டாக

தூயநீ சென்றாய்! அந்த

ஏக்கமே நோக்கா டாக

இளைத்தனர் தாழ்த்தப் பட்டோர்!

ஆக்கமே பெறுவோம்! சார்ந்த

அறிவறு சாதிப் பாம்பைத்)

தாக்கிடுவோம் நின்பாற் பெற்ற

தடியுண்டு! கைக ளுண்டே!”44

என்று எழுதினார். இந்தத் தேசம் நலிவுற்று வலுவிழந்து போனதற்கு, அதன்கண் உள்ள பலநூறு சாதிகளே காரணம் என்பதைத் தெளிவுபடுத்தினார். முத்தாய்ப்பாக,

“சாதியெனும் பகை உணர்ச்சி வாழுமட்டும்

தமிழ்நாட்டின் முன்னேற்றம் கானல் நீரே!

நீதிமுதல் நெறிமுறைகள் பிறர்க்கும் தந்து

நிலைத்திருந்த பெருமையெலாம் மண்ணிற் சாயும்

சாதியினால் நிம்மதியும் அழிந்தே போகும்

தலைமுறைகள் பலங்குன்றிச் சாயும்! அந்தச்

சாதியினைத் தவிர்த்தொன்றும் வாழ்வ தில்லை!

தமிழகமே! இனி உனக்கும் மீட்சி இல்லை!”

http://Creativecommons.org//license/by/4.0/.

என்று எச்சரிக்கும் தொனியில் அறுதியிட்டு உரைத்தார். சாதி ஒழிந்த சமத்துவச் சமுதாயம் காணுதலே மானுடம் தழைப்பதற்கு உரிய வழி என்பதில் கவிஞர் உறுதியாய் இருந்தமையை இதன் மூலம் அறியலாம்.

சமதருமக் கொள்கை:

உள்ளூர் அரசியலையும் உலக அரசியலையும் கவிஞர் தெரிந்து வைத்திருந்தார் என்பதற்கு அவர்தம் கவிதைப் படைப்புகளில் நிறைய சான்றுகள் கிடைக்கின்றன. உலகளாவிய அரசியல் கொள்கைகளை அறிந்து ஆய்ந்து பார்க்கும் அனுபவமும் அவருள் நிறைந்திருந்தது. பல்வேறு தளங்களுடைய அரசியல் இயக்கங்களில் அவர் பணியாற்றியதால் நேரடியானக் கள அனுபவங்களின் மூலமும் கவிஞர் மெருகேறியிருந்தார். அதனால்தான்,

"நல்லோர்கள் பதவியை நாடினால் அவர்களும்
நரிக ளாவார்
புல்லான மனிதரும் பொருள்சேர்க்கும் ஆசையின்
புலிக ளாவார்
வில்லர்கள் வாழ்வதும் வறியோர்கள் சாவதும்
வழக்க மான
பொல்லாத அரசியல் பூத்ததே தழைத்ததே
பூமி யெங்கும்!"

என்று அவரால் உரைக்க முடிந்தது. கூடவே இந்த உலகிற்கு எது சரியான அரசியல் கொள்கை எனத் தெளிந்துரைக்கவும் முடிந்தது. உழைக்கும் வர்க்கத்தினரின் கைகளுக்குத்தான் இந்த உலகம் கிடைக்க வேண்டும்; அதைத் தவிர்த்துச் சுரண்டும் முதலாளிகளின் கையில் உலகம் சிக்கிக் கொண்டால் என்ன ஆகும் என்பதை வரலாற்று நெடுகிலும் பார்க்கலாம். அந்தப் புரிதலில்தான் கவிஞர்,

"நெஞ்சை நிமிர்த்துங்கள் தோழர்களே! இனி
நேருக்கு நேர்நின்று பார்ப்போம் - சம
நீதிக்குப் போர்ப்படை சேர்ப்போம் - இனிப்
பஞ்சைப் பராரிகள் துஞ்சி இரந்துண்ணும்
பட்டினிக் கோலத்தை மாய்ப்போம் - நெஞ்சின்
பாரத்தை வேருடன் சாய்ப்போம்!"

என்று எழுதியிருக்க வேண்டும். இன்னொரு இடத்தில்,

http://Creativecommons.org//license/by/4.0/.

“இப்படியே பசி நீளுமென்றால் இது

என்ன சுதந்திர பூமி? - ஏன்

இத்தனை ஆயிரம் சாமி?”

என்று கேட்டதும் கூட, அவர் எப்பொழுதும் ஏழைகளின் குரலாகவே ஒலித்தவர் என்பதை உணர்த்துகின்றது.

“பசியால் புரட்சி வரும்

பாமரர்கள் சேர்ந்தெழுந்தால்

அசையாத மாளிகையும்

ஆடிப் பொடிபடுமாம்!”

என்று எச்சரிப்பதும் கூட அப்படித்தான். பொதுவுடைமை இயக்கத்தில் சேர்ந்து அவர் பணியாற்றவில்லையே தவிர, அவ்வியக்கத்தின் கொள்கைகளுக்கு எப்பொழுதுமே அவர் எதிராக இருந்ததில்லை என்பதை,

“வகுப்புவெறி பற்றியெல்லாம்

வாயாரப் பேசுகிறீர்!

வர்க்கப்போர் பற்றி உங்கள்

வாயேன் திறப்பதில்லை?”

என்றுரைப்பதன் மூலம் அறியலாம். ஏழை - பணக்காரர் என்கின்ற பேதம் இல்லாமல் ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்பது தான் சமதருமம். அதை மனதிற்கொண்டே,

“தத்துவத்தின் எச்சரிக்கை

சமதருமம் நாடுங்கள்!

சத்தியத்தின் எச்சரிக்கை

சரித்திரத்தை மாற்றுங்கள்!”

என்று கவிஞரும் எச்சரித்தார் எனக் கருதலாம். பொதுவான நிலையில் கவிஞரை மதிப்பிடுவோர், அவர் அடிக்கடிக் கொள்கைகளை மாற்றிக்கொண்டே இருப்பார் எனக் கூறுவது உண்டு. எதிலும் நிலையான பார்வை உடையவர் இல்லை என்றும் சொல்வதுண்டு. கவிஞர் மீதான இந்த விமர்சனம் அவர் வாழ்ந்த காலத்திலும் முன் வைக்கப்பட்டது. இறந்த பிறகும் அழுத்தமாக விவாதிக்கப்பட்டது. இதற்கெல்லாம் பதிலாக,

“கல்லாய் மரமாய் காடுமே டாக

மாறா திருக்கயான் வனவிலங் கல்ல!

http://Creativecommons.org//license/by/4.0/.

மாற்றம் எனது மானிடத் தத்துவம்

மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!

எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை

என்ப தறிந்து ஏகுமென் சாலை!

தலைவர் மாறுவர் தர்பார் மாறும்

தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!"

என்னும் கவிஞரின் வாக்குமூலத்தையே கூறலாம். தன் மனம் உண்மை என்று எதை ஏற்றுக்கொண்டதோ அதன்வழிக் கவிஞர் சென்றார் எனக் கருதலாம். வால்ட்விட்மனையும் கவிஞரையும் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்த முனைவர் சித்திரா திருமாவளவன், "கவிஞர்களின் பெருமை அவர்கள் கவிதைகளில் மட்டும் அமைவதில்லை. இதயத்தில் நிறையும் உண்மைத்தன்மை; இதந்தரும் முறையில் மானுடத்திற்குப் பாடும் மேன்மை; உலகளாவிய பார்வையோடு உள்நாட்டைப் பார்க்கும் சிறப்புத் தன்மை - இவற்றைக் கொண்டே அவர்கள் மேன்மை நிர்ணயிக்கப்படுகிறது"என்பார். ஆராய்ச்சியாளரின் கூற்றுப்படிப் பார்த்தால் கவிஞரின் கொள்கைகளில் உள்ள உண்மையும் மேன்மையும் எவரையும் வியக்கச் செய்யும் என உரைக்கலாம்.

முடிவுரை:

- தி.மு.க.வில் இணைந்த கண்ணதாசன் அண்ணா வழி நின்று போராடினார்.
- இயக்கத்தின் கடவுள் மறுப்புக் கொள்கையைத் தவிர மற்ற அனைத்திலும் உடன்பட்டுப் படைப்புகளை உருவாக்கினார்.
- திராவிட இயக்கக் கொள்கைகளைத் தாங்கிய கவிஞரின் எழுத்துக்கள் அனைவராலும் கவனிக்கப்பட்டன.
- அண்ணா மற்றும் தி.மு.க.வின் பிற தலைவர்களோடு கருத்து மாறுபாடு கொண்டு இயக்கத்திலிருந்து கவிஞர் விலகினார்.
- சீன யுத்தத்தின் காரணமாக மத்திய அரசு விடுத்த அறிக்கைக்கு அடிபணிந்து, திராவிட நாட்டுக் கோரிக்கையை அண்ணா கைவிட்டதாகக் குற்றஞ்சாட்டினார்.
- ஈ.வெ.கி. சம்பத்தோடு சேர்ந்து, தமிழ்த் தேசியக் கட்சியைத் தொடங்கி, அதற்காக உழைத்தார். பிறகு, அக்கட்சியைக் கலைத்துவிட்டுக் காங்கிரசில் சேர்ந்து பணியாற்றலானார்.
- காங்கிரசின் கொள்கைகளான சோசலிசம், சமதருமம் ஆகியவற்றை ஆதரித்தார். சமதருமக் கொள்கையே உலகம் செழிப்பதற்கான ஒரேவழி என எழுதியும் பேசியும் வந்தார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

- தொழிலாளர் நலனையும், முதலாளி வர்க்கத்தின் சுரண்டல் போக்கையும் முன்வைத்துப் போராடிய பொதுவுடைமைக் கொள்கைக்கும் ஆதரவு தந்தார். சோவியத் நாட்டைப் பாராட்டி அங்குள்ள சமநீதி இங்கும் நிலவ வேண்டுமென்று விரும்பினார்.
- நல்ல அரசியல் கொள்கைகளைத் தலைவர்கள் முன்னிறுத்தாமல், சுயநலத்தோடு போலியான கோஷங்களையே எழுப்புகிறார்கள் என விரக்தியுற்று, ஆன்மிகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

24. திராவிட இயக்க இதழ்களும் சமூக மாற்றமும்

ஆர்.ரேவதி,
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை,
பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி, குன்னூர்.
DOI 10.5281/zenodo.13762032.

Abstract:

Paper is a thin material used for writing and printing. This material is made by pressing wet fibers of cellulose pulp from wood, rag or grass and then drying it between flexible sheets. Paper is a versatile material with many uses including writing, printing, packaging, industrial and construction processes. From the beginning of the 2nd century B.C. Paper is said to have been made from wood pulp in China as far back as 105 AD. However, there is archaeological evidence of the use of paper in China as early as the second century AD.The pulp and paper industry has modernized and reached a global level. China ranks first in paper production followed by the United States. The findings of these papers resulted in various new benefits to society. One of them is magazines. Through this global events and ideas spread rapidly.

முன்னுரை:

காகிதம் (Paper) என்பது எழுதுவதற்கும், அச்சிடுவதற்கும் பயன்படும் ஒரு மெல்லிய பொருள் ஆகும். மரம், கந்தல் அல்லது புல் ஆகியனவற்றிலிருந்து கிடைக்கும் செல்லுலோசுக் கூழின் ஈரமான இழைகளை அழுத்தி பின்னர் நெகிழும் தன்மை கொண்ட தாள்களுக்கிடையில் உலர்த்தி இக்காகிதத்தைத் தயாரிக்கிறார்கள். எழுதுதல், அச்சிடுதல், பொட்டலம் கட்டல், தொழில்துறை மற்றும் கட்டுமான செயல்முறைகள் உட்பட பல பயன்களைக் கொண்ட ஒரு பல்துறை பொருளாக காகிதம் பயன்படுகிறது. கி.மு 2 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் கி.மு. 105 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் சீனாவில் மரக்கூழிலிருந்து காகிதம் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனினும் இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னரே சீனாவில் காகிதம் பயன்படுத்தப்பட்டதற்கான தொல்லியல் சான்றுகள் உள்ளன .மரக்கூழ் மற்றும் காகிதத் தொழில் தற்காலத்தில் நவீனமாக்கப்பட்டு உலகளாவிய நிலையை எட்டியுள்ளது. காகித உற்பத்தியில் சீனா முதலிடத்திலும் அதைத்தொடர்ந்து அமெரிக்கா இரண்டாவதாகவும் திகழ்கின்றன. இந்தத் தாள்களின் கண்டுபிடிப்புகளால் சமூகத்திற்குப் பல்வேறு புதிய நன்மைகள் விளைந்தன. அவற்றுள் ஒன்று இதழ்கள் ஆகும். இதன் வழி உலகளாவிய நிகழ்வுகளும் சிந்தனைகளும் விரைந்து பரவின.

இதழ்களும் திராவிட எழுத்துகளும்:

நாளிதழ் என்பது ஒவ்வொரு நாளும் அச்சிட்டு வெளியிடப்படும் செய்தி இதழ் ஆகும். தற்காலத்தில் செய்தியல்லாத பிறவற்றையும் முதன்மை நோக்கமாகக் கொண்டு நாளிதழ்கள் வெளியிடப்படுகின்றன ஆயினும், மிகப் பெரும்பாலான நாளிதழ்கள் செய்தி இதழ்களாகவே உள்ளன. எனவே இதை செய்தித்தாள்கள் (News Papers) என்றும், நாள்தோறும் வெளியிடப்படுவதால் தினசரிகள் (Dailies) என்றும் அழைப்பதுண்டு.

http://Creativecommons.org//license/by/4.0/.

திராவிட இயக்கம் இதழ்களால் வளர்ந்த இயக்கம் ஆகும். தன் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு உயிரோட்டமாக இயங்கிக் கொண்டிருப்பது இயக்கம் ஆகும். தென்னிந்திய நல உரிமைச் சங்கம் எனத் தொடங்கி நீதிக்கட்சி - திராவிடர் கழகம் - திராவிட முன்னேற்றக் கழகம் - அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் - மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் எனப் பல்வேறு பரிமாணங்களில் தோற்றம் பெற்றுள்ளன. 'பார்ப்பனரல்லாதார்' என்பதைக் குறிக்க திராவிடர்' என்ற சொல்லாட்சி உருவாக்கம் பெற்றது. 'திராவிட' என்ற சொல்லாட்சி 'பிராமணியம், பார்ப்பனீயம்' என்ற சொல்லாட்சிக்கு எதிரான ஒரு சொல்லாகத் தந்தை பெரியார் நிறுவிக் காட்டினார்.

திராவிட இனத்துக்குரிய கொள்கைகளை வளர்த்தெடுக்க முதல் கருவியாகப் பயன்பட்டவை இதழ்களாகும். திராவிட இயக்கத்தின் போர் முரசாக திராவிட இயக்க இதழ்கள் விளங்கின. அறிவுப் பணியாற்றுவதில் முன்னணி படை வீரர்கள் போல் செயல்பட்டன. காங்கிரஸ் பேரியக்கமும், பொது உடைமை இயக்கமும் இருபதாம் நூற்றாண்டில் செல்வாக்குப் பெற்ற இந்தியாவில், திராவிட இனத்தின் பழமையையும், மொழியின் வளத்தையும், சிறப்பையும், தமிழரின் பெருமையையும், தனித்தப் பண்பாட்டையும் தமிழ் மக்களிடமும், பிறரிடமும் எடுத்துரைக்க புறப்பட்ட இதழ்களே திராவிட இயக்க இதழ்கள். மூன்று விழுக்காடே உள்ள பார்ப்பனர்களின் வருணாசிரமக் கொள்கையினால் தொண்ணூற்று ஏழு விழுக்காடாக உள்ள உழைக்கும் மக்களான திராவிடர், 'சூத்திரர்' எனப் பெயரிடப்பட்டு தீண்டத்தகாத இழிபிறவிகளாக நடத்தப்படும் நிலைமையை எடுத்துரைத்து 'திராவிடர்', 'தமிழர்' என்ற இன உணர்ச்சியும் மொழி உணர்ச்சியும் பெறுவதற்காகப் பரப்புரை ஊடகமாக வலம் வந்தவை திராவிட இயக்க ஏடுகள்.

திராவிடச் சொல்லாடலும் ஒருங்கிணைப்பும்:

திராவிடர் என்ற சொல் அன்று மக்களையும் திராவிட இயக்கத் தலைவர்களையும் ஒன்றிணைத்தன. சாதாரண பாமரனையும் படிக்க வைத்தது. கல்வி அறிவுப் பெற்றோரைச் சமுதாய விழிப்புணர்வு அளித்து விவரமானவர்களாக்கின. இந்த ஏடுகளினால் முடிதிருத்தும் நிலையங்கள் மூளை திருத்தும் நிலையங்களாயின. தேநீர்க் கடைகள் விவாதக் கூடங்களாயின. பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு தமிழாசிரியர்கள் தமிழுணர்வை ஊட்டினர். கல் உடைக்கும் தொழிலாளியும், மூட்டை சுமப்பவர்களும், இயக்க ஏடுகளைப் படித்ததினால் இயக்க உறுப்பினர்களாகத் தங்களை இணைத்துக் கொண்டனர். அதன் கொள்கைகளை தத்தம் வாழ்வில் கடைபிடிப்பதால் தான் வெறும் மனிதன் அல்ல; தனக்கென ஒரு இலட்சியம் உண்டு. அதற்காக நாங்கள் எதையும் தியாகம் செய்யத் தயாராக இருப்போம்; உழைப்போம்; சமத்துவ சமுதாயப் பணி மேற்கொள்ளுவோம் என்ற உறுதியுடன் செயல்படத் தொடங்கினர். இதனால் இவர்கள் 'இலட்சிய வீரர்களாக' திகழ்ந்தனர். இதனால் மற்றவர்கள் இவர்களை தனித்துவம் மிக்கவர்களாக உணர்ந்தனர். கறுப்புச் சட்டைக்காரர்களாக அடையாளம் பெற்றனர். பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் மிக்க சிந்தனையாளர்கள் திராவிட இயக்க

http://Creativecommons.org//license/by/4.0/.

இதழ்களை நடத்தக் களமிறங்கினர். பலர் படைப்பாளிகளாகத் தங்கள் எழுதுகோலை ஏந்தினர். இந்த இதழ்கள் மக்களிடம் வலம் வர உழைத்தவர்கள் ஏராளமானோர்.

திராவிட இதழ்கள்:

'தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆங்கில திராவிட இயக்க இதழ்களின் எண்ணிக்கை 257. திராவிட இயக்க இதழ்களின் முன்னோடியாக வெளிவந்தவை 14 என திராவிட இயக்க சிந்தனையாளர் க. திருநாவுக்கரசு 'திராவிட இயக்க இதழ்கள் - ஒரு பார்வை' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நூலில் திராவிட இயக்க இதழ்களின் பட்டியலை வெளியிட்டுள்ளார். 'நாம் கொடுத்திருக்கிற பட்டியலும் முழுமையானது அன்று. கிடைத்தவற்றைச் சலித்து எடுத்து வெளியிட்டு இருக்கின்றோம். இப்பட்டியலில் தனித்தமிழ் இதழ்களையும் மொழி இயல் இதழ்களையும் தமிழ்த் தேசிய இதழ்களையும் இணைக்கவில்லை. அவையும் ஒரு வகையில் திராவிட இயக்க இதழ்களே ஆகும்' என்று இந்நூலின் முன்னுரையில் க. திருநாவுக்கரசு குறிப்பிடுகிறார். இந்தப் பட்டியலில் உள்ள 257 இதழ்களைக் காணும்பொழுது திராவிட இயக்கத்தாரின் சிந்தனை ஆற்றலும், முயற்சியும், உழைப்பும் கொள்கைப் பிடிப்பும் கண்டு வியப்படையாமல் இருக்க முடியாது. இவை அனைத்தும் நிலவி வந்த சமுதாய நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புறமாக இருந்து செயல்பட்டு மிகப் பெரிய மாற்றத்திற்குக் காரணமாக இருந்தன. திராவிட நாடு திராவிடருக்கே, பார்ப்பன எதிர்ப்பு, கடவுள் மறுப்பு என்ற பிரச்சாரத்துடன் பகுத்தறிவு, சுயமரியாதை, சமத்துவம் என்ற இலட்சியத்தை நோக்கிச் செல்லும் பொழுது திராவிட இயக்க ஏடு நடத்தியோரும், எழுத்தாளர்களும் போர்க்களத் தளபதிகளாக, அணி அணியாகச் செயல்பட்டனர். **தொடக்ககால இதழ்கள்** :

திராவிட தீபிகை, திராவிட வர்த்தமானி, திராவிடப் பாண்டியன், திராவிட ரஞ்சனி, திராவிட மஞ்சரி, திராவிட வாணி, திராவிட கோகிலம் ஆகிய இதழ்கள் (19ஆம் நூற்றாண்டில்) 1847-இல் தொடங்கி திராவிட இயக்க இதழ்களுக்கு முன்னோடியாக 'திராவிட' என்ற சொல்லாட்சியுடன் வலம் வந்தன. அதற்குப் பிறகு 20-ஆம் நூற்றாண்டில் திராவிடன், திராவிட அரசு, திராவிட ஏடு, திராவிடன் குரல், திராவிடக் கூட்டரசு, திராவிடக் கேசரி, திராவிட சினிமா, திராவிட நாடு, திராவிடமணி, திராவிட முரசு, திராவிடன் வீரம் என 13 இதழ்கள் வெளிவந்துள்ளன. 19-ஆம் நூற்றாண்டிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலும் வெளியான பெரும்பாலான இதழ்களின் பெயர்கள் தமிழ்ப் பெயர்கள் அல்ல; லோகோபகாரி, தேசோபகாரி, தேஜோபிமானி, ஜனாநுகூலன் போன்ற பெயர்களான இருந்தன.

பெரியாரின் குடியரசு :

பெரியார் 'குடிஅரசு' எனும் தமிழ்ப் பெயர் தாங்கி இதழைத் தொடங்க வேண்டும் என்று 1922-ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் சிறைவாசம் இருந்தபோது நினைத்தார். 'குடிஅரசு' என்னும் பத்திரிகையை ஆரம்பிக்க வேண்டும் என்பதாக முதன்முதல் நானும் எனது நண்பர் தங்கப்பெருமாள் பிள்ளையும் 1922-இல் கோயம்புத்தூர் ஜெயிலில் சிறைவாகம் செய்யும்போதே நினைத்தோம்' என்று தெரிவிக்கும் பெரியார் மூன்றாண்டுகள் கழிந்த பின் தன் நினைப்பை

http://Creativecommons.org//license/by/4.0/.

நடப்பாக்கினார். கொடுமைகள் களைய, புதுமைகள் விளைய 2.5.1925 ஆம் நாள் குடிஅரசு தொடங்கப்பட்டது. 'ஜனநாயகம் என்பது வடமொழிச்சொல், அதை வேண்டாமென்று ஒதுக்கி 'குடி அரசு' என்ற பெயரை வைத்தேன் என்று அவரே வெளியிட்டிருக்கிறார். தூய தமிழ்ப்பெயர் சூட்டுவதில் அவருக்கிருந்த நாட்டத்தை இது காட்டுகிறது. சிறையிலிருந்தபோது திட்டமிட்ட வண்ணமே, ஈரோடு கருங்கல்பாளையத்தைச் சேர்ந்த கற்றறிந்த வழக்குரைஞரும் பண்பாடு நிரம்பிய பேராயக் கட்சி முன்னோடியும் பெரியாரின் நடவடிக்கைகளுக்குத் தோள் கொடுக்கத் தயங்காதவருமாகிய திரு. தங்கப்பெருமாள் அவர்களையும் இதழ் தொடங்கும் தம் முயற்சிக்குத் துணையாக வைத்துக் கொண்டார்.

பெரியார். பல்வேறு தடைச் சட்டங்களும், அடக்குமுறைகளும், ஒடுக்குதலும், பறிமுதலும், சிறைத் தண்டனையும், தண்டத் தொகை செலுத்துதலும், வழக்குகளும் நடைபெற்று அனுபவித்து வந்த போதிலும் விடாமல் தொடர்ந்து இதழ்களை நடத்தி தன் முயற்சியில் வெற்றி பெற்றவர் பெரியார். 'தமிழ்க் கிழமை இதழ் குடிஅரசு, ஆங்கில மாதிகை ரிவோல்ட் தமிழ்க்கிழமை இதழ் புரட்சி, தமிழ் நாளிதழ் 'பகுத்தறிவு' , தமிழ்க் கிழமை இதழ் 'பகுத்தறிவு, தமிழ் மாதிகை 'பகுத்தறிவு, தமிழ் நாளேடு விடுதலை, ஆங்கில மாதிகை 'ஜஸ்டிசைட்' (யிusவீநீவீமீ) தமிழ் மாதிகை 'உண்மை' , ஆங்கில மாதிகை 'தி மாடர்ன் ரேஷனலிஸ்ட்' (ஜிலீமீ விஷீபீமீக்ஷீஸீ ஸிணீவீஷீஸீணீறீவீst) நீதிக்கட்சியின் நாளேடு 'திராவிடன்' ஆகியவற்றின் பொறுப்புகளை மேற்கொண்டு நடத்திய நாற்பத்தியெட்டு ஆண்டுக் காலப் பட்டறிவுப் பழமாக விளங்கினார் பெரியார் (இதழாளர் பெரியார், அ. இறையன்). 'சுயமரியாதை உணர்ச்சியைத் தமிழ்நாட்டில் துவக்கிவிட்டவர் நாயக்கர் ஆவார். பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்குப் புத்துயிர் அளித்த பெருமையையும் அவருக்கே உரித்தானது. இன்று இம்மாகாணம் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் நமது இயக்கம் கொண்டப்படுகிறது. அம்மகத்தானப் பெருமைக்கு அருகர் நாயக்கரே. 'குடிஅரசின் பெருமை மிக ஆகும். ஆடாததையெல்லாம் ஆட்டி வைத்த பெருமை 'குடிஅரசு' க்கே உரித்தானதாகும். இதற்குக் காரணம் பெரியாரின் சொல்லும் எழுத்தும் வன்மை கொண்டதாக இருந்ததே.

விடுதலையும் முரசொலியும்:

பட்டிதொட்டிகளிலெல்லாம் படிப்பகம் தொடங்கப்பட்டு ஆங்காங்கு இவ்வேடுகளை இடம் பெறச்செய்வதும் ஒரு இயக்கப் பணியாக இருந்தது. குடிஅரசு தலையங்கம் ஒன்றில் பெரியார் எழுதியது போல எந்த மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளை செய்ய வேண்டுமென்று கருதினோமோ, அந்த மக்களே எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சுயமரியாதை இயக்கம் செயல்பட்டது. இந்துக்களின் மீது அவர்களின் உயிர் போன்ற உணர்ச்சிகளின் மீது தாக்குதல் தொடுத்தது. அது ஓர் இரத்தப் புரட்சி செய்வதைக் காட்டிலும் கடினமானது. அல்லவா? இத்தகைய மிகக் கடினமான காரியம் ஆற்றுவதற்குத் தொண்டர்கள் தேவை.. அது தொண்டர்களை ஒழுங்கமைப்பதும், பயிற்றுவிப்பதும் தேவை. அப்படிப்பட்ட பயிற்றுவிப்பாளனாக, ஒழுங்கமைப்பாளனாக இருந்தவைதான் சுயமரியாதை இயக்க ஏடுகள்.'' இவற்றில் 'விடுதலை' (1935 முதல்) 75 ஆண்டுகள்; 'முரசொலி' இதழ் (1942 முதல்) 68

http://Creativecommons.org//license/by/4.0/.

ஆண்டுகளாக இன்றும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. அறிஞர் அண்ணா தொடங்கிய திராவிட நாடு வார இதழ், 1942 முதல் 1963 வரை 21 ஆண்டுகள் வெளியிடப் பட்டது. பல இதழ்கள் இடையிடையே நின்று போயின. திராவிட இயக்க இதழ்கள் வெளிவந்த கால அளவு எப்படியிருந்த போதிலும் திராவிட இன உணர்ச்சியோடு சிறந்த தமிழ்ப்பற்றும் தமிழ் உணர்வும் நிரம்பியதாக வெளிவந்தன என்பது இதன் தனிச் சிறப்பாகும். திராவிட இதழ்களைத் தொடங்கியவர்களில் பெரும்பாலோர் பொருள் வசதி அற்றவர்கள்; இயக்கத்தின் மீது உள்ள பற்றும், ஆர்வமும், தொண்டுள்ளமும்தான் அவர்களின் முதலீடு. இதற்கு ஏராளமான எடுத்துக் காட்டுகள் தரலாம். 'போர்வாள்: 1947 இல் இந்த இதழ் தொடங்கப்பட்டபோது இந்த இதழின் ஆசிரியராக இருந்த எனக்கு தலையங்கங்கள் முதலிய கட்டுரைகளை எழுதுவதற்குத் தனி அறை இல்லை. தனி மேசை கூட இல்லை. குடியிருந்த வீட்டின் மாடிக் கைப்பிடிச் சுவரின் மீது எழுதுவதற்குரிய தாள்களை வைத்து, வாரந்தோறும் நான் எழுதிக் கொண்டிருந்தேன்' என்று பேராசிரியர் மா. இளஞ்செழியன் குறிப்பிடுவதைச் சுட்டிக் காட்டலாம். திராவிட இன உணர்ச்சியும், பொதுமை நோக்கும், தமிழ்ப் பற்றும் கொண்ட இந்த இதழ்கள் ஏற்படுத்திய சாதனைகள் ஏராளம். பார்ப்பனீய ஆதிக்கத்திற்கு வேராக இருந்த வருணாசிரமக் கொள்கைகள் மீது சரிமாரியாகத் தொடுத்தக் கருத்துப் போரினால் சாதி ஆணவம் சரிந்தது. இது இன்னும் உயிருடன் இருந்தாலும் தீண்டாமைக் கொடுமைகளை பெருமளவிற்கு குறைத்தது. மூட நம்பிக்கைகளை முற்றாக ஒழிக்க முடியவில்லை என்றாலும் அதன் இரும்புப் பிடியைத் தளர்த்தி விழிப்புணர்வையூட்டின. தமிழ்ப் பெயர் சூட்டுதல், தொழில் நிறுவனங்களுக்கு பெயரிடுதல், இதழ்களுக்குப் பெயரிடுதல் என்பதில் வடமொழி ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டி வெற்றி பெற்றன. தமிழ் இதழ்களின் மொழி நடையில் பெரும் மாற்றத்தை உருவாக்கின. வடசொல் நீக்கி இனிய தமிழ் நடை என்பது திராவிட இயக்க இதழ்களின் அடையாளமாகியது. மேலும் இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை என்ற வடமொழித் தழுவல் இலக்கியத்திற்கு இருந்த முக்கியத்துவத்தை நீக்கி சங்க இலக்கியங்களும், திருக்குறளும், நீதி நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்கள் பேரு மதிப்புடன் போற்றப்பட்டன. உலகமெங்கும் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களும், அதற்கானத் தத்துவங்களையும், சாக்ரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில், வால்டேர், ரூஸோ, பெட்ரண்ட் ரஸ்ஸல், இங்கர்சால், பெர்னாட்ஷா, காரல்மார்க்ஸ், லெனின் என இன்னும் பல்வேறு புரட்சிகரச் சிந்தனையாளர்களை தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தின. புத்திலக்கியங்களை படைத்துக் காட்டின. இதனால் திராவிட இயக்க ஏடுகள் கருத்துக் கருவூலங்களாக அனைத்துத் தரப்பினராலும் போற்றப்பட்டன. இயக்க இதழாளர்கள் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை மக்களிடையே பரப்புவதற்காக நடத்தப்பட்ட இதழ்களின் மூலம் சாதாரணத் தொண்டனும் சிறந்தப் பேச்சாளராக விளங்கினர்.

'சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு 1953-இல் 'தீப்பொறி' என்ற ஏட்டைச் சொந்தமாக நடத்தினார். 1959-இல் 'இனமுழக்கம்' என்ற ஏட்டிற்கு ஆசிரியராக இருந்தார். இருபதிற்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ள இவர், நாடகம், திரைப்படம் போன்ற கலைத்துறைக்கும்

http://Creativecommons.org//license/by/4.0/.

தமது பங்களிப்பைச் செலுத்தியுள்ளார். லெனின் நடத்திய 'இஸ்கரா' ஏட்டை நினைவுபடுத்தும் விதமாக இப்பெயர் அமைந்துள்ளது. ஏடு நடத்துவோர் எத்துணையோ இடர்ப்பாடுகளைச் சந்தித்தப் பொழுதும் மறுபுறம் தமது சொற்பொழிவுப் பணிகளையும் தொடர்ந்து செய்தனர். சிந்தனைச் சிற்சி சி.பி. சிற்றரசு, சிறு சிறு தொடராகப் பேசுவார். மக்கள் சிரித்துக் கொண்டே கேட்பர். அவரது பேச்சுகளில் செய்திகள் துணுக்குகளாக இடம்பெறும். அதனை இணைத்து, பிரச்சினைகளினூடே கலந்து, மக்கள் முன் வைப்பார். ஒரு 'பதிவை' அவர்களிடம் உண்டாக்கி விடுவார். இவரது பேச்சில் 'ரூசோ' வருவான்; வால்டேர் பேசுவான்; சாக்ரடீஸ் கேள்விக் கணை தொடுப்பான்; சாக்கிய சிம்ம புத்தன் ஒளிர்வான்; உலகை திருத்திய உத்தமர்களெல்லாம் உலா வருவர்! இடையிடையே நகைச்சுவை சிரிப்பொலி. இவரது பேச்சு நகைச்சுவைக்கு முதலிடம் தருவது போன்ற எண்ணத்தை உருவாக்கும். ஆனால் அது ஒரு பெரிய விஷயத்தை புரிய வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கும். இவ்வாறு எழுத்து ஒரு புறம், பேச்சு, செயல்பாடுகள் மற்றொரு புறம் என்று இயங்கி வந்தனர் திராவிட இயக்க எழுத்தாளர்கள். இதனால் கலை, இலக்கியம் வேறு சமுதாயப்பணி வேறு, அரசியல் வேறு என்ற நோக்கு மறைந்து ஒன்றுடன் ஒன்று இணைந்ததாக மாறின. 'வேலெடுத்து போர்தொடுத்த வீரம் எங்கே? வெங்குருதி வாளெங்கே? தோள்கள் எங்கே? கோலெடுத்த பேரெல்லாம் ஆள வந்தார் கொட்டாவி விட்டபடி தூங்குகின்றார்; மாலுடத்த தமிழ்மகனே; மானம் எங்கே? மயங்காதே விழி! எழு! பார்! உலகை நோக்கு! கால்பிடித்து வாழ்வதுமோ தமிழ வாழ்வு? கானத்து புலிப்போத்தே! வீரம் காட்டு!' இப்படி வீரம் தெறிக்க எழுதுபவர் கவிஞர் முடியரசன். திராவிட இயக்கம் நடத்திய ஏராளமான இதழ்களில் எழுதிய பெருமைக்குரிய கவிஞர். இப்படி எழுதிய எழுத்தாளர்கள் ஏராளமானோர். திராவிட இயக்கத்தின் ஒவ்வொரு ஏட்டிற்கும், ஒவ்வொரு ஆசிரியருக்கும் தனித்த முக்கியத்துவம் உண்டு. ஏராளமான நிகழ்வுகள் உண்டு. இவை அனைத்தும் சேர்ந்தவையே திராவிட இயக்க இதழ் வரலாறாகும். ஒரு கட்டுரையில் எழுதி முடித்துவிடக் கூடியது அல்ல; ஒட்டுமொத்தமாகக் கூறவேண்டமானால் ஆயிரமாயிரம் தமிழ் இதயங்களைக் கவர்ந்த இலட்சிய முழக்கங்களாக வலம் வந்த அன்றைய திராவிட இயக்க ஏடுகளின் பணி ஈடு இணையற்றது.

ஏனைய இதழ்கள்:

- **கன்னி**

கன்னி ஒரு கழகச்சாட்டை என்னும் முகப்புடன் குமரிமாவட்டம் இரணியலில் இருந்து மாத இதழாக வெளிவந்தது.இதழின் ஆசிரியர் திமுகழக வழக்கறிஞர் இரணியல் ரவி சட்டக்கல்லூரி மாணவராக இருந்தபோதே எஸ் எஸ் ராசேந்திரன் விஜயகுமாரி ஆகியோர் நடித்த "நாட்டுக்கொரு நல்லவள்" திரைப்படத்திற்கு திரைக்கதை வசனம் எழுதியவர். என்னைக்கேளுங்கள் என்ற தலைப்பில் வந்த கேள்வி பதில் பகுதி மிகவும் பிரபலமானது .திமுக தலைவர் கலைஞர் உள்ளிட்ட கழக முன்னோடிகளின் கட்டுரைகள் மாதந்தோறும் இடம் பெற்றிருக்கும்

http://Creativecommons.org//license/by/4.0/.

❖ **அலையோசை**

தி.மு.க வின் கொள்கைகளைப் பரப்பும் எண்ணத்தோடு ஆற்காடு வீராசாமி, கிளியனூர் வெங்கடசுப்பு ரெட்டியார் ஆகியோரின் ஒத்துழைப்போடு அடிப்படையில் வழக்குரைஞராகவும், மேலும் மேயராகவும் பதவி வகித்த வேலூர் நாராயணனால் நடத்தப்பட்ட இதழ் அலை ஓசை. ஒன்றரை லட்சம் பிரதிகளை விற்று சாதனை படைத்த இவ்விதழ் 16 காசுகளுக்கு விற்கப்பட்டது. நாராயணன் தம் கல்லூரி நாட்களில் 'மகரந்தம்' என்னும் கையெழுத்திதழை நடத்தியவர். 1965 இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பெற்று பாளையங்கோட்டையில் சிறைவாசம் அனுபவித்தவர். எல்லா தரப்பு செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, செய்திகளை இருட்டடிப்பு செய்யாமல் வெளியிட்டார். விளம்பர வருமானத்தைப் பொருட்படுத்தாமல் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளிவந்த பத்திரிகை அலை ஓசை. இவ்விதழ் 1971 ஆகஸ்ட் 11 இல் தொடங்கப்பட்டது, இதில் அரசியல், பொதுச் செய்திகள், தொடர்கதைகள், தொடர் கட்டுரைகள் என இலக்கியத்தரமான படைப்புகள் வெளிவந்துள்ளன. இவ்விதழ் 1992 வரை வெளிவந்தது. இவ்விதழில் ஜெயகாந்தன், நா. பார்த்தசாரதி, கண்ணதாசன், பழ. நெடுமாறன், முரசொலி அடியார், வலம்புரி ஜான், விருதுநகர் சீனிவாசன், அறந்தை நாராயணன் எனப் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் எழுதியுள்ளனர்.

❖ **கதிர்**

திராவிட இயக்க இதழ்களில் மிகவும் மாறுபட்டு வித்தியாசமாக விளங்கிய இதழ் 'கதிர்' . இதன் ஆசிரியர் ப. புகழேந்தி, கண்ணதாசன் நடத்திய முல்லை, தென்றல், அண்ணாவின் "நம்நாடு" ஆகியவற்றில் துணையாசிரியராகப் பணியாற்றியவர், அண்ணாவிடம் நெருக்கமாகப் பழகியவர். இப்பத்திரிகை 1965 முதல் 1966 வரை 15 மாதங்கள் மட்டுமே வெளிவந்தபோதிலும் அதன் சமகால இதழ்களில் தனித்துவம் பெற்றுத் திகழ்ந்தது. மொழிபெயர்ப்பு இலக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தது.

முடிவுரை:

இவை தவிர நம்நாடு, நாத்திகம், புதுவை முரசு, பொன்னி போன்ற இதழ்களும் சமூகப் பணியாற்றுவதற்காகவே இயக்க இதழ்களாக வெளிவந்தன. 1916-இல் திராவிட இயக்கம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து தற்காலம் வரை ஏராளமான திராவிட இயக்க இதழ்கள் வெளிவந்துள்ளன. ஆயினும், 1942 - 1962 வரையிலான காலகட்டத்தைத் திராவிட இயக்க இதழ்களின் பொற்காலம் என்று சொல்லுமளவுக்கு அப்போது நூற்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வெளிவந்துள்ளன. அதுமட்டுமல்லாமல் திராவிட இயக்க முன்னணித் தலைவர்களுள் பெரும்பாலானோர் இதழாசிரியர்களாக விளங்கினர்.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

25. திராவிட இயக்கமும் தமிழ் வளர்ச்சியும்

முனைவர் R. ஷானி ரஸ்கின்,
துறைத்தலைவர், வரலாற்றுத்துறை,
பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி, குன்னூர்.
DOI 10.5281/zenodo.13762045.

Abstract:

The Tamil language is very ancient, cultured and rich in literature, although it has been stuck in the midst of troubles and ruins in various times, it is worth thinking that it has survived without losing its characteristics. The prosperity of a language is not dependent on the number of speakers. Development should be calculated with the characteristics of its usefulness according to the time and according to the needs of the people. If we look at the history of Tamil in general and better, it can be said that its forms and concepts have been flexibly based on objectives from time to time. The poets and singers who expressed their feelings in internal and external songs during the Sangam period changed their paths in the later period, in the Kaapiya period and the medieval period. It was in modern times that literature became the medium of the people. In this case, there was a tendency to bring out the realities of people's life in literature. It would not be an exaggeration to say that the Dravidian movement was the primary reason for such a renaissance.It is history that the Dravidian movement in the twentieth century laid the foundation for a great change of thought in Tamil Nadu. Tamils should not forget that the Dravidian movement was the first movement to promote social justice, dignity, women's equality, class rights, democratic consciousness and the importance of education. The Tamil work of this movement helps a lot to understand the social thought of Tamil people through social, ethnic and historical way. The Dravidian movement is the primary cause of the awakening in the development of Tamil literature in this century. The Dravidian movement brought significant changes in Tamil literature. New literary ideas such as stage Tamil, journalistic Tamil, screen Tamil, scientific Tamil, and Jakka Tamil were born.

முன்னுரை:

தமிழ் மொழி மிகவும் தொன்மையானது, பண்பட்டது சிறந்த இலக்கிய வளம் உடையது பல்வேறு காலங்களில் இன்னல்களுக்கும் இடிபாடுகளுக்குள்ளும் சிக்கித் தவித்தாலும் இன்று வரை தனது தனித்தன்மைகளை இழக்காமல் சிறப்புடன் வாழ்ந்து வருவது எண்ணத் தக்கது.ஒரு மொழியின் வளாச்சியென்பது அம்மொழி பேசுவோரின் எண்ணிக்கையைப் பொறுத்து அமைவதல்ல. காலத்திற்கு ஏற்பவும், மக்களின் தேவைகளுக்கு ஏற்பவும் அது பயன்படும் தன்மைகளைக் கொண்டு வளர்ச்சியைக் கணக்கிடவேண்டும். தமிழின் வரலாற்றைப் பொதுவாகவும் சிறப்பாகவும் நோக்கினால் அதன் வடிவங்களும், கருத்துகளும் காலந்தோறும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நெகிழ்வாக நிகழ்ந்துள்ளன எனலாம்.

சங்க காலத்தில் அகம், புறப் பாடல்களில் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்திய கவிஞர்களும், பாடைப்பாளர்களும் பிற்காலத்திலும், காப்பியக் காலம் மற்றும் இடைக் காலத்திலும் தங்களின் பாதைகளை மாற்றிக் கொண்டனர். தொடர்ந்து தற்காலத்தில் தான் இலக்கியத்தை மக்களின் ஊடகமாக மாற்றினர். இந்நிலையில் மக்களின் வாழ்வியலின் எதார்த்தங்களை இலக்கியங்களில் வெளிக் கொணரும் போக்கும் வெளிப்பட்டது. இத்தகைய மறுமலர்ச்சிக்கான மாற்றித்திற்கு அடிப்படைக் காரணம் திராவிட இயக்கம் என்றால் அது மிகையாகாது.

http://Creativecommons.org//license/by/4.0/.

இருபதாம் நூற்றாண்டில் திராவிட இயக்கம் தமிழகத்தில் மாபெரும் சிந்தனை மாற்றத்திற்கு அடித்தளமிட்டது என்பது வரலாறு. சமூகநீதி, தன்மான வாழ்வு, பெண் சமத்துவம், வகுப்புவாரி உரிமை, ஜனநாயக உணர்வு, கல்வியின் இன்றியமையாமை ஆகியவை தழைக்க வழிகண்ட முதல் இயக்கம் திராவிட இயக்கம் என்பதைத் தமிழர்கள் மறந்துவிடக் கூடாது. இந்த இயக்கத்தின் தமிழ்ப் பணியானது தமிழருடைய சமுதாயச் சிந்தனையை அறிவதற்குச் சமுதாய, இன, வரலாற்று வழியாக பெரிதும் உதவுகிறது. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இந்த நூற்றாண்டில் உண்டான விழிப்புணர்வுக்குத் திராவிட இயக்கம் தான் முழு முதற்காரணமாகும். திராவிட இயக்கத்தால் தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. மேடைத்தமிழ், இதழியல் தமிழ், திரைத்தமிழ், அறிவியல் தமிழ், ஆட்சித்தமிழ் உள்ளிட்ட என்ற புதிய இலக்கியச் சிந்தனைகள் உருப்பெற்றன.

திராவிட இயக்க எழுத்தாளர்களால் தமிழ் இலக்கியம், மொழி ஆகிய துறைகளில் புதுமை மிகு எழுச்சி உண்டாயிற்று. எளிமையும், கருத்துப் புலப்பாட்டுத் தன்மையும் காணப்பட்டன. சமுதாயம், பண்பாடு, கலை ஆகிய துறைகளிலும் பகுத்தறிவை அளவுக் கோலாகக் கொண்டு காணுகின்ற வழக்கத்தை திராவிட இயக்கத்திகனர் ஏற்படுத்தினர். தமிழர்கள் தங்களுடைய கடந்த கால வரலாற்றை அறிய வேண்டும் என்ற ஆவலின் மேலிடலால் தமிழும் புத்துயிர் பெற்றது. சாதிகளை, மூடப்பழக்கங்களை, சமய இலக்கியங்களி;ன குறைபாடுகளை, பெண்ணிய ஏற்றத் தாழ்வுகள், பகுத்தறிவின் துணை கொண்டு மரபுகளைக் கட்டுடைத்தல் என்ற தூய்மைப் பணி இலக்கியம் மற்றும் மொழி வழியே திறம்பட நடைபெற்றது.

திராவிட இயக்கத்தின் அறிஞர் பெருமக்கள்:

திராவிட இயக்கத்தை வளர்த்தெடுக்க கவிதைகள், உரைகள், மேடைப் பேச்சுகள், சிறுகதைகள், நாடகங்கள் முதலிய இலக்கிய வகைகள் பயன்பட்டன. அவ்வகையில் பேரறிஞர் அண்ணா, பெரியார், கலைஞர் கருணாநிதி, உவமைக் கவிஞர் சுரதா, நாஞ்சில்நாதன், கண்ணதாசன், வாணிதாசன், முடியரசன், கவிஞர் தமிழ்ஒளி, அப்துல் ரகுமான், வைரமுத்து, ஈரோடு தமிழன்பன், நிர்மலா சுரேஷ், கவிஞர் கனிமொழி, தமிழச்சி தங்க பாண்டியன், கவிஞர் சல்மா உள்ளிட்ட பலர் திராவிட இயக்கத்தின் கருத்துகளைத் தங்கள் படைப்புகளின் வாயிலாக வெளிப்படுத்தினர். அவர்களுள் குறிப்பிடத்தக்க சான்றோர்களான பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் இன்றியமையாதவர்கள் ஆவர்.

இலக்கிய மையமும் மடை மாற்றமும்:

இன்றைய தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களிடையேயும், பிரிவுகளிடையேயும் பிற அமைப்புகளிலும் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகள் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ ஊடுருவி இருப்பதை மறுக்க முடியாது. ஆகவே பெரியாரின் கருத்துகள்

http://Creativecommons.org//license/by/4.0/.

புகாத இடமேயில்லை என்று தான் கூறவேண்டும். கலைத்துறை, இலக்கியத்துறை போன்ற பல்வேறு துறைகளிலும் இவரது கருத்துக்களின் செல்வாக்கை உணராலம்.

'தமிழக மக்களுக்குத் தமிழ் உணர்ச்சி வளர வழிகோலியவை சுயமரியாதை இயக்கமும் திராவிட இயக்கமும் ஆகும். தமிழ் முதன் முதலாக மக்கள் மயமானது இவர்களின் முயற்சியால்; என்ற டாக்டர் பொற்கோ அவர்களின் கருத்து உணரத்தக்கது. இலக்கியங்களையும், பாடு பொருள்களையும் மொழி என்று கருதிய நிலை மாறி, பாடு பொருள்களுக்கே மொழிதான் இன்றியமையாதது என்ற தெளிவான நிலை கால்டுவெல் அவர்களின் காலத்திற்குப் பின்பு தான் வேரூன்றியது. ஆனால் இலக்கியங்களில் இருந்த பாடுபொருளில் மிகப் பெரிய மாற்றத்தையும் திருப்பத்தையும் உண்டாக்கியது திராவிட இயக்கம்.

எவரோ? கூறினார். எதற்காகவோ கூறினார்? எப்போதோ கூறினார் என்பதற்காக வாளாஇராமல் மேலும் மேலும் உண்மைகளையும் அதன் தன்மைகளையும் வெளிப்படுத்துவது தான் இன்றையக் காலத்தின் தேவையென்றும் அதுதான் அறிவியல் பார்வையாகுமென்று தொலைநோக்கோடு எடுத்துரைத்தார் பெரியார்.

திராவிடர்களின் வேதம் திருக்குறள் என்றதோடு திருக்குறளுக்காக 1948-ஆம் ஆண்டு மாநாடு கூட்டினார். அதன் மூலம் திருக்குறளின் பெருமையை மக்கள் உணரும்படி செய்தார். இதனால் தமிழர்களிடையே இன உணர்வும் பண்பாட்டு உணர்வும் மேலோங்கியது. புனிதமானது என்பதற்காக எதையும் ஆய்ந்தறியாமல் ஏற்றுக் கொள்ள வேண்டாம். நன்மையானது, அனைவருக்கும் தேவையானது. காலத்திற்கு ஏற்றது என்று அளந்து பார்த்து ஏற்றுக் கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தினார்.

எத்தனை முறை இறைத்தாலும் மீண்டும் நச்சு நீரே கிணற்றில் சுரக்கும் என்றால் அத்தகைய கிணற்றை தூர்த்து மூடி விடுவதே அறிவுடைமை. அதே போல் ஏழ்மைக்கும் கீழ்தைக்கும் ஊற்றாக உள்ள மதக் கிணற்றை தூர்த்து மூடிவிட வேண்டும் என்று பெரியார் தெளிவுபடுத்தினார்.

பெரியாரும் மொழிச் சீர்த்திருத்தமும்:

பெரியார் என்று மதிப்புடன் அழைக்கப்படுகின்ற ஈ.வெ.ராமசாமி அவர்களால் தமிழ் எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. உயிர் எழுத்தான "ஐ" என்பதை "அய்" என்றும், "ஔ" என்பதை "அவ்" என்றும் எழுதுமாறு வலியுறுத்தினார். சான்றாக, "ஐயா" என்பதை "அய்யா" என்றும், "ஔவை" என்பதை "அவ்வை" என்றும் எழுதி, அவ்வழக்கத்தை நடைமுறைப்படுத்தினார். மேலும், மெய் எழுத்துகளில் சில உயிர்மெய்க் குறியீடுகளான ஐ, உ, ஊ, ஒ, ஓ என்ற எழுத்துகளுடன் கூடி வருகின்ற எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்றும், அதன் மூலம் தமிழ்க் கற்பதும் தட்டச்சு செய்வதும் எளிதாகும் என்றும் அறிவித்து, அதற்கான வரி வடிவங்களைத் தானே உருவாக்கி தன்னுடைய அச்சகத்திலும் பயன்படுத்தினார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

இவருடைய இச்சீர்த்திருத்தத்தைத் தமிழக அரசு ஏற்றுக் கொண்டு 1978ஆம் ஆண்டு அதனை நடைமுறைப்படுத்தியது. மேலும், பெரியாரின் சிந்தனைகள் பல இதழ்களில் தலையங்கங்களாக இடம் பெற்றுள்ளன. மேடையிலும், தலையங்கக் கட்டுரையில் அவர் பயன்படுத்திய எளிய தமிழ், படிப்போரைக் கவர்ந்தது.

மேடைத்தமிழும் பேரறிஞர் அண்ணாவும்:

அண்ணாவின் மேடைப் பேச்சுகள் இலக்கியமாக மதிக்கப்படுகின்றன. அவருடைய உரைகள் கவிதை நடையில், இலக்கியச் செழுமை மிக்கதாக அமைந்திருப்பது சிறப்பு. இன்று மேடைப் பேச்சு ஒரு கலையாக மதிக்கப்படுவதற்கு அண்ணாவின் உரைகளும் ஒரு காரணமாகும். மேடைப் பேச்சில் தனக்கென்று ஒரு புதிய வழியை ஏற்படுத்திக் கொண்டு மக்கள் மனதில் சீர்த்திருத்த கருத்துகளை விதைத்தார். வேலைக்காரி, ஓர் இரவு, நீதி தேவன் மயக்கம் உள்ளிட்ட புரட்சி மிகுந்த நாடகங்களையும், செவ்வாழை, சொர்க்கத்தில் நரகம், பிடி சாம்பல் முதலிய சிறுகதைகளையும், இரங்கூன் ராதா, பார்வதி பி.ஏ முதலிய நாவல்களையும் எழுதித் தமிழுலகிற்குப் புத்துயில் அளித்தார். "தம்பிக்கு" என்ற பெயரில் அவர் எழுதிய கடிதங்கள் சமுதாயத்தின் மீதும், தமிழ் மொழியின் மீதும் அவர் கொண்டிருந்த அக்கறையை வெளிப்படுத்துகின்றன. திரைப்படங்களில் இவரது உரையாடல் அடுக்கு மொழியில் அமைந்து மக்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது. அதனால் "அடுக்கு மாழி அண்ணா" என்று மக்களால் அழைக்கப்பட்டார்.

திரைத்தமிழும் கலைஞரும்:

தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பல்வேறு படைப்புகள் மூலம் தொண்டாற்றியவர் கலைஞர் கருணாநிதி. ரோமாபுரிப் பாண்டியன், தென்பாண்டிச் சிங்கம், பொன்னர் சங்கர் முதலிய நாவல்கள் அவரது சமத்துவ சிந்தனைகளை வெளிக்காட்டின. விஷம் இனிது, சித்தார்த்தன் சிலை உள்ளிட்ட சிறுகதைகள் சமய மறுப்புக் கொள்கைகளை வலியுறுத்தின. இவருடைய "அணில் குஞ்சு" என்ற சிறுகதை மதநல்லிணக்கத்தை எடுத்துக்காட்டுகின்றது. நாடகத்துறையோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்ட கலைஞர் நாடகத்தைப் படைப்தோடன்றி நடிக்கவும் செய்தார். ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான குண்டலகேசியை மையமாகக் கொண்டு மந்திரிகுமாரி என்ற நாடகத்தைப் படைத்தார். பிற்காலத்தில் இது திரைப்படமாகவம் வெளிவந்தது. உதயசூரியன், நானே அறிவாளி, புனித ராஜ்யம் உள்ளிட்ட நாடகங்கள் அரசியல் பிரச்சார நாடகங்களாக வெளிவந்தன. இவருடைய நாடகங்கள் கேலியும் கிண்டலும் நிறைந்திருக்கும் அங்கத வகையில் அமைந்தவை. திரைத்துறையில் வசனங்களின் மூலம் புதிய வரலாறு படைத்தவர் கலைஞர். மனோகரா, மந்திரிகுமாரி, பூம்புகார், பராசக்தி முதலிய திரைப்படங்களின் வசனங்கள் மாறுபட்ட கோணத்தில் தமிழை அடையாளம் காட்டின. அவருடைய "குறளோவியம்" மிகச் சிறந்த படைப்பாகப் போற்றப்படுகின்றது. எளிய முறையில் பாமர மக்களும் படித்து இன்புற, "தொல்காப்பியப் பூங்கா" என்ற நூலை எழுதியுள்ளார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

சமூக மதிப்பீடும் மாற்றுச் சிந்தனையும்:

இந்து சாத்திரங்களும், புராணங்களும், சடங்குகளும் மக்கள் இனத்தின் சுய சிந்தனையை, துணிச்சிந்தனையை, துணிச்சான முயற்சியை, தன்னம்பிக்கையே, தோழமை உணர்வை சமத்துவப் போக்கை முளையிலேயே நசுக்கி வருவதைப் பகுத்தறிவு இயக்கத்தைப் போல வேறு எந்த இயக்கமும் வெளிப்படுத்தவில்லை என்றே கூறலாம். தமிழரின் பண்பாட்டை, நாகரிகத்தை இன ஒற்றுமையை அழித்துக் கொண்டிருக்கும் பக்தி இலக்கியங்களை நாம் தள்ளி வைக்க வேண்டுமென்றும் மனைவி இருக்க வேண்டிய இடத்தில் மட்டமான வேறொருத்தியை வைத்து வணங்கி வருகிறோம். நமது இலக்கியப் பாதை இப்படியே இருந்தால் நாளைய உலகம் நம்மைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கும். நம் கவிஞர்கள் படைப்பாளர்கள் தெரியாமல் செய்து விட்ட மூட இலக்கியப் பாதையை மூடி புதிய பகுத்தறிவுப் பாதைக்கு உறுதுணையாக இருப்போம் என்றார்.

அறிவியல் வளர்ச்சியை உள்ளடக்கிய இலக்கியங்களைப் படைப்போம். பகுத்தறிவையும் அறவியலையும் கலந்து இலக்கியங்களைப் படைக்க வேண்டுமென்று பெரியார் அறிவுறுத்தினார். பெரியார் அய்ம்பது ஆண்டுகளுக்கு மேலாக தம் இடையறாத சுற்றுப் பயணத்தின் மூலம் தமிழகத்தின் அனைத்து இடங்களிலும் தமது பகுத்தறிவு கருத்துகளை முழங்கினார். அதிலும் மக்கள் விரும்பாததும், வெறுக்கக் கூடியதுமான கருத்துகளையும், அவர்கள் உயிரினும் மேலாக நம்பித் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றி வரும் புராண வரும் புராண, இதிகாசங்களையும், பழக்க வழக்கங்களையும் அவர்கள் விரும்பும் வண்ணம் எடுத்துரைத்தார்.

எந்த மொழி அரசியல் மொழியாக விளங்குமோ

அந்த மொழிதான் மக்கள் மொழியாக விளங்கும்

என்பார். மு.வ. இந்தக் கருத்துக்கு ஏற்ப திராவிட இயக்கம் தாய் மொழியாகிய தமிழின் வாயிலாக எண்ணற்ற இலக்கியங்களைத் தமிழ் சமுதாயத்திற்கு படைத்தளிக்க உதவியது.கலையும் இலக்கியமும் மக்களின் உணர்வுகளோடு ஒன்றி வாழ்வில் இன்பத்தையும் மறுமலர்ச்சியையும் தரும் அற்புதப் பெட்டகமாகும். அதனால் தான் திராவிட இயக்கம் மேற்கண்ட இரண்டையும் முதன்மைக் கருவியாகக் கொண்டு தனது கொள்கைகளை மக்களிடம் எடுத்துச் சென்றது. அதற்கென்று திராவிட இயக்கத்தினரால் கொள்கைகளைப் பரப்புவதற்கென்று ஏராளமான நாளேடுகளும், திங்களிதழ்களும், கிழமை இதழ்களும் அவ்வப்போது வெளிவந்தன. இவ்வாறு தமிழகத்தில் புதிய சிந்தனைகளுக்கு இலக்கியங்கள் வழியாக வடிவம் தந்தனர். மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு பகுத்தறிவு சார்ந்த இலக்கியக் கருத்துருக்கள் படைத்தனர். அவைகளில் மக்கள் அனைவரும் சமம், அனைவருக்கும் பொது என்ற உயரிய சிந்தனைகளை மலரச் செய்தனர்.

http://Creativecommons.org//license/by/4.0/.

குறிப்புகள்

1. டாக்டர் மு.வரதராசனார் - மொழி வரலாறு.
2. வ.ரேணுகா தேவி - திராவிட இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
3. டாக்டர் பொதிகை தமிழரசன் - கலையும் இலக்கியமும்
4. முனைவர் பொற்கோ - தமிழ் உணர்ச்சி, தமிழ் வளாச்சி, தமிழ் ஆட்சி

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

26. தமிழ்த் திரைப்படத்துறையும் திராவிட அரசியலும்

பேரா.சோ.ஹரிபாண்டிராஜன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி(தன்னாட்சி), விருதுநகர்.
DOI 10.5281/zenodo.13762060.

Abstract

From the mid-1930s, the Tamil film industry in the Chennai province of British India was involved in the Indian freedom struggle. In 1937 assembly elections, famous actress and singer K. B. Sundarampal campaigned for the Indian National Congress. But after that Congress did not use film artistes for political purposes any more. But the Dravidian movement made the most of the film industry. The film industry also made good use of politics through the Dravidian movement. That is why the Tamil Nadu film industry has played a major role in the development of the Dravidian movement. Tamil films have greatly helped the Dravidian parties come to power in Tamil Nadu and stay in power for more than four decades. Ga. N. Annadurai, M. Karunanidhi, M. G. Ramachandran, J. Jayalalitha and four people associated with the film industry have served as the Chief Minister of Tamil Nadu. In the 1940s, the Dravidian movement and film artists came into contact with the influence of K.N. Annadurai in DK.

முன்னுரை:

1930-களின் நடுவிலிருந்து பிரித்தானிய இந்தியாவின் சென்னை மாகாணத்தில் தமிழ்த் திரைப்படத் துறையினர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்காற்றி வந்தனர். 1937-இல் சட்டமன்றத் தேர்தலில் புகழ்பெற்ற நடிகையும் பாடகியுமான கே. பி. சுந்தராம்பாள் இந்திய தேசிய காங்கிரசுக்காகத் தேர்தல் பரப்புரை மேற்கொண்டார். ஆனால் அதன் பின்பு காங்கிரசு திரைப்படக் கலைஞர்களை அரசியல் நோக்கங்களுக்காகக் கூடுதலாகப் பயன்படுத்தவில்லை.

ஆனால், திராவிட இயக்கமானது திரைப்படத் துறையினரை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டது; திரைப்படத் துறையினரும் திராவிட இயக்கத்தின் வாயிலாக அரசியலை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். ஆகவே தான், தமிழகத் திரைப்படத்துறை திராவிட இயக்கத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்துள்ளது. திராவிடக் கட்சிகள் தமிழ் நாட்டில் ஆட்சிக்கு வரவும் நாற்பதாண்டுகளுக்கு மேலாக ஆட்சியில் நீடிக்கவும் தமிழ்த் திரைப்படங்கள் பெரிதும் உதவியுள்ளன. கா. ந. அண்ணாதுரை, மு. கருணாநிதி, எம். ஜி. ராமச்சந்திரன், ஜெ. ஜெயலலிதா என திரைப்படத் துறையுடன் தொடர்புடைய நான்கு பேர் தமிழ்நாட்டு முதலமைச்சராக பொறுப்பு வகித்துள்ளனர். 1940-களில் தி.க.வில் கா.ந.அண்ணாதுரையின் செல்வாக்குக் கூடத் தொடங்கிய பின் திராவிட இயக்கத்துக்கும் திரைப்படக் கலைஞர்களுக்கும் தொடர்பு ஏற்பட்டது.

பெரியாரும் கலை இலக்கியமும்:

கலை கலைக்காகவே, கலை வாழ்க்கைக்காகவே என்று இரு சாரார், கலை - இலக்கியத்தைப் பற்றி பட்டி மன்றம் நடத்திய காலகட்டத்தில், வாழ்க்கை என்பதையும் தாண்டி, மனித சமுதாய வளர்ச்சிக்கு ஏற்றதாக கலை இலக்கியங்கள் இருக்க வேண்டும்

http://Creativecommons.org//license/by/4.0/.

என்று தந்தை பெரியார் பறைசாற்றினார் என்றால், அவரின் மாந்த நலக் கண்ணோட்டத்தை எண்ணிப்பார்க்க வேண்டும். ஏதோ பெரியார், கலை - இலக்கியங்களுக்கு எதிரானவர் போல் சித்தரிக்கப்படுவதையும், அப்படி விமர்சிக்கக் கூடியவர்களை விட பெரியார் கலை இலக்கியத்தின் மீது கரிசனம் உள்ளவராகவே இருந்துள்ளார் என்பது வெளிப்படும்.

"இலக்கியம் எதற்காக? இலக்கியம் எப்படி இருக்க வேண்டும்? எப்படிப்பட்டதை இலக்கியம் என்று சொல்லலாம்? அவை எதற்காக இருக்க வேண்டும்? என்பது பற்றிச் சிந்தித்தால், மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு மட்டுமல்லாமல், மனித சமுதாய வளர்ச்சிக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும் என்பது எனது கருத்து" (விடுதலை 24.11.1961)

அண்ணாவும் கலை இலக்கியமும்:

1920-களின் இறுதியில் சுயமரியாதை இயக்கம் மூலம் பெரியார் சமூகம் சார்ந்து இயங்கும் ஒரு தலைவராகிவிட்டிருந்தார். பெரியார் 1937-இல் நீதிக்கட்சிக்குத் தலைவராகிறார். 1944-ஆம் ஆண்டில் அது திராவிடர் கழகமாக உருவாகிறது. இதன் பிறகானதுதான் திராவிடக் கொள்கைகள் பேசும் சினிமா உருவான காலகட்டம் எனலாம். சுதந்திரத்துக்குப் பின்பு தொடங்கி திமுக அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய 1967-ஆம் ஆண்டு வரை திராவிட சினிமாவின் பொற்காலம் எனலாம். என்.எஸ்.கிருஷ்ணன், கே.ஆர்.ராமசாமி, எம் ஆர். ராதா, எஸ்.எஸ்.ராஜேந்திரன், எம்.ஜி.ராமச்சந்திரன் முதலான நடிகர்களும், நாடகங்களுக்குக் கதை வசனம் எழுதிய அண்ணா, பாரதிதாசன், கருணாநிதி ஆகிய எழுத்தாளுமைகளும் அவர்களில் முதன்மையானவர்கள். 1947-இல் வெளியான ராஜகுமாரி, எம்ஜிஆருக்கு மிக முக்கியமான படம். அத்திரைப்படத்தில் கலைஞர் கருணாநிதி பணிபுரிந்தார் என்பது கவனிக்க வேண்டிய விஷயம்.

1950-க்குப் பிறகு அண்ணாவின் பங்களிப்பை விட கருணாநிதியின் பங்களிப்பு ஒப்பீட்டளவில் மிக மிக அதிகம். 1950-களின் இறுதியில் அண்ணா 'தாய் மகளுக்குக் கட்டிய தாலி' (1959) என்னும் திரைப்படத்திற்கு கதை வசனம் எழுதினாலும் அதற்குப் பிறகு அண்ணாவின் சினிமா சார்ந்த பங்களிப்புகள் குறையத்தொடங்கிவிட்டது எனலாம். ஏனெனில் அரசியல் அண்ணாவின் நேரத்தை முழுவதுமாக எடுத்துக் கொண்டது. ஆனாலும் கருணாநிதி இந்த அரசியல், சினிமா என்ற இரட்டைச் சவாரியைச் செம்மையாகவே கையாண்டார்.

கலைஞரின் வசனமும் திரைப்பட வெற்றியும்:

பராசக்தியில் அவரது திரை சகாப்தம் தொடங்கி மனோகராவில் நிலைபெற்று, புதுமைப்பித்தன் திரைப்படம் வரை அது நீடிக்கிறது. இரண்டாம் உலகப் போர் பின்னணியில் பர்மா அகதிகளைப் பற்றிப் பேசிய பராசக்தி, தமிழ் சினிமாவில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தது. அதன் வசனங்களும் சிவாஜி கணேசனின் முத்திரை நடிப்பும், சமூக அமைப்பின் தோல்வியை திரைக்கதையாக்கிய விதமும் அபார வரவேற்பைப் பெற்றன. அதே சமயம் அதன் பிராமண எதிர்ப்பு/ கடவுள் கோயில் பற்றிய

http://Creativecommons.org//license/by/4.0/.

விமர்சனங்கள் படத்தைத் தடை செய்ய வேண்டும் என்கிற அளவுக்குப் போனதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். முன்னதாக ராஜகுமாரி, மருத நாட்டு இளவரசி, மந்திரிகுமாரி, போன்ற திரைப்படங்களில் கருணாநிதி எழுதிய திராவிட கொள்கைகள் சார்ந்த எழுத்து, பராசக்தியில் ஒரு சமூக விமர்சனமாக முதிர்ந்திருக்கிறது என்பதை நாம் அறிய முடியும்.

1954-இல் மலைக்கள்ளன் திரைப்படமாக எடுக்கப்படுவதற்கு முன்பு நாமக்கல் வெ.ராமலிங்கம் பிள்ளையால் எழுதப்பட்டு நாடகமாக நிகழ்த்தப்பட்டு வந்தது. பின்னர் அது சினிமாவாக எடுக்கப்பட்ட போது கருணாநிதியின் கதை வசனத்தில் வேறு கருத்தாக்க வடிவம் பூண்டது எனலாம். எம்.ஜி.ஆர் மாதிரியான ஸ்டார் நடிகர்கள் நடித்தாலும் அதுவும் திராவிட சினிமாவின் கூறுகளைக் கொண்ட ஒரு திரைப்படமே ஆகும். மதுரை வீரன் எம்.ஜி.ஆரின் சினிமா வாழ்க்கையிலும், தமிழ் திரைப்பட வரலாற்றிலும் ஒரு முக்கியமான படம். தலித் சினிமா என்னும் கருத்தாக்கத்துக்கும் மதுரை வீரன் ஒரு மகத்தான முன்னோடிதான். இந்தத் திரைப்படத்தை திராவிட இயக்க படைப்பாளிகள் சினிமாவாக எடுத்ததும், தேசியவாதம் பேசிய இயக்குநர்கள் இந்தக் கதையை ஏன் சினிமாவாக எடுக்கவில்லை என்பதும் ஒரு விரிவான ஆய்வுக்குரியது. பராசக்தி திரைப்படத்தின் மூலம் அறிமுகமான சிவாஜி கணேசன் அவருடைய ஆரம்ப காலத்தில் திமுக அனுதாபி. ஆனால் அதே காலகட்டத்தில் அவர் பொதுவான படங்களிலும் நடித்தார். அந்தப் படங்களில் திராவிட இயக்க சினிமாவின் கூறுகளை நாம் காண முடியாது. இது குறித்து அவருக்கு ஒரு தெளிவு இருந்தது. ஒரு இயக்கத்தின் அல்லது கட்சியின் சார்பாக அல்லாமல் ஒரு நடிகனாக மட்டுமே அவர் தன்னை முன்னிறுத்தினார்.

எம்.ஆர்.இராதாவும் திரைப்பட வெற்றியும்:

எம்.ஆர்.ராதா திராவிட இயக்க சினிமாவில் ஒரு தனித்தன்மையான நடிகர். அண்ணா, கருணாநிதி ஆகியோர் கலாப்பூர்வமான பல சமரசங்கள் செய்துகொண்டவர்கள். ஆனால் எம்.ஆர்.ராதா அப்படியான சமரசங்கள் எதுவும் செய்யாதவர். பொது வாழ்விலும், திரை வாழ்விலும் பெரியாரைப் பின்பற்றி செயலாற்றியவர். திருவாரூர் தங்கராசு கதை வசனத்தில் அவர் நடித்த 'ரத்தக்கண்ணீர்' அப்படியானதொரு தனித்த திராவிட சினிமாதான். தொடர்ச்சியாகப் பல கதாபாத்திரங்களில் நடித்துப் பெரியாரின் கொள்கைகளைப் பரப்பியவர் எம்.ஆர்.ராதா. எந்த ஒரு இயக்குநரின் படத்தில் நடித்தாலும் அவரின் பகுத்தறிவு ஆளுமை அதில் மின்னிக்கொண்டிருக்கும். என்.எஸ்.கிருஷ்ணன், வி.கே.ராமசாமி, வரிசையில் அவர் ஒரு முக்கியமான நடிப்பாளுமை.

திராவிடக் கட்சிகளின் ஆட்சியும் திரைத்துறையும்:

திராவிட இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் வந்த `பராசக்தி`,(1952) `வேலைக்காரி` (1949) , `ரங்கோன் ராதா` (1956) போன்ற கருத்தாழம் கொண்ட படங்கள், அவ்வியக்கம் ஆட்சியைக் கைப்பற்றிய பின் வரவில்லை. சில இயக்க தலைவர்கள் படத்தயாரிப்பளாராக

http://Creativecommons.org//license/by/4.0/.

உருவெடுத்த பின்னரும் ஆட்டபாட்டம் நிறைந்த பொழுது போக்கு படங்களையே தந்தனர். தி மு க தமிழகத்தில் ஆட்சிக்கு வந்த பின் சினிமாவின் உள்ளடக்கத்தில் மாற்றம் ஒன்றையும் காண முடியவில்லை. திரைப்படம் பொழுதுபோக்கிற்கான ஒரு உபகரணம் என்ற நோக்கே ஓங்கியிருந்தது. அதுமட்டுமல்ல. பல நடிகர்கள் திரை மூலம் கிடைத்த தங்களது பிரபல்யத்தை பயன்படுத்தி அரசியலில் ஈடுபட்டனர். பலர் வெற்றியும் அடைந்தனர். இந்த காலகட்டத்தில் மின்சார வசதி கிராமப்புறங்களில் பரவிய பின் டூரிங் டாக்கீஸுகள் மூலம் சினிமாவின் வீச்சு தமிழ்நாட்டில் மூலைமுடுக்குகளில் எட்டியது. எம் ஜி ஆர், சிவாஜி கணேசன், எஸ்.எஸ்.ஆர் போன்ற பல நடிகர்கள், அரசியலில் நேரடியாக ஈடுபட்டு தமிழ்நாட்டில் "நட்சத்திர அரசியல்வாதிகள்' உருவாக அடித்தளமிட்டனர்.

எம் ஜி ஆர் 1977இல் முதலமைச்சராக பதவியேற்று 11 ஆண்டுகள் ஆட்சி செய்தார். தமிழ் சினிமா உள்ளடக்கத்தில் இது எந்த விதத் தாக்கத்தையும் ஏற்படுத்த வில்லை. திராவிட இயக்கம் ஆட்சிக்கு வந்து 14வது ஆண்டில், 1980இல், தென்னிந்திய திரைத்துறை பேசும்படத்தின் பொன்விழாவை கொண்டாடியபோது, நான்கு மாநிலங்களிலும் மொத்தம் 98 ஸ்டுடியோக்களும், 2742 தயாரிப்பு நிறுவனங்களும் இயங்கிக் கொண்டிருந்தன.

ஜெயலலிதா அரசியலுக்கு வந்ததைப் பார்த்து தமிழக திரைப்பட நடிகர்கள் அதிகப் பேர் தொடர்ச்சியாக தனிக்கட்சி ஆரம்பித்தனர். அதன்படி தமிழ் திரைப்பட கதாநாயகனாக இருந்த விஜயகாந்த் தேமுதிக கட்சி ஆரம்பித்தார். சரத்குமார் சமத்துவ மக்கள் கட்சி ஆரம்பித்தார். ஆனால் இவர்களால் எம்ஜிஆர், ஜெயலலிதா போன்று மக்கள் செல்வாக்கை பெற முடியவில்லை. காரணம், இப்போது பொதுமக்கள் அதிகளவில் விழிப்புணர்வு அடைந்துள்ளனர். இதற்கு முக்கிய காரணம் தொலைப்பேசி, முகநூல், உள்ளிட்ட பல சமூக வலைதளங்கள் தான் காரணம்.

கல்விப்புலமும் திரைத்துறையும்:

குறிப்பிட்ட காலகட்டத்தில், ஆண்டிற்கு நூறு படங்களுக்கு மேல் தயாரிக்கப்பட்டாலும், தமிழ் இலக்கியம் அடைந்திருந்த உன்னத நிலையுடன் ஒப்பிடும்போது, சினிமா அந்த அளவுக்கு வளரவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. இலக்கியம், சங்கீதம் தொடர்பாக ஆழமான அறிவு கொண்டவர்கள்கூட, சினிமா பற்றிப் பேசும்போது, எழுதும் போது பாமரத்தனமான கருத்துகளை வெளியிட்டனர். நாடகத்திற்கும் சினிமாவிற்கும் உள்ளான அடிப்படை வேறுபாடு பலரால் அறியப்படவில்லை. கல்விப்புலத்திலிருந்து யாரும் சினிமா எனும் இந்த மாபெரும் கலாச்சார-அரசியல் சக்தியைக் கண்டு கொள்ளவில்லை. இன்றளவும் சினிமா துறையில் ஆழமான ஆய்வுகள் பல்கலைக்கழகங்களிலிருந்து வராமல், தனியார் ஆய்வு மையங்களிலிருந்து தான் வருகின்றன.

முடிவுரை:

http://Creativecommons.org//license/by/4.0/.

தற்போதைய நிலையில் அதிகமாக மக்களிடையே வலம் வரும் செய்தி இன்று புகழ்பெற்ற நடிகர்களாக அனைவராலும் பார்க்கும் கமல் மற்றும் ரஜினி ஆகியோரின் அரசியல் பிரவேசம் தான். அரசியலில் ஈடுபட்ட சினிமா நடிகர்களில் மறைந்த எம்.ஜி.ஆர். அளவிற்கு எவராலும் அரசியலில் பிரகாசிக்க முடியவில்லை என்பதே ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றே. மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தனிக்கட்சி ஒன்றை ஆரம்பித்தார். எனினும் அந்த கட்சிக்கு தமிழக மக்களது ஆதரவு கிடைக்கவில்லை. சிலவேளை தமிழ்நாட்டின் தற்போதைய நிலை கமல் மற்றும் ரஜினியின் அரசியல் பிரவேசத்திற்கு முக்கியமாக இருக்கலாம் என்பதை மறுக்க முடியவில்லை. ஆனால் சினிமா வேறு அரசியல் வேறு என்பதை அவர்கள் முதலில் புரிந்துக்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட அளவு ரசிகர்களை மட்டுமே கொண்டு அரசியலில் இறங்குவது புத்திசாலித்தனமல்ல. எம்.ஜி.ஆர். அரசியலில் சிறந்து விளங்கிய காரணம் அவர் மக்களின் ஆதரவை அதிகளவில் பெற்றிருந்தார். எனவே அவர் தமிழக மக்களால் இன்றளவும் பேசப்படுகிறார். சினிமா நடிகர்கள் தமது தொழிலுடன் தம்மை மேம்படுத்தி கொள்வதே சாலச் சிறந்தது. இதை விடுத்து அரசியலில் பிரவேசம் என்று மக்களை ஏன் குழப்பவேண்டும். இன்று வெளிப்படையாக மறுக்க முடியாத உண்மை சினிமா மோகம் குறைந்து அரசியலின் விழிப்புணர்வு இளைஞர்கள் மற்றும் மாணவ சமுதாயத்தில் வேரூன்ற தொடங்கியுள்ளது.

துணைமை நின்றவை:

1. க.திருநாவுக்கரசு (மொ.பெ.ஆ) - திராவிட இன அடையாளமும் வெகுமக்களிய அரசியலும், காலச்சுவடு வெளியீடு, நாகர்கோயில்.
2. வாலாசா வல்லவன் - திராவிடத் தமிழ்த் தேசியம், கருஞ்சட்டைப் பதிப்பகம், சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

27. பெரியாரும் மொழியியல் சிந்தனையும்

முனைவர் ப.கலைவாணி,
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,,
அரசு கலை கல்லூரி(தன்னாட்சி), கோவை
DOI 10.5281/zenodo.13762078.

Abstract:

While mentioning the needs and reasons for that, he said, “Tamil Mukthi should also be refined according to our progress. It should be made easier for people to learn. Effective broad translation should be done. Today's Tamil is a very old language, it has not been reformed for a long time, and it has not been revised like other languages, these are less than a language, I would say it is not proud. Why? All that is old has probably changed; has been corrected. Alteration and editing will not be offensive or offensive to anyone. To improve, to move with the times, to change and revise anything. If we stubbornly talk about the glory of the ancient times in the grandmother's time, we will get lost. Let's fall behind. Language is a weapon of war for global competition. Weapons of war must be changed with time. "I think it is good to make some reforms in the Tamil alphabet to make it easier to learn Tamil, to print and type easily,"

முன்னுரை:

ஒருவனுடைய கருத்தை மற்றொருவனுக்குத் தெரிவிக்க மொழி முக்கிய சாதனமாக இருந்து வருகிறது. அது ஒலி மூலமாகவே பெரிதும் இருந்து வருகிறது. மேலும், இச்சாதனம் மனிதர்களுக்கே சிறப்புடையதாக அமைந்திருக்கிறது. மிருகங்களும், பட்சிகளும் கூட சில செய்கைக் குறிப்புகளாலும், சிலவித சப்தங்களாலும் தம் கருத்தைத் தமக்குள் பரிமாறிக் கொள்கின்றன என்று குறிப்பிடுகிறார்.

எழுத்துச் சீர்திருத்த முயற்சி:

தமிழ் எழுத்துகளில் மாற்றம் கொணர வேண்டும் என்று விரும்பிய தந்தை பெரியார் அதற்கான தேவைகளையும், காரணங்களையும் பற்றிக் குறிப்பிடும் போது, “தமிழ் மிகுதியும் நம் முற்போக்குக்கு ஏற்றபடி செம்மைப்படுத்தப்பட வேண்டும். மக்கள் கற்க மேலும் இலகுவாக்கப்பட வேண்டும். பயனுள்ள பரந்த மொழியாக்கப்பட வேண்டும். இன்றைய தமிழ் மிகவும் பழைய மொழி, வெகுகாலமாகச் சீர்திருத்தம் செய்யப்படாதது, மற்ற மொழிகளைப் போல திருத்தப்படாதது என்பதான இவைகள் ஒரு மொழிக்குக் குறையாகுமே தவிர, பெருமையாகாது என்பேன். ஏன்? பழமை எல்லாம் அநேகமாக மாற்றமாகி இருக்கிறது; திருத்தப்பட்டிருக்கிறது. மாற்றுவதும், திருத்துவதும் யாருக்கும் எதற்கும் இழிவாகவோ, குற்றமாகவோ, ஆகிவிடாது. மேன்மையடையவும், காலத்தோடு கலந்து செல்லவும், எதையும் மாற்றவும் திருத்தவும் வேண்டும். பிடிவாதமாய்ப் பாட்டி காலத்தில், பண்டைக் காலத்திய பெருமைகளைப் பேசிக் கொண்டிருந்தால், சுழிபட்டுப் போவோம். பின்தங்கிப் போவோம். மொழி என்பது உலகப் போட்டிப் போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும். போர்க் கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும். சுலபமாகத் தமிழ்மொழியைக் கற்றுக்

http://Creativecommons.org//license/by/4.0/.

கொள்வதற்காகவும், சுலபமாக அச்சுக் கோர்க்கவும், டைப் அடிக்கவும், தமிழ் எழுத்துக்களில் சில சீர்திருத்தங்கள் செய்யப்படுவது நலம் என்று நினைக்கிறேன்" என்கின்றார்.

மொழி வளர்ச்சி:

ஒரு மொழியின் சிறப்புக்கும், வளர்ச்சிக்கும் மற்றொரு காரணம் உண்டு. ஒரு மொழியை எவ்வளவுக்கெவ்வளவு சுலபமாகக் கற்றுக் கொள்ள முடிகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அது வளர்ச்சியடைவதும் சுலபமாகிறது. சுலபமாகக் கற்றுக் கொள்ளப்படுவதற்கு எழுத்துகள் சுலபத்தில் எழுதக் கூடியனவாகவும் எண்ணிக்கையில் குறைவாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

தமிழ் எழுத்துக்களின் வேறுபட்ட வடிவங்களையுடைய எண்ணிக்கை நூறுக்கு மேலாக இருப்பதைக் குறைத்து 54 எழுத்துக்களுக்குள் அடக்கி விடலாம் என்பதை விளக்கிக் காட்டி, இன்றைய தமிழ் எழுத்துக்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் பல என்பதைப் பற்றிப் பலருக்கும் அபிப்பிராயம் இருந்தாலும் எவரும் தைரியமாய் முன்வராமலே இருக்கின்றார்கள். இவ்வளவு பெரிய காரியத்துக்கு பாஷை ஞானம், இலக்கண ஞானம், பொதுக் கல்வி இல்லாத ஒரு சாதாரண மனிதன் முயற்சிக்கலாமா என்பது ஒரு பெரிய கேள்வியாக இருக்கலாம். அது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால் தகுந்த புலமையும், பாஷா ஞானமும் இலக்கண அறிவும் உள்ளவர்கள் எவரும் முயற்சிக்காவிட்டால் என்ன செய்வது? அதனால் நான் செய்கிறேன் என்று தந்தை பெரியார் கூறுகின்றார்.

தந்தை பெரியார் அவர்கள் மேலும் விளக்குகையில், சாதாரணமாகத் தமிழ் உயிர் எழுத்துக்களில் ஐ, ஔ ஆகிய இரண்டு எழுத்துக்களைக் குறைத்து விடலாம். இந்த இரண்டும் தேவையில்லாத எழுத்துக்கள். மேலும், இவை சுட்டெழுத்துக்களே ஒழிய, தனி எழுத்துக்கள் அல்ல. எவ்வாறு எனில், ஐ என்பதை அய் என்றும், ஔ என்பதை அவ் என்றும் எழுதலாம் என்று பெரியார் விளக்குகிறார். மேலும் நடைமுறையில் இருந்த ஐ முதலிய எழுத்துகளையும் ணா, றா, னா, ணை, லை, ளை, னை, ணொ, றொ, னொ, ணோ, றோ, னோ போன்ற எழுத்துக்களையும் மாற்றம் செய்து தனது பத்திரிகைகளான விடுதலை, குடிஅரசு, உண்மை போன்ற இதழ்களில் 1935-ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தினார்.

சீர்திருத்தமும் நடைமுறைச் சட்டமும்:

தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவினையொட்டி தமிழக முதல்வராக இருந்த மாண்புமிகு எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் 19.10.1978 ஆம் ஆண்டு முதல் தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்த அரசாணை பிறப்பித்துப் பெருமை தேடிக் கொண்டார்.

தமிழ் மொழியானது ஏன் காட்டுமிராண்டி மொழி என்று சொல்லுகின்றேன்? எதனால் சொல்லுகிறேன் என்று இன்று கோபித்துக் கொள்ளும் யோக்கியர்கள் ஒருவர் கூட சிந்தித்துப் பேசுவதில்லை. வாய் இருக்கிறது எதையாவது பேசி வயிறு வளர்ப்போம் என்று நினைப்பது.

http://Creativecommons.org//license/by/4.0/.

அறிவையோ, மானத்தையோ, ஒழுக்கத்தைப் பற்றிக் கூடச் சிந்திக்காமல் பேசி வருகிறார்கள். இப்படிப்பட்ட இவர்கள் போக்குப்படியே சிந்தித்தாலும் தமிழ் மொழி மூவாயிரம், நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட மொழி என்பதை தமிழின் பெருமைக்கு ஒரு சாதனையாய்ச் சொல்லிப் பேசுகிறார்கள்.

நானும் தமிழ் காட்டுமிராண்டி மொழி என்று அதைத்தானே முக்கிய காரணமாய்ச் சொல்லுகின்றேன். பிரிமிட்டிவ் (Primitive) என்றால் அதன் தத்துவம் என்ன? பார்பேரியன், பார்பேரியனிசம் என்றால் அதன் பொருள் என்ன? 3000, 4000 ஆண்டுகளுக்கு முன் என்பது பிரிமிட்டிவ், பார்பேர்யனிசம் என்பதற்கு அக்கால மக்கள் அறிவு, அக்கால மக்கள் நிலை முதலியவை என்பதற்கு என்ன பேதம் கற்பிக்க முடியும். நாகரிகம் அடையாத கூட்டம் என்றுதானே பொருள் என்று விளக்குகிறார். தமிழ்ப்புத்தாண்டு கதை சொல்லுகிறார்கள். 60 ஆண்டுகள் என்று பிரபவ, விபவ, குரோதி, விரோதி ஆண்டுகள் என்று சொல்லுகின்றார்களே. இந்த 60 ஆண்டுகளை எடுத்துப் பார்த்தால் ஒரு ஆண்டாவது தமிழ்ச் சொல் பெயர் உண்டா? தமிழ் வருஷப் பிறப்பு என்று சொல்லுகிறார்கள். தமிழர் ஆண்டு என்று சொல்லுகிறார்கள் வெட்கப்பட வேண்டாமா?

வளர்ச்சி என்பது யாதெனின்:

வெறும் புராணங்களும் இதிகாசங்களும் மட்டும் கொண்ட ஒரு மொழி வளர்ச்சி அடையாது, அறிவியல் கருத்துக்களை, உலக மாற்றங்களை, பொருளாதார நடைமுறைகளை உடனுக்குடன் அறிய முடிவெடுக்க ஆங்கில அறிவு கட்டாயம். என்பதே பெரியார் கொள்கை.

தமிழும், தமிழ்ப் புலவர்களும் எப்படி காலத்திற்கு ஏற்பத் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பெரியார் அளவுக்கு அதிக அக்கறையோடு கூறுகிறார். "இந்த நாட்டுத் தமிழ்ப் பெருங்குடி மக்களாகிய நம்மைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள ஏதாவது சாதனமிருக்கிறதா?

பள்ளியில் படிக்கும்போது தெரிந்து கொள்ளலாம் என்றால் அங்கு தமிழர்களைப் பற்றி ஒரு சேதியும் இல்லை. எவ்வித பாடப் புத்தகமும் இல்லை. அய்யர் பிராமணன் போன்ற வார்த்தைகள் காணப்படுகின்றனவே அன்றி, "தமிழர் - திராவிடர்" என்ற வார்த்தைகளுக்கு அங்கு இடம் கிடையவே கிடையாது. மேல் வகுப்புக்கு வந்தால் தமிழ்நாட்டு சரித்திரம் இல்லை. இராமாயணம், மகாபாரதம், அசோகன், முஸ்லீம், வெள்ளையர் ஆட்சியும் தான் விளக்கப்படுகிறதே தவிர திராவிடர் தமிழர் என்கிற ஆட்சியைப் பற்றி காண்பது மிகவும் அருமை. அப்படி ஏதாவது காணப்பட்டாலும் அது பெரும் பித்தலாட்டமும் மோசடியுமாய் இருக்கும்.

ஆகவே, நமது (தமிழ்) பிள்ளைகள் நம்மைப் பற்றித் தெரிந்து கொள்ள வழியில்லை. ஆரியருக்குமுன் தமிழன் என்ன சமயத்தவன் அவன் கடவுள் எப்படிப்பட்டது. அவன் வாழ்க்கை முறை எப்படிப்பட்டது என்ற சரித்திர ஆதாரம் ஏதும் இல்லை. தமிழர்கள் காட்டுமிராண்டியாக இருந்தார்கள் என்பதற்கே ஏராளமான ஆதாரங்கள் கற்பிக்கப்படுகின்றன. நம் பிள்ளைகளுக்கு

http://Creativecommons.org//license/by/4.0/.

நம்மைப் பற்றி கீழ் வகுப்பிலிருந்து தெரிந்து கொள்ள வழி செய்தால் ஒழிய, எப்படி அவர்கள் தங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! பாட புத்தகக் கமிட்டியில் உள்ளவர்கள் தமிழர்களுக்கு மான உணர்ச்சி, நாட்டு உணர்ச்சி, இன உணர்ச்சி இருக்குமானால் இராமாயண, மகாபாரதக் கதைகளைச் சரித்திரத்தில் சேர்க்கச் சம்மதிப்பார்களா?

பண்டிதர்கள், உபாத்தியாயர்கள் இவற்றை நாம் சொல்லும் போது நம்மீது பாய்கிறார்களே தவிர, தமிழர்களுக்கு இழிவு தரக் கூடிய, நமக்குத் தொடர்பில்லாத, நமது முற்போக்கைத் தடுக்கக் கூடிய, பகுத்தறிவுக்கு ஒவ்வாதவற்றை கற்பிப்பது குறித்து கவலைப்படுவதில்லை. இனியாவது தமிழ்ப் பண்டிதர்கள் இதில் கவனம் செலுத்த மாநாடு கூட்டி, இவற்றைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இலக்கியங்களின் பங்கும் தேவையும்:

தமிழிலே, தமிழ்மொழி இலக்கியத்திலே, தமிழர் நல்வாழ்விலே, தமிழர் தன்மானத்திலே, தமிழர் தனி ஆட்சியிலே கவலையுள்ள நம் செல்வர்களுக்கு (கல்வி நிலையம் நடத்துகின்றவர்களுக்கு) இந்தக் காரியமெல்லாம் முக்கிய கடமையல்லவா என்று கேட்கிறோம். நிலைகுலைந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி, உணர்ச்சி ஊட்டி அவர்களுக்குத் தன்மான உணர்வும், விடுதலை உணர்வும் ஊட்ட வேண்டாமா? தமிழ் மக்களை (அவர்கள் படித்தவர்களானாலும், பண்டிதர்களானாலும், மந்திரி, கவர்னர், வைசிராய், நிர்வாக சபை மெம்பர் ஆனாலும் பகுத்தறிவு விஷயத்தில் மரக்கட்டையாக்கிவிட்டு) தமிழர் அல்லாதவர்கள் அடிமைப்படுத்திச் சுரண்டிக் கொள்ளை கொள்வதைத் தடுக்க வேண்டாமா?

தமிழ் மக்களின் நலத்தில் கவலையுள்ளவர்கள் எது எதற்கு என்றுதான் அழுவது? தமிழர்க்குத் தொண்டாற்றுவது என்றால் என்னதான் அர்த்தம்? ஆகவே, பிள்ளைகளில் மூடக்கருத்துக்களை, தமிழர் விரோதக் கருத்துக்களை நீக்கி, அறிவு வளர்ச்சிக்கு, மான உணர்ச்சிக்கு உகந்த பாடங்களை வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நமக்குச் சுதந்திரம் உள்ள கல்வி இலாகாவில் இம்மாற்றம் செய்யாமல் வேறு எதில் விடுதலை பெறப் போகிறோம்? (குடிஅரசு 12.02.1944)

மொழியும் உலகப்பார்வையும்:

"மொழி என்பது உலகப் போட்டிப் போராட்டத்துக்கு ஒரு போர்க் கருவியாகும். போர்க் கருவிகள் காலத்துக்கு ஏற்ப மாற்றப்பட வேண்டும். அவ்வப்போது கண்டுபிடித்துக் கைக்கொள்ள வேண்டும்." மொழியைப் பற்றிய தெளிவான சிந்தனையாக இது விளங்குகின்றது; உலகில் மக்கள் வாழ்க்கையென்பது போட்டியும் போராட்டமும் நிறைந்தது என்பதை யாவரும் அறிகின்றோம்.

இந்தப் போட்டிப் போராட்ட வாழ்வில் வெற்றியோ, தோல்வியோ அடைவதற்கு மொழி ஒரு பெரிய காரணமாக இருக்கின்றது. இங்குப் போராட்டம் என்பது ஆயுதங்கள் கொண்டு

http://Creativecommons.org//license/by/4.0/.

சண்டையிடுவது மட்டும் இல்லை. ஆனால், அறிவு கொண்டு வாய்ப்புகளை மற்றவருக்கு விடாமல் உள்ள வாய்ப்புகள் அவ்வளவையும் தமக்கே பயன்படுத்திக் கொள்ளுதலும் போராட்டம்தான். தொடர்ந்து அதனையே நிலைபெறச் செய்வது என்பதும் இப்போராட்டத்தின் வெற்றிதான். சான்றாக, நம் நாட்டுப் பார்ப்பனர் இந்தியா முழுமையிலும் கல்வி வாய்ப்புகளையும் உத்தியோக வாய்ப்புகளையும் தங்களுடையதாகத் தொடர்ந்து பல நூறு ஆண்டுகளாக வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இது ஆயுதம் தாங்கிப் போர் புரிந்து பெற்ற வெற்றியல்ல. இது அறிவு அடிப்படையில் சூழ்ச்சியையும், தந்திரத்தையும் பயன்படுத்தி வென்ற வெற்றியாகும். இன்றும் அந்த வெற்றியை அடைந்து கொண்டிருக்கின்றனர். இந்த நீண்ட நெடிய போராட்டத்தில் உள்ள உண்மைகளை நன்குணர்ந்த நம் பெரியார், தம்முடைய அறிவார்ந்த போராட்டத்தால் வென்று, மொழி என்பது (கல்வி என்பது) உலகில் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை வெல்லவும், வீழ்த்தவும் அதை ஒரு கருவியாய்ப் பயன்படுவதால் அதை ஒரு கருவியாய் அவ்வப்போது புதுப்பித்துப் பயன்படுத்த வேண்டும். மாறாக, பூசிப்பதற்குரியதாகக் கொள்ளக் கூடாது என்றார். வாழ்வில் பல துறைகட்குப் பயன்படும் அறிவியல், பொறியியல், கணிதம், சட்டம் போன்றவை தமிழில் நிறைய ஆக்கப்பட வேண்டும், மொழிபெயர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் தமிழால் இப்போட்டி உலகில் போட்டியிட்டு நிலைக்கமுடியும் என்றார் பெரியார்.

தமிழ்ப்புலவர்களும் மொழிப்பார்வையும்:

தமிழிலும், தமிழ்ப் புலவர்களிடமும் உள்ள குறைகளைச் சுட்டி, மேம்படுத்த கடுமையாகப் பேசிய பெரியார் தமிழை உயர்த்திப் பேசத் தவறவில்லை.

- ✓ தமிழ்மொழி செய்யுள் தன்மையில் கிரேக்க மொழியை விடவும், இலக்கியப் பெருமையில் இலத்தீன் மொழியையும் வெல்லக்கூடியது என்று வின்ஸ்லோ கூறுகிறார்.
- ✓ கால்டுவெல், தமிழ்மொழி பண்டையது, நலஞ்சிறந்தது, உயர்நிலையில் உள்ளது, இதைப் போன்ற திராவிட மொழி வேறெதுவும் இல்லை என்று சிறப்பித்துக் கூறுகிறார்.
- ✓ சிலேட்டர் என்பவர், திராவிட மொழி எல்லாவற்றுள்ளும் மக்கள் பேசும் மொழிக்கு உரிய தன்மையைப் பெற்றுள்ள மொழி தமிழ் மொழியே; தக்க அமைப்புடையதும் தமிழ்மொழியே என்கிறார்.
- ✓ மர்டாக் என்பவர், துராணிய மொழிகள் பலவற்றுள்ளும் மிகச் சீரிய மொழியாயும், அழகிய இலக்கியங்களைப் பொருந்தப் பெற்றதாயும் விளங்குவது தமிழே என்றும் கூறியுள்ளார்.

தாய்மொழியிடத்து அன்பில்லாதவர்களுக்குத் தாய்நாட்டின் மீதும் அன்பிராது. எனவே, ஒவ்வொரு தமிழ் மாணவனும் தமிழ் கற்க வேண்டும். ஜாதிபேதம் தமிழரிடம் இல்லை. எகிப்து,

http://Creativecommons.org//license/by/4.0/.

கிரேக்கம், ரோம் முதலிய நாடுகளோடு அன்றைக்கே வணிகத் தொடர்பு கொண்டவர்கள் தமிழர்கள்.

தமிழ்ப் பெண்களும் கல்வியில் புலமை பெற்று விளங்கினர். தமிழ் மன்னர்கள் நீதியோடு ஆண்டனர்.

தமிழர்கள் அஞ்சாது வீரப்போர் புரியும் ஆற்றல் உள்ளவர்கள். தாய்நாட்டுத் தமிழர்கள் ஒவ்வொருவரும் தாய்மொழியாம் தமிழைக் கட்டாயம் கற்று சிறப்புப் புலமை அடைய வேண்டும். இதனால் தமிழ் வளர்ச்சி அடையும், தாய்நாடான தமிழ்நாடு சிறப்புற்றோங்கும். (குடிஅரசு 18.12.1943)

இவை மட்டுமல்ல, தமிழுணர்ச்சியைத் தமிழைப் பரப்ப வழிகளையெல்லாம் குடிஅரசில் வெளியிட்டார்.

- தமிழர் தமிழ்ப் பெயர் இட வேண்டும்.
- தமிழ்நாட்டுப் பிரிவு, ஊர், தெரு, வீடு பெயர்கள் தமிழில் இருக்க வேண்டும்.
- வீட்டிலும் கடைத்தெருவிலும், அலுவலகங்களிலும், வழிப் போக்கிலும் ஆங்கிலச் சொல்லும், சமஸ்கிருதமும் தமிழில் கலப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- தமிழில் இல்லாதவற்றிற்கு ஆங்கிலச் சொல்லைக் கலக்கலாம்.
- தமிழில் இல்லாதவற்றிற்குப் புதிய சொல் உருவாக்க வேண்டும். அறிஞர்கள் உருவாக்கும் புதுச் சொல்லைப் பொது மக்கள் பயன்படுத்த வேண்டும்.
- கோயில்களிலும், விழாக்களிலும் தமிழே ஒலிக்க வேண்டும்.
- தமிழைப் பிழைபட வழங்குபவரைத் திருத்த வேண்டும். என்று சென்னை தமிழறிஞர் கழகத்தின் கோரிக்கைகளை 04.12.1943 குடிஅரசு ஏட்டில் பெரியார் வெளியிட்டு தமிழைத் தூக்கி நிறுத்த முயன்றார்.

ஆதிக்க மொழியும் அன்னை மொழியும்:

தமிழ் உயர்வு பெற, மேன்மை பெற, இவ்வளவு முயன்ற பெரியார், தமிழுக்கு இடுக்கண் வரும் போதெல்லாம் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்தார். தமிழ்மொழி மீது இந்தி ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்று எண்ணிய பெரியார் 1926 லே இந்தி மொழியைப் பரப்ப முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது, அதை எதிர்த்து, தமிழுக்குத் துரோகமும் இந்தி மொழியின் இரகசியமும் என்று சித்திரபுத்திரன் என்ற பெயரில் கட்டுரை எழுதினார் பெரியார்.

இந்திக்குப் பெருந்தொகை செலவிடப்படுவதால் எந்தப்பயனும் இல்லை. 100க்கு 97 பேர் ஆரியப் பார்ப்பனர்களே அதைப் படிக்கின்றனர். எந்தத் தமிழரும் அதைப் படிக்கவில்லை. அப்படியிருக்க தமிழ் மொழி வளர்ச்சிக்கு இந்திக்குச் செலுத்தும் அக்கறையில் 100 இல் ஒருபங்குகூட செலுத்தவில்லை என்று கடுமையாகச் சாடினார் பெரியார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

1938-இல் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த சி. இராஜகோபாலாச்சாரியார் கட்டாய இந்தித் திணிப்பைக் கொண்டு வந்த போது, அதை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்டு இரண்டாண்டு சிறைத்தண்டனை பெற்றார். பின்பு, 1948ஆம் ஆண்டு மறுபடியும் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் (ஓ.பி.ஆர்) முதலமைச்சராக இருந்த போது கட்டாய இந்தித் திணிப்பு ஏற்பட்ட போது, தந்தை பெரியார் போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றி கண்டார். 1952, 1953, 1954 ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து இந்தித் திணிப்பிற்கு எதிராக இரயில் நிலையங்களில் உள்ள பெயர் பதாகைகளில் உள்ள இந்தி எழுத்துகளை தார் கொண்டு அழித்துப் போராட்டம் நடத்தினார். 1955ஆம் ஆண்டு கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்து தேசியக் கொடியை எரிக்கும் போராட்டத்தை அறிவித்தார். உடனே, தமிழக முதலமைச்சராக இருந்த கல்வி வள்ளல் காமராசர் அளித்த உறுதிமொழியின் காரணமாக போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. தமிழ் நாட்டு மக்கள் விரும்புகிறவரை இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று இந்திய பிரதமர் நேரு அவர்கள் உறுதி அளித்தார். அதன்பேரில் இந்தி திணிப்பு போராட்டம் கைவிடப்பட்டது.

முடிவுரை:

தமிழ் இந்த நாட்டு மக்களுக்கு சகல துறைக்கும் முன்னேற்றமளிக்கக் கூடியதும் சுதந்திரத்தை அளிக்கக் கூடியதும், மானத்துடனும், பகுத்தறிவுடனும் வாழத்தக்க வாழ்வை அளிக்கக் கூடியதும் என்பது என் அபிப்பிராயம். ஆனால், அப்படிப்பட்டவை எல்லாம் தமிழில் இருக்கிறதா என்று சிலர் கேட்கலாம். எல்லாம் இல்லையென்றாலும், அநேக இந்திய பாஷைகளைவிட அதிகமான முன்னேற்றத்தைத் தமிழ் மக்களுக்கு அளிக்கக்கூடிய கலைகள், பழக்கவழக்கங்கள், அதற்கேற்ற சொற்கள் தமிழில் இருக்கின்றன என்கின்றார். பெரியாரின் மொழியியல் பார்வையானது தொலைநோக்குப் பார்வையாக அமையப் பெற்றுள்ளதை அறிய முடியும்.

துணை நூற்பட்டியல்:

1. கி.வீரமணி(தொ.ஆ) - பெரியாரின் சிந்தனைத் திரட்டு - தொகுதி-2, திராவிடக் கழக வெளியீடு, சென்னை.
2. க.அறிவுக்கரசு, நீதிக்கட்சியும் சமூக விடுதலையும்,, திராவிடக் கழக வெளியீடு, சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

28. திராவிட இயக்கமும் கோவில் நுழைவுப் போராட்டமும்

முனைவர் F.மலர்விழி,
இணைப்பேராசிரியர்- தமிழ்த்துறைத்தலைவர்,
பிராவிடன்ஸ் கல்லூரி(தன்னாட்சி), குன்னூர்.
DOI 10.5281/zenodo.13762101.

Abstract:

History tells us that Father Periyar, from his early days till his death, worked hard to eliminate the ups and downs in the society. Especially, no one can easily deny or hide the struggles of Father Periyar and his Self-Respect Movement to eliminate caste untouchability that prevailed in the temple. In this way, this article explains the problems in temple worship and entry which cannot be separated from the people in the social culture.

Key Words: History – Tamil Society - Periyar

முன்னுரை:

தந்தை பெரியார் தனது ஆரம்ப காலம் தொடங்கி மறையும் வரை சமூகத்தில் நிலவிய ஏற்றத் தாழ்வை ஒழிக்கின்ற வகையில் பாடுபட்டு வந்தார் என்பது வரலாறு நமக்கு உணர்த்தும் செய்தியாகும். அதிலும் குறிப்பாக, கோவிலில் நிலவி வந்த சாதியத் தீண்டாமை ஏற்றத் தாழ்வை ஒழிக்கும் பொருட்டுத் தந்தை பெரியாரும் அவர்தம் சுயமரியாதை இயக்கமும் நடத்திய போராட்டங்களை யாரும் எளிதில் மறுத்துவிடவோ, மறைத்திடவோ முடியாது. இந்த வகையில் சமூகப் பண்பாட்டில் மக்களிடம் இருந்து பிரிக்க முடியாத கோயில் வழிபாட்டிலும் நுழைவிலும் நிலவிய சிக்கல்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

சமூக நிறுவனமான கோயில்கள்:

கி.பி. 6, 7-ஆம் நூற்றாண்டுகளில், கோயில்கள் மிகப் பெரிய சமூக நிறுவனங்களாக வளரத் தொடங்கின. அளவற்ற விளைநிலங்கள் கோயில் சொத்தாயின. அதுவரையில், தீ வளர்த்து வேள்விகள் மட்டுமே செய்துகொண்டிருந்த பார்ப்பனர்கள் கோயிலில் ஆதிக்கம் செலுத்த முற்பட்டனர். சாதி ஏற்றத்தாழ்வுகள் அனைத்தும் கோயிலுக்குள்ளும் வந்துவிட்டன. நில உடைமையின் விளைபொருள்களில் ஒன்றான சாதி இறுக்கங்களும் தீண்டாமையும், 10-ஆம் நூற்றாண்டிலேயே மிகவும் வளர்ந்து விட்டதைச் சோழர் காலக் கல்வெட்டுகள் நமக்கு காட்டுகின்றன" என்று தன் நூலில் குறிப்பிடுகின்றார், பேராசிரியர் தொ. பரமசிவன். பல்லவர் காலத்தில் தொடங்கி, சோழர் காலத்தில் வளர்ந்து, நாயக்கர் காலத்தில் உச்சத்தைத் தொட்டன சாதி மற்றும் தீண்டாமை ஏற்றத்தாழ்வுகள். அதன் விளைவாக, கோயிலுக்குள் யார் போகலாம், போகக்கூடாது என்பதும், உள்ளே செல்லக்கூடியவர்களிலும், யார்யார் எந்தெந்த இடம் வரையில் செல்லலாம் என்ற வரையறைகளும் உருவாயின கருவறை வரையில் செல்லும் உரிமை எல்லோருக்கும்

http://Creativecommons.org//license/by/4.0/.

வேண்டும் என்ற கோரிக்கை மிகவும் பிற்காலத்தில் ஏற்பட்டது. ஆனால் கோயிலுக்குள்ளேயே போகக்கூடாது என்ற தடையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மீற நடந்த முயற்சிகளைப் பார்க்கிறோம். அந்தப் போராட்டத்தின் குறியீடே பெரியபுராணம் காட்டும் திருநாளைப் போவார் என்னும் "நந்தன் கதை" . நந்தனைப் போலக் கெஞ்சிக்கொண்டிருக்காமல், 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஒரு பிரிவினர் போராடத் தொடங்கினர்.

எங்கிருந்து தொடக்கம்:

கோவில் கருவறைவரை ஒரு சாதியும், உட்பிரகாரம் வரை ஒரு சாதியும், கொடிமரம் வரை ஒரு சாதியும், சுற்றுச்சுவருக்கு வெளியே ஒரு சாதியும் இருந்து வழிபாடு செய்யக்கூடிய நிலைதான் அன்று இருந்து வந்தது. இந்து மத வர்ணாசிரம தர்மத்தின்படி, பார்ப்பனர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரகர்கள், ஆகியோர் மேற்கண்டபடி கோவிலின் குறிப்பிட்ட எல்லைக்குள்தான் வழிபாடு நடத்த உரிமையிருந்தது. ஆனால், சூத்திரரில் சில பிரிவினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் தீண்டப்படாதோர் கோவிலில் நுழைந்து வழிபாடு நடத்த உரிமை மறுக்கப்பட்டு இருந்தது. கோவிலில் நுழையும் உரிமை மறுக்கப்பட்டு கோவிலுக்கு வெளியே இருந்து கோபுரத்தை மட்டுமே தரிசித்துக் கொண்டிருந்த கூட்டம், இன்றைக்கு கோவிலுக்குள் சென்று வழிபாடு செய்யும் உரிமை பெற்றது எப்போது? யாரால்? பார்ப்பனர் அல்லாதாரின் இயக்கம், தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றின் பிரச்சார்தாலும், போராட்டத்தாலும்தான் தாழ்த்தப்பட்ட, தீண்டப்படாத மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டு கோவில் நுழைவுக்கான உரிமைப்போர் முன்னெடுக்கப்பட்டது. பார்ப்பன இந்து மதத்தால் தாழ்த்தப்பட்டோர், தீண்ட்ப்படாதோர், என ஒடுக்கப்பட்ட தமிழர்களுக்குச் சமூக விடுதலைப் பெற்றுத் தருவதே பெரியாரின் லட்சியமாக இருந்தது. அன்று காங்கிரசில் இருந்த பெரியார் இந்த இழிவினை போக்க 1922-ஆம் ஆண்டு திருப்பூர் காங்கிரஸ் மாநாட்டில் கோவில் நுழைவுப் பொது உரிமைகள் வேண்டுமென தீர்மானம் கொண்டு வந்தார். அந்த தீர்மானம் பார்ப்பனர்களால் புறக்கணிக்கப்பட்டது.. அப்போதே கோவில் நுழைவு உரிமைக்கானப் போராட்டத்தை பெரியார் தொடங்கிவிட்டார்.

வைக்கம் கோயில் தெரு நுழைவுப் போராட்டம் :

வைக்கம் போராட்டம் அல்லது வைக்கம் சத்தியாக்கிரகம் என்பது 1924 - 1932 ஆம் ஆண்டுகளிலான காலகட்டத்தில் பிரித்தானிய இந்தியாவின் திருவாங்கூர் சமஸ்தானத்தில் உள்ள வைக்கம் என்ற ஊரில் தீண்டாமைக்கு எதிராக நடைபெற்றப் போராட்டம். வைக்கம் ஊரில் இருந்த மகாதேவர் கோயிலைச் சுற்றியிருந்த தெருக்களை அவர்ண சாதியினர் பயன்படுத்தக்கூடாது என்ற தடையை நீக்க இப்போராட்டம் நடத்தப்பட்டது.

கேரளா மாநிலத்தில் வைக்கம் எனும் ஊரில் இருந்த மகாதேவர் கோயிலைச் சுற்றியிருந்த தெருக்களில் நடக்கக் கூடாது என்கிற நடைமுறை பல ஆண்டு காலங்களாக

http://Creativecommons.org//license/by/4.0/.

இருந்து வந்தது. இந்நிலையை எதிர்த்துக் குரல் கொடுக்கக் கூட யாரும் தயாராக இல்லை. இந்நிலையில் ஸ்ரீ நாராயணகுருவின் சீடரும், காங்கிரசு பேரியக்கத்தைச் சார்ந்தவருமான டி. கே. மாதவன் என்பவர் இப்பிரச்சனைக்காகப் போராட முன் வந்தார். அவர் காங்கிரசு பேரியக்கத்தைச் சார்ந்தவர்களை ஒன்று திரட்டினார். இதற்காக 1924 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் நாள் காலை 6 மணிக்குப் போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இவர்களது திட்டம் அரசுக்குத் தெரிந்த போது காவல்துறையின் மூலம் தடை விதிக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தை நடத்த தாழ்த்தப்பட்ட மக்கள் விரும்பவில்லை. அவர்கள், இப்போராட்டத்தினால் தங்களுக்குக் கிடைத்து வரும் சில சலுகைகள் கிடைக்காமல் போய்விடும் என்று அச்சம் கொண்டனர். இதனால் இப்போராட்டத்தில் நம்பிக்கையின்றியும் இருந்தார்கள். டி. கே. மாதவன் காவல்துறையின் தடையை மீறி ஊர்வலமாகச் சென்று இப்போராட்டத்தை நடத்துவதென முடிவு செய்தார். தடையை மீறி நடத்தப்பட்ட இந்த ஊர்வலத்தில் சென்றவர்களில் குஞ்ஞப்பி என்கிற புலையர் சாதியைச் சேர்ந்தவர், பாகுலேயன் என்கிற ஈழவர் சாதியைச் சேர்ந்தவர், கோவிந்தப் பணிக்கர் என்கிற நாயர் சாதியைச் சேர்ந்தவர் என மூன்று நபர்கள் காவல்துறையினர் நின்று கொண்டிருந்த இடம் வரை சென்றனர். இந்த மூன்று நபர்களையும் காவல்துறையினர் கைது செய்து 6 மாத காலம் சாதாரணத் தண்டனைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்தனர். இதுதான் வைக்கம் போராட்டத்தின் முதல் போராட்டமாகும்.

கைதானவர்களுக்கு ஆதரவினைத் திரட்டி மேலும் பல போராட்டங்கள் நடைபெற்றன. இந்தப் போராட்டத்திற்கு டி. கே. மாதவன், மகாத்மா காந்தியை நேரில் சந்தித்து வைக்கம் ஊரின் நிலையை எடுத்துக் கூறி ஒப்புதல் கடிதம் பெற்று ஆதரவு திரட்டினார். அதன் பிறகு டி. கே. மாதவன், கே. பி. கேசவமேனோன் ஆகியோர் இந்தப் போராட்டத்தில் முன் வந்து காவல்துறையினரின் தடுப்புச் சுவரை மீறிச் சென்றனர். இந்தக் குற்றத்திற்காக இருவரையும் காவல்துறை கைது செய்ததுடன் 6 மாத காலம் கடுங்காவல் தண்டனையும், ஐநூறு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டன. கைது செய்யப்பட்ட டி. கே. மாதவன் ஈழவர் சாதியைச் சேர்ந்தவர் என்பதால் கேரள மாநிலத்திலிருந்த ஈழவர் சாதியைச் சேர்ந்த பலரும் போராட்டத்தில் இறங்கினர். இந்தப் போராட்டத்தில் இறங்கியவர்களுள் முக்கியமானவர் சகோதரர் அய்யப்பன். நியாயமான இப்போராட்டத்திற்கு ஸ்ரீ நாராயண குரு ஆதரவளித்தார். ஸ்ரீ நாராயண குரு தனக்குச் சொந்தமான பேளூர் மடத்தைப் போராட்டக் காரர்கள் தங்குவதற்காக அளித்தார். இந்தப் போராட்டத்திற்கு நன்கொடையாக ஆயிரம் ரூபாயும் அளித்தார். இந்த மடத்தில்தான் மக்கள் ஒன்று கூடி போராட்டத்திற்குச் சென்றனர். டி. கே. மாதவன் கைது செய்யப்பட்டதும், நியாயமான இப்போராட்டத்திற்கு அனைத்து மக்களும் ஆதரவளிக்க வேண்டும் என ஸ்ரீ நாராயண குரு தன் கைப்பட ஒரு கடிதமெழுதி அதை மக்களிடையே பரப்பிடச் செய்தார். ஸ்ரீ நாராயண குரு செய்தி கேரளா முழுவதும் சென்றது. கேரளா முழுவதும் போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டத்திற்காக, ஸ்ரீ நாராயண குருவின் சன்னியாசி சீடர்கள் அனைவரும்

http://Creativecommons.org//license/by/4.0/.

வீடுவீடாகச் சென்று உண்டியல் ஏந்திப் பணம் சேகரித்துப் போராட்டக்காரர்களுக்கு அனுப்பினர். அத்துடன் ஒவ்வொரு வீட்டினரும் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு வீட்டிலும் சமைக்கும் முன்பு பெண்கள் ஒரு கைப்பிடி அளவு அரிசியைத் தனியாக எடுத்து வைத்து விடுவார்கள். இப்படி சேகரிக்கப்படும் அரிசி போராட்டக்காரர்களின் உணவுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இந்த அறவழிப் போராட்டம் தொடர்ந்து நடந்தது. முக்கியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதும் சமாதானம் ஏற்பட வாய்ப்பு கிட்டுமா என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பணம் படைத்தவர்கள் காவல்துறையினர் உதவியுடன் சில வன்முறையாளர்களைக் கொண்டு போராட்டக்காரர்களை அடித்துத் துன்புறுத்தினர். இருப்பினும் போராட்டக்காரர்கள் தொடர்ந்து அறவழியிலேயே போராடிக் கொண்டிருந்தனர். படிப்படியாகத் தலைவரக்ள் கைது செய்யப்பட்டவுடன் போராட்டம் தொய்வடையும் நிலையில் ,ஈ.வெ.ரா. பெரியாருக்கு ஜார்ஜ் ஜோசப், கேசவமேனன் ஆகிய இருவரும் இணைந்து ஒரு கடிதம் எழுதினர். "நீங்கள் இங்கு வந்துதான் இந்தப் போராட்டத்திற்கு உயிர் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் மன்னிப்புக் கேட்பதைத் தவிர வேறு வழியில்லை. அவ்வாறு செய்தால் ஒரு பெரிய காரியம் கெட்டுவிடுமே என்று கவலைப்படுகிறோம்" என்று அதில் குறிப்பிட்டிருந்தனர். இந்தக் கடிதத்தின் அடிப்படையில் பெரியார் வைக்கம் விரைந்தார். களத்தில் இறங்கி சத்தியாக்கிரகம் செய்யத் தொடங்கினார். பெரியார் சூறாவளி போல் சுற்றி வந்து சூடு பறக்கும் சொற்களால் மக்களைத் தீண்டாமைக் கொடுமைக்கெதிராகத் தட்டியெழுப்பினார். இப்போராட்டச் செய்திகள் அனைத்துப் பத்திரிகைகளிலும் முக்கியச் செய்தியாக வெளியானது. எனவே இந்தப் போராட்டம் குறித்த செய்தி இந்தியா முழுவதும் பரவியது. இதன் பிறகு காங்கிரசு இயக்கத் தலைவர்கள் கேரள மாநிலத்திற்குச் செல்லத் தொடங்கினர். இராஜகோபாலாச்சாரி, டாக்டர் வரதராஜுலு நாயுடு, அய்யாமுத்துக் கவுண்டர், சுவாமி சர்தானந்தி, எம். பெருமாள் நாயுடு ஆகியோர் கேரளாவிற்குச் சென்றனர். கேரள மாநிலத்திற்குச் சென்ற காங்கிரசு பேரியக்கத் தலைவர்களில் ஈ.வெ.ரா பெரியாரின் பேச்சு கேரள மக்களை அதிகமாகக் கவர்ந்தது. இதனால் அங்கிருந்த காவல்துறையினரால் ஈ.வே.ரா பெரியார் 1924-ஆம் ஆண்டு ஏப்ரல் 22 அன்று கைது செய்யப்பட்டார். அப்போதைய அரசர் உத்தரவின்படி ஒரு மாத கால சிறைத்தண்டனை அளிக்கப்பட்டது. இதன்படி அவர் அருவிக்குத்தி சிறையில் அடைக்கப்பட்டார். பெரியார் சிறையிலடைக்கப்பட்ட பின்னர் பெரியாரின் மனைவி நாகம்மாள், சகோதரி கண்ணம்மாள் ஆகியோர் வைக்கம் விரைந்து சென்று சத்தியாக்கிரகத்தில் குதித்தனர். தண்டனைக்காலம் முடிவடைந்த பின்பு ஈ.வே.ரா பெரியார் விடுதலையானார். விடுதலையான ஒரு வாரத்தில் மறுபடியும் கைது செய்யப்பட்டார். அதன் பிறகு ஆறு மாத காலம் தண்டனை அளிக்கப்பட்டு திருவாங்கூர் மத்திய சிறையில் கடினக் காவல் கைதியாகவும் வைக்கப்பட்டார். இந்த தண்டனைக் காலத்தில் நான்கு மாத காலத்தில் அரசர் இறந்து போனார். இதனால் அரச விளம்பரத்தின் அடிப்படையில் ஈ.வே.ரா பெரியார் விடுவிக்கப்பட்டார். விடுதலையான ஈ.வே.ரா பெரியார் பின்னர் அங்கிருந்து ஈரோட்டிற்குத் திரும்பி விட்டார். காங்கிரசு பேரியக்கத்தின் இந்தியத்

http://Creativecommons.org//license/by/4.0/.

தலைவர்கள் பலர் கலந்து கொண்டும் பிரச்சனை முடிவடையாததால் போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. காங்கிரசு பேரியக்கத்திற்கு இந்த அறவழிப் போராட்டம் ஒரு சவாலான போராட்டமாகவே நடந்து கொண்டிருந்தது. இந்தப் போராட்டம் ஓராண்டுக்கும் மேலாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதனால் மகாத்மா காந்தி 1925 ஆம் ஆண்டு மார்ச் 9 அன்று வைக்கம் போராட்டத்திற்குச் சென்றார். அதன் பின்னரும் இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. பல்வேறு தலைவர்களின் போராட்டங்களுக்கும், பேச்சுகளுக்கும் பின்னால் 1925 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் போராட்டம் முடிவுக்கு வந்தது. அகிம்சை எனும் அறவழியில் போராடி வெற்றி கண்ட போராட்டம் இதுதான்.

மீனாட்சியம்மன் கோயில் நுழைவுப்போராட்டம்:

1936-இல் ஆலய பிரவேச சட்டம் கொண்டு வரப்பட்டாலும் மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குள் சென்று ஹரிஜன மக்கள் வழிபாடு செய்ய எதிர்ப்புகள் அதிக அளவில் இருந்தது. சுதந்திர போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு வந்தாலும் மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குள் நடைபெறும் சமூக தீண்டாமைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்கிற எண்ணம் இருந்தால் ஹரிஜன மக்களுடன் ஆலய பிரவேசம் நடத்த ஏதுவான தருணத்தை பார்த்து கொண்டிருந்தார் அ.வைத்தியநாத அய்யர். பிராமணர் குடும்பத்தில் பிறந்து விட்டு ஹரிஜன மக்களுக்கு ஆதரவாக செயல்பட கூடாது எனவும் தொடர்ந்து செயல்பட்டால் வைத்தியநாத அய்யரை குடும்பத்துடன் எரித்து கொலை செய்வோம் என பல மிரட்டல்கள் வந்தன. இந்நிலையில் இராஜாஜி பச்சை கொடி காட்ட முத்துராமலிங்க தேவர் பாதுகாப்புடன் 1939-ம் ஆண்டு ஜூலை 8-ஆம் நாள் இரவு 8 மணியளவில் கக்கன் (முன்னாள் அமைச்சர்), முருகானந்தம், சின்னையா, பூவலிங்கம், சண்முகம் உள்ளிட்ட 6 பேரை அழைத்து சென்று மதுரை மீனாட்சியம்மன் கோயில் கருவறையில் மீனாட்சியம்மனை வழிபட செய்தார் வைத்தியநாத அய்யர். முன்னதாக, கோயிலுக்குள் வழிபாடு நடத்த வந்தவர்களை கோயில் அறங்காவலரான எஸ்.ஆர்.நாயுடு வரவேற்று அழைத்து சென்றார். பின்னர் கோயிலுக்கு வெளியே கூடியிருத்த கூட்டத்தினர் மத்தியில் ஆலய பிரவேசம் நடைபெற்றதாக அறிவித்தார். இந்த தகவல் மதுரை முழுக்க காட்டு தீயாக பரவ மீனாட்சியம்மன் கோயிலில் பூஜை செய்து வந்த பிராமணர்கள், ஹரிஜன மக்கள் கோயிலில் வழிபாடு செய்ததால் மீனாட்சி கோயிலில் இருந்து வெளியேறி தலைமை குருக்கள் நடராஜய்யர் வீட்டில் குடியேறி விட்டனர். அத்தோடு மட்டுமில்லாமல் நடராஜய்யர் வீட்டில் மீனாட்சியம்மன் சிலையை வைத்து வழிபாடு செய்ய ஆரம்பித்ததோடு மீனாட்சியம்மன் கோயில் கருவறையை பூட்டி சாவியையும் எடுத்துச் சென்றனர். தகவல் தெரிந்து கோயில் அறங்காவலரான எஸ்.ஆர்.நாயுடு கருவறை பூட்டை உடைத்து பக்தர்கள் வழிபாட்டுக்குக் கருவறையைத் திறந்து விட்டார். தாழ்த்தப்பட்ட மக்களுடன் ஆலய பிரவேசம் என்பது பல போராட்டங்கள், எதிர்ப்புகளுக்கு இடையே நடைபெற்றது. ஆலய பிரவேசத்தை நடத்திய வைத்தியநாத அய்யருக்கு முத்துராமலிங்கத்

http://Creativecommons.org//license/by/4.0/.

தேவர், என்.எம்.ஆர்.சுப்புராமன், எஸ்.ஆர்.நாயுடு ஆகியோர்களின் ஆதரவு இருந்தது. வெற்றிகரமாக ஆலய பிரவேசம் நடத்திய வைத்தியநாத அய்யருக்கு காந்தியடிகள் கடிதம் எழுதி பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

கமுதி கோயில் நுழைவுப் போராட்டம்:

ராமநாதபுரம் மாவட்டத்தில் சிறு நகர மான கமுதியில்1855 ஆம் ஆண்டு அங்குள்ள அதே ஊரில் அமைந்திருந்த நாடார்கள் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலில் வழிபட உரிமை கோரினார்கள். அவர்களது கோரிக்கை மறுக்கப்பட்டது. 1897-ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் நாள் அங்குள்ள கோயில் ஊழியர்களின் எதிர்ப்பை மீறி மேற்கு வாசல் வழியாக நுழைந்து வழி பட்டனர் .இதற்காக ஒரு குற்ற வியல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, குற்றம் நிரூபிக்கப் படவில்லை. அதைத் தொடர்ந்து கோயில் பரம்பரை அறங்காவலர் ஆன பாஸ்கர சேதுபதி மதுரை உரிமை நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தார். நாடார்கள் ஆலயத்தி னுள் நுழைந்து விட்டதற்காக கோயில் தீட்டுப் பட்டு விட்டதாகவும் அதற்கு பார்ப்பன புரோ கிதர்களை வைத்து தீட்டுக் கழிக்கும் சடங்கின் செலவிற்காக ரூபாய் 2500 வழங்க வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கில் இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு 20.7.1899 அன்று தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பில் கமுதி மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆல யத்தில் எந்த பகுதியிலும் நுழைய நாடார்க ளுக்கு உரிமை கிடையாது என்றும், ஆல யத்தை தூய்மைபடுத்தி, தீட்டு கழிக்க ரூபாய் 500 வழங்கும்படி தீர்ப்பளித்தது. மதுரை கிழக்கு சார்பு நீதிமன்றத்தின் பாஸ்கர சேதுபதி எதிர் இருளப்ப நாடார் வழக்கு தமிழக வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உயர்நீதிமன்ற மேல் முறையீடு நாடார்களுக்கு எதிராக முடிந்ததுமே நாடார்களின் கோயில் நுழைவுக்கு எதிராகவே தீர்ப்பளித்து நாடார்களின் கோயில் நுழைவு முயற்சி கனவாகவே, நாடார் நுழைந்த மேற்கு வாசல் முற்றிலும் அழிக்கப்பட்டு சுவர் எழுப்பப்பட்டது அந்த சுவடுகளை இன்றும் காணலாம்.

கோயில் நுழைவுப் போராட்டங்களில் திராவிடத்தின் பங்கு:

முதன் முதலாகக் கோயில் நுழைவுப் போராட்டத்தை நடத்தியது சுயமரியாதை இயக்கம் தான்.

- தந்தை பெரியார் 1922-ஆம் ஆண்டு திருப்பூர் காங்கிரசு மாநாட்டில் கோவில் நுழைவு - பொது உரிமைகள் வேண்டுமெனத் தீர்மானம் கொண்டுவந்தவர்.
- சுயமரியாதை இயக்கத்தின் சார்பில் 18. 01. 1926 இல்கோவில் நுழைவுக்கென்று சுசீந்திரம் கோவிலில் தான் கிளர்ச்சி துவக்கப்பட்டது.
- முதல் கோவில் நுழைவுப் போராட்டத்தைத்தொடங்கியவர் 'திராவிடன்' இதழின் ஆசிரியர் ஜே. எஸ். கண்ணப்பர். இவர் 07. 02. 1927இல் திருவண்ணாமலை கோவிலில் ஆதிதிராவிடர்களை அழைத்துச் சென்றார். அவரை கோவிலுக்குள் வைத்து பூட்டினர்.

http://Creativecommons.org//license/by/4.0/.

அவர் மீதுவழக்குப் பதிவு செய்யப்பட்டு ஓராண்டுக்கும் மேலாக வழக்கு நடைபெற்றது. வழக்கு விசாரணையில் கண்ணப்பருக்குச் சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டது.

- 1927 ஆம் ஆண்டில் சுயமரியாதை இயக்கமுன்னணித் தலைவர்களில் ஒருவரான ஜே. என். இராமநாதன் தாழ்த்தப்பட்டோரை அழைத்துக்கொண்டு திருச்சி தாயுமானவர். மலைக்கு படியேறிச் சென்றபோது அவர்கள் குண்டர்களால் தடியால் அடித்து பாறைப்படிகளில் உருட்டிவிடப்பட்டார்கள்.

- அன்றைய சுயமரியாதை இயக்க செயற்பாட்டாளர் கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில் 1927-இல் சுமார் 1000 பேர் அனைத்துச் சாதியினருடன் மயிலாடுதுறை மயூரநாதசுவாமி கோவிலில் நுழையச் சென்றனர். நுழை வாயிலையும்கருவறையையும் கோவில் நிர்வாகிகள் பூட்டிவிட்ட போதிலும் பக்கவாட்டுக் கதவுகள்சென்று 'மணிக்கதவம் தாழ் திறவாய்'என்ற திருநாவுக்கரசர் பாடலைப் பாடினார்.

- 25. 06. 1928 இல் திருச்சி மலைக்கோயிலிலும்12. 08. 1928இல் திருவானைக் கோவிலிலும் அத்தகைய முயற்சிகள் நடத்தப்பட்டன.

- 1929 மார்ச் 12-ந் தேதி "ஈரோடு கோட்டை ஈஸ்வரன் கோவிலுக்குள் ஆதி திராவிடர் தோழர்களையும் அனுமதிக்க வேண்டும்" என்று தேவஸ்தானகமிட்டி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வர தேவஸ்தான கமிட்டித் தலைவரான தந்தை பெரியார் முன்னின்றார். அதற்கு அடுத்த நாளேபெரியார் கோவை சென்று விடுகிறார். தேவஸ்தானக் கமிட்டியின் தீர்மானத்தை குத்தூசிகுருசாமி நடைமுறைப்படுத்தத் துணிந்தார்.

- பெரியாரின் துணைவியார் நாகம்மையாரின் துணையோடு குத்தூசி குருசாமி, பொன்னம்பலனார் மற்றும் ஈரோடு கச்சேரி வீதி ஈஸ்வரன், மஞ்சமேட்டான் மகன் பசுபதி, கிருஷ்ணம் பாளையம் கருப்பன் ஆகிய 3 தாழ்த்தப்பட்ட தோழர்களை நெற்றியில் திருநீறு பூசச் செய்து முக்கிய தெருக்களின் வழியாக அழைத்துக் கொண்டுச் சென்று தேங்காய், பழம், பூ ஆகியவை அடங்கிய தட்டுடன் கோவிலுக்குள் நுழைந்தார்கள். குத்தூசிகுருசாமியும் தோழர்களும் கோவிலுக்குள் இருக்கும் போதே வெளிக்கதவை இழுத்து மூடிவிட்டனர். இரண்டு நாள்கள் பூட்டிய கதவைத் திறக்கமறுத்து விட்டனர். இரண்டு நாள்களுக்குப் பின் பெரியார் வந்த பிறகே கோவில் கதவு திறக்கப்பட்டது. குத்தூசி குருசாமி மற்றும் தோழர்கள் மீது வழக்குப் போடப்பட்டது.

முடிவுரை:

பெரியாரும் அவர்தம் திராவிடச் சிந்தனைகளும் கடவுளே இல்லை என்கின்றது. பிறகு எப்படி ஆலய நுழைவுப் போராட்டம் நடத்துவர் என்ற பொழுது,. ஆலயத்திற்குள் பிறப்பைக் காரணம் காட்டி நுழையவிடாமல் செய்தவர்களைப் புறம்தள்ளி எளிய

http://Creativecommons.org//license/by/4.0/.

உழைக்கும் மக்களுக்கான சமூக சமதர்ம நீதியை நிலை பெறச் செய்ய வேண்டும் என்பதே இதன் மையமாகும்.

துணை நூற்கள்:

1. ஆசிரியர் கி.வீரமணி, கோயில் நுழைவுப் போராட்டம் செய்தவர் யார்? எதிர்த்தவர் யார்?, சுயமரியாதை பிரச்சார வெளியீடு, சென்னை.
2. வலாசா வல்லவன், கோயில் நுழைவுப் போராட்டங்களில் திராவிடர் இயக்கங்களின் பங்களிப்பு, அருள் பாரதி பதிப்பகம், சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

29. மொழி சார்ந்த கலகமும் திராவிடக் குரல்களும்

முனைவர் M.ஜீனதாஸ்,
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை,
வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி), விருதுநகர்.
DOI 10.5281/zenodo.13762105.

Abstract

It was Mundasuk Kavinjan Bharatiya who first instilled language consciousness and led the language-related revolt by saying, "We will find something as sweet as Tamil in other languages". It is no exaggeration to say that no matter how many languages there are, the best language is Tamil. In 1965, the struggle against the imposition of Hindi in the Tamil land to save the motherland, the feeling of the young fighters who sacrificed their lives in the struggle field carrying a gun on their chest for the language, is not only in the heart of the Tamil speaking hearts, but also in the blood.

முன்னுரை:

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என முதன் முதலில் மொழி உணர்வினை ஊட்டி மொழி சார்ந்த கலகக்குரலை முன்னெடுத்தவன் முண்டாசுக் கவிஞன் பாரதியாரே. எத்தனை மொழிகள் இருந்தாலும் மிகச்சிறந்த மொழி தமிழ்மொழியே என தனது காந்தக்குரலால் அனைவரையும் திரும்ப வைத்தவன் என்றால் மிகையாகாது.

மொழி காக்க எழுந்த குரல்கள்:

1965 ஆம் ஆண்டு தமிழ் மண்ணில், தாய்த்தமிழைக் காப்பாதற்காக இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்கள் மொழிக்காக துப்பாக்கிக் குண்டினை மார்பிலே சுமந்து, போராட்டக்களத்திலே உயிரைத் தியாகம் செய்த இளம் போராளிகளின் உணர்வு இன்றுவரை தமிழ் பேசும் நெஞ்சங்களின் இதயத்தில் மட்டுமல்ல, இரத்தத்திலும் உணர்வுப்éர்வமாய் கலந்துள்ளது.

மொழி உணர்வு:

உலகில் தாய்மொழியினை மறந்த இனங்கள் வாழ்ந்ததாக வரலாற்றுச் செய்திகள் இல்லை. அவரவர் தம்தம் தாய்மொழியில் பேசிக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

தமிழர் நாம் மொழிகளின் தாய்மொழியில் பேசிக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருக்கிறோம். தமிழ் வழியில் படிப்பது அறிவை வளர்க்குமா? ஆங்கில வழியில் படிப்பது அறிவை வளர்க்குமா? என்ற ஒரு கேள்வி நம் மனதில் அடிக்கடி வந்து போகின்றது.

தாய்மொழியில் சிந்திப்பது, செயல்படுத்துவது என்ற நிலையில் காணும் பொழுது தமிழ் சிறப்பான மொழி மட்டுமல்லாது, அறிவினையும் வளர்க்கக்கூடியது. ஆங்கிலம் அறிவல்ல. ஆங்கிலம் என்பது ஒருமொழி.

http://Creativecommons.org//license/by/4.0/.

கலகக்குரல்கள் தோன்றுமிடம்:

பள்ளியில் சேர்க்கும் இளம் மொட்டுகள் என்று அழைக்கப்படுகின்ற நமது குழந்தைகள் தங்களது அழகிய மழலைச் சொல்லில் தமக்கு பிடித்தமான, தோன்றுகின்ற வார்த்தைகளை குழந்தைகளுடன் பகிர்ந்து கொள்வர். ஆனால், பாடசாலைகளில் சொல்லிக் கொடுக்கின்ற வார்த்தைகள், சப்தம் செய்யாமல் இருங்கள் அமைதியாக இருங்கள் (முநநி ஞரவைந)இ பேசமால் இருங்கள் .

இதன் காரணமாக ஆசை, ஆசையாய் பேச வந்த அழகிய மழலைகள், பேச முடியாத நிலை ஏற்பட்டு முதல் மொழி கலகக்குரல்கள் ஆரம்பிக்க இந்த இடம் காரணமா அமைந்து விடுகிறது.

பிறமொழிகளினால் ஏற்பட்ட கலகக்குரல்கள்:

தமிழ்மொழியோடு சமஸ்கிருதம் கலந்து, கலந்து பேசி ஏற்பட்ட மொழிப்பிரிவில் தெலுங்கு, மலையாளம், துளு என உருவாகிவிட்டது. உதாரணமாக ஆங்கில மொழியில் இரண்டு சொற்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வோம்.

- LOVE - இதற்கு காதல் என அர்த்தம்.

தமிழில் இச்சொல்லிற்கு அன்பு, பாசம், நேசம், பரிவு என பல அர்த்தங்கள் கூறலாம்.

- RICE அரிசியினை வேகவைக்கும் முன்பும், வேகவைத்த பின்பும் RICE என்றே குறிப்பிடுகின்றனர்.

தமிழில் நெல், அரிசி, சோறு என ஒவ்வொரு பதத்திற்கும் ஒவ்வொன்றாகக் குறிப்பிடப்படுகிறது.

இவையே பிறமொழிக்கும், தமிழ்மொழிக்கும் உள்ள வேறுபாடுகள். சில உதாரணங்கள் மட்டுமே இவ்விடத்தில் கூறப்பட்டுள்ளது.

மொழியோடு சேர்ந்த பெயர்களும், பிறமொழிக்கலப்பும்:

மொழியினை உலகிற்கு அடையாளப்படுத்திய கூட்டம் தமிழர்கள். தமிழ்மொழி மட்டும் அல்ல. இரத்தத்தோடு கலந்துள்ள மொழியுணர்வானது உயிர் மற்றும் அடையாளம்.

இந்தியாவில் மலையாளச்செல்வன், தெலுங்கு குமரன், கன்னட அழகன் என எங்கும் பெயர் இல்லை. ஆனால், தமிழன் மட்டுமே மொழியோடு சேர்ந்து தன் பெயரையும் அழகுபடுத்திக் காண்கின்றான். தமிழ்ச்செல்வன், தமிழ்குமரன், தமிழழகன், தமிழமுது என மொழியோடு இயைந்து வாழ்கிறான்.

மொழிக் குரல்கள்:

இன்றைய நிலையில், தமிழில் பேசினால் வேற்றுகிரகம் போல் பார்க்கக்கூடிய நிலை மட்டுமன்றி, தாய்மொழியினைப் பேசுவதற்கு தயக்கம் காட்டுகின்றனர். கூச்சப்படுகின்றனர்.

http://Creativecommons.org//license/by/4.0/.

மொழி உணர்வுக்கு சிறந்த உதாரணமாக, அர்ஜென்டினா நாட்டைச்சேர்ந்த உலக கால்பந்து வீரர் மரடோனா ஒரு முறை கேரளாவிற்கு வருகை புரிந்தார். அவருக்கு ஆங்கிலம் தெரியாது. ஸ்பேனிக்ஷ்; மொழி மட்டுமே தெரியும். பத்திரிக்கை நிருபர் ஒருவர், அவரை பேட்டி எடுக்க முயல்கின்றார். மரடோனா, சேகுவேராவின் படத்தினை தனது கையில் பச்சை குத்தி உள்ளார். நிருபர், சேகுவேராவின் படத்தினைப்போட்ட மேலாடை (வு ளுாசைவ) அணிந்துள்ளார். அதன் காரணமாகவே, பேட்டி அளிக்க நிருபரை அழைக்கின்றார். நிருபர், உங்களுக்கு ஆங்கிலம் தெரியவில்லையே, அவமானமாக இல்லையா? என வினவுகிறார். உடனே மரடோனா சிரிக்கின்றார். என் தாய்மொழி எனக்குத் தெரியவில்லை என்றால் தான் நான் அவமானப்படவேண்டும், வேறொரு மொழி தெரியவில்லை என்பதற்காக அவமானப்படத் தேவையில்லை எனக்கூறுகிறார். இதுபோன்ற நிகழ்வுகள் மொழியின் கலக்குரல்களை நீங்கவும் வழிவகுக்கும்.

மொழி அழிவதற்கான காரணங்கள்:

மொழி பன்மைத்துவம், தாய்மொழியை முதன்மையாக் கொண்ட பன்மொழிக் கற்றல் இவை நீடித்த வளர்ச்சிக்கு முக்கியமான ஒன்றாகும். மொழி வேறாக இருந்தாலும், எழுத்துக்களில் பெரிய வித்தியாசம் காணப்படவில்லை என்றாலும் ஐரோப்பிய கண்டத்தில் இரு மொழிகளிலும் பேசியும், எழுதியும் வருகின்றனர்.

ஒரே மொழியினைக் கற்க வேண்டும் என்ற நிலை இங்கு ஏற்படுமாயின் எழுநூற்று எண்பது மொழிகளில் இருநூற்று ஐம்பது மொழிகள் 50 ஆண்டுகளில் அழிந்து விடும் என மொழியாளர்கள் அச்சப்படுதலும், மொழி கலகக் குரலை ஓங்கி ஒலிப்பதாக உள்ளது.

மொழிக்காக எழுப்பப்படும் உரிமை சார்ந்த குரல்கள்:

இந்திய அரசியலமைப்பின் படி ஆட்சி மொழிக்காக ஒலிக்கப்படும் குரல்களில் பட்டியல் மொழிகள் மட்டுமே இடம் பிடித்துள்ளன. அவற்றில் 22 மொழிகள் உள்ளன. இதில் இடம் பெறாத 40 மொழிகள் பட்டியல் மொழிகளில் சேர்க்கப்படவேண்டும் என குரல்கள் அவ்வப்போது உயர்த்தப்படுகின்றன. இது மட்டுமின்றி எண்ணிக்கை குறைந்த மக்களால் பேசப்படும் மொழிகளின் பன்டைத்துவம், பாதுகாப்பு, கலாச்சாரம் போன்ற பல்வேறு பிரச்சனைகளுடன், தாய்மொழியில் கல்வி கற்றலும் முதன்மைப் பிரச்சனையாக காணப்படுகின்றது. பலமொழிகள் மடிந்துகொண்டு இருப்பதும் மேற்கூறிய காரணங்களால் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

திணிக்கப்படும் மொழிக்கல்வி:

இந்திய தேசம்; மொழிவாரி மாநிலங்களாக உள்ளது. இதில் வலுக்கட்டாயமாக பிராந்திய மொழிக் கல்வியானது திணிக்கப்படுகின்றது. ஒரே சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் மீது அண்டை மாநிலத்திலுள்ள வேறு மொழிகளைக் கற்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகின்றனர். குறிப்பாக, வட மாநிலங்களை எடுத்துக் கொண்டால் பீஹார் மாநிலத்தைச் சார்ந்தவர்கள்

http://Creativecommons.org//license/by/4.0/.

இந்தியையும், மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்கள் வங்க மொழியையும் படிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம்:

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் (Anti-Hindi imposition agitation) என்பது இந்தி மொழியை, இந்தியாவின் ஒரே அலுவல் மொழியாக்கும் மற்றும் இந்தி மொழி பேசாத மாநிலங்களின் கல்விப் பாடத்திட்டங்களில் இந்தியைக் கட்டாய பாடமாக்கும் இந்திய அரசின் முயற்சிக்கு எதிராகத் தமிழக மக்களால், பெரும்பாலும் சனநாயக, அற வழிகளில் நடத்தப்பட்ட போராட்டமாகும். 1937ஆம் ஆண்டு முதல் முறையாக இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. அப்போது சென்னை மாகாணத்தில் முதல் முறையாக வெற்றி பெற்ற காங்கிரசுக் கட்சியின் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி தலைமையில் அமைந்த அரசு, பள்ளிகளில் இந்தி படிப்பதைக் கட்டாயமாக்கியது. அதை எதிர்த்து, எதிர்க்கட்சியாக விளங்கிய நீதிக்கட்சியும் பெரியார் ஈ. வெ. இராமசாமியும் மூன்று ஆண்டுகள் உண்ணாநோன்பு, மாநாடுகள், பேரணிகள் மற்றும் மறியல் போராட்டங்கள் நடத்தினர். அரசின் காவல் நடவடிக்கைகளில் இரண்டு போராட்டக்காரர்கள் இறந்தனர்; பெண்கள், சிறுவர்கள் உட்பட 1,198 பேர் கைது செய்யப்பட்டனர். காங்கிரசு அரசு 1939ஆம் ஆண்டு பதவி விலகியதை ஒட்டி சென்னை மாகாண பிரித்தானிய ஆளுநர் 'எர்ஸ்கின் பிரபு' பிப்ரவரி 1940-ஆம் ஆண்டில் இந்தக் கட்டாய இந்திக் கல்வியை விலக்கினார். பிரித்தானியாவிலிருந்து இந்தியா விடுதலை பெற்ற பிறகு அரசியலமைப்பு சட்டமன்றத்தில் புதிய இந்தியக் குடியரசில் நிலவ வேண்டிய அலுவல் மொழி குறித்து நீண்ட விவாதம் நடந்தது. பற்பல உரையாடல்களுக்குப் பின்னர் தேவநாகரி எழுத்துருவில் அமைந்த இந்தி அரசுப்பணி மொழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. மேலும் அடுத்த 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலம் இணை அலுவல் மொழியாக விளங்கும் என்றும் அதன் பின்னர் இந்தி மொழி மட்டுமே அரசுப்பணிகளில் பயன்படுத்தப்படும் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. புதிய இந்திய அரசியலமைப்பு சனவரி 26, 1950 அன்று நடப்பிற்கு வந்தது. ஆகவே அரசியலமைப்பில் ஏற்றுக் கொண்டபடி 1965ஆம் ஆண்டிலிருந்து இந்தி மட்டுமே அரசுப் பணிமொழியாக விளங்க அரசு மேற்கோண்ட முயற்சிகள் இந்தி பேசாத மாநிலங்களில் எதிர்ப்பலைகளை உண்டாக்கின. தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த எதிர்ப்பில் முன்னணியில் இருந்தது. இந்தக் கவலைகளை நீக்கும் விதமாக அப்போதைய இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு 1963ஆம் ஆண்டில் கொண்டு வந்த அரசுப்பணிமொழி சட்டத்தில் 1965ஆம் ஆண்டிற்குப் பிறகும் ஆங்கிலம் அரசுமொழியாக விளங்க வழி செய்தார். ஆயினும் அச்சட்டத்தின் உள்ளடக்கம் தி.மு.க விற்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. அவரது வாய்மொழி வாக்குறுதிகள் பிந்தைய அரசுகளால் ஏற்கப்படாமல் போகலாம் என்ற அச்சத்தினை வெளியிட்டனர். 26 சனவரி,1965 நாள் நெருங்கிவந்த காலத்தில் தமிழகத்தில் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் வலுக்கத் துவங்கியது. அவ்வாண்டு குடியரசு நாளைக் கருப்பு தினமாகக் கொண்டாட தி. மு. க அழைப்பு

http://Creativecommons.org//license/by/4.0/.

விடுத்திருந்தது. போராட்டத்தில் கல்லூரி மாணவர்கள் பெரிதும் ஈடுபட்டனர். மதுரையில் 25 சனவரியன்று அவர்களுக்கும் காங்கிரசு கட்சியினர் சிலருக்கும் இடையே எழுந்த கைகலப்பு பெரும் கலவரமாக வெடித்தது. மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும் பரவிய இக்கலவரம் காவலர்களால் அடக்க முடியாத அளவில் அடுத்த இரண்டு மாதங்கள் தொடர்ந்து நடந்தது. பரந்த அளவில் வன்முறை, தீவைப்பு எனப் போராட்டக்காரர்களும் தடியடி, துப்பாக்கிச்சூடு என மாநிலக் காவல் துறையினரும் மோதினர்.

இக்கலவரங்களில் இரு காவல்துறையினர் உட்பட 70 பேர்கள் (அதிகாரப்பூர்வமாக) இறந்தனர். நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர அப்போதைய இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி, இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரை ஆங்கிலமும் அரசுப்பணிகளில் இணைமொழியாக இருக்கும் என்ற உறுதிமொழி அளித்தார். இந்த உறுதிமொழியை அடுத்து மாணவர் போராட்டம் ஓய்ந்தது. 1965-ஆம் ஆண்டு இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் மாநில அரசுகளின் அரசியல் மாற்றங்களுக்கு வித்திட்டது. 1967-ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலிலும் சட்டப்பேரவைத் தேர்தலிலும் தி.மு.க பெரும் வெற்றி கண்டது. இந்தத் தோல்விக்குப் பிறகு மாநிலத்தில் மீண்டும் காங்கிரசால் ஆட்சியைக் கைப்பற்ற இயலவில்லை. 1967-ஆம் ஆண்டு அமைந்த இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசு, அரசுப் பணிமொழிச் சட்டத்தில் என்றென்றும் ஆங்கிலம், இந்தி ஆகிய இரு மொழிகளும் அரசுமொழிகளாக விளங்கும் வகையில் திருத்தம் கொண்டுவந்தது.

தாய்மொழி வழிக்கல்வி ஓர் அடித்தளம்:

கல்விக்கு வலுவான ஒரு அடித்தளம் தாய்மொழி வழிக்கற்றலாகும். ஆரம்பநிலைக் கல்வியை தாய்மொழி வழியாகவே அளித்தல் சிறந்ததாகும். அத்துடன், கல்வியின் தரத்தை உயர்த்தவேண்டுமென்றால் ஆசிரியருக்கும், மாணவர்களுக்கும் இடையேயான உரையாடல் தாய்மொழிக்கல்வி வாயிலாகவே இருத்தல் வேண்டும். இவ்வாறாக, தாய்மொழி வழிக்கல்வி ஓர் அடித்தளமாக அமையுமானால் மொழி சார்ந்த கலகக் குரல்கள் ஏற்படுவதும் தடுக்கப்படும்.

முடிவுரை:

இன்றைய நவநாகரீக காலத்தில் மொழிக்கான கலகக் குரல்கள் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. மாற்றம் என்பது உன்னிலிருந்து தொடங்கட்டும் என்றார் தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்கள். உலகத்தினை நம் பக்கம் திருப்ப வேண்டுமெனில், தாய்மொழிக் கல்வியினை முன்னெடுப்பதுடன், பொறியியல், மருத்துவம், வேளாண்மை மற்றும் பிறசார்ந்த துறைகளிலும் தமிழுக்கு முதன்மை இடம் அளிப்போமேயானால் மொழி என்றும் அழியாது என்பது திண்ணம். உலகத்தின் முதல்மொழி “தமிழ் மொழியே” என பெருமை கொள்வோம்.

இந்தி திணிப்புக்கு எதிரான குரல்கள் தமிழகத்தின் அரசியல் மற்றும் பொது வெளிகளில் மீண்டும் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. அதற்குக் காரணம் இந்தியாவின் புதிய தேசியக்

http://Creativecommons.org//license/by/4.0/.

கல்விக்கொள்கையை அமைக்க உருவாக்கப்பட்ட கஸ்தூரிரங்கன் குழுவின் வரைவு அறிக்கையில் நடுநிலைப் பள்ளிவரை இந்தி, ஆங்கிலம், தொடர்புடைய மாநிலத்தின் மொழி ஆகியவற்றை உள்ளடக்கிய மும்மொழிகளையும் கொண்ட பாடத்திட்டம் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறைக்கு பரிந்துரை செய்துள்ளதுதான். இந்தியாவிலேயே இந்தி திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்களுக்குப் பெயர்போன மாநிலமான தமிழகத்தில் இந்தப் பரிந்துரைக்கும் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியது.

உதவிய நூல்கள்:

1. அ.இராமசாமி, இந்தி எதிர்ப்பு போராட்ட வரலாறு (பாகம்-1), நக்கீரன் பப்ளிகேஷன், சென்னை.
2. அ.இராமசாமி, 1965இல் மாணவர் கொட்டிய போர்முரசு, சாரதா பதிப்பகம், திருச்சி.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

30. தேவதாசி ஒழிப்பில் திராவிடத்தின் பங்கு

முனைவர் G.மாரிச்செல்வம்,
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை,
வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி(தன்னாட்சி), விருதுநகர்.
DOI 10.5281/zenodo.13762113.

Abstract:

The Devadasi system has been in practice since ancient times. Many people have worked hard to abolish Devadasi systems. Among them, those who belong to the self-respect movement have shown great intensity. Abolition of Devadasi is one of the principles of Self-respect movement. In 1926, Dr. Muthuletsumi, when he was a member of the Madras Provincial Assembly, pushed for the passage of this Act. But it was not accepted. The Devadasi Abolition Act was again introduced in 1929 by Dr. Muthuletsumi. As the debates about the Devadasi Abolition Act were taking place, a novel about the Devadasi Abolition System was published in 1936 by Ramamirtha Thammal. In this novel, Devadasi has made it very clear about the elimination method. There has been opposition to this from the dasis. After that Devadasis too. The purpose of this article is to record the events that led to this act together.

முன்னுரை:

பண்டைக் காலத்தில் இருந்தே தேவதாசி முறை வழக்கத்தில் இருந்து வந்துள்ளது. தேவதாசி முறைகளை ஒழிக்கப் பலரும் பாடுபட்டுள்ளனர். அவர்களுள் சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்தவர்கள் பெரிதும் தீவிரம் காட்டியுள்ளனர். சுயமரியாதை இயக்கக் கொள்கைகளில் தேவதாசி ஒழிப்பு முறையும் ஒன்றாகும். 1926-இல் டாக்டர் முத்துலெட்சுமி சென்னை மாகாண சட்டசபையில் அங்கம் வகித்தப்போது இச்சட்டத்தை நிறைவேற்ற வலியுறுத்தினார். ஆனால் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. டாக்டர் முத்துலெட்சுமி அவர்களால் 1929-ஆம் ஆண்டில் மீண்டும் தேவதாசி ஒழிப்பு முறைச்சட்டம் கொண்டு வரப்பட்டது. அவ்வாறு தேவதாசி ஒழிப்பு முறைச்சட்டம் குறித்த விவாதங்கள் நிகழ்ந்து வரும் தருவாயில் தேவதாசி ஒழிப்பு முறையைப் பற்றிய நாவல் 1936-ஆம் ஆண்டில் இராமாமிர்தத்தம்மாளின் நாவல் வெளிவந்தது. இந்நாவலில் தேவதாசி ஒழிப்பு முறையைப் பற்றி மிகத் தெளிவாகப் படைத்துள்ளார். இதற்குத் தாசிகளிடம் எதிர்ப்பும் கிளம்பியுள்ளது. அதன் பிறகு தேவதாசிகளும்; இணைந்தே இச்சட்டத்தை முன்னெடுத்துச் சென்ற நிகழ்வுகளைப் பதிவு செய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தேவதாசிப் பொருள் விளக்கம்:

தேவதாசி- தேவடியாள்; தேவ + அடியாள் = தேவடியாள். தேவதாசி, தேவடியாள், கலைப்பெண்டு, விலைமகள், பரத்தை முதலிய பெயர்கள் இவர்களுக்கு உண்டு. "தேவதாசி என்ற சொல்லுக்குத் தெய்வத்துக்கு அடிமை பூண்டவள் என்பது பொருள். தாசி என்பது வட சொல். இதற்கு அடியவர் என்பது தமிழில் பொருள். தமிழில் குறிப்பிடப் பெறும் 'தேவரடியார்' என்ற சொல் 'தேவதாசி' என்ற வடமொழி சொல்லுக்கு ஒப்பாகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

தேவரடியார் என்பது தேவருக்கு அதாவது இறைவனுக்கு அடியவராக இருந்து பணி செய்பவரைக் குறிக்கும்" 1 என்று தேவதாசி முறைக்கு விளக்கமளிக்கிறார் முருகேசன். மேலும் பொட்டுக் கட்டுதல் என்பதைப் பற்றி, "பொட்டுக் கட்டுவது என்பது ஒரு பெண் தேவதாசியாக மாற்றப்படுவதன் அடையாளச் சடங்காகும். பொட்டு என்பது திரு மாங்கல்யத்திற்கு இணையானதாகும். ஒரு பெண் தேவதாசி ஒருத்திக்குப் பிறந்து விட்டால் மட்டுமே அந்தத் தேவதாசி உரிமையை அவள் பெற்றுவிட முடியாது. முறைப்படி பொட்டுக்கட்டு மூலம் அவளைக் கடவுளுக்கு அர்ப்பணிப்பதன் மூலமே அவள் தேவதாசி ஆகமுடியும்."2 என்றும் விளக்கம் அளிக்கிறார்.

தேவதாசிக் குலத்தில் ஆண் அடிமை:

தேவதாசிக் குலத்தில் ஆண் பிறந்தால் அந்த ஆண் தாசிகளுக்கு அடிமையாகத்தான் இருக்க வேண்டும். அவர்கள் சுட்டும் பணிகளைச் செய்து முடிக்க வேண்டும் என்ற கடமை அவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்தது. இது குறித்துக் கருணாகரன் குறிப்பதாவது, "தாசி வீட்டில் ஆண் பிள்ளையாய்ப் பிறக்கும் கொடுமைகளையும் தனக்கு வேறு தொழில் செய்யத் தெரியாத நிர்க்கதியையும் ஆண்களுக்குச் சொத்துரிமை இல்லா கொடுமைகளையும், அவர்கள் இஷ்டப்படி நடக்காவிட்டால் சோறு போடாது வெளியில் விரட்டும் கொடுமைகளையும் நினைத்தான். மற்றசாதியில் பெண்ணாய்ப் பிறப்பதைவிட மண்ணாய்ப் பிறக்கலாமென்று சொல்வது போல், இந்தச் சாதியில் ஆண் மகனாய்ப் பிறப்பதை விட மண்ணாய்ப் பிறக்கலாமென்பதை உலகமறியவில்லை போலும் என்று நினைத்துருகி நின்றான்.3 என்றவாறு தேவதாசியர் குல ஆணின் அடிமை நிலையினைப் பதிவு செய்கிறார். ஆண்கள் இந்தச் சாதியில் சுயமாகச் சிந்திக்கும் திறன் இல்லாமல் முடக்கப்பட்டும் அவர்களின் எண்ணப்படி வாழ வழியில்லாமலும் இருக்கின்றனர். ஆனாலும் இவ்வினத்தில் ஆணுக்குப் பெண்குழந்தை பிறந்தால் தேவதாசித் தொழிலுக்கு அனுமதிப்பதில்லை எனும் வழக்குமுறையினையும் இந்நாவல் புலப்படுத்துகிறது.

தேவதாசி ஒழிப்புச் சட்டம்:

சென்னை தேவதாசிகள் ஒழிப்புச் சட்டம் என்பது தேவதாசி முறையை ஒழிப்பதற்காக இந்தியா விடுதலையை அடைந்ததை அடுத்து 9 அக்டோபர் 1947 அன்று நிறைவேற்றப்பட்ட சட்டம் ஆகும். இது தமிழ்நாடு தேவதாசிகள் ஒழிப்புச் சட்டம் என்றும் அறியப்படுகிறது. சென்னை மாகாணத்தில் நிறைவேற்றப்பட்ட இச்சட்டம், தேவதாசிகளுக்குத் திருமணம் செய்யும் உரிமையைத் தந்தது. இந்துக் கோயில்களுக்குப் பெண்களை நேர்ந்து விடுவதைச் சட்டத்துக்குப் புறம்பானதாக அறிவித்தது. தேவதாசி ஒழிப்புச் சட்ட முன்வரைவே பிறகு இச்சட்டமாக ஏற்பு பெற்றது. 1930 ஆம் ஆண்டு, முத்துலட்சுமி ரெட்டி இந்தச் சட்ட முன்வரைவை சென்னை சட்டமன்ற மேலவையில் முன்மொழிந்தார். சென்னை மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த தேவதாசிகள் இந்தச் சட்டமுன்வரைவை எதிர்த்தனர். தாங்கள் கற்றறிந்த மேட்டுக்குடி கலைஞர்களே

http://Creativecommons.org//license/by/4.0/.

அன்றி பால்வினைத் தொழிலாளர்கள் அல்ல என்று அவர்கள் கருதியதே இந்த எதிர்ப்புக்குக் காரணம் ஆகும். இச்சட்ட முன்வரைவு ஒப்புதல் பெறுவதில் பெரும் பங்கு வகித்த பெரியார், எதிர்ப்பைக் கருத்திற் கொண்டு, இதனைப் பொதுச் சட்ட முன்வரைவாக அல்லாமல் தனிச்சட்ட முன்வரைவாக நிறைவேற்றுமாறு வழிநடத்தினார். சென்னை தேவதாசிச் சட்டம் அதற்குப் பிறகு நிறைவேறிய அதே போன்ற சட்டங்களைப் போன்று கடுமையானது இல்லை. இச்சட்டம் தேவதாசிகளைக் குறித்தது மட்டுமே என்பதால், தென்னிந்தியாவில் பால்வினைத் தொழில் தொடர்ந்தது. குறிப்பாக, ஆகஸ்ட் 14, 1956 அன்று சென்னை தேவதாசி எதிர்ப்புச் சட்டம் நிறைவேறும் வரை, ஆந்திரப் பிரதேச கடலோரப் பகுதிகளில் தொடர்ந்தது. சென்னை தேவதாசி ஒழிப்புச் சட்டம் என்பது அன்றைய பிரித்தானிய இந்தியாவின் மாகாணங்களிலும் அதனை அடுத்து விடுதலை பெற்ற இந்தியாவின் மாநிலங்கள் மற்றும் ஆட்சிப் பகுதிகளிலும் பால்வினைத் தொழிலைச் சட்டத்துக்குப் புறம்பானது என்று அறிவித்து நிறைவேற்றப்பட்ட எண்ணற்ற சட்டங்களுள் ஒன்று ஆகும்.

- 1934 பாம்பே தேவதாசி பாதுகாப்புச் சட்டம்,
- 1957 தேவதாசி பாதுகாப்பு (நீட்சி) சட்டம்,
- 1988 ஆந்திரப் பிரதேச தேவதாசிச் சட்டம் ஆகியவை இச்சட்டங்களுள் சிலவாகும்.

சட்டத்திற்கான முன்னெடுப்புகள்:

1938-ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் நாள் பிற்பகலில் ஆயிரக்கணக்கான பெண்கள் கலந்துகொண்ட மாநாடு சென்னையில் நடத்தப்பட்டது. இதில் மீனாம் பாள் சிவராஜ் தமிழ்க்கொடியை உயர்த்தினார். மறை மலையடிகளின் மகள் நீலாம்பிகையின் தலைமை யில் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டாலும், அதில் வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய முக்கியத் தீர்மானம் ஒன்று உண்டு. "ஈ.வெ.ரா." என்ற பெயருடன் 'பெரியார்' என்ற சிறப்புப் பெயர் (சேர்த்து) வழங்கப்பட வேண்டும் என்பதே அத்தீர்மானமாகும். இன்று நாம் எல்லாம் ஈ.வெ.ரா.வை அன்போடு 'பெரியார்' என்று குறிப்பிடு கிறோம் என்றால், அது மூவலூர் இராமாமிர்தம் அம்மை யாரின் பெரும் முயற்சியால்தான் என்பதை யாரும் மறக்க முடியாது. 1917ஆம் ஆண்டு மயிலாடுதுறையில் இவர் தேவதாசி முறையை எதிர்த்துத் தமது முதல் போராட்டத்தைத் தொடங்கினார். ஊர் நடுவே நின்று எரிமலையாக வெடித்துப் பேசி உணர்வுப்பூர்வமாகப் பரப்புரை செய்தார். தேவதாசிப் பெண்களிடம் நேரில் சென்று தங்களது இழிவான வாழ்க்கை முறையிலிருந்து விடுபடும்படி கேட்டுக் கொண்டார். 1925ஆம் ஆண்டு மாயவரத்தில் நடந்த மாநாட்டில் தேவதாசிகள் பலரை அழைத்து அவர்கள் கடவுளுக் கென்று கட்டிய 'பொட்டு' களை அறுத்து எறிந்தார். அந்த மேடையிலேயே திருமணங்கள்

http://Creativecommons.org//license/by/4.0/.

நடத்தி வைத்து, பல பெண்களின் வாழ்க்கையில் விடிவெள்ளியாக விளங்கி னார். அவரது தேவதாசி முறை ஒழிப்புப் போராட்டத் தைப் பாராட்டி, காந்தியடிகள் ஒரு கடிதம் எழுதினார். அதில் "ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணே இவ்வாறு தமது சமூகத்தின் இழிநிலையை எதிர்த்துப் போராடத் தலைப்பட்டது என்னை மிகவும் கவர்ந்தது" எனக் குறிப்பிட்டுள்ளார். இராமாமிர்தம் அம்மையார் தாம் நடத்திய மேடை நாடகங்களில் தேவதாசி முறையை ஒழிப்பதற்கான வசனங்களை அமைத்து அரங்கேற்றினார். மூடநம்பிக் கையில் பற்றுடைய சில பிற்போக்குவாதிகள் மேடை ஏறி அம்மையாரின் கூந்தலை அரிந்து எடுத்துவிட்ட னர். ஆனால் இந்நிகழ்ச்சியால் சிறிதும் அஞ்சாத இவர் முன்பைவிட வேகமாக இப்பணியில் ஈடுபட்டு வந்தார். ஒருமுறை அம்மையார் அவர்கள் ஒமாம்புலியூரில் ஒரு இசை வேளாளப் பெண்மணி வீட்டில் சிலநாள் தங்க நேர்ந்தது. ஒருநாள் அந்த வீட்டுத் திண்ணையில் அமர்ந்து சிலரோடு பேசிக் கொண்டிருந்த போது, அந்த வீட்டு அம்மாள் இவருக்கு குடிக்க பால் கொடுத்தார். அதைக்குடிக்க வாயில் ஊற்றியவுடன் நெருப்பு போல சுட்டதால் உடனே அதைத் துப்பி விட்டார். எனினும் உடனே இவருக்கு முகமெல்லாம் வீங்கி, நாக்கு தொங்கி விட்டது. பாலைப் பரிசோதித்த இவரின் நண்பர்கள், பாலில் நஞ்சு கலக்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்தனர். நண்பர்கள் எவ்வளவோ சொல்லியும் அப்பெண்ணை அம்மையார் காவல் துறையிடம் ஒப்படைக்க மறுத்து விட்டார். யாருக்காக இவர் போராடுகிறார் என்பதைக்கூடத் தெரிந்துகொள்ளாத பிற்போக்கு சமுதாயமாக அச்சமூகம் இருந்திருக்கிறது. இராமாமிர்தம் அம்மையார், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியைத் தாம் சந்தித்தது இருவருக்குமே மிக்க மகிழ்ச்சி என்றும், தாசிப் பெண்களை 'வனஜாக்ஷி காலேஜ்' என்ற கல்லூரியில் படிக்க வைக்கவும் முத்துலட்சுமி ரெட்டி உதவியதாகவும் குறிப்பிட்டுள்ளார். தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் கொண்டுவர டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி பாடுபட்டபோது அவருக்காக ஆதரவு திரட்டியவர் இராமாமிர்தம் அம்மையார். 1929ஆம் ஆண்டு அறநிலையத் துறைச் சட்டத்திலும் திருத்தம் கொண்டுவரப்பட்டு, கோயில்களில் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டு அவர்களுக்கு இலவசமாக வழங் கப்பட்ட நிலங்களை எந்தவித நிபந்தனையுமின்றி அவர்களுக்கே கொடுத்துவிடவும் வழிவகை செய்யப் பட்டது. இராமாமிர்தம் அம்மையார் தேவதாசி முறையி லிருந்து தாம் மீட்ட பெண்களைப் பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்கு ஏற்ற வகையில், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தொடங்கிய 'அவ்வை இல்லம்' திகழ்ந்தது. எங் காவது தேவதாசிகள் இருப்பது தெரிந்தால், அவர்களு டன் எப்படியாவது பழகி அவர்களின் வீட்டுக்குச் செல் வார். அங்கு இளம் பெண்களை தேவதாசிகளாக்க முயல்வது தெரிய வந்தால் அப்பெண்களுடன் இரகசிய மாகப் பேசி, பின்னர் அப்பெண்களை இரவில் வீட்டை விட்டு வெளியேறும்படிச் செய்வார். முன்னதாகவே காவல் துறையில் தேவதாசி ஒழிப்புச் சட்டத்தின்கீழ் புகார் செய்துவிடுவார். அதன்பிறகு அவர்களுக்குத் தகுந்த மாப்பிள்ளை பார்த்துத் திருமணமும் செய்து வைப்பார். இவருக்கு மூன்று குழந்தைகள் பிறந்து, அதில் இரண்டு குழந்தைகள் இறந்துவிட்டனர். ஒரே மகன் செல்லப்பாவுடன் இறுதி வரை வாழ்ந்தார். இவர் பதவிக்கோ பாராட்டுதலுக்கோ, பொன் பொருளுக்கோ ஒருநாளும்

http://Creativecommons.org//license/by/4.0/.

ஆசைப்பட்டது இல்லை. இவரது நினை வைப் போற்றும் விதமாக 1989-ஆம் ஆண்டு முதல் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம் ரூ.5000/-த்தைத் தமிழக அரசு அறி வித்தது. அதன் பின் அடுத்தடுத்து வந்த அரசுகளால் உதை உயர்த்தி, இன்று ரூ.50,000/-மாக அளிக்கப்படுகிறது. கலைகளில் தேர்ந்த பயிற்சி, பன்மொழி ஆளுமைத் திறன், தேர்ந்த அறிவு, தெளிந்த சிந்தனை, அநீதியை எதிர்க்கும் ஆவேசம், பெண்ணினத்தை மீட்டு ஆண் களுக்குச் சமமாகச் சமுதாயத்தில் வாழ வைக்க வேண் டும் என்ற அயராத உழைப்பு, தள்ளாத வயதிலும் தளராத நடை, தன்னம்பிக்கை இவற்றின் மொத்த உருவமாக நம்மிடையே வாழ்ந்தவர் இராமாமிர்தம் அம்மையார்.

பெரியாரும் தேவதாசி ஒழிப்புச் சட்டமும்:

"கோயில்களில் பெண்களைப் பொட்டுக்கட்டுவதைத் தடுக்க சட்டம் செய்ய வேணுமாய் திருமதி முத்துலட்சுமி அம்மாள் அவர்களால் சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருக்கும் சட்டத்தை சர்க்கார் நமக்கு அனுப்பி, அதன் மீது நமது அபிப்பிராயம் கேட்டிருக்கின்றார்கள். இதற்காக சர்க்கார் பொதுஜனங்களின் அபிப்பிராயம் கேட்பது என்பது கோமாளித்தனம் என்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில் கோவில்களில் கடவுள்கள் பேரால் பெண்களுக்கு பொட்டுக்கட்டி அவர்களையே பொது மகளிர்களாக்கி, நாட்டில் விவசாரித்தனத்திற்கு செல்வாக்கும் மதிப்பும், சமய சமூக முக்கிய தானங்களில் தாராளமாய் இடமும் அளித்து வரும் ஒரு கெட்ட வழக்கம் நமது நாட்டில் வெகுகாலமாய் இருந்து வருகின்றது. அன்றியும் நாளாவட்டத்தில் இது ஒரு வகுப்புக்கே உரியது என்பதாகி, இயற்கையு டன் கலந்த ஒரு தள்ள முடியாத கெடுதியாய் இந்த நாட்டில் நிலைபெற்றும் விட்டது. ஒரு நாட்டில் நாகரீகமுள்ள அரசாங்கமாகவாவது அல்லது நாட்டின் சுயமரியாதையையோ, பிரஜைகளுடைய ஒழுக்கத்தையோ, நலத்தையோ, கோரின் அரசாங்கமாகவாவது ஒன்று இருந்தால் இந்த இழிவான கெட்ட பழக்கம் கடவுள் பேராலும், மதத்தின் பேராலும், சமூகத்தின் பேராலும், தேசிய வழக்கத்தின் பேராலும், இருந்து வர ஒரு கூஷண நேரமும் விட்டுக்கொண்டு வந்திருக்காதென்றே சொல்லுவோம். ஆனால் நமது இந்தியாவில் வெள்ளைக்கார ஆட்சி குடி புகவும் நிலை பெறவும், நம் நாட்டுச் சுயநலப் பார்ப்பனர்கள் உளவாளிகளாகவும் உதவி யாகவும் இருந்து வந்ததால், அப்பார்ப்பனர்களுக்கு அனுகூலமாக வெள்ளைக்காரர்களும் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருந்ததால், அந்தப் பார்ப்பனர்கள் சொல்லுகின்றபடியே நடந்து வெள்ளைக்காரர்கள் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டிய அவசியத்தில் பட்டு விட்டார்கள். இந்தக் காரணங்களால் அவர்கள் பார்ப்பனர்களுக்கு விரோதமாய் சீர்திருத்தத் துறையிலாவது, மனிதத்தன்மைத் துறையிலாவது இதுவரை ஒருவித முற்போக்கான காரியமும் செய்யாமலே இருக்க வேண்டியவர்களாகி விட்டார்கள்." என்று குடியரசு இதழில் வெளியிட்ட பெரியாரின் தலையங்கம் இவ்வாறு குறிப்பிடுகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

முடிவுரை:

திருமணம் செய்து கொள்ள விரும்பாத பெண்கள், இறைவனையே தம் தலைவனாக ஏற்றுக் கொண்டு ஆலயத்திலேயே தங்கி கோவில் நிர்வாகங்களைக் கவனித்துக் கொண்டனர். விழாக்களில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தல், கலைகளை கற்பித்தல் போன்ற சேவைகளையும் புரிந்தனர். நாளடைவில், சில மன்னர்கள் அவ்வாறான தேவதாசிகளைத் தம் அந்தப்புற நாயகிகளாகக் கொள்ள ஆரம்பித்தனர். பட்டத்து ராணிக்கு இணையான அதிகாரம் கொண்ட தேவதாசிகள் கூட இருந்தது உண்டு. பல்லவர்கள் காலத்திலேயே நடைமுறையில் இருந்து, பிற்கால சோழர்கள் காலத்தில் கேவலம் அடைந்த இந்த வழக்கம், நாயக்கர்காலத்தில் மிகவும் தாழ்வுற்றது. இப்படித் தொடர்ந்து வந்த இந்த நடைமுறை திராவிடச் சிந்தனையால் இம்மண்ணிலிருந்து துரத்தப்பட்டது சிறப்பானதாகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

31. திராவிட வரலாற்றின் கவிதை வடிவம்

முனைவர் சு.வினோத்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி
DOI 10.5281/zenodo.13762383.

Abstract:

Bharathidasan has used his poetry as a sword of Dravidianism. All books such as Charal of Sanjeeviparvatam, Kaththi of Tamilachi, Vengaiye Eghuga, Tamiliyakkam all speak about the translated Dravidian way of life. Whatever poem Bharathidasan wrote, he did not forget to write the superiority and historical excellence of Tamil in the poem. Poems written to protect the language are like poems written to protect the religion by Bharathidasan. They provide Tamil emotion and the sense of identity that protects it while reading. The meaning of the word Dravidian can be elaborated in the poems of Bharathidasan. Also, it can be a record of Dravidian history. Thus, this article is a study on Bharathidasan's poetry as a poetic form of Dravidian history.

பாரதிதாசன் தமது கவிதைகளைத் திராவிடத்தின் போர்வாளாகப் பயன்படுத்தியுள்ளார். சஞ்சீவிபர்வதத்தின் சாரல், தமிழச்சியின் கத்தி, வேங்கையே எழுக, தமிழியக்கம் என அனைத்து நூல்களும் மொழிவழிப்பட்ட திராவிட வாழ்வியலைப் பேசுபவை. பாரதிதாசன் எக்கவிதை எழுதினாலும் அக்கவிதையில் தமிழின் மேன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் எழுதமறந்தாரில்லை. சமயம் காக்க எழுதப்பட்ட காப்பியங்கள் போல் மொழி காக்க எழுதப்பட்ட கவிதைகள் பாரதிதாசனுடையவை. படிக்கின்ற பொழுதெல்லாம் தமிழ் உணர்ச்சியும் அதனைக் காக்கின்ற தன்மான உணர்வையும் வழங்குபவை. திராவிடம் என்ற சொல்லின் பொருள் விரிவாகப் பாரதிதாசனின் கவிதைகளைக் கொள்ளலாம். மேலும், திராவிட வரலாற்றின் பதிவாகவும் கொள்ளலாம். அவ்வகையில் பாரதிதாசனின் கவிதைகள் திராவிட வரலாற்றின் கவிதை வடிவமாகக் திகழ்வது குறித்த ஆய்வது இக்கட்டுரை ஆகும்.

திராவிடம் எனும் சொல்

"தமிழ் என்னும் சொல் வடமொழிச் சிதைவென்பர் வடமொழிக் காதலர்கள். இக்கூற்று சற்றும் பொருந்தாது. திருமிளம், திராவிடம் வடமொழிச் சொற்களென்றும் இவற்றின் சிதையே 'தமிழ்' எனவாயிற்றென்றும் வாதிப்பது கவைக்குதவாத வாதமாகும். ஏனெனில், சமஸ்கிருத மொழியென்ற பலவினக் கூட்டுமொழி, ஆரியர்கள் கங்கைக் கரையில் காலூன்றி வளம்பெற்ற பிறகு தோன்றிய வாய்மொழியேயாகிறது. வேதம் என்றால் வாய்ப்பட்டு என்று பொருளுளதையும் கவனிக்கவேண்டும். தமிழ் மொழியோ, சமஸ்கிருதம் தோன்றுவதற்குப் பலதலைமுறைகளுக்கு முன்பே தோன்றியதென வடமொழி நூல் இதிகாசங்களே சான்று கூறும்" (உலகம் கண்ட திராவிடம், பக்.7- 8) என்பார் பிவியார்.

தமிழைக் குறிப்பதற்காக சமஸ்கிருதமொழியினர் பயன்படுத்திய திசைச்சொல்லே திராவிடம் என்பது பலரும் ஏற்றுக்கொண்ட கருத்தாகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

"திராவிடம் எனும் சொல் திசைச்சொல் என்பர்.

திராவிடம் என்று செப்பிய தேன் எனில்

திருத்தமிழம் என்ற செந்தமிழ்ப் பெயரை

வடவர் திரமிளம் என்று வழங்கினர்

திரமிளம் பிறகு திராவிடம் ஆனது" **(திராவிடர் மீட்சி – வேங்கையே எழுக)**

என்பது திராவிடம் என்னும் சொல் குறித்த பாரதிதாசனின் கவிதை விளக்கம்.

திருத்தமிழகத்தைத் திராவிடம் என்றால்

இரண்டும் தமிழே என்பதில் ஐயமேன்" (திராவிடர் மீட்சி - வேங்கையே எழுக)

இரண்டு சொற்களும் தமிழ்ச்சொல் என்று பாரதிதாசன் முடிக்கின்றார்.

கால்டுவெல் உள்ளிட்ட அறிஞர்களின் திராவிடம் குறித்த வரலாற்று விளக்கம் சரிவரப் புரிபடாத வரலாற்று அறிவு அற்ற தமிழ்மக்களுக்கு எளிதாக வரலாற்றைக் கொண்டு சேர்க்கும் பணியைக் கவிதை வழியாகப் பாரதிதாசன் செய்துள்ளார். கவிதை வழி வரலாற்றை உணர்வுப் பூர்வமாக மக்களின் உள்ளத்தில் கொண்டு சேர்க்கவும் செய்துள்ளார்.

"இனப்பெயர் என் என்று பிறன் எனைக் கேட்டால்

மனத்தில் எனக்குச் சொல்லொணா மகிழ்ச்சியாம்

'நான்தான் திராவிடன்' என்று நவில்கையில்

தேன்தான் நாவெலாம் வான்தான் என்புகழ்"

(இனப்பெயர் - பாரதிதாசன் கவிதைகள் - தொகுதி 2)

திராவிடப் புரிதலைப் பாரதிதாசன் கவிதை வழியாக உணர்ந்து அறியலாம்.

மொழி – வரலாறு – பண்பாடு

குறிஞ்சிப்பாட்டு எழுதப்பட்டதன் காரணமாக 'ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்துவதற்கு' என்று கூறுவர். இங்குத் தமிழ் என்பது ஆரியத்திற்கு எதிரான மொழி மட்டுமல்ல மொழி வழிப்பட்ட பண்பாடுமாகும். மொழியே கருத்துக்களின் வடிவில் ஒருவருக்குள் நுழைந்து பண்பாடாக மலர்கிறது. களவில் கலந்த இருவர் கற்பில் இணைவது தமிழ்ப் பண்பாடு என்பது குறிஞ்சிப்பாட்டு பகரும் உண்மை. களவில் ஒருவரைத் துய்த்து கற்பில் வேறொருவருடன் இணையும் வழக்கம் இங்கில்லை என்று குறிப்பு உரைக்கின்றார் கபிலர். இப்பண்பாட்டிலிருந்து மாறுபட்ட பண்பாடு ஆரியப் பண்பாடு என்பது உள்மறைக் குறிப்பு.

இத்தகைய அழுத்தம் பெற்ற மொழிவழிப் பண்பாட்டைத் திராவிடம் 2000 ஆண்டுகளுக்கும் மேலாகப் பறைசாற்றி வருகிறது. ஆரிய அரசன் தலையில் கல் எடுத்து வந்த சேரன் செங்குட்டுவன் தம்பி இயற்றிய சிலப்பதிகாரத்தில் கண்ணகி மட்டுமல்ல மாதவியும்

http://Creativecommons.org//license/by/4.0/.

கற்புப் பண்பாடு வழுவாமல் வாழ்கின்றாள். அதில் அறம் தவறும் அரசனை எதிர்த்து வழக்குரைக்கும் வீரப்பண்பாடும் கண்ணகியிடம் வெளிப்படுகிறது.

ஆதிசங்கரர் திருஞானசம்பந்தரை 'திராவிடசிசு' என்பதிலிருந்து அச்சொல்லின் பழமையை அறியலாம். மேலும்,

ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்

தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து" (அகநானூறு : 396)

"ஆரியர் படையின் உடைக என்

நேர் இறை முன்கை வீங்கிய வளையே" (அகநானூறு : 336)

போன்ற சங்கப்பாடல்கள் ஆரியர் என்ற இனத்தைத் தமிழுக்கு எதிரான இனமாக முன்நிறுத்தி மொழிகின்றன. இதன் மூலம் ஆரியத்தினால் எதிர்ப்புக்குள்ளான மொழிவழிப்பட்ட இனமாகத் திராவிடத்தைக் கொள்ளலாம்.

"ஆரியர் கால்நடை அமைய வந்தவர்

பனிவரை யடுக்கத்த நனிபெரு நிலமதில்

தங்கினர். தங்கித் தங்கள் வாழ்வையும்

மொழியையும் தமிழால் ஒழுங்கு செய்தனர்"

(இனப்பெயர் - பாரதிதாசன் கவிதைகள் தொகுதி – 2)

என்று பாரதிதாசன் வரலாற்றுச் செழுமையைக் கவிதையில் எளிமையாக்கி உரைத்துள்ளார்.

"வடபாங்கில் முன்னாளில்தமிழரை வென்றார்

வந்திட்ட ஆரியர் உடும்பையும் இதின்றார்

இடம்பெற்ற பின்சைவம் மிகநல்ல தென்றார்"

(கொலைப்படை வேண்டும் - பாரதிதாசன் கவிதைகள் தொகுதி – 2)

வேதங்கள் உள்ளிட்ட வடநூல் ஆதாரங்களில் கற்றறிந்த செய்திகளின் அடிப்படையில் பாரதிதாசனின் திராவிட வரலாற்றுக் கவிதைகள் அமைகின்றன.

மொழியின் பெருமை உணர்தல்

மொழியைக் காப்பதற்கான முக்கியத் தேவை அம்மொழி நேசிப்பும், அதன் பெருமைமிகு சிறப்புகளை உணர்தலும் ஆகும். அவ்வகையில் பாரதிதாசனின் கவிதைகள் பல்வேறு வகையில் தமிழின் பெருமைகளை உணர்ந்துவன.

http://Creativecommons.org//license/by/4.0/.

"வள்ளுவன் இரண்டு திருவடி - இந்த

வையம் அளந்ததை எண்ணி எண்ணி நாம் துள்ளி ஆடுவோம்"

(துள்ளி ஆடுவோம் - தேனருவி)

என்று குறிப்பதில் இருந்து திருக்குறளின் பெருமையை அறியலாம். அதே நேரத்தில் புராணங்களில் கூறப்படும் கற்பனைக்கு மாற்றாக மொழியின் உண்மையை உரைக்கக் காணலாம்.

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்

கழையிடை ஏறிய சாறும்

பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்

பாகிடை ஏறிய சுவையும்

நனிபசு பொழியும் பாலும் - தென்னை

நல்கிய குளிரிள நீரும்

இனியன என்பேன் எனினும் - தமிழை

என்னுயிர் என்பேன் கண்டீர்" **(தமிழ் - பாரதிதாசன் கவிதைகள்)**

மொழியை அலட்சியப்படுத்தும் இனம் மொழியால் உயர்வதில்லை. மொழியையும் அழித்து தானும் அழிகிறது. இது வரலாற்றின் நிதர்சனம். பாரதிதாசனின் கவிதைகள் மொழியின் பெருமையை உணர்த்துவன. சாகாநிலை வழங்கும் அமுதத்தின் கற்பனைக்கு மாற்றாகத் தமிழை அமுதமாகப் பாரதிதாசன் முன்வைக்கின்றார். முன்னது புராணக் கற்பனை என்றால் பின்னது அறிவியல் உண்மை. மொழியே இனத்தையும் அதன் வரலாற்றையும் சாகாமல் காப்பது ஆகும்.

தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்

தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" (இன்பத் தமிழ் - பாரதிதாசன் கவிதைகள்)

அமிழ் தொக்கும் தமிழர் - நல்

அறம் காக்கும் மறவர்" (நாட்டுக்கு நான்)

என்று தமிழை அமுதமாக பாரதிதாசன் பலஇடங்களில் சுட்டுகின்றார்.

வெளிப்பகைவரும் உட்பகைவரும்

பண்பாட்டுப் படையெடுப்பால் மொழிகள் அழிவது உலகியல் இயற்கை. அவ்வகையில் தமிழ்மொழி இரண்டாயிரம் ஆண்டுகளாக மொழிப் பகைவர்களுடன் போரிட்டு வருகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

“தமிழர் என்று சொல்வோம் - பகைவர்

தமை நடுங்க வைப்போம்

இமய வெற்பின் முடியிற் - கொடியை

ஏற வைத்த நாங்கள்” **(பகை நடுக்கம் - பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 2)**

வீரம் பிறந்த நாட்டிற் பிறந்தவர்

வெற்றித் தமிழர் உலகிற் சிறந்தவர்

ஆரியர் அல்லார் மறைந்திருந்தே

அம்பு பாய்ச்சும் பூரியர் அல்லர்” **(விடுதலைப் பாட்டு)**

என்று மொழியின் வெளிப்பகைவரைப் பரதிதாசன் குறிப்பிடுகின்றார்.

தமிழை வேற்றுமொழியினர் (வேற்று நாட்டவர்) அழிப்பதாகக் கூக்குரலிடும் பலரும் தம் மொழியைத் தாமே அழிப்பது குறித்து அதிகம் சிந்திப்பதில்லை. ஜீ.யு.போப் உள்ளிட்ட வெளிநாட்டார் பலரும் தமிழின் பெருமையை உணர்ந்ததுடன் மொழி மேன்மையுறும் செயல்கள் பல செய்துள்ளனர். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பலரும் மொழிப் பெருமை பேசுதலை செய்துகொண்டே அதனை அழிக்கும் செயலையும் செய்துவருகின்றனர். அவர்களை உள் பகைவர் எனலாம். அத்தகைய உள்பகைவர் குறித்துத் தமிழியக்கம் என்ற பெயரில் தனி நூலை எழுதியுள்ளார்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையின் தெருக்களில் தமிழ்மொழி இல்லாதிருக்க் கண்ட பாரதிதாசன் பாரதிபுத்தக நிலையத்தில் அமர்ந்து ஓரிரு மணி நேரத்தில் எழுதியது இத்தமிழியக்கம்.

“தமிழ்நாட்டின் தமிழ்த் தெருவில்

தமிழ்தான் இல்லை” (வாணிகர் - தமிழியக்கம் - பாவேந்தம் -15)

என்ற வரிகள் நெஞ்சில் துயர் சேர்ப்பவை. துறைதோறும் தமிழுக்குத் தொண்டு செய்வது குறித்து விரிவான கருத்துக்களைக் கவிதை வடிவில் தந்துள்ளார். தமிழ்வளர்ச்சித் துறையின் தோற்றத்திற்குப் பாரதிதாசன் முக்கியக் காரணமாவார். அதன் செயல்பாடுகள் குறித்தத் தெளிவான வரையறையை இந்நூலுக்குள் காணலாம். வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகை தமிழில் அமைய வேண்டும். அரசு அலுவலர்கள் தமிழில் கையெழுத்திடவேண்டும் என்பதெல்லாம் சட்டமாக்கப்பட்டுள்ளன. இச்சட்டங்களில் பலவும் எழுத்தளவில் மட்டுமே உள்ளன.

ஆரியர் தமிழுக்கு வெளிப்பகை என்றால் தமிழ்மொழியின் உண்மையை உணராத் தமிழர் உள் பகைவர் ஆவர். அவர்களைப் பாரதிதாசன் கவிதையில் சாடுகிறார்.

http://Creativecommons.org//license/by/4.0/.

“வாய்ப்பான வேளையடா அண்ணே – நீ

வால்குழைத்து வாழ்வதுண்டோ அண்ணே?

குர்ப்பான சேதி ஒன்று சொல்வேன் - தி

ராவிடத்தை மீட்க முயல அண்ணே

காய்ப்பேறிப் போனதடா அண்ணே – உன்

காட்டிக் கொடுக்கும் இழிதன்மை

தாய்ப்பால் குடித்திருப்பாய் அண்ணே எனில்

தன்மானம் போனதென்ன அண்ணே”

(மெதுபோக்கு திராவிடனுக்கு முற்போக்குத் திராவிடன் மொழிதல்)

முடிவுரை

சங்கக் கவிதைகளில் இருந்து பண்டைத் தமிழர்களின் வரலாற்றை மீட்டெடுத்தது போல் 19, 20 ஆம் நூற்றாண்டின் மொழி வழிப்பட்ட தமிழக வரலாற்றைப் பாரதிதாசனின் கவிதைகளில் இருந்து எழுதிவிடலாம். அவ்வகையில் பாரதிதாசனின் எழுத்துக்கள் மொழியின் அழகியல் தன்மைகளையும் அம்மொழி பேசும் மக்களின் பண்பாட்டுப் பெருமைகளையும் அவர்களின் தன்மான உணர்வையும் எடுத்துரைக்கும் வரலாற்றின் கவிதை வடிவமாக விளக்குகின்றன.

துணை நூற்கள்

1. பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1992.
2. பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதி, பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி, 1952.
3. பாரதிதாசன், பாவேந்தம் - 15, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2009.
4. பாரதிதாசன், வேங்கையே எழுக, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 1978
5. பிவியார், உலகம் கண்ட திராவிடம், நிலவுப் பதிப்பகம், சென்னை, 1949.
6. பாரதிதாசன், தேனருவி, பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி, 1956.
7. காசிவிசுவநாதன்.வெ.பெரி.பழ.மு. (ப.ஆ), அகநானூறு நித்திலக்கோவை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1957

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

32. பாரதிதாசன் படைப்பில் திராவிடச் சிந்தனை

முனைவர்கா.ஸ்ரீதர்,
உதவிப்பேராசிரியர், முதுகலைத்தமிழ்த்துறை,
வி.இ.நா.செ.நா.கல்லூரி, (தன்னாட்சி), விருதுநகர்.
DOI 10.5281/zenodo.13766492.

Abstract:

Named by his parents as Kanaka Subpuratnam, he changed his name to Bharatidasan due to his deep love for Subramanya Bharatiyar. Father EV Ramasamy was inspired by Periyar's social reform activities and became his ardent volunteer. Bharathidasan has earned the special name of revolutionary poet by Annathurai due to his deep and compelling writings and is still alive in people's minds. This article is an attempt to identify the Dravidian ideas that shine through his work.

கனக சுப்புரத்தினம் என்று பெற்றோர் இட்ட பெயரைச் சுப்பிரமணிய பாரதியாரின் மீதான தீராக் காதலால் பாரதிதாசன் என்று தாமாகப் புனைந்து கொண்டவர். ஈ.வெ. இராமசாமி என்ற தந்தை பெரியாரின்சமூக சீர்திருத்தச் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு அவரது தீவிரத் தொண்டராக மாறியவர். தமது ஆழமான அழுத்தமான உறுதியான எழுத்துக்களால் அண்ணாத்துரையால் புரட்சிக்கவி என்ற சிறப்புப் பெயரைப் பெற்று இன்றும் மக்கள் மனத்தில் வாழ்ந்து வருபவர் பாரதிதாசன். அவரது படைப்பில்மிளிரும் திராவிடச் சிந்தனைகளை அடையாளப் படுத்தும் முயற்சியாக இக்கட்டுரை அமைகிறது.

திராவிடம் / திராவிடச் சிந்தனை

திராவிடம் என்பதற்கு விக்சனரிஇணையதளம் **திரவம் சூழ்ந்த இடம்** என்றும் **மஹாராஷ்டிராவில் இருந்து தமிழ்நாடு வரையிலான கடல் சூழ்ந்த பகுதி**யைக் குறிக்கும் என்றும் பொருள் குறிப்பிட்டு உள்ளது. இதன் அடிப்படையில் பார்த்தால் மொழிவாரியாக மாநிலங்கள் பகுக்கப்படுவதற்கு முன்பு இருந்த சென்னை மாகாணமே திராவிடம் இன்று அறியலாம். 1950 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட இந்திய தேசிய கீதத்தில் இடம்பெற்றுள்ள,

“ . . . . . **பஞ்சாப சிந்து குஜராத மராத்தா**

திராவிட உத்கல வங்கா

விந்திய இமாச்சல யமுனா கங்கா

உச்சல சலதி தரங்கா . . . . . ”

என்ற வரிகளில் (கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கேரளா, தமிழ்நாடு உள்ளிட்ட) தென் இந்தியாவைக் குறிக்கும் விதத்தில்திராவிட என்ற ஒரு சொல் மட்டுமே உள்ளது. எஞ்சிய வட இந்தியப் பகுதியைக் குறிக்கும் வகையில் பஞ்சாப், சிந்து, குஜராத், மகராஷ்டிரா, வங்காளம், இமாச்சலப் பிரதேசம்போன்ற பலபெயர்கள் இடம்பெற்று உள்ளன.

http://Creativecommons.org//license/by/4.0/.

இரவீந்தரநாத் தாகூரின் கூற்றுப்படி **திராவிடம் என்பது தென்னியந்திய நிலப்பகுதியையே** குறிக்கிறது என்று வரையறை செய்யலாம்.

இந்த நிலப்பரப்பில் வாழும் மக்களிடம் புழக்கத்தில் இருக்கும்சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் இவர்களின் அடையாளமாகக் குறிப்பிடலாம். முடியாட்சி காலத்திலும் காலனி ஆதிக்கக் காலத்திலும் தென் இந்திய மற்றும் வட இந்திய மக்களின் பண்பாட்டிலும் வரலாற்றுப் பின்னணியிலும் முரண்பாடுகள் எண்ணற்றவை. அதனால் இவ்விரண்டும் தமது இருப்பை நிலைநிறுத்த மேற்கொண்ட நேரடி மற்றும் மறைமுக முயற்சிகள் வரலாற்றுப் பதிவுக்களில் காணலாம்.

திராவிட நாட்டின் பெருமை

தொல்காப்பியச்சிறப்புப் பாயிரத்தில்,

“**வடவேங்கடம்தென்குமரி**
ஆயிடை
தமிழ்கூறு நல்லுலகம் . . . . . “

என்று பனம்பாரனார் தமிழகத்தின் எல்லையாக, வடக்கே வேங்கட மலையையும் தெற்கே குமரியையும் குறிப்பிட்டு உள்ளார். இதன் வழியே இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நிலப்பகுதியில் தமிழ் மொழியைப் பேச்சு மொழியாக் கொண்டவர்கள் வாழ்ந்து உள்ளனர் என்பதை அறியலாம்.

மாறாக பாரதிதாசன்,

“ . . . . . **தென்குமரி வங்கம் திரைக்கடல் முப்பாங்கு**

மன்னிய திராவிட வையத்து உரிமையை . . . .. “ **(எங்கள் திராவிடம்)**

என்று பாரதிதாசன் தமிழ்மொழி பேசும் மக்கள் வாழும் பகுதியை வரையறுத்துள்ளார். சங்க இலக்கியங்கள் தமிழக நிலப்பரப்பின் வளத்தை பலவாறு விவரித்து இருந்தாலும் பாரதிதாசனின்,

“. . . . . **கழை/ தெங்கும்செந் நெல்கமுகும் - விளையும்தி / ராவிட நல்லுலகமே.**”

“. . . . . .. **எங்கள்ஆட்சி சிறந்த இடம் - நல் / இன்பம் நிறைந்த இடம்** . . . . . ”

“ . . . . . **சொல்லும் / வாய்க்கது தேன் - உயிர் / என்பு, குருதி, நல்லூன் - எலாம்**

எங்கள் / இன்பத்தி ராவிடந் தான் ” **(திராவிடர் மீட்சி)**

ஆகிய வரிகள் தமிழகத்தின் இயற்கை வளத்தையும் ஆட்சிச் செழுமையையும் மக்கள் தன் தாய் மண் மீது வைத்திருந்த பற்றையும் விவரிப்பதாக உள்ளன. வடநாட்டு மன்னன் கனக, விஜயனின் ஏளனப் பேச்சால் கோபம் கொண்ட சேரன் செங்குட்டுவன்

http://Creativecommons.org//license/by/4.0/.

அவர்களைவென்று, அவர்களது தலையிலேயே கண்ணகி சிலைக்கான கல்லை ஏற்றித் தமிழகம் கொண்டு வந்தான், என்பதைச் சிலப்பதிகாரம்பதிவு செய்துள்ளது.

“.... வடதிசை மருங்கின் மன்னர் தம்முடித்தலைக்

கடவுள் எழுதவோர்கற்கொண் டல்லது

வறிது மீளும்என்வாய் வாளாகின் . . . “ (**சிலப்பதிகாரம் - கால்கோள்காதை**)

என்பதைச் சிலப்பதிகாரம் பதிவு செய்துள்ளது. மூவேந்தர்களுக்குள் முரண்பாடு கொண்டு தொடர்ந்து போர் புரிந்தனர் என்பதை வரலாற்றுச் சான்றுகளும் இலக்கியச் சான்றுகளும் உள்ளன. ஆனால் வடநாட்டு மன்னர்களுக்கும் தென்னாட்டு மன்னர்களுக்கு மேவீரம் குறித்த இருப்புநிலையில் காலம் காலமாக முரண்பாடுகள் தொடர்வதைச் சிலப்பதிகாரம் நினைவூட்டுவதாக அமைந்துள்ளது. கப்பல் வாயிலாக கடல் கடந்து போர் மோர் கொண்டு ஆட்சி செய்த வீரவரலாறு தமிழ் மண்ணுக்கு உள்ளது என்பது வரலாறாகும். இச்சூழலில் மக்களாட்சியில் வடநாட்டாரின் ஆதிக்கத்திற்குத் தமிழகம் உள்ளாவதுதகுமா என்ற ஆதங்கத்திலேயே பாரதிதாசன்,

“தாய்ப்பால் குடித்திருப்பாய் அண்ணே. எனில்
தன்மானம் போனதென்ன அண்ணே?
பண்டைத் திராவிட நா டண்ணே.-.-. இது
பாராண்ட தாயகமாம் அண்ணே”

என்ற வரிகளால் தமிழன் / திராவிடன் ஆளும் திறம் படைத்தவன். அவனால் அடங்கி இருத்தல் ஆகாது; அடங்கி இருக்கக்கூடாது என்கிறார்.

இல்லறத்தில் திராவிடச் சிந்தனை

ஆறு அறிவு பெற்றவன்

என்று பெருமை பேசும் மனிதன் உட்பட உலக உயிரினங்கள் அனைத்துமே இனப்பெருக்கம் என்ற ஒற்றைப் புள்ளியில் அனைவரும் சமம் என்பதை உணர்ந்து கொள்ளும். அறிவுநிலை, நாகரிகம் என்ற அடிப்படையில் மனிதன் தனது இனப்பெருக்கத்தைத் திருமணம் என்ற பந்தம் மூலம் தொடங்குகிறான். தொல்காப்பியம் திருமணபந்தத்தை எட்டு என்று வரையறுத்து இருந்ததை,

உளமலி காதல் களவு எனப்படுவது

ஒரு நான்கு வேதத்து இருநான்கு மன்றலுள்

யாழோர் கூட்டத்தின் இயல்பினது என்ப (களவியல் நூற்பா -1)

என்ற தொல்காப்பிய நூற்பாவாயிலாக அறியலாம். மேலும் திருமணச்சடங்குகளும் வரையறுக்கப்பட்டன என்பதை,

http://Creativecommons.org//license/by/4.0/.

"**பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**

ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்ற நூற்பா வழியே தெளியலாம்.

ஆனால் இந்தத் திருமணச் சடங்குகளைப் பிராமணர்கள் வரையறுத்து உள்ளனர். இச்சடங்குகளை அவர்களே; அவர்கள் மட்டுமே முன்னின்று மேற்கொள்ள வேண்டும் என்பதாக வகுத்து உள்ளனர். இம்முறையே சிறந்தது; சரியானது என்பதாக மக்கள் மனத்திலும் ஆழப்பதியச் செய்து விட்டனர். யாகம் வளர்த்தல், வேத மந்திரங்கள் ஓதுதல் என பிராமணர்களை முன்னிலைப்படுத்தும் இச்சடங்குகளில் தமிழர்கள் / திராவிடர்கள் / தென்னிந்தியர்களுக்கு உடன்பாடு இல்லை. அதனால் தமது இல்லச் சடங்குகளைத தாங்களே அல்லது தாம் விரும்பிய பெரியோர்கள் முன்னிலையில் நிகழ்த்தும் வகையில் வரையறுத்தனர்.

இம்முறையிலான திருமணம் தொடக்கத்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாகவே மட்டுமே நிகழ்ந்தன. ஆனால் காலப்போக்கில் மக்கள் மத்தியில் விரைந்து பரவின. இதைப் பாரதிதாசன், **திராவிடர் புரட்சித் திருமணத் திட்டம்** என கவிதை வடிவில் நூலாக இயற்றி உள்ளார்.

" . . . . . திங்கள் வாழ்க செங்கதிர் வாழ்க

தென்றல் வாழ்க செந்தமிழ் வாழ்க

இங்கு திராவிடர் வாழ்க மிகவே

இன்பம் சூழ்ந்தே எங்கள் நாடு " (திராவிடநாட்டுப்பண்)

என்று திராவிட நாட்டுப் பண்ணைப்பாடித் திருமண நிகழ்வைத் தொடங்குவதாக வரையறுத்து உள்ளனர். இப்படித்தான் என்பதாக இல்லாமல் இப்படியும் செய்யலாம் என்றே அறிவிறுத்தி உள்ளனர். இந்தத் திருமணச் சடங்கில் வீட்டார், உறவினர், பெரியோர் என அனைவருக்கும் பங்கு உள்ளது. பொருளாதார அடிப்படையிலும் சிக்கனமாக இருப்பது அடித்தட்டு மக்களையும் ஈர்த்து உள்ளது என்பதையும் பாரதிதாசன் தனது முன்னுரையில் பதிவு செய்துள்ளார்.

இந்தத் திருமண முறைத் திராவிட நாட்டுப்பண்ணுடன் தொடங்கி மணமக்களின் ஒப்புதலுடன் உறவினர், சுற்றத்தினர், நண்பர்கள் என அனைவரும் மணமக்களை நேரடியாக அருகில் சென்று வாழ்த்துவதுடன் மனமகிழ்வுடன் நிறைவு பெறுகிறது.

பாரதிதாசனின் பதிவில் உள்ள இந்தத் திருமணமுறை இன்றும் மக்களிடம் பெரும்பான்மையாக நடைமுறையில் உள்ளது. வேத மந்திரங்களுடன் பார்ப்பணர்கள் நடத்தும் திருமணங்கள் அருகிலேயே காணப்படுகின்றன. பொருளாதார வளத்தையும்

http://Creativecommons.org//license/by/4.0/.

ஆடம்பரமான சடங்குகளுடன் திருமணத்தை நடத்தவேண்டும் என்ற பெருத்த அவா கொண்டவர்களின் இல்லங்களில் மட்டுமே வேதமந்திரங்கள் ஒலிக்கின்றன.

தமிழ் மொழியின் திரிபுகள்

இந்தியாவில் வடக்கே வடமொழியும் தெற்கே தமிழ்மொழியும் மட்டுமே மூலமொழி ஆகும். எஞ்சிய அனைத்து மொழிகளுமே மூலமொழியில் இருந்து பிரிந்து சென்றவையாகும் என்பதே மொழி வரலாறு.

தமிழ்மொழியில் இருந்து பிரிந்து சென்ற மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு என அனைத்து மொழிச் சொற்களிலும் தமிழ்மொழியின் திரிபு, மயக்கம், தொணி இருக்கிறது என்பதை மொழிசார்ந்த ஆய்வு நூல்கள் ஏற்கின்றன. இதைப் பாரதிதாசனின்,

"நெடிய இத் தமிழகம் இடைக்காலத்தில் / தமிழ்நா டாந்திரம், தனி ஒரு கேரளம்
அமையும் துளுவம், கன்னடம் ஆகப் / பிரிவுற்றது தமிழ்ப் பேச்சின் திரிபினால்!
கோழி என்று கூறலே தமிழாம் / கோடி என்று கூறல் தெலுங்காம்
கோளி என்றி கூறல் கேரளமாம் / கோலி என்றி கூறல் கன்னடமாம்
கோழி என்று கூறல் துளுவமாம் / தமிழ் மொழி இவ்வாறு தான்திரிந்திடினும்
அனைத்தும் தமிழே ஆகும் அன்றிப் / பிறமொழி என்று பேசவும் படுமோ?"

(திராவிடர் மீட்சி)

என்ற கவிதை வரிகள் உறுதி செய்யும் விதமாக உள்ளன.

முடிவுரை

திராவிடம் என்பது இன்றைய தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, பாண்டிச்சேரி மற்றும் கோவா உள்ளிட்ட நிலப்பரப்பு ஆகும். அதாவது மொழிவாரி மாநிலங்களின் பிளவுக்கு முந்தைய சென்னை மாகாணம் ஆகும். கடல்கடந்தப் போரிலும் வெற்றிகண்ட முடியாட்சி முதல் குடியாட்சி காலமான இன்று வரை இந்தியாவின் வடக்கும் தெற்குக்கும் இடையே சுமூகமான உறவு இல்லை. வலிமைப் போட்டியும் வளர்ச்சிப் போட்டியும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. மொழி வாரியாக மாநிலங்கள் பிளவுபட்டதால் திராவிடம் என்ற சொல்லாடல் வழக்கு ஒழிந்ததாக மாறிவிட்டது. கடந்த நூற்றாண்டில் முன் வைக்கப்பட்ட தனிநாடு கோரிக்கையும் நீர்த்துப் போய்விட்டது.

இருப்பினும் பண்பாட்டு அளவில் தனித்து இயங்கக்கூடிய திறனுடன் தமிழன் இருக்கிறான் என்பதைப் பாரதிதாசனின் கவிதைப் புலப்படுத்துகிறது.

http://Creativecommons.org//license/by/4.0/.

துணைநின்ற நூல்கள்:

1. தொல்காப்பியம்
2. நாட்டுப்பண் - இரவீந்தரநாத்தாகூர்
3. திராவிட நாட்டுப்பண் - பாரதிதாசன்
4. திராவிடர் புரட்சித் திருமணத்திட்டம் - பாரதிதாசன்
5. வேங்கையே எழுக - பாரதிதாசன் கவிதைகள் - பாரதிதாசன்
6. சிலப்பதிகாரம் - கால்கோள்காதை - இளங்கோவடிகள்

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

33. உடுமலை நாராயணகவி பாடல்களும் திராவிடத் தாக்கமும்

முனைவர் வீ.ச.அசோக்குமார்,
உதவிப்பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை,
வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி,விருதுநகர்.
DOI 10.5281/zenodo.13763954.

Abstract:

In the context of the freedom struggle, the government started using the youth in different ways and took several positions. Among them, Hindi language management, Hindu religious pressure, setting the stage for northern capitalist exploitation are important. At the same time Vallalar, Sundaram Pillai etc. started spreading ideas for the development of anthropology, religious reform, industrial progress etc. As a result, various nationalities began to journey towards a new awareness. Justice Party, Self-Respect Movement, Dravida Movement, South Indian Welfare Rights Association, Tanitamil Movement etc. appeared in Tamil Nadu to get out of humanism and political slavery. Economic reasons were also behind it. The Dravidian influence that emerged thus reached the masses easily through the most powerful mediums of drama, literature and film. In this article, we will see the lyrics of the Dravidian-influenced poet Udumalai Narayana.

முன்னுரை

விடுதலைப் போராட்டச் சூழலில் இளைஞர்களை வெவ்வேறு வகையில் பயன்படுத்தத் தொடங்கிய அரசு பல நிலைப்பாடுகளை முன்னெடுத்தது. அவற்றில் இந்திமொழி மேலாண்மை, இந்து மத அழுத்தம், வட முதலாளித்துவ சுரண்டலுக்குக் களம் அமைத்தல் போன்றன முக்கியமானவையாகும். அதே சமயத்தில் மானுடவியல் வளர்ச்சி, சமயச் சீர்திருத்தம், தொழில் முன்னேற்றம் போன்றவற்றிற்கான எண்ணங்களை வள்ளலார், சுந்தரம் பிள்ளை போன்றோர் பரப்பத் தொடங்கினர். அதன் விளைவாக பல்வேறு தேசிய இனங்கள் புதிய விழிப்புணர்வை நோக்கிப் பயணம் செய்யத் தொடங்கினர். மனுதர்மம் மற்றும் அரசியல் அடிமைத்தளத்திருந்து வெளியேற நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிட இயக்கம், தென்னிந்திய நல உரிமைச் சங்கம், தனித்தமிழ் இயக்கம் போன்றவை தமிழகத்தில் தோன்றின. அதன் பின்புலங்களாக பொருளியல் காரணங்களும் அமைந்திருந்தன. அவ்வாறு தோன்றிய திராவிடத் தாக்கம் மிக சக்தி வாய்ந்த ஊடகமான நாடகம், இலக்கியம், திரைப்படம் வழி வெகுசுலமாக மக்களைச் சென்றடைந்தது. அவ்வகையில் திராவிடத் தாக்கம் பெற்ற உடுமலை நாராயண கவியின் பாடற்கருத்துக்களை இக்கட்டுரையில் காண்போம்.

திராவிட இயக்கம்

வெளிப்படையாகக் கடவுள் மறுப்பு மற்றும் பார்ப்பன எதிர்ப்பு என்பதாகக் காட்சி தருவது திராவிட இயக்கம். ஆனால் நிலவுடைமை ஆதிக்க சமுதாய எதிர்ப்பு, தமிழ்த் தேசிய இனத்தின் மறுமலர்ச்சி போன்றவையே அதன் செயல்பாடுகள். தாழ்த்தப்பட்ட மக்கள்; போராட்ட துணிவு தந்தது பெரியாரின் கருத்துப் போராட்டமே எனில் மிகையில்லை. கடனுக்காக நிலங்களைக் கைப்பற்றாமல் தடுப்பது. கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பது. சமூக நீதி, அனைவருக்கும் கல்வி, வேலைவாய்ப்பு, பொதுத்துறையின்

http://Creativecommons.org//license/by/4.0/.

அவசியம் போன்ற கொள்கைகளை முன்னிறுத்திய இயக்கமாக அது உருவெடுத்தது. ஓர் இனம் உல்லாசமாக வாழ்வதும் பிற இனங்கள் பாட்டாளிகளாக உழைப்பதும் கொடுமை என வாதிட்டது. ஆரிய எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, போன்ற கொள்கைகளைக் கொண்டு தமிழகத்தில் அண்ணா தலைமையில் தி.மு.க.ஆட்சியையும் பிடித்தது. 'வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது' போன்ற கருத்தாக்கங்களும் மக்களிடையே மாபெரும் எழுச்சியை உண்டாக்கின. "இனத்தின் உரிமைகளைப் பெறுவதற்காக உலகளவில் பல இயக்கங்கள் தோன்றியிருக்கின்றன. அவற்றின் போராட்டங்கள் பல நூற்றாண்டுகள் நீடித்திருக்கின்றன. தென்னிந்தியாவில் தோன்றிய இயக்கமான திராவிடர் இயக்கம் இந்திய அரசியல் வரலாற்றில் தனி இடத்தைப் பெற்றுள்ளது. அது தன்னுடைய தொடக்கத்திலிருந்தே படிப்படியாக இலட்சியங்களை நிறைவேற்றி, அரை நூற்றாண்டு காலத்தில் அரசியல் - ஆட்சி நிர்வாகத்தின் வாயிலாக சமுதாயத்தில் வரும் மாற்றத்தை ஏற்படுத்தி தற்போது நூற்றாண்டில் அடியெடுத்து வைத்துள்ளது" (கோவி.லெனின், திராவிடர் இயக்கம் நோக்கம் - தாக்கம் - தேக்கம், ப.25) இது சமூக ஏற்றத்தாழ்வை நீக்கி சமூக நீதியை நிலைநாட்ட உருவான ஒரு பேரியக்கமாகும். பி.டி. தியாகராயர், தொடங்கி பெரியார், அண்ணா, கலைஞர், புலவர் குழந்தை, கா.அப்பாத்துரையார், இரா.நெடுஞ்செழியன், எஸ்.எம்.ஜக்கரியா, காரைக்குடி இராம.சுப்பையா, காஞ்சி மணிமொழியார். சி.பி.சிற்றரசு, பாவலர் முடியரசன், என்.வி.நடராஜன், பத்திரிகையாளர், காஞ:சி கல்யாண சுந்தரம் போன்றோர் திராவிடச் சிந்தனைகளை தம் படைப்புகளின் வழியே, பத்திரிகைகளின் வழியே வெளிப்படுத்தினர். கம்பராமாணயம், பெரியபுராணம் குறித்த கருத்து மோதல்கள் வலுப்பெற்றன. திராவிட மன்னனாக இராவணனைப் பார்க்கும் "இராவண காவியம்" ஆரியக் கதாபாத்திரங்களைக் கேலி செய்து, கேள்வி கேட:கும் அண்ணாவின் "நீதி தேவன் மயக்கம்" பொதுவுடைமை சார்ந்து திராவிட இயக்கக் கொள்கைகளை வெளிப்படுத்தும் பாரதிதாசனின் 'இரணியன்' போன்றவை மிக முக்கிய படைப்புகளாகும்.

திரைப்படமும் திராவிடத் தாக்கமும்

திரைப்படங்களின் வசனங்கள், பாடல்கள் மக்களிடையே திராவிடச் சிந்தனைகளை எளிதாகக் கொண்டு சென்றன. மக்களை சிந்திக்க வைத்தன. கலைஞர், அண்ணா எழுதிய திரைப்பட வசனங்கள் அதற்கு முக்கிய சான்றுகளாகும். சுய மரியாதை இயக்கம் தோன்றிய ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகே பேசும் திரைப்படங்கள் வெளிவந்தன. "திராவிடக் கருத்துக்களை முதன்முதலில் திரைப்படங்களின் மூலமாக வெளியிட்டவர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், (க.திருநாவுக்கரசு, திராவிட இயக்கத் தூண்கள், தொகுதி - 1 ப.143) பொதுவாக நகைச்சுவைக் காட்சி என்பது கேலி, கிண்டல், முரண் நிகழ்வுகள் மூலமாக பதிவு செய்யப்பட்டதைக் கலைவாணர் மாற்றி அமைத்தார். அதற்குப் "பெரியாரின் சுய மரியாதை இயக்கம், குடியரசுப் பத்திரிகை, அவ்வியக்கப் பேச்சாளர்களின் அறிவார்ந்த பேச்சு - இவையே அவரை மாற்றின" என்பர். (க.திருநாவுக்கரசு, மேலது, ப.143)

http://Creativecommons.org//license/by/4.0/.

எம்.ஆர்.ராதா திரைப்படங்களில் பேசும் பகுத்தறிவு வசனங்கள் இன்றும் புகழ்பெற்றவையாகத் திகழ்கின்றன. அவை ரீல்ஸ் எனப்படும் வீடியோக் காட்சிகளில் இன்றும் சமூக ஊடகங்களில் வெளியிடப்படுகின்றன. திரைப்பட இயக்குநர் மற்றும் நடிகருமான மணிவண்ணன், சத்யராஜ் போன்றோர் பேசிய பகுத்தறிவு வசனங்களும் குறிப்பிடத்தக்கவை. சின்னக் கலைவாணர் என அழைக்கப்படும் நகைச்சுவை நடிகர் விவேக்கின் வசனங்களும் பகுத்தறிவு சிந்தனைகளைப் பரப்புவதாக அமைந்திருந்தன. சமூக விழிப்புணர்வுச் சிந்தனைகளை அவர் திரைப்படத்தில் சொல்லும்போது பாமர மக்களுக்கும் சென்று சேர்பதாக அமைந்திருந்தது. பெரியார் அரசியலில் செய்த அதே பகுத்தறிவுப் பரப்புரையை சினிமாவில் புகுத்தி வெற்றி கண்டவர் அவர், 'அடப்பாவி ஒரு லாரில எழுநூற்றம்பது ஸ்பேர் பார்ட்ஸ் இருக்கு..... அதுல ஓடாத லாரியாடா ஒரு எலுமிச்சம்பழத்துல ஓடப் போகுது' என அவர் கேட்கும் வசனம் இன்றும் பிரபலம். சாமி என்ற திரைப்படத்தில் ஒரு பிராமணக் கதாபாத்திரத்தில் வந்து பேசும் முற்போக்குக் கருத்துக்களும் குறிப்பிடத்தக்கவையாகும். உடல் சார்ந்த நகைச்சுவை விட்டு உரையாடல் சார்ந்த நகைச்சுவையச் சாத்தியமாக்கியதும் அவரே.

'ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை .....' எனத் தொடங்கும் சினிமாப் பாடல் வரிகளையும், 'உதயசூரியனின் பாதையிலே..... உலகம் விழித்துக் கொண்ட வேளையிலே..... நல்லவரெல்லாம் நலம் பெறுவார் என்ற நம்பிக்கை பிறக்கிறது' என்ற சினிமா பாடல்வரிகளையும் மக்கள் மனத்திலிருந்து நீக்கி விட முடியுமா என்றால் கேள்விக்குறி தான் பதிலாக அமைகிறது.

உடுமலை நாராயணகவி

கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள பூளைவாடி என்ற சிற்றூரில் 1899 ஆம் ஆண்டு பிறந்தார். உடுமலை நாராணகவி இளம் வயதிலேயே தாய் - தந்தையை இழந்து தமையன் தனுஞ்கோடி ஆதரவில் வளர்ந்தவர். நான்காம் வகுப்பு வரை மட்டுமே பயின்றார். முத்துச்சாமிக் கவிராயர் என்பவரிடம் தமிழ்க் கற்றார். கலைவாணிடம் ஏற்பட்ட பழக்கத்தால் அண்ணா, கலைஞர் போன்ற திராவிட இயக்கத் தலைவர்களின் நட்பு கிடைத்தது. அதனால் படைப்பில் திராவிட இயக்கப் பார்வையையும் பகுத்தறிவுப் பார்வையையும் அமைத்துக் கொண்டார். "கலைலவாணரும் கவிராயரும் இணைந்து தமிழகத்தில் ஒரு கருத்துப் புரட்சியையே உருவாக்கினார்கள் என்பது முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உன்னதக் கருத்துரை" ஆகும். (உடுமலை நாராயண கவி பாடல்கள், ப.4) உடுமலையாரைத் திரைப்படத்துறைக்குக் கொண்டு வந்தவர் கலைவாணர். அவர் நாட்டுப்புறச் சாயலில் திரைப்படப் பாடல்களை எழுதியவர். பகுத்தறிவு மற்றும் சமதர்மக் கொள்கைகளை தம் பாடல்களில் பதிவு செய்தார் கலைவாணர். பாடிய பாடல்கள் பெரும்பாலானவை உடுமலை நாராயண கவி இயற்றியவை ஆகும். கலைஞர் மற்றும் அண்ணாவின் திரைப்படங்களிலும் இவர் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

http://Creativecommons.org//license/by/4.0/.

ஆரிய கலாச்சார எதிர்ப்பு

ஆரியம் மற்றும் திராவிடம் ஆகிய இரண்டும் முரண்பட்ட கலாச்சாரங்களாகும். சுரண்டலையும் ஏமாற்றுதலையும் அடிப்படையாகக் கொண்டது ஆரியக் கலாச்சாரம் என்றால் சமதர்மத்தையும் சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டது திராவிடக் கலாச்சாரமாகும். கலை, பண்பாடு. பழக்கவழக்கங்கள் என அனைத்திலும் வேறுபட்டவை ஆரியக் கலாச்சாரமாகும். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதிய இராபர்ட் கால்டுவெல் திராவிட மொழிக்குடும்பம் எனக் கூறியுள்ளது இங்கு ஒப்பு நோக்கத்தது. அதே போல் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை மனோன்மணியத்தின் மொழி வாழ்த்துப் பாடலில் 'திராவிட நல்திருநாடும்' என எழுதியதும் இங்கு குறிக்கத்தக்கது. இவ்வழியில் உடுமலை நாராயண கவியும் ஆரிய கலாச்சாரங்களை எதிர்த்துப் பாடியுள்ளார். இதனை,

"பகுத்தறிவுக்கு ஒவ்வாத பஞ்சாங்கப் பாடைதனைப்
பார்ப்பனர்கள் சரிபாதி பாய்ச்சி விட்டார்...."

(உடுமலை நாராயண கவி பாடல்கள், ப.12)

"சாஸ்திரம் படிப்பது அந்தக் காலம்
சரித்திரம் படிப்பது இந்தக் காலம்"

(உடுமலை நாராயண கவி பாடல்கள், ப.18)

போன்ற பாடல்வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

மதவெறி எதிர்ப்பு

மனிதர்களின் மனதில் உள்ள மத உணர்வு என்பது கடவுள் எனும் அமானுஷ்ய சக்தியை அடிப்படையாகக் கொண்டதாகும். உலகில் ஒரே கடவுளோ ஒரே மதமோ இல்லை. எண்ணற்ற மதங்கள் உள்ளன. ஆனால் சிக்கல் என்பது 'என் மதம் தான் சிறந்தது' என்ற வாதத்தில் தொடங்குகிறது. இந்த வாதத்தை ஆளும் வர்க்கங்கள் அவர்களுக்கு எதிராக மக்கள் திரண்டு விடாமல் இருக்க அல்லது அவர்களுக்குள்ளாhகவே அடித்துச் சண்டையிட்டுக் கொள்ள பயன்படுத்திக் கொள்கின்றன. பாமர மக்களிடம் இருக்கும் இயல்பான மத உணர்வு தனி மனித அல்லது சமூக பயத்தால் உருவானது. ஆனால் மதவெறி என்பது ஆதிக்க சக்திகளால் திட்டமிட்டு உருவாக்கப்படுவது. இதைத்தான் திராவிட இயக்கங்கள் எதிர்க்கின்றன. அதனை உடுமலை நாராயண கவி,

"மதம் ஜாதி பேதம்
மனசை விட்டு நீங்கலே - காந்தி
மகான் சொன்ன வார்த்தை போலே
மக்கள் இன்னும் நடக்கலே" (உடுமலை நாராயண கவிபாடல்கள், ப.16)

http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற பாடல் வரிகளில் இடித்துக் கூறியுள்ளார்.

சாத்திரங்கள் மூலம் மக்களை முட்டாளாக வைத்திருப்பது தான் மத வெறியர்களின் கோட்பாடு அதனை மக்கள் உணர்ந்து விட்டால் அந்த சாத்திரங்கள் பொய் என அறிந்து விட்டால் உலகில் மத சுரண்டல் அழிந்துவிடும். இதனைக் கவிஞர் உடுமலை நாராயண கவி,

அன்பே கடவுள் என்பது எதனாலே? - அதில்

ஆன்ம சக்தி இன்பம் இருப்பதாலே!

சாத்திரங்கள் பொய் என்பது எதனாலே? - ஏ

மாத்துற வார்த்தையும் இருப்பதாலே!"

(உடுமலை நாராயாண கவி பாடல்கள், ப.119)

என்று பாடியுள்ளார்.

மூட நம்பிக்கை ஒழிப்பு

கடவுளிடம் காணிக்கை செலுத்திவிட்டால் துன்பம் போய்விடும் என்று ஆஸ்திகர்கள் சொல்லி, பிறரைச் செய்யத் தூண்டுகிறார்கள். அதில் உண்மை இல்லை என்பதைக் கவிஞர்,

"சாஸ்திரம் காட்டும் சுயநல மோகம்

ஆஸ்திகமா?

காணிக்கை கொடுத்து கற்பூரச் சுடரால்

கடவுளைக் காண்பது ஆஸ்திகமா?....

சம்சாரி உழைத்துச் சந்யாசி கொழுக்கத்

தருமம் புரி எனல் ஆஸ்திகமா?

கருடனைக் கண்டால் கிருஷ்ணா கிருஷ்ணாவெனக்

கன்னத்தில் போடுவது ஆஸ்திகமா? ...

கோத்திரமாலை கீர்த்தனம் பாடிச்

சுண்டல் புசிப்பது ஆஸ்திகமா?...

போட்டி போட்டுச் சீமாட்டிகள் வைத்திடும்

பொம்மைக் கொலுவுகள் ஆஸ்திகமா?...

((உடுமலை நாராயண கவி பாடல்கள், பக்.129 - 130)

http://Creativecommons.org//license/by/4.0/.

ஆகிய வரிகளின் மூலம் கேள்வி எழுப்பி சிந்திக்கச் செய்துள்ளார். மேலும், சமய வாதிகளின் மூடநம்பிக்கைகள் மனதை மயக்குபவை என்றும் அதில் மனம் சென்றால் அறிவை இழந்துவிடுவோம் என்றும் எடுத்துக் கூறியுள்ளார். இதனை,

கற்சிலையும் சித்திரமும் கண்டு - அதன்

கட்டழகிலே மயக்கம் கொண்டு - வீண்

கற்பனையெல்லாம் மனதில் அற்புதமென்றே மகிழ்ந்து

விற்பனை செய்யாதீர் மதியை"

(உடுமலை நாராயண கவி பாடல்கள், ப.132)

என்ற பாடல் வரிகளின் மூலம் உணர்த்தியுள்ளார்.

சமத்துவம்

இந்த சமூகம் முன்னேறத் தேவை சமத்துவம். சமூகப் பிரச்சனைகளை மட்டுமின்றி பொருளாதாரக் கண்ணோட்டத்தையும் பகுத்தறிவுப் பார்வையில் நோக்கியது திராவிட இயக்கம். இதனைக் கவிஞர்,

"பார்தனிலே யாரும் பகவான் பெற்ற பேரே - எனில்

பகைமையோடு பாகுபாட்டைப் படைத்தவர் யாரே?

தாழ்ந்தோர் உயர்ந்தோராக மக்கள் வாழுகின்றாரே?

.....

கோடானு கோடி உயிர்க்கு ஒரு தந்தை என்றாலே - சிலர்

கோட்டையில் பலர் குடிசையில் குடியிருப்பது எதனாலே?

(உடுமலை நாராயண கவி பாடல்கள், ப.124)

என்ற வரிகளின் மூலம் கேள்வி எழுப்பியுள்ளார். இந்த நிலை மாற சமத்துவம் ஒன்றே வழி என்பதையும் அவரே எடுத்துக் கூறியுள்ளார். இதனை,

"சீர்தரும் சமத்துவம்

தேசிய மகத்துவம்

பார்மீதினிலே மேலோங்கிடவே

பழகுவோம் உலகினிலே" (உடுமலை நாராயண கவி பாடல்கள், ப.91)

என்ற பாடல் வரிகளின் மூலம் உணரலாம்.

http://Creativecommons.org//license/by/4.0/.

முடிவுரை

இவ்வாறாக உடுமலை நாராயணகவி பகுத்தறிவுச் சிந்தனைகளை தம் பாடல்களின் மூலம் பரப்பியுள்ளார். தீனா... மூனா... கானா...என்ற பாடல் ஒன்றே அவர் பகுத்தறிவுக் கவிராயர் என்பதற்குச் சான்றாக விளங்குகிறது. கல்லி, சமத்துவம், பெண் முன்னேற்றம் போன்றவற்றில் திராவட இயக்கங்கள் உருவாக்கிய வளர்ச்சி மற்றும் சமூகத் தாக்கத்தில் உடுமலை நாராயண கவிக்கும் பங்கு உண்டு என்பதை இதன் மூலம் அறியலாம்.

துணை நின்ற நூல்கள்

1. உடுமலை நாராயண கவி - உடுமலை நாராயண கவி பாடல்கள், பாரி புத்தகப் பண்ணை,சென்னை

2. திருநாவுக்கரசு, க., - திராவிட இயக்கத் தூண்கள் தொகுதி - 1, நக்கீரன் வெளியீடு,சென்னை.

3. பொன்மாறன், - திராவிட இயக்கங்களின் வரலாற்றுப் பின்னணி, வேங்கை பதிப்பகம், மதுரை.

4. லெனின், கோ.வி., - திராவிடர் இயக்கம் - நோக்கம், தாக்கம், தேக்கம்,நக்கீரன் வெளியீடு,சென்னை.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

34. திராவிடப் பார்வையில் பெண்ணுரிமைச் சிந்தனைகள்

முனைவர் பொ. அமுதா
உதவிப்பேராசிரியார், தமிழ்த்துறை
பிராவிடென்ஸ் மகளிர் கல்லூரி, குன்னூர்.
DOI 10.5281/zenodo.13763950.

Abstract:

In this article on feminism in the Dravidian view, the main point is that the people have emphasized only that (chastity) for women in the dual nature of man and woman, and this insistence has largely led to the enslavement of women. It is to emphasize that there should be equal justice for both men and women.

கட்டுரைச் சுருக்கம்

திராவிடப்பார்வையில் பெண்ணுரிமைச் சிந்தனைகள் என்னும் இக்கட்டுரையில் முக்கியக் கருத்தெல்லாம் மக்கள் ஆண் - பெண் என்ற இரு சாராரில் பெண்களுக்கு மாத்திரமே அது (கற்பு) வலியுறுத்தப்பட்டிருக்கிறதென்றும், இவ்வலியுறுத்தலே பெண்ணை அடிமையாக்கப் பெரிதும் காரணமாய் வந்திருக்கிறதென்றும், ஆண் - பெண் இருவரும் சரிசமமான சுதந்திரத்துடன் வாழவேண்டும் என்கிற நிலைமை ஏற்பட வேண்டுமானால், மேற்கண்ட கற்பு என்பதன் அடிப்படையான லட்சியமும் கொள்கையும் மாற்றப்பட்டு அது விஷயத்தில் ஆண்- பெண் இருவருக்கும் ஒன்று போன்ற நீதி ஏற்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகும்.

கற்பு

கற்பு என்ற வார்த்தையைப் பகுபதம் ஆக்கிப் பார்த்தோமானால் 'கல் ' என்பதிலிருந்து வந்ததாகவும் அதாவது' படி' படிப்பு என்பது போன்ற 'கல்' கற்பு என்கின்ற இலக்கணம் சொல்லப்பட்டு வருகிறது. அன்றியும் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்கிற வாக்கியப்படி பார்த்தால் கற்பு என்பது சொல் தவறாமை அதாவது நாணயம், சத்தியம், ஒப்பந்தத்திற்கு விரோதம் இல்லாமல் என்கின்றதான கருத்துக்கள் கொண்டதாக இருக்கின்றது. அதை பகாப் பதமாக வைத்துப் பார்த்தால் மகளிர் நிறை என்று காணப்படுகிறது. இந்த இடத்தில் மகளிர் என்பது பெண்களையே குறிக்கும் பதமாக எப்படி ஏற்பட்டது என்பது விளங்கவில்லை. நிறைஎன்கிற சொல்லுக்குப்பொருளைப் பார்த்தால் அழிவின்மை, உறுதிப்பாடு, கற்பு என்கின்ற பொருள்களே காணப்படுகின்றன. கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டது என்பதற்குத் தக்க ஆதாரம் கிடைக்காவிட்டாலும் அழிவில்லாதது உறுதி உடையது என்கின்ற பொருள்கள் காணக் கிடைக்கின்றன.

கற்பு என்பதற்கு பதி விரதம் என்று எழுதிவிட்டு, அதன் பலனாலும் பெண்களை விட ஆண்கள் செல்வம், வருவாய், உடல்வலிவு கொண்டவர்களாக ஆக்கப்பட்டு விட்டதனாலும் பெண்கள் அடிமையா வதற்கு, புருஷர் மூர்க்கர்களாகி கற்பு என்பது

http://Creativecommons.org//license/by/4.0/.

தங்களுக்கு இல்லை என்று நினைப்பதற்கும் அனுகூலம் ஏற்பட்டதே தவிர வேறில்லை. புருஷர்கள் கற்புடையவர் என்று குறிக்க நமது மொழிகளில் தனி வார்த்தைகளே காணாமல் மறைபட்டுக் கிடப்பதற்கு காரணம் ஆண்களின் ஆதிக்கமே தவிர வேறில்லை. உண்மையாகவே பெண்கள் விடுதலை வேண்டுமானால், ஒரு பிறப்புக்கொரு நீதி வழங்கும் நிர்பந்தக் கற்பு முறை ஒழிந்து இரு பிறப்பிற்கும் சமமான சுயேச்சைக் கற்பு முறை ஏற்படவேண்டும். கற்புக்காகப் பிரியமற்ற இடத்தைக் கட்டி அழுது கொண்டிருக்கச் செய்யும் படியான நிர்பந்தக் கல்யாணங்கள் ஒழிய வேண்டும்.

கற்புக்காக புருஷனின் மிருகச் செயலைப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்கின்ற கொடுமையான மதங்கள், சட்டங்கள் மாய வேண்டும்.

கற்புக்காக மனத்துள் தோன்றும் உண்மை அன்பை, காதலை மறைத்துக் கொண்டு, காதலும் அன்பும் இல்லாதவனுடன் இருக்க வேண்டும் என்கின்ற சமூகக் கொடுமையும் அழிய வேண்டும். எனவே இக்கொடுமைகள் நீங்கின இடத்தில் மாத்திரமே மக்கள் பிரிவில் உண்மைக் கற்பை, இயற்கைக் கற்பை, சுதந்திரக்கற்பைக் காணலாமே ஒழிய நிர்பந்தங்களாலும் ஒரு பிறப்புக்கு ஒரு நீதியாலும் வலிமை கொண்டவன் வலிமையற்றவனுக்கு எழுதி வைத்த தர்மத்தாலும் ஒருக்காலும் காண முடியாது என்பதுடன், அடிமை கற்பையும் நிர்பந்தக் கற்பையும் தான் காணலாம். அன்றியும் ,இம்மாதிரியான கொடுமையைவிட வெறுக்கத்தக்க காரியம் மனித சமூகத்தில் வேறொன்று இருப்பதாகச் சொல்ல முடியாது.

காதல்

காதல் என்பது "ஒருவரிடம் ஒருவருக்குமாக- இருவருக்கும் ஒரு காலத்தில் காதல் ஏற்பட்டு விட்டால் பிறகு மாறவே மாறாது" என்றும், பிறகு வேறொருவரிடம் காதல் ஏற்பட்டு விட்டால், அது காதலாக இருக்க முடியாது; அதை விபச்சாரம் என்றுதான் சொல்ல வேண்டுமே ஒழிய அது ஒருக்காலும் காதலாகாது என்றும் மற்றும் ஒரு இடத்தில் உண்மைக் காதல் ஏற்பட்டு விட்டால் பிறகு யாரிடமும் காமமோ, மோகமோ, விரகமோ ஏற்படாது "என்றும் சொல்லப் படுகின்றன. காதல் என்கின்ற சொல் ஆண் பெண் கூட்டுத் துறையில் அன்பு, ஆசை, ஆவல், நட்பு, நேசம், விரகம் என்பவைகளைத் தவிர வேறு பொருள்கள் எங்கும் எதிலும் காணப்படவில்லை. அன்றியும் அகராதியில் பார்த்தாலும் மேற்கண்ட பொருள்களை தவிர வடமொழி மூலத்தை அனுசரித்துக் காதல் என்பதற்கு கொலை, கொல்லல், வெட்டுதல், முறித்தல் என்கின்ற பொருள்கள் தான் கூறப்படுகின்றன மற்றபடி தனித் தமிழ் மொழியில் பார்த்தாலும் ஆண்-பெண் சேர்க்கை, கூட்டு முதலாகியவை சம்பந்தமான விஷயங்களுக்கு அன்பு, ஆசை, நட்பு, நேசம் என்பவைகளைத் தவிர வேறு தமிழ் மொழியிலும் நமக்குக் காணப்படவில்லை.

http://Creativecommons.org//license/by/4.0/.

மறுமணம் தவறல்ல

மனைவி இருக்க மறுமணம் செய்துகொள்வது "சீர்திருத்தக் கொள்கைக்கு விரோதம்" என்று கருதுகிறார்கள். மணம் என்பதை நாம் மணமக்கள் தங்கள் வாழ்க்கைச் சவுகரியத்திற்காகச் செய்து கொள்ளப்படும் ஒரு ஒப்பந்த ஏற்பாடு என்றுதான் கருதுகிறோம். ஆதலால், அதில் இவர்களுடைய சுயேச்சையையும் சேர்த்தோ அல்லது தனித்தனியோ கட்டுப்படுத்தும் எவ்விதக் கொள்கைக்கும் இடம் இருக்கக் கூடாது என்றும் கருதுகின்றோம். ஆனால், அனுபவத்தில் உள்ள சில சவுகரிய, அசவுகரியங்களை உத்தேசித்தும், இயற்கை தடுப்பு, சமுதாய வாழ்க்கை நலக் கொள்கை முறை முதலியவைகளை உத்தேசித்தும் அன்பும் ஆசையும் கட்டுப்பாட்டுக்குள் அடங்க வேண்டியதாக ஏற்படலாம் என்பதை நாம் மறுக்க வரவில்லை .அன்றியும் ஒப்பந்தங்களினால் கட்டுப்பட வேண்டியதாகவும் ஆசை பெருக்கால் தானாகவே கட்டுப்பட்டு விட்டதாகவும் போனாலும் போகலாம். அம்மாதிரி நிலைகளில் இம்மாதிரி கேள்விக்கே இடமில்லை ஆதலால் அப்படிப்பட்ட காரியங்களை அவரவர் இஷ்டத்திற்கு விட்டுவிட வேண்டியது அவசியமாகும்

உலக வாழ்விலும் சமுதாயத்திலும், சட்டத்திலும், மதத்திலும் ஆண்களுக்கு ள்ள சவுகரியங்களும் உரிமைகளும் பெண்களுக்கும் இருக்க வேண்டும் என்றும் அப்பொழுது தான் பெண்கள் திருப்திகரமான இன்பத்தையும் ஆசையையும் அடைய முடியும் என்றும் கருதுகின்றோம்

விபச்சாரம்

"விபச்சாரம்" என்னும் வார்த்தையானது பெரும்பாலும் ஆண்-பெண் இருவரும் சட்டத்திற்குப் புறம்பாகக் கொண்டிருக்கும் உடலுறவைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். திருமண ஒழுங்கு முறையை அல்லது திருமணத்தின் புனிதத்தன்மையைக் கட்டுடைக்கும் சொல்லாட்சியே விபச்சாரமாகும். திருமண உறவின் மதிப்பிற்கு எதிரான இருமைச்சொல் இருக்குமாயின் அச்சொல் தான் விபச்சாரம். அதாவது, "விபச்சாரம்" என்பதைப் "பாலியல் ஒழுக்கக்கேடு" எனலாம்.

ஒரு பெண் சட்டப்பூர்வமான தன் கணவனை விடுத்துப் பிற ஆடவர்களிடம் உடல்நீதியான தொடர்பை, விரும்பி வைத்திருக்கும் பொழுது அப்பெண்ணுக்குச் சமுதாயம் வழங்கக்கூடிய பெயர் "விபச்சாரி". இப்பெயர் அப்பெண்ணின் மீது சுமத்தப்படும், குற்றச்சாட்டுப் பெயராகவும், பழிச்சொல்லாகவும் வழக்கத்தில் இருந்து வருகிறது. திருமண உறவிற்கு முரண்பட்டு, பாலியல் ஒழுக்கக்கேட்டில் ஈடுபடும் பெண்ணுக்குப் பயன்படுத்தப்படும் சொல் "விபச்சாரி" என்றால் திருமண உறவிற்கு முரண்பட்டுப் பாலியல் ஒழுக்கக்கேட்டில் ஈடுபடும் ஆணுக்கு "விபச்சாரன்" என்னும் சொல்லை, இச்சமுதாயம் ஏன் பயன்படுத்துவதில்லை?

http://Creativecommons.org//license/by/4.0/.

ஒன்றுக்கொன்று முரணான இரண்டு மூலப்பொருள்களைக் கொண்டு இவ்வுலகம் இயங்கி வருகிறது என்பதே இருமைக் கொள்கையின் (Dualism) தத்துவமாகும். பஞ்சபூதங்களால் ஆக்கப்பட்டுள்ள இவ்வுலகம் இருமைக் கொள்கைக்கு உட்பட்டே இயங்கி வருகிறது என்பது உண்மை. இருமைக் கொள்கையினை ஏற்றுக்கொள்ளும் சமுதாயம், குற்றச்சாட்டுக்கும், பழிப்புக்கும் உபயோகப்படுத்தப்படும் "விபச்சாரி" என்னும் சொல்லைப் பெண்ணுக்கு மட்டுமே வழங்குவது சரியல்ல. அதாவது பொது ஒழுக்கங்களுக்கு எதிரான விபச்சாரத்தில் ஈடுபடும் ஆண்களுக்கும் "விபச்சாரன்" என்னும் சொல்லைப் பயன்படுத்துவதே முறையானதாகும். ஆனால், முறையான ஒன்று வழக்கத்தில் இல்லாததால், பெண் என்பவளை இச்சமுதாயம் "அடிமை" என்று தான் கட்டமைத்துள்ளது என்பது புலனாகிறது.

விதவைகள் நிலைமை

உலக இன்பத்தை நுகர்ந்து அலுத்துப் போயிருக்கும் பழுத்த கிழவன் ஆனாலும் கிழவயதினன் ஆயினும் தன் மனைவியை இழந்தவுடன் மறுமணம் புரிய முயலுகிறான் அதுவும் தக்க பருவமும் எழிலும் பொருந்திய இளம் கன்னியர்களைத் தன் துணைவியாக தேர்ந்தெடுத்து கொள்கின்றான். ஆனால் ஒரு பெண் மகள் கொழுநன் இறந்துவிட்டால் 16 வயது கட்டழகி ஆயினும் உலக இன்பத்தை சுவை தெரியாத வனித ரத்தினம் ஆயினும் தன் ஆயுள் காலம் முழுவதும் அந்த தன் இயற்கை கற்பனை வலியை அடக்கிக் கொண்டு மனம் நைந்து வருந்தி மடியும் படி நிர்ப்பந்திக்கப்பட்டு வருவது என்ன அநியாயம்! முன்காலத்தில் கணவனை பறிகொடுத்த பெண்மணிகளை கணவனுடன் வைத்து எரித்து சாம்பலாக்கி விடுதல் வழக்கமாயிருந்தது. இக்கொடிய வழக்கத்தை அக்காலத்தில் ஆங்கிலேய வியாபாரிக் கூட்டத் தலைவராய் இருந்த வாரன் ஹேஸ்டிங் ஷும்,சுவாமி தயானந்த சரஸ்வதி போன்ற இந்திய நாட்டு அறிவாளிகளும் பெரும் முயற்சி செய்து, கொடும் பழக்கத்தை ஒழித்து விட்டனர். உடன்கட்டை ஏறுவதை' நிறுத்துவதற்காக போராடிய அக்காலத்திலும் இந்து மத ஆச்சாரம் அழிந்து போவதாகவும் வந்துவிட்டதாகவும் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது ஆனால் நாளடைவில் அக்கூக்குரல் அடங்கி 'ஸ்ககமனம்' என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கம் இந்தியாவை விட்டு அறவே மறைந்தது. உலகில் மனித வர்க்கத்தின் அருகில் இருக்கும் அடிமைத் தன்மை ஒழிய வேண்டுமானால் பெண் உலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும் கொடுமையும் அழிய வேண்டும். அது அழிந்த நிலையே சமத்துவம், சுதந்திரம் என்னும் முளை முளைக்கும் இடமாம். இதற்கு விதவைகளுக்கு மறுமணம் செய்து கொள்ள உரிமை ஏற்படுத்துவதே முதல் காரியம் ஆகும்.

தேசிய சர்வாதிகாரியும் வர்ணாசிரமப் பித்தும், பழமைப்பற்றும் மிக்குடைய தோழர் காந்தியும் இந்து விதவைகளைப் பற்றி அநேக இடங்களில் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார். அவற்றில் 1925 ஆம் வருடத்தில்' நவஜீவன்' பத்திரிகையை படித்தால் உண்மை பலனாகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

அக்கட்டுரையில் சில : -

"பால்ய விதவைகளை கட்டாயப்படுத்தி வைத்திருப்பது போன்ற இயற்கைக்கு விரோதமான பொருள் உலகில் வேறு ஒன்றும் இல்லை என்பது திடமான நம்பிக்கை. விதவைத் தன்மை என்பது எவ்விதத்திலும் ஒரு தர்மமாகாது, பலாத்காரத்தல் நடத்தும் கைமை வாழ்வு பாவமானது, 15 வயதுள்ள ஒரு பால்ய விதவை தானாகவே விதவை வாழ்வைக் கொண்டிருக்கிறாள் என்று சொல்லுவது, அவ்விதம் கூறுபவரின் கொடூர சுபாவத்தையும் அறியாமையையுமே அது விளக்குகிறது" (பக்.59 பெண் ஏன் அடி) என்று எழுதி விட்டு **விதவைகள் மறுமணம் செய்து கொள்ள வேண்டுமென்பதாக உள்ளன்போடும் ஆவேச கிளர்ச்சியோடு காந்தி கூறிய வார்த்தைகள் சிலவற்றை இன்று கவனிப்போம்**. அமைதியுடன் தங்களுடைய உண்மையான கருத்தை தங்களின் பெற்றோர் அல்லது போஷகர்களான ஸ்தீரி, புருஷர்களிடம் தைரியமாய்ச் சொல்லிவிடவேண்டும் .அவர்கள் அதை கவனிக்காவிட்டால், தாங்களே ஒரு யோக்கியமான புருஷன் கிடைத்தால் விவாகம் செய்து கொள்ளட்டும் விதவைகளின் போஷகர்கள் இதைச் சரிவரக் கவனியாவிடின் பின்னால், பச்சாதாபப் படுவார்கள். ஏனெனில், ஒவ்வொரு இடத்திலும் தூரசாரத்தையே பார்த்துக் கொண்டு வருகிறன்". " (பக்.60 பெண் ஏன் அடி)

தமிழ் மக்கள் இனி நாட்டின் நலத்தையும் சக முன்னேற்றத்தையும் மனுஷிக ஜீவகாருண்யத்தையும் எண்ணி, இவ்விஷயத்தில் முன் போன்று சிரத்தை குன்றியிராது, ஆங்காங்கே விதவா விவாகம் சபைகள் ஏற்படுத்தியும், பிரச்சார பிரசங்கங்கள் செய்தும், துண்டுபிரசுரங்கள் வெளியிட்டும் விதவை தன்மையின் கொடுமையை ஒழிக்க முன்வர வேண்டும்.

சொத்துரிமை

இந்திய பெண்கள் சமூகத்தில் அடியோடு பிறவியில் சுதந்திரத்திற்கு அருகதையற்றவர்கள் என்றும் ஆண்களுக்கு அடிமையாகவே இருக்க **'கடவுளாலேயே' சிருஷ்டிக்கப் பட்டவர்கள்** என்றும் கற்பித்து, அவர்களை நகரும் பிணங்களாக நடத்துவதாகும். ஆகவே ஆண்களைப் போன்றே சொத்து உரிமை பெறுவதற்கே செய்யப்படவேண்டும் பெண்களுக்கு சொத்துரிமை இருந்துவிட்டால் அவர்களுக்கு இருக்கும் எல்லாவிதமான அசவுகரியங்களும் ஒழிந்துபோகும். கேவலம் தாசிகளுக்குச் சொத்துரிமை இருப்பதால் அவர்கள் தங்கள் குடும்பங்களில் தங்கள் சமுதாயத்தில் எவ்வளவு சுதந்திரம் உடையவர்களாக இருக்கிறார்கள் என்று பார்த்தால், குடும்ப ஸ்திரீகளுக்கு சொத்துரிமை இருந்தால் எவ்வளவு மேன்மையாய் வாழ்க்கை நடத்துவார்கள் என்பது விளங்கும். அன்றியும் பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்படாததற்குக் காரணம் இதுவரை யாரும் சொன்னதே கிடையாது. பெண்களுக்கு படிப்பு, தொழில் ஆகிய இரண்டும் பெற்றோர்களால் கற்பிக்கப் பட்டு விட்டால் சொத்து சம்பாதிக்கும் சக்தி வந்துவிடும் பின்னர் தங்கள் கணவன்மார்களை தாங்களே தெரிந்தெடுக்கவும் அல்லது பெற்றோர்களால் தெரிந்தெடுக்கப்பட்டாலும் கணவனோடு சுதந்திரமாய் வாழ்க்கை நடத்தவும் தன்னம்பிக்கை வளர்ந்துவிடும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

பெண்ணடிமை என்பதற்கு உள்ள காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதை மிகவும் முக்கியமான காரணம் என்பது நமது அபிப்பிராயம் ஆதலால் பெண்கள் தாராளமாகவும் துணிவுடனும் முன்வந்து சொத்துரிமை கிளர்ச்சி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்

இப்போது மைசூர் சமஸ்தானத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் விஷயமாக யோசனை செய்யப்பட்டு அந்த யோசனையை அரசாங்கமும் ஜன பிரதி நிதிகளும் ஒப்புக்கொண்டு அதற்காக ஒரு கமிட்டியும் நியமித்து கமிட்டியார் பெண்களுக்கு சொத்துரிமை அளிக்கலாம் என்ற தத்துவத்தை ஒப்புக்கொண்டு ஏகமனதாக ரிப்போர்ட் அனுப்பி இருப்பதையும் எல்லா தினசரி பத்திரிக்கைகளிலும் வெளியாகி இருக்கின்றது அதன் முக்கிய பாகம் என்னவென்றால்

1. பெண்கள் வாரிசு சொத்துரிமை அனுபவிக்கத் தகுதி உடையவர்கள் அல்ல வென்பது கொடுமையும் அநீதியும் ஆகும்
2. பெண்கள் சீதனம் நன்கொடை முதலிய சொத்துக்களை அடைந்து அவைகளை வைத்து நிர்வகித்து வர தக்கவர்கள் என்ற உரிமையும் வளமையும் இருக்கும் போது வாரிசான சொத்தை அடைய ஏன் தகுதியுடையவர்களாக மாட்டார்களா
3. பெண்களுக்கு வாரிசு சொத்துரிமை இல்லை என்பது பெண்கள் முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பதோடு பொதுவாக இந்து சமூக முன்னேற்றத்திற்கு இடம் இருக்கிறது
4. ஆகவே அவற்றிற்கான சட்டம் செய்ய வேண்டியதும் பெண்கள் என்கிற காரணத்திற்காக இவர்களுக்கு எவ்வித சிவில் உரிமையும் தடுப்பது கூடாது என்று திட்டமாய் முடிவு செய்துவிட வேண்டியதுமான காலம் வந்துவிட்டது
5. எந்தவிதமான சீதன சொத்தையும் பெண்கள் தங்கள் இஷ்டப்படி வினியோகித்து கொள்ளலாம் என்பவைகளாகும் (பக் .67 பெண் ஏன் அடி)

இவை ஒரு புறமிருக்க மற்றொரு விஷயத்திலும் பெண்களுக்கு சில சுதந்திரங்கள் அளிக்க கமிட்டி சிபாரிசு செய்து இருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும் என்னவென்றால் புருஷன் மேக வியாதிக்காரனாகவாவது, கொடிய தொத்து வியாதிக்காரனாகவாவது, இருந்தாலும், வைப்பாட்டி வைத்திருந்தாலும், தாசி, வேசி வீடுகளுக்குப் போய்க் கொண்டிருப்பவனயிருந்தாலும், மறு விவாகம் செய்து கொண்டிருப்பவன யிருந்தாலும், கொடுமையாய் நடத்தினாலும், வேறு மதத்திற்குப் போய் விட்டாலும், புருஷனை விட்டுப் பிரிந்திருக்கவும் புருஷனிடம் ஜீவனாம்சம் பெறும் உரிமை உண்டு' என்பதாகும். (பக் .66 பெண் ஏன் அடி) அதோடு மேற்படி விஷயங்களை அனுசரித்து ஒரு மசோதாவும் தயாரிக்கப்பட்டு இருக்கின்றதாக காணப்படுகின்றது.

http://Creativecommons.org//license/by/4.0/.

ஆகவே இந்த சட்டம் அனேகமாக கூடிய சீக்கிரம் மைசூர் சமஸ்தான சட்டசபையில் நிறைவேற்றிய சட்டம் ஆக்கப்படும் என்று நம்பலாம் இவற்றில் சொத்துகளின் அளவு விஷயத்தில் ஏதாவது வித்தியாசம் இருந்தாலும் பெண்களுக்கு சொத்துரிமை கொள்ளவும் பெண்கள் புருஷனை விட்டு விலகி இருந்து கொள்ளவும் கொள்கைகளும் ஒப்புக்கொள்ள பட்டிருக்கும் விசயம் கவனித்து பாராட்டத்தக்கதாகும் பெண்களுக்குச் சொத்து வருவாயும் தொழிலும் இல்லாததால் குழந்தைகளை வளர்க்க மற்றவர்கள் ஆதரவை எதிர் பார்த்தே தீரவேண்டிய இருக்கிறது அதனால்தான் நாம் கண்டிப்பாய் பெண்கள் பிள்ளை பெறுவதை நிறுத்தி ஆக வேண்டும் என்கிறார் தந்தை பெரியார்.(பக்கம் .72_பெண் ஏன் அடி_)

கர்ப்பத்தடை

கர்ப்பத்தை அடக்கி நமது நாட்டில் ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தி அதன் மூலம் துண்டு பிரசுரங்களும் பத்திரிகைகளும் புத்தகங்களும் வெளியிடுவதுடன் கர்ப்பத்தடைச் சம்பந்தமாக ஆங்கிலத்திலும் பிற பாகங்களிலும் உள்ள அரிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவது உடன் கர்ப்பத்தடையால் நாடும் நம் பெண்களும் நலத்தையும் சுதந்திரத்தையும் பெறுவதாக நாடகம், சினிமா முதலியவைகள் மூலமாக பிரச்சாரம் செய்ய பொது ஜனங்களின் சிலராவது இதுசமயம் முன்வர வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றோம் என்று (குடியரசு: 1930) குறிப்பிடுகிறார். பெண்கள் விடுதலைக்கு ஆண்மை அழிய வேண்டும் ஆண்மையால் தான் பெண்கள் அடிமை ஆக்கப்பட்டிருக்கிறார்கள். சுதந்திரம், வீரம் முதலிய குணங்கள் உலகத்தில் ஆண்மைக்கு தான் அவைகள் உண்டு என்று மக்கள் முடிவு கட்டிக் கொண்டிருக்கிறார்கள் அன்றியும் இந்து மதம் என்பதில் பெண்களுக்கு என்றென்று விடுதலையோ சுதந்திரமோ எத்துறையிலும் அளிக்கப்படவில்லை என்பதைப் பெண்கள் நன்றாய் உணரவேண்டும்.

முடிவுரை

இக்கட்டுரையில் கண்ட மேற்படி கருத்துக்கள் பெண்கள் எந்தெந்தக் காரணங்களால் அடிமைப்படுத்தப்பட்டார்கள் - அடிமையானார்கள் - அடிமைகளாக இருந்து வருகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டி, எந்தக் காரணக்காரியங்களால் பெண்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திர மக்களாக வாழ முடியும் என்பதை எடுத்துக்காட்டவும் இக்கருத்தை முக்கியமாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும்.

நூல்கள்

1. பெரியாரைக் கொச்சைப்படுத்தும் குழப்பவாதிகள் - ஆசிரியர் விடுதலை ராஜேந்திரன் இரண்டாம் பதிப்பு 1999
2. பெரியாரா? பெரியோரா? - ஆசிரியர் உலகத் தமிழ்க் காவலர் டாக்டர் சி எஸ் எஸ் சோமசுந்தரனார் , முதல் பதிப்பு -1999
3. பெண் ஏன் அடிமையானாள் - பதிப்பாசிரியர் செந்தில்குமார் வெளியிட்ட வருடம் 2020 ஒன்று முதல் பதிப்பு

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

35. திராவிடக் கொள்கைகளும் பண்பாட்டு மாற்றங்களும்

முனைவர் திருமதி நா.கவிதா,
உதவிப்பேராசியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை,
தி ஸ்டாண்டர்டு பயர் ஒர்க்ஸ் இராசரத்தினம் மகளிர் கல்லூரி, (தன்னாட்சி),
சிவகாசி.

DOI 10.5281/zenodo.13766952.

Abstract

It can be said that culture is the total development stage of human race. This culture evolves and travels over time from one generation to another. In this way, the 'Dravidian principle' has the basic principle that the culture found in human thoughts, beliefs, customs, rituals and ethnic lifestyles should be operated with rationality as the key. The 'Dravidian policy' is to put an end to the irrational act of Tamils forgetting their ethnic name due to the Aryan cultural invasion and giving preference to their caste name. Here, Periyar's Dravidian doctrines and Bharathidasan's concepts are presented and the data for the research paper is presented.

மானுட இனத்தின் முக்கால நிகழ்வுகளின் ஒட்டு மொத்த வளர்ச்சி நிலையே பண்பாடு என்று கூறலாம். இப் பண்பாடு, ஒரு தலைமுறையிடம் இருந்து மற்றொரு தலைமுறைக்கு காலம் காலமாக பயணம் செய்து கொண்டே, பரிணாமம் பெறுகின்றன. அவ்வகையில், மனிதனின் எண்ணங்களிலும் நம்பிக்கை பழக்கவழக்கங்களிலும் சடங்குகளிலும் இனம் சார்ந்த வாழ்க்கை முறைகளிலும் காணப்படும் பண்பாடு, பகுத்தறிவை அளவு கோலாகக் கொண்டு இயங்க வேண்டும் என்ற அடிப்படை கொள்கை உடையதே 'திராவிடக் கொள்கை'. தமிழினம், ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பால் தனது இனப்பெயரினை மறந்து சாதிப்பெயருக்கு முன்னுரிமை தந்த, பகுத்தறிவு அற்ற செயலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே 'திராவிடக் கொள்கை'. இங்கு, பெரியாரின் திராவிடக்கொள்கைகள் மற்றும் பாரதிதாசனின் கருத்தாக்கங்களை மேற்கொண்டு ஆய்வுக் கட்டுரைக்கான தரவுகள் முன் வைக்கப்படுகின்றன.

பண்பாட்டு மாற்றம்

பண்பாட்டு மாற்றங்கள் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையிலிருந்து இலக்கியங்கள் வரையிலும் காலந்தோறும் பல்வேறு பரிமாற்றத்தை உள்ளடக்கி, வலுவும் பொலிவும் பெற்று சிறப்படையச் செய்கின்றன. குடும்பம், மொழி, உணவு என எல்லாத் தளங்களிலும் இயங்கக்கூடிய திறம் பொருந்தியதே பண்பாடு. காலத்திற்கேற்ப பண்பாட்டில் ஏற்படக்கூடிய மாற்றங்களும் அறம் சார்ந்த நெறிகளுக்கு உட்பட்டவையாகத் திகழவேண்டும். திராவிடக் கொள்கைகளால் சமூகத்தில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்கள் யாவுமே மக்களுக்கு சமநீதி கிடைப்பவையாகவேத் திகழ்கின்றன.

சமுதாயத்தில் உருவாகும் எல்லா மாற்றங்களும் பண்பாட்டால் இயக்கப்படுகினறன என்று கூறுவர். "பண்பாடு நிறுவன மாற்றங்களுக்கு (institutional changes) உரிய அடிப்படையான ஊற்று (main spring) என்றும் மனிதச் சமுதாயம் பண்பாட்டு நிலையில்

http://Creativecommons.org//license/by/4.0/.

முன்னமே தீர்மானிக்கப்படுகிறது, எனினும் சமுதாய மாற்றம் பண்பாட்டு மாற்றத்தின் பகுதியே ஆகும்"[1] என்று மேக்சு வெபர் கருதுகின்றார்.

மேலும், இந்த மனித சமுதாயம் பண்பாட்டுக் கூறுகளை, சில காலங்களில் கடன் வாங்கும் இயல்பினை உடையதாகத் திகழ்கின்றன. "ஒரு தனிமனிதன் ஒரு குழுவினர் பிற மனிதன் அல்லது குழுவினரிடமிருந்து சமுதாய மதிப்புகள், சமுதாய நியமங்கள் போன்ற பண்பாட்டுக் கூறுகளைக் கடன் வாங்குகின்றனர். அப்போது பரவுதல் அல்லது சிதறுதல் வழியாக மாற்றங்கள் ஏற்படுகின்றன."[2] சமுதாய மதிப்புகளில் மாற்றங்கள் மற்றும் பண்பாட்டு மாற்றங்கள் பற்றி அறிதற்குப் பல நூற்றாண்டுக் கால வரலாற்றறிவு தேவை.

ஒரு நாட்டில் நிகழக்கூடிய புதிய கண்டுபிடிப்பில் தொடங்கி மதமாற்றம், நகரமயமாதல், உயர்குடியாக்கம் மற்றும் புரட்சி போன்ற நிகழ்வுகளே பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்வதற்கான வழி முறைகளாக மிளிர்கின்றன. திராவிடக் கொள்கைகளால் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக சில பண்பாட்டு மாற்றங்கள் சமூகத்தில் அரங்கேறின.

இவ் ஆய்வுக்கட்டுரையில் ஆய்வு பக்க வரையறை கருதி மக்களால் தொடர்ந்து பின்பற்றி வரும் பழக்கவழக்கங்களில் ஏற்பட்ட சில மாற்றங்களாகிய சாதி ஒழிப்பு மற்றும் சமதர்ம பண்பாட்டு மாற்றம், சுயமரியாதைத் திருமணத்திற்கு சட்ட அங்கீகாரம் மற்றும், மானுடருக்கான அடிப்படைத்தேவைகள், கல்வி, குறியீட்டு பண்பாடுகள் ஆகியவற்றில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்கள் மட்டும் இங்கு எடுத்துரைக்கப்பட உள்ளன.

சாதி ஒழிப்பும் சமதர்ம பண்பாடும்

சாதி ஒழிப்புச் சூரியன் பெரியாரின் திராவிடக் கொள்கை, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பதே. உலகில் சமதர்ம பண்பாடு மலர, மானுட பேதமற்ற இடமே தோன்றுதல் வேண்டும். நமது நாட்டு மக்களுக்கு இன்றைய அடிப்படைத் தேவையாக பெரியார் முன்வைத்த கருத்து, 'மூடநம்பிக்கை அழிய வேண்டும், அறிவுக்குச் சுதந்திரமும் விடுதலையும் ஏற்பட்டு மக்களிடையே சாதி ஒழிந்து சமதர்ம பண்பாடு மலர வேண்டும்' என்ற கருத்தாக்கமே. பெரியார் கடவுள் மறுப்பை, சாதி ஒழிப்பிற்கு முன்மையாகக் கூறிய காரணம் வைதீக எதிர்ப்பு, பிராமணிய எதிர்ப்பு என்ற கருத்தாக்கத்திற்காகத் தான், அது அல்லாமல் அங்கு ஆன்மீக எதிர்ப்பு அவரிடம் இல்லை என்பதை பின் வரும் கூற்று எடுத்துரைக்கிறது.

"'மதம் என்பதும், சமயம் என்பதும், சமய நெறி என்பதும், மற்ற ஜீவன்களிடத்தில் மனிதன் நடந்து கொள்ள வேண்டிய நடையயைப் பற்றிய கொள்கைகளைக் கொண்டது' என்பவர்களிடத்திலும் நமக்கு அவ்வளவாகத் தகராறு இல்லை. 'அன்பே சிவம், சிவமே அன்பு' என்பதான சிவனிடத்தில் நமக்குச் சண்டையில்லை. 'அன்பு என்னும் குணம் தான் சிவம்; அந்த அன்பைக் கைக்கொண்டு ஜீவன்களிடத்தில் அன்பு செலுத்துவது தான் சைவம்' என்பதானால் நாமும் ஒரு சைவனாகவும் அதன் மூலம் நாமும் ஒரு சைவன் என்று சொல்லிக் கொள்ளவும் ஆசைப்படுகின்றோம். அது போலவே, 'ஜீவன்களிடத்தில் இரக்கம்

http://Creativecommons.org//license/by/4.0/.

காட்டுவது ஜீவன்களுக்கும் உதவி செய்வது ஆகிய குணங்கள் தான் விஷ்ணு; அக்குணங்களைக் கைக் கொண்டு ஒழுகுவது தான் வைணவம்', இந்த விஷ்ணுவிடமும் நமக்கு அவ்வளவாக தகராறில்லை. இங்கு நாமும் நம்மை ஒரு வைணவம் என்று சொல்லிக் கொள்ளவும் ஆசைப்படுகின்றோம்".[3]

ஆக இங்கு பெரியாரின் கடவுள் மறுப்பு கொள்கை என்பது சாதிய ஒழிப்பு மற்றும் சமதர்ம பண்பாடு அன்றி ஆன்மீக அழிப்பு அல்ல என்பதை அறிந்து கொள்ளலாம்.(பெரியார் சுடலை மாடன் சாமி சிலையை உடைத்தால் அது ஆன்மீக அழிப்பு, அவர் பிள்ளையார் சிலையையே உடைத்தார் அது மதம் என்ற போர்வையில் மக்களை அடிமைப்படுத்திய நிறுவனத்தின் மீதான எதிர்ப்புணர்வே..)

பெரியாரின் திராவிடக் கொள்கைகளைப் பின்பற்றிய பாரதிதாசன் தான் காண விரும்பிய சமுதாயத்திலும், சாதி, மதம், தீண்டாமை, பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லா சமதர்ம பண்பாட்டு மாற்றத்தைக் கொண்டு வர விரும்பினார். அவர் தம் விருப்பத்தை,

"பொய்மை வருண பேதம்
போனால் புனிதத்தன்மை
நம்மில் நாம் காண்போமடி - சகியே
நம்மில் நாம் காண்போமடி"

(**சமத்துவப்பாட்டு**: 365-368. **மூன்றாம் தொகுதி**)

என்ற பாடலடிகளில் காணலாம். மக்கள் அனைவரும் ஒன்றே என்பதையும்,

"**தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்**
தொல்லுக மக்களெலாம் ஒன்றே என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்"

(**உலக ஒற்றுமை**: 13-15, **முதல் தொகுதி**)

இன்பம் எனப்படுவது உலக ஒற்றுமையுடன் சமதர்ம பண்பாட்டுடன் மக்கள் இயங்குவதே என்ற கருத்தாக்கத்தை இதில் காணலாம்.

பல நூற்றாண்டு வரலாறுகளை உள்ளடக்கிய சாதியம் என்பதை அழிக்க முயல்வது எளிமையான நிகழ்வு அல்ல. கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே வைதீக பார்ப்பனியத்தால் இந்தியாவில் முதன் முதலில் சாதியம் தோன்றியது. அதுவரையிலும் தொழில் சார்ந்த குலங்களே காணப்பட்டன. அவர்களுக்குள் அனைவரும் ஒன்றாக இணைந்து வாழ்கின்ற வாழ்க்கையே வாழ்ந்து வந்தனர். கி.பி. 4ஆம் நூற்றாண்டில் குப்தர் காலத்திலே சாதியம் அரசு அங்கீகாரத்தைப் பெற்றது. சங்க காலத்திலும், சங்கம் மருவிய காலத்திலும், களப்பிரர் காலம் வரையிலும் கூட (கி.பி. 550வரை) தமிழகத்திலும், கேரளாவிலும் குடிகள் தான் இருந்தன, சாதிகள் இருக்கவில்லை.

http://Creativecommons.org//license/by/4.0/.

இத்தகைய நீண்ட வரலாறு கொண்ட சாதியத்தினை, சாதிய ஒழிப்பு சமதர்ம பண்பாட்டு மாற்றம் என்று கொணர்வதென்பது, பெரியாரின் திராவிடக் கொள்கைகளால் மட்டுமே சாத்தியமாகியது எனில் அது மிகையல்ல.... ஆனால் பார்ப்பனியம் இன்றும் சாதிகளைப் பாதுகாக்கவே விரும்புகிறது. ஆகவேதான் திராவிடக் கொள்கைகளை இளையோர் பின்பற்றி, சமூகத்தில் மிகப்பெரும் தீமையாக இருந்து வரும் சாதிகளை அழித்தொழிக்கப் பாடுபடவேண்டும், என்ற கருத்தாக்கம் இங்கு முன் வைக்கப்படுகின்றது.

சுயமரியாதைத் திருமணப் புரட்சி

மானுட சமுதாயக் கட்டமைப்பின் அடித்தளம் குடும்பம் என்று கூறுவர். இக்குடும்பத்தில் இருமனம் இணையும் திருமணம் என்பது முதன்மை பெற்றதாகவும் பல்வேறு இனமக்களிடையே வேறுபட்ட பழக்கவழக்கங்களுடன் காணப்படுகின்றன. பொதுவாக, பழக்கவழக்கம் என்பது மனிதன் கற்கும் செயலாகும். இது அவனது வளர்ச்சிக்கு இன்றியமையாத கூறாக அமைதாகும். பழக்கமே சமூக வழக்கமாக மாறும் நிலையினை பின்வரும் கூற்று மெய்ப்பிக்கின்றது.

"மக்களின் தேவைகளின் அடிப்படையிலேயே பழக்கங்கள் தோன்றுகின்றன. அவை சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற நிலையில் வழக்கங்களாக உருப்பெறுகின்றன."[4] என்று கூறுவர்.

அவ்வகையில் மேலை நாட்டார் ஆதிக்கத்தின் காலத்தில், பார்ப்பனீயம் மேலாங்கிய சமூகத்தில் காணப்பட்ட, மேலோர் தாக்கம் பல நிலைகளில் சமுதாயத்தைப் பாதித்ததுடன் அடித்தள மக்களின் வாழ்க்கை நோக்கங்களையும் மாற்றி அமைத்தன.

திருமணத்தைப் பொறுத்தவரை, இது இந்தியாவின் மிக மோசமான பழக்கவழக்கங்களில் ஒன்றாகும் என்று பெரியார் கூறியுள்ளார். "திருமணக் கொள்கை, சுருக்கமாக, ஒரு பெண்ணை அவளது கணவனால் அடிமைப்படுத்துவதை உள்ளடக்கியது, வேறு ஒன்றும் இல்லை என்று அவர் கூறினார். இந்த அடிமைத்தனம் திருமண சடங்குகள் என்ற போர்வையில் மறைக்கப்பட்டு, திருமணத்திற்கு தெய்வீக செயல் என்ற பொய்யான பெயரைக் கொடுத்து சம்பந்தப்பட்ட பெண்களை ஏமாற்றிவிடுகிறார்கள்."[5] என்ற கருத்தினை பெரியார் முன்வைப்பதில் மக்களிடையே பகுத்தறிவுச்சிந்தனை மட்டுமே மேலாங்க வேண்டும் என்ற பார்வையை காண முடிகின்றது.

மேலும், பெரியாரின் பார்வையில் கி.பி.1925இல், உருவாக்கப்பட்ட சுயமரியைாதைத் திருமணங்களுக்குச் சில அடிப்படை வரம்புகள் உள்ளன. அவை "பிராமணர்களும் அவர்களது *மந்திரங்களும்* முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்; அர்த்தமற்ற சடங்குகள், மண் பானைகள், ஒன்றன் மீது ஒன்று, பகலில் பாரம்பரிய விளக்கு வைத்தல், சடங்கு புகை - இவை அனைத்தும் தவிர்க்கப்பட வேண்டும். இவற்றை பகுத்தறிவு ஏற்காது."[6]

ஆக, சீர்திருத்த திருமணம் அல்லது சுயமரியாதைத் திருமணம் என்று அழைக்கப்படுவதெல்லாம், பெரியாரின் பார்வையில் பார்ப்பனப் புரோகிதமில்லாத -

http://Creativecommons.org//license/by/4.0/.

அர்த்தமற்ற, அவசியமற்ற சடங்குகள் இல்லாத, புரோகிதமே இல்லாத ஒரே நாளில் ஒரே மணியில் நடைபெறக்கூடியதாகும். அதாவது வீண்செலவு இல்லாத கலப்பு மணங்களும், விதவை மணங்களும், குழந்தைகளுடன் விதவை மணங்களும், பொட்டுகட்டி விடப்பட்ட பெண்கள் பொட்டுக்களை அறுத்து விட்டு, செய்து கொண்ட மணமும் சுயமரியாதைத் திருமணப் புரட்சி என்று வரைறுத்துள்ளமை புலப்படும்.

திராவிடர் புரட்சித்திருமண முறையினைப் பாரதிதாசனும் பின்வருமாறு வகுத்தளித்துள்ளார். சீர்திருத்த திருமணம் என்பது,

- பெரியார் ஒருவர் தலைமை தாங்க முன்மொழிதல்
- வழிமொழிதல்
- அவைத்தலைவர் தமிழ்த்திருமணம் குறித்துப் பேசுதல்
- மணமக்கள் வாழ்க்கை ஒப்பந்த உரை கூறல்
- மாலையும் கணையாழியும் மாற்றிக் கொள்ளுதல்
- அறமொழிகளால் வாழ்த்துக் கூறல்
- வந்தோர்க்கு நன்றி கூறல்

என்று பாரதிதாசன் வரையறுக்கிறார். மேலும் திருமண மக்களுக்கு வாழத்து கூறும் பாடல் கருத்தையும் பின்வரும் பகுதியில் காணலாம்.

"ஒருமனதாயினர் தோழி - இந்தத்
திருமணமக்கள் என்றும் வாழி
பெருமனதாகி இல்லறம் காக்கவும்
பேறெனப்படும் பதினாறையும் சேர்க்கவும்
ஒரு மனதாயினர் தோழி " (***இசையமுது*** - II)

மேற்கூறிய சுயமரியாதை திருமணப் புரட்சி என்ற கருத்துக்கள் யாவும் அக்காலச் சமூகத்தில் மாபெரும் ஒரு பண்பாட்டு மாற்றத்தினை நிகழ்த்தியமை உறுதியே.

வழிபாடுகளில் பண்பாட்டு மாற்றம்

வழிபாடுகளில் கடவுளை வைத்து வழிபடுதல் இயல்பானதே, ஆனால் கடவுள் வழிபாட்டினையே அரசியலாக மாற்றும் நிகழ்வு, நமது தமிழகத்தில் மட்டுமே காலம் காலமாக அரங்கேறும் நிகழ்வாகும். பிற மதத்தினர் கடவுளை வைத்து வழிபட்டால், நாம் மட்டும் ஆரியப் பண்டிகைகள் வாயிலாக, கடவுளை வைத்தே தனித்தமிழனின் தன்மானங்கள் யாவற்றையும் அழித்து ஒழிக்கப்படுவதற்கு வழிவகை ஏற்படுத்தித் தருகிறோம். அவ்வகையில் தீபாவளிப்பண்டிகை வழிபாட்டினை குறித்த பெரியார் கருத்தினை இங்கு காணலாம்.

"மதச் சார்பாக உண்டாக்கப்பட்டிருக்கும் பண்டிகைகள் அனைத்தும், பெரிதும் நம் இழிவிற்கும், பார்ப்பனர் உயர்விற்கும், நம் மடமைக்கும், காட்டுமிராண்டித் தன்மைக்கும்

http://Creativecommons.org//license/by/4.0/.

பயன்படத்தக்கதாகவே இருந்து வருவதால், பயனளித்து வருவதால், அறிவுள்ள, மானமுள்ள மக்கள் மத சம்பந்தமான எந்தப் பண்டிகையையும் கொண்டாடாமலிருந்து தங்களை மானமும், அறிவுமுள்ள மக்களாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தீபாவளி திராவிடனின் மானத்தைச் சூறையாடத் திராவிடனின் அறிவை அழிக்கத் திட்டமிடப்பட்ட தீ நாள்! இந்தத் தீ நாள் திராவிடனின் நல்வாழ்வுக்குத் தீ நாள். இந்தத் தீயநாளில் நீங்கள் செய்ய வேண்டிய வேலை என்ன? தன் தலையில் தானே மண்ணையள்ளிப் போட்டுக் கொள்வதா? யோசியுங்கள்!"

(குடிஅரசு - தலையங்கம் - 15.10.1949)

தீபாவளிப்பண்டிகையை விடுத்து பொங்கல் திருவிழாவை கொண்டாட தமிழ் மக்களை அழைக்கிறார். விவசாயிகள் தாங்கள் செய்த விவசாயத்தில் உற்பத்தியான பொருளை, அவ்வாண்டு முதல் தடவையாகச் சமைப்பது மூலம் பயன்படுத்திக் கொள்ளும் நிகழ்ச்சி என்பதே பொங்கல் வழிபாடாகும். இது தமிழனுக்கே உரியதாகும். இத்தகைய திருநாளில் பெரியார் மூன்று விண்ணபத்தை மக்களிடையே முன்வைக்கிறார்.

அதாவது,

"1. ஆரியப் பண்டிகைகளை ஒழித்து, விலக்கி பொங்கல் விழாக் கொண் டாடுவது.

2. பாரதம், இராமாயணம், கீதை, புராணம் முதலிய ஆரிய இலக்கியம், இதிகாசம், தர்ம ஸ்திரம் முதலியவைகளை ஒழித்து, விலக்கி, குறளை ஏற்று படித்து உணர்ந்து அதன்படி நடப்பது.

3.இந்து, சுதேசமித்திரன், தினமணி, பாரததேவி, இந்தியன் எக்ஸ்பிரஸ், கல்கி, ஆனந்தவிகடன் முதலிய பார்ப்பனப் பத்திரிகைகளை அடியோடு விலக்கி தமிழர்கள் திராவிடர்களால் நடத்தப்படும் பத்திரிகைகளை வாங்கிப் படித்து ஆதரிப்பது.

பொங்குக பொங்கல்!
பொங்குக தமிழ் மக்கள் மானமும் அறிவும்!!"

-தந்தைபெரியார்-'விடுதலை' 19.01.1949

என்ற கருத்தாக்கதின் மூலமாக தீபாவளி வழிபாடுகளில் திராவிட கொள்கைகளால் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்களை காணலாகின்றது. ஆக தீபாவளி என்ற பண்டிகைக்கு பதிலாக, பொங்கல் என்பது தமிழன் கொண்டாடும், பார்ப்பனரல்லாதாருக்கு உள்ள ஒரு பண்டிகை என்ற கருத்தினை முன் வைக்கும் பாங்கினை அறிய இயலுகின்றது.

மேலும், பாரதிதாசன் சித்திரை ஒன்று தமிழ்ப்புத்தாண்டு அல்ல தை ஒன்றே தமிழ்ப்புத்தாண்டு என்ற கருத்திற்கு வலு சேர்க்கும் வகையில் பல பாடல்களை இயற்றியுள்ளார். கீழக்கரையில் கண்டறியப்பட்ட பழங்காலக் கல்வெட்டும் தை மாதமே வருடத்தின் முதல் மாதமாக கொண்டாடப்பட்ட நிகழ்வினை விளம்புகின்றது. சித்திரை மாதம் துவங்குவதாகக் கூறப்படும் தமிழ் ஆண்டு 60 பெயர்களும் ஆரியப் பெயர்கள் என்பதால் அவை சத்தியமாகத் தமிழ் ஆண்டுகளின் பெயர்களாக இருக்க சாத்தியம் இல்லை. இந்த வழிபாட்டு முறைகளிலும் ஆரியர்களின் ஆதிக்க உணர்வு மேலாங்கிய

http://Creativecommons.org//license/by/4.0/.

முறையினை அறியமுடிகின்றது. தை ஒன்றே தமிழ்ப்புத்தாண்டு என்பதை பாரதிதாசன் பின்வரும் பாடல்வரிகளில் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

"தையே முதற்றிங்கள்; தைம் முதலே ஆண்டு முதல்
பத்தன்று; நூறன்று; பன்னூ றன்று
பல்லாயி ரத்தாண்டாய்த் தமிழர் வாழ்வில்
புத்தாண்டு தைம்முதல்நாள், பொங்கள் நன்னாள்
நித்திரையில் இருக்கும் தமிழா !
சித்திரை அல்ல உனக்குத் தமிழ்ப்புத்தாண்டு
அண்டிப் பிழைக்க வந்த ஆரியக் கூட்டம் காட்டியதே
அறிவுக்கு ஒவ்வாத அறுபது ஆண்டுகள்
தரணி ஆண்ட தமிழர்க்கு
தை முதல்நாளே தமிழ்ப் புத்தாண்டு!" (பாரதிதாசன் கவிதைகள், ப.13)

பல்லாயிரம் ஆண்டுகள் தொன்மையான தமிழ் இனத்தின் ஆண்டுகளை ஆரியர்களால் மட்டுமே மிக எளிமையாக அழிக்க இயலும் என்பதற்கு மேற்கூறிய நிகழ்வே சான்றாகும். இங்கு பாரதிதாசனது விருப்பம், ஆரியர்கள் தங்கள் மரபுகளைப் பண்பாடுகளைப் பின்பற்றி மிகச் சிறப்புடன் வாழட்டும், அதனைப் போன்றே தமிழர்களையும் தங்கள் மரபுகளைப் பின்பற்றி வாழ்ந்திட வழி கொடுங்கள் என்பதே.

மூவகைப்பண்பாடுகளும் மாற்றங்களும்

மானுடரின் சமூக வாழ்வில் பண்பாடு என்பது காலந்தோறும் மாறக் கூடியது. தாக்கங்களுக்கு உட்பட்டு பரிமாற்றங்களை அனுமதிப்பதுடன் மாற்றங்களை முதன்மையாகக் கொண்டு செயல்படுவது. அவ்வகையில் பண்பாட்டை மூன்று வகையாகச் சமூக இயல் அறிஞர்கள் வரையறுக்கின்றனர்.

அவை,

"1. மனிதன் தன் அடிப்படைத் தேவைகளை (Basic needs) நிறைவு செய்யும் முறைகளினால் வெளிப்படும் பண்பாடு.
2. கல்வி, கேள்வி வழியாகப் பேணப்படும் பண்பாடு
3. குறியீடுகளைப் (Symbols) பயன்படுத்துவதின் வாயிலாக வெளிப்படும் பண்பாடு."[7]

இத்தகைய மூவகைப் பண்பாட்டு வகைகளும் பெரியாரின் திராவிடகொள்கைகளால் பண்பாட்டு மாற்றங்களாக பரிணமித்தன.

மனிதனின் அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றாமல் அடிமைச்சமூகமாக காட்சி அளித்த தமிழ்நாட்டில் வட நாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழித்து, வைதீகக் காட்டை அழித்துச் சமதர்மப் பூங்காவில் திராவிடத்தைச் செழிக்கச் செய்தல் வேண்டும், என்ற கொள்கையினை முன்வைத்து இயங்கியவர் பெரியார் அவர்கள். மானுடப்பிறவியினில் அளவிடற்கரிய பேதம், இழிவு, உயர்வு தாழ்வுடன் காணப்பட்ட சமூகமே பெரியார் கால கட்டம். மனிதருள்

http://Creativecommons.org//license/by/4.0/.

ஏன் எப்படி ஒருவர் உயர்ந்த பிறவு? தாழ்ந்த பிறவி? அதனை நீக்ககுவதே தனது முதல் இலக்காகச் செயல்பட்டவர் பெரியார். அத்துடன், பல ஆண்டு காலமாக மறுக்கப்பட்ட இட ஒதுக்கீடு, பெண் விடுதலை, சமத்துவம், தீண்டாமை எதிர்ப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, பில்லி-சூனியம், மந்திரவாதம் ஒழிப்பு போன்ற பல தளங்களில் பெரியாரின் போராட்டம் அவர் வாழ்நாள் முழுதும் தொடர்ந்தது! இதனால் மானுடரின் வாழ்நாள் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் பண்பாட்டு முறைகளில் மாற்றங்கள் பல ஏற்படலாயின.

அத்துடன் கல்வியில் மாபெரும் பண்பாட்டு மாற்றம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

காந்தியவாதியும், வரலாற்று ஆய்வாளருமாகிய தரம்பால் 18 ஆம் நூற்றாண்டில் கல்வி நிலை எத்தகைய நிலையில் காணப்பட்டது என்பதை 'பியூட்டி◌ுபுல் ட்ரீ 'என்னும் புத்தகம் வாயிலாக எடுத்துரைத்துள்ளார். அவர் தமிழ் நாட்டில் காணப்பட்ட கல்வி நிலையினை ஜாதி வாரியாக எடுத்துரைத்துள்ளார். பிரிட்டிஷாரின் ஆட்சிக்கு முந்தைய கால கட்டத்தில், காணப்பட்ட சமுதாய அமைப்பினில் கல்வி நிலை எவ்வாறு இருந்தது என்பதை பின்வரும் அட்டவணையில் கூறிச் செல்கிறார்.

"

வ.எண்	மாவட்டம்	பிராமாணர்கள்	சத்திரியர்கள்	வைசியர்கள்	சூத்திரர்கள்	தலித்துகள்	இஸ்லாமியர்கள்
1.	வட ஆற்காடு	9.6	&	8.66	66.76	7.4	7.59
2.	தென்ஆற்காடு	9.57	&	3.55	76.19	8.27	2.42
3.	செங்கல்பட்டு	12.75	&	6.3	71.47	6.72	2.76
4.	தஞ்சாவூர்	16.16	2.12	1.27	61.17	13.92	5.32
5.	திருச்சிராப்பள்ளி	11.76	&	2.25	76	3.23	6.77
6.	மதுரை	8.67	&	8.18	52.99	21.77	8.39
7.	திருநெல்வேலி	21.78	&	&	31.21	38.42	8.6
8.	கோயம்புத்தூர்	11.3	&	7.59	39.15	32.38	10.12
9.	சேலம்	10.75	&	7.59	39.15	32.38	10.12
10.	சென்னை	7.01	&	15.44	68.62	6.13	2.8

"[8]

http://Creativecommons.org//license/by/4.0/.

இத்தரவுகள் வாயிலாக சத்ரியர்கள் என்னும் தனிப்பிரிவினர் மறைவினையும் பிராமணர்கள், சூத்ரர்கள் ஆதிக்கத்துடன் தலித்துகளும் இணைந்து கற்றல் குறித்த விழிப்புணர்வு பெற்ற மக்களாக மாறியுள்ளமையையும் அறிய முடிகின்றது. இத்தகைய பண்பாட்டு மாற்றம் பெரியாரின் திராவிடக் கொள்கைகளால் மட்டுமே நடந்தேறின.

ஆரிய இனம் தமிழக மக்கள் மீது சுமத்திய சூத்திர அழுக்கை நீக்கி, தமிழ் இனத்தைத் கல்வியால் தூய்மை செய்தவர்! தமிழ் இனத்தின் தந்தை! "தமிழன் ஒருபோதும் நீ சொல்லும் சூத்திரனாக இருந்தது இல்லை!" என்று உரக்கக் கூவி, ஆரியர்களின் அடிமைப் பிடியிலிருந்து தமிழ் இன விடுதலையை தனது திராவிட கொள்கைகளால் உறுதி செய்தவர் ஈ.வே.ரா. பெரியார்.

ஆகவே தான் பெரியார் தன்னுடைய 52 ஏக்கர் நிலத்தையும் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்டவரின் கல்விக்காக ஒப்படைத்தார். (பெரியார் பல்கலைகழகம், மணியம்மை பல்கலைக்கழகம்) அதனால் இன்று அருந்ததியர், பறையர், தலித், ஏராளமானோர்... முனைவர் பட்டம் படித்தும், படித்துக் கொண்டும் சாதிகளற்றவராய் ஒற்றுமையால்..... சமத்துவமாய்..... வாழக் கூடிய வகையில் கல்வியில் மாபெரும் பண்பாட்டு மாற்றத்தைக் கொணர்ந்தவர் பெரியாரே...

இதனைத் தொடர்ந்து, குறியீடுகளைப் (Symbols) பயன்படுத்துவதின் வாயிலாக வெளிப்படும் பண்பாட்டு மாற்றம் என்று காண்கையில், பெரியாரின் திராவிடக்கொள்கையால் எங்ஙனம் மாற்றங்கள் ஏற்பட்டன என்பதை பின்வரும் பகுதியில் காணலாம்.

உலக மக்கள் அனைவரும், தங்கள் பண்பாட்டை வெளிப்படுத்தவும், அதனைப் பேணவும் குறியீடுகளைப் பயன்படுத்துகின்றன. அவ்வகையில், தமிழ்நாட்டில் திருமணமான பெண்கள் கழுத்தில் அணியும் தாலியும், காலில் அணியும் மெட்டியும் பண்பாட்டுக் குறியீடுகளேயாகும். நெற்றியில் அணியும் திலகமும், திருநீறும், தலையில் சூடும் மலரும், கைகளில் அணியும் வளையலும் இவ்வகையிலான பண்பாட்டுக் குறியீடுகளே.

இதனில் தாலி குறித்த பெரியாரின் பார்வை முற்றிலும் மாறுபட்டது. “**கலியாண காலத்தில் பெண்ணுக்கு மாப்பிள்ளை தாலி என்னும் ஒரு கயிற்றைக் கழுத்தில் கட்டி, தனக்கு அடிமை என நினைத்து, கேவலமாக நடத்தி வருவதானது எருமை மாடுகளை விலைக்கு வாங்கி அதன் கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டி இழுத்து வந்து நடத்துவது போலவே தானாகும்.**”[9]

. “தாலி புனிதமானது” என்கிற பெரும்பான்மையோரின் எண்ண ஓட்டங்களை எதிர்த்துப் பேச இன்று கூட பெண்கள் மனது இடந்தராது. இன்றே இப்படி என்றால் 95 வருடங்களுக்கு முன்பு தாலியை, மாட்டின் கழுத்தில் கட்டப்படும் கயிற்றோடு ஒப்பிட்டப் பெரியாரின் பேச்சு சாதாரண நிகழ்வு அல்லவே...! இதுதான் திராவிட கொள்கையால் வைக்கம் வீரரால் மட்டுமே ஏற்படுத்த இயலும் பண்பாட்டுப் புரட்சி.

http://Creativecommons.org//license/by/4.0/.

நம்மை நாம் சூத்திரர்கள் இந்துக்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கும் கீழ்மைக் குணமே நம் நாடு அடிமையாய் இருப்பதற்குக் காரணமாயிருப்பது என்பது போலவே, பெண்கள் புருஷனுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். அதிலும் தாலி கட்டின புருஷனுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்னும் உணர்ச்சிகள் பெண்களை மிருகமாக்கி இருக்கின்றன. என்று பண்பாட்டு குறியீடுகளில் மாற்றத்தை கொண்டு வருகையிலும் தனது மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்டவர் ஈ.வே.ரா. என்பது ஏற்புடையதே.

நிறைவாக

எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்; சம நீதி வேண்டும் என்ற பெரியாரின் போராட்டம் தமிழர்களை அன்புடன் திராவிடகழகத்தில் இணைக்கச் செய்தமை மாபெரும் வரலாறே. சமுதாயத் துறையிலே சீர்திருத்தம், பொருளாதாரத் துறையிலே சமதர்மக் கொள்கை, அரசியலில் வடநாட்டு ஏகாதிபத்தியத்தினின்று விடுதலை ஆகிய கொள்கைகள்தான் திராவிட கழகத்தின் கோட்பாடுகளாகும். இக்கோட்பாடுகளால் மானுட பண்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களில் சிறு துளி மட்டுமே இவ் ஆய்வுக்கட்டுரையில் முன் வைக்கப்பட்டுள்ளன. "நம் முதல் தொண்டு சாதி ஒழிப்பு. இரண்டாவது தொண்டு மேல் சாதிக்காரன் ஆட்சியும், வெளிநாட்டுக்காரன் ஆட்சியும் இருக்கக்கூடாது என்பதாகும்". என்ற பெரியார் கொள்கைக்காக இன்று நாம் போராடி பெற வேண்டிய சமூகச் சூழலில் தான் வாழ்கிறோம். பெரியார் எனும் சமூகநீதிப் போராளியின் திராவிடக் கொள்கைகளின் கீழ் இளையோர்கள் இணைந்து, சாதியற்ற சமதர்ம சமூகத்தை, மலரச்செய்திடும் பண்பாட்டு மாற்றம் முழுமையாக நடைபெற வழித்தடம் நல்கிட வேண்டும்.

குறிப்புகள்

1. நா.ஈசுவரப்பிள்ளை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கியப் போக்குகளும், ப.10.
2. மே.நூ.,ப.21.
3. கி.வீரமணி,பெரியார் களஞ்சியம், முதல்தொகுதி (கடவுள்), ப.22.
4. **க.காந்தி**, **தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்**, **ப**.14.
5. கி.வீரமணி,*பெண் உரிமைகள் குறித்து பெரியார்*, ப. 69.
6. Veeramani, K., Periyar on Women's Rights, p. 25.
7. பேரா.கு.வெ.பாலசுப்பிரமணியன்,பண்பாட்டுவரலாறு-I,ப.13.
8. www.keetru.com RWmTôp úSoLôQp, T.10
9. 5.5.1930இல்,ஈரோடு மணவிழாவில் தந்தை பெரியாரின் உரை:குடிஅரசு 11.5.1930

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

பெண் கவிதைகளில் பெரியாரியம்

முனைவர் மா.பத்ம பிரியா,
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்னம் மகளிர் கல்லூரி,சிவகாசி.
DOI 10.5281/zenodo.13770523.

Abstract:

It was Father Periyar who expressed the attitude that women's emancipation is possible only by women through his rational argument. She remarried her younger daughter, who lost her husband at the age of ten, and pioneered women's rights. He said that education is the basis for women to get equal rights. He also emphasized that it is necessary for women to have economic freedom like men. He also requested to drop the scriptures about women taught in the Vedas. He built a movement through his judicial party to advance women's liberation and through it also fought for women's property rights. "Everyone knows that many associations and efforts are growing day by day in many places in the world for the sake of women's liberation. In these efforts, men are also faking it by pretending to be very concerned. No liberation movement made by the efforts of men - in any way - can give true liberation to women." said the politician who said that even if he is a man, he pretends to be the voice of women's liberation. She also called for women's emancipation by saying that women should leave. The reflection of this research paper is a proposal of women's poems that inspired Periyar feminism.

முன்னுரை

பெண் விடுதலை பெண்களால் மட்டுமே சாத்தியம் என்கிற மனப்பான்மையை தன்னுடைய பகுத்தறிவு வாதத்தால் உணர்த்தியவர் தந்தை பெரியார். பத்து வயதில் கணவனை இழந்த தன்னுடைய தங்கை மகளுக்கு மறுமணம் செய்து வைத்து பெண்ணுரிமைக்கு முன்னோட்டம் கண்டவர். பெண்கள் சமஉரிமை பெறுவதற்கு கல்வியறிவே அடிப்படை என்றார்.பெண்கள்ஆண்களைப் போல பொருளாதார சுதந்திரத்திற்கு வழிவகை செய்வது அவசியம் என்றும் வலியுறுத்தினார். வேதமரபில் கற்பிக்கப்பட்டு வரும் பெண் குறித்தபுனிதங்களைக்கைவிடுமாறு கோரிக்கையும் விடுத்தார். பெண்கள் விடுதலையை முன்னின்று நடத்துவதற்குத் தன்னுடையநீதிகட்சி வாயிலாக இயக்கச் செயல்பாட்டை கட்டமைத்தார் அதன் வழியே மகளிரின் சொத்துரிமைக்காகவும் போராடினார். "பெண்கள் விடுதலையின் பேரால் உலகத்தில் அநேக இடங்களில் அநேக சங்கங்களும் முயற்சிகளும் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. இம்முயற்சிகளில் ஆண்களும் மிகக் கவலையுள்ளவர்கள் போலக் காட்டிக் கொண்டு போலிப் பாசாங்கு செய்து வருகின்றார்கள். ஆண்கள் முயற்சியால் செய்யப்படும் எவ்வித விடுதலை இயக்கமும்- எவ்வழியிலும்- பெண்களுக்கு உண்மையான விடுதலையை அளிக்க முடியாது."என்று தான் ஆணாக இருந்தாலும் ஆண்களின் பெண்விடுதலைக்குரலைப் பாசாங்கு என்று கூறிய கொள்கையாளர். பெண்ணே புறப்படு என்றுபெண்விடுதலை அழைப்பும் விடுத்தவர்.இவ் ஆய்வுக்கட்டுரையின் பிரதிபலிப்பு பெரியாரியப் பெண்ணியத்தை வழிமொழிந்த பெண்கவிதைகளின் முன்மொழிவாகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

பெரியாரியப் பெண்ணியம்

தந்தை பெரியார் என்றழைக்கப்படும் ஈ.வெ.ராமசாமிபெண்களின் அறியாமையே பெண்விடுதலையின் முதல் தடை எனக் கருதினார்." பெண்கள் விடுதலை பெறுவதற்கு இப்போது ஆண்களை விட பெண்களே பெரிதும் தடையாயிருக்கிறார்கள்.ஏனெனில் இன்னும் பெண்களுக்கு தாங்கள் ஆண்களைப் போல முழு விடுதலை பெறுவதற்கு உரியவர்கள் என்ற எண்ணமே தோன்றவில்லை.தங்களின் இயற்கையமைப்பின் தன்மையையே தங்களை ஆண்மக்களுக்கு அடிமையாக கடவுள் படைத்திருப்பதன் அறிகுறியாய்க் கருதிக் கொண்டிருக்கின்றார்கள்."[1] என்று பெண் நலன் சார்ந்து சிந்தித்தார். பெரியாரின் பெண்ணுரிமை கருத்தாக்கம் மேலைநாட்டுச் சிந்தனைகளைக் கொண்டு நவீனத்துவம் பெற்றதாக வரலாற்றாசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்." பெண்ணுரிமை, பெண் விடுதலை குறித்த பெரியாரின் சிந்தனைகளுக்கு 1927ல்வெளியான சர்ச்சைக்குரிய ஒரு புத்தகம் காரணமாக அமைந்தது. காந்திக்கும் காங்கிரசிற்கும் சுத்தமாகப் பிடிக்காத புத்தகம் அது. அந்தப் புத்தகம் அமெரிக்க பத்திரிகையாளரான கேத்தரீன் மேயோ எழுதிய 'மதர் இந்தியா' எனும் நூல். இந்து சடங்கு சம்பிரதாயங்கள் எப்படியெல்லாம் பெண்களைச் சுரண்டுகின்றன என்பதை இந்தப் புத்தகத்தில் வெளிப்படுத்தியிருந்தார் கேத்தரீன் மேயோ.குழந்தைத் திருமணம், பாலியல் நோய்கள், விதவைகள் நடத்தப்படும்விதம் குறித்த புள்ளிவிவரங்களுடன் இந்தக் கருத்தை அவர் முன்வைத்தார். பதினான்கு வயதுக்கு முன்பாக பெண்கள் திருமணம் செய்து கொடுக்கப்படும் பாரம்பரியத்தை அரசு ஏற்பது குறித்தும் அவர் தனது புத்தகத்தில் சுட்டிக் காட்டினார்."[2] இவ்வாறு சுனில் கில்னானி குறிப்பு உள்ளது.

காந்தியின் பெண்குறித்த சிந்தனைகளும் தந்தை பெரியாரின் பெண் குறித்த சிந்தனைகளும் மாறுபட்டன என்று மேலும் அவர் பதிவுசெய்துள்ளார்.சுனில் கில்னானி கருத்தை ஏற்பது போன்று மற்றுமொரு நாளிதழ் செய்தியும் பதிவாகியுள்ளது. "பெண்ணுரிமை, பெண் விடுதலை குறித்த பெரியாரின் சிந்தனைகளுக்கு 1927-ல் வெளியான சர்ச்சைக்குரிய ஒரு புத்தகம் காரணமாக அமைந்துள்ளது. காந்திக்கும் காங்கிரஸுக்கும் சுத்தமாக பிடிக்காத புத்தகம் அது. அந்தப் புத்தகம் அமெரிக்க பத்திரிக்கையாளரான கேத்ரின் மேயோ எழுதிய "மதர் இந்தியா" எனும் நூல்."[3] மதர் இந்தியா நூலின் தாக்கம் பெரியாரின் பெண்ணுரிமை முழக்கத்திற்கு முக்கிய காரணமாகின என்றும் உறுதிபட கூறுகிறார்கள். "மதர் இந்தியாவில் சொல்லப்பட்ட கருத்துகளை பெரியார் வேறு மாதிரி பார்த்திருந்தார். இந்து மதத்தின் மீதான தாக்குதல் அவருக்கு மகிழ்ச்சியளித்தது என்றாலும் இந்த சர்ச்சையினால் மேலே வந்த சமூகப் பிரச்சனைகளையும் ஐரோப்பாவில் உருவாகியிருந்த பெண்ணிய இயக்கங்களைப் பற்றியும் அவர் அறிந்து கொண்டார். 1920களின் பிற்பகுதியிலிருந்தே இந்தியப் பெண்களின் உரிமை குறித்த விவகாரம் சுயமரியாதைப் பிரசாரத்தின் முக்கியமான பகுதியாக இருந்தது. தன்னுடைய உரைகளிலும் தன்னுடைய வாரப் பத்திரிகையிலும் நேரடியாகவும் போலிப் பூச்சுகள் இன்றியும் இவற்றை

http://Creativecommons.org//license/by/4.0/.

முன்வைத்தார் பெரியார். 1928-29ல் கிராமப்புற ஆண்களும் பெண்களும் சுயமரியாதைத் திருமணங்களைச் செய்துகொள்ள ஆரம்பித்தனர். பெரும்பாலும் காதல் திருமணங்களான இவை, பிராமண பூசாரிகளும் மந்திரங்களும் இன்றி நடத்தப்பட்டன."[4]என்ற பதிவுகள் குறிப்பிடத்தக்கன.

கடவுள் நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றிய தேவதாசிமுறையினை ஒழிக்கப்பெரியார் பாடுபட்டார்.வறுமையின் காரணமாகவும் பெண்தானே என்ற இழிநிலையினாலும் பெண்கள் பொட்டுக்கட்டி கோயில்களில் விடப்பட்டனர். இதனால் சமுதாயத்தில் தேவதாசி முறை வளர்ந்திருந்தது. "தமிழ்நாட்டில் அமைந்த நீதிக்கட்சி அரசானது பொட்டுக்கட்டும் முறையை ஒழித்தது."[5]"பெரியார் மற்றும் முத்துலட்சுமி அம்மையார் ஆகியோரின் தொடர் போராட்டத்தால் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.1920-ல் மனைவியையும், இளைய சகோதரியையும் பொது வாழ்வில் ஈடுபடச் செய்தார். 1921-ம் ஆண்டு நவம்பர் மாதம் கள்ளுக்கடை மறியலின் போது .... அச்சமயம் பெரியாருடன், மனைவி நாகம்மையாரும் தங்கை கண்ணம்மாளும் கூட மறியலில் ஈடுபடுத்தினார். இது குறித்து தேசத்தந்தை காந்தியடிகள், "கள்ளுக்கடை மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை. ஈரோட்டில் உள்ள இரு பெண்களிடம் தான் உள்ளது. அவர்களிடம் கலந்தாலோசிக்க வேண்டும்."[6] என்று கூறியதாக செய்தி குறிப்புகள் உள்ளன. இவ்வாறு பெண்களை முன்னிலைப்படுத்தி பெண்விடுதலைக்கு முன்னோடியாக நின்றார்.

பெண்ணியவாதிகள் கூறும் தந்தைவழிச் சமூக இருநெறிச் சிந்தனைகளைப் பெரியாரும் சுட்டிக்காட்டி ஆண் உயர்வு பெண்தாழ்வு நிலைக்கு எதிர்ப்பு தெரிவித்தார். "பாலினப் பாகுபாட்டை ஹெலன் சிக்ஸஸ் (Helene cixous) 'தந்தைவழிச் சமூக இருநெறிச் சிந்தனை' (Patriarchal Binany Thoughts) என்ற கோட்பாட்டின் மூலம் எடுத்துரைத்துள்ளார்.

சூரியன்	x	சந்திரன்
பகல்	x	இரவு
தந்தை	x	தாய்
அறிவு	x	உணர்ச்சி

என்பன போன்று தான் தந்தைவழிச் சமூகத்தில் ஆண் x பெண் இருபாலினருக்கும் குறிப்பிடத்தக்க எதிரெதிர்ப் பண்புகள் உணரப்படுகின்றன."[7] இவ்வாறு ஆண் உயர்வினை கொண்ட சமூகத்தில் பயன்படுத்தும் சொல் வழக்காறுகளில் இருக்கும் பெண் இழிவுச் சொல்லாடலை எதிர்த்து பெரியார் குரல் எழுப்பியுள்ளார். கைம்பெண்ணின் சொல் வழக்காறுகளில் நிலைத்து விட்ட விதவைக்கு எதிர்சொல்லாக புதுச்சொல்லாடலைக் கையாண்டுள்ளார். "கணவனிழந்த பெண்ணை எப்படி விதவை என்று கூப்பிடுகிறோமோ அது போலவே மனைவி இழந்த புருசனை விதவன் என்று கூப்பிட வேண்டும் பெண்கள்."

http://Creativecommons.org//license/by/4.0/.

என்று கருத்துரைத்துள்ளார். இவ்வாறு பெரியாரியப் பெண்ணியம் என்ற இயக்கச் செயல்பாடு பெண்விடுதலையை முன்னெடுத்தது எனலாம்.

பெண்கவிதையும் பெரியாரியமும்

பெண்ணியச் சிந்தனைகளின் ஒரு பிரிவாக பெரியாரியப் பெண்ணியம் வளர்நிலை கண்டுள்ளது எனலாம்." மதம் மனிதனை மிருகமாக்கும் சாதி மனிதனை சாக்கடையாக்கும். சாதியின் கடைசி வேர் அறுபடும்வரை என் சிந்தனைகள் தொடரும்" என்ற பெரியாரின் கருத்தினை தலித்பெண்ணியவாதிகளும் பதிவு செய்துள்ளனர். சாதிய அடுக்குமுறைக்கு எதிராக குரலெழுப்பி விழிப்புணர்வு பெற்றுள்ளனர். சுகிர்தாராணி, மாலதி மைத்ரி இருவரும் சாதிய அடக்குமுறைக்கு எதிர்வினையாற்றியுள்ளனர்.

செத்துப்போன மாட்டைத்
தோலுரிக்கும்போது
காகம் விரட்டுவேன்
வெகு நேரம் நின்று வாங்கிய
ஊர்ச் சோற்றைத் தின்றுவிட்டு
சுடுசோறெனப் பெருமை பேசுவேன்
தப்பட்டை மாட்டிய அப்பா
தெருவில் எதிர்ப்படும்போது
முகம் மறைத்துக் கடந்துவிடுவேன்
அப்பாவின் தொழிலும் ஆண்டு வருமானமும்
சொல்ல முடியாமல்
வாத்தியாரிடம் அடி வாங்குவேன்
தோழிகளற்ற
பின் வரிசையிலமர்ந்து
தெரியாமல் அழுவேன்
இப்போது
யாரேனும் கேட்க நேர்ந்தால்
பளிச்சென்று சொல்லிவிடுகிறேன்
பறச்சி என்று (**சுகிர்தா ராணி, இரவுமிருகம்**)

மாலதி மைத்ரியின் கவிதையானது காலங்காலமாக பின்பற்றப்படும் சாதிய ஒடுக்கு முறையைப் பதிவுசெய்துள்ளது.

முன் இரவில் இறக்கத்தில்
நமது வாசலைக் கடந்து
இருட்டின் எல்லையை
நூல் பிடித்து வெளியேறுகிறோம்

http://Creativecommons.org//license/by/4.0/.

அகன்ற வீதிகளை நோக்கி

.....

அவரவர் தெருக்களில் அவரவர்
பிரிகிறோம்
குடித்தனக்கார
ஆண்டைகளின் வாசலை நோக்கி
தெரு வாசலில் வெளிச்ச
சட்டத்துக்கு அப்பால் நின்று
குரலெடுப்போம்
அம்மா அன்னம் போடுங்க
கூடப்படிக்கும் பொடிசுகள்
எட்டிப்பார்த்துவிட்டுச் செல்லும்
ஏகாலி வந்திருக்காம்மா...
அம்பட்டவன் வந்திருக்காம்மா...
தோட்டி வந்திருக்காம்மா...
சக்கிலி வந்திருக்காம்மா...
குடிப்புள்ள வந்திருக்காம்மா...

.....

தஞ்சம் கொடு
உணவு கொடு
தண்ணி கொடு
வேல கொடு
மண்ணு கொடு
வாழ்வு கொடு
உயிரு கொடு
கொடு... கொடு... கொடு... கொடு...
வரிசைகள் நீண்டுகொண்டே இருக்கின்றன
உடலே பெரும் பிச்சைப் பாத்திரமாக
வாய்ப்பிளந்து நிற்கிறோம்
எல்லாக் காலங்களுக்குள்ளும்
எல்லாத் தர்மங்களும்
நமது பாத்திரத்தில்
இடப்படுகின்றன
அவை ஒரு பழகிய
விலங்கெனப் படுத்திருக்கிறது.(**மாலதி மைத்ரி,நீலி**)

http://Creativecommons.org//license/by/4.0/.

இத்தகைய சாதிய படிநிலைகளைத்தந்தை பெரியார் கடும் விமர்சனத்திற்கு உள்ளாக்கினார்.ஆண்டான் -அடிமை நிலைக்கு எதிரான சுயமரியாதை சிந்தனைகளை மேற்கண்ட பெண்கவிதைகளும் பதிவுசெய்துள்ளன.கடவுள் வழிபாட்டில் தொடங்கி வாழ்தலில் விரியும் சாதிய வேரினை அறுக்கும் கூரிய வாளாக சுகிர்தாராணியின் கவிதை வெகுண்டெழுந்துள்ளது.

சொல்லுகிறீர்கள்
முதுகு விரியக் காய்ந்தால்
அதன்பெயர் பறவெயில்

உலரும் புழுத்த தானியத்தை
அலகு கொத்தி விரையும்
அது பறக்காகம்
கையிலிருப்பதை
மணிக்கட்டோடு
பறித்துச் சென்றால்
அது பறநாய்
நிலத்தை உழுது
வியர்வை விதைத்தால்
அது பறப்பாடு
சகலத்திற்கும் இப்படியே
பெயர் என்றால்
இரத்த வெறியில் திளைக்கும்
எது அந்த பறக்கடவுள்.
-இரவு மிருகம் தொகுப்பிலிருந்து.. (**சுகிர்தா ராணி, இரவுமிருகம்**)

மதத்தின் பெயரால் கொண்டாடப்படும் சாதிய அரசியலை புறந்தள்ளியுள்ளார். மேலும், தலித் பெண் விடுதலையைப் பறையறைந்து பாடியுள்ளார்.

எம் வாய்களில் திணிக்கப்பட்ட
மலத்தையெல்லாம் திணித்தவர்கள்மீதே
துப்பத் தெரிந்துகொண்டோம்
எம் வயிறுகளுக்குச்
சாணிப்பால் புகட்டிய கரங்களை
நரம்பறுக்கவும் கற்றுக்கொண்டோம்
மறுக்கப்பட்ட தெருக்களில்கூடச்
செருப்பணிந்து செல்லும்
செருக்கினைப் பெற்றுவிட்டோம்

http://Creativecommons.org//license/by/4.0/.

ஆண்டைகள் முன் அடிபணிந்தே
வளைந்துபோன முதுகெலும்புகளை
நிமிர்த்திப் போடவும் அறிந்துகொண்டோம்
நீரற்ற ஓடைகளில் நிகழும்
கௌரவக் கொலைகளிலிருந்து
உயிர்த்தெழவும் உணர்ந்துகொண்டோம்
கைநாட்டுகளைத் தடமழித்து
ஏடெடுக்கவும் எழுந்துநின்றோம்
ஒடுக்கப்பட்ட தோற்பறையிலிருந்து
விடுதலையின் மாஇசையை
மீட்டெடுக்கவும் பழகிக்கொண்டோம்
என்றாலும்
என் கருத்த உடல்களிலிருந்து
சிந்தப்படுகின்ற இரத்தமெல்லாம்
இத்தேசத்தில் தீப்பற்றி எரிகின்றன
தீண்டப்படாத முத்தங்களாக. (**சுகிர்தா ராணி** .தீண்டப்படாத முத்தம்)

தீண்டப்படாத முத்தம் தீண்டாமைக்கு எதிரான கலகக்குரலாக ஒலிக்கின்றது. மேலும் தீண்டாமையின் பெயரில் நிகழ்ந்த அவலங்களைப் பட்டியலிட்டுள்ளது.இங்கு நினைவில் கொள்ளவேண்டியது, பெரியாரின் தீண்டாமை ஒழிப்பு போராட்டமாகும்.கேரளம் வைக்கம் கோயிலைச் சுற்றிலுமுள்ள நான்கு தெருக்களில் ஈழவர் உட்பட தாழ்த்தப்பட்டோர் நடக்கத் தடை இருந்தது. இத்தகைய தடை கேரளம் முழுவதும் பரந்திருந்தது. இத்தடையை நீக்கி அவ்வீதியில் நடக்க உரிமை வேண்டி நிகழ்ந்த சத்தியாகிரகமே வைக்கம் போராட்டமாகும். "சுயமரியாதை இயக்கத்தின் சார்பில் 18.01.1926-ல் கோவில் நுழைவுக்கென்று சுசீந்திரம் கோவிலில் போராட்டம் துவக்கப்பட்டது. ஒட்டுமொத்த திருவிதாங்கூர் சமஸ்தானத்திலும் அனைத்து கோயில்களிலும் அனைவரும் நுழையலாம் என்ற உத்தரவை பிறப்பிக்க முக்கியக் காரணமாக இருந்தது சுயமரியாதை இயக்கம்."[8] தலித் பெண்ணியமானது பெரியாரின் சுயமரியாதை கொள்கைகளுக்கு உயிரூட்டியுள்ளன எனலாம்.

கற்பு, காதல் இரண்டின் மீது பெரியார் வைத்துள்ள விமரிசனங்கள், இன்றளவும் மறுக்கப்படாத விமரிசனங்கள் எனலாம். புனிதம் என்ற சொல்லோடு சேர்த்து வைத்துப் பேசப்படும் கற்பும், காதலும் ஆண்களால் புனையப்பட்ட சுயநலச் சொல்லாடல்கள் என்பதை விளக்கும் பெரியார், "பெண்களைப் பற்றிய தர்ம சாஸ்திரங்கள் என்பதும், பெண்களைப் பற்றிய நூல்கள் என்பதும் பெண்களால் எழுதப்பட்டிருக்குமானாலும் அல்லது வியாக்கியானம் செய்யப்பட்டிருந்தாலும் கற்பு என்பதற்கு "பதிவிரதம்" என்கின்ற கருத்தை எழுதியிருப்பார்களா? என்பதையும் யோசித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்."[9]

http://Creativecommons.org//license/by/4.0/.

என்கிறார் இக்கருத்தை பெண்கவிதைகள் அவ்வாறே வழிமொழிகின்றன. பெண்ணின் பதிவிரதம் என்பதனை கட்டுடைத்துள்ளன.

பிரிந்தஇருவரும்

சேரும் பொழுது

சீதைக்குமட்டும்ஏன்தீக்குளிப்பு,

ஒருவேளை

இராமன் தீக்குளித்திருந்தால்

உயிரொடுவந்திருக்கமாட்டானோ,

கற்புக்குலகண்ணகியோ

கேடுகெட்டகணவனுக்காக

மதுரையைஎரித்ததுபிழை

..... (ஜெ. செல்வகுமரி, பெண்ணியம் பேசுகிறேன்

'இவர்கள்இருந்திருந்தால் 'என்னும்இக்கவிதையானது கற்பு குறித்த மரபினைக் கட்டுடைத்துள்ளது.

முடிவுரை

பெண்களின் விடுதலையை பெண்களால் மட்டுமே சாத்தியப்படுத்த இயலும் என்று உறுதிபட உரைத்தவர் ஈ.வெ.ராமசாமி. பெண்கள் தங்கள் நிலையை உணர்தல் வேண்டும் என்பதில் தொடங்கி, புனிதங்களை கைவிட்டு, சொத்துரிமைக்காகப் போராடி, விடுதலையை பகுத்தறிவின் மூலம் பெறுவதற்குப் பெரியாரியம் போதித்துள்ளது. பெண்களுக்குத் தலைமைத்துவம் வழங்கி முன்னின்று நடத்தும் இயக்கத்தால் தான் பெண்விடுதலையைச் சாதிக்க முடியும் என்பதனை தமது இயக்கச் செயல்பாடாகவே பெரியார் கைகொண்டுள்ளார். பெண்ணின் உண்மையான விடுதலையை பெண்ணே தான் வழி நடத்தி வழங்க முடியும். பெண்ணின் விழிப்புணர்வு தான் விடுதலையை முன்னெடுக்கும் என்பது பெரியாரின் சிந்தனைகளாகும்.

சான்றெண் விளக்கம்

1. தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள்?,பக்.84-85.
2. சுனில் கில்னானி, பெரியாரின் பெண்ணுரிமை கருத்துகள் மேற்கத்திய சிந்தனை மூலம் வளர்ந்தது எப்படி?, பிபிசி தமிழ் ,18 செப்டெம்பர் 2019.
3. பெண்களின் விடுதலையில் பெரியார், இந்து தமிழ் திசை,செப்டம்பர், 2016.

http://Creativecommons.org//license/by/4.0/.

4. சுனில் கில்னானி, பெரியாரின் பெண்ணுரிமை கருத்துகள் மேற்கத்திய சிந்தனை மூலம் வளர்ந்தது எப்படி?, பிபிசி தமிழ் ,18 செப்டெம்பர் 2019.

5. முனைவர் கு.ம.இராமாத்தாள், பெரியாரியப் பெண்ணியம், ப.Xii

6. பெண்களின் விடுதலையில் பெரியார், இந்து தமிழ் திசை, செப்டம்பர்,2016.

7. இரா. பிரேமா,பெண்எழுத்துக்களின்அரசியல், ப.44

8. ஆலய நுழைவுப் போராட்டம் பெரியார் பற்ற வைத்த பெருநெருப்பு - புரட்டுகளுக்கு மறுப்பு,டிசம்பர் 24,2020.https://madrasreview.com/politics/periyar-ignited-the-fire-for-the-struggle-to-enter-into-temple/.

9. தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள், கற்பு, ப.8

துணைநூற்பட்டியல்

1. தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள்?,பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு,1982.

2. சுனில் கில்னானி,பெரியாரின் பெண்ணுரிமை கருத்துகள் மேற்கத்திய சிந்தனை மூலம் வளர்ந்தது எப்படி?, பிபிசி தமிழ் ,18 செப்டெம்பர் 2019

3. முனைவர் கு.ம.இராமாத்தாள்,பெரியாரியப் பெண்ணியம்,உலக தமிழாராய்ச்சி நிறுவனம்,தரமணி,சென்னை,2007.

4. இரா. பிரேமா,பெண்எழுத்துக்களின்அரசியல், அறிவுப்பதிப்பகம்,சென்னை,2007.

5. சுகிர்தாராணி ,இரவுமிருகம்,காலச்சுவடுபதிப்பகம்,நாகர்கோவில்,2004

6. மாலதிமைத்ரி, நீலி, காலச்சுவடுபதிப்பகம், நாகர்கோவில், 2005

7. ஜெ. செல்வகுமாரி, பெண்ணியம் பேசுகிறேன். நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2005.

http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
E-ISSN: 2584 - 1238 SPL. ISSUE – 1
SEP - 2024

கவிஞர் மீரா பார்வையில் சமுதாயம்

முனைவர் ப. சக்திவேல்,
உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை
வி.இ.நா.செ.நா.கல்லூரி (தன்னாட்சி) விருதுநகர்.
அலைபேசி எண் - 7871503553 மின்னஞ்சல்: smartsakthivel1989@gmail.com
DOI 10.5281/zenodo.13770920.

Abstract:
In Tamil language we can find ancient grammatical literary richness. Ancient literature and grammars depict human life. As the time adapts to the change, literature has taken a new form every day. Pudhukavitha is one of them, in Tamil literature Pudhukavitha poet Meera gets her own unique identity and underlines the social woes through her works. Needles is one of his creations. The present day social issues are explored through this essay.

தமிழ் மொழியில் பழமையான இலக்கண இலக்கியச் செழுமைகளைக் காண முடிகின்றன. பண்டைய இலக்கியங்களும் இலக்கணங்களும் மனித வாழ்வியலை படம் பிடித்துக் காட்டுகிறது. காலம் மாற்றத்திற்கு ஏற்றார் போல் இலக்கியங்கள் அன்றாடம் புதுப்புது வடிவம் பெற்று வந்துள்ளது. அவற்றுள் புதுக்கவிதையும் ஒன்றாகும், தமிழ் இலக்கியங்களில் புதுக்கவிதையில் கவிஞர் மீரா அவர்கள் தனக்கொரு தனி அடையாளம் பெற்று சமூக அவலங்களை தம் படைப்புகள் வழியாக அடிக்கோடிட்டு காட்டுகிறார். அவர்தம் படைப்பினில் ஊசிகள் நூலும் ஒன்றாகும். அப்படைப்பின் மூலமாக இன்றைய கால சமூகச் சிக்கல்களை இக்கட்டுரையின் மூலமாக ஆராயப்படுகிறது.

அரசியல் நிலைப்பாடு

பண்டைய தமிழ் இலக்கியங்களில் வழியே மன்னராட்சி காலகட்டத்தில் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர் என்றும், அக்கால ஆட்சி முறையை பொற்காலம் என்றும் கூறுவர். ஆனால் இன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி முறையில் மக்கள் மகிழ்ச்சியை இழந்துள்ளனர். மக்களின் நல வாழ்விற்காக உழைக்க வேண்டிய அரசியல்வாதிகள் தன்னலத்திற்காக கட்சித் தாவலில் ஈடுபடுகின்றனர் என்பதை

எங்கள் ஊர் எம். எல். ஏ.
ஏழு மாதத்தில்
எட்டுத் தடவை
கட்சி மாறினார் (ஊசிகள் பக்கம் -13)

என்று கட்சித் தாவலின் தன்மையை சுட்டிக் காட்டுகின்றார் ஆசிரியர்
மக்களின் இன்பத்தைச் செழிக்கச் செய்ய வேண்டிய அரசியல் தலைவர்கள் மக்களை மேலும் மேலும் வதைக்கின்றனர். மக்களிடையே வறுமையைப் போக்க வேண்டிய அரசியல் தலைவர்களின் செயல்பாடினை

நேற்று
செட்டியார் வீட்டுத்
திருமணப் பந்தியில்

http://Creativecommons.org//license/by/4.0/.

எதுவும் பேசாது
எங்கள் தலைவர்
எட்டி உதைத்தார்...
வறுமை,
வேக வேகமாய்
வெளியே றிற்று -
பரட்டைத் தலையும்
எலும்பும் தோலும்
கிழிந்த கந்தையுமாக...! (ஊசிகள் பக்கம் - 16)

சமபந்தியில் தலைவருக்கு சமமாக உணவு அருந்த வந்த வறுமையின் பிடியில் சிக்கியுள்ள ஏழை மக்களை எட்டி உதைத்து வெளியே விரட்டியதால் வறுமை வெளியேறியது என்று ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார்.

வேலையில்லாத் திண்டாட்டம்

இன்றைய சூழலில் அதிக செலவு செய்து கல்வி கற்றும் வேலையில்லை என்று கூறும் அவலநிலை நிறைந்துள்ளது, என்ன படித்தாலும் வேலையில்லை என்றபோது நாம் மாற்று வழியை செயல்படுத்தாமல் பழைய பாதையையே பயன்படுத்தும் தன்மையே உள்ளது வேலையில்லை என்ற போது எதற்கு படிப்பும், பட்டமும் என்ற கேள்வி கேட்க தோன்றுகிறது இதனை

கண்ணில் ஏறிக்
கர்வம் நிற்க
வேந்தர் மூவர்
வெற்றிக் காகத்
தந்த பட்டம்
என்று கூறிப்
பார்த்தேன்; தம்பி
பாய்ந்தான் புலியாய்! (ஊசிகள் பக்கம் - 30)

என்று வேந்தர் கையில் இருந்து பட்டம் பெற்றாலும் வேலையில்லை என்பது இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாய் கூனிக் கிடக்கின்றனர் என்பதை உணர்த்துகின்றார்.

கலப்படம்

உணவில் இருந்து தொடங்கி நாம் பயன்படுத்தும் அனைத்து பொருட்களிலும் கலப்படம் நிறைந்துள்ளது, உலகத்திற்கே வணிகத்தில் தலைசிறந்த தமிழ் இனம் இன்று கலப்படத்தில் சிறந்தேயுள்ளனர் என்பதை

கோதுமை மூட்டையில்
இரும்புத் தூள் கலந்து
இருப்பதாகக்

http://Creativecommons.org//license/by/4.0/.

கண்டு பிடிக்கப்
பட்டதாம்... நமக்கினி
பயமே இல்லை
எங்கும்
இரும்பு மனிதரை
எதிர்பார்த் திடலாம். (ஊசிகள் பக்கம் - 33)

உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற தமிழகம் இன்று உணவு பற்றாக்குறையினால் வேறு மாநிலங்களில் கையேந்தும் நிலை உருவாகியுள்ளது என்றும் வெளி மாநிலங்களில் இருந்து கொண்டு வரும் உணவுப் பொருட்கள் கலப்படத்தால் நிறைந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

மாணவர்கள்

இளமை துள்ளலோடு நண்பர் கூட்டத்துடன் இன்பத்தை நுகரத் துடிக்கும் மாணவர்கள் தம் பலத்தை அறிந்து கொள்ளாமல் நேர வீணடிப்பு பொறுப்பில்லாத நிலை என ஊர் சுற்றி வரும் இளைஞர்களின் பலத்தை

நாங்கள் நினைத்தால்
நாலே நாளில்
பக்கத்தில் உள்ள
பட்டிகட் கெல்லாம்
போக்கு வரத்துப்
போய்வர நல்ல
பாதை போடுவோம்....
நாங்கள் நினைத்தால்
பாதையில் போய்வரும்
போக்கு வரத்தைப்
பொசுக்கிப் போடுவோம்...
நாங்கள் மாணவர்கள்! (ஊசிகள் பக்கம் -40)

என்ற மாணவர்கள் நினைத்தால் எதையும் சாத்தியமாக்க முடியும் என்றும் எதனையும் சாதித்துக் காட்டவும் முடியும் என்றும் உத்வேகமூட்டுகின்றார்.

பத்திரிக்கை செய்திகள்

எட்டு திசைகளில் கிடைக்கும் செய்திகளை மக்களிடையே கொண்டு சேர்ப்பதால் 'NEWS' என்று நான்கு திசைகளின் பெயர்களின் முன்னெழுத்தைக் கொண்டு சொல் உருவாக்கப்பட்டுள்ளது, மனிதனின் வளர்ச்சியை தூண்ட வேண்டிய பத்திரிகைகள் விபத்து, கொலை, கற்பழிப்பு போன்ற செய்திகளைக் கொண்டு வியாபாரத்தை பெருக்கிக் கொள்ளும் நிலையை

கணவன் மனைவியின்
கழுத்தை அறுத்தான்

http://Creativecommons.org//license/by/4.0/.

மருமகன் மாமன்
மண்டையை உடைத்தான்
இவை தாம்
என் தமிழ் இனத்தை மேலே
உயர்த்த வந்த
ஒரே உயி ருள்ள
பத்திரிகையிலே
பளிச்சிடும் செய்திகள். (ஊசிகள் பக்கம் - 49)

என்று பத்திரிக்கை செய்திகள் முன்பக்க செய்தியாய் அச்சிடப்பட்டு, பல சாதனைச் செய்திகளை பெட்டிச் செய்திகளாக வெளியிடுவது வேதனையின் உச்சமாக உள்ளது.

காதல்

இந்தியத் திருநாட்டில் மலிவாய் காதல் கிடைத்து விடுகின்றன, ஒன்று போனால் மற்றொன்று என கிடைக்கும் சூழலை

காதல் என்ன
கத்தரிக் காயா
என்ற தொடர்கதை
இரவில் எழுதிய
வாணி மணாளன்
பகலில்
வாரச் சந்தையில்
கிலோ விலை ரூபாய்
இரண்டெனக் கேட்டதும்
அயர்ந்தார்; கண்களை
அகலத் திறந்தார்,
காய்கறிக் காரன்
கடுப்பில் கேட்டான்
அத்தனை மலிவாய்
அள்ளிக் கொள்ள
கத்திரிக்காய் என்ன
காதலா...? (ஊசிகள் பக்கம் -18)

என்று கத்திரிக்காய் விலையையும், இந்திய பொருளாதாரத்தையும் எடுத்துக் கூறுகின்றார்.

பதவி ஆசை

பதவி மேல் வெறி பிடித்துக் கொண்டு இருக்கும் அரசியல்வாதிகளை

அப்புசாமியின்
அப்பா
ஆனை மாதிரி!

http://Creativecommons.org//license/by/4.0/.

இருந்த போது
எம்.பி. பதவி...
இறந்த போது
சிவலோக பதவி (ஊசிகள் பக்கம் - 22)

என்று பதவி ஆசை கொள்ளும் அரசியல்வாதிகள் மக்கள் மீது கவனம் கொள்ளாமல் இருப்பதும் மக்களின் வாழ்வியலுக்கு துன்பத்தினை ஏற்படுத்துவதனை பற்றியும் இக்கவிதை கூறுகின்றது.

கலைகளின் அவல நிலை

தமிழர்களின் கலையான நாடகம் களைக்கூத்துக்களை பார்க்க மக்கள் யாவரும் ஆர்வம் காட்டாத நிலையில், நடிகைகளின் காயத்தை செய்தித்தாளில் முதல் பக்கத்தில் பதிவிட்டதனை

சித்திரை வீதியில்
சினிமா நடிகை
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீயைத்
திக்கு முக்காடச்
செய்த கும்பலில்
சிக்கிய அறுபது பேர்க்கு
முதுகில் முகத்தில்
நெஞ்சில் காயம்! (ஊசிகள் பக்கம் - 26)

இக்கவிதை மூலம் தமிழர்களின் நாடகம் மற்ற கலைகளை பார்க்க மக்கள் விரும்புவதில்லை, ஆனால் சினிமா போன்ற நிகழ்ச்சிகளுக்கும் சினிமா பிரபலங்கள் கடை திறப்பு விழாக்களில் கலந்து கொள்ளும் பிரபலங்களைக் காண மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்கின்றனர் ஆகையால் கூட்ட நெரிசல் ஏற்படுத்துவதனை எடுத்துரைக்கிறார்.

வாக்குகள் விற்பனைக்கு

ஜனநாயகத்தில் பொது மக்களின் தலையாய கடமை வாக்களிப்பதாகும். அத்தகைய பணியைச் செய்ய அரசியல் தலைவர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு வாக்களித்தால் வறுமை எப்படி ஒழியும் என்பதனை

பெரும் பெரும்
புள்ளிகள் எல்லாம்
வெள்ளிப் பணத்தை
அள்ளி இறைப்பர்
ஆடிக் களைப்பர்
சுலப மாகச்
சோஷ லிசத்தை
அடையும் வழியிது;
அற்புத வழியிது. (ஊசிகள் பக்கம் - 27)

http://Creativecommons.org//license/by/4.0/.

என்று வாக்குகளை விற்பதனால் மக்களின் வாழ்க்கை நிலை மேம்பாடு அடையாமல் இருக்கின்றன, கோடிகளை செலவு செய்து ஆட்சியை கைப்பற்றும் அரசியல் தலைவர்கள் சேவை நோக்கம் கொண்டவர்களாக எப்படி இருக்க முடியும் என்பதை மக்கள் சிந்திக்க தவறி விட்டனர்.

கூலித் தொழிலாளர்களின் அவல நிலை

நாகரீகம் என்று கூறி அதிகமாக முடி வளர்ப்பதால் முடி வெட்டும் தொழிலாளர்களின் வருமானம் குறையும் சூழலை ஆசிரியர்

முன்பெல்லாம்
முடிவளர்ப் பார்கள்...
திருப்பதி பழனி
திருச்செந்தூர் போய்
மொட்டை அடிக்க!
இப்போதெல்லாம்
நாக ரிகத்தை
வளர்க்கிறோம் என்று
முடி வளர்ப்பார்கள்
எங்களை
மொட்டை அடிக்க! (ஊசிகள் பக்கம் - 29)

என்று சலூன் கடைக்காரரின் வறுமை நிலையை முணுமுணுப்பு செய்கின்றார்.

சட்டமும் திட்டமும்

சட்டங்கள், அடக்குமுறைகள் என அத்தனையும் சாமானியர்களின் மீது தான் விரைவாய் பாய்கின்றன ஆனால் செல்வந்தர்கள் தனக்கென கையில் காசு இருந்த போதும்

வந்து திரும்ப
வழிச்செல வுத்தொகை
இருநூற் றைம்பது
ஏ.சி. வசதி
இருக்கும் விடுதி
சுண்டக் காய்ச்சிய
பசும்பால்முந்திரிப்
பருப்பு முடிந்தால்
முயல்கறி மான்கறி
முக்கியம் பிரியாணி (ஊசிகள் பக்கம் - 35)

என்று குறைந்த அளவில் இருக்கும் அழியும் விளிம்பில் இருக்கும் உயிரினங்களை வேட்டையாடி, அதனை பிரியாணியாக சமைத்து உண்டு மகிழ்கின்றனர் மேலும் செல்வந்தர்கள் காட்டிலும் நாட்டிலும் பல வளங்களை திருடி வாழ்கின்றனர். வன

http://Creativecommons.org//license/by/4.0/.

உயிரினங்கள் மீது அக்கறை இல்லாததால் பல விலங்குகளையும் வளங்களையும் இழந்துள்ளோம்.

முடிவுரை

கவிஞர்கள் தம் படைப்புகளின் வழியே மக்களின் வாழ்க்கைத் தன்மைகளை அடையாளம் காட்டுவர், ஊசிகள் வழியே கவிஞர் மீரா அவர்கள் இச் சமூகத்தில் கரை புரண்டோடும் அவலங்களையும் சமூக சிக்கல்களையும் அடையாளம் காட்டுகின்றார், இவ்வாறான சிக்கல்களை கண்டறிந்து இப்பொழுதே அதனை சரி செய்தால் இனி வரும் இளைய சமுதாயத்தை செழிக்கச் செய்ய முடியும் என்று தம் கவிதைகளின் மூலமாக எதிர்காலத்தை விளைவிக்கக் கூடிய விதைகளை நம் ஆழ்மனதில் ஆசிரியர் விதைத்துள்ளார்.

http://Creativecommons.org//license/by/4.0/.